FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. January. No. 1.

**Contents:**

Reflections on the New year.... ... ... ... ... 2
Communicant's Companion. ... ... ... ... ... 5
Christian Church History. ... ... ... ... ... 8
On the Liturgy. ... ... ... ... ... ... ... 10
Notes on Genesis. ... ... ... ... ... ... 14
Summary of News. ... ... ... ... ... ... 19

அட்டவணை :

புதுவருடத் தியானம். ... ... ... ... ... ௨
நற்கருணை விளக்கம் ... ... ... ... ... ௫
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௮
செபபுஸ்தக வியாக்கியானம். ... ... ... ... ௧௦
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௧௪
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௯

**Palamcottah:**

**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,**
BY L. DEVANAYAGAM PILLAY.

**1875.**

காப்ப...

# நற்போதகம்.

க. 161289 ஜனுவரி௴. ௲௮௭௫௵.

## Reflections on the New year.

## புதுவருடத் தியானம்.

இன்னொரு வருடம் கழிந்தது. அதற்குரிய இன்பதுன்பங்களும் சலாக்கிய பாக்கியங்களும் நன்மைதீமைகளுமெல்லாம் அதோடு கழிந்தே போயின. இலட்சாதிலட்சம் பேரை அது வாரிக்கொண்டு போய்விட்டது. இரவில் சொப்பனம் ஒழியுமாப்போல அதுவும் ஒழிந்தது.

காலத்தோடு கழிக்கிற பொருட்களில் மனுஷன் தன்னைத்தான் போதுமான அளவு கவனிக்கிறதில்லை. ஆற்றங்கரையில் நிற்கிறவனுக்கு ஆறு அதிவேகமாய் ஓடுகிறதாகக் காணப்படும். ஆற்றோடு போகிறவனுக்கோ, ஆற்றுச் சலம் அசைகிறதாகவாவது, ஓடுகிறதாகவாவது தோன்றாதே. வெள்ளம் அதோகதியாய் தன்னை இழுத்துக்கொண்டுபோவதையும் அவன் எவ்வளவேனும் உணரான். கரையை நோக்கிப் பார்ப்பதினாலும், தன்னைவிட்டு ஓடிப்போகிறாப்போல தோன்றும், மரம், செடிமுதலிய பொருட்களைக் கவனிப்பதினாலுமே, தான் முன்னுக்குச் செல்லுகிறதை அறிகிறான். ஆ! எவ்வளவு தீவிரமாய்ச் செல்லுகிறான். நான் பிறந்து சில வருஷமாத்திரமாச்சுது. என் வாழ்நாளின் உச்சத்திற் சேருகிறதாக நேற்று நினைத்தேன். இன்று அதின் சிறப்பெல்லாம் போய்விட்டது. காற்றுங் கொந்தளிப்பும் நிறைந்த இச்சமுத்திரத்தில் இன்னம் அதிக நாள் யாத்திரைசெய்வேனென்று நினைக்க ஏதுவில்லை. இரண்டொருநாட் புசலினால் என் கப்பல் சேதமானாலும் ஆகும். நாலைந்து நாட் காற்றினால் நான் நாடிய துறை சேர்ந்தாலும் சேருவேன்.

ஆ! இவ்வருஷங்கள் இத்தனை தீவிரமாய்க் கழிகிறதேது? பின்னுக்குப் பாராமல் முன்னுக்குப் பார்ப்பதினாலேயே பூமிக்குரிய பொருட்களை மனுஷர் மிதமிஞ்சி மதிக்க ஏவப்படுகிறார்கள். இன்று என் பிதாக்களின் கல்லறைகள் மீது நடந்துபோனேன். அவர்களுடைய தூளில் முளைத்து நிற்கிற செடிகளையும் புஷ்பங்களையும் பிடுங்கி விளையாடினேன். மனுஷர் தலைமுறைதலைமுறையாக அங்கே வாசம்பண்ணுகிறார்கள். ஆம், நான் நேசித்தவர்களும் நேசிக்கிறவர்களுமானவர்கள் அங்கேயிருக்கிறார்கள். "இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே." உலக நன்மையாகிய அழகிய மாளிகை மணலின் பேரிலே கட்டப்பட்டிருக்கிறது. பெருமழை சொரிந்து பெருவெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின்மேல் மோதுகிறதோடு அது விழுந்து அழிந்துபோகும். "எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்." இப்படியிருப்பதே நமக்கு அனுகூலம். மற்றப்படி தீங்குநாளை நினையாமல் இப்பூலோகத்திலேயே என்றுஞ் சீவிக்கப்போகிறவர்கள்போல நாள்கழிக்க ஏவப்படுவோமே. சிலகாலத்துக்குமுன் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஒரு பிரபுவானவர் ஒரு இராசாவுக்குத் தம்முடைய செல்வத்திரட்சியையும் மகிமைபொருந்திய தமது மாளிகையையும் காண்பித்தபோது, இரா

JL
Q16 m211, MUC MUC•27



சன் அதுகளை வியந்து புகழ்ந்துகொள்ளாமல், "மனிதரை மரிக்க வருத்தப்படப்பண்ணுகிறவைகள் இவைகள்தான்" என்றாராம்.

சென்ற வருஷம் எவ்வளவு வேகமாய்ப் பறந்துவிட்டது! இந்தச் சீவ ஓட்டம் சீக்கிரம் முடிந்துபோம் என்பதற்கு இதனிலும் பலத்த அத்தாட்சியுண்டோ? ஒவ்வொரு வருஷம் கழியக்கழிய, கடந்துபோன காலம் அதிகப்பட்டு, இன்னமிருக்கிற காலம் குறுகுகிறது. "உங்கள் சீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந் தோன்றி பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே." நாம் நிறைவேற்றவேண்டிய வேலையையும் சம்பாதிக்கவேண்டிய நன்மையையும் பார்க்கும்போது அது எம்மாத்திரம்! அதைக் கெடுக்கத்தக்க இடையூறுகளையும் அதைச் சிரணித்துப்போகச் செய்யத்தக்க எண்ணிறந்த ஏதுக்களையும் கவனிக்கையில் அது எப்படிப்பட்டது? நித்தியசீவனுக்கு அது எம்மாத்திரம்? ஓ! எவ்வளவு நிலையற்றது, எவ்வளவு அழிவுள்ளது. நடந்து அலுத்துப்போன பிரயாணியானவன் சற்று படுத்து இளைப்பாறுகிறதற்குள்ளாக, எழுந்து நடந்துபோகவேண்டியதாகிறது. நித்தியவீட்டுக்கு அழைக்கப்படுகிறதுமுண்டே. "எங்கள் வருஷங்களை ஒரு கதையைப்போல கழித்துவிடுகிறோம்." காற்றினால் அடிபட்டோடுகிற மேகமும், பறந்துபோகிற புகையும், வில்லில் தெறிபட்ட அம்பும், வாடிப்போகிற புல்லும், உலர்ந்துபோகிற புஷ்பமும் மனுஷசீவியம் இத்தன்மையுள்ளதென்று காட்டுகிற மிகவும்பொருந்திய உபமானங்களாயிருக்கின்றன.

பூமியிலே நான் அரதேசியும் பரதேசியுமாய்த்தானிருக்கிறேன். என்னைச் சுற்றிலுமிருக்கிற சகலமும் உல்லாசமாயும் சந்தோஷ பூரிப்பாயுமிருந்தபோதும், நானோ இன்று ஒண்டியாயிருக்கிறவன்போல வெறுமையாய்த் தோன்றுகிறது. இறந்த காலத்தை நான் நினைக்கவும் வருங் காலத்தைக்குறித்து என்னை யெச்சரிக்கவும் தற்காலத்தை ஏற்றவிதமாய் மதிக்கவும் என்னை ஏவுகிற எண்ணிறந்த காரியங்கள் என் ஞாபகத்தில் வருகிறது. இவ்வுலகம் என் வீடு அல்லவே. என்றாலும் அதை அதிகக்காலம் என் தாபரஸ்தானமாக்கியிருந்தேன். "எழுந்து இவ்விடம் விட்டுப்போ. இது உனக்கு இளைப்பாறுதற்கான இடம் அல்லவே" என்று தேவதூதரின் சத்தம்போன்ற இனிய சத்தமாய் வெறுமையான என் உள்ளத்திலே இன்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்கிறேன். நான் என் பிதாவின் வீட்டுக்குத் தூரமாயிருக்கிறேனே. துன்பங்களும் சோதனைகளும் எனக்கு நேரிட்டதுண்டு. நஷ்டங்களையும் விக்கினங்களையும் அடைந்தேன். உலகச் சிநேகிதர் பலர் என்னை வெறுத்தார்கள். பலவிதத் தொல்லைகளும் கவலைகளும என்னைப் பிடித்தது. உள்ளத்திலே நடக்கிற போராட்டத்தையும் நான் அறியாதவனல்ல. ஆகிலும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட சுதந்தரம் ஓரோர்வேளை எனக்குக் காட்சியாகிறபடியால் இதுகளையெல்லாம் நான் ஒருபொருட்டாய் எண்ணுகிறதில்லை. சூரியனுக்குக் கீழே எனக்கு நிலையான ஆஸ்தியில்லாததினாலே நான் கிலேசப்படுகிறதுமில்லை. நான் இவ்விடத்தில் பிரயாணக்காரன் தானே. தூரத்திலிருக்கிற தன் வீட்டுக்குப்போகிற ஒருவன் அன்றன்று இராத்தங்குகிற இடங்களையும் தனக்கு நேரிடுகிற மற்றும் பொருட்களையும் விட்டுவிட்டுப் போகிறேனே என்று துக்கப்படுவானோ? மாட்டானே. அதுபோலவே நானும் நித்திய இளைப்பாறுதலுக்குக் கிட்டிச் சேருகிறேனென்ற நம்பிக்கையினால், இவ்வுலகத்தில் மாறிமாறி நேரிடுகிற சுகதுக்கங்களைப் பொருள்செய்யாமல் நடந்துபோக விரும்புகிறேன். இவ்வுலகத்தில் எவ்வளவு சுகமாயும் எவ்வளவு பிரயோசனமாயும் எவ்வளவு செம்மையாயும் சீவித்தபோதிலும் அது என்னுடைய முக்கிய நோக்க

மாயிருக்கலாகாது. நான் நித்தியத்துக்கென்று பிறந்தவனல்லவா? ஆம், நான் இப்பொழுதே நித்தியத்தின் குடியாயிருக்கிறேன். இச்சீவியம் நித்தியத்தில் ஓர் பாகந்தானே நமக்கு மறைவாயிருக்கிற நித்தியமாகிய சமுத்திரத்தைச் சேர்ந்த ஓர் சிறு குடாநிலம்போலிருக்கிறது. ஒரு பெரிய மாறுதல் நமக்கு உண்டாகும். ஆவிகள் வசிக்கும் உலகத்துக்குப்போகுமுன் நாம் இந்தக் கூடாரத்தை விட்டுவிடவேண்டும். இந்தக் கூடாரத்தைக் களைந்துவிடுகிறதோடு நித்தியத்துக்குட்படுவோம். ஆகையால் நான் நித்தியத்துக்காகச் சீவிக்கவேண்டும்.

இன்னொரு வருஷத்துக்குட் பிரவேசிக்கிறேன். நான் நினையாத எந்தெந்த இடங்களில் எந்தெந்தச் சமயங்களில் என்னவென்ன தொல்லைகளும் மோசங்களும் நேரிடுமோ அறியேன். தேவனுடைய தயவும் இரட்சகருடைய சமுகப்பிரகாசமும் பரிசுத்தாவியானவருடைய தேற்றரவும் எனக்கு அதிகமதிகமாய் அனுபவிக்கக் கிடைப்பதாக. பல முகாந்தரங்களினிமித்தம், நடுக்கத்தோடு இந்த வருடத்தைத் தொடங்குகிறேன். சத்தியவழி தவறி நடப்பேனோ, வஞ்சனைகளிலும் மாயைகளிலும் அகப்படுவேனோ, கண்ணிகளிலும் சோதனைகளிலும் சிக்கிக்கொள்வேனோ, சுயபுத்தியிற் சார்ந்து துணிகரத்துக்கிடங்கொடுத்து மோசப்படுவேனோ என்று பயந்து நடுங்குகிறேன். மார்க்கந் தப்பி நடந்து கண்ணிகளிற் சிக்கிக்கொண்ட பலரை நான் அறிவேன். அவர்கள் ஞாபகம் எப்பொழுதும் என்னைத் திடுக்கிடச் செய்கிறது. நான் நடந்துபோகிற பாதையில் எனக்குப் பதிவிருக்கிறவர்களில்லை, சிக்கிக்கொள்ளப் பார்க்கிறவர்களில்லையென்று நான் நினைப்பதெப்படி? சத்துரு தூங்குகிறதில்லையே. நானும் அவனுடைய தந்திரங்களில் அநேக விசை அகப்பட்டிருக்கிறேனே. நான் எங்கே படுத்திருந்தாலும் எப்பொழுது எழுந்திருந்தாலும் அவன் எபபொழுதும் என் பக்கத்திலிருக்கிறான். ஆகையால் நான் சமாதானமாயிருப்பேனென்று நினைக்கலாகுமோ? நான் விழித்திருந்து செபம்பண்ணவேண்டியதில்லையா? என் துணிகரமும் அசதியும் எனக்குக் கெடுதியுண்டாக்காதோ? இரக்கம் நிறைந்த தேவனே, நான் பத்திரமாயிருக்கும்படி என்னைத் தாங்கும். தடுமாறி தப்பிதத்துக்குட்படுகிற உமதடியான் பேரில் பரிதபியும். வழிதப்பி அலைகிற உம்முடைய பிள்ளைக்கு மன்னியும். தேவரீரை நோக்கிக் கெஞ்சுகிற இந்த ஏழைப்பாவியை உமது அருட்கண்ணாற் பார்த்து, உமது கிருபையின் சம்பூரணத்தினால் நிரப்பியருளும். இந்த வருடத்தில் அவனைப் பாதுகாத்து இரட்சியும். அவன் இந்த உலகத்தோடு ஒத்துவாழாதிருப்பானாக. பணிந்த சிந்தையையும் அன்புள்ள உள்ளத்தையும் அவனுக்கு அருளும். அவன் பரம சீயோனுக்குப்போகிற பயணத்தில் எதினாலும் தடைப்படாதபடிக்கு அவனைக் காப்பாற்றுவீராக.

என் பரமபிதாவுக்குச் சித்தமானால் நான் இன்னொரு வருஷம் சீவித்திருக்க விரும்புகிறேன். என்றாலும் பாவஞ்செய்து, என் இரட்சகரையும் அவருடைய மார்க்கத்தையுந் தூஷணிக்கத்தக்கவிதமாய்ச் சீவிக்காதிருப்பேனாக. கேட்டுக்கேதுவாக சீவிப்பதைப் பார்க்கச் சாவதே தாவிலை. என் வேலை முடியுமட்டும் சீவிப்பேன். வேலை வருத்தமாயிருக்கையில் சந்தோஷமாயும், அதற்கு வேண்டிய பெலன் அருளப்படும்பொழுது நன்றியறிந்தவனாயுமிருப்பேனாக. என்றாலும் சாகிறதற்குப் பயப்படமாட்டேன். ஒரு பிள்ளை தகப்பன் வீட்டுக்குப்போகாமல தூரமான இடத்திலேயேயிருக்க விரும்புமோ? நடையினாலே அலுத்துத் தவித்துப்போன பிரயாணக்காரன் வனாந்தரத்தில் இன்னம் அதிகமாய்த் தாமதிக்க விரும்புவானா? கிறிஸ்தவன் துக்கத்தோடு மரிக்கிறது



என்ன காரியம்? தகப்பன் வீட்டுக்குப்போகிறவன் சிறைச்சாலைக்குப் போகிறவனைப்போல விளங்குகிறது சரியா? ஆ! நான் என் பரம வீட்டைக்குறித்து அடிக்கடி அதிகமாய்ச் சிந்திப்பேனாக. “பரத்திலே சுதந்தரம் எனக்குண்டாம் என்றே, அறிந்திருக்கையாற் பயம் இல்லாமற் போயிற்றே” என்று சொல்லக்கூடியவனாகப் பிரயாசப்படுவேன்.

இங்கேயே இருந்துகொள்ள யார்தான் விரும்புவான்? தன் நம்பிக்கைகளெல்லாம் பூமிக்குரிய நிலையில்லாப் பொருட்களில் கட்டப்பட எவன் தான் சம்மதிப்பான்? என் உடன் பிரயாணியே, மோசே மலையின் மீதேறி வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தின் சிறப்பைப் பார்த்து திர்ப்தியடைந்ததுபோல, ஜெபம், தியானம், ஸ்துதியென்னும் உன்னத பர்வதத்தின் மேலே நீயுமேறி, பரிசுத்த பட்டணத்தின் மகிமைகளைப் பார்த்து மகிழ்ச்சிகொள். இந்த உலகம் எனக்கு வீடு அல்லாதது போல உனக்கும் வீடல்லத்தான். என்னைச் சந்தோஷிப்பிக்க அது கூடாததுபோல உன்னையும் சந்தோஷிப்பிக்கமாட்டாது. நான் அதை விட்டுப்போகவேண்டியதுபோல நீயும் போகவேவேண்டும். உன்னுடைய பயணம் என்னுடையதைப் பார்க்கச் சுருக்கமாயிருந்தாலுமிருக்கும். ஆம், ஒருவேளை நீ இந்த வருஷத்திலேயே மரிந்துப்போகலாம். ஆகையால் “செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய், நீ போகிற பாதாளத்திலே செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமுமில்லையே.”

---

## Communicant's Companion.

# நற்கருணை விளக்கம்.

## அ. அதிகாரம்.

### இந்தப் பந்தியில் விசுவாசக் கண்ணால் காணப்படும் சில காட்சிகளைப் பற்றிப் பேசுவோம்.

(தொடர்ச்சி.)

### III. கிறிஸ்துவின் அன்பை வந்துபாருங்கள்.

இந்தப் பந்தியில் நாம் தியானிக்குஞ் சகலத்திலும் இதுவே நம்முடைய மனதை அதிகமாய்க் கவர்ந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவின் சிலுவையில் அறிவுக்குமேலான அவரின் அன்பேயொழிய வேறொன்றும் பார்க்கக் கிடையாது. லாசருவின் கல்லறையிலிருந்து இரக்ஷகர் கண்ணீர்விட்டபோது, கிட்ட நின்ற யூதர்கள் “இதோ இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார்கள்” என்றார்கள். நாம் இந்தப் பந்தியில், அவர் நமக்காகச் சிந்தின இரத்தத்தைப் பார்க்கும்போது எவ்வளவுக்கு அதிகமாய் அப்படிச் சொல்லவேண்டும்.

இது சுயாதீன அன்பு, கிறிஸ்து நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். இதற்கீடான சுயாதீன அன்புக்கு எங்கே போக? நாம் தேடாமலும் கேளாமலுமிருக்கக் கொடுக்கப்பட்ட ஈவு, ஒருவரும் நமக்காகப் பரிதபியாதிருக்க அவர் தம்முடைய உருக்க இரக்கத்தால் நம்

மை விடுவித்தார். நாம் அபாத்திரராயிருக்க அவர் நம்முடையபேரில் அன்பு பாராட்டினதால் அதைச் சுயாதீன அன்பென்னலாம். நம்மால் அவருக்குக் கனக்குறைச்சல் வந்ததேயொழிய புகழ்ச்சிவரவில்லை. அப்படியிருந்தும் நம்மை நேசித்தார்.

இது கவனிக்கப்படத்தக்க அன்பு. தேவதூதர்கள் பாவத்தில் விழுந்த்போது அவர்கள் பேரில் இரக்கம் பாராட்டாமல் அவர்களை அழிவுக்கு விட்டுவிட்டார். மனுஷன் பாவத்தில் விழுந்தபோதோ அவருடைய அன்பு அவன் பேரில் உருகிப் பாய்ந்தது.

இது விலையுயர்ந்த அன்பு. அவர் நம்மை நேசித்து, பெரிதான கிரயத்தைக் கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார். அவர் நம்மை நேசித்ததால் தம்மையே நமக்காக ஒப்புக்கொடுத்து தம்முடைய மாசற்ற இரத்தத்தை நம்மை மீட்கும்பொருளாகக் கொடுத்தார்.

இது நித்திய அன்பு. நித்திய காலங்களாய் இந்த அன்பு அவருடைய ஆலோசனையிலிருந்து, இன்னும் நித்திய காலங்களாய் வற்றா நதிபோல் ஓடிக்கொண்டே நிற்கும். இது நமக்குள் ஒரு நிமிஷந் தோன்றி மறு நிமிஷம அற்றுப்போகும் அன்பைப்போலேயல்ல. முடிவுமட்டும் நம்மைச் சிநேகித்து, அவர் முடிந்ததென்று சொல்லுமட்டும் அவர் கையிட்டுக்கொண்ட காரியத்தைச் செய்தே வந்தார். கிறிஸ்துவின் அன்புக்கு நிகரான அன்பு உலகத்திலெங்குமில்லை.

## IV. சாத்தான் ஜெயிக்கப்படுகிறதை வந்துபாருங்கள்.

தேவ கிருபையினாலே அவனுடைய வல்லமையினின்று விடுவிக்கப்பட்டவர்களுக்கு இது இன்பமான காக்ஷிதான். பார்வோன் அடிமைத்தனத்தினின்று மீட்கப்பட்ட இஸ்ரவேலர், சிவந்த சமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்ட சத்துருக்களுடைய பிரேதத்தைக் கண்டபோது எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்கள். அப்படிப்போலவே மெய் இஸ்ரவேலருக்கும் இருக்கும். யோசுவா ஆமலேக்கியரை ஜெயிப்பதையும், தாவீது கூழாங்கல்லுகளினாலே கோலியாத்தை ஜெயிப்பதையும் வந்து பாருங்கள். ஸ்திரீயின் வித்தாகிய நம்முடைய மகா பெரிய மிகாவேல் சற்பத்தின் தலையை நசுக்குவதை வந்துபாருங்கள். நம்முடைய மகா பெரிய மீட்பராகிய இயேசு பாதாளத்தோடே யுத்தம்பண்ணி, ஆயுதம் தரித்த பலவானைப் பிடித்து, சிங்காசனங்களிலிருக்கிறவர்களையும், கர்த்தத்துவமுடையவர்களையும், பிரபுக்களையும், அதிகாரிகளையுஞ் சிறைப்படுத்தி, பூமியிற் சமாதானத்தை உண்டுபண்ணுவதை வந்து பாருங்கள்.

கிறிஸ்து தமது மரணத்திலே சாத்தானை ஜெயிப்பதை வந்துபாருங்கள். யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசு அவன் இருதயத்தில் ஏவினாலும், அவன் இருதயத்திற் குத்துண்டு நான்றுகொண்டு செத்தான். பேதுரு கிறிஸ்துவை மறுதலிக்கும்படி சாத்தான் அவனை ஏவினாலும், கிறிஸ்து அவனை விட்டுவிடாமல் அவன் கையிலிருந்து பறித்துக்கொண்டார். சிலுவையில் அறையுண்ட கள்ளனைச் சாத்தான் விழுங்கும்படி பார்த்தபோதிலும் கிறிஸ்து அவனை அவன் கையினின்றும், நரகபாதாள வாயினின்றும் மீட்டு இரக்ஷித்தார்.

சிம்சோன் தன் ஜீவகாலத்தில் பெலிஸ்தியரை ஜெயித்ததைவிட மரணகாலத்தில் அநேகரை அழித்தான். அதுபோலவே மகா சிம்சோனாகிய இரக்ஷகரும் தம்முடைய ஜீவகாலத்தில் தம்முடைய உபதேசத்தினாலும், கிரியையினாலும் பிசாசை ஜெயித்ததைவிட, மரணகாலத்தில் பிசாசானவனை முற்றிலுமழித்தார். கிறிஸ்துவின் மரணத்தினாலே பாவப் பிராயச்சித்தமுண்டுபண்ணப்பட்டது, பிசாசும் ஜெயிக்கப்



பட்டது. அவருடைய மரண புண்ணியத்தினாலே தேவ நீதிக்குத் திர்ப்தியுண்டாகக் குற்றவாளியாகிய பாவியும் விடுவிக்கப்பட்டான். நமக்கு விரோதமாயிருந்த கட்டளையின் கையெழுத்தைக் குலைத்து சிலுவையிற்சேர்த்து ஆணியடித்துப்போட்டார். ஆகையால் கிறிஸ்து நமக்காக மரித்திருக்க நம்மைக் குற்றப்படுத்துபவனார்? நாம் குற்றத்துக்கு நீங்கலானவர்களாயிருக்க ஆக்கினைத்தீர்ப்புக்குந் தப்புவோம்.

## V. ஆத்துமாவின் விலையுயர்த்தியை எவ்வளவென்று வந்து பாருங்கள்.

ஒரு பொருளுக்குக் கொடுக்கப்படுங் கிரயத்தினாலே பொருளின் தன்மையை இவ்வளவென்று மதிக்கிறோம். ஆத்துமாவைச் சிருஷ்டித்தவருக்கே அதின் விலையுயர்த்தி தெரியும். அதினாலேதான் வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்காமல், விலையேறப்பெற்ற தம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டார். கிறிஸ்து நம்முடைய தன்மையை எடுத்துக்கொண்டதினாலே அதை மேன்மைப்படுத்தினார். அதினும் அதிகமாய்த் தம்முடைய பாடுகளினாலும், மரணத்தினாலும் மேன்மைப்படுத்தினார்.

ஆகையால் நம்முடைய ஆத்துமாவின் விலையுயர்த்தி இவ்வளவென்று கண்டு அதற்குத்தக்கதாய் அதை மதிக்கக்கடவோம். இப்படிப்பட்ட ஆத்துமாவையுடையவர்களாயிருப்பதையிட்டுப் பெருமைகொள்ளாமல், நம்முடைய மதியீனத்தினால் இப்படிப்பட்ட ஆத்துமாவைக் கெடுத்து பாவத்துக்கு விற்றுப்போட்டதினாலேயல்லவோ தேவகுமாரனும் மனுஷனாகவும் மரணத்துக்குத் தம்மைத் தாழ்த்தவும் ஏதுவாச்சுது என்றெண்ணி, பணிந்த சிந்தையுள்ளவர்களாகவேண்டுமென்பதை இதினாலே அறிந்துகொள்ளுகிறோம். இவ்வளவு விலையுயர்ந்ததும் மிகுந்த கிரயத்தால் கொள்ளப்பட்டதுமான ஆத்தும இரக்ஷிப்பையடைய பயத்தோடும் நடுக்கத்தோடும் பிரயாசப்படுவோமாக. நாம் மிகுந்த கிரயத்தால் கொள்ளப்பட்டவர்களானதால் நாம் நம்முடையவர்களல்ல. நாம் உயிரோடிருக்குமட்டும் நமது அருமை இரக்ஷகருக்கு அருமையாயிருந்த ஆத்துமாவை நமக்கும் அருமையாயிருக்கப் பார்த்துக்கொள்வோமாக.

மேலும் நம்முடைய ஆத்துமத்தைப்பற்றிக் கவலையாயிருக்கிறதோடு மற்றவர்களுடைய ஆத்துமத்தைப்பற்றியுங் கவலையுடையவர்களாயிருக்கவேண்டும். மற்றவர்களுடைய இடறுதலுக்கு நாம் ஏதுவாயிராதபடி பார்க்கிறதுமன்றி, அவர்களுடைய ஈடேற்றத்துக்கு ஏதுவானவைகளைப் பார்த்துக்கொள்ளவும்வேண்டும். கிறிஸ்துவானவர் அவர்களுடைய ஆத்தும மீட்புக்காகத் தம்முடைய திரு இரத்தத்தையும் ஒரு பொருட்டாக எண்ணாதிருக்க, அவர்களுக்காக எடுத்துக்கொள்ளும் அற்பப் பிரயாசத்தை நாம் ஒரு பொருட்டாகப் பார்க்கலாமா? அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்துக்கு ஊற்றியிருக்க, நாம் அவர்களுடைய ஆத்துமாவுக்காக நம்முடைய இருதயத்தை ஜெபத்தில் ஊற்றிவிடுகிறது ஒரு பெரியகாரியமா? அவர்களுடைய ஆத்தும இரக்ஷிப்புக்காக நம்முடைய கழுத்தையும் நீட்ட ஏதுகரம் நேரிட்டாலும் மன உச்சாகத்தோடே அப்படிச் செய்யவேண்டும்.

## Christian Church History.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 17. அதிகாரம்.

*தியோக்கிளீஷன் சிம்மாசனமேறினது,—அற்புதவரம் படிப்படியாய் நின்றுபோனது,—கிறிஸ்தவர்கள் துன்பம் ஆரம்பமானது,—துன்பத்தின் கொடுமை,—கெலேரியு, கொன்ஸ்ற்றேன்றியுஸ் என்பவர்கள் இராயர்களானது,—சபைக்குக் கொஞ்சஞ் சமாதானம் திரும்பியது,—கொன்ஸ்ற்றேன்றியு என்பவன் மரணமடைந்தது,—கொன்ஸ்தந்தீன் பட்டமடைந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுகூலம்பண்ணினது,—குருமாணிபங்கள்,—பொதுவான திருச்சபை என்றிவைகளைக் குறித்த விவரங்களடங்கும்.*

(தொடர்ச்சி.)

மக்ஸிமினு என்பவன் சில வருஷக்காலமாய், விசேஷமாக எகிப்து, பலஸ்தீனு தேசங்களில் தன் கொடுமைகளை நடப்பித்துக்கொண்டே வந்தான். ஆகிலும் இராச்சியத்திலுண்டான சில மாறுதல்களால் மறுபாகங்களிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு மிகுந்த அனுகூலங் கிடைத்தது. கி. பி. 306 ல் கொன்ஸ்ற்ருன்றியு என்பவன் யோர்க் நகரத்தில் மரணமடைந்தான். அப்பொழுது அவன் குமாரனாகிய கொன்ஸ்தந்தீன் முப்பத்திரண்டு வயசாயிருந்தான். நிக்கோமேதியாவில் கெலேரியு என்பவனோடு வாசம்பண்ணிக்கொண்டிருந்த அவன் இராயனுக்குத் தெரியாதவிதமாய் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு தகப்பன் மரிக்கிறதற்குச் சற்றுமுன்னதாக பிரித்தானியா வந்து சேர்ந்தான். இராணுவ வீரர் உடனே அவனுக்கு இராயன் என்ற பட்டந்தரிப்பிக்க விருப்பமாயிருந்தும் அவன் அதைத் தடுத்து, கெலேரியுவினால் சூட்டப்பட்ட கைசர் என்னும் பட்டமே போதுமென்றிருந்தான். அவனும் தன் தகப்பனைப்போல கிறிஸ்தவர்களைப் பட்சமாய் நடத்திப் பராமரித்துக்கொண்டு வந்தான். கொனஸ்ற்றேன்றியு என்பவன் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்திருந்தானென்று சொல்வதற்குப் போதுமான ஆதாரமில்லை. ஆகிலும் அவன் விக்கிரகபக்திக்குரிய தவறுகளைத் தள்ளிப்போட்டு, தன் குமாரன் கொன்ஸ்தந்தீனையும் தன் கோட்பாடுகளுக்கேற்க வளர்த்துவந்தானென்று தோன்றுகிறது. இருவரில் யாராவது இன்னமதானுசாரியென்று திட்டமாய்ச் சொல்ல ஏதுவில்லை. என்றாலும் கிறிஸ்துமார்க்க உபதேசங்கள் அஞ்ஞான சித்தாந்தங்களைப் பார்க்க மகா பரிசுத்தமானவைகளென்பதை உணராதிருந்திருக்கமாட்டார்கள். கொன்ஸ்தந்தீன் மனதில் இப்படிப்பட்ட எண்ணம்பட்டிருந்தபடியால் கால் பிரித்தானியா தேசங்களிலே கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட முயற்சிகளையெல்லாம் உடனே அடக்கிப்போட்டான்.

கொன்ஸ்தந்தீனுடைய தாய் பிரித்தானிய இராஜ பிரபு ஒருவனுடைய குமாரத்தியென்று சொல்வாருமுண்டு. ஆகிலும் அது ஆதாரமில்லாத சொல்லென்று மற்றவர்களால் ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது. கொன்ஸ்தந்தீனுக்கு கைசர் என்ற பட்டம் பிரித்தானியாவில் தரிப்பிக்கப்பட்டதென்பதும், பிரித்தானியா அவன் தகப்பனுடைய ஆளுகைக்குள்ளிருந்ததுபோல, சிறிதுகாலம் அவனுடைய ஆளுகைக்குள்ளுமிருந்தது என்பதுந் தவிர, பிரித்தானியாவுக்கு அவனோடு வேறு விசேஷித்த சம்பந்தங் கிடையாது. பயங்கரமான நீடித்த இத்துன்பகாலமெல்லாம், பிரித்தானியாக் கிறிஸ்தவர்கள் அவ்வளவாய் வருத்தப்படவில்லையென்று அறிகிறது மிகவுஞ் சந்தோஷமான காரியம். அவர்களுக்குள் முதலாவது இரத்தச்சாட்சியாய் மரித்தவன் ஆல்பன் என்று தான் நெடுகிலும் சொல்லப்பட்டுவருகிறது. அவன் மரித்தது இந்தப் பெரிய துன்பம் தொடங்குமுன் எர்க்குலே என்பவன் ஐரோப்பாவின் மேல்பாகத்தை ஆண்டுவந்த காலத்தில் கி. பி. 286 போல என்பது உத்தேசம்.



கொன்ஸ்ற்ருன்றியு என்பவனுடைய துரைத்தனத்துக்குள்ளிருந்த இத்தாலியா தேசத்தில் அவன் மரணத்துக்குப்பின் சிறிதுகாலம் பல குழப்பங்கள் நேரிட்டது. மேற்படி வருஷம் அக்றோபர் மாதத்தில் ரோமர், எர்க்குலேயின் மகனும் கெலேரியுவின் மருமகனுமான மாக்செனறியூஸ் என்பவனுக்கு இராயன் என்னும் பட்டத்தைத் தரிப்பித்தார்கள். அவன் முதல்முதல் தன் தகப்பனை அவன் விட்டுவிட்டிருந்த பழைய உத்தியோகத்தைத் திரும்பவும் கைக்கொள்ளும்படி செய்ததுமல்லாமல், தன் குடிகளெல்லாரையும் நயப்படுத்திக்கொள்ளவேண்டுமென்ற நோக்கமாய், கிறிஸ்தவர்களை ஒருவரும் தொல்லைப்படுத்தப்படாதென்று ஒரு உத்தரவு பிறப்பித்தான். அந்தப்படியே நடக்கவேண்டுமென்று அவன் கருதினனென்பதாய் நினைக்க இடமில்லை. மேலும் கிறிஸ்தவர்களிடத்திலிருந்து பிடுங்கிக்கொள்ளப்பட்ட கோவில்களை அவர்களுக்குத் திரும்பவிட்டுவிடவும் வாக்கு அருளினன். ஆகிலும் 310 ௵த்தில் மெல்க்கியெதே என்பவன் கண்காணியாகத் தெரிந்துகொள்ளப்பட்டபொழுது நாலு வருஷமாகியிருந்தும், அந்த வாக்கு நிறைவேற்றப்படவில்லை. அதன்பேரில் அவன் மேற்படி கட்டிடங்களுக்காக மனுச்செய்து வழக்காடும்படி தன்னுடைய உதவிக்குருக்கள்மாரில் சிலரை அனுப்பினன். அந்த வழக்குச் சித்தித்ததும் சித்தியாததும் சொல்லப்படவில்லை. ஆகிலும் இது காரியத்தினாலே, ரோமாபுரிக் கிறிஸ்தவர்கள் இக்காலத்தில் துன்பத்தில் அகப்படவில்லையென்று தெரியவருகிறது. மேலும் அதிகாரத்துக்காகப் போராடுகிற கட்சிக்காரர் கிறிஸ்தவர்களுடைய உதவியைத் தேட ஏவப்படுவதற்கு அவர்கள் தொகை போதுமான அளவு பெருகியிருந்தது பிரத்தியட்சம். மாக்செனறியு என்பவன் காரியத்தில் துன்பம் தற்காலத்துக்கு நிவிர்த்தியாயிற்று. என்றாலும் இப்பேர்ப்பட்ட தயைதாக்ஷணியங்கள் மார்க்கத்துக்கு மொத்தத்தில் அனுகூலமென்று சொல்ல இடமில்லை. என்னத்தினாலென்றால், ஒரு கட்சியார் கிறிஸ்தவர்களுடைய உதவியைத் தேடினால் மற்றக் கட்சியார் அவர்களைப் பகைப்பார்களே. ஆகிலும் இதினால் நேரிடத்தக்க முக்கிய பிரதிகூலம் யாதெனில் கிறிஸ்தவர்கள் இதற்குமுன் விலகிக்கொண்டிருந்த துரைத்தன காரியங்களில் திரும்பவும் தலையிடுவதற்கு இது ஏதுகரமானதுதான்.

கெலேரியு என்பவன் மாக்செனறியு என்பவனால் இவ்வாறு தன் அதிகாரம் அசட்டை செய்யப்படச் சம்மதித்துக்கொண்டிருப்பானென்று நினைக்க இடமில்லையே. கொன்ஸ்ற்றேன்றியு என்பவன் மரித்தவுடனே செவேரு என்பவனுக்கு இராயன் என்ற பட்டத்தைத் தரிப்பித்து, 307 ௵ வசந்த காலத்தில் ஒரு இராணுவத்தோடு அவனை ரோமாபுரிக்கு அனுப்பினன். அவ்விடத்தில் நடந்த சண்டையில் செவேரு தோல்வியடைந்து கொலையுண்டான். அதன்பேரில் கெலேரியு தானே வேறொரு

சேனையைத் திரட்டிக்கொண்டுபோயும் அவனும் முறியடிக்கப்பட்டு வெட்கத்தோடே இல்லிரியாவுக்குப் போய்விட நேரிட்டது. மாக்செந்தியு இப்பொழுது தன்னிஷ்டப்படி செய்ய இடம்பெற்று, ஆப்பிரிக்காவில் தன் அதிகாரத்தை ஸ்தாபிக்கப் பிரயத்தனம்பண்ணினான். ஆனால் அத்தேசத்தில் தளகர்த்தனாயிருந்த அலெக்சாந்தர் என்பவன் இராயன் என்ற பட்டத்தைத் தான் தரித்துக்கொண்டு மூன்று வருஷம் அவ்வதிகாரத்தைச் செலுத்திவந்தான். மாக்செந்தியு என்பவன் கிறிஸ்தவர்களுக்கு தயைபாராட்டினதை அவன் அறிந்து, அதற்கு விரோதமாய் நடக்கத் தீர்மானம்பண்ணினான். அதினாலே அத்தேசத்தில் இரண்டு வருஷமாய் அமர்ந்திருந்த துன்பம் இப்பொழுது திரும்பவும் ஆரம்பமாயிற்று. இந்தத் துன்பத்தில் கார்த்தாகோ நகரத்துக் கண்காணியாராகிய மென்சூரியு என்பவர் இரத்தச்சாட்சியாய் மரித்தார். மாக்செந்தியு என்பவன் 311 ஷூத்தில் தன் எதிரியைக் கொன்றுபோட்டபோதிலும், மறு வருஷக்கடைசியில் கிறிஸ்தவர்களைத் தொல்லைப்படுத்தப்படாதென்று ஆப்பிரிக்காவுக்கு உத்தரவு அனுப்பினபின்பு தான் கிறிஸ்தவர்கள் துன்பம் நீங்கிச் சுகமடைந்தார்கள்.

---

## On the Liturgy.

---

## செபபுஸ்தக வியாக்கியானம்.

### ௯. அதிகாரம்.

### பரிசுத்த நற்கருணை பரிமாறும் ஒழுங்கு.

முகவுரை.

(தொடர்ச்சி.)

---

### XVI. பாவமன்னிப்புக் கூறல்.

பூர்வ சபையில் கண்டனைகள் திட்டமாய் நடந்தபோது குற்றவாளிகள் தப்பிப்போக ஏதுவில்லை. அப்படிப்பட்டவர்கள் குணப்பட்டு வெளியரங்கமாய்ப் பாவமன்னிப்புப் பெற்றால்தான் இராப்போசனத்தில் சேரலாம். இந்த வழக்கம் இப்போது நின்றுபோனபடியால், பொதுவான அறிக்கையும், பாவவிமோசனக் கூறலும் இருப்பது மிகவும் அவசரம். காலை, மாலை ஆராதனையில் இதைப்பற்றித் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறோம்.

2. இந்தக் கூறலை எண். 6 : 24 முதலிய வாக்கியங்களிலுள்ள ஆசீர்வாத வசனங்களைப் பார்த்து ஏற்படுத்தினதாகத் தெரியவரும். குற்றத்தால் துக்கமடைந்த பாவிக்குத் தேவ நாமத்தை முன்னிட்டு மன்னிப்புக்கூறி ஆதரிப்பதற்கேற்ற அதிகாரம் குருவானவரிடத்தில் இருப்பதால், அந்த அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு இதுதான் தகுந்த சமையம். அனேகம் பாவிகள் தங்களைத் தாழ்த்தி அவருக்குமுன்பாக முழங்காலூன்றி மன்னிப்புக்காகக் கெஞ்சுகிறார்கள். கிறிஸ்துவினால் அதிகாரம்பெற்ற ஒருவர் அவருடைய தாசனாக அந்த மன்னிப்பைக்



கூறும்போது, விசுவாசத்தோடும், நன்றியறிதலோடும் அதை ஏற்றுக்கொள்வது நமது கடமை. தரிசனைகள் நின்றுபோன இந்தக் காலத்தில் மனுஷர்களுடைய மனச்சாட்சிகளைத் திருத்தியாக்குகிறதற்கு இதுதான் தகுந்த வழி.

### XVII. வேதவாக்கியங்கள்.

இந்தச் சாக்கிரமெந்தினால் ஆறுதலையும் பிரயோசனத்தையும் அடையவேண்டுமென்றிருக்கிறவன் உயிருள்ள விசுவாசமுடையவனாயிருக்கிறதுமல்லாமல் வீண் பயத்தை அகற்றினவனாயுமிருக்கவேண்டும். முந்தின மன்னிப்புக்கூறல் பலமுள்ளதோ என்பதைப்பற்றிச் சந்தேகமிருக்குமானால் இந்த வாக்கியங்கள் அந்தச் சந்தேகங்களை நீக்கிப்போடும். பாவமன்னிப்புக்கு ஆதாரமான வாக்குத்தத்தங்கள் அதுகளில் உண்டு. அதினாலுண்டாகும் ஆறுதல் நிறைவும், இனிமையும், வலிமையுமுள்ளதானபடியால், சரியானபடி அதைக் கவனிப்போமானால் பயங்காலியான ஆத்துமாக்களும் திருத்தியடையும். நைந்துபோன இருதயங்கள் சொஸ்தமாகும். துக்கம், அவநம்பிக்கை என்னும் கருத்த மேகங்கள் சிதறிப்போம்.

### XVIII. துதிதோத்திரங்கள்.

முந்தி தர்மசிந்தைக்கு இடங்கொடுத்தோம். பிறகு குணப்பட்டு விசுவாசத்தினால் நம்முடைய ஆராதனையை தேவனுக்கேற்றதாகப் பார்த்தோம். இப்பொழுது துதிசெலுத்துவது தான் நமது கடமை. துதிசெலுத்துவது இந்தச் சாக்கிரமெந்தில் அதிகமாயிருக்கிறபடியால் இதற்கு நற்கருணை என்று பேர் வந்தது. துதிக்கடுத்த இந்த வாக்கியங்களும் அதற்குப் பின்வரும் ஆராதனையின் பங்கும் பூர்வீகத்திலுள்ளது. பூர்வ ஆசிரியர்கள் இதுகளை எழுதியிருக்கிறபடியால் கிறிஸ்துமார்க்கம் ஏற்பட்டான துவக்கத்திலேயே இதுகள் வழங்கிவந்ததென்று சொல்லலாம். இந்தத் துதிக்கடுத்த வாக்கியங்களை விசுவாசத்தோடு சம்பாதித்து இவ்வுலகத்துக்கு மேலாக நம்முடைய சிந்தைகளை எழுப்பினபின்பு மேலோகத்தில் சென்று மகிமையடைந்த ஆவிகளோடும் தூதர்களோடும் நமக்கு இத்தனை மகத்தான காரியங்களைச் செய்த தேவனைப் போற்றிப் புகழுகிறோம். இதற்காக குருவானவர் நம்மைப் பார்த்து உங்கள் இருதயங்களை உயர்த்துங்கள் என்கிறார். உலகமுழுவதையும் ஆண்டுவரும் உன்னத தேவன் மேல் வைக்கும் உயிருள்ள விசுவாசத்தின் மூலமாய் அப்படிச்செய்ய மனமுள்ளவர்களானதால் எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம் என்கிறோம். இவ்விதமாய் உலகசிந்தைகள் யாவையுந் தகர்த்து நம்முடைய மனதை கர்த்தரிடமாய்த் திருப்புகிறோம்.

2. நம்முடைய இருதயங்கள் உயர்த்தப்பட்டு தேவனுக்குத் துதிகளைச் செலுத்தத்தக்க நிலைமையிலிருக்கும்போது குருவானவர் தம்மோடு சேர்ந்து தோத்திரஞ்செலுத்தக் கேட்டுக்கொள்ளுகிறார். நம்முடைய கர்த்தராகிய தேவனுக்குத் தோத்திரஞ்செலுத்தக் கடவோம். அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறதென்று சொல்லி ஜனங்கள் தங்கள் சம்மதயைக் காட்டினபிறகு, குருவானவர் மேசையிடமாய்த் திரும்பி தேவனைப் பார்த்து எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஸ்தோத்திரஞ்செலுத்துவது மிகவும் தகுதியும் நீதியும் விசேஷித்த கடமையுமாயிருக்கிறதென்று அறிக்கையிடுவார்.

3. இதற்குப்பிறகு தேவன் நமக்குச் செய்த சிருஷ்டிப்புமுதலிய சகல இரக்கங்களுக்காகவும் நீண்ட தோத்திர ஜெபம் ஒன்று வாசிக்கப்படு

கிறது பூர்வகாலத்து வழக்கமாயிருந்தது. சபையில் தேவபத்தி குறைந்துபோனதினால் இந்த நீண்ட செபம் குறுகி, சிருஷ்டிப்புக்காகவும் மீட்புக்காகவும் தேவனைத் தோத்திரிக்கிற ஒரு சுருக்கச்செபமிருந்தது. இப்படிச்செய்வது இரட்சகருடைய வழக்கம். யூதர்கள் பஸ்காப்பண்டிகையை ஆசரித்தபோது எகிப்தினின்று விடுதலையடைந்ததற்காகவும் கானான்தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டதற்காகவும் மற்றும் பல ஆசீர்வாதங்களுக்காகவும் தேவனைத் தோத்திரிப்பது வழக்கம். அநேக காரியங்களில் யூதர்களைப்போலவே நம்முடைய இரட்சகரும ஆராதனை நடத்தினபடியால் தோத்திரஞ்செய்தபோதும் அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றி மத்தே. 26: 26. மாற். 14: 23. லூக். 22: 17. 1 கொரி. 11: 24. தம்முடைய மரணத்தினாலும பாடுகளினாலும் உலகத்துக்குண்டாகும் மீட்புக்காகத் தேவனுக்குத் துதிசெலுத்தியிருப்பார். தம்மை நினைவுகூரும்படி இப்படிச்செய்யவும தாம் வருமளவும் தம்முடைய மரணத்தைக் கூறவும் சொன்னபோது லூக். 22: 19. 1 கொரி. 11: 25. இப்படிப்பட்ட ஒரு தோத்திர செபத்தைச்செய்யச் சொல்லியிருபபார். எல்லா செபபுஸ்தகங்களிலும் சிருஷ்டிப்பு மீட்பு முக்கியமாக கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதல் முதலியவைகளுக்காக முந்தி நீண்டதும் பிறகு சுருக்கமுமான ஒரு செபம வழங்கப்பட்டு வந்தது. உரோம சபை இதை எந்த நோக்கத்தினாலேயோ விட்டுவிட்டபடியால் நம்முடைய செபபுஸ்தகத்திலும் அது விட்டிருக்கிறது. அந்தந்தப் பண்டிகைநாளில் விசேஷித்த இரக்கங்களுக்காக விசேஷித்த தோத்திரங்களிருந்தாலும் எல்லா இரக்கங்களையும் காட்டிய சாதாரண தோத்திர செபம் ஒன்றில்லை.

## XIX. தூதருடைய தோத்திரப்பாட்டு.

குருவானவர் தம்மையும தம்மோடு இராபபோசனத்தில் சேரப்போகிறவர்களையும் தேவதூதர்களோடு ஒன்றாய்ச் சேர்த்து வெற்றிசிறந்த சபையாகப் பாவித்து பிதாக்குமாரன் பரிசுத்தாவிக்குத் துதிசெலுத்தி தோத்திரப்பாட்டைப் பாடுகிறார். "ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடுமே" என்கிற பாடி எட்வார்ட் இராசாவின் முதல் செபபுஸ்தகத்தில் மகிமையால் நிறைந்தன என்கிற வார்த்தைகளுக்குப் பிறகு உன்னதத்தில் ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினால் வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்ற வார்த்தைகள் கூட்டப்பட்டிருந்தது.

2. தேவதூதர்கள் தவ்விய இரகசியங்கள் நடத்தபபட்டபோது வந்திருந்தார்களென்று அஞ்ஞானிகள் மாத்திரமல்ல, கிறிஸ்தவர்களும் எண்ணியிருந்தார்கள். இராபபோசனம் பரிமாறும்போது அவர்கள் வந்திருநதார்களென்பது சாதாரணமான அபிப்பிராயம். ஏசுவானவர் தம்முடைய மரணத்தினால் வானதலத்தையும் பூமியையும் ஒன்றாய்ச் சேர்த்துவிட்டார். அவருடைய பாடுகளை நினைவுகூரும்போது பரமசேனையோடு நம்முடைய சத்தத்தையும ஒன்றாக்குவது மிகவும ஏற்றது. அவர்களோடு தான் நாம் நித்தியமாய்த தேவனைத் தோத்தரிப்போம். கிறிஸ்தவர்கள் ஆதிமுதல் இந்தப் பாட்டைப் பாடிவருவதுண்டு. பரிசுத்தவென்கிற வார்தததை இதில் மூன்றுவிசை வருகிறபடியால் இதற்கு இங்கிலிஷில் Trisagion என்று பேர். ஏசாயா 6: 3.

## XX. விசேஷித்த முகவுரைகள்.

விசேஷித்த பண்டிகைகளுககு விசேஷித்த முகவுரைகளுண்டு. அதுகளை அநதப் பண்டிகைகளில மாத்திரமல்ல, பின்வரும் ஏழு நாட்களிலும் சொல்லவேண்டும. பரிசுத்தாவியின் பண்டிகைக்குரிய முகவுரையை பின்வரும் ஆறுநாளில் மாத்திரஞ் சொல்லவேண்டும. ஏழாம்நாள்



திரித்துவப் பண்டிகை. அந்தநாளுக்குரிய முகவுரை விசேஷித்தது ஒன்றுண்டு. அடிக்கடி இதுகளைச் சொல்லுவதினால் தேவன் காட்டிய இரக்கங்கள் நன்றாய் ஞாபகத்தில் பதியும். ஒரோநாளில் ஜனங்கள் எல்லாரும் இராப்போசனம் பெறக்கூடாத இடங்களில் அந்த எட்டுநாட்களில் எப்போதாவது இராப்போசனம்பெற்று அப்படிப்பட்ட பெரிய ஆசீர்வாதங்களுக்காக தேவனைத் துதிக்க ஏதுவிருக்கும்.

2. இந்தப் பண்டிகைகளுக்குரிய சங்கதிகளை எட்டுநாளாக வைக்கிறதற்குத் தெளிவான முகாந்தரமுண்டு. காரியம் மிகவும் விசேஷித்தது. நம்முடைய இரட்சிப்போடு நெருங்கின சம்பந்தமுடையது. அதுகளைத் தியானிக்கவும் தேவனைத் தகுதியாய்த் துதிக்கவும் ஒருநாள் போதாது. சரீர விடுதலைக்காக சந்தோஷித்து தேவனைத் துதிக்க ஒருநாள் போதும். ஆத்தும விடுதலைக்காகத் தேவனைத் துதிப்பதற்கு அதிகக் காலம் வேண்டும். ஒருநாளுக்குள்ளாக அதை மட்டுப்படுத்துவோமானால் நம்முடைய சந்தோஷத்துக்கும், நன்றியறிதலுக்கும் போந்த சமையமிராது. ஆதலால் சபையானது இப்படிப்பட்ட சமையங்களில் நம்முடைய இருதயம் சந்தோஷத்தினால் நிறையவும, அந்தச் சந்தோஷம் தடையின்றிப் பாயவும் எட்டு நாட்களைக் குறித்திருக்கிறது,

3. ஏன் எட்டு நாள் என்று கேட்டால், இது யூதர்களுடைய வழக்கம். அவர்கள் தங்களுடைய பண்டிகைகளை ஏழு நாள் ஆசரித்து வந்தார்கள், கூடாரப்பண்டிகையை எட்டு நாள் ஆசரித்தார்கள். லேவி. 23: 36. கிறிஸ்தவர்களுடைய பண்டிகைகளுக்கு யூதர்களுடையது நிழல் போலிருந்தது. நிழலைவிட பொருள் விசேஷித்ததானபடியால் சபையானது எட்டு நாட்களைக் குறித்திருக்கிறது.

வேறு முகாந்தரம் சொல்வாருமுண்டு. ஒரு வாரத்திலுள்ள ஏழுநாள் திரும்பித் திரும்பி வருகிறபடியினால் எட்டாம் நாள் நித்தியத்தைக் குறிக்கும். எட்டு நாட்களை சபை குறித்திருககிறதினால் நாம் படித்துக்கொள்வதென்னவென்றால், இச்சீவனுக்குரிய ஏழு நாட்களை நாம் தகுந்தபடி தேவாராதனையில் பின்னிடுவோமானால், நித்தியமாகிய எட்டாம் நாளில் பிரவேசிக்கும்போது நாம் சிருஷ்டிக்கப்பட்ட பாக்கியமான நிலைமைக்குள் பிரவேசிப்போம்.

4. காரணம் எதுவானாலும் இந்த எட்டு நாட்களையும் சபையானது வெகு திட்டமாய் ஆசரித்து வநதது. இந்த நாட்களில் அந்தந்தப் பண்டிகைகளுக்குரிய விசேஷித்த நன்மைகளுக்காக விசேஷித்தவிதமாக துதிசெலுத்தித் தேவனைப் போற்றுவது விசேஷித்த கடமையாக எண்ணப்பட்டது.

5. உரோம சபையில் 10 முகவுரைகளிருந்தன. நாம் வழங்கிவருகிறது 5 தான். அதுகளில் திரித்துவ ஞாயிறு ஒன்று தவிர மற்ற நாலும் நம்முடைய இரட்சிப்போடு சம்பந்தப்பட்ட விசேஷித்த செய்கைகளைக் குறிக்கும். கிறிஸ்துவின் ஜனன நாள், உயிர்த்தெழுந்த பண்டிகை, பரதுக்கேறின நாள், பரிசுத்தாவி வந்த நாள்.

## XXI. பின்வரும் செபம்.

பரிசுத்த இரகசியங்களுக்குச் சமீபமாய் நாம் வரும்போது எவ்வளவோ பயபத்தியோடு வரவேண்டும். அவருடைய மேசையண்டையில் சேருகிற கனம் அவருடைய கிருபையினாலும் தயவினாலுந்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது. இதற்கு நாம் பாத்திரரல்ல. தேவ இரக்கத்தால் இந்தச் சலாக்கியத்தைப் பெற்றுக்கொள்ளுகிறோம். துணிவோடல்ல, தாழ்மையோடு நாம் சேரும்படி குருவானவர் இந்தச் செபத்

தை நற்கருணை வாங்கப்போகிற எல்லாருடைய நாமத்தினாலும் சொல்லுகிறார்.

---

## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

முடிவுரை.

### வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.

(தொடர்ச்சி)

---

43. அப்பற்சாகியர், எஸ்றா. 5: 6. அபற்சாத்தியர். எஸ்றா. 4: 9. இவர்கள் அசீரியரில் இரண்டு ஜாதியார். இர்ண்டு பேரும் ஒன்று என்று அர்த்தம்பண்ணிக்கொள்ளவேண்டியது. மற்றப்படி அவர்கள் இன்னாரென்று தெரியாது.

44. அப்பார், அப்பார்சியர். இந்தச் சாதியாரில் ஒரு கூட்டத்தார் சமாரியாவில் குடியேற்றப்பட்டார்கள். எஸ்றா. 4: 9.

45. அப்பியுபுரம். (அப்பியஸ்ஊர்) இத்தாலியாவில் ரோமாபுரிக்கு (50) மயில் தூரத்தில் சந்தை கூடுகிற பட்டணம். இதற்கு அப்பியஸ் கிலவுதியுவுடைய பேரிடப்பட்டு அவனுடைய பிரதிமையும் இதில் நிறுத்தப்பட்டது. நட. 28: 15.

46. அப்பிராயீம். இசக்காரில், யோசு. 19: 19.

47. அப்பொலோனியா. மக்கேதோனியாவில் பட்டணம். நட.
17: 1.

48. அமனா. லீபனோன் மலையின் கீழ் உச்சிக்கும் பேர். உன். 4: 8.
ஆப்னபார்.

49. அம்பிபோலி. கிரேக்கு தேசத்தில் ஸ்த்திரிமான் நதியோரமாய் மக்கேதோனியாவுக்கு இராஜதானி பட்டணம். நட. 17: 1.

50. அம்மா. (என் சனங்கள்) அப்னேராலே ஆசகேல் கொலைசெய்யப்பட்ட மேடு. 2 சாமு. 2: 24.

51. அம்மாத். கின்னரோத் கடலுக்கருகில் அரணான பட்டணம். யோசு. 19: 35.

52. அம்மோத்தோர். நப்தலியில் பட்டணம். யோசு. 21: 32.

53. அம்மோனியர். (என் சனங்களின் குமாரர்) யாபோக், அர்னோன் என்ற நதிகளுக்கிடையே குடியிருந்தவர்கள். ஆதி. 19: 38.

54. அம்மோன். ஆசேரில் பட்டணம். யோசு. 19: 28.

(2) நப்தலியில் பட்டணம். 1 நாளா. 6: 76.

55. அயினோன். (நீரூற்றுகளினிடம்) யோர்தான் நதியின் மேல்கரையில் பட்டணம். கில்போவா மலைக்குச் சமீபமாயிருக்கிறது. யோவா. 3: 23.

56. அராராத். (இறக்கமலை) அர்மீனியாவில் ஒரு நாட்டுக்கும், ஒரு மலைக்கும் பேர். ஆதி. 8: 4.

57. அராபா. இதை "சமனான வெளி" என்று திருப்பியிருக்கிறது.



சவக்கடல்முதல் எலானிற்றிக் குடாக்கடல்வரையும் எட்டியிருக்கிற யோர்தானின் பள்ளத்தாக்குக்குப் பேர். உபா. 1: 2. (வனாந்தரம் ஏசா. 33: 9.)

58. அராபா. அல்லது பெத்அராபா. பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 18. இதின் குடிகள் அர்பாத்தியர் என்னப்பட்டார்கள். 2 சா. 23: 31.

59. அராபியா. (வனாந்தர இடம்) "கிழக்கத்திப் புத்திரர்" என்னப்பட்ட இஸ்மவேலின் சந்ததியாரால் குடியேற்றப்பட்டது. பலஸ்தீனாவுக்கு தென் கிழக்கே. [1 இரா. 10: 1. சேபா.]

60. அராப். யூதாவின் மலை நாட்டுப்பட்டணம். யோசு. 15: 52. அராபியன் என்ற புறச்சாதிப் பேர் இதிலிருந்து வந்திருக்கவேண்டும். 2 சா. 23: 35.

61. அராம். (மேட்டுநிலம்) சீரியாவுக்கும் மெசொப்பொத்தாமியாவின் ஒரு பாகத்துக்கும் வழங்கின பூர்வீகப் பேர்.

(1) அராம்-பெத்ரேகோப் இதுவும் பெத்ரேகோபும் ஒன்றுதான். 2 சாமு. 10: 6, 8. சீரியாவில் அராம்-தமஸ்குக்கு மேற்கே.

(2) அராம்-தமஸ்கு அதாவது தமஸ்குவின் சீரியா. தமஸ்குப். பட்டணத்தைச் சுற்றியிருப்பது. 2 சாமு. 8: 5, 6.

(3) அராம்-மாக்கா. அராம் தமஸ்குக்குத் தெற்கே. 2 சாமு. 8: 6, 8.

(4) அராம்-நகராயீம். (திகிரீஸ், ஐபிராத்து என்னும் இரு நதிகளுக்கிடையிலுள்ள அராம்) மெசொப்பொத்தாமியாவின் வடபாகம். இந்த நாட்டில்தான் ஊரும் ஆரானுமிருக்கிறது.

(5) அராம்-பதான். (அராமின் பள்ளநிலங்கள்) அராம்-நகராயீமுக்குத் தெற்கே, மெசொப்பொத்தாமியாவின் மத்தி. ஆதி. 25: 20.

(6) அராம்-சோபா. சோபாபார்.

62. அரிமத்தியா. ராமாவுக்குச் சமீபமான ஊர். இதுவும் ராமாவும் ஒன்றுதான் என்று சிலர் நினைக்கிறார்கள். மத். 27: 57.

63. அரியோபாகுஸ். (மார்ஸ்மேடை) அத்தேனேயிலுள்ள ஒரு மேடு. இதில் கோர்ட்டு விசாரணை நடத்தப்படும். நட. 17: 19.

64. அருமா அல்லது ருமா. சீகேமுக்குச் சமீபமான ஒரு பட்டணம். நியா. 9: 41.

65. அர்கீ. பலஸ்தீனாவில் ஒரு இடப்பேர். எங்கேயிருக்கிறதென்று தெரியாது. எப்பிராயீமிலுள்ளதென்று நினைக்கப்படுகிறது. யோசு. 16: 2.

66. அர்கீரியர். லீபனோன் மலையடிவாரத்திலுள்ள ஒரு நாட்டில் குடியிருந்த கானானியர். ஆதி. 10: 17.

67. அர்கோப், அல்லது காலநித்திஸ். பாஷானில் ஒரு செழிப்பான நாடு. உபா. 3: 14.

68. அர்பக்சாத்து. சேமின் மூன்றும் மகன். வடஅர்மீனியா இவன் பேரால் அழைக்கப்பட்டது. ஆதி. 10: 22.

69. அர்பா. நெகேமியாவின் காலம்வரையும் இந்தப் பேரால் அழைக்கப்பட்டது. எபிரோனுக்குப் பூர்வீக பேர். யோசு. 15: 13.

70. அர்பாத். சீரியாவில் ஆமாததுக்குச் சமீபமான ஒரு பட்டணத்துக்கும் நாட்டுக்கும் பேர். 2 இரா. 18: 34.

71. அர்பாத்தியர். அராபாபார்.

72. அர்மகெதோன். மெகிதோகுன்று என்று நினைக்கப்படுகிறது. வெளி. 16: 16.

73. அர்மீனியா. ஆரராத்தேசம்.

74. அர்வாத். பெனிக்கியாவில் பட்டணம். எசேக். 27: 8. இதிலி
ருந்து அர்வாதியர் என்ற புறச்சாதிப் பேர் வந்தது. ஆதி. 10: 18.

75. அர்னோன். (மகிழ்ச்சியாய்த் தள்ளுதல்) மோவாப் தேசத்தி
லுள்ள ஒரு நாட்டுக்கும் ஒரு நதிக்கும் பேர். எண். 21: 13.

76. அலம்மேலெக். (தேவன் இராசா) ஆசேரில் பட்டணம். யோசு.
19: 26.

77. அலெக்சந்திரியா. பித்தொலோமாய் இராசாக்கள் காலத்தில்
எகிப்துக்கு இராஜதானியாயிருந்தது. மெதித்திராணியாக் கடலோரத்
தில் மகா அலெக்சந்தராலே கட்டப்பட்ட பட்டணம். நட. 18: 24.

78. அலெமேத். பென்யமீனில் லேவியர் பட்டணம். 1 நாளா. 6:
60. அல்மோன் இதாயிருக்கலாம். யோசு. 21: 18.

79. அல்கூல். யூதாவில் பட்டணம். யோசு. 15: 58.

80. அல்மோன் திப்லத்தாயிம். சீனாய் வனாந்தரத்தில், மோவாபுக்
குச் சமீபமாய் இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த இடம். எண். 33: 46.

81. அல்லோன். நப்தலியில் பட்டணம். யோசு. 19: 33.

82. அழுகையின் பள்ளத்தாக்கு. சிலர் பலஸ்தீனாவுக்கு வடக்கே
யிருக்கிறதென்றும், சிலர் எருசலேமுக்குக் கிட்டவிருக்கிறதென்றும்
சொல்லுகிறார்கள். சங். 84: 6.

83. அனனியா. பென்யமீனில் பட்டணம். நெகே. 11: 32.

84. அனாகராத். இசக்காரில் பட்டணம். யோசு. 19: 19.

85. அனாமீம். எகிப்தை அடுத்து குடியிருந்தவர்கள். இவர்கள் இரு
ந்த இடம் திட்டமாய்த்தெரியாது. ஆதி. 10: 13.

86. அனானெயேல். எருசலேமில் ஒரு கோபுரம். நெகே. 3: 1.

87. அன்னத்தோன். செபுலோனில் பட்டணம். யோசு. 19: 14.

88. அன்திலீபனோன், அல்லது அன்திலீபனஸ். பலஸ்தீனாவுக்கு
வடக்கே லீபனோன் மலைக்குச் சமதூரமாயிருக்கிற மலைத்தொடர். இதின்
உயர்ந்த உச்சிக்குத்தான் எர்மோன் மலையென்று பேர். இது 10,000 அடி
உயரம். யூதித். 1: 7.

89. அறுபோத்து. யூதாவில் பட்டணம். 1 இராசா 4: 10.

90. அறகேவியர். பாபிலோனுக்குத் தென்புறத்திலிருக்கிற ஏரேகு
என்ற பட்டணத்தின் குடிகளுக்குப் பேர். எஸ்று. 4: 9.

91. ஆகாரியர், அகாரினே, ஆகாரி. அரபியரில் மேய்ப்ப சாதியார்.
1 நாளா. 5: 10.

92. ஆகிலா. சீப்வனாந்தரத்துக்குச் சமீபத்தில் ஒரு குன்று. 1 சா.
23: 19.

93. ஆகோர். (தொந்தரவு) யூதாவில் வடக்கே எரிகோவுக்குச் சமீ
பமான பள்ளத்தாக்கு. யோசு. 7: 26.

94. ஆசரோத்து. (அடைப்புகள்) அரபியா-பெத்ரியாவில், இஸ்ர
வேலர் பாளயமிறங்கின இடம். இப்பொழுதும் இதில் ஒரு நீரூற்று இருக்
கிறது. எண். 11: 35.

95. ஆசா, அல்லது காத்சா. பெலிஸ்தியாவில் பட்டணம். உபா.
2: 22.

96. ஆசியா. சின்ன ஆசியாவின் மேல்புறத்துக்குப் பேர். நட. 2: 9.

97. ஆசேர். (பாக்கியம்) ஆசேர் கோத்திரம். ஆதி. 30: 13.

(2) மனாசேயின் எல்லையிலுள்ள பட்டணம். யோசு. 17: 7.

98. ஆசோ. மீசியாவிலுள்ள கடல்துறை பட்டணம். ஏகியன்
கடலில். நட. 20: 13.



99. ஆஷான். யூதாவில் லேவியர் பட்டணம். யோசு. 15: 42. 19: 7. 1 சாமு 30: 30.

100. ஆதமா. (செம்மண்) நப்தலியிலுள்ள பட்டணம். யோசு. 19: 36.

101. ஆதமி. (மண்ணான) நப்தலியிலுள்ள பட்டணம். யோசு. 19: 33.

102. ஆதாத்ரிம்மோன். இசக்காரில் மெகிதோ அருகிலுள்ள சம பூமியில் பட்டணம். பிற்காலத்தில் மாக்சிமியானோப்போலிஸ் என்று அழைக்கப்பட்டது. சகரி. 12: 11. [ஆதாத், ரிம்மோன். இவை சீரியருடைய இரண்டு விக்கிரகங்களுக்குப் பேர்.]

103. ஆதாம். (மண்ணான) யோர்தான் ஓரத்தில். யோசு. 3: 16.

104. ஆதிராக். தமஸ்குவுக்குக் கிழக்கே ஒரு பட்டணமும் தேசமும். சகரி. 9: 1.

105. ஆதீத். பென்யமீனில். நெகே. 7: 37.

106. ஆத்சார் ஏனான். (நீரூற்றுகளின் ஊர்) கானானுக்கு வடக்கில் ஒரு பட்டணம். எண். 34: 9.

107. ஆத்சார்காதா. யூதாவில் தெற்கே. யோசு. 15: 27.

108. ஆத்சாரசுவால். (நரியூர்) யூதாவில் தெற்கே. யோசு. 15: 28.

109. ஆத்சார்சூசா. அல்லது ஆத்சார்சூசிம் (குதிரையூர்) சிமியோனில். யோசு. 19: 5.

110. ஆத்சால். எருசலேமுக்குள் அல்லது அதற்கடுத்த ஒரு இடம். சகரி. 14: 5.

111. ஆத்சேம். சிமியோனில் ஒரு இடம். யோசு. 15: 29. (ஏத்சாம். 1 நாளா. 4: 29 )

112. ஆத்சோர். பென்யமீனில் பட்டணம். நெகே. 11: 33.

(2) நப்தலியில், சாலோமோனால் அரணிப்பாய்க் கட்டப்பட்ட பட்டணம். யோசு. 11: 1.

(3) எஸ்ரோன், அல்லது கீரியாத் எஸ்ரோனே. யோசு. 15: 23.

(4) காத்சோர். அரபியாவில் நாடு. எரே. 49: 28.

113. ஆத்சோர்அதாத்தா. யூதாவில். யோசு. 15: 25.

114. ஆத்தாத். இது போர்க்களம். பின்னிட்டு ஆபேல்மிஸ்ராயீம் என்று அழைக்கப்பட்டது. ஆதி. 50: 10. கில்காலுக்குச் சமீபத்தில்.

115. ஆத்மா. (செம்மண்) சித்தீம் பள்ளத்தாக்கில் அக்கினி கந்தகத்தால் அழிந்த ஐந்து பட்டணங்களிலொன்று. ஆதி. 10: 19.

116. ஆபா. சீரியா அல்லது மெசொப்பொத்தாமியாவில், பட்டணம். 2 இராசா 17: 24.

117. ஆபியர். ஆபா பட்டணத்துக் குடிகள். 2 இராசா 17. 31.

118. ஆபேல். (துக்கிப்பு அல்லது மைதானம்) யூதாவிள்ள பட்டணம். 1 சாமு. 6: 18.

119. ஆபேல்சித்தீம். மோவாபியர் பட்டணம். காத்தில் தெற்கே, யோர்தானின் கீழ் ஓரத்திலிருக்கிறது. எண். 25: 1.

120. ஆபேல பெத்மாக்கா. (மாக்காவின் வீட்டு மைதானம்) அல்லது ஆபேல்மாயீம். (தண்ணீரின் மைதானம்) தீருவுக்கும் யோர்தானுக்கும் நடுவேயுள்ள பட்டணம். 2 சாமு. 20: 14. 2 நாளா. 16: 4.

121. ஆபேல்மிஸ்ராயீம். (எகிப்தயரின் துக்கம்) ஆத்தாத், பார்.

122. ஆபேல்மெகோலா. (பலவீனரின் மைதானம) மனாசேயில் யோர்தானின் பள்ளத்தாக்கில், எலிசாவின் ஜநந ஊர். நியா. 7: 22.

123. ஆபேன். பெத்தாவேனுக்கு மறுபேர். ஓசி. 10: 8.

124. ஆப்ரான். சீரியாவில், தமஸ்குவுக்குத் தெற்கே ஒரு இடம். ரோமர் இதை ஆரனதிஸ் என்று அழைத்தார்கள். எசேக். 47: 16.

125. ஆப்ணு. அல்லது அமனு. (இடைவிடாத) சீரியாவிலுள்ள நதி. எர்மோன் மலையில் உற்பத்தியாய் தமஸ்குப் பட்டணத்துக்கு ஊடே ஓடுகிறது. 2 இரா. 5: 12.

126. ஆமலேக். எப்பிராயீமில், பிரத்தோன் என்ற பட்டணம் கட்டப்பட்டிருந்த மலைக்கும் பேர். நியா. 12: 15. பலஸ்தீனுவுக்குத் தெற்கிலும் சவக்கடலுக்குக் கிழக்கிலும் சேயீர மலையிலும் குடியிருந்த ஆமலேக்கியருக்கும் பேர். ஆதி. 14: 7.

127. ஆமாத். ஆசேரில் பட்டணம். யோசு. 19: 26.

128. ஆமாம். யூதாவுக்குத் தெற்கில் பட்டணம். யோசு. 15: 26.

129. ஆயலோன. (பலம்) தாணில், ஒரு பள்ளத்தாக்குக்கும், லேவியர் பட்டணத்துக்கும் பேர். யோசு. 10: 12. நியா. 1: 35. செபுலோனில் ஒரு பட்டணத்துக்கும் பேர். நியா. 12: 12.

130. ஆயா என்பதும் நெகே. 11: 31. ஆயாத் என்பதும். ஏசா. 10: 28. ஆயீதான்.

131. ஆயின். (ஊற்று) சிமியோனில் லேவியர் பட்டணம். யோசு. 15: 32. பலஸ்தீனுவுக்கு வடக்கே யோர்தான் உற்பத்தியாகிற இடத்திலுள்ள ஒரு பட்டணத்துக்கும் பேர். எண். 34: 2.

132. ஆயீ. (குவியல்) பென்யமீனில் கானானியர் பட்டணம். ஆதி. 12: 8. அம்மோனியருடைய ஒரு பட்டணத்துக்கும் பேர். எரே. 49: 3.

133. ஆரதா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 24.

134. ஆரா. அசீரியாவில் நாடு. 1 நாளா. 5: 26.

135. ஆராத். பலஸ்தீனுவுக்குத் தெற்கே, கானானியருடைய நாட்டுக்கும், ஒரு பட்டணத்துக்கும் பேர். எண். 21: 1. ("ஆராதின் இராசா" யோசு. 12: 14.)

136. ஆராரியன். (மலைவாசி) 2 சாமு. 23: 11.

137. ஆரான். ஐபிராத்து நதியில் விழுகிற ஆரான் நதியில் கட்டப்பட்ட பட்டணம். கிரேக்கர் இந்த காராய் என்றும், ரோமர் காரி என்றும் அழைப்பார்கள். அது மணல்பாங்கான இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. ஆதி. 11: 31.

138. ஆரேத். யூதாவில் ஒரு காடு. 1 சாமு. 22: 5.

139. ஆரோசேத். (வனம்) பலஸ்தீனுவின் வடக்கில் பட்டணம். நியா. 4: 2.

140. ஆரோத். கில்போவாவுக்குச் சமீபத்தில் ஒரு நீரூற்று. நியா. [7: 1.

141. ஆரோவேர். அர்னோன் நதியின் வடகரையிலுள்ள பட்டணம். உபா. 2: 36.

(2) யாப்போக்கு நதியின் கவராகிய காத் நதியருகில் பட்டணம். எண். 32: 34.

(3) சிமியோனில் ஒரு பட்டணம். 1 சாமு. 30: 28. (1 நாளா. 11: 44. "ஆரோவேரியன்")

142. ஆர். அர்னோன் நதியில் மோவாபின் இராசதானிப் பட்டணமாம். இதற்கு ரபா என்றும், அரியெல் என்றும் மறு பேருண்டு. பின்னிட்டு அரியொபோலிஸ் என்ற கிரேக்குப்பேரால் அழைக்கப்பட்டது. எண். 21: 15, 28.

143. ஆலா. அல்லது காலா மேதியாவில் நாடு. 2 இராசா 17: 6.

144. ஆலி ஆசேரில். யோசு. 19: 25.



# Summary of News.

# சமாசாரத்திரட்டு.

இங்கிலந்தைச் சேர்ந்த நிலக்கரிக் கனியொன்றில் விஷக்காற்று தற்செயலாய் உண்டாய் வெடிக்க, இருபத்தாறு பெயர் பிராணசேதமடைந்தார்கள். டிப்லின் நகரத்து நீராவிக்கப்பல் கலேட் நதியில் ஓடுகையில் ஜனம்நிறைந்த படகொன்றில் தாக்க, பதினொரு பெயர் தாழ்ந்து மரித்தார்கள். தென்அமெரிக்க கடல் மின்னமார் ஏற்றிய கப்பல் யூஷாயர் என்னும் கரையில் சேதமாய்ப்போயிற்று. அதிலிருந்த அறுபது பெண்ட் பிராணசேதமடைந்தார்களென்று உத்தேசம்.

ஸ்பானிய தேசத்திலுள்ள பிணக்கு இன்னும் தீரவில்லை. பிரஜாதிபத்திய பக்ஷத்தைச்சேர்ந்த மார்ஷல்ஸிர்ன்ரேறு என்பவர் பழைய ராஜவம்சத்துச் சேனைகள்மேல் படையெடுக்கும்படி முப்பதினாயிரம் யுத்தவீரரைச் சேர்த்தார்.

ஆப்கானிஸ்தானத்தின் துரைத்தன விஷயங்கள் வரவரப் பிணக்குள்ளதாகின்றன. யாககோப்கான் கபூலில் தனக்கு மோசம் வருமென்றெண்ணி ஹீராத் என்னும் அரணை ஸ்தானத்தைக் காவல்பண்ணும்படி எத்தனம்செய்தான். ஆதலால், அவன் அமீருக்கு அடங்கான். ஒருவேளை அவனுக்கு பாரசீகர் துணைநிற்பார்களாம்.

சிந்திய மகாராஜாவால் நாளுவென்று கைதுசெய்யப்பட்டவனைக் குறித்து இன்னும் அதிக சாவதானத்தோடே விசாரணை நடக்கின்றது. தீர்மானம் ஒன்றும் வெளிப்படவில்லை. நியாயவிசாரணை நடக்கும்போது கைதியின் பக்ஷத்தில் பேசும் நியாயவாதிகளுக்குக் கொடுக்கவேண்டிய செலவுக்கு சிந்திய ராஜாவின் பிரபுகள் பணம்சேகரிக்கிறார்களாம்.

வங்காளத்தில் அறுப்புக்காலம் தொடங்கிற்று. விளைச்சல் அனுகூலம்.

திருவிதாங்கோட்டு மஹாராஜா கல்கத்தாவிறகுப் போய்வரும்படி நாளது௴ 18௳ புறப்படுவாராம்.

திருநெல்வேலி ஜில்லாவில் சென்ற நவம்பர்௴ 25-26-தேதிகளில் பத்தரை அங்குலம்வரை மழைபெய்தது. தாமிரவருணி ஆற்றில் தண்ணீர் 23 அடி யுயரம் பாய்ந்தது. திருநெல்வேலிக்கு மேற்கேயுள்ள சில குளங்கள் கரை உடைந்து வாய்க்கால்கள் கரைபுரண்டு வெள்ளம் பெருகவே திருநெல்வேலிப் பட்டினவீதிகளிலும் வெள்ளம் பிரவாகித்தது. 270 வீடுகள் சிதைந்துபோயின. 170 வீடுகள் பழுதுபட்டன. அங்கங்கே ஏரிகளும் கால்களும் கரை உடைந்து வெள்ளம் பெருகினதினால் பயிருக்கும் சிறிது சேதம் உண்டாயிற்று. டிஸ்டிரிக்ட் இராஜ வீதிகளில் முதலாய்வெள்ளம் பாய்ந்து பிரவாகித்தது. அவைகளின் பக்கத்தில் நிற்கிற மரங்களினாலன்றி வீதிகளின் குறிப்புத் தெரிவதற்கிடமின்றியிருந்தது. சில இடங்களிலே மரங்களில் உண்டான அடையாளத்தினால் வெள்ளம் பத்தடி உயரம் பாய்ந்ததென்று தோன்றிற்று. வெள்ளம் பிரவாகம் பகற்காலத்திலாதலால் உயிர்ச்சேதம் ஒன்றுமில்லை.

ஜனுவரிமீ நாள் 31. மார்கழிமீ 19உ முதல், தைமீ 20உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ககூ | கர்த்தர் நீடிய சாந்தமும் மகா தயையுமுள்ள தேவன். யாத். 34: 6. |
| ச | 2 | உ0 | தேவன் ஆயிரந்தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர். 7. |
| ஞா | 3 | உக | அக்கிரமத்தையும் மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர். 7. |
| தி | 4 | உஉ | எங்கள் நடுவில் ஆண்டவர் எழுந்தருளவேண்டும். 9. |
| செ | 5 | உங | அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு. யோபு 2: 6. |
| பு | 6 | உச | யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை. 10. |
| வி | 7 | உரு | அவன் துக்கம் மகா கொடிய துக்கம் என்று கண்டார்கள். 13. |
| வெ | 8 | உசு | துன்மார்க்கருடைய தொந்தரவு அங்கே ஓய்ந்திருக்கிறது. 3: 17. |
| ச | 9 | உஎ | இக்கட்டுகளிலிருந்து அவர்களை விடுவித்தார். சங்கீதம் 107: 6. |
| ஞா | 10 | உஅ | அவர்களைச் செவ்வையான வழியிலே நடத்தினர். 7. |
| தி | 11 | உகூ | பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறார். 9. |
| செ | 12 | க | மரணவாசல்கள் பரியந்தம் சமீபிக்கிறார்கள். 18. |
| பு | 13 | உ | அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார். 20. |
| வி | 14 | ங | நியாயக்கேடெல்லாம் தன் வாயை மூடும். 42. |
| வெ | 15 | ச | தேவனே என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறது. 108: 1. |
| ச | 16 | ரு | சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும். நீதிமொழி 12: 19. |
| ஞா | 17 | சு | பொய்நாவு ஒரு நிமிஷமாத்திரம் இருக்கும். 19. |
| தி | 18 | எ | நீதிமானுக்கு ஒரு கேடும் வராது. 21. |
| செ | 19 | அ | இருதயத்திலுள்ள கவலை அதை ஒடுக்கும். 25. |
| பு | 20 | கூ | நீதியின் பாதையில் ஜீவனுண்டு. 28. |
| வி | 21 | ௰ | துன்மார்க்கருக்குச் சமாதானமில்லை. ஏசாயா 57: 21. |
| வெ | 22 | கக | தேவனிடத்தில் சேரவிரும்புகிறார்கள். 58: 2. |
| ச | 23 | கஉ | உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும். 8. |
| ஞா | 24 | கங | கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். 8. |
| தி | 25 | கச | தீமையை வெறுத்து நன்மையை விரும்புங்கள். ஆமோஸ். 5: 15. |
| செ | 26 | கரு | உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. யோவான் 14: 1. |
| பு | 27 | கசு | தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். 1. |
| வி | 28 | கஎ | என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்களுண்டு. 2. |
| வெ | 29 | கஅ | முழங்கால்கள் யாவும் எனக்குமுன்பாக முடங்கும். உரோ. 14: 11. |
| ச | 30 | ககூ | நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும். 11. |
| ஞா | 31 | உ0 | உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். 16. |

## விசேஷித்த நாட்கள்.

1. கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.
3. கிறிஸ்து ஜநந திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
6. கிறிஸ்து பிரசன்னத் திருநாள்.
7. அமாவாசை.
10. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
17. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
21. பௌரணமி.
24. செப்துவகெசிமா ஞாயிறு.
31. செக்சகெசிமா ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. February. No. 2.

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 22
A Family Commentary on the Sermon on the Mount. 24
Christian Church History. ... ... ... ... ... 27
Communicant's Companion. ... ... ... ... ... 30
Notes on Genesis. ... ... ... ... ... ... 33
Summary of News. ... ... ... ... ... ... 39


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... உஉ
மலைப்பிரசங்க வியாக்கியானம். ... ... ... ... உச
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... உஎ
நற்கருணை விளக்கம் ... ... ... ... ... ங0
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ஙங
கதை சொல்லல். ... ... ... ... ... ... ஙச
அத்தியட்சர் பந்தயப் பரீட்சை. ... ... ... ... ஙஅ
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ஙகூ



Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௨. பெபுருவரிமீ. ௲௮௭௫௵.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### சீபா, மேவிபோசேத்து என்பவர்கள் விருத்தாந்தம்.

2 சாமுவேல் 9; 16, 1—4; 19. 24—30.

நாம் இப்பொழுது கவனிக்கப்போகிற விர்த்தாந்தம் மகா விபரீதமும் துக்ககரமுமானது. அதின் பொருள் நன்றாய் விளங்கும்பொருட்டு, சவுலிராசா தாவீதைக் கொன்றுபோடவேண்டுமென்ற நோக்கத்தோடு நிஷ்டூரமாய் அவனைத் துன்பப்படுத்தின பூர்வகாலத்தை நாம் யோசித்துக்கொள்ளவேண்டும். சத்துருக்கள் நடுவிலே தாவீதுக்கு ஒரு சிநேகிதனிருந்தது அறிவீர்களே. இராசகுமாரனான யோனத்தான் தாவீதைத் தன்னுடன் பிறந்த சகோதரனிலும் அதிகப் பட்சமாய் நேசித்து வந்தானே. யோனத்தான் பற்பல சமயங்களில் தாவீதுக்கு உதவி செய்ததும், அவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்துபோக நேரிட்டபோது அவர்களுக்கிருந்த வியாகுலமும், யுத்தத்தில் யோனத்தான் கொலையுண்ட செய்தியை தாவீது கேள்விப்பட்டபோது தாவீதுக்கு உண்டான மிகுந்த துயரமும் எல்லாம் உங்களுக்கு ஞாபகமிருக்கும். "என் சகோதரனாகிய யோனத்தானே உனக்காக நான் வியாகுலப்படுகிறேன், நீ எனக்கு வெகு இன்பமாயிருந்தாய், உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது" என்று மனங்கசந்து புலம்பினானே.

யோனத்தான் மரிக்கும்போது அவனுக்கு ஒரு குமாரனிருந்தான். அவன் இருகால்களும் முடமானவன். அவனுக்கு முதலாவது கொடுக்கப்பட்டிருந்த பெயர் மெரிபால் என்பது. 1 நாளா. 8: 34. 9: 40. இந்தப் பெயரை பிற்பாடு மேவிபோசேத்து என்று மாற்றிவிட்டார்கள். ஏன் இப்படிச் செய்திருப்பார்களென்று நினைக்கிறீர்கள்? அவனும் அவன் தகப்பன் வீட்டாரும் தங்கள் மேன்மையை இழந்துபோனார்கள் என்று காண்பிக்கும்படியாகத்தான். "பால்" அல்லது "பாகால்" என்பதற்கு எசமான் என்றும், "போசேத்து" என்பதற்கு வெட்கம் என்றும் பொருள். மேன்மக்களாயிருக்கப்பட்டவர்கள் தாழ்வடையும்பொழுதில், இவ்வாறு பெயரை மாற்றுவது யூதருக்குள் வழக்கமாயிருந்தது. சவுலின் குமாரரில் ஒருவனுக்கு முதலாவது "இஸ்பாகால்" என்று பெயரிட்டிருந்தது. அந்தப்பெயர் மேற்காட்டிய பிரகாரம் பின்பு இஸ்போசேத்து என்று மாற்றப்பட்டது.

மேரிபால் என்பவன் இருகால்களும் முடமாயிருந்தது மகா துக்கமான காரியந்தான். அப்புறம் வெட்கமான பெயர் அவனுக்கு வழங்கினதும் அவனுக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்திருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. இப்பேர்ப்பட்ட துன்பத்தின் நடுவில் தாவீது அவன் தகப்பனிமித்தமாய் அவனுக்குப் பாராட்டின தயவினாலும் பட்சத்தினாலும் சற்று சந்தோஷமும் ஆறுதலுமாயிருந்தான். இதோடே அவனுடைய நிர்ப்பாக்கியம் முடிந்துபோகவில்லை. வேறு துன்பங்களும் அவனுக்கு நேரிட்டன. எப்படியென்றால், மேவிபோசேத்துக்கு சீபா என்று பெயர்கொண்ட ஒரு வேலைக்காரனிருந்தான். இவன் தாவீதுக்கு நேரிட்ட சங்கடங்களைத் தந்திரமாய் அனுசரித்து தன எசமானை மோசப்படுத்தப் பார்த்தான். தாவீதின் குமாரரில் ஒருவன் தகப்பனுடைய விர்த்தாப்பிய காலத்தில் அவனுக்குச் சொல்லமுடியாத சஞ்சலத்தை உண்டுபண்ணினானே. அவன் இன்னானென்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டுமா? அப்சலோம் என்பவன் செய்த துரோகம் உங்களுக்குத் தெரியுமே. உத்தம அரசனும் பட்சமுள்ள தகப்பனுமான தாவீது துரோகியான தன் பிள்ளையினாலே துரத்துண்டு எருசலேமைவிட்டு ஓடிப்போகிறது எவ்வளவு பரிதாபமாயிருக்கிறது. தாவீதும் அவனோடு வேறு சிலரும் அழுதுகொண்டு வெறுங்காலால் நடந்து ஒலிவமலையின்மேல் ஏறிப்போகிறதைப் பாருங்கள். "அவனோடிருந்த சகல சனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறிப்போனார்கள்."

அதோ பாருங்கள். அந்தக் கூட்டத்தார் துக்கத்தோடு மலையின் உச்சியைச் சேருகிறதோடு, சிநேகிதன்போல ஒருவன் அவர்களைச் சந்திக்கி வருகிறானே. அவன் யார்? சீபா என்பவன்தான். அவன் தாவீதின் கூட்டத்தார் சாப்பிடுகிறதற்கு அப்பமும் திராட்சப்பழமும் திராட்சரசமும் கொண்டுவந்ததோடு, இராசாவும் அவனுடைய சிநேகிதர்களும் இளைத்தவேளை ஏறிக்கொள்ளுகிறதற்கு கழுதைகளும் கொண்டுவந்திருந்தான். அவனைக் கண்டது இராசாவுக்கு மிகவும் சந்தோஷம். மேவிபோசேத்து எங்கேயென்று இராசா வினவ, "அப்சலோமின் கலகத்தின்மூலமாய் இராச்சியபாரம் தனக்கு மறுபடியுங் கிடைக்கும் என்ற எண்ணத்தினால் வரமாட்டேன் என்றான்" என்பதாய் அந்தப் பொல்லாத வேலைக்காரன் சொன்னான்.

இதைக் கேட்டதோடு தாவீதுக்கு உண்டான கோபம் இவ்வளவென்றில்லை. வேலைக்காரன் சொன்னது மெய்யோ பொய்யோவென்று தாவீது விசாரிக்காமல், "மேவிபோசேத்துக்கு நான் கொடுத்திருந்தது யாவையும் அவனிடத்திலிருந்து எடுத்து உனக்குத் தந்துவிட்டேன்" என்றான். இதுதான் அந்தக் கள்ளவேலைக்காரன் விரும்பினது. காரியத்தின் எதார்த்தம் எப்படியென்று கேட்கிறீர்களா? சீபா என்பவன் தன் எசமானிடத்தில், "நீர் முடமாயிருக்கிறீரே, ஆகையால் நீர் என்னோடு கூட வரவேண்டாம். இந்தச் சாமான்களைக்கொண்டு நான் தாவீதினிடத்திற்போய், உமக்கு அவர் பேரிலிருக்கப்பட்ட பட்சத்தையும் அவர் வீடுவிட்டுத் துரத்தப்பட்டுப்போயிருப்பதினிமித்தம் உமக்கு இருக்கிற மிகுந்த கிலேசத்தையும் அறிவிப்பேன்" என்று சொல்லியிருந்தான். தாவீது எருசலேமுக்குத் திரும்பினபின்பு இந்தக் கள்ளத்தனத்தைக் கண்டுகொண்டான். அந்த ஏழை மேவிபோசேத்து என்பவன் அதுவரையும் துக்கசாகரத்தில் மூழ்கினவனாயிருந்தானே. இராசா வீடுவிட்டுப் போனதுமுதற்கொண்டு அவனுக்கு எவ்வளவேனும் சந்தோஷமும் ஆறுதலுமிருந்ததில்லை. ஆகிலும் தாவீது அவனைக் கண்டிப்பாய் நோக்கி, "மேவிபோசேத்தே நீ என்னோடேகூட வராதேபோனதென்ன" என்றான். அதன்பேரில் காரியத்தின் எதார்த்தத்தை மேவிபோசேத்து விவரித்துச் சொல்லி, தன் காணியாட்சிகளில் பாதியைத் திரும்பப்பெற்றுக்கொண்டான். அந்தப் பொல்லாத வேலைக்காரனாகிய சீபாவை நியாயப்படி தாவீது தண்டியாமல், கள்ளத்தனமாய்த் தான் சம்பாதித்த

ஆஸ்தியிலும் பாதியை வைத்து அனுபவிக்கும்படி விட்டுவிட்டான். மே
விபோசேத்து என்பவனோ தன் காணியாட்சிகளைக்குறித்து எவ்வளவே
னுங் கவலைப்படாமல் தாவீது சமாதானத்தோடு வீடுவந்து சேர்ந்ததே
தனக்குச் சந்தோஷமென்று காண்பித்தான். "சீபாவே [illegible]ற்றை
யும் எடுத்துக்கொள்ளட்டும், இராசா வீடுவந்து சேர்ந்ததே எனக்குப்
போதும்" என்றான்.

இந்தச் சரித்திரத்தைக்கொண்டு இரண்டு காரியங்களை நாம் நன்றாய்க்
கற்றுக்கொள்ளலாகும். உண்மையும் கபடமும் இரண்டு படம்போல
நமக்குக் காண்பிக்கப்படுகின்றன. உண்மையான சிநேகமும் கள்ளச்
சிநேகமும் இத்தன்மையுள்ளவைகளென்றும் அறிகிறோம். கொஞ்சக்
காலத்துக்கு கள்ளத்தனம் மேற்கொள்ளுகிறதையும் இதிலே காண்கி
றோம். என்றாலும் சமர்த்தனாகிலும் கள்ளனான சீபாவைப்போலிருக்க
நீங்கள் விரும்புவீர்களோ? முடவனாயினும் உண்மையும் அன்புமுள்ள
மேவிபோசேத்துக்கு ஒப்பாயிருக்க விரும்புவீர்களென்பதற்குச் சந்தே
கமேயில்லை. மேவிபோசேத்தின் உத்தம சிநேகிதன் அவனைக்குறித்து
விபரீதங்கொண்டு அவனுடைய ஆஸ்திபாஸ்திகளையுங் காணியாட்சிகளை
யும் பிடுங்கிக்கொண்டது அவனுக்குப் பெரிய துன்பந்தான். என்றாலும்
அது கடைசியில் இன்பமாய் முடியுமென்று அவன் நம்பி மேற்படி துன்
பத்தைப் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டான். சிறுவர்களுக்கும்
சிலவேளைகளில் இப்படிப்பட்ட துன்பங்கள் நேரிடுகிறதுண்டு. பள்ளிக்
கூடத்தில் சில பிள்ளைகள் குற்றஞ்செய்யாதிருக்க, சில சமயங்களில்
குற்றஞ்செய்தவர்களாக எண்ணப்படுகிறதும் ஓரோர்வேளை தண்டிக்
கப்படுகிறதும் அபூர்வமல்ல. அதினாலே குற்றஞ்செய்தவர்கள் குற்றஞ்
செய்யாதவர்களென்று எண்ணப்படுவதைப் பார்க்க குற்றஞ்செய்யாத
வர்கள் குற்றஞ்செய்தவர்களென்று அநியாயமாய் எண்ணப்படுவது
குறைவென்று சிந்திக்கிறீர்களோ? நமக்குச் சந்தோஷத்தை அல்லது
துக்கத்தை உண்டாக்குவது நம்முடைய மனச்சாட்சிதான். அதுதவிர
எந்தக் காரியமும் உள்ளபடி விளங்குகிறதும் கள்ளத்தனம் கண்டு
பிடிக்கப்படுவதுமான காலம் ஒன்று எப்படியும் வரும். தேவன் எப்
பொழுதும் அறிகிறார். மனுஷனும் ஒருநாள் அறிவான்.

## A Family Commentary on the Sermon on the Mount.

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 7 : 24—29.

(தொடர்ச்சி.)

மேற்படி வசனங்களிலடங்கிய பொருளின் தொடர்ச்சி மேலே எடுத்
துக் காட்டிய பேர்களைத்தவிர, வேறு வகையாய்த் தங்களை வஞ்சித்
துக்கொள்பவர்களுமுண்டு. அவர்கள் தங்கள் எண்ணத்தில் மாத்திரம்,
வேத சன்மார்க்க அப்பியாசிகளாயிருக்கிறார்கள். அந்த எண்ணத்தை
யிட்டு அவர்கள் தங்களை மெச்சியுங்கொள்ளுகிறார்கள். ஆனால் இது
கிறிஸ்துவின் சுலோகமல்ல, உலோக நீதிசாஸ்திரியின் சுலோகம்.
இது கிறிஸ்தவ அப்பியாசமுமாகாது. இப்படி எண்ணுகிறவர்களுக்கு



மலைப்பிரசங்கத்தில் அடங்கிய உத்தம அப்பியாச நியமனங்கள் இவை
யென்றும், கர்த்தர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அவைகளைக் கைக்
கொண்டு அப்பியாசிக்க உண்மையாய் ஆசைப்படுபவன் அவைகளைக்
குறித்து எப்படிச் சிந்திப்பானென்றும் எடுத்துக்காட்டுவது உபயோக
மாயிருக்கும்.

அவன் எப்படிச் சிந்திப்பானென்றால், உலகத்தில் தோன்றியிருக்கிற
இந்த நூதன தீர்க்கதரிசி தம்மை மேசியாவென்று ரூபிப்பதற்கு
அநேக அற்புதங்கள்செய்து யூதராகிய நமக்குப் பழக்கமில்லாத புது
உபதேசங்களை உபதேசிக்கிறார். இவர் அநேக நூதன சத்தியங்களைப்
போதிப்பதுமல்லாமல், அவைகளைத் தவறாமல் அப்பியாசித்து நடக்க
வுங் கற்பித்து அவைகளின்படி நடக்காதவர்கள் தமது உத்தம சீஷ
ராகமாட்டார்களென்று இந்தப் பிரசங்கத்தின் கடைசிப் பங்கில் வற்
புறுத்திச் சொல்லியிருக்கிறார். அவர் சொல்லியிருக்கிறபடி மெய்யாக
வே நான் என் ஆவியில் எளிமையுள்ளவன்தானென்பதையும் நீதியின்
மேல் பசிதாகமாயிருப்பது எவ்விதமென்பதை எனக்குள் உணர்ந்தறிய
வும், சாந்தமும் அமரிக்கையுமாயிருக்கவும் வேண்டும். இனிமேல் எனக்
கு ஆறுதல் கிடைக்கவேணுமானால், இப்போது பயபத்தியாயிருந்து
துயரப்படவேணும். நான் இரக்கங்காட்டவும் எனக்குத் தீமைசெய்த
வர்களைப் பொறுக்கவும் கோபம்மூட்டத்தக்கதாக எனக்குச் செய்யப்
படுங் காரியங்களைப் பொறுக்கவும் வேண்டும். நான் மனத்தாராள
மாய்க் கடன்கொடுக்கவும், என் பொருளிலிருந்து மற்றவர்களுக்கு உப
காரஞ்செய்யவும் வேண்டும். மனிதர் காணவேணுமென்ற எண்ணத்
தோடு ஒன்றையும் செய்யக்கூடாது. மற்றவர்கள் என்னைப் புகழ்ந்து
கண்யப்படுத்தவேணுமென்ற நோக்கமாய்ப் புறம்பான ஆசாரங்களை
நிறைவேற்றிவந்த, கவைக்குதவாத என்னுடைய வீண் செய்கைகளை
விட்டு இருதய சுத்தியடையவேண்டும். நான் கைக்கொண்டு நிறைவேற்
றினேனென்று எண்ணியிருந்த தேவனுடைய பிரமாணத்தைக்குறித்து
எவ்வளவு தப்பிதமாய் நினைத்தேன் என்று சிந்திப்பான்.

மேலும் நான் கொலைசெய்யாதிருப்பது மாத்திரமல்ல, முகாந்தரமில்
லாமல் எவரையும் கோபித்துக்கொள்ளவுங் கூடாதென்றும், பொய்ச்
சத்தியம்பண்ணாதிருப்பது மாத்திரமல்ல, தேவனுக்குக் கனவீனமுண்
டாக்கத்தக்க எந்தச் சொற்களையும் வழங்கவுங் கூடாதென்றும், விபசா
ரஞ்செய்யாதிருப்பது மாத்திரமல்ல, என் எண்ணத்தில் எந்த அசுத்த
நினைவுமுதலாய் வரவுங் கூடாதென்றும், நியாயப்பிரமாணம் எனக்குக்
கற்பிக்கிறதென்று இப்பொழுது அறிகிறேன். அல்லாமலும் நான் இந்த
இயேசுவைப் பின்சென்றால் நீதியினிமித்தம் எனக்குத் துன்பம் வரு
மென்றும் தெரியவருகிறது. நான் எல்லாரும் பார்க்கத்தக்க பகிரங்க
மான இடங்களில் மாத்திரம் நின்று வீண் வசனிப்போடு கூடிய செ
பஞ்செய்கிறவனாயிராமல் என் அறைவீட்டில் சுத்த இருதயத்தோடும்,
மன்னிக்கும் தன்மையோடும் தினந்தோறும் என் சரீரத்துக்கும் ஆத்
துமாவுக்கும் எப்போதும் இடைவிடாமல் வேண்டியதாயிருக்கிற பாவ
மன்னிப்பு, அன்னபானாதிகளுக்காக மன்றாடவேண்டுமென்று இதினாற்
கற்பிக்கப்படுகிறேன். மேலும் நான் இவ்வுலகத்தில் பொக்கிஷம் சேர்த்
துவைக்கக் கூடாது. பரலோகத்தில் எனக்குப் பொக்கிஷம் வேணுமா
னால் என் மனதை அங்கே செலுத்தி பூமிக்குரிய காரியங்களின் மேலல்
ல, மேலான காரியங்களின் மேலுள்ள சிந்தையினாலே என்னை வருத்
தப்படுத்தும் அநேக கவலைகளை விட்டுவிடவேணும். இச்சீவகாலத்தில்
எனக்குத் தேவையாயிருக்கிற அன்னவஸ்திரமுதலானவைகளுக்காக

வுங் கவலைப்படக்கூடாது, இவ்வுலக காரியங்கள் அனுகூலமாயிருந்தா
லும் பிரதிகூலமாயிருந்தாலும் அமைதலுள்ள மனதோடு தேவசித்தத்
துக்கு அடங்கி நடக்கப் படிக்கவும், முதலாவது தேவனுடைய இராச்
சியத்தையும் அவருடைய நீதியையும் தேடி அந்தப் பெரிய ஆசீர்வாதங்
களைப் பெற்றுக்கொண்டால் சரீரத்துக்கு அவசியம் தேவையாயிருக்
கிற எல்லா நன்மைகளும் தவறாமல் கூட்டிக்கொடுக்கப்படுமென்று நம்
பவும் இந்தப் பரம குருவானவர் கற்பித்திருக்கிறார்.
அல்லாமலும் முன்னே மற்றவர்களைக் குற்றவாளிகளென்று எண்
ணுந் தன்மையுள்ளவனாயிருந்த நான், இப்போது என்னைத் தானே குற்
றவாளியென்று எண்ணும் தன்மையுள்ளவனாகவேணுமென்று அறிகி
றேன். எவைகளை மற்றவர்கள் எனக்குச் செய்ய விரும்புவேனோ அவை
களை நானும் அவர்களுக்குச் செய்யவேணுமென்பது இதுமுதல் எனக்
குத் திட்டமான சட்டமாயிருக்கவேணும். ஆ! எவ்வளவு அதிகச் சுத்
தம் எனக்கு வேண்டியதாயிருக்கிறது. நான் உலகத்துக்கு ஒளியாக
வும் மலையின்மேல் கட்டப்பட்ட பட்டணம்போலவும் பூமிக்கு உப்பாக
வும் இருக்கவேண்டும். ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும் வழி நெ
ருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். இந்தச்
சிறு கூட்டத்திலேதான் நானும் ஒருவனாயிருக்கவேண்டியவனாயிருக்கி
றேன்.
பின்னும் அவன் தனக்குள் எப்படிச் சிந்திப்பானென்றால் இவைகளை
யெல்லாம் நிறைவேற்ற நான் தகுதிமானா? என் இரட்சகரே நான்
நடக்கவேண்டிய வழியின்னதென்று எனக்குக் காட்டும், என்னை ஆற்
றித்தேற்றும். நித்தியஜீவனுள்ள வசனங்கள் உம்மிடத்திலிருப்பதால்
உம்மையல்லாமல் வேறே யாரிடத்திற்போவேன். என்னுடைய முந்தி
ன பாவங்களையும், இனி நிறைவேற்றவேண்டிய கடமைகளையும் நான்
ஒருவாறு அறியத்தக்கதாக என் கண்களைத் திறந்திருக்கிறீர். ஆண்டவ
ரே இதற்குமுன் நான் செய்த பாவங்களை மன்னியும், நான் பாவமன்
னிப்படையத்தக்க வகையை எனக்கு அதிகத் தெளிவாய்க் காட்டும்.
நான் நிறைவேற்றும்படி நீர் கற்பித்திருக்கிற பெரிய காரியங்களை நான்
நிறைவேற்றி முடிக்கப் பெலன் எங்கிருந்து எனக்குக் கிடைக்குமென்
பதை எனக்கு தெரியப்படுத்தும் என்றிப்படிச் சிந்திப்பான்.
கேட்டதின்படி செய்ய மனமும் தீர்மானமுமுள்ளவனாய் அன்றைக்
கு மலைப்பிரசங்கம் கேட்டவன், ஏறக்குறைய மேலே விபரித்திருக்கிற
பாவனையாக் அதைக்கேட்டு சிந்தித்திருப்பான். அப்படிப்பட்டவன் கிறி
ஸ்துவைத் தவறாமலும் உண்மையாகவும் பின்பற்றினவர்களில் ஒருவ
னாயிருந்திருப்பான். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட அந்தத் துன்
பவேளையில் அப்போஸ்தலருடைய விசுவாசம் சற்று பலட்சயப்பட்ட
துபோல அவனுடைய விசுவாசமும் சிற்சிலவேளைகளில் பலட்சயப்
பட்டிருந்திருக்கும். அப்படியிருந்தபோதிலும் அவனும் அப்போஸ்தல
ருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களில் ஒருவனாகவும், பெந்தேகோ
ஸ்துநாளில் கூடிவந்திருந்த பெருங்கூட்டத்தில் ஒருவனாகவும் அப்போ
ஸ்தலருடைய உபதேசத்திலும், ஐக்கியப்படுதலிலும், அப்பம்பிட்குதலி
லும் செபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்த அந்த ஆதித்
திருச்சபையில் ஒருவனாகவும் இருந்திருப்பான். இப்போது நம்மிடத்தி
லிருப்பதும், அப்போஸ்தலர் எழுதிவிட்டதுமாகிய நிருபங்களைப் பெற்
றுக்கொண்டவர்களில் ஒருவனாகவும், அவைகளிற் சொல்லப்பட்டிருக்
கிற பரிசுத்தவான்கள், அழைக்கப்பட்டவர்கள், கிறிஸ்துஇயேசுவுக்குள்
பரிசுத்தமாக்கப்பட்டவர்களில் ஒருவனாகவும், அந்த நிருபங்களைக் கவ



னமாகவும், உரித்தோடும் வாசித்தவனாகவும், அவைகளில் அமைக்கப்
பட்ட குணகுணங்கள் உள்ளவனாகவும் இருந்திருப்பான்.
இக்காலத்திலும் தான் வாசித்ததும் கேட்டதுமாகிய போதகத்தின்
படி நடக்க மனமும் தீர்மானமுமுள்ளவனாய் இந்த மலைப்பிரசங்கத்
தைக் கவனமாகவும் உரித்தோடும் வாசிக்கும் அல்லது கேட்கும் ஒவ்
வொரு மனிதனுடைய காரியமும் இப்படியேயிருக்கும். அவனும் இப்
படியே உணருவான். அவன் இந்த மலைப்பிரசங்கத்துக்கு மாத்திரமல்
ல, கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலரும் சொன்ன மற்ற வசனங்
களுக்கும் இப்படியே கவனம் செலுத்துவான்.
சிலர் கிறிஸ்துமார்க்கப் பத்தி விசுவாசத்துக்கு அவசியமானதெல்
லாம் இந்த மலைப்பிரசங்கத்தில் அடங்கியிருக்கிறதென்று உத்தேசித்
துக்கொண்டு இதைமாத்திரம் தங்களுக்கு வேதமார்க்கப் பிரமாணமாக
ஒப்புக்கொண்டு வேதத்தின் மற்ற பங்குகளைக்குறித்து எண்ணமற்றவர்
களாயிருக்கிறார்கள். இவர்கள் இரட்சகர் தாமே இந்த மலைப்பிரசங்கத்
தைச் சொன்னபின் ஒரு தருணத்தில் சொல்லியிருக்கிறதை மறந்தவர்
கள்போலிருக்கிறார்கள். அவர் சொன்னதாவது, "இன்னும் அநேக காரி
யங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. அவைகளை
நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்தியஆவியாகிய அவர்
வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர்
தாமே சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்
சொல்லி, வருங்காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். அவர் என்னு
டையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதால் என்னை மகிமைப்படுத்து
வார்" என்பதாம். (யோவான் 16: 12—14.)

---

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 17. அதிகாரம்.

*தியோக்கிளீஷன் சிம்மாசனமேறினது,—அற்புதவரம் படிப்படியாய் நின்றுபோனது,—கிறிஸ்தவர்கள் துன்பம் ஆரம்பமானது,—துன்பத்தின் கொடுமை,—கெலேரியு, கொன்ஸ்ற்றேன்றியுஸ் என்பவர்கள் இராயர்களானது,—சபைக்குக் கொஞ்சஞ் சமாதானம் திரும்பியது,—கொன்ஸ்ற்றேன்றியு என்பவன் மரணமடைந்தது,—கொன்ஸ்தந்தீன் பட்டமடைந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுகூலம்பண்ணினது,—குருமானிபங்கள்,—பொதுவான திருச்சபை என்றிவைகளைக் குறித்த விவரங்களடங்கும்.*

(தொடர்ச்சி.)

---

இதினிடையில் மாக்ஸிமினு என்பவனோ தன் நிஷ்டூரங்களை முன்னை
யிலும் அதிக மூர்க்கமாய் நடப்பித்துக்கொண்டு வந்தான். கொன்ஸ்ற்
றேன்றியு மரித்தவுடனே கெலேரியு என்பவன் இராயன் என்ற பட்டத்
தைத் தனக்குக் கொடுப்பானென்று நினைத்திருக்க, அது முதலாவது
செவேரு என்பவனுக்கும் அவனுக்குப்பின் லிசினியு என்பவனுக்கும்

கொடுக்கப்பட்டதைக் கண்டு, 307ம் வருஷம் கடைசியில் கெலேரியுவின் உத்தரவுக்குக் காத்திராமல் அப்பட்டத்தைத் தானே தரித்துக்கொண்டான். பலஸ்தீனாவிலும் எகிப்திலும் மறுபடியும் கிறிஸ்தவர்களை வாதிக்கத் தொடங்கினான். செசாரியாவிலே 309 ல் பம்பிலு என்பவன் இரத்தச்சாட்சியாய்க் கொலையுண்டது மிகுந்த பிரலாபத்துக்கு ஏதுவாயிருந்தது. அவன் தேறின வித்துவான். ஓரிஜனுடைய நூல்களையெல்லாம் தன் கையினாலே பிரதிபண்ணியிருந்தான். கி. பி. 307 வருஷத்தில் சிறைச்சாலையிலடைபட்டிருந்தபொழுது, ஓரிஜனுடைய கொள்கைகள் ஆட்சேபனைக்கிடமாகியிருந்தபடியால், அவைகளுக்குச் சார்பாய் ஒரு நூல் எழுதிக்கொண்டிருந்தான். அதுகாரியத்தில், இப்பொழுது சுமார் நாற்பது வயசாயும், செசாரியாவிலே அநேக வருஷமாய் பம்பிலுவின் சிஷனாயுமிருந்த யூசெபியுஸ் என்பவனும் அவனுக்கு உதவிசெய்தான். இரண்டு வருஷம் சிறைச்சாலையிலிருந்தபின் வேறு பன்னிரண்டு பேர்களோடு இவனும் சிரச்சேதம்பண்ணப்பட்டான். அவர்களுடைய பிரேதங்களைப் பட்சிகளும் மிருகங்களும் தின்னும்பொருட்டு தேசாதிபதியின் உத்தரவுப்பிரகாரம் நாலுநாள்வரையும் வெளியே போட்டிருந்தார்களாம்.

இப்பேர்ப்பட்ட பயங்கரமான கொடுமைகளைக் கிறிஸ்தவர்கள் சகித்துக்கொண்டிருக்கிற காலத்தில், அவர்கள் நினையாத ஓர் இடத்திலிருந்து கொஞ்சம் அநுகூலம் பிறந்தது. அதெப்படியென்றால், 309 ம் வருஷம் கடைசியில் கெலேரியு என்பவன் வியாதிப்பட்டு மறுவருஷ முழுவதும் சொல்லமுடியாத வேதனையும் சஞ்சலமுமடைந்தான். 311 ம் வருஷத்து வசந்தகாலத்தில் அவன் மரிக்கிறதற்குச் சமீபிக்கையில கிறிஸ்தவர்களைத்தான் நிஷ்டூரமாய்த் துன்பப்படுத்தினதினிமித்தம் மனச்சாக்ஷியினாலே மிகவும் வாதிக்கப்பட்டான். அதினாலே அவன் சாகிறதற்குச் சிலநாளுக்கு முன்னதாக, கிறிஸ்தவர்கள் தங்கள் மதாசாரப்படிக்கு தேவாராதனை செலுத்துவதற்கு ஆலயங்களைக் கட்டிக்கொள்ளலாமென்று ஒரு சட்டம் பிறப்பித்தான். அதில் அவன் தான் கையொப்பம் வைத்திருந்ததோடு இலிசியு கொன்ஸ்தந்தீன் என்பவர்களுடைய பேர்களும் காட்டியிருந்தது. மேற்படி சட்டமானது கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தாமல் நிறுத்திவிடவேண்டுமென்ற பொருளுள்ளது தானே. அந்தப்பிரகாரம் சிறைச்சாலையிலடைபட்டிருந்தவர்களும் சுரங்கங்களில் வேலைசெய்தவர்களுமான அநேகாயிரம் பேர் விடுதலையடைந்து தங்கள் வீடுகளுக்குத் திரும்பினார்கள். அச்சமயத்தில் ஐந்து வருஷமாய் ஒளித்திருந்த பேதுருவும் அலெக்சந்திரியாவுக்குத் திரும்பிவந்தான். வந்துசேர்ந்தவுடனே அத்திசையிலுள்ள கண்காணிமார்களை ஒரு சங்கமாகக் கூடிவரச்செய்து மெலிதியு என்பவனை உத்தியோகத்தினின்று தள்ளினார்கள். என்றாலும் அவனாலுண்டான பிரிவினை சில வருஷக்காலமாய் அலெக்சந்திரியாச் சபையில் பலதொல்லைக்கு ஏதுவாயிருந்தது.

கிறிஸ்தவர்கள் திரும்பவும் சமாதானத்தோடு சுகமாய் வாழ்வதுபார்க்க மக்ஸிமினுக்குச் சகிக்கவில்லை. அதனாலே கெலேரியு என்பவன் மரித்தவுடனே அவன் லிசினியுவுக்கு விரோதமாய்ப் படையெடுத்துப்போக, இரண்டு இராயர்களும் போர் கலக்க ஆயத்தமானார்கள். அத்தருவாயில் யாது காரணத்தினாலோ சண்டையை நிறுத்தி, இராச்சியத்தை மறுபடியும் பாகித்துக்கொண்டார்கள். மக்ஸிமின் என்பவன் தன்னோடு இராச்சியபாரந் தாங்குகிற துணையரசர்களைத் தற்சமயத்தில் எதிர்க்கிறது சரியல்லவென்று நிதானித்து, கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தப்படாதென்று தன் மந்திரிமாருக்கு வாயினாலே கட்[illegible]



டான். ஆகிலும் கிறிஸ்தவர்களை எப்பொழுதும் துன்பமில்லாமலே விடவேண்டுமென்பது அவனுடைய நோக்கமல்ல. அந்த வருஷமுடியுமுன் நிக்கோமேதியாவுக்கு அவன் திரும்பிவிட, அவன் அதிகாரத்துக்குட்பட்ட தேசங்களிலெல்லாம் கிறிஸ்தவர்களை மறுபடியும் துன்பப்படுத்துவதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் நடந்தன. சில பட்டணங்களிலுள்ள குடிகள் சேர்ந்து, கிறிஸ்தவர்களை அங்கே குடியிருக்கவிடப்படாதென்று மனுக்கள் எழுதிக்கொடுக்கச்செய்து, குடிகளின் விண்ணப்பத்தை நிறைவேற்றுகிற பாவனையாக, முன் நடப்பித்த பிரகாரம் கிறிஸ்தவர்களை நிஷ்டூரமாய் ஒடுக்கவும் வாதிக்கவும் ஆரம்பித்தான். மேலும் அவன் விக்கிரகாராதனையை மறுபடியும் ஸ்தாபிக்கமுயன்று, ஒவ்வொரு பட்டணத்திலும் பூசாசாரிகளை ஏற்படுத்தினதுமல்லாமல், ஒவ்வொரு நாட்டிற்கும் உயர்ந்த அந்தஸ்துள்ள ஒருவனை பிரதான பூசாசாரியாகவும் நியமித்தான். இதினாலே ஒவ்வொரு நாட்டிலும் சிரேஷ்ட கண்காணிமார்களை நியமிக்கிற வழக்கம் சாதாரணமாயிற்று என்று நாம் மேலே சொன்ன குறிப்பு உறுதிபெறுகிறது. எகிப்துதேசம் தற்காலத்தில் ஐரோக்கிலே என்ற ஒருவனுடைய அதிகாரத்துக்குட்பட்டிருந்தது. இவன் தன் எசமானோடு சேர்ந்து கிறிஸ்தவர்களைக் குரூரமாய் ஒடுக்கினதுமல்லாமல், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக ஒரு நூலும் எழுதிப் பிரசுரஞ்செய்தான். இந்த நூலுக்கு யூசெபியுஸ் என்பவர் கண்டனை எழுதியிருக்கிறார்.

இக்காலத்திலே அஞ்ஞானிகள் நூல்களினாலே கிறிஸ்துமார்க்கத்துக்குக் கெடுதசெய்ய வெகு ஊக்கத்தோடு முயன்றதுபோல தெரியவருகிறது. பலவந்தஞ்செய்கிறதினாலே பிரயோசனமில்லையென்று அவர்கள் உணர்ந்து, நூல்கள் எழுதிப் பிரசித்தஞ்செய்கிறதினாலே மாத்திரம் பயனுண்டாகுமென்று நினைத்தார்கள். அந்த முகாந்தரத்தினாலே முதலாம் இரண்டாம நூற்றாண்டுகளிலே கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய்ச் சொல்லப்பட்ட அவதூறுகளெல்லாம் திரும்பவும் உயிர்கொண்டன. பிலாத்துவின் நடபடிகள் என்ற பெயராய் ஒரு நூலைப் பாணித்து, அதில் கிறிஸ்துநாதரைக்குறித்து புரட்டும் ஈங்கிசையுமான கதைகளைக் கட்டினதுமல்லாமல் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு இதையும் இதைப்போன்ற மற்றும் பல நூல்களையும் படிப்பிக்கும்படிக்கும் திட்டங்கள் செய்தார்கள். நூல்களின்மூலமாய் வாதாடுகிறதற்கு கிறிஸ்தவர்களும் நன்றாய் ஆயத்தப்பட்டிருந்தார்கள். இரண்டு நூற்றாண்டுகளாக அவர்கள் தங்கள் உபதேசங்களை விஸ்தரிக்கவும் மார்க்கத்துக்காக நியாயம்பேசவும் பழகியிருந்தார்களே. இந்த நூலாசிரியர்களை எதிர்க்கத்தக்க அஞ்ஞான வித்வான்கள் அநேகர் எழும்பவில்லை. அதுபோலவே இந்தக்காலத்திலும் கல்வியிலும் யூகசமர்த்திலும் சிறந்தவர்கள் அநேகர் சபையிலிருந்தார்கள். இவர்களுக்குள் இலக்தேன்றியுஸ் அர்னோபியுஸ் என்ற இருவரும் விசேஷமாய்க் குறிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதின நூல்களும் நாளதுவரையுமிருக்கின்றன. அவ்விருவரும் ஆப்பிரிக்கா தேசஸ்தர்கள். இருவரும் சாதுரியப் பிரசங்காசிரியர்கள். இவர்கள் சபையைச்சேர்ந்த குருமார்களல்லாதவர்களாயும் லௌகீக அலுவல் செய்தவர்களாயுமிருந்தபடியால், சுயநன்மையை நாடிக் கிறிஸ்துமார்க்கத்துக்குச் சார்பாய் எழுதியிருக்கமாட்டார்களே. ஆகையால் அவர்களால் எழுதப்பட்டிருக்கிற நூல்கள் அருமையானவைகளும் நாம் கரிசனையாய் வாசிக்கத்தக்கவைகளுமாயிருக்கின்றன. மேற்படி நூல்களில் உபதேசத்துக்கடுத்த சில குற்றங்குறைகள் காணப்படுவது ஆச்சரியமன்று. ஆதிப்பிதாக்கள் சிலருடைய நூல்களைப்போல இவைகளைக் கிறி

ஸ்தவ உபதேச சங்கிரகமாகக் கொள்வது தகுதியல்ல. என்றாலும் அவைகள், கிறிஸ்துமார்க்கத்தைக்குறித்து அக்காலத்தவர்கள் சாதாரணமாய்க் கொண்டிருந்த அபிப்பிராயங்கள் இவைகளென்று காட்டுகிறவைகளாயும், அஞ்ஞான அனர்த்தங்களையும் வீண்பக்தியையும் பலமாய்க் கண்டிக்கிறவைகளாயுமிருக்கின்றன. இக்காலத்திலே சபையிலிருந்த வித்வான்களிற் சிறந்தவன் யூசெபியுஸ் என்று சொல்லத்தகும். ஆகிலும் அவன் எழுதிய சரித்திரம் நாலாம் நூற்றாண்டில் இதன் பத்துக்குப் பின்னுண்டானதானபடியால் அதைப்பற்றிப் பேசுவதற்கு முன் மக்ஸிமினு நடப்பித்த கொடுமைகளைச் சற்று யோசித்துக்கொள்ளவேண்டும்.

---

## Communicant's Companion.

## நற்கருணை விளக்கம்.

### ௮. அதிகாரம்.

இந்தப் பந்தியில் விசுவாசக் கண்ணால் காணப்படும் சில காட்சிகளைப் பற்றிப் பேசுவோம்.

(தொடர்ச்சி.)

VI. புதிய உடன்படிக்கையினாற் சம்பாதிக்கப்பட்ட, இந்தப் பெரிய நன்மையை வந்துபாருங்கள்.

கிறிஸ்து தம்முடைய மரணத்தினால், இழந்துபோன நம்முடைய ஜீவனை மீட்டுக்கொண்டதும், நித்தியவேதனையினின்று நம்முடைய ஆத்துமாக்களை விடுவித்துக்கொண்டது மாத்திரமல்ல, நித்தியஜீவனும், மெய்ப்பாக்கியமும் அதினாலே சம்பாதித்தாரென்பது மாறாத சத்தியம். கிறிஸ்துவின் மரணம் நம்முடைய இரக்ஷிப்புக்குக் காரணமும், நம்முடைய சந்தோஷங்களுக்கெல்லாம் ஊற்றும், நம்முடைய நம்பிக்கைக்கெல்லாம் ஆதாரமுமென்று நினைத்துக்கொள்ளவேணும். நம்முடைய நன்மைகளெல்லாம் சுரந்துவரும் ஊற்றாகிய கிறிஸ்துவின் இரத்தத்தை வந்துபாருங்கள். அதுவே பாவமன்னிப்புக்காகச் செலுத்தப்பட்ட கிரயம். அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்புண்டாயிருக்கிறது என்பது தேவசத்தியம். விலையுயர்ந்த இரத்தமாகிய அந்த இரத்தமில்லாமல் பாவமன்னிப்பில்லை. இந்தப் பந்தியிற் காணப்படும் கிறிஸ்துவின் இரத்தம் வானத்திலிருந்து பூமிக்கனுப்பப்படும் சகல நன்மைகளுக்கும் வாய்க்கால்போலிருக்கிறது. மறைந்த மன்னா இதின் மூலமாய் நமக்குக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய மீதில் விசனமாயிருக்கும் தேவகோபத் தீயை அணைக்குந் தண்ணீர் இந்த இரத்தமே. கறைப்பட்ட நம்முடைய மனச்சாக்ஷியைச் சுத்திகரிக்க இந்த இரத்தமே, நம்முடைய இருதயத்தில் தெளிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவிகளுக்கும் விரோதமாய் அடைக்கப்பட்ட மோக்ஷவாசலைத் திறந்துவிடும் புதிதும் ஜீவனுமான வாசலாயிருக்கிறது. இந்த இரத்தத்தினாலே பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமான இடத்தில் நாம் தைரியத்தோடே சேர இடம்பெற்றிருக்கிறோம்.



கிறிஸ்து நமக்காக மரணமடைந்ததினாலே நாம் அவருக்கு எவ்வளவு கடன்பட்டிருக்கிறோமென்பதை வந்துபாருங்கள். அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்தரம் அதினாலே சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. இதையிட்டே அவர்பேரிலுள்ள நம்முடைய அன்பு அதிகப்படவேணும். இவ்வுலகத்தில் நாம் பெற்றனுபவிக்குஞ் சகல நன்மைகளும் அவருடைய பராமரிப்பின் கரத்திலிருந்து புறப்பட்டு வருவதுபோல நாம் மறுமையிலடையப்போகும் பரம நன்மைகள் யாவும் அவருடைய திருக்குமாரன் இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தினாலுண்டாகும். உலகத்திலுள்ள எந்த இரத்தினங்களும், மரகதங்களும் இந்நன்மைக்கீடல்ல. ஆகையினாலே இதற்கிடையூறாயிருக்கும் எந்தக் கேடுகளையும் விட்டுவிடுவது உத்தமம். நம்முடைய வலதுகை, வலதுகண் இதற்குக் கேடாயிருந்தாலும் தறித்தெறிந்துபோடுவது உத்தமம். விசுவாசிப்பவர்களுக்கு இது அருமையானதால் அப்படியே செய்வார்கள்.

---

### ௯. அதிகாரம்.

நற்கருணை வழியாய் உண்டாகும் சில மெய்ப்பலன்களைக் குறித்து.

I. பாவமன்னிப்பு.
II. புத்திரசுவிகாரம்.
III. மனப்பாக்கியமும் மெய்ச்சமாதானமும்.
IV. இம்மைக்கு வேண்டிய வரப்பிரசாதங்கள்.
V. நித்தியஜீவனை அடைவோமென்பதற்குரிய நிச்சயம், அல்லது அச்சாரம்.

நற்கருணையைச் சேருகிறவர்கள் இரக்ஷகர் சிலுவையில் தொங்கும்போது தூரநின்று அவரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தவர்களைப்போல அவருடைய மரணத்தைக் கூறுகிறவர்களாய் மாத்திரமிராமல், பலிப்பீடத்தைச் சேவிக்கிறவர்கள் பலிப்பீடத்திலுள்ளவைகளைப் பொசித்ததுபோல அவரைப் பொசிக்கிறவர்களாயிருக்கவேணும். வானத்திலிருந்திறங்கிவந்த அப்பமாகிய இவரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருப்பது மாத்திரம் போதாது. அவரை விசுவாசத்தினாலே உட்கொள்ளவேணும். நம்முடைய ஆண்டவர் ஐந்து அப்பத்தைக்கொண்டு ஐயாயிரம் பேருக்குப் போஜனங்கொடுத்தபோது, ஆத்ம போஜனத்தைக் கொடுக்கிறவரும் தாமென்று காட்டும்பொருட்டு, அந்த அற்புதத்தைச் செய்தாரென்று அறிந்துகொள்ளவேணும். கர்த்தருடைய வீட்டிலுள்ள சம்பூரணமான போஜனத்தை நாம் பொசித்துத் திருப்திகரப்படாதது நம்முடைய குற்றமேயொழிய, மற்றப்படியல்ல. சுவிசேஷத்திலடங்கிய அருட்பிரசாதமாகிய வாக்குத்தத்தங்களை முத்திரைப்படுத்துகிற கிருபையின் எத்தனங்களும், விசேஷமாக நற்கருணையும் இரக்ஷிப்பின் ஊற்றுகளாகவும், பாலுந் தேனுமோடு மடுக்களாகவும், நம்முடைய விளக்குகள் அணைந்துபோகாமல், எண்ணெய்விட்டுக்கொண்டிருக்கும் எண்ணெய்க்குத்திகளாகவும் இருக்கின்றன.

இந்தப் பந்தியில் இயேசுநாதரை ஏற்றுக்கொள்ளுகிறோம். அவர் நமக்கு எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருக்கிறார். அவரை நமக்குக் கொடுத்த தேவன் அவரோடுகூட மற்ற யாவையுங் கொடாமலிரார்.

நாம் கர்த்தருடைய பந்தியைச் சேரும்போதெல்லாம் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும்படி வருகிறோம். அதாவது,

I. நாடோறும் நாம் செய்யுங் குற்றங்கள் யாவும் மன்னிக்கும்படி திறக்கப்பட்ட ஊற்றினண்டை வருகிறோம். அநேகங் காரியங்களில் நாம் நாடோறுங் குற்றஞ்செய்கிறோம். ஸ்நானம்பண்ணப்பட்டவனும் அதாவது நீதிமானாக்கப்பட்டவனும் தன் பாதங்களைத் திரும்பக் கழுவ வேண்டிய அவசியமுண்டு. நாடோறும் நமக்கு அவசியமவேண்டிய நன்மைகளுக்குத் தேவனிடத்தில் திறக்கப்பட்ட ஊற்று வைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அன்றன்றுள்ள அப்பத்துக்காக நாடோறும் மன்றாடுவதுபோல, அன்றன்று நம்மிலொட்டும் பாவத்தூசிக் கழுவப்படும்படி நாடோறும் அவருடைய பாதத்தில் விழுந்து மன்றாடவேண்டியது நம்முடைய கடமை.

கர்த்தருடைய பந்தியைச் சேரும்போதெல்லாம் பின்வரும் பிரகாரம் தேவனை நோக்கிப் பிரார்த்திக்கவேண்டும். “கர்த்தாவே நான் பாவி, பெரிய பாவி. நான் மதியீனமாய் நடந்து, உமது தயவை இழந்து, உமது கோபத்துக்குட்பட்டு, எக்காலமுந் தேவரீரைவிட்டு அப்புறப்பட ஏதுவானவன். ஆகிலும் கிறிஸ்து மரித்து எழுந்திருக்கிறார். அவர் நித்திய நீதியைச் சம்பாதித்து, அநேகருக்காகத் தமது ஜீவனை மீட்கும்பொருளாகக் கொடுத்திருக்கிறார். அநேகருக்கென்றால் எனக்கில்லாமற்போவானேன். மெய்யாய்க் குணப்படும் பாவிக்கும் குறையற்ற பாவமன்னிப்பு அவரிடத்திலுண்டு. நீர், நீரே என் பாவங்களை உம்முடைய நிமித்தம் நிவர்த்திபண்ணுகிறவர். கர்த்தாவே நான் என் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுகிறேன். உம்முடைய வாக்குத்தத்தங்களையெல்லாம் நம்பி, அடைக்கலப்பட்டணமாகிய இரத்தப் பந்தியண்டை வருகிறேன். உம்மண்டை வருகிற அடியேனைத் தள்ளாதிரும்” என்று பிரார்த்திக்கவேண்டும்.

மேலும் நாம் இந்தப் பந்தியைச் சேரும்போதெல்லாம், நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதென்ற நிச்சயத்தை அடைகிறோம். மகனே, மகளே பயப்படாதே, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்ற சத்தத்தை இந்தப் பந்தியிற் கேட்கிறோம். கெட்டகுமாரன் தூரத்திலிருக்கும்போதே, தகப்பன் ஓடிப்போய் முத்திசெய்ததினால், தகப்பன் தன் குற்றத்தைப் பாராமல், தன்னை ஏற்றுக்கொண்டானென்ற நிச்சயத்தை மகனடைந்ததுபோல, தேவன் இந்தப் பந்தியின்மூலமாய் உண்மையோடே அவரைச் சேருகிறவர்களை முத்திசெய்து அழைக்கிறார்.

II. புத்திரசுவிகாரம் இங்கே அளிக்கப்படுகிறது. கிருபை உடன்படிக்கையைக்கொண்டு நாம் பாவவிமோசனமடைகிறதோடுகூட புத்திரசுவிகாரத்தையும் அடைகிறோம். நாம் பிள்ளைகளுக்குரிய பாத்தியத்தை அடைகிறோம். கிறிஸ்து நம்மை நியாயப்பிரமாணத்தினின்று மீட்டுக்கொண்டார். பிள்ளைகள் போசிக்கும் ஆகாரம் இந்தப் பந்தியில் நமக்குப் பரிமாறப்படுகிறது. எவ்வளவு பெரிய அன்பு இது? இந்தப் பந்தியின் வழியாய் தேவன் நமக்குப் புத்திரசுவிகாரத்துக்குரிய சலாக்கியத்தையும், புத்திரசுவிகாரத்துக்குரிய ஆவியையும் அளிக்கிறார். இந்தப் பந்தியில் நாம் அவரை அப்பா பிதாவே என்றழைக்கிறோம். அவர் நம்மைப் புத்திரரென்றழைக்கிறார். சவுலின் மனிதர் தாவீதினிடத்தில் வந்து சவுலுடைய மகளை விவாகம்பண்ணச் சொன்னபோது, நான் இராஜாவின் மருமகனாவது லேசான காரியமோ என்றான். அப்படியானால் அற்பக் கிருமிகளாகிய நாம் தேவாதிதேவனாகிய கடவுளுக்குப் பிள்ளைகளாவது சின்னக்காரியமோ!



நித்திய கடவுளாகிய ஆண்டவர் இந்தப் பந்தியில் நம்மைப் பார்த்து பயப்படாதே, நாம் உன்னை இடைவிடாமல் சிநேகித்து, என்றைக்கும் உன்னோடிருக்கும் உன் பிதா. உனக்காக வேண்டிய காரியங்களை நம்மிடத்திற் கேள். உன் பாரத்தை நம்முடையபேரிற் போட்டுவிடு, உன்னுடைய கவலை நம்முடைய கவலை. “சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும். கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது.” நம்முடைய ஞானத்தால் உன்னை நடத்தி, நம்முடைய பலத்தால் உன்னை ஸ்திரப்படுத்தி, நம்முடைய நித்திய கரத்தால் உன்னைத் தாங்குவோம். “தகப்பன் பிள்ளைகளுக்கிரங்குமாப்போல, நமக்குப் பயந்தவர்களுக்கு நாம் இரங்குவோம்” என்கிறார்.

மேலும் நீ பயப்படாதே, நாம் உன்னுடைய தேவன். உன் மனதில் ஏதாவது சந்தேகமிருந்தால், நம்மிடத்தில் வந்து யோசி, நீ நடக்கவேண்டிய வழியை நாம் காண்பித்து, நம்முடைய கண்களால் உன்னை நடத்துவோம். உன்னுடைய வழிகளிலெல்லாம் நம்மை அறிந்துகொள், நாம் உன்னை வழிநடத்துவோமென்கிறார்.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

### முடிவுரை.

### வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.

(தொடர்ச்சி)

145. ஆலூஸ். சீனாய்க்குப்போகிற வழியில், இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த இடம். எண். 33: 13.

146. ஆலோத். ஆசேரை அடுத்த ஒரு சாகம். 1 இராசா 4: 16.

147. ஆவியர். பெலிஸ்தியர். உபா. 2: 22.

148. ஆவிலா. பொன் மிகுத்த ஒரு நாடு. ஆதி. 2: 11.

(2) கூசின் குமாரரில் ஒருவன் பேரால் அழைக்கப்பட்ட ஒரு நாடு. ஆதி. 10: 7. அரபியில்.

149. ஆவீது. ஏதோம் இராசாவாகிய ஆதாதின் இராசதானிப் பட்டணம். ஆதி. 36: 35.

150. ஆவீம். பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 23.

151. ஆவென். ஓன் பட்டணத்துக்கு மறு பேர். எசேக். 30: 17.
(2) பெத்தாவேன் அல்லது பெத்தெலுக்கு மறுபேர். ஓசி. 10: 8.
(3) சிலோசிரியா என்னப்பட்ட பெரிய மைதானத்துக்கும் பேர், தமஸ்குவை அடுத்திருக்கிறது. ஆமோஸ். 1: 5.

152. ஆற்றுகு. யூதாவிலுள்ள பட்டணம். 1 சாமு. 30: 30.

153. ஆனதோத். பென்யமீனில் லேவியர் பட்டணம். எரேமியாவின் ஜனன ஊர். யோசு. 21: 18. 2 சாமு. 23: 27. 1 நாளா. 12: 3.

154. ஆனுப். (திராட்சக்கொத்து) யூதாவின் மலை நாட்டுப் பட்டணம். யோசு. 11: 21. எபிரோனுக்குத் தென்மேற்கே, 10 மயில்.

155. ஆனீம். யூதாவின் மலை நாட்டுப் பட்டணம். யோசு. 15: 50.

156. ஆனேஸ். எகிப்தில் பட்டணம். ஏசா. 30: 4. தகபானேஸ் பார்.

157. ஆனேம். இசக்காரில் லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். 1 நாளா. 6: 73. என்கன்னீம் இதுதான். யோசு. 19: 21.

158. ஆனேர். மேல் மனாசேயில் லேவியர் (கோகாத்தியர்) பட்டணம். 1 நாளா. 6: 70.

159. இக்கோனியா. லிக்கவோனியா நாட்டின் தலைநகர். தவுரு மலையின் அடிவாரத்திலிருக்கிறது. இப்போது கோனியா என்று அழைக்கப்படுகிறது. அப். 13: 51. 14: 1, 19, 21. 16: 2. 2 தீமோ. 3: 11.

160. இசக்கார். ஒரு கோத்திரம். எண். 26: 25.

161. இஸ்மவேலர். இஸ்மவேல் வம்சத்தாரான அரபர். அவர்கள் எகிப்தியரோடு வியாபாரஞ்செய்து, பார்சுக்குடா அசீரியா வரையும் அலைந்து திரிகிறார்கள். ஆதி. 37: 25.

162. இஸ்ரவேல். (தேவனோடு அதிபதி) இஸ்ரவேல் இராச்சியம். 2 இராசா 14: 9.

(2) எப்பிராயீமின் மலை நாடுகளுக்கும் பேர். யோசு. 11: 21. எசே. 6: 2, 3. 19: 9. 33: 28. 34: 13, 14. 35: 12. 36: 1, 4, 8. 37: 22. 39: 2, 4, 17.

163. இதாலா. செபுலோனில். யோசு. 19: 15.

164. இதுமேயா. ஏதோம் பார். மாற். 3: 8.

165. இதெக்கேல். திகிரீஸ் நதி. ஆதி. 2: 14.

166. இத்தாகாத்சீன். செபுலோனில் பட்டணம். யோசு. 19: 13.

167. இத்தாலியா. ஐரோப்பாவில் ஒரு தேசம். இதற்கு ரோம் பிரதான பட்டணம். அப். 18: 2.

168. இத்துரேயா. பலஸ்தீனாவின் வடகிழக்கில், கால் பங்கு தேசாதிபதியாகிய பிலிப்புவின் நாடு. இஸ்மவேலின் குமாரரில் ஒருவனை யெத்தூர் என்பவனாலே இந்தப் பேர் வந்ததென்று நினைக்கப்படுகிறது. 1 நாளா. 1: 31. இப்பேர் எல்யெத்தூர் என்று சற்றே மாற்றப்பட்டு நாளதில் வழங்குகிறது. லூக். 3: 1.

169. இத்னான். யூதாவில் தென் கடைசிப் பட்டணம். யோசு. 15: 23.

170. இந்துதேசம். ஆசியாவின் அரசுஇலை என்னப்பட்டது இது தான். எஸ்தர்காலம்வரையும் எபிரேயர் இதை அறியவில்லையென்றும், அறிந்தபொழுதும் தற்காலத்து ஆப்கான்ஸ்தான், பெலுக்கிஸ்தான் இந்த இரண்டையுமே அவர்கள் இந்தியா என்று எண்ணியிருந்ததாகவும் தோன்றும். எஸ்த. 1: 1.

171. இப்தா. யூதாவின் பள்ளத்துக்காட்டில் பட்டணம். யோசு. 15: 43.

172. இப்தாவேல். செபுலோன், ஆசேர் இந்தக் கோத்திரங்களின் எல்லையிலுள்ள பள்ளத்தாக்கு. யோசு. 19: 14.

173. இப்லெயாம். மனாசேயில் பட்டணம். யோசு. 17: 11.

174. இரபெயேல். பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 27.

175. இல்லிரிக்கு. மக்கெதோனியாவின் வடமேற்கில் ஒரு தேசம். தற்காலத்தில் தால்மாத்தியா என்று அழைக்கப்படுகிற இடம். ரோமர் 15: 19. ஆதிரியாற்றிக் கடலின் கீழ்கரையில்.

176. இன்ரோகேல். (வண்ணாரின் நீரூற்று) எருசலேமுக்கு வடகிழக்கே, கன்னிமரியாளின் நீரூற்று. 2 சாமு. 17: 17.

177. இன்னோம். அல்லது பென்இன்னோம். எருசலேமுக்குச் சமீபத்தில் ஒரு பள்ளத்தாக்கின் பேர். யோசு. 15: 8.

178. ஈயீம். யூதாவில், யோசு. 15: 29.



179. ஈயோன். அல்லது ஈயோன்ஆபில். நப்தலியில் அரணான பட்டணம். 1 இராசா 15: 20.

180. ஈரோன். நப்தலியில் பட்டணம். யோசு. 19: 38.

181. ஈலோன். யூதாவில் லேவியர் பட்டணம். 1 நாளா. 6: 58.

182. உக்கோகு. நப்தலியில் பட்டணம். யோசு. 19: 34.

183. உப்புக்கடல், அல்லது சவக்கடல். "சமனான வெளியைச் சேர்ந்த கடல்" என்றும், (உபா. 4: 48.) "கிழ்க்கடல்" என்றும் (யோவே. 2: 20) அழைக்கப்படும்.

184. உப்புப்பட்டணம். யூதாவனாந்தரத்தில் பட்டணம். சவக்கடலுக்குச் சமீபத்திலிருக்கிறது. யோசு. 15: 62.

185. உப்புப்பள்ளத்தாக்கு. சவக்கடலுக்குச் சமீபமாயிருக்கிறது. 2 சாமு. 8:. 13.

186. உம்தா. யூதாவில் மலைநாட்டுப் பட்டணம். யோசு. 15: 54.

187. உம்மா. ஆசேரில் பட்டணம். யோசு. 19: 30.

188. ஊசால். அரபியில் தெற்கே ஒரு நாடு. ஆதி. 10: 27.

189. ஊசேன்சேரா. பெத்தொரோனுக்குக் கிட்ட. 1 நாளா. 7: 24.

190. ஊத்ஸ். அராமிலுள்ள ஒரு நாடு. பலஸ்தீனாவுக்கும், வனாந்தர அரபிக்கும் இடையில். ஆதி. 10: 23. 22: 21. 36: 28. 1 நாளா. 1: 17, 42. யோபு 1: 1. எரே. 25: 20. புலம். 4: 21.

191. ஊப்பாஸ். பொன்னுள்ள ஒரு தேசம். ஒருவேளை ஓப்பீருக்குப் பதிலாக இந்தப் பேர் வழங்கியிருக்கலாம். எரே. 10: 9. தானி. 10: 5.

192. ஊர். (ஒளி) ஐபிராத்து நதியருகில் பட்டணம். இப்போது ஊர்பா என்று அழைக்கப்படுகிறது. ஆதி. 11: 28.

193. ஊலாய். திகிரீசும் ஐபிராத்தும் ஒன்றாகச் சேர்ந்தபின் அதில் பாய்கிற ஒரு நதி. தானி. 8: 2, 16.

194. எகாப்செயேல். யூதாவில் பட்டணம். நெகே. 11: 25.

195. எகிப்து. எபிரேயுப் பாஷையில் (மிஸ்ராயீம்) காம்தேசம் என்று அழைக்கப்பட்டது. ஆதி. 12: 10.

(2) எகிப்து நதி. கானான்தேசத்தின் தென்எல்லையில் சிற்றாறு. எண். 34: 5. 1 இரா. 8: 65. ஏசா. 27: 12.

196. எக்ரோன். பெலிஸ்தியரின் ஐந்து பட்டணங்களிலொன்று. யோசு. 13: 3.

197. எக்லாயிம். (இரட்டைக்குளம்) மோவாப் தேசத்தில் ஒரு ஊர். ஏசா. 15: 8.

198. எக்லோன். யூதாவில் கானானியர் பட்டணம். யோசு. 10: 3.

199. எசியோன்கேபேர். சிவந்த கடலருகில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். அக்கபா குடாவுக்கு 10 மயிலுக்கு வடக்கில். பிற்காலத்தில் முக்கியமான வியாபாரப் பட்டணமாகி, கிரேக்கரால் பெரினீஸ் என்று அழைக்கப்பட்டது. எண். 33: 35.

200. எஸ்கோல். (திராட்சக்குலை) எருசலேமுக்கும் எபிரோனுக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்கு. இப்போதும் அங்கே மிகுதியான திராட்சத்தோட்டங்களுண்டு. எண். 13: 24.

201. எஷ்தாவோல். யூதாவின் பள்ளத்துக்காட்டில். யோசு. 15: 33.

202. எஸ்தெமொ அல்லது எஸ்தெமொவா. யூதாவில் பட்டணம். எபிரோனுக்குத் தெற்கே 7 மயில். யோசு. 15: 50.

203. எஸ்போன். (சுறுசுறுப்பு) ரூபனுக்கும் காத்துக்கும் இடையில் எமோரியரின்தலைநகர். பிற்பாடு லேவியர் பட்டணம். எண். 21: 26.

204. எஸ்மோன். யூதாவில் தென்கடைசிப் பட்டணம். யோசு. 15: 27.

205. எஸ்ரோன். யூதாவின் மேல்எல்லையில். யோசு. 15: 3.

206. எஷானு. யூதாவில் பட்டணம். 2 நாளா. 13: 19.

207. எஷியான். யூதாவின் மலைநாட்டில். யோசு. 15: 52.

208. எத்தியோப்பியா. (கறுப்பு) ஆப்பிரிக்காவிலுள்ள பலதேசங்களுக்குக் கொடுக்கப்பட்ட பேர். (கூஸ், பார்) ஆதி. 2: 13.

209. எத்தேர். சிமியோனில் பட்டணம். யோசு. 15: 42. 19: 7.

210. எத்ரேயு. பாசானின் பூர்வீக இராசதானி, ஆழமான ஒரு பள்ளத்தாக்கிலிருந்தது. எண். 21: 33.

(2) நப்தலியில் பட்டணம். யோசு. 19: 37.

211. எந்தோர். (தலைமுறையின் நீரூற்று) இசக்காரில் மனாசேயைச் சேர்ந்த பட்டணம். யாபீனும் சிசெராவும் மரித்த இடம். யோசு. 17: 11. 1 சாமு. 28: 7. சங். 83: 9, 10.

212. எந்நக்கோரி. (கூப்பிட்டவன் ஊரவு) லேகியிலுள்ள சிம்சோனின் நீரூற்று. சிமியோனில். நியா. 15: 19.

213. எபிரோன். (கூட்டம் அல்லது நட்பு) யூதாவில் பட்டணம். எருசலேமுக்குத் தெற்கே 20 மயில்தூரம். பூர்வத்தில் கீரியாத் அர்பா, (அர்பாவின் நகரம்) என்னப்பட்டது. அர்பாவென்றால் ஏனாக்கின் தகப்பன். மம்ரே என்றும் அழைக்கப்பட்டது. ஆதி. 13: 18.

214. எபூசியர். கானானியரில் பலத்த சாதியார். இவர்கள் எருசலேமைக் கட்டி தங்கள் முற்பிதாவின் பேரால் எபூஸ் என்று அழைத்தார்கள். ஆதி. 10: 16.

215. எபூஸ். (கையாட்சி) எருசலேமுக்கு பூர்வ பேர். இதின் குடிகள் எபூசியர் என்னப்பட்டார்கள். நியா. 19: 10.

## கதை சொல்லல்.

கதை என்றால் எந்தப் பாலகரும் சந்தோஷப்படுவார்கள். இல்லாத, ஏலாத, கூடாத, வம்பான எந்தக் கதையைக் கட்டிச்சொன்னாலும் பிள்ளைகள் கண் விழித்து, காதுகொடுத்து, வாயை ஆவென்று திறந்து கேட்பார்கள். ஒரு கதை சொல்லிமுடிக்கவே இன்னொன்று சொல்லவேண்டுமென்று ஆசைப்படுவார்கள். நூறுதரம் சொன்னதைத் திரும்பத்திரும்பச் சொன்னாலும் சலிப்படையமாட்டார்கள். கதைகளைப் பிரியமாய்க் கேட்பது எந்தத் தேசத்துப் பிள்ளைகளுக்கும் இயல்பு என்பதை பெற்றோர் கவனித்து, பிள்ளைகளைச் சந்தோஷப்படுத்தவாவது, தூங்கப்போடவாவது, ஏதாவது ஒரு துக்கத்தை மறக்கச்செய்யவாவது வேண்டுமானால் கதைசொல்லுவார்கள். ஆட்டுக்குட்டி, கன்றுக்குட்டிபோலவே சிறு பிள்ளைகளும் துள்ளித்துள்ளி விளையாடுவது வழக்கமாயிருக்கிறது. சும்மா உளுக்கார்ந்து கிழவனைப்போல கவலையுற்று சிரிப்பற்று பிள்ளைகள் இருக்கமாட்டார்கள். தாய்தகப்பன்மார் கட்டாயம்பண்ணவும் கூடாது. அப்படியே சிறுபிள்ளைகள் வாசிக்கும்படி அவர்கள் கையில் இலக்கணம், இலக்கியம், கணிதசாஸ்திரமுதலிய அருஞ்சொற்கள், அரும் நடையுள்ள புத்தகங்களைக் கொடுத்தால் வாசிப்பை வெறுப்பார்களேயல்லாமல் விரும்பமாட்டார்கள். சாஸ்திர, சரித்திர புத்தகங்கள்



அவர்கள் கையில் கொடுத்தாலும் அவை கதையாகவும் மதலைச்சொற்
களாகவும் எழுதியிருக்கவேண்டும்.

சிறுபிள்ளைகளுக்கு வேத உபதேசங்களைப் போதிக்கும்போது கருப்பு
மனுஷரில் அநேகர் சொல்லிக்கொடுக்கிறதுபோல செய்யக்கூடாது.
திருஷ்டாந்தரமாக நாலு வயதுள்ள தன் மகளைப் பார்த்து ஒரு உப
தேசியார் நீ நல்ல பிள்ளையா என்று கேட்டார். நான் நல்ல பிள்ளைதான்
என்று அந்தக் குழந்தை சொல்லவே, தகப்பன் அதைக் கோபித்து,
இல்லை, நான் கெட்டபிள்ளை என்று சொல்லு என்று போதித்தார். பால்
ஊட்டவேண்டிய ஆறு மாசத்துக் குழந்தைக்கு ஆட்டுக்கறி கொடுக்கிற
துபோல ஜென்மப்பாவமென்கிற உயர்ந்த உபதேசத்தைப் புகட்டப்
பார்க்கிறார். அதைப் போதிக்கவேண்டுமானால் இது வகையல்ல. அதற்
குப் பதிலாக பிள்ளை பகலில் ஏதாவது ஒரு குற்றஞ்செய்திருப்பதைக்
கவனித்து, தாய் அதைப் படுக்கவைக்கிற நேரத்தில் அது செய்த குற்
றத்தைச் சுட்டிக்காட்டி, அது சொல்லும் சிறு செபத்தில் அந்தக் குற்
றத்தையே சொல்லச்சொல்லி, இப்படி படிப்படியாக பிள்ளைக்குப் பரீ
ட்சையின்மூலமாய் அதைப் படிப்பிக்கவேண்டியது.

சிறுபிள்ளைகளுக்கு தேவனுடைய அன்பைப்பற்றி உபதேசிக்கவேண்
டுமானால் அதைப்பற்றிச் சொல்லுகிற வேதவாக்கியங்களை முக்கியு
மாய்க் காட்டாமல், அதைத் திருஷ்டாந்தரப்படுத்துகிற அவருடைய
செய்கையை, அதாவது அவர் தம்முடைய குமாரனைக் கொடுத்த சரித்
திரத்தைச் சொல்லவேண்டியது. மேலும் மெத்த சிறுபிள்ளைகளைக் கூப்
பிட்டுப் பாடம் என்று சொன்னால் மனவெறுப்பாக இருப்பார்கள்.
கதை என்று சொன்னால் ஓடிவந்து மடியில் உளுக்கார்ந்து சொல்லுங்
கள், சொல்லுங்கள் என்பார்கள். இந்தப் பிரமாணத்தை வைத்துக்கொ
ண்டு, பழைய புதிய ஏற்பாட்டு சரித்திரங்களை ஒவ்வொன்றாய் கதை
போல் சொல்லி வேதஅறிவை அவர்கள் மனதில் புகட்டலாம். இப்படி
யாக அகரவரி முதலாய்ச் சொல்லத்தெரியாத நாலு வயதுள்ள ஒரு பிள்
ளைக்கு ஆதாம் ஏவாள் சரித்திரம், காயீன் ஆபேல் சரித்திரம், நோவா
சரித்திரம் முதலிய சரித்திரங்கள் லேசாகத் தெரிந்துபோகும். இயேசு
நாதர் ஏழைகளைப் போஷித்ததும், பிணியாளிகளைக் குணமாக்கினதும்,
சீஷருடைய கால்களைக் கழுவினதும், பாவியான ஸ்திரீக்கு மன்னிப்
புக்கொடுத்ததும், கடைசியாக சிலுவையில் பேசினதும் பாடுபட்டது
மான எல்லாவற்றையுங் கற்றுக்கொடுக்கலாம்.

தாய்தகப்பன்மாரே! சிறுவத்தில் உங்கள் பிள்ளைகளுக்கு வேதஅறி
வைக் கற்றுக்கொடுக்கிறதைப்பற்றி கவலையாயிருங்கள். நான் யோசு
வையாகக் காட்டுகிற இந்த மாதிரிப்படி கற்றுக்கொடுத்துப் பாருங்கள்.
கிறிஸ்தமான அநேக பிள்ளைகளுக்கு இப்போதிருக்கிற அறிவீனம் அதி
கம். ஒரு தகப்பன் என்னிடத்தில் பிள்ளையைக்கொண்டு வந்து பள்ளிக்
கூடத்தில் சேர்க்கக் கேட்டான். பிள்ளைக்கு ஒன்பது வயதிருக்கும், வா
சிப்பான். காயீன் ஆபேல் யாரென்று கேட்டேன், பிள்ளைக்குத் தெரியா
மல் இருந்தது. அப்போது தகப்பன் ஐயா, நான் சொல்லிக்கொடுக்க
வில்லை என்று வெட்கத்தோடே சொன்னான். எல்லாரும் இப்படி இருக்
கிறார்களென்று நான் சொல்லவில்லை. என்றாலும் பிள்ளைகளிடத்தில்
இருக்கிற மட்டற்ற அறிவீனம் தாய் அல்லது தகப்பன் வேதத்தைக் கதை
போல சொல்லிக்கொடுக்கிறதினால் வெயிலுக்குமுன் பனிபோல் பறந்
துபோகும்.

சா. ா. மே.

# 1875.

## அத்தியட்சர் பந்தயப் பரீட்சை.

N. B. நூதன ஏற்பாடு.

அத்தியட்சர் பந்தயப் பரீட்சை நடக்கும் காலம், இடம், விஷயம், திட்டம், பந்தயம் ஆகிய இவைகளைக்குறித்து அறியவேண்டியவர்கள் யாவருக்கும் இதினாலே அறிவிக்கிறது என்னவென்றால்,

காலம்.—ஜூன்மாசத்தில், சங்கத்துக்கு மறுநாள்.

இடம்.—பாளையங்கோட்டை தெற்குக் கல்விச்சாலை.

விஷயம்.—I. கிரேக்குப் பாஷையில் "அப்போஸ்தலர் நடபடி ஒன்று முதல் 14 ம் அதிகாரம் முடியவரைக்குமுள்ளதும், தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களுமே.

II. தமிழ்பாஷையில் (1) வேதாகமங்களைப் பற்றிய பொதுக்கேள்விகளும், (2) பழையஏற்பாட்டில் உபாகமமும், (3) புதியஏற்பாட்டில், அப்போஸ்தலர் நடபடியும், தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இரண்டு நிருபங்களும், (4) ஞாயகப்பாடத்தில், பரி. யோவான் 15. 16 அதிகாரங்களுமே.

திட்டம்.—(1) கிரேக்குப் பரீட்சைக்கு ஏற்படுகிறவன் தமிழ் பரீட்சைக்கு ஏற்படக்கூடாது. (2) இதற்குமுன்னமே கிரேக்குப் பந்தயமானாலும், தமிழ் பரீட்சைக்கு முதல் பந்தயமானாலும், பெற்றுக்கொண்டவர்கள், மறுபடியும் பரீட்சைக்கு ஏற்படக்கூடாது. (3) தமிழ் பரீட்சைக்கு இரண்டாம் பந்தயமாத்திரம் பெற்றவர்கள், முதல் பந்தயம்பெற ஏற்படலாம். (4) பட்டம்பெற்றவர்கள் தவிர, உபதேசிமார், உபாத்திமார், மாணாக்கர், சபையாராகிய சுதேசக்கிறிஸ்தவர்கள் யாவரும் தாராளமாய் இந்தப் பரீட்சைக்கு ஏற்படலாம்.

பந்தயம்.—(1) கிரேக்குப் பரீட்சைக்கு முன்னாலே ஒரே பந்தயமாக ரூ 50 கொடுக்கப்பட்டது. இதுமுதல் ஒருவனுக்கு ரூ 35, முதல் பந்தயமாகவும், மூன்றுபேருக்கு, ஆளுக்கு ரூ 5, இரண்டாம் பந்தயமாகவும் கொடுக்கப்படும். கிரேக்குப் பரீட்சை சென்னபட்டணம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மலையாளம், மசூலிப்பட்டணம் ஆகிய இந்த ஐந்து நாட்டாருக்கும் பொதுவென்றறியவேண்டும்.

(2) தமிழ் பரீட்சைக்கு முன்னாலே ஒவ்வொரு நாட்டுக்கு இரண்டாக, 8 பந்தயம் கொடுக்கப்பட்டது. இதுமுதல் 24 பந்தயங்கள் கொடுக்கப்படும். அவைகளில் திருநெல்வேலி, சென்னபட்டணம் இவ்விரண்டுக்கும் பொதுவாக பரீட்சை வைத்து, இரண்டு பேருக்கு ஆளுக்கு ரூ 30, முதல் பந்தயமாகவும், நாலுபேருக்கு ஆளுக்கு ரூ 10, இரண்டாம் பந்தயமாகவும், நாலுபேருக்கு ஆளுக்கு ரூ 5, மூன்றாம் பந்தயமாகவும் கொடுக்கப்படும்.

(3) பந்தயமானது பணமாயாவது, புஸ்தகமாயாவது இரண்டுவகையுமாயாவது கொடுக்கப்படும்.

கவனிப்பு.—நாளது வருஷத்துப் பரீட்சைக்கு ஏற்படுகிறவர்கள் தங்கள் பேர், இடம்முதலியவைகளை மெஞ்ஞானபுரத்திலிருக்கும் கனம்: ஆஷ்டன் டிப் ஐயரவர்களுக்கு ஏப்பிரில்மீ 30உக்குள்ளாக எழுதித் தெரியப்படுத்தவேண்டும். அப்படித் தெரியப்படுத்தாதவர்கள் பரீட்சைக்கு வரும்படி இடமிருக்கவேமாட்டாது.

ASHTON DIBB.

---



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. மஹா ராணியவர்களின் கனிஷ்ட குமாரராகிய ப்ரின்ஸ் லியபோல்ட் என்பவர் வியாதிகண்டு வருத்தப்பட்டு, மெல்லெனத் தேறுகிறாரென்று செய்தி. மற்றொரு குமாரர் ப்ரின்ஸ் ஆர்தர் என்பவர் இரண்டொரு வாரத்துக்குள்ளே இந்தியாவுக்கு வருவாராம். சென்ற டிசம்பர் மாசத்தில் மேற்கு இருப்புப்பாதைத் தொடர் ஓடுகையில் ஏதோ இடையூறு ஒன்றினால், இருப்புச் சலாகையைவிட்டு அடுத்த ஓர் கால்வாயில் சரிந்துவிழ, முப்பது பேர் பிராணசேதமடைந்தார்கள். ஸப்பர்ட்ஷியர் என்னும் பாகத்தில் நிலக்கரிக்கனி ஒன்றில் விஷக்காற்றினால் நெருப்புப்பற்றி எரிய, இருபது பெயர் மடிந்தார்கள். சீமையிலிருந்து அனுப்பப்பட்டு இந்தியாவில் இறக்குமதியாகிற பஞ்சுநூல், புடைவை இவைகளுக்குரிய தீர்வையை எடுத்துப்போடுவது அனுகூலமென்றும், கூடிய சீக்கிரத்தில் அப்படியே நடக்குமென்றும் அங்கிலோ இந்திய மந்திரியாகிய மார்க்விஸ் ஸலிஸ்பரி பிரபு பிரஸ்தாபித்தாராம். நன்னம்பிக்கைமுனைக்குத் தெற்கேயுள்ள கடலில் கப்பலொன்று தீப்பற்றியெரிய, அதிலிருந்த அறுநூறு பெயரில் 3-பேர் தவிர மற்றவர்களெல்லாரும் இறந்துபோனார்கள்.

பிரான்சிய சர்வதேசசபையில் ஸ்தாபிக்கப்படும் அதிபத்தியத்தைப் பற்றி அதிக வாக்குவாதம் உண்டாயிற்று. பலர் பிரஜாதிபத்தியப் பிரியர், சிலர் பழய ராஜவமிச பக்ஷத்தார், சிலர் நப்போலியன் குமாரன் பக்ஷத்தார், சிலர் தற்காலத்தில் ஆண்டுவருகிற மக்மேஹன் அக்கிராசனாதிபதி பக்ஷத்தார். ஆனதுகொண்டு வேண்டிய ஒருமைப்பாடு கிடைப்பது அரிதாயிருக்கும்.

ஸ்பானிய தேசத்தில் நெடுநாள் நடந்த யுத்தம் அமர, முன் சிம்மாசனம்விட்ட இஸ்பெலா ராணியின் குமாரனாகிய அல்பன்ஸோ என்பவர் சிம்மாசனமேற பிரஜைகளில் பெரும்பாலார் சம்மதித்திருக்கிறார்கள். பழய ராஜ வமிச பக்ஷத்தார் தற்காலத்தில் சமாதானமாயிருந்தும், இனிமேல் சிம்மாசனத்தைப் பிடிக்கும்படி வகைதேடுவோமென்றிருக்கிறார்கள். ஸ்பானிய துரைத்தனகாரியம் இன்னும் திர்ப்திகரமாய் முடியாமலிருந்தும், அதிசீக்கிரம் தேசமெல்லாம் அல்பன்ஸோ என்பவருக்கு அடங்குமென நினைக்கலாம்.

இத்தாலியா. கரிபல்தி என்னும் பிரபல சேனைத்தலைவர் இத்தாலிய பார்லிமெண்டில் பிரதிநிதியாய்ப் பிரவேசித்தார்.

சீனச் சக்கரவர்த்தி வைசூரி உபத்திரவங்கண்டு சென்றமீ 12உ இறந்துபோனார். அவர் பேரப்பிள்ளை சிம்மாசனம் ஏறுவார்.

இந்தியா. சென்றமீ 5உ கல்கத்தாவிலே அகோரமாய்க் கன்மழை பெய்தது. பெய்த கன்மழையில் சில துண்டுகள் புறா முட்டைப் பருமன் இருந்தன. கல்கத்தா பிரதேசங்களில் நேரிட்டிருந்த க்ஷாமத்தினிமித்தம் செலவழிந்த பணம் 575 லக்ஷம் ரூபாய். நானாசாகிபென்று ஸிந்திய மகாராஜாவால் பிடிபட்ட மனுஷன் சூதனென்று நிச்சயிக்கப்பட்டான். துரைத்தனத்தார் அவ்வாறே மார்க்விஸ் ஸலிஸ்பரி பிரபுவிற்கு எழுதியனுப்பினார்கள். பரோதாவின் கைக்குவார் அரசன் அங்குள்ள பிரிட்டிஷ் ரெஸிடெண்டு துரைக்கு நஞ்சிட எத்தனித்தானென்று கண்டு கைதுசெய்யப்பட்டிருக்கிறான். கவர்னர் ஜெனரலவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற கம்மிஷனர்களால் குற்ற விசாரணை நடக்கும்.

பெபுருவரிமீ நாள் 28. தைமீ 21உ முதல், மாசிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | உக | இந்தச் சனங்கள் வணங்காக்கழுத்துள்ளவர்கள். யாத். 34: 9. |
| செ | 2 | உஉ | எங்கள் அக்கிரமத்தையும் பாவத்தையும் மன்னியும். 9. |
| பு | 3 | உங | எங்களை உமக்குச் சுதந்தரமாக ஏற்றுக்கொள்ளும். 9. |
| வி | 4 | உச | நான் உனக்குக் கட்டளையிடுகிறதைக் கைக்கொள். 11. |
| வெ | 5 | உரு | சன்மார்க்கர் அதம்பண்ணப்பட்டது எப்போ ? யோபு 4: 7. |
| ச | 6 | உசு | தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கிறார்கள். 8. |
| ஞா | 7 | உஎ | மனுஷன் தேவனைப்பார்க்கிலும் நீதிமானாயிருப்பானோ ? 17. |
| தி | 8 | உஅ | கோபம் நிர்மூடனைக் கொல்லும். 5: 2. |
| செ | 9 | உகூ | சாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். சங். 108. 4. |
| பு | 10 | ஙூ0 | எங்கள் செபத்தைக் கேட்டருளும். 6. |
| வி | 11 | க | இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும். 12. |
| வெ | 12 | உ | தேவனே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார். 13: |
| ச | 13 | ங | நானோ செபம்பண்ணிக்கொண்டிருக்கிறேன். 109: 4. |
| ஞா | 14 | ச | நான் சிறுமையும் எளிமையுமானவன். 22. |
| தி | 15 | ரு | என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கின்றது. 22. |
| செ | 16 | சு | நீதிமான் பொய்ப்பேச்சை வெறுக்கிறான். நீதி. 13: 5. |
| பு | 17 | எ | நீதி உத்தமமார்க்கத்தானைத் தற்காக்கும். 6. |
| வி | 18 | அ | துன்மார்க்கம் பாவியைக் கவிழ்த்துப்போடும். 6. |
| வெ | 19 | கூ | துன்மார்க்கரின் தீபம் அணைந்துபோம். 9. |
| ச | 20 | க0 | அகந்தையினால் மாத்திரம் வாதுபிறக்கும். 10. |
| ஞா | 21 | கக | கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். ஏசா. 58: 8. |
| தி | 22 | கஉ | நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார். 9. |
| செ | 23 | கங | இருளில் உன் வெளிச்சம் உதிக்கும். 10. |
| பு | 24 | கச | நான் உன் நடுவே கடந்துபோவேன். ஆமோஸ் 5: 17. |
| வி | 25 | கரு | உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். யோ. 14: 3. |
| வெ | 26 | கசு | நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன். 6. (14. |
| ச | 27 | கஎ | தேவனுடைய இராச்சியம் புசிப்புமும் குடிப்புமல்ல. உரோ. 14: |
| ஞா | 28 | கஅ | விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே. 23. |

## விசேஷித்த நாட்கள்.

6. அமாவாசை.
7. இன்குவகெசிமா ஞாயிறு.
10. லெந்தென்னும் நாட்களில், முதலாம் நாள்.
14. லெந்தென்னும் நாட்களில், முதலாம் ஞாயிறு.
20. பௌரணமி.
21. லெந்தென்னும் நாட்களில், இரண்டாம் ஞாயிறு.
28. லெந்தென்னும் நாட்களில், மூன்றாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. March. No. 3.

**Contents:**


| | |
|---|---|
| Christian Church History. | 42 |
| A Family Commentary on the Sermon on the Mount. | 45 |
| Bible Sketches and their Teachings. | 47 |
| Communicant's Companion. | 50 |
| Notes on Genesis. | 53 |
| Summary of News. | 59 |


**அட்டவணை:**


| | |
|---|---|
| கிறிஸ்து சபைச் சரித்திரம். | சஉ |
| மலைப்பிரசங்க வியாக்கியானம். | சரு |
| பாலபோதனை. | சஎ |
| நற்கருணை விளக்கம் | ரு0 |
| ஆதியாகம வியாக்கியானம். | ருங |
| அத்தியட்சர் பந்தயப் பரீட்சை. | ருஅ |
| சமாசாரத்திரட்டு. | ருகூ |


**Palamcottah:**

**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,**

BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௩. மார்ச்சுமீ. ௲அ௭௫௵.

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 17. அதிகாரம்.

*தியோக்கிளீஷன் சிம்மாசனமேறினது,—அற்புதவரம் படிப்படியாய் நின்றுபோனது,—கிறிஸ்தவர்கள் துன்பம் ஆரம்பமானது,—துன்பத்தின் கொடுமை,—கெலேரியு, கொன்ஸ்தந்தீன் மக்சென்றியுஸ் என்பவர்கள் இராயர்களானது,—சபைக்குக் கொஞ்சஞ் சமாதானம் திரும்பியது,—கொன்ஸ்தந்தீன் மக்சென்றியு என்பவன் மரணமடைந்தது,—கொன்ஸ்தந்தீன் பட்டமடைந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுகூலம்பண்ணினது,—குருமானியங்கள்,—பொதுவான திருச்சபை என்றிவைகளைக் குறித்த விவரங்களடங்கும்.*

(தொடர்ச்சி.)

அலெக்சந்திரியாக் கண்காணியாராகிய பேதுரு என்பவர் கொஞ்ச நாளைக்குமுன் பட்டணத்துக்கு திரும்பிவந்தாரென்று பார்த்தோமே. அவர் நவம்பர் மாதத்தில் இரத்தச்சாட்சியாய் மரித்தார். அவருடைய ஆட்சிக்குட்பட்ட குருக்கள்மார்களும் மிகவும் நிஷ்டூரமாய் ஒடுக்கப்பட்டபடியால், பன்னிரண்டு மாதவரையும் அவருக்குப்பதிலாக ஒருவரைக் கண்காணியாராக ஏற்படுத்தக்கூடாமலிருந்தார்கள். பிரிகியா நாட்டிலுள்ள ஒரு கிராமத்துக் குடிகளெல்லாரும் தங்களைக் கிறிஸ்தவர்களென்று பாராட்டினதினிமித்தம், அந்தக் கிராம முழுமையையும் சுட்டெரித்துப்போட்டார்களாம். அர்மீனியா தேசத்திலே சுவிசேஷம் வெகுவாய்ப் பிரபலியமாகிக் கொண்டுவந்தது. இரண்டு இராசாக்கள் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டதாகவுஞ் சொல்லப்பட்டது. மக்ஸிமினுவுக்கு இது காரியம் கேள்வியானபோது, கி. பி. 312ன் துவக்கத்தில் அத்தேசத்துக்கு விரோதமாய்ப் படையெடுத்துப்போய் தோல்வியடைந்து திரும்பினான். அப்புறம் அவனுக்கு விரோதமாய்த் தோன்றியிருந்த பலத்த சத்துருக்களுக்குத் தப்பிக்கொள்ள அவன் வகைபண்ணவேண்டியதாயிற்று.

மக்ஸிமினும் மக்சென்றியு என்பவனும் ஒன்றுகூடி, கொனஸ்தந்தீனைத் தாக்கவேண்டுமென்ற நோக்கமாய்ச் சிறிதுகாலம் நிருபப்போக்குவரவுசெய்துகொண்டிருந்தார்கள். ஆயினும் அவர்கள் ஒன்றுசேருகிறதற்கு முன்னமே, 312௵ அக்றோபர்மீ ரோமாபுரிக்குச் சமீபமாய் மக்சென்றியு கொனஸ்தந்தீனோடு கைகலந்து, தன் பிராணனுக்காகவும் இராச்சியத்துக்காகவும் போர்செய்யவேண்டியதாயிற்று. இந்தச் சண்டை தொடங்குகிறதற்குச் சற்றுமுன்னதாக வானமண்டலத்தில் ஒரு சிலுவையின் சாயல் தோன்றி கொன்ஸ்தந்தீனுக்கும் அவனு



டைய இராணுவத்தார்களுக்குங் காணப்பட்டதாக சரித்திர நூலாசிரியர்கள் குறிப்பித்திருக்கிறார்கள். இந்த விர்த்தாந்தத்தைக்குறித்து மிகுந்த வாக்குவாதம் நடந்திருக்கிறது. இதைக் கட்டுக்கதையென்பவர்கள் சிலர். ஆகாயத்திலே சிலுவையின் அடையாளம் காணப்பட்டது மெய்யென்பார்கள் பலர். மற்றவர்களோ, மேற்சொல்லிய இரண்டு சோதனைகளும் அபத்தம், அது விகாரகாட்சியேயல்லாது வேறல்ல என்பார்கள். இதுகாரியம் எப்படியிருந்தபோதிலும், மேற்படி சண்டையில் கொன்ஸ்தந்தீன் வெற்றியடைந்தான். மக்சென்றியு என்பவன் ஆற்றில் அமிழ்ந்து இறந்துபோனான். கொன்ஸ்தந்தீன் செயகோலமாய்ப் பட்டணத்திற் பிரவேசித்து, சிலுவையின் அடையாளத்தை எல்லாரும் கணிசப்படுத்தும்படி செய்வித்தான்.

கொன்ஸ்தந்தீனுடைய இதுமுதலிய நடபடிக்கைகளினால் ரோமாபுரியில் கிறிஸ்தவர்களுடைய தொகை தற்காலத்தில் மிகுதியும் பெருகிக்கொண்டுவந்ததென்று தீர்மானமாய்ச் சொல்லலாகும். கொன்ஸ்தந்தீன் தற்காலத்தில் அடைந்த செயமும், இராச்சியத்தில் சிரேஷ்ட அதிகாரியான அவனுடைய மாதிரியும் அதற்கு அனுகூலம்பண்ணியிருக்குமென்பது நிசந்தான். ஆகிலும் அவைகளாலேயே முற்றும் அப்படியாயிற்றென்று சொல்வதும் சரியன்று. இந்தப் பெரிய மாறுதல் இவ்வளவு ஜல்தியிலுண்டானதைக் கவனிக்குமிடத்து, உலகத்தின் தலைநகரி ஒருநாள் அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்திருந்ததென்றும் மறுநாள் சுவிசேஷத்தினால் பிரகாசமாயிற்றென்றும் யதார்த்தமாய்ச் சொல்லத்தக்கது. இராயனுடைய உத்தரவுப்பிரகாரம் கிறிஸ்துநாதருடைய சிலுவை முதல் விசையாய்ப் பகிரங்கமாகக் கொண்டாடப்பட்டபொழுது, அதை எதிர்ப்பாருமில்லை, அதுவரையும் அதை நிந்தைபண்ணிவந்த எவர்களாவது அதற்கு மரியாதைசெய்ய மறுக்கவுமில்லை. மேலும் அதிகாரிகள் மாதிரியைப் பார்த்து அவர்களுக்குப் பிரியமுண்டாக இத்தனை ஏராளமான பெயர் இப்பொழுது கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டார்களென்று சொல்வதும் நியாயமல்ல. கொன்ஸ்தந்தீன் ரோமாபுரியிற் பிரவேசிக்கிறவரையில் அவனுடைய அபிப்பிராயங்கள் நிதானமில்லாதவைகளாகவேயிருந்தன. இதற்குப் பின்னும் அவனுடைய குணப்படுதல் உண்மையானதோவென்று பலரும் சந்தேகிக்கிறார்களே. ரோமாபுரிக் குடிகள் முந்தின நூற்றாண்டின் துவக்கத்தில் கிறிஸ்தவர்களை எண்ணியிருப்பார்களாகில், இராயனுடைய மாதிரியானாலும் அதிகாரமானாலும், கிறிஸ்துமார்க்கத்தை இவ்வளவாய்க் கணிசப்படுத்த அவர்களை ஏவியிருக்கமாட்டாது. உத்தேசம் அரை நூற்றாண்டுக்குமுன்னே ரோமையில் ஐந்து கண்காணிமார் வரிசையாய் இரத்தச்சாட்சிகளானார்களே. இப்பொழுதோ ரோமை ராச்சியம் முழுமையிலும் ரோமைக் கண்காணியாரைப் பார்க்க இராயனிடத்தில் அதிகச் செல்வாக்கும் கணிசமும் பெற்று அனுபவித்தவர்கள் எவர்களுமில்லையே. ஆகையால் உள்ளபடி காரியத்தை நிதானிப்போமாகில், கொன்ஸ்தந்தீன் என்பவன் மக்சென்றியு என்பவன்பேரில் வெற்றியடைகிறதற்கு முன்னே கிறிஸ்தவர்கள் தங்கள் அஞ்ஞானச் சத்துருக்களின் பேரில் அதனிலும் மேலான வெற்றியொன்று அந்தரங்கமாய் அடைந்துகொண்டார்களென்றும், விக்கிரகபத்தி அழிந்து கிறிஸ்துமார்க்கம் நிலைபெறுகிறதற்கு கொன்ஸ்தந்தீன் முதற்காரணமாயிராமல் பின் அனுகூலஞ்செய்தவனாய் மாத்திரமிருந்தானென்றும், சொல்லவேவேண்டும்.

அப்போதப்போது கொஞ்சங்கொஞ்சம் விட்டுவிட்டு பத்துவருஷக்காலமாய் நடந்துகொண்டுவந்த இந்தக் கொடிய துன்பம் கொன்ஸ்தந்

தின் அடைந்த மேற்படி செய்ததோடு முடிந்தது. கொன்ஸ்தந்தின் மூன்றுமாதம் ரோமாபுரியிலிருந்து விட்டு மறுவருஷத் துவக்கத்தில் மிலான் நகரத்துக்குச் சென்று இலிசினியூ என்பவனோடு சேர்ந்து, இராச்சியத்திலுள்ள ஒவ்வொருவனும் தன்தன் மதாசாரப்படி தாராளமாய் நடக்கலாமென்று இருவர் நாமத்திலும் ஒரு சட்டம் பிறப்பித்தான். கிறிஸ்தவர்கள் கோவில்கள் கட்டிக்கொண்டு சபை கூடி தேவாராதனை நடப்பிக்க இடம்பெற்றிருந்தார்களேயன்றி, அவர்களுக்கு வேறு விசேஷித்த சலாக்கியங்கள் கிடைக்கவேயில்லை. எல்லா மதஸ்தர்களும் மேற்படி சட்டத்தினால் எவ்வளவேனும் வித்தியாசமில்லாமல் நடத்தப்பட்டார்கள். இந்தச் சட்டத்தின் பிரதிகள் மக்ஸிமினு என்பவனுக்கும் அனுப்பப்பட்டன. அவன் இரண்டு வருஷத்துக்கு முன்னே மாரீசம்பண்ணினதுபோல இப்பொழுதும் பண்ண உடனே ஆரம்பித்தான். கிறிஸ்தவர்களை அவர்கள் மதாசாரத்தினிமித்தம் துன்பப்படுத்தப்படாதென்றும் அப்படித் துன்பப்பட்டவர்களை விடுதலைசெய்யவேண்டுமென்றும் உத்தரவுசெய்தான். ஆகிலும் அவன் தன் உண்மைத் தாழ்ச்சியை வெளிப்படுத்த சமயம் வாய்க்குமுன், ஆதரியானோபிள் பட்டணத்தருகில் இலிசினியுவோடு போர்கலந்து முற்றுந் தோல்வியடைந்தான். அப்புறம் இலிசினியு என்பவன் அவனைத் துரத்திக்கொண்டு போகையில், நிக்கோமேதியாவில் சிறிதுகாலம் தாமதித்து, மிலான் பட்டணத்தில் பிறந்த சட்டத்தைப் பார்க்க கிறிஸ்தவர்களுக்கு அதிக அனுகூலமான வேறொரு சட்டம் பிறப்பித்தான். முந்தின சட்டத்திற் கண்டிருந்த சில நிபந்தனைகளை இப்பொழுது ரத்துச்செய்து, கிறிஸ்தவர்கள் ஆலயங்களைக் கட்டிக்கொண்டு சபைகூடி தேவாராதனை முதலியது நடப்பிக்கலாமென்று உத்தரவுசெய்ததுமன்றியில், கிறிஸ்தவர்களுக்குப் பாத்தியப்பட்ட கட்டிடங்களையாவது நிலங்களைகளையாவது யாராவது கிரயத்துக்குக் கொண்டிருந்தால் அல்லது இனாமாகப் பெற்றிருந்தால் அதுகளைக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்றும் அப்பேர்ப்பட்டவர்களுக்கு துரைத்தனத்தாரால் ஈடுசெய்யப்படுமென்றும் காட்டியிருந்தது.

இந்தச் சட்டத்திலடங்கிய குறிப்புகளால், கிறிஸ்தவர்கள் சிறிது காலமாய்ச் சொத்துடையவர்களாயிருந்தார்களென்று தெரியவருகிறதே. நிலங்கள் வீடுகள் முதலிய் சொத்துக்கள் அந்தந்தக் கிறிஸ்தவனுடையவைகளென்றல்ல, கிறிஸ்து சபை முழுமைக்கும் பாத்தியப்பட்டவைகளென்று குறிப்பித்திருக்கிறது. இவ்வாறு அவர்கள் சொத்துடையவர்களாயிருந்த காரியம் துரைத்தனத்தாருக்குத் தெரியாமலிருந்திருக்குமோ! ஆகையால் துரைத்தனத்தாராலே ஒப்புக்கொள்ளப்படாத கூட்டத்தார் சொத்துக்கள் சம்பாதிக்கப்படாதென்று தியோக்கிளீஷன் ஏற்படுத்தியிருந்த சட்டத்துக்கு விரோதமாகவே அவர்கள் மேற்படி சொத்துக்களை வைத்திருந்தார்களென்று தோன்றுகிறது. தியோக்கிளீஷன் சிம்மாசனமேறின துவக்கத்தில் கிறிஸ்தவர்கள் துரைத்தனத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த கூட்டத்தாரல்லவென்பது நிசம். அவர்களுக்கு விரோதமாகவே முக்கியமாய் இந்தச் சட்டம் ஏற்பட்டிருக்குமென்பதற்கும் சந்தேகமில்லை. நீதிக்கு விரோதமாய் கொடுங்கோன்மையினால் ஏற்படும் மற்றுஞ் சட்டங்களைப்போலவே, இந்தச் சட்டமும் எண்ணப்படாதிருந்ததென்று நிதானிக்கத்தக்கது. மேற்படி சட்டம் பிறக்குமுன்னமேயே கிறிஸ்தவர்கள் நிலம், வீடு முதலிய சொத்துக்களைக் கொண்டிருக்கவேண்டும். அவர்கள் மேற்படி சட்டத்தைச் சட்டைசெய்யாமல் நடந்ததைப் பார்க்கும்பே



து, கிறிஸ்துமார்க்கம் இப்பொழுது பலமாய் வேரூன்றியிருந்ததென்றும் அவ்வளவு பெரிய கூட்டத்தார் சட்டத்தை மீறி நடந்ததைக்குறித்து அதிகாரிகள் கண்சாடையாயிருக்க நேரிட்டதென்றும் ருசுவாகிறதல்லவா?

மூன்றும் நூற்றாண்டின் கடைசியில் கிறிஸ்தவ சகோதரரிடத்திலிருந்த சொத்துக்களின் தன்மையைப்பற்றி விசாரிப்பது அவசியமல்ல. கட்டடங்களிற் சிலவை அவர்கள் தேவாராதனை நடப்பித்துவந்த இடங்களாயிருக்கலாம். ஆனால் இப்பொழுது இராயர்கள் பிறப்பித்த சட்டங்களில் கட்டிடங்கள் மாத்திரமல்ல, நிலங்களும் குறிக்கப்பட்டிருக்கின்றனவே. மேற்படி நிலங்களை அவைகளால் கிடைத்த வருமானத்தினிமித்தமே வாங்கியிருக்கவேண்டும்.

இதினாலே கிறிஸ்துசபைகள் பொதுவான பொக்கிஷமுடையவைகளாயிருந்தனவென்றும், அதின் ஒரு பாகத்தைக்கொண்டு நிலங்களைகள் வாங்கி லாபமடைந்தனவென்றும் துலாம்பரமாய்த் தெரிகிறதே. ஆதிமுதலே கிறிஸ்துசபைகளில் இப்படிப்பட்ட பொதுவான பொக்கிஷங்களிருந்தனவென்று மேலே கவனித்தோமே. இந்தப் பொக்கிஷம் கிறிஸ்தவர்களுடைய தர்மத்தினாலேயே சேர்ந்ததென்றும், குருக்கள்மார் சவரட்சணைக்காகவும், ஏழைக் கிறிஸ்தவர்கள் ஆதரிப்புக்காகவும் செலவிடப்பட்டது. தேவாராதனைகளுக்கும் கொஞ்சம் செலவு பிடித்திருக்குமே. மூன்றும் நூறாண்டிலோ, கிறிஸ்தவர்கள் தொகை பெருக, கோவில்களும் அதிகப்பட்டபடியால், பொதுப் பொக்கிஷத்தில் முன்னையிலும் அதிகமான பங்கு இதற்கு வேண்டியிருக்குமே. கண்காணிமார், குருமார்களும் சபையாருடைய தர்ம காணிக்கைகளினால் வந்த வருமானத்தைப் பார்க்க அதிக நிலையான வருமானத்தை விரும்பியிருப்பார்களே. ஆகையால் பொதுப் பொக்கிஷத்தில் ஒரு பாகத்தைக்கொண்டு நிலங்களைகள் வாங்கி சபையில் ஊழியஞ்செய்த குருக்களுக்கு மானியங்களாக விட்டிருந்தார்கள். தர்ம காணிக்கைகள் வாங்குகிற வழக்கமும் இன்னமிருந்தது. இதில் ஒரு பாகத்தை தரித்திரருக்குச் செலவிட்டார்கள். மீதியான பணத்தினால் அப்போதப்போது வீடுகளையும், நிலங்களையுங் கொண்டார்கள். சபையைச் சேர்ந்த இந்தப் பொதுச் சொத்துக்களைத்தான் துன்பகாலத்திலே துரைத்தனத்தார் பிடுங்கிக்கொண்டது. இவைகளே தற்காலத்திற் பிறந்த சட்டங்களால் கிறிஸ்தவர்களுக்குத் திரும்பக் கிடைத்தவைகள்.

---

## A Family Commentary on the Sermon on the Mount.

---

## மலைப்பிரசங்க வியாக்கியானம்.

மத்தேயு 7 : 24—29.

(தொடர்ச்சி.)

---

ஆகையால் தாங்கள் கேட்டவைகளின்படி செய்யவேணுமென்ற மனமுங் கவனமுமுள்ளவர்களாய்க் கேட்கும் இக்காலத்தோரும், மலைப்பிரசங்கத்தில் மாத்திரமல்ல, வேதமுழுவதிலும் அடங்கியிருக்கிற சகல கற்பனைகளின்படியேயும் உபதேசங்களின்படியேயும் நடப்பார்களென்பதற்கு ஐயமில்லை. மேலும் மலைப்பிரசங்கத்திற் கற்பிக்கப்பட்டிருக்

கிற தெய்வீக சட்டங்களின் ஞானுதிக்கத்தையும் கண்டிதத்தையும்
அவர்கள் கவனித்துத் திடுக்கிட்டுப், பின்வருகிற வசனங்களிலடங்கிய
ஆறுதல்கொடுக்கும் சத்தியத்தைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்வார்
கள். அதென்னவேன்றால், "தேவன் உலகத்தாருடைய பாவங்களை
அவர்கள்மேல் சுமத்தாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்
புரவாக்கி, ஒப்புரவாக்கும் உபதேசத்தை யெங்களிடத்தில் ஒப்புவித்
தார்." 2 கொரி. 5: 19) என்பதும், "மோசேயின் நியாயப்பிரமாணத்
தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்
படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிற எவனும் அவைகளினின்று இவ
ராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்." அப்போ. 13: 39) என்
பதுமாம். மலைப்பிரசங்கத்திலடங்கியிருப்பதும் இருதயத்தைத் தொ
டத்தக்கதுமான இந்தப் போதனைகளை கிறிஸ்து போதித்த முக்கிய
நோக்கங்களிலொன்று. தமது பத்தர்கள்மேலே எடுத்துக் காட்டியிருக்
கிற ஆறுதலான உபதேசத்தைத் தாராளமாய் ஏற்றுக்கொள்ள அவர்
களுடைய மனதை ஆயத்தப்படுத்துவதற்குத் தான் என்றறியக்கட
வோம்.

மேலும் ஒருவன் இந்த மலைப்பிரசங்கத்தைக்கொண்டு தன் பெல
வீனங்களையும், தான் அகத்தியம் அடைந்துகொள்ளவேண்டிய பரிசுத்
தத்தின் உன்னத தன்மையையும் சிந்தித்து உணரும்போது அவன்
செபத்தின்மூலமாய்ப் பரிசுத்த தேவாவியானவருடைய ஒத்தாசையை
எவ்வளவு ஆவலோடு தேடுவான். அவன் தேவனுடைய சருவ ஆயுத
வர்க்கங்களையுந் தரித்துக்கொள்வான். வேதமுழுவதையும் ஆராய்ந்து
தன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானியாக்கும் யாவையும் படித்தறிந்து
கொள்வான். இரட்சகருடைய பரிதாபமான மரண சங்கதியையும் அதி
னால் விளைந்த பேரிய நன்மைகளையும் விளக்கிக்காட்டும் உபதேசங்களை
யும், சகல சாதிகளையுஞ் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்தஆவியின்
நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கும்படி கிறிஸ்து
இரட்சகரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலருடைய எழுத்துகளையும்
கவனமாய்ச் சிந்தித்து உட்கொள்ளுவான்.

இப்படிப்பட்டவன் தன் வீட்டைக் கன்மலையின்மேற் கட்டுகிறவன்.
இவனுடைய தேவபக்தி வியர்த்தமாய் முடியாது. அது, புசலடிக்கத்
துவக்கினவுடனே விழுந்துபோகத்தக்க அஸ்திபாரமில்லாத பெல
வீனக் கட்டிடமாயிராது. துன்பங்கள் சஞ்சலங்கள் இவனுக்கு வரும்
போது தனக்குள் கிறிஸ்துவின் சமாதானம் வாசஞ்செய்கிறதை அறிந்
துணருவான். தேவவசனத்தினிமித்தம் இவனுக்கு உபத்திரவம் நேரிட்
டால் கோபப்படமாட்டான். மரணஞ் சமீபிக்கும்போது அந்த மர
ணத்துக்கு எவ்வளவும் அஞ்சமாட்டான். அவன் கேட்கிறவனாய் மாத்
திரமிராமல் செய்கிறவனாகவும் இருந்தால் நடுத்தீர்வைநாள் வரும்
போது இனி சம்பவிக்கப்போகிறவைகளுக்கெல்லாம் தப்பி, மனுஷ
குமாரனுக்குமுன்பாக நிற்க பாத்திரவானாக எண்ணப்படுவான். கிறிஸ்
துவின்மேலுள்ள அவனுடைய விசுவாசம் கிரியையில்லாமல் தனித்தி
ருந்த செத்த விசுவாமாயிருநததில்லை. நற்கிரியையாகிய கனியைக்கொ
டுத்து ரூபகாரப்படுத்தின மெய்விசுவாசமாயிருந்தது. அவன் செய்த
பாவ அறிக்கையானது உதட்டு அறிக்கையாயிராமல், பணிந்த நொ
றுங்குண்ட, நைந்த இருதயத்திலிருந்து பிறந்த அறிக்கையாயிருந்தது.
அவன் இரட்சகர் மேலுள்ள தனது அன்பை அவரைக் கர்த்தாவே, கர்த்
தாவே என்று மாத்திரஞ் சொல்வதினாலேயல்லாமல் அவர் கற்பித்த
படி செய்ததினாலே விளக்கிக்காட்டியிருந்தான்.



இவ்விதமாய் அவன் இச்சீவனிலும், மரணத்திலும், நித்தியத்திலும்
மோசமின்றி சேமமாயிருக்கும் நிலைமையிலிருப்பதால் அவனைத் தன்
வீட்டைக் கன்மலையின்மேற் கட்டின விவேகமுள்ள மனிதனுக்குத்
தடையின்றி ஒப்பிடலாம். பெருமழைசொரிந்து பெருவெள்ளம் வந்து,
காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை. ஏனெ
னில், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்து.

ஆனால், "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு இவைகளின்
படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல்
கட்டின புத்தியில்லாத மனிதனுக்கு ஒப்பிடப்படுவான்." இப்படிப்பட்
டவன் எந்த மார்க்கத்தை அனுசரித்திருந்தாலும், எந்த உபதேசத்தைக்
கேட்டிருந்தாலும், எந்த குருவையடுத்திருந்தாலும், ஒரு பிரயோசனமு
மில்லை. நல்ல உபதேசத்தைக் கேட்கிறது தானே நல்ல அஸ்திபாரத்
தின்மேல் கட்டுவதல்ல. அவனுடைய வீடு மணலின்மேல் நிற்கிறது.
இப்படிப்பட்டவனுடைய பக்தி அற்பமானது, உறுதியற்றது. இவனு
டைய பக்தியைச் சோதிக்கத்தக்க காற்றாகிய துன்பம் வரும்போது,
சோதனைக்கு நிற்கமாட்டாது. ஒவ்வொருவருடைய கட்டிடமும் சோ
திக்கப்படப்போகிற காலம் சமீபிக்கிறது. அப்போது சிறிதுகாலம்
தனக்கு இன்பம் தருவித்த அழகான கட்டிடம் விழுந்துபோகும். அவ
னுடைய நம்பிக்கை, இடாம்பீகம் யாவும் ஓட்டம் பிடிக்கும். நித்திய
காலத்துக்குத் தனக்கு உதவுமென்று தான் கட்டிவைத்த கட்டிடம்
மணலின்மேற் கட்டப்பட்டதானதால் விழுந்துபோகும். அந்த விழு
தல் மிகவும் பெரிதாயிருக்கும்.

---

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### சீபா, மேவிபோசேத்து என்பவர்கள் விருத்தாந்தம்.

2 சாமுவேல் 9; 16, 1—4; 19. 24—30.

(தொடர்ச்சி.)

உண்மையென்பது நாம் இருக்கிறபடி விளங்குவதும், நாம் நினைக்
கிறபடி பேசுவதுந்தான். இப்படிச்செய்வது எப்பொழுதும் லேசல்ல.
நீங்கள் விழிப்பும் எச்சரிப்புமாய் நடந்துகொள்ளத்தக்கதாக, கள்ளத்
தனம்பண்ண உங்களைத் தூண்டிவிடும் சோதனைகளிற் சிலவற்றை இங்
வனம் எடுத்துச்சொல்லுகிறேன்.

அவைகளிலொன்று சீபாவினிடத்தில் நாம் பார்க்கிறபடி சுயலாபத்
தை நாடுங்குணம். அவன் மேவிபோசேத்தை வஞ்சித்தான், தாவீதை
யும் வஞ்சித்தானே, அதெல்லாம் என்னத்துக்காக? சுயலாபத்துக்காக
வல்லவா! இந்தச்செய்கை மகா வெட்கமானதென்றும் அரோசிகரமா
னதென்றும் சொல்லுகிறோமே. நல்லது, நீங்கள் எதார்த்தமாய் நற்
குணமில்லாதவர்களாயிருக்க, தாய்தந்தைகளின் பிரியத்தையும் உபாத்
தியாயர்களின் தயவையும் பெற்றுக்கொள்ளும்பொருட்டு, உங்களை நல்
ல பிள்ளைகள்போல காண்பிக்கும்பொழுதெல்லாம் இநதக் குற்றத்துக்கு
உள்ளாகிறீர்கள். இவ்வாறு நீங்கள் ஒருக்காலும் நடக்கிறதில்லையா?

சிலர்பேரிலே உங்களுக்கு எவ்வளவேனும் பட்சமில்லாதிருந்தபோதிலும், அவர்களால் யாதோ ஒரு உபகாரம்பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற நோக்கமாய், அவர்களிடத்திலே மிகவும் பட்சமாயிருக்கிறதுபோல பாராட்டுகிறதில்லையா? நான் பள்ளிக்கூடத்திற் படித்தகாலத்தில் ஒரு காரியத்தைப் பலமுறையும் பார்த்திருக்கிறேன். ஒரு பையனுக்கு வீட்டிலிருந்து சில நல்ல பதார்த்தங்கள் வருகிறது. வருகிறதோடு அநேகர் அவனுக்குச் சிநேகிதராகிறார்கள். ஒருவன் அவனைப் பார்த்து "தம்பி நாமிருவரும் எப்பொழுதும் சகோதரர்போலிருக்கிறோமல்லவா" என்கிறான். அந்தப் பலகாரம் வருவதற்குமுன்னே பலநாளாய் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவர்களுமல்ல, ஒருவரோடொருவர் பேசிக்கொண்டவர்களுமல்ல, "நான் உனக்கு இந்தக் கத்தியை இரவலாகத் தருகிறேன்," "இந்தப் புத்தகத்தை இனாமாகத் தருகிறேன்," "உனக்கு கணக்குச்செய்யச் சொல்லித் தருவேன்," இன்னதில் உனக்கு உதவிசெய்வேன்" என்பதுபோல பலரும் பலவிதமாய்ச் சொல்லுகிறதுண்டு. இதைக் கேட்கும்போது சிரிக்கிறீர்களே. இப்படிச்செய்வது நீசத்தனமல்லவா? ஆகையால் அதை நீங்கள் முழுமனதோடு வெறுக்கவேண்டும்.

வேறொருவகை உண்மைத்தாழ்ச்சியாதென்றால் சற்குணர் என்று விளங்கப்பார்ப்பதுதான். மற்றவர்களுக்குப் பிரியமுண்டாகும்பொருட்டு, சிலர் நினைக்கிறது ஒன்று பேசுகிறது ஒன்று அற்பசிநேகமிருக்க, பிராண சிநேகிதர்போல பாராட்டுகிறது. இப்பேர்ப்பட்டவர்கள் வரவர முகஸ்துதி பேசவும் ஏவப்படுவார்கள். முகஸ்துதிபேசுதல் தற்பொழிலைப்போல நீசமானதல்லாவிட்டாலும், பொய்யென்பதற்குச் சந்தேகமில்லையே. முகஸ்துதிபேசுகிறவர்கள் பேச்சை நம்புகிறது மதியீனம். என்றாலும் அதை நம்பாதவர்களைக் காண்பது அரிது. ஒரு சிறு பெண்ணைக்குறித்து நான் வாசித்த ஓர் சரித்திரம் எனக்கு ஞாபகமிருக்கிறது. அது எப்படியென்றால், அந்தப் பிள்ளையிருந்த வீட்டுக்கு ஒருநாள் சில துரைசானிகள் போயிருந்தார்கள். அவர்கள் அந்தச் சிறுபெண்ணை மிகவும் புகழ்ந்துபேசினபடியால், அது திரும்பவும் அவர்கள் நடுவிற்போகப் பிரியப்பட்டது. அவள் மூத்தசகோதரனோ போகமாட்டேனென்று சொல்லிவிட்டான். "இங்கே வருகிற துரைகளும் துரைசானிகளும் தாயாருக்குப் பிரியமுண்டாகும்பொருட்டு, நம்மைக்குறித்து இப்படியும் அப்படியும் சொல்லுகிறது எனக்கு நன்றாயில்லை. தகப்பனாரும் அவ்விதமே சொல்லுகிறார்" என்றான். சகோதரன் வெறுக்கிற காரியத்தைத்தான் விரும்புகிறதினிமித்தம் அந்தப் பெண் சற்று வெட்கங்கொண்டு, "அண்ணா, அது ஏன் உனக்கு வெறுப்பாயிருக்கிறது" என்று கேட்டது. "மெய்யல்லாததைக் கேட்க எனக்குப் பிரியமில்லாததினாலேதான்" என்று பையன் பிரதியுத்தரஞ்சொன்னான். "அவர்கள் சொல்லுகிறது சத்தியமல்லவென்று என்னத்தினாலே நினைக்கிறாய்" என்று அந்தப் பெண் கேட்க, அந்தப் பிள்ளையாண்டான் சொன்னது, என்னத்தினாலே என்று கேட்கிறாயா? அந்தத் துரைசானிகள் தாயாரைப் பார்த்து, "அம்மாளே உம்முடைய பிள்ளைகள் எவ்வளவு அழகும் அருமையுமாயிருக்கிறார்கள். உம்முடைய பிள்ளைகளைப்போல நேர்த்தியான பிள்ளைகள் எங்குமில்லை" என்கிறார்கள். தாயாரிடத்தில் இப்படிச் சொல்லுகிற இவர்கள் வீட்டைவிட்டுப்போகும்போது, பேசிக்கொண்டு போகிறது எப்படியென்று தெரியுமா? "இந்த ஏழை மனுஷிக்கு இத்தனை பிள்ளைகளையும் வளர்க்கிறதற்கு எவ்வளவு வருத்தமிருக்கும். இந்த அலங்கோலமான துஷ்டப்பிள்ளைகள் நேர்த்தியாய் உடுத்துவிப்பதற்கு



அவள் தையலிலே நசுங்கிப்போகமாட்டாளா?" என்றிப்படி பலவிதமாகப் பிதற்றிக்கொண்டுபோனதை இன்னார் கேட்டு வந்து சொன்னதை அறிவேன் என்றானாம். இந்தத் துரைசானிகள் தாயாருக்குப் பிரியமுண்டாகும்படி அவள் பிள்ளைகளைப் புகழ்ந்து பேசியிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் அவர்கள் உண்மைத்தாழ்ச்சியாய்ப் பேசினது எவ்வளவு மதியீனமென்று பாருங்கள்.

இவ்விடத்தில் சிநேகத்தைப்பற்றி உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். முகஸ்துதி பேசுகிறவன் உண்மையுள்ள சிநேகிதனேயல்ல. உண்மையுள்ள சிநேகமானது உங்கள் குற்றங்களை எடுத்து உங்களுக்குக் காண்பித்து முகருபிலே உங்களைக் கடிந்துகொள்ளும். இவ்வாறு செய்கிறதுண்டானால் கோபப்படாதேயுங்கள். புகழ்ந்துகொள்ளுகிற உண்மைத்தாழ்ச்சியைப் பார்க்கக் கண்டிக்கிற உண்மையே உத்தமமானது. நீங்கள் சீர்ப்படுகிறதற்கு உங்கள் குற்றங்கள் இவைகளென்று அறிகிறது நன்றும் அவசியமுமல்லவா? தாய்தந்தைகளோ உபாத்தியாயர்களோ சிநேகிதர்களோ எவர்கள் இதுகாரியத்தில் உங்களுக்கு உதவிசெய்கிறார்களோ அவர்களே உங்களுக்கு உத்தம சிநேகம்பாராட்டுகிறவர்கள் என்பதை ஒருபொழுதும் மறந்துபோகாதிருங்கள்.

மனுஷர் உண்மைத்தாழ்ச்சியாய் நடக்க ஏவுகிற இன்னம் ஒரு காரணமுண்டு. அதினால் ஒருவருக்கொருவர் மாத்திரமல்ல, தங்களுக்குங்கூட உண்மைத்தாழ்ச்சியாய் நடந்துகொள்ள ஏவப்படுகிறபடியால், அதைப்பற்றியுங் கொஞ்சம் யோசித்துக்கொள்ளவேண்டும். மேற்படி காரணம் யாதெனில், குற்றஞ்சாற்றும் மனச்சாட்சிதான், அவர்கள் இருதயம் அவர்களைப் பாவிகளென்று கூறுகிறது. தேவகோபாக்கினையை நினைத்து நடுங்குகிறார்கள். பக்தியுள்ளவர்களாகவேண்டுமென்றும் விரும்புகிறார்கள். ஆகிலும் பக்தியை மதிக்கிறார்களென்றல்ல, தேவனைச் சேவிக்க உண்மையாய் ஆசிக்கிறார்களென்றுமல்ல, நரகத்துக்குத் தப்பிக்கொள்ளவேண்டுமென்பதே அவர்கள் நோக்கம். அதினாலே அவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு, தாங்கள் இரட்சிக்கப்பட்டவர்களென்று நம்பிக்கொள்ளப் பார்க்கிறார்கள். அவர்கள் செபமொழிகளை உச்சரிக்கிறார்கள். என்றாலும் எதார்த்தமாய்ச் செபம் பண்ணுகிறவர்களல்ல. வேதாகமத்தை வாசிக்கிறார்கள், ஆகிலும் அதை நேசிக்கிறவர்களல்ல. புறம்பாக யோக்கியமாய் நடக்கப் பார்க்கிறார்கள், ஆனாலும் பாவத்தை வெறுக்கிறவர்களல்ல. இவ்விதமாய் மற்றவர்கள் தங்களைப் பக்திமான்களென்று நினைக்கப் பார்க்கிறதுமல்லாமல், சிலவேளைகளில் தாங்களும் நம்பிக்கொண்டு மோசம்போகிறார்கள்.

தன் காரியத்தை உள்ளபடி தனக்குச் சொல்லிக்கொள்ளுகிறதும் பலமுறையும் பிரயாசந்தான். தேவனிடத்தில் பொய்சொல்ல விரும்புகிறவர்கள்போல காணப்படுகிறவர்களும் அநேகருண்டு. தேவனை வஞ்சிப்பது கூடாத காரியம். எவர்களாவது உண்மையுள்ளவர்களாயிருக்க, மேவிபோசேத்தைப்போல உண்மையில்லாதவர்களென்று எண்ணப்படுவார்களாகில் தேவன் அதை அறிவார். யாராவது நாத்தான்வேலைப்போல கபடமில்லாத அந்தரங்கப் பக்தியுள்ளவர்களானால் தேவன் அதையும் அறிவார். சீபாவைப்போன்ற மாயக்காரர் அப்பேர்ப்பட்ட உத்தமனைப்பற்றியாவது தங்களைப்பற்றியாவது விபரீதமாய் நினைக்கப் பிறரை வஞ்சித்தபோதிலும், தேவனோ வஞ்சிக்கப்படாமல் அவர்களை உள்ளபடி அறிகிறார். நம்முடைய குணம் நடத்தை யாவும் எப்பொழுதும் தேவனுடைய கண்ணுக்கு முன்பாக இருக்கிறது. தேவனுடைய பார்வை கள்ளருக்கும் மாயக்காரருக்கும் சொல்லமுடியாத பயத்தை

யும் திகிலையுங் கொடுக்கும். தாழ்மையும் உண்மையுமுள்ளவர்களோ அதற்குப் பயப்பட நிமித்தமில்லை. இயேசு மூன்றும் விசை பேதுருவை நோக்கி, "நீ என்னை நேசிக்கிறாயா" என்று கேட்டபொழுது, அவன் பயப்படாமல் தாழ்மையாய், "ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் அறிவீர்" என்றான். பிரியமானவர்களே, நீங்களும் இப்பொழுது பேதுருவைப்போல சொல்லக்கூடுமா? இயேசுநாதரை நீங்கள் நேசிக்கிறீர்களா? இயேசுநாதரிடத்தில் உங்கள் நம்பிக்கையை வைத்திருக்கிறீர்களா? நாம் எல்லாரும் தேவனுடைய கண்களுக்கு முன்பாக இருக்கிறோமென்பதையும் கடைசி நியாயத்தீர்ப்புநாளில் அவைகளுக்கு முன்பாக நிற்போமென்பதையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

---

## Communicant's Companion.

## நற்கருணை விளக்கம்.

### ௩. அதிகாரம்.

நற்கருணை வழியாய் உண்டாகும் சில மெய்ப்பலன்களைக் குறித்து.

(தொடர்ச்சி.)

மேலும் நாம் உன் பிதா. கிறிஸ்து உன் மூத்தசகோதரனும் தீர்க்கதரிசியும், ஆசாரியரும், இராஜனும், உயிர்த்தெழும்புவர்களில் முதலாவதானவருமாம்.

தேவதூதர் உன் காவலாளிகள்.

தேவபராமரிப்பு. உன் பாதுகாப்போனும் நாமே, உன் காரியங்களெல்லாவற்றையும் உன் நன்மைக்கென்று நடத்துகிறவர் என்றுஞ் சொல்லுகிறார்.

இப்போது பிள்ளைகளாயிருக்கிறோம். இனிமேல் இன்னவின்னபிரகாரமாயிருப்போம் என்பது இன்னம் வெளியாகவில்லை. நாம் புத்திரராயிருக்கும்படி, முன் குறிக்கப்பட்டபோது, சுதந்தரராயுமிருந்தோம். இப்போது வயதுக்குக் கீழ்ப்பட்டபின், பிள்ளைபோல காரியக்காரருக்கும், வீட்டுவிசாரணைக்காரருக்கும், கீழானவர்கள். இப்போது நாம் அநுபவிக்கும்படி கொடுக்கப்பட்டிருக்கிறவைகள் இனிமேல் நாமடையும்படி பரமண்டலத்தில் வைக்கப்பட்டிருக்கிற அழியாததும், மாசற்றதும், வாடாததுமாகிய சுதந்தரத்துக்கு ஒப்பிடப் பாத்திரமுள்ளவைகளல்ல. வாடாத கிரீடமும், நிலையான இரக்ஷிப்புமே நம்முடைய பங்கு. "என் பிதாவின் வீட்டில் அநேகம் வாசஸ்தலங்கள் உண்டு" என்று இரக்ஷகர் சொன்னார்.

இந்தப் பந்தியில் புத்திரசுவீகாரத்தின் ஆவி நமக்களிக்கப்படுகிறது. பழையஏற்பாட்டின் காலத்திலுள்ளவர்களுக்குக் கிறிஸ்து வாக்களிக்கப்பட்டதுபோல, புதியஏற்பாட்டிலுள்ளவர்களுக்கு, பரிசுத்தாவி வாக்களிக்கப்பட்டிருக்கிறார்.

நீங்கள் புத்திரராயிருக்க தேவன் தம்முடைய குமாரனின் ஆவியை



உங்களிருதயத்தில் ஊற்றுகிறார். "பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக்கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்தாவியைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா என்றார்."

நாம் இந்தப் பந்தியில் அவருடைய ஆவியைப் பெறுகிறோமென்பதற்கு அச்சாரமாக, கிறிஸ்து உயிர்த்தெழுந்ததின்பிறகு, தமது சீஷரின் பேரில் தம்முடைய ஆவியை ஊதிப் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்.

ஆனால் தேவன் பூமியில் பாவியாகிய மனிதனிடத்தில் வாசம்பண்ணுவாரா? அவர்கள் அவருக்கு ஆலயங்களாவது மெய்தானா? அவர் அவர்கள்பேரில் இறங்கி, உன்னதமானவரின் ஆவி அவர்கள்பேரில் நிழலிடுவது சத்தியந்தானா?

கிறிஸ்து எனக்குள்ளே வடிவுகொள்வது உண்மையோ? அப்படியானால் என் ஆத்துமமே! கன்னிமரியாள் சொன்னதுபோல "உம்முடைய வார்த்தையின்படியே எனக்காகக் கடவது" என்று சொல்லு.

III. சமாதானம். இயேசுநாதர் இம்மையைவிட்டு மறுமைக்குப் புறப்படும்போது, தம்முடைய பிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டுப்போன மரணசாதன பலன்களில் சமாதானம் ஒன்று. சமாதானத்தை உங்களுக்கு வைத்துவிட்டுப்போகிறேன். என் சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் என்று சொன்னார். இதினால் தேவனுக்கும் நமக்குஞ் சமாதானம் ஒருவருக்கொருவர் சமாதானம். நமக்குள்ளே சமாதானம். இவ்வகை சமாதானத்துக்கு நிகர் உலகமெங்குமில்லை. உலகத்திலுள்ள வெள்ளியும் பொன்னுமெல்லாம் ஒருவனுக்குண்டாயிருந்தாலும், இந்தச் சமாதானத்துக்கொத்து வராது. உலகந்தரக்கூடாத சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன் என்று ஆண்டவர் சொன்னார். உலக ஆஸ்தி, சமாதானம் எடுபட்டுப்போகும். இந்தச் சமாதானத்துக்கு ஒருபோதுங் குன்றுதலில்லை. மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலைபெயராமலிருக்குமென்று உன்மேல் மனதுருகிற கர்த்தர் சொல்லுகிறார்.

பாவம்போக்கும் பலியாக ஆடு, மாடு பலிசெலுத்தப்படுவதோடுகூட பாவம்போக்கப்பட்டுப்போயிற்று என்ற சந்தோஷத்துக்குக் குறிப்பாகச் செலுத்தப்பட்ட பலியைப் புசிப்பார்கள். அத்தன்மைபோல இந்தப் பந்தியில், நம்முடைய பாவத்துக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகிய இயேசுநாதரைப் புசிக்கிறோம். ஆண்டவர் உயிர்த்தெழுந்ததின்பிறகு தமது சீஷர்களுக்குக் காணப்பட்டு, உங்களுக்குச் சமாதானசௌக்கியம் உண்டாவதாகவென்று சொன்னதுபோல, இந்தப் பந்தியைச் சேரும் அவருடைய பிள்ளைகள் யாவருக்கும் அப்படியே சொல்லுகிறார். ஆனால் சீஷர்கள் அவரை நம்பாமல் அவரை ஒரு ஆவேஷம்போல எண்ணினார்கள். அவர் ஆணி தைத்த தழும்புகளைக் காண்பித்ததின்பேரில் நம்பினார்கள். அதுபோல நம்மில் அநேகரும் நம்பிக்கையற்றவர்களாய் இதில் யாதொரு மயமும், காரியமுமில்லாததுபோலவும், ஒரு கட்டுக்கதைபோலவும் எண்ணிவருகிறோம். நமக்கு முன்போலவே இந்த நற்கருணையின்மூலமாய், ஆணிதைத்த தமது பாதங்களையும் கரங்களையுங் காண்பித்து அவிசுவாசியாயிராதே, விசுவாசியாயிரு உனக்குச் சமாதானம் உண்டாவதாக" என்கிறார். கொந்தளித்துக்கொண்டிருந்த சமுத்திரம், அவருடைய வார்த்தையால் அமைதலானதுபோல, கலங்கிக்கொண்டிருக்கும், அநேகருடைய இருதயம் ஆறுதலடையப் பார்க்கிறோம்.

VI. கிருபையின் ஈவு நற்கருணைப் பந்தியில் அளிக்கப்படுகிறது. இயேசுநாதர் நமக்கு நீதியாகக் கொடுக்கப்பட்டிருப்பதுபோல, பரிசுத்தமாகவுங் கொடுக்கப்பட்டிருக்கிறார். பாவ நிவர்த்திக்கு அவருடைய திருரத்தம் அவசியம்வேண்டியதுபோல, நம்முடைய கடமைகளை நிறைவேற்ற பரிசுத்தாவியினீவும் அவசியம். நாம் பெலனற்றவர்களும், நன்மைசெய்யத் திராணியற்றவர்களாயுமிருக்கிறதோடுகூட தீமைசெய்யநாடுகிறவர்களாயுமிருக்கிறோம். கிறிஸ்து இயேசுவைக்கொண்டு பெலனடைகிறோம். ஆகையால் தேவன் ஏற்படுத்திய கிருபையின் எத்தனங்களின்வழியாய், விசேஷமாய் நற்கருணையாகிய ஏற்பாட்டின்வழியாய் நமக்கு வேண்டிய ஞானபெலனைக் கட்டளையிடுகிறார். பெதெஸ்தாக்குளத்தில் சகலவித வியாதியஸ்தரும் வந்து காத்திருந்து ஜலங் கலக்கப்படும்போது சுகமடைவதுபோல, இந்தக் கிருபையின் எத்தனங்களாகிய பெதெஸ்தாவில் நாமெல்லாரும் வந்து பெலனடையவேண்டும். கிருபாந்தியெந்த இருதயத்தில் உற்பத்தியாயிருக்கிறதோ அங்கேயே அது பெருகி விர்த்தியடையவேண்டியதுண்டு. எந்தப் பரிசுத்தவானும் பூமியிலிருக்குமட்டுங் குறைவுள்ளவன்தான். ஆகையினாலேதான் பவுல் அப்போஸ்தலனும் "நான் பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடுகிறேன்" என்கிறார்.

1. நாம் பெற்றிருக்கும் கிர்பையிலே விர்த்தியடைந்து பெருகும்படி தேவ ஒத்தாசை வேண்டும். நமக்குள்ளிருக்கும் கிருபையானது கடுகுவிதைக்கும், நெரிந்த நாணலுக்கும், மங்கியெரியுந் திரிக்கும் ஒப்பானது. நாம் அறிவிற் குறைந்தவர்கள். ஆகையால் தவறுகிறோம். பரமகாரியங்களில் விருப்பமற்றவர்கள். ஆகையால் நீதியின்பேரில் பசிதாகமுள்ளவர்களாக அவருடைய ஒத்தாசை வேண்டும்.

விசுவாசத்திலும், அன்பிலும், மற்றும் கிருபைகளிலுங் குறைவுள்ளவர்கள். இந்தக் குறைவெல்லாம் நிறைவாகும்படி அவருடைய ஒத்தாசையைத் தேடவேண்டும்.

2. பரத்துக்குரிய அலுவலில் ஜாக்கிரதையாயிருக்கும்படி நம்மை ஏவுங் கிருபையை அவரிடத்தில் கேட்கவேணும். "எனது கிருபை உனக்குப் போதும்" என்று தேவன் நம்மொவ்வொருவரையும் பார்த்துச் சொல்லும்படி பார்க்கவேணும்.

3. நாம் செய்யும் ஒவ்வொரு வேலைக்கும் அவருடைய ஒத்தாசை வேணும். ஜெபம்பண்ணப்போகும்போதும், வேதத்தை வாசிக்க கேட்க பிரசங்கிக்க இப்படிப்பட்ட கிரியைகளை நடப்பிக்கப்போகும்போதும் அவருடைய நடத்துதலைத் தேடவேணும். மற்றவர்களுடைய சரீர ஆத்ம நன்மைகளைக் கருதி பிரயாசை எடுக்கும்போது, அதுகள் சித்தியடையும்படி அவருடைய ஒத்தாசையைத் தேடவேணும்.

பலத்த சோதனைக்குட்பட்டு மயங்கும்போது அதுகளால் ஜெயிக்கப்பட்டுப்போகாமல் அதுகளை வென்றேறிப்போகத்தக்க ஒத்தாசைக்காகத் தேவகிருபைவேணும். துன்பத்தாற் பாரஞ்சுமந்து தவிக்கும்போது ஞானசுமைதாங்கியாகிய இயேசுநாதரண்டைபோய் நமது பாரத்தை இறக்கிவைக்க மனமுண்டாகவேணும். அந்த மனதைக் கொடுக்கவும் அவரால் தாகும். நீதியினிமித்தந் துன்பப்படவேண்டியகாலமும்வரும், அதைச் சகிக்கவும் அவருடைய கிருபையின் ஈவுக்காக மன்றாடவேணும்.

4. மரணத்துக்கு ஆயத்தப்படவேண்டியது ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய கடமை. நம்முடைய அரைகள் கட்டப்பட்டு, விளக்குகள் எரிந்துகொண்டு தங்கள் எசமான் வரக்காத்திருக்கும் ஊழியக்காரர்போல காத்திருக்கத்தக்க கிருபையும் அவரால் வரவேணும்.



V. நற்கருணையைப் பெறவரும்போதெல்லாம் ஏற்றமனதோடு வருகிறதுண்டானால் இங்கேதான் நித்திய சந்தோஷத்துக்குரிய முதற்பலனையடைகிறோம்.

மோக்ஷமானது ஜீவகிரீடமுடைய இராஜ்யம். அதை அடைவோமென்கிற நிச்சயத்துக்கு இங்கேதானே அச்சாரம்பெறுகிறோம். புதிய ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்களெல்லாம் இதற்கடுத்தவைகளாம். இதற்கென்றே முன் குறிக்கப்பட்டிருக்கிறோம். இதற்கென்றே அழைக்கப்பட்டிருக்கிறோம், இதற்கேற்றவர்களாகும்படியாகப் பரிசுத்தமாக்கப்படுகிறோம். நீ இதை வாங்கிப் புசி, இதைப் பானம்பண்ணு, நாம் உன் தேவன். என்னுடைய இராஜ்யம் உன்னுடையதென்பதற்கு இதுவே அத்தாக்ஷியென்பதுபோல தேவன் ஒவ்வொரு விசுவாசியோடுஞ் சொல்லுகிறார்.

நாம் இங்கே தானே மோக்ஷபாக்கியத்தை ஒரு பாகமாய் அனுபவிக்கிறோம்.

கானான்தேசத்துச் செழிப்புக்குக் குறிப்பாக எஸ்கோல் பள்ளத்தாக்கின் முந்திரிகைக் குலையைக்கண்டு ருசித்ததுபோலவும், பிஸ்காக் கொடுமுடியினின்று கானான்தேசத்து வளங்களையெல்லாம் மோசே கண்டதுபோலவும், ஒரு படமானது அது குறிக்குந் தேசத்தின் ஸ்திதியைக் காட்டுவதுபோலவும், நாம் அடையப்போகும் மோக்ஷ வாழ்வை நற்கருணையானது தூண்டிக்காட்டுகிறது.

மேலும் இந்த ஏற்பாடானது கிறிஸ்துவுக்கும் நமக்குமிருக்கும் ஐக்கியத்தைக் காட்டும் உடன்படிக்கையாயிருக்கிறது. மேலும் மோக்ஷம் நித்திய விருந்துச்சாலையென்பதைக் காட்டும்படி இந்த விருந்தேற்பட்டிருக்கிறது. மோக்ஷமானது உன்னையும் பாவத்தையும் பிரித்துப்போடும். அப்படியானால் அதற்கு அச்சாரமாகிய இந்தப் பந்தியானது பாவத்தைவிட்டு உன்னைப் பிரித்துப்போடட்டும்.

மோக்ஷம் தேவன் பேரிலுள்ள அன்பை உனக்குள் பூரணமாய் உண்டுபண்ணும். அப்படியானால் கர்த்தருடைய பந்தியானது இப்பொழுதே அந்த அன்பை உனக்குள்ளே பெருகப்பண்ணட்டும். மோக்ஷத்தில் தேவனுடைய நித்திய சந்தோஷக்குட் பிரவேசிப்பாய். அப்படியானால் இப்பொழுது தானே அந்தச் சந்தோஷம் உனக்குள்ளே பெருகட்டும். மோக்ஷம் உன்னை பூரண பரிசுத்தனாக்கும். அப்படியானால் இந்த ஏற்பாடு உன்னைப் பரிசுத்தத்தில் தேறி வரப்பண்ணட்டும்.

மோக்ஷம் உனக்கு நித்திய இளைப்பாறுதலைக் கொடுக்கும். அப்படியானால் நீ அனுபவிக்கும் ஒவ்வொரு சாக்கிரமெந்தும் உனக்கு மோக்ஷமாயிருக்கட்டும்.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

முடிவுரை.

வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாய்.

(தொடர்ச்சி)

216. எபெனேசர். (ஒத்தாசைக்கல்) மிஸ்பாவில் சாமுவேல் நிறுத்தின ஞாபகக் கல். 1 சாமு. 4; 1.

217. எபேசு. ஐயோனியாவுக்குப் பிரதான பட்டணம். அப். 18: 21.

218. எபேஸ்தம்மீம். யூதாவிலுள்ள ஒரு இடப்பேர். ஏலா பள்ளத்தாக்கில் கோலியாத் மரித்த இடம். 1 சாமு. 17: 1. (பாஸ்தம்மீம். 1 நாளா. 11: 13)

219. எப்பிராத்தா. (செழிப்புள்ள) அல்லது பெத்லகேம் எப்பிராத்தா. பெத்லகேமுக்கு பூர்வீக பேர். யூதாவில். ஆதி. 35; 19.

220. எப்பிராயீம். (1) ஒரு கோத்திரம். யோசு. 16: 5.
(2) மலை அல்லது மலைத்தொடர். யோசு. 17: 15.
(3) யோர்தானுக்குக் கிழக்கே ஒரு காடு. 2 சாமு. 18: 6.
(4) யூதேயா வனாந்தரத்துக்கருகில் ஒரு பட்டணம். 2 சா. 13; 23.
(5) இஸ்ரவேல் இராச்சியத்தாருக்குக் கொடுக்கப்பட்ட பேர். ஏசா. 9: 10.

221. எப்பெரோன். (1) பென்யமீன், யூதா இந்தக் கோத்திரங்களின் எல்லையில் ஒரு மலை. யோசு. 15: 9.
(2) பென்யமீன் கோத்திர எல்லையில் பட்டணம். 2 நாளா. 13: 19. புதியஏற்பாட்டு எப்பிராயீம் இதுதான்.

222. எப்ரோனா. வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 34.

223. எமோரியர். (கலகக்காரர்) கானானின் நாலாம் மகனுடைய சந்ததியார். கானானியரிலெல்லாம் மிகவும் பலத்த சாதியார். சவக்கடலுக்கு மேற்கும் வடக்குமாக, யோர்தானுக்கு இருபுறத்திலும் குடியிருந்தார்கள். ஜாதியில் பெனிக்கியர். ஆதி. 14: 7.

224. எம்மாவு. எருசலேமுக்கு 7 மயில் வடக்கே, ரோமர் குடியேறின ஊர். லூக். 24: 13. அதினாலே தீத்துஸ் இராயன் இவர்களை விற்கவில்லை.

225. எராப்போலி. (திருநகர்) பிரிகியாவில் பட்டணம். கொலோசே, லவோதிக்கேயா இவைகளுக்குச் சமீபத்தில். கொலோ. 4: 13.

226. எரிகோ. (பேரீந்துகளின் பட்டணம்) என்றும் அழைக்கப்பட்டது. யோர்தான், சவக்கடலில் விழுகிற இடத்துக்குச் சமீபமாய் எரிகோ மைதானத்தில் கட்டப்பட்டது. யோர்தானுக்கு மேற்கே 6 மயில் தூரத்தில், ரையா என்ற ஒரு சிற்றூர் இப்போது அது இருந்த இடத்திலிருக்கிறது. எண். 22: 1. உபா. 34: 3.
(2) ஒரு மைதானத்துக்கும் பேர். யோசு. 4: 13. 5: 10. 2 இரா. 25; 5. எரே. 39: 5. 52: 8.
(3) ஒரு பள்ளத்தாக்குக்கும் பேர். உபா. 34: 3.

227. எருசலேம். (சமாதானம்) கானானியரின் ராசநகரம். தாவீதின் காலமுதல் எபிரேயருக்குத் தலைநகரமாயிற்று. யோசு. 10: 1.

228. எர்மோன். (மலை) எமோரியரால் ஷேனீர் என்றும், சீதோனியரால் சைகோன் என்றும் அழைக்கப்பட்ட அந்திலீபனோன் மலையின் தென்கீழ் பாகம். உபா. 3: 8, 9. தாபோர் மலைப் பக்கத்தில் சின்ன எர்மோன் என்னும் வேறொரு மலையுண்டு.

229. மெதித்திரானியாக் கடலை அடுத்த எலீசா தீவுகள் இவன் பேரால் அழைக்கப்பட்டது. ஆதி. 10: 4.

230. எல்காத். ஆசேரின் எல்லையில், லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். யோசு. 19: 25. 21: 31.

231. எல்காத்அசூரிம். (வீரரின் வயல்) கிபியோன் குளத்துக்கிட்ட ஒரு இடம், 2 சாமு. 2: 16. கிபியோனில்.



232. எல்கோஸ். நாகூமின் ஜநந ஊர். கலிலேயாவில் என்று பெரும்பாலும் நினைக்கப்படுகிறது. நாகூம் 1: 1.

233. எல்தெகோன். யூதாவின் மலைநாட்டுப் பட்டணம். யோசு. 15: 59.

234. எல்தெக்கே. தாணில், லேவியர் (கோகாத்தியர்) பட்டணம். யோசு. 19: 44.

235. எல்தோலாத், அல்லது தோலாத். தென்யூதாவில், சிமியோனைச் சேர்ந்தது. யோசு. 15: 30.

236. எல்பா. ஆசேரில், சீதோனுக்குக் கிட்ட. நியா. 1: 31.

237. எனெக்லாயிம். (இரண்டு கன்றுகள் நீரூற்று) சவக்கடல் ஓரத்தில் பட்டணம். எசே. 47: 10.

238. என்கன்னீம். யூதாவின் பள்ளத்துக்காட்டில் பட்டணம். யோசு. 15: 34.
(2) இசக்காரின் எல்லையில் லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். யோசு. 21: 29.

239. என்காதா. (தீவிரநீரூற்று) இசக்காரில். யோசு. 19: 21. என்கன்னீம் கிட்ட.

240. என்கேதி. (வெள்ளாட்டுக்குட்டியின் நீரூற்று) இதற்கு பூர்வீக பேர், அத்சாத்சோன் தாமார். யூதாவனாந்தரத்தில் பட்டணம். சவக்கடலின் மேல்கரையில். யோசு. 15: 62.

241. என்சேமேஸ் (சூரியநீரூற்று) யூதா, பென்யமீன் இந்தக் கோத்திரங்களின் எல்லையிலுள்ள ஒரு பட்டணத்துக்கும்; ஒரு சிற்றூற்றுக்கும் பேர். யோசு. 14. 7.

242. என்தப்புவா. மனாசே எப்பிராயீம் இந்தக் கோத்திரங்களின் எல்லையில் பட்டணம். யோசு. 17: 7.

243. என்ரிம்மோன். (மாதளைநீரூற்று) யூதாவில் பட்டணம். நெகே. 11: 29.

244. ஏசேக்கு. (சண்டை) கேரார் பள்ளத்தாக்கில் ஈசாக்கு வெட்டின துரவுகளிலொன்று. ஆதி. 26: 20.

245. ஏசேல். (பயணம்) ஒரு கல். 1 சாமு. 20: 19.

246. ஏதேர். (மந்தை) தென் யூதாவில் ஏதோமின் எல்லையை அடுத்த பட்டணம். யோசு. 15: 21.
(2) ஒரு கோபுரம். பெத்லகேமுக்கும் எபிரோனுக்கும் நடுவே. ஆதி. 35: 21.

247. ஏதேன். (இன்பம் அல்லது மகிழ்ச்சி) பரதீசு இருந்த இடம். ஆதி. 2: 8.
(2) அசீரியா, அல்லது மெசொப்பொத்தாமியாவில் ஒரு நாடு. 2 இராசா 19: 12.

248. ஏதோம், (சிவப்பு) அல்லது இதுமேயா. ஏதோமியர் தேசம். சிவந்த கடலின் கீழ்கரையாகிய எலானிற்றிக் குடாவுக்கும், சவக்கடலுக்கும் இடையிலுள்ள மலைக்காடாம். பிற்காலத்தில் கெபலேன் என்று அழைக்கப்பட்டு இப்போது ஏபேல் என்றழைக்கப்படுகிறது ஆதி. 25: 30. 32: 3. 36: 9. உபா. 33: 7.

249. ஏத்சாம். சிமியோனில் பட்டணம். 1 நாளா. 4: 29.

250. ஏத்தாம். (1) சிமியோனில் பட்டணம். 1 நாளா. 4: 32.
(2) யூதாவில் பட்டணம். 2 நாளா. 11: 6.
(3) யூதாவிலுள்ள லேகி ஏத்தாமுக்கு அருகில் ஒரு பாறை. நியா. 15: 8, 11.

(3) ஏத்தாம் (கடலின் கடைசி) வனாந்தர ஓரத்தில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். யாத். 13: 20. எண். 33: 6, 7, 8.

251. ஏபால். (குவியல்) சீகேம் பட்டணமிருக்கிற நாபலஸ் பள்ளத்தாக்கின் வடபக்கத்தை அடக்கிய மலை. கெரிசீமுக்கு எதிராயிருக்கிறது. உபா. 11: 29. 27: 4, 13. யோசு. 8: 30, 33. (கெரிசீமைப்போல, ஏபாலும் இந்தப் பேரையுடைய நாடோடிகளால் வந்திருக்கலாம்.)

252. ஏபேர். சேம் சந்ததியார் குடியேறின நாடு. ஊருக்குத் தெற்கே. ஆதி. 10: 21.

253. ஏப்பா. சவக்கடலுக்கருகில் மீதியானியரின் ஒரு வகுப்பார் குடியிருந்த நாடு. ஆதி 25: 4.

254. ஏமியர். மோவாப் தேசத்தின் பூர்வகுடிகளான இராக்ஷத சாதியார். ஆதி. 14: 5.

255. ஏரேகு. பாபிலோனியாவில் பட்டணம். அரிக்கா இதாயிருக்கலாம். ஆதி. 10: 10.

256. ஏரேஸ். எக்ரோனுக்கு அருகில் ஒரு மலை. நியா. 1: 35.

257. ஏலா. (கருவாலிமரம்) தாவீது கோலியாத்தோடு யுத்தஞ்செய்கையில், இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த பள்ளத்தாக்கு. எருசலேமுக்குத் தென்மேற்கே? 1 சாமு. 17: 2, 19. 21: 9.

258. ஏலாசார். பாபிலோனியாவில், ஏரேகுக்கும் ஊருக்கும் நடுவில் ஒரு நாடு. தெலாசேர் இதாயிருக்கலாம். ஆதி. 14: 1.

259. ஏலாத் அல்லது ஏலோத். ஏதோமில் சிவந்த கடலோரமாய் எசியோன்கேபேருக்கு கிட்ட கட்டப்பட்டது. ரோமரும் கிரேக்கரும் இதை எலானா என்று அழைத்ததினாலே, சிவந்த கடலின் கிழக்குவருக்கு எலானிற்றிக் குடா என்று பேர்வந்தது. (அரபு இப்பொழுது அக்கபாகுடா என்று பேர்.) உபா. 2: 8.

260. ஏலாம். பாரசீகராச்சியத்தின் ஒருபாகம். பூர்வத்தில் சூசியானா என்று அழைக்கப்பட்டது. இப்போது கூசிஸ்தான் என்னப்படுகிறது. கிரேக்கர், ரோமர் இவர்களிலுள்ள ஏலாமியரும் சேமின் சந்ததியார். ஆதி. 10: 22.

(2) ஐபிராத்துக்குச் சமீபத்தில் பட்டணம். 2 சாமு. 10: 17.

261. ஏலிம். இஸ்ரவேலர் சிவந்த கடலைக் கடந்தபின் பாளயமிறங்கின 2-வது இடம். யாத். 15: 27. (பெரோலிம். ஏசா. 15: 8.)

262. ஏலேப். (1) பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 28.

(2) நப்தலியில். யோசு. 19: 33.

263. ஏலோன். (தோப்பு) தாணில் பட்டணம். யோசு. 19: 43. (ஏலோன்பெத்தானான். 1 இராசா 4: 9.)

(2) மேலோன் அல்லது "அல்லோன்" நப்தலியில். யோசு. 19: 33.

264. ஏவியர். கானானிய சாதியார். எர்மோனுக்குச் சமீபத்தில் குடியிருந்தவர்கள். ஆதி. 10: 17. 34: 2.

265. ஏனா. ஆனா இதுவே. மெசொப்பொத்தாமியாவில் ஐபிராத் நதியையடுத்த பட்டணம். 2 இராசா 18: 34.

266. ஏனாக்கியர். கானானியரில் ஒரு சாதியார். இவர்கள் வளர்த்தியில் நெட்டையர். தெற்கே எபிரோனிலும் அதையடுத்த இடங்களிலும் குடியிருந்தார்கள். ஏனாக்கின் மூன்று புத்திரர்வழியாய் மூன்று கோத்திரமாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். உபா. 1: 28.

267. ஏனாம். (இரண்டு நீரூற்றுகள்) யூதாவின் பள்ளத்துக்காட்டில். யோசு. 15: 34. ("போகிற வழி." ஆதி. 38: 14.)



268. ஏனோக். (பிரதிஷ்டையாக்கப்பட்டது.) காயீனால் கட்டப்பட்டு அவன் குமாரன்பேரால் அழைக்கப்பட்ட பட்டணம். ஆதி. 4: 17.

269. ஏன்ஆத்சோர். நப்தலியில். யோசு. 19: 37.

270. ஏன்மிஸ்பாத் (நியாயத்தீர்ப்பின் நீரூற்று) காதேசுக்கு பூர்வ பேர். மேரிபா இதுதான் என்று நினைக்கப்படுகிறது. ஆதி. 14: 7.

271. ஐபிராத்து. (செழிப்புண்டாக்குவது) மேல் ஆசியாவில் பேர்போன நதி. அதினால் "பெரிய நதி" என்றும் அழைக்கப்படுகிறது. ஆதி. 2: 14. 15: 18.

272. ஒப்பீர். அரபியின் தென்புறத்தில் கடல்துறையென்று சிலர் நினைக்கிறார்கள். திட்டமாய்த் தெரியாது. ஆதி. 10: 29.

273. ஒப்னி பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 24.

274. ஒரோனாயீம், ஒரோனித்தெஸ். மோவாபியர் பட்டணம். ஏசா. 15: 5, நெகே. 2: 10.

275. ஒலிவமலை. எருசலேமுக்குக் கிழக்கே. இரண்டுக்கும் இடையில் யோசபாத் பள்ளத்தாக்கு இருக்கிறது. 2 சாமு. 15: 30. மத். 21: 1.

276. ஓசா. ஆசேரில் பட்டணம். யோசு. 19: 29.

277. ஓபா. தமஸ்குவுக்கு 3 மயிலுக்கு வடக்கே, பட்டணம், ஆதி. 14: 15.

278. ஓபால். அரபியரில் ஒரு வகுப்பார். (யொக்கேதானியர்.) ஆதி. 10: 28. (ஏபால். 1 நாளா. 1: 22)

279. ஓபேல். (கோபுரம்.) எருசலேமில், தேவாலயத்துக்குத் தெற்கே. 2 நாளா. 27: 3.

280. ஓபோத். மோவாபுக்குக் கிழக்கில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 21: 10, 11. 33: 43, 44.

281. ஒப்ரா. (1) பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 23. (அப்ரா. மீகா. 1: 10.)

(2) மனாசேயில், கிதியோன் பிறந்த ஊர். நியா. 6: 11, 24. 8: 27, 32. 9: 5.

282. ஓரியர். ஏதோமியருக்குமுன், சேயீர்மலையில் குடியிருந்த பூர்வ சாதியார். இவர்கள் குழிகளிலும் குகைகளிலும் வாசஞ்செய்தார்கள். ஆதி. 14: 6.

283. ஓரேப். (தனிமை) (1) சீனாய் மலைத் தொடரின் வடகோடி முடி. யாத். 3: 1. சீனாய் மலைக்கும், அதின் ஒரு பாகத்துக்கும் பேராக வழங்கும்.

(2) யோர்தானுக்குச் சமீபத்தில் ஒரு கன்மலை. நியா. 7: 25.

284. ஓரேம். நப்தலியில் பட்டணம். யோசு. 19: 38.

285. ஓர். (மேடு) (1) அரபியாபெத்திரியாவில் ஒரு மலை. இப்போது ஏபேல்ஹாரோன் (ஆரோன் மலை) என்று அழைக்கப்படுகிறது. எண். 21: 4.

(2) பலஸ்தீனாவின் வடக்கில் ஒரு மலை. லீபனோனாயிருக்கலாம். எண். 34: 7, 8.

286. ஓர்மா. (சாபம்) சிமியோனில், கானானியர் ராச நகரம். முதலில் சேபாத் என்று அழைக்கப்பட்டது. எண். 14: 45.

287. ஓலோன். (1) யூதாவின் மலைநாட்டுப் பட்டணம். யோசு. 15: 51.

(2) மோவாபில் ஒரு இடம். எரே. 48: 21.

288. ஓனோ, ஓன்ஸ். பென்யமீனில் பட்டணம். 1 நாளா. 8: 12.

289. ஓன். (சூரியன்) இப்பொழுது எலியாப்பொலிஸ். (சூரிய நகரம்.) எகிப்தில் சூரியனை வணங்கினவர்களுக்கு உறைவிடம். காயிரோவுக்கு 10 மயில் வடகிழக்கில். எபிரேயர் இதை பெத்ஷிமேஸ் என்பார்கள். நீலநதியில். ஆதி. 41: 50. (ஆவென். எசேக். 30: 17.)

290. கசிப்பியா. மேதியாவின் வடகிழக்கில் ஒரு இடம் என்று சிலர் எண்ணுகிறார்கள். எஸ்றா 8: 17.

291. கஸ்லூகீம். சுறுப்புகடலை அடுத்த சோல்கிசுக்குச் சமீபத்தில் குடியேறின மிஸ்றாயீம் சந்ததியார். ஆதி. 10: 14.

292. கதரேனர். பெரேயாவின் தலைப்பட்டணமாகிய கதராவின் குடிகள். கலிலேயாக் கடலுக்குக் கிழக்கே. மாற். 5: 1.

293. கத்மோனியர். பலஸ்தீனாவின் வடகிழக்கிலிருந்த கானானியர். ஆதி. 15: 19

294. கபத்தா. (உயர்த்தப்பட்ட) எருசலேமில் பிலாத்து நியாயம் விசாரித்த இடம். யோவா. 19: 13.

295. கப்சேயெல் எகாப்சேயேல் இதுதான். யூதாவின் தென் அந்தத்தில். யோசு. 15: 21.

296. கப்தோர். பெலிஸ்தர் ஆதிபூர்வமாயிருந்த இடம். மேல்எகிப்தில் என்று நினைக்கப்படுகிறது. கப்தோரியர் என்றால், பெலிஸ்தர். உபா. 2: 22. எரே. 47: 7. ஆமோ. 9: 7.

297. கப்பத்தோக்கியா. சின்ன ஆசியாவின் கீழ் கடைகோடியில் ஆர்மீனியாவை அடுத்த நாடு. அப். 2: 9. 1 பேது. 1: 1.

---

## Bishop's Prizes.

# அத்தியட்சர் பந்தயப் பரீட்சை.

### 1874 ஆடு பந்தயம் பெற்றவர்கள்.

(1) முதல் பந்தயம்—நாசரேத்தூர்ச்சேகரம் தென்திருப்பதி G. ஏசுவடியானுபதேசியார், பெற்றார்.

(2) இரண்டாம் பந்தயம்—மெஞ்ஞானபுரம் சேகரம், வெள்ளாளன்விளை சாமுவேல் நியூமென் உபதேசியார், பெற்றார்.

சென்னபட்டணத்து முதல் பந்தயம் பெற்றவரைப்பார்க்கிலும், திருநெல்வேலி முதல் பந்தயம் பெற்றவர் அதிக நம்பர் பெற்றுக்கொண்டார். மொத்தம் 150. அதில் G. ஏசுவடியான் 138½ பெற்றார். S. நியூமென், சென்னபட்டணத்து முதல் பந்தயம் பெற்றவருக்கு அடுத்தவராக வந்து, 129 நம்பர் பெற்றார்.

இருபேருக்கும், மகாகனம் அத்தியட்சரவர்கள் அன்பான வார்த்தையும், பந்தயத்துக்கு ஞாபகசின்னமும், அனுப்பினார்கள்.

(3) மற்றவர்கள் பெற்றுக்கொண்ட நம்பரின் விபரம் பட்டணத்திலிருந்து வராததினால், இவ்விடத்தில் காட்ட ஏதுவில்லை.

N. B. 1875 ஆடு பரீட்சைக்காக நூதன ஏற்பாடுகள், நற்போதகத்தில் பெப்ரவரி மாசத்து நம்பரைப் பார்க்க.

---



## Summary of News.

# சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. சென்றமீ 5ட லண்டனிற்கூடிய பார்லியமெந்து என்னும் மகா சபையில் மஹாராணியவர்கள் செய்த பிரசங்கத்தில் புறத்தேசத் துரைத்தனங்கள் எல்லாம் சமாதானமாயிருக்கின்றன என்றும்; தமது ஆளுகைக்குட்பட்ட இந்தியாமுதலிய சருவதேசக்குடிகளும் வாழ்வடைந்திருக்கிறார்களென்றும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ராணியவர்களின் இளையகுமாரராகிய பிரின்ஸ் லியபோல்ட் சுகமடைந்திருக்கிறார்.

ஸ்பானிய தேச சிம்மாசனமேறியிருக்கிற டோன் அல்பன்ஸோ என்பவர் தமததிகாரத்தையெதிர்த்து நிற்கிற பழய ராஜவம்சத்தாரை முப்பத்தையாயிரம்பேரோடெதிர்த்து நிற்கிறாரென்றும், பழய ராஜவம்சபட்சத்தின் யுத்தவீரர் தோல்வியடைந்து முறியடிக்கப்பட்டதுபோலாயிற்று என்றும் கேள்வி.

ருஷிய ராச்சியத்தில் வசித்திருக்கிற யூத சமயத்தார் சுமார் முப்பது லக்ஷம் பெயர். ருஷியருக்கும் அங்கிலேயருக்கும் 1833ம் ஆடு யுத்தம் தொடங்கினதுமுதல் வேதாகம சங்கத்தார்முதலிய சற்போதகக் கூட்டத்தார் அவர்களுக்குள்ளே கிறிஸ்துமார்க்க அபிவிர்த்திசெய்வதற்காகச் செய்திருந்த ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டன. தற்காலத்தில் அங்கிலேய கிறிஸ்தவர்கள் விஞ்ஞாபனம் ஒன்றெழுதி ருஷிய சக்கரவர்த்திக்கு அனுப்பி, ருஷிய பிரதேசங்களிலும் பட்டணங்களிலும் வாசஞ்செய்கிற யூத சமயத்தாருக்கு வேதத்தில் உள்ளுறையானவைகளைப் பிரசுரஞ்செய்ய அனுமதிகேட்டார்கள். ருஷிய சக்கரவர்த்தி மேற்குறித்த பத்திரத்தை அங்கீகரித்து, யூத சமயத்தார் வசிக்கும் எவ்விடத்திலும் வேதாகம சங்கத்தார் முதலியவர்கள் வேதபோதனை செய்யலாமென்று உத்தரவு கொடுத்தார்.

இந்தியா. நானாவென்று பிடித்துவைத்திருந்து விசாரணைசெய்து அவனல்லவென்று காணப்பட்ட மனுஷன் மீளவும் ஸிந்தியா மகாராஜாவிடத்திலொப்புவிக்கப்பட்டான். வங்காளத்தின் சீவில் உத்தியோகஸ்தரிலொருவரான மல்கம்ரீட் துரையைச் சுட்டுக்கொன்று, குற்ற அறிக்கைசெய்த வேலைக்காரன் பிராணதண்டனைத் தீர்ப்புப்பெற்றான். அவன் ஒரு மசமதியன்.

ரெஸிடெண்டு துரையை நஞ்சிட்டுக்கொல்லஎத்தனித்த குற்றஞ்சாட்டப்பட்டு கைதிருக்கும் பரோதா அரசனின் குற்றவிசாரணை சென்றமீ 24ட தொடங்கியது. அவ்விசாரணை நடத்தும்படி மாட்சிமைதங்கிய ராஜபிரதிநிதியவர்களால் நியமிக்கப்பட்டவர்கள்;—வங்காளத்தின் பிரதான நியாயாதிபதி ஸ்ரீரிச்சார்ட்கௌச், மைசூர் பிரதான கமிஷனர் ஸ்ரீரிச்சார்ட்மீட், பம்பாயின் இரண்டாவது நியாயாதிபதி, ஸிந்தியா மகாராஜா, ஜெய்புரி மகாராஜா, ஸ்ரீதினகராவ் இவர்களே, இவர்களில் ஸ்ரீரிச்சார்ட்கௌச் இந்தக் கமிஷனின் அக்கிராசனர்.

திருவிதாங்கோட்டு அரசர் கவர்னர் ஜெனரலவர்களைக் கண்டுபேசினபின் காசிக்குப்போகப் புறப்பட்டார்.

மார்ச்சுமீ நாள் 31. மாசிமீ 19உ முதல், பங்குனிமீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௯ | கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவரென்பது. யாத். 34: 14. |
| செ | 2 | ௨0 | அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம். 14. |
| பு | 3 | ௨௧ | வெறுங்கையோடே என் சந்நிதியில் வரக்கூடாது. 20. |
| வி | 4 | ௨௨ | கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. 40: 34. |
| வெ | 5 | ௨௩ | பொறாமை புத்தியில்லாதவனை அதம்பண்ணும். யோபு 5: 2. |
| ச | 6 | ௨௪ | மனுஷன் வருத்தம் அனுபவிக்கப் பிறந்திருக்கிறான். 7. |
| ஞா | 7 | ௨௫ | என் நியாயத்தைத் தேவனிடத்தில் ஒப்புவிப்பேன். 8. |
| தி | 8 | ௨௬ | தாழ்ந்தவர்களை உயரத்தில் வைக்கிறார். 10. |
| செ | 9 | ௨௭ | உமது கிருபையின்படி என்னை இரட்சியும். சங்கீதம் 109: 26. |
| பு | 10 | ௨௮ | அவர்கள் சபித்தாலும் நீர் ஆசீர்வதியும். 28. |
| வி | 11 | ௨௯ | கர்த்தரை முழு இருதயத்தாலும் துதிப்பேன். 111: 1. |
| வெ | 12 | ௩0 | கர்த்தருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும். 3. |
| ச | 13 | ௧ | கர்த்தர் இரக்கமும் மன உருக்கமுமுள்ளவர். 4. |
| ஞா | 14 | ௨ | தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரங் கொடுத்தார். 5. |
| தி | 15 | ௩ | கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். 10. |
| செ | 16 | ௪ | வஞ்சனையால் தேடின பொருள் குறைந்துபோம். நீதி. 13: 11. |
| பு | 17 | ௫ | திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான். 13. |
| வி | 18 | ௬ | ஞானவான்களுடைய போதகம் ஜீவ ஊற்று. 14 |
| வெ | 19 | ௭ | நற்புத்தியை உண்டாக்கும். 15. |
| ச | 20 | ௮ | துரோகிகளுடைய வழி கரடுமுரடானது. 15. |
| ஞா | 21 | ௯ | உன் அந்தகாரம் மத்தியானத்தைப் போலாகும் ஏசா. 58: 10. |
| தி | 22 | ௧0 | கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார். 11. |
| செ | 23 | ௧௧ | நீ வற்றாத நீரூற்றைப்போல் இருப்பாய். 11. |
| பு | 24 | ௧௨ | ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதே. 13. |
| வி | 25 | ௧௩ | உங்கள் பண்டிகைகளை வெறுக்கிறேன். ஆமோஸ் 5: 21. |
| வெ | 26 | ௧௪ | உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை. 21. |
| ச | 27 | ௧௫ | என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான். யோ. 14: 9. |
| ஞா | 28 | ௧௬ | என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள். 11. |
| தி | 29 | ௧௭ | ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள். உரோ. 15: 1. |
| செ | 30 | ௧௮ | புறச்சாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள். 11. |
| பு | 31 | ௧௯ | சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பாராக. 33. |

## விசேஷித்த நாட்கள்.

7. லெந்தென்னும் நாட்களில், நான்காம் ஞாயிறு.
8. அமாவாசை.
14. லெந்தென்னும் நாட்களில், ஐந்தாம் நாள்.
21. உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும், ஞாயிறு.
22. பௌரணமி.
26. பெரிய வெள்ளிக்கிழமை.
28. கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளாகிய ஈஸ்தர் பண்டிகை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.


**Vol. 27.** **April.** **No. 4.**


**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 62
Christian Church History. ... ... ... ... ... 65
Communicant's Companion. ... ... ... ... ... 68
Notes on Genesis. ... ... ... ... ... ... 72
Summary of News. ... ... ... ... ... ... 79


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௬௨
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௬௫
நற்கருணை விளக்கம் ... ... ... ... ... ௬௮
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௭௨
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௭௯



**Palamcottah:**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

ச. ஏப்பிரல்மீ. ௲௮௭௫௵.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### ஓர்னானின் களம்.

1 நாளாகமம் 21 அதிகாரம்.

இதை வாசிக்கிற வாலிப சிநேகிதர்களே, அதோ தூரத்தில் தெரிகிற மலையினுச்சிக்கு மனதிலே பிரயாணம்போய் வருவோம் வாருங்கள். அங்கிருக்கிற அநேக மலைகளில் அது ஒன்று. வேறு இரண்டு மலைகள் அதையும் பார்க்க உயரமாயிருக்கின்றனவே. நமக்குப் பின்னேயும் ஒரு மலையிருக்கிறது. அதின் சரிவெங்கும் பச்சையான ஒலிவமரத்தோப்புகளைக் காண்கிறோம். அது பார்வைக்கு எவ்வளவு அலங்காரமாயிருக்கிறது. இப்பொழுது முன்னுக்கு நோக்கிப் பாருங்கள். அந்த மலையைச் சூழ உயரமான மதில்களும் அங்கங்கே பல கோபுரங்களும் கொத்தளங்களும் காணப்படுகின்றனவல்லவா? ஆம், அது அரணான ஓர் கோட்டைதான். அங்கிருந்து யுத்தவீரர் நடந்துபோகிற சத்தமும் கீதவாத்தியங்களின் சத்தமும் ஒரோர்வேளை கேட்கப்படுகிறதுண்டு.

நாம் நிற்கிற இவ்விடத்திலோ அப்பேர்ப்பட்ட குறிப்புகளில்லை. சமுசாரித்தனத்துக்குரிய காரியங்களைமாத்திரங் காணலாம். சூழப்பயிர் நிலங்களையும் அவைகளின் நடுவில் ஓர் களத்தையும் பார்க்கிறோமே. அந்தக் களத்திலே கதிர்க்கட்டுகள் கொண்டுவந்து போட்டிருக்கிறதையும், இரண்டு காளைகளைப் பூட்டிப் போரடிக்கிறதையும் பாருங்கள். போரடித்துத் தீர்ந்தபின், தானியத்தைக் காற்றிலேயெடுத்துவிட, சாவிசண்டெல்லாம் பறந்துபோகிறது. போரடித்துக்கொண்டு நிற்கிற மனிதன் தன் கண்ணை யேறெடுத்துப் பார்க்கிறான். அவன் தேசத்துப் பூர்வக்குடிகளில் ஒருவன். அந்த அரணான கோட்டையில் வாசம்பண்ணுகிற இராசாவும் இராணுவவீரர்களும் பூர்வக்குடிகளை அழித்துப்போட்டபொழுது, இவனைத் தப்பவிட்டிருக்கிறார்கள். ஏன் அவனைத் தப்பவிட்டார்களென்று கேட்கிறீர்களோ? இன்ன முகாந்தரத்தினாலென்று நிர்மானமாய்ச் சொல்ல ஏதுவில்லை. ஒருவேளை அவன் தன் தேசத்தாருடைய பொய்மார்க்கத்தைத் தள்ளிவிட்டு, அவர்களைச் செயித்துக் கீழ்ப்படுத்தினவர்களுடைய மெய்மார்க்கத்தை அனுசரித்துக்கொண்டதினாலே தப்பிக்கொண்டாலுமிருக்கலாம்.

அந்த மலையின் மீதிலோ அருகான்மையிலோ ஒருகாலத்தில் நடந்த அதிசய சங்கதியை நீங்கள் அறிவீர்களே. வெகுகாலத்துக்குமுன் ஒரு நாள், உதாரகுணமுள்ள இந்தச் சமுசாரி இப்பொழுது நிற்கும் இடத்திலே, தகப்பனும் மகனுமான இருவர் நின்றார்கள். ஒரு பலிசெலுத்தும்



பொருட்டு அவர்கள் அவ்விடத்துக்குப்போயிருந்தார்கள். அந்த மனுஷன் தனக்கு ஒரேபேறான நேசகுமாரனைப் பலியிடும்படி தேவன் கற்பித்திருந்தார். அந்தச் சரித்திரம் முழுமையையும் நான் சொல்லவேண்டுமா? ஆபிரகாமையும் அவன் மகன் ஈசாக்கையும் பற்றிய விர்த்தாந்தத்தையும், அவ்விருவரும் மோரியா மலையிற்போய்ச் சேர்ந்தபோது நடந்த சம்பவத்தையும், தேவன் ஈசாக்கைக் கொன்றுபோடாமல் தடுத்ததினிமித்தம் ஆபிரகாம் சந்துஷ்டியடைந்து அந்த இடத்துக்கு "தேவன் பார்த்துக்கொள்வார்" என்ற அர்த்தமாய் யேகோவாயீரே என்று பெயரிட்டதையுமெல்லாம் நீங்களெல்லாரும் நன்றாய் அறிவீர்களே.

அந்த இடத்திலேயே அந்தச் சமுசாரியானவன் இப்பொழுது களம் போட்டு அடித்துக்கொண்டு நிற்கிறான். அவனுக்கு மேற்படி ஆபிரகாமின் விர்த்தாந்தம் ஒருவேளை தெரிந்திருந்தபோதிலும், அதை இப்பொழுது நினைத்திருப்பானென்று எண்ணுகிறீர்களா? அப்படி எண்ண இடமில்லை. ஆகிலும் அவன் துக்கமுகமாய்க் காணப்படுகிறானே. ஏன்? தேசமெங்கும் பெரிய ஆபத்து நேரிட்டிருக்கிறது. பக்கத்திலிருக்கிற பட்டணத்துக்குள்ளே உண்டாயிருக்கிற கஸ்தி இவ்வளவென்று சொல்லமுடியாது. ஒருவரும் தீர்க்கக்கூடாத கொள்ளை நோய் அங்கே தோன்றியிருக்கிறது. சனங்கள் ஆயிரக்கணக்காய்ச் சாகிறார்கள். பெரியோரும் சிறியோரும், பலசாலிகளும் பலவீனரும், வாலிபருங் குழந்தைகளுங் கூட வாரிக்கொள்ளப்படுகிறார்கள். உயிரோடிருக்கிறவர்கள் மேற்படி நோய் தங்களையும் எப்பொழுது பிடிக்குமோவென்று தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள்.

தேசத்தின் மீது இந்தப் பெரிய ஆபத்துவந்த காரணம் இன்னதென்றும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். நமக்குத் துன்பம் கஸ்திவருவது இன்னகாரணத்தினாலென்று எப்பொழுதும் நாம் அறியோமே. தேவனே அதை அனுப்பினாரென்று சொல்லி வேறு காரணம் விசாரியாதிருப்பதே உத்தமம். இந்த விஷயத்தில் காரணம் இன்னதென்று தேவன் தாமே வெளிப்படுத்தினார், அந்தக் கோட்டைக்குள்ளே வாசம்பண்ணின இராசா தேசத்திலுள்ள சனங்களைப் புத்தியீனமாய்த் தொகை பார்க்கக் கற்பித்திருந்தான். அவன் தன் பெருமையை விளங்கப்பண்ணவோ, அல்லது இதற்குமுன் ஒருக்காலும் இல்லாதவிதமாய் பெருந்தளங்களை ஏற்படுத்திக்கொண்டு மற்றுந் தேசங்களைச் செயித்துக் கட்டிக்கொள்ளவோ அல்லது வேறு என்ன நோக்கமாக இப்படிச்செய்திருப்பானோ தெரியாது. எப்படியும் அச்செய்கை தேவனுக்கு மிகவும் விசனகரமாயிருந்தது. தேவன் கோபதாபமாகி, பயங்கரமான இந்தக் கொள்ளைநோயை அனுப்பி அநேகாயிரம் பெயரைச் சங்கரித்து, இராசாவினுடைய அகந்தையைத் தாழ்த்தினார்.

அதோ, துக்கசாகரத்தில் மூழ்கினவர்களாய் பிரேத அடக்கஞ்செய்யப்போகிறவர்கள்போல, சிலர் அரணான அந்தக் கோட்டையிலிருந்து புறப்பட்டு பள்ளத்தாக்கு வழியாய் மெள்ள நடந்துவருகிறார்களே, பாருங்கள். சவப்பெட்டியைக் காணோம். என்றாலும் எல்லாரும் துக்கங்கொண்டாடுகிறவர்கள்போலிருக்கிறார்கள். அவர்களுக்குள் தலைமையானவன் தலை வணங்கினவனாய் இரட்டு உடுத்திக்கொண்டு தனக்கு நேரே வருகிறதை அந்தச் சமுசாரியானவன் கண்டு, அது இராசா என்கிறான். ஆம், அது இராசாதான். அந்த இடத்துக்கே அவன் வருகிறான்.

சீயோன் மலையிலே கட்டப்பட்டிருந்த அரண்மனையிலிருந்து அன்று ஒரு விநோத காட்சியைக் கண்டான். மகத்துவம்பொருந்திய தேவதூதன் ஒருவன் உருவின பட்டயம் கையிற் பிடித்துக்கொண்டு பட்ட

ணத்தை அழிக்க ஆயத்தமாய் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே நிற்கிற தூதனை, இராசா கண்டு, சனத்தை அழிக்காமல் தப்பவிடும்படி தேவனை நோக்கி ஆவலாய்ப் பிரார்த்தித்தான். தேவன் அழிக்கிற தூதனை நோக்கி, போதும், சங்காரத்தை நிறுத்து என்று கற்பிக்க, உடனே அவன் கையிலிருந்த பட்டயம் மறைந்துபோக, இரக்கஞ்செய்யவந்த தூதனைப்போல விளங்கினான். அதன்பேரில் தேவதூதன் காணப்பட்ட அந்த இடத்தில் இராசாபோய் ஒரு பலிப்பீடத்தைக் கட்டி தேவனுக்குப் பலியிடவேண்டுமென்று தீர்க்கதரிசி ஒருவனால் இராசாவுக்குக் கற்பிக்கப்பட்டது. அவ்வாறே இராசா புறப்பட்டு அவ்விடம் வந்து சேருகிறான். அந்தச் சமுசாரியும் சமுசாரியின் நாலு குமாரர்களும் அவனுக்கு எதிர்கொண்டுபோய் சாஷ்டாங்கமாய் விழுந்து அவனை வணங்குகிறார்கள். இராசா தங்களிடம் வந்த காரியம் யாதென்று விசாரிக்கிறார்களா! விசாரிக்க வாய் எடுக்கிறதற்குள்ளாக, சற்று திரும்பிப் பார்த்து தேவதூதனைக் காண்கிறார்கள். காணவே அந்த நாலு வாலிபரும் நடுக்கமும் திகிலுமடைந்தவர்களாய் ஓரே ஓட்டமாய் ஓடி ஒளித்துக்கொள்ளுகிறார்கள். அந்தச் சமுசாரி மாத்திரம் இராசாவோடு பேசிக்கொண்டு நிற்கிறான்.

அவர்களுடைய சம்பாஷணையைப் பார்த்தால், சிநேகமேயாய்த் தாராளமாய்ப் பேசிக்கொண்டபோதிலும் யாதோ ஒரு காரியத்தைக் குறித்து அவர்களிருவரும் இணக்கமில்லாதிருக்கிறதாகக் காணப்படுகிறதே. அது என்ன காரியமென்று கேட்கிறீர்களோ? இராசா சமுசாரியின் நிலத்தைக் கிரயத்துக்கு வாங்க விரும்புகிறான். சமுசாரியோ அதைத் தானமாய்க்கொடுத்துவிட விரும்புகிறான். இராசாவோவென்றால், அப்படியல்ல, நான் உன்னுடையதை இலவசமாய் வாங்கி, கர்த்தருக்குச் சர்வாங்கதகனத்தைப் பலியிடாமல், அதைப் பெறும் விலைக்கு வாங்குவேன்" என்கிறான். ஆக கடைசியிலே இராசா அந்தக் களத்துக்கும் பலிக்காக மாடுகளுக்கும் விறகுக்காக போரடிக்கிற பணிமுட்டுகளுக்கும் போதுமான கிரயங்கொடுத்து வாங்கி, அநேக வருஷங்களுக்குமுன் ஆபிரகாமும் ஈசாக்கும் நின்ற அவ்விடத்திலே கர்த்தருக்கு ஒரு பீடத்தைக்கட்டி தகனபலிகளைச் செலுத்தினான்.

இந்தச் சிறு சரித்திரத்தை ஏன் இப்பொழுது விவரித்தேன் என்று நினைக்கிறீர்கள்? இந்த இடம் பிற்காலத்தில் சர்வலோகத்திலும் மேலானதும் மகா பரிசுத்தமானதுமாகப் போகிறதினாலேதான், அதைப்பற்றி இவ்வளவாய்ப் பேசினேன். தேவதூதன் ஆபிரகாமுக்குத் தரிசனையானதும், ஆபிரகாம் "எகோவா ஈரே" என்று பெயரிட்டதும், அழிக்கிற தூதன் பட்டயத்தை உறையிலேபோட தாவீது கண்டதுமான அவ்விடத்திலேயே பலியிடுகிறதும் பாவவிமோசனமாகிறதும் தேவன் வாசம்பண்ணுகிறதுமான ஆலயம் கட்டப்படப்போகிறது. இராசாக்களின் புத்தகத்திற் சொல்லியிருக்கிறபடி உத்தேசம் 60 ரூபாய் பெறுமான ஐம்பது சேக்கல் நிறைவெள்ளிக்கு அந்தக் களத்தை வாங்கினபிறகு, நாளாகமத்தில் நாம் வாசிக்கிறபிரகாரம் சுமார் 12000 ரூபாய் பெறுமான அறுநூறு சேக்கல் நிறை பொன்கொடுத்து அக் களத்தோடு சேர்ந்த பயிர் நிலத்தையெல்லாம் தாவீது வாங்கிக்கொண்டானென்று தோன்றுகிறது. சாலமோன் கட்டின தேவாலயம் நின்ற இடம் இதுவே.

தாவீது இராசாவைக்குறித்து இன்னம் இரண்டொரு வார்த்தை மாத்திரஞ் சொல்லி முடிக்கிறேன். இந்தச் சரித்திரத்தினால், ஒரு உத்தமன் தன் விருத்தாப்பிய காலத்தில் முதலாய் தேவனுக்கு விரோதமாய்க் கொடிய பாவஞ்செய்யலாகுமென்று பார்க்கிறீர்கள். சோதனைக்கா



ன் ஒருவரையும் சும்மாவிருக்கவிடமாட்டான். நீங்கள் சிறுபிராயமாயிருக்கையில் செம்மையாய் நடக்க தேவகிருபை மிகுதியும் வேண்டியதுபோலவே, நீங்கள் விருத்தாப்பியராகும்போதும் அது வேண்டியதுதான். ஆகையால் கர்த்தாவே நான் சுகமாயிருக்கும்படி என்னைத் தாங்கும் என்று சிறியோரும் பெரியோரும் பிரார்த்திப்பது உத்தமமே.

தாவீது பிரார்த்தித்தான், மனஸ்தாபப்பட்டான், மன்னிப்படைந்தான். உருவின பட்டயம் பிடித்திருந்த தேவதூதனைக் கண்ட இடத்தில் அவன் செலுத்தின பலியானது தேவஇரக்கம் அவனுக்குக் கிடைக்கும் என்பதற்கு அடையாளமாயும் அத்தாட்சியாயுமிருந்தது. நமக்கும் அப்பேர்ப்பட்ட பலியுண்டா? ஆம், எல்லாருக்காகவும் ஒரே விசை செலுத்தப்பட்ட ஒரு பலி உண்டு. இந்தப் பலியை நாம் நினைத்துக்கொண்டு, இரக்கத்துக்காக நாம் மன்றாடும்பொழுதெல்லாம் இயேசுவினிமித்தமே அருள்செய்யும் என்று மன்றாடவேண்டும். நம்முடைய பாவங்களினிமித்தம் இயேசுநாதர் மரித்தாரே. விலையேறப்பெற்ற அவரது திருஇரத்தத்தினால் மாத்திரம் நமக்கு மன்னிப்புக் கிடைக்கவேண்டும்.

இந்தக் காரியங்களெல்லாம் சமபவித்தபிறகு தாவீது தன் அந்திய காலத்தைக் கழித்த வகையையும் சற்று யோசித்துக்கொள்ளுங்கள். அவன் தேவதூதனைக் கண்ட இடத்திலே கட்டப்படப்போகிற ஆலயத்துக்கு வேண்டிய சாமான் தட்டுமுட்டுக்களைச் சவதரிப்பதே அவனுடைய ஒரே ஆசையும் ஒரே முயற்சியுமாயிருந்தது. அவன் அதற்காகச் சேர்த்துவைத்த ஆயிராயிரமான தாலந்து நிறைபொன் வெள்ளி இரும்பு செம்புமுதலிய லோகங்களைப்பற்றி வாசித்திருக்கிறீர்களே. இவற்றின் கிரயம் இவ்வளவென்று யார்தான் சொல்லக்கூடும்? இவ்வளவு ஏராளமான திரவியத்தை அவன் எப்படிச் சேகரித்தானென்று கேட்கிறீர்களோ? யுத்தங்களிலே கிடைத்ததும் சனங்கள் மகா உதாரமாய்க் கொடுத்ததுந்தான். இதெல்லாவற்றையுஞ் சேகரித்தபின், வெகு நேர்த்தியாய்க் கர்த்தரை ஸ்தோத்திரித்துச் செபித்து அவருக்குப் பிரதிஷ்டைசெய்தான். அந்த அருமையான செபத்திலிருந்து இரண்டொரு வாக்கியங்களையெடுத்துச் சொல்லுகிறேன்.

## Christian Church History.

## கிறிஸ்துசபைச் சரித்திரம்.

### 17. அதிகாரம்.

தியோக்கிளீஷன் சிம்மாசனமேறினது,—அற்புதவரம் படிப்படியாய் நின்றுபோனது,—கிறிஸ்தவர்கள் துன்பம் ஆரம்பமானது,—துன்பத்தின் கொடுமை,—கெலேரியு, கொன்ஸ்தாந்தியுஸ் என்பவர்கள் இராயர்களானது,—சபைக்குக் கொஞ்சஞ் சமாதானம் திரும்பியது,—கொன்ஸ்தாந்தியு என்பவன் மரணமடைந்தது,—கொன்ஸ்தாந்தீன் பட்டமடைந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு அநுகூலம்பண்ணினது,—குருமானியங்கள்,—பொதுவான திருச்சபை என்றிவைகளைக் குறித்த விவரங்களடங்கும்.

(தொடர்ச்சி.)

இதினிடையில் லிசினியு என்பவனால் தோல்வியடைந்து துரத்துண்டோடின மக்ஸிமினு என்பவனும் தான் செய்த கொடிய தப்பிதத்தைக்

கடைசியில் கண்டுணர்ந்து, கிறிஸ்தவர்களுக்கு அனுகூலமாய் ஒரு சட்டத்தைப் பிறப்பித்துப் பிரசித்தஞ்செய்தான். இந்தச் சட்டம் இராயர்களிருவருங் கூடி சிறிதுகாலத்துக்குமுன் ஏற்படுத்தியிருந்த சட்டமேயன்றி வேறல்ல. என்றாலும் மக்ஸிமினு இது காரியத்தை மிகவும் தாமதமாய்ச் செய்ததினால், அவனுக்கு அதினால் உண்டான அனுகூலம் ஒன்றுமில்லை. அப்புறம் அவன் தருசுப்பட்டணம்வரையும் ஓடிப்போய், அவ்விடத்தில் நஞ்சுண்டு மடிந்தான். அவனுடைய மந்திரிமார்களும் சிநேகிதர்களும் பட்டயத்துக்கு இரையானார்கள். அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் முதலாய்க் கொலையுண்டு செத்தார்கள்.

இலிசினியு என்பவன் ஆசியாவில் பிரசுரஞ்செய்த சட்டங்களையே கொன்ஸ்தந்தீன் ஐரோப்பாவில் பிரசித்தப்படுத்தினான். கொன்ஸ்தந்தீன் இதற்கு இரண்டொரு வருஷத்துக்குப்பின்பு ஞானஸ்நானம்பெற்றபோதிலும், இதுமுதல் அவனைக் கிறிஸ்தவனென்று சொல்லவேண்டியதுதான். இராசாங்கத்துக்குரிய விஷயங்களிலும் யுத்தமுயற்சிகளிலும் மூழ்கியிருந்த காலத்திலும், கிறிஸ்தவர்களுடைய சபைகாரியங்களில் அவன் மிகவும் கரிசனையுள்ளவனாயும் வைராக்கியமுள்ளவனாயும் விளங்கினான். ஆப்பிரிக்காவின் தேசாதிபதிக்கு அவன் நிருபம் எழுதி, கிறிஸ்தவர்களுக்கு அனுகூலமாய்ப் பிறப்பித்திருக்கிற சட்டங்களை உடனே நிறைவேற்றும்படியாயும், கிறிஸ்துமார்க்க குருக்கள் சவரட்சனைக்காக துரைத்தன பொக்கிஷத்திலிருந்து ஒரு தொகை கொடுக்கும்படியாயும் கற்பித்ததுமல்லாமல், கர்த்தாகோப் பட்டணத்து சிசிலியேனு என்னும் கண்காணியாருக்கும் ஒரு நிருபம் அனுப்பி மேற்படி தொகையை அவன் வாங்கிச் செலவிடும்படியாயும் உத்தரவுபண்ணினான். அதோடுகூட, குருத்தொழில்செய்த எவர்களும் துரைத்தன அலுவல்கள்செய்ய நேரிடாதபடிக்கும் திட்டஞ்செய்தான். ஆகிலும் இராயன் செய்த இந்த விசேஷித்த நன்மைகளால், ஆப்பிரிக்காச் சபையைச் சார்ந்த ஒரு பெரிய காரியத்தில் தான் சம்பந்தப்படப்போகிறதை அப்பொழுது அறியவில்லை.

சிசிலியேனு என்பவனை கர்த்தாகோப் பட்டணத்துக்குக் கண்காணியாராக நியமிக்கப்படாதென்று தோனேத்து என்பவனும் அவனுடைய வகையருக்களும் தடுத்ததாக மேலே விவரித்திருக்கிறதே. குருக்கள்மார் சவரட்சணைக்காக தேசாதிபதியினிடத்தில் பணம் வாங்கிக்கொள்ளும்படி இராயன் உத்தரவு அனுப்பினபொழுது, தோனேத்து வகையருக்களும் தங்கள் குருக்கள்மார்களுக்கும் அந்தப்படியே கிடைக்கவேண்டுமென்று தேசாதிபதியினிடத்திற் கேட்டார்கள். அதோடுகூட சிசிலியேனுக் கண்காணியாருக்கு விரோதமாய்ச் சில பாரிக்குற்றங்களையுஞ் சாட்டினார்கள். தேசாதிபதி இதுகாரியத்தை அக்காலத்தில் கால்தேசத்திலிருந்த கொன்ஸ்தந்தீன் இராயனுக்குத் தெரியப்படுத்தினான். அதன்பேரில் சிசிலியேனு என்பவன் தன் வகையருக்களில் பத்துக் கண்காணிமார்களையும் எதிர்கட்சியில் பத்துப்பெயரையும் கூட்டிக்கொண்டு ரோமாபுரிக்குப் போகும்படியாயும் அங்கே ஒரு சங்கங் கூடி மேற்படி காரியத்தை யோசித்துத் தீர்ப்புச்செய்யும்படியாயும் இராயன் உத்தரவு செய்தான். அதன்றியும் இராயன் தானே ரோமாபுரியில் இப்பொழுது கண்காணியாயிருந்த மெல்கியதே என்பவனுக்கும் கால்தேசத்திலுள்ள மூன்று கண்காணிமார்களுக்கும் இத்தாலியாவிலுள்ள சிலருக்கும் நிருபங்களனுப்பி மேற்படி சங்கத்துக்குப் போகும்படியாகத் திட்டஞ்செய்தான். இந்தச் சங்கத்தார் கூடி ஆலோசித்ததில், சிசிலியேனுக்கு விரோதமாய்ச் சாட்டப்பட்ட குற்றங்களெல்லாம் [illegible] அபத்தமென்றும் ஷியா



லை நிரபராதியென்றும் தீர்த்து, தோனேத்து என்பவனைச் சபைக்குப் புறம்பாக்கவும் தீர்ப்புப்பண்ணினார்கள்.

கொன்ஸ்தந்தீனுடைய இந்த நடபடிக்கைகளால் அவன் சபைக்குரிய காரியங்களில் மிதமிஞ்சித் தலையிட்டதாக அக்காலத்தில் எண்ணப்படவும் முறையிடப்படவுமில்லையென்று விளங்குமே. அவன் குணப்பட்டு ஞானஸ்நானம்பெற்றுக்கொண்டதோடு, சபையின் ஓர் அவயவமானானே. ஆதலால் சபைக்குரிய காரியங்களில் அவன் சிரத்தையாயிருக்கிறது அவனுக்குக் கடமைதானே. மேலும் அவன் இராச்சியத்துக்கெல்லாம் சிரேஷ்ட அதிகாரியானதால், யாதொரு காரியம் தன்னிடத்தில் வரும்போது, அதைச் சமாதானமாய் முடிக்கிறதற்கு வகைபண்ணுகிறதும் அவனுக்குக் கடமையே. லௌகீக விஷயங்களில் கிறிஸ்தவர்களும் அவனுடைய குடிசனங்களில் ஒரு பாகமானபடியால் இராசாவாக அவர்களைக்குறித்து தனக்கிஷ்டமான சட்டங்களை ஏற்படுத்தினான். ஆனால் உபதேசங்களைப் பற்றியோ சபை முறைமைகளைப்பற்றியோ அவர்கள் தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணிக்கொள்ளுகையில், மற்றும் அவனுடைய குடிகளுக்கு அதிற் சம்பந்தமில்லாதபடியால், மேற்படி வாக்குவாதங்களை அவர்கள் தானே தீர்த்துக்கொள்ளும்பொருட்டு தன்னாற்கூடிய திட்டங்களைப்பண்ணி வந்தான். இப்பேர்ப்பட்ட காரியங்கள் நேரிடுஞ் சமயங்களிலெல்லாம், துரைத்தனத்தார் கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுகூலம்பண்ணத் தொடங்குமுன் கிறிஸ்தவர்களுக்குள் நடந்துவந்த வழக்கப்படிக்கே கண்காணிமார்களையும் குருமார்களையும் சங்கமாகக் கூடிவரும்படி செய்தான். முக்கிய விஷயங்களிலெல்லாம் மேற்படி சங்கத்தார்கள் ஏக ஐக்கியமாய் நடந்துகொண்டது ஆதிச்சபைச் சரித்திரத்தில் மிகவும் கவனிக்கத்தக்க விசேஷம்.

சபையின் ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளும்பொருட்டு கொன்ஸ்தந்தீன் மிகவும் கவலையாய்ப் பிரயாசப்படுகிறதை நாம் காணும்போது, அவனுடைய புத்தியைக்குறித்தும் பக்தியைக்குறித்தும் நாம் நல்லெண்ணங்கொள்வதற்கு இடமுண்டாகிறது. மக்சென்றியு என்பவனை அவன் ஜெயித்த கொஞ்சக்காலத்துக்குள்ளே சிசிலியேனு என்பவனுக்கு அவன் எழுதின நிருபத்தில், சபைக்குரிய காரியங்களில் அவன் காண்பிக்கும் சிரத்தையும் கிறிஸ்தவர்களான அந்தந்த வகுப்பாரைக்குறித்து அவன் வெளிப்படுத்தும் நுட்பமான அறிவும் மகா ஆச்சரியமானது. அவன் மார்க்கத்தை அனுசரித்துக் கொஞ்சக்காலமாத்திரமானபோதிலும், பொதுவான திருச்சபையைப்பற்றி அவன் பேசும் விதத்தால் அந்தப் பெயர் அவனுக்கு வெகுகாலம் வழக்கமாயிருந்தாற்போல காண்பிக்கிறான். சபையின் ஐக்கியத்துக்கு இடையூறு நேரிடுங்காலத்தில், எந்த வகுப்பாருடைய கொள்கை சரியானதென்று தீர்மானிக்க அவன் துணியாவிட்டாலும், எப்படியும் ஒரு வகுப்பார் கொள்கைதான் சரியாயிருக்கவேண்டுமென்று யூகித்து, பொதுவான திருச்சபையின் கொள்கையையுடைய பட்சத்தைச் சார்ந்திருப்பதே தனக்குக் கடமையென்று உணர்ந்து நடந்தான்.

உலகமெங்குமுள்ள விசுவாசிகளின் மொத்தக்கூட்டத்துக்குப் பொதுவான திருச்சபை என்ற பெயர் இரண்டாம் நூற்றாண்டின் மத்தியில் வழங்கத்தொடங்கிற்று. ஒருவேளை அதற்கு முன்னமேயே தொடங்கியிருந்தாலுமிருக்கலாம். அந்தந்தத் தேசத்திலுள்ள சபையின் அதிகாரிகள் தங்கள்தங்கள் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் மற்றச் சபைகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களோடு ஐக்கியமாயிருக்கவேண்டுமென்றும், பொதுவான திருச்சபையின் கொள்கைகளுக்கு விபரீதமான கொள்

கையுடையவர்கள் மேற்படி ஐக்கியத்திற் சேரலாகாதென்றும் எவ்வள
வு விழிப்புங் கரிசனையுமுடையவர்களாயிருந்தார்களென்று இதுவரை
யும் விவரித்துக்கொண்டு வந்திருக்கிற சரித்திரத்தினால் நன்றாய்த் துலங்
குமே. முதல் மூன்று நூற்றாண்டுகளிலும், கிறிஸ்தவன் ஒருவன் எந்த
தேசத்திலிருந்து புறப்பட்டு எந்தத் தேசத்துக்குப்போனபோதிலும்,
பாரசீகத்திலுள்ளவன் ஸ்பானியாவுக்குப் போனாலுஞ் சரி, பொந்து
நாட்டிலுள்ளவன் கர்த்தாகோப் பட்டணத்துத் திசைகளுக்குப் போனா
லுஞ் சரி, அங்குள்ள கிறிஸ்தவர்கள் இரட்சிப்புக்கு அவசியமென்று
எண்ணப்பட்ட விஷயங்களெல்லாம் தான் கொண்டிருந்த அபிப்பிரா
யங்களையே கொண்டிருந்ததாகக் கண்டுகொள்வான். அவன் எந்த இட
த்துக்குப் பிரயாணம்போனாலும், அங்குள்ளவர்களுடைய ஐக்கியத்திற்
சேர்ந்துகொள்வேனென்ற நிச்சயமுடையவனாயிருப்பான். ஆகிலும்
விசுவாசக்கொள்கையிலோ சன்மார்க்க ஒழுக்கத்திலோ தான் தவறி
நடந்ததினிமித்தம் தன் சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்களால் சபையின்
ஐக்கியத்தினின்று தள்ளப்பட்டிருப்பானாகில், அவன் எந்த இடத்துக்
குப்போனாலும் அங்குள்ள கிறிஸ்தவர்களும் அவனைத் தங்கள் ஐக்கியத்
திற் சேர்த்துக்கொள்ள மறுக்கிறதைக் கண்டுகொள்வான். இது காரி
யத்தைக்குறித்து ஒவ்வொரு சபையும் மகா விழிப்பும் கரிசனையுமுடை
யதாயிருந்ததினால், தங்கள் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் வே
றொந்த தேசத்துக்காவது போகும்போது, நிருபங்களாவது யோக்கி
யதாபத்திரங்களாவது கொடாதிருக்கமாட்டார்கள். இந்தப் பத்தி
ரங்களின்மூலமாய் அவர்கள் எந்தச் சபையின் ஐக்கியத்திலும் தாராள
மாய்ச் சேர்ந்துகொள்ள அவர்களுக்கு வசதியுண்டாயிருந்தது.

---

## Communicant's Companion.

---

# நற்கருணை விளக்கம்.

## ம். அதிகாரம்.

இந்த பந்தியைச் சேருங் காலத்தில் நமக்கிருக்கவேண்டிய
பக்தி, வணக்கத்தை உண்டுபண்ணும் ஏதுக்கள்.

---

I. பாவத்துக்காகப் படும் துக்கம். இந்தத் துக்கத்தையுண்டாக்கும்
மூன்று காரியங்கள்.

II. கிறிஸ்துநாதரின் வல்லமையிலும், அவருடைய வாக்குத்தத்தங்
களிலும் நம்பிக்கைவைத்தல்.

III. தேவனைப்பற்றிய வாஞ்சை. இதைச்சேர்ந்த மூன்று காரியங்கள்.

IV. மீட்பின் அன்பில் விளங்கிய இரகசியமும், அதிசயமும். இதைப்
பற்றிய ஏழு விஷயங்கள்.

V. இதற்கென்ன ஈடு செலுத்தப்போகிறோம் என்கிற கவலை. இதற்கு
ரிய ஏழு காரியங்கள்.

இந்தப் பந்தியிற் காணப்படும் காக்ஷி நம்முடைய இருதயத்தில் பதி



யவேணும். அதின்பேரில் அது உருகிப் பாயவேணும். மற்ற மற்றப்
பொருட்களைக் கண்டு போகிறதுபோல அப்பத்தையுந் திராட்ச ரசத்
தையும் பார்க்கிறவர்களாயிராமல், அது குறிக்கும் மேலான பொருளைக்
கவனிப்பதால் இருதயம் பொங்கவேணும். இந்தச் சமையத்திலிளகாத
இருதயம் மற்றச் சமையங்களில் இளகுவது அசாத்தியம்.

இப்படி நம்முடைய மனம் பொங்கி, பக்திக்குரியசிந்தையடைவ
தற்கு ஏதுகரத்தையுண்டுபண்ணும் சில குறிப்புகளைக் கவனிக்கக்கட
வோம்.

### I. பாவத்தை நினைத்துத் துக்கப்படுவது ஒன்று.

இத்தப் பந்தியிலே சந்தோஷப்பட்டு களிகூரவேண்டியது நம்மு
டைய கடமையாயிருந்தபோதிலும், நம்முடைய பாவத்தை நினைத்துத்
துக்கப்படுவது இந்தப் பந்திக்கடாத காரியமல்ல. அங்கக் குறைவும்,
அசுத்த திரேகமும் உடையவன் பெரியோருக்குமுன் காணப்படும்
போது அதிகமாய்க் கூசி நாணுவான்.

நம்முடைய ஆண்டவர் நமமாற் சிநேகம்பெறத்தக்கவர். நம்மால்
கனத்தையும் புகழ்ச்சியையும் பெறத்தக்கவர். அதற்குப்பதிலாக அவ
ருக்குக் குறைவும், நிந்தையும் வருவித்துப்போட்டோம். அவர் நம்மை
விருந்துக்கு அழைக்கிறார். அவருக்குமுன் காணப்படும்போது, எப்ப
டிப்பட்ட முகத்தோடு காணப்படுவோம். யோபைப்போல நான் "என்
னை அருவருத்துத் தூசியிலுஞ் சாம்பலிலுமிருந்து, துக்கப்படுகிறேன்"
என்று சொல்லுகிறவர்களாயிருக்கவேணும்.

தேவசமுகத்தைக்கண்ட ஏசாயா "நான் அசுத்த உதடுகளுள்ளவன்"
என்றறிக்கையிட்டான். நாம் எவ்வளவுக்கு உயர்த்தப்பட்டோமோ,
அவ்வளவுக்கு நம்மைத் தாழ்த்தவேணும்.

இந்தப் பந்தியில் கிறிஸ்துவை சிலுவையிலறையப்பட்டவராகக் கா
ண்பதே நமக்குள்ளே துக்கத்தையும வெட்கத்தையும் பிறப்பிக்கவே
ணும். நம்முடைய பாவங்களே அவரைச் சிலுவையிலறைந்த ஆணிகள்.
தாவீது கடிதத்தின்மூலமாய் உரியாவைக் கொன்றதுபோலவும், ஆகாப்
பின் மீனவி நாபோத்தைக் கடிதத்தின்மூலமாய்க் கொன்றதுபோல
வும், நமக்கு விரோதமாய் எழுதப்பட்ட கட்டளையின் கையெழுத்து
நம்முடைய ஆண்டவரைக் கொன்றது. நாம் புளிப்புள்ள திராட்சக்
காயைச் சாப்பிட, அவருடைய பல் கூசினது. நம்முடைய பாவத்துக்
காக அவர் சிலுவையில் வேதனையடைய நாம் யாருக்கு வந்த
விருந்தோவென்று கவலையற்றவர்களாயிருப்பது சரியா? மோக்ஷத்து
மகிமையும், பிதாவின் சந்தோஷத்துக்குரிய பிள்ளையுமாகிய ஆண்டவர்
மனிதனுடைய அக்கிரமத்துக்காக நிந்தையும் வேதனையுமுள்ள மரண
மடைகிறார்.

நம்முடைய பாவங்கள் அவரைச் சிலுவயிலறைந்து கொன்றதுமாத்
திரமல்ல, அவருடைய பரிசுத்த நாமத்துக்கு நிந்தையையுமுண்டாக்
குகிறது. நாம் நாடோறுஞ் செய்யும் பாவங்கள்அவரை நூதனமாய்ச்
சிலுவையிலறைகிறதுபோலிருக்கிறது.

இந்தப் பந்தியில் நமக்களிக்கப்படும் சமாதானமும், பாவ மன்னிப்
பும், நம்மைத் தாழ்த்தி, நமக்குள் துக்கத்தைப் பிறப்பிக்கவேணும்.
"மனந்திரும்புங்கள்; ஏனெனில் தேவனுடைய இராஜ்யம் சமீபமாயி
ருக்கிறது" என்று சுவிசேஷப்பிரமாணம் அதாவது, மனந்திரும்புகிற
வர்களுக்குப் பாவமன்னிப்பு உண்டென்ற வாக்குத்தத்தம், நாம் கொ
டிய பாவிகளாயிருந்து, தேவனுடைய கோபாக்கினைக்குப் பாத்திரரா
யிருக்க, நமக்குப் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் கூறியதி

விப்பது அவருடைய மட்டற்ற கிருபை. இதுவே நம்முடைய இருதயத்
தை இளக்கவேணும்.

என் பாவங்களாகிய ஆணிகளால் இரக்ஷகரைச் சிலுவையிலறை
ந்து நாடோறும் நான் செய்துவரும் பாவத்தால் அவருடைய பரிசுத்த
நாமத்துக்கு நிந்தையை வருவித்தவனுமான கெட்ட குமாரனாகிய
என்னை அவர் கிட்டிவந்து, முத்தமிட்டு, மேன்மையான அங்கி தரிக்க,
நான் எம்மாத்திரமென்று முகங்கவிழ்ந்து அழவேண்டியது நம்முடை
ய காரியம்.

II. நம்முடைய ஜீவ நாயகனும் இரக்ஷிப்பின் அதிபதியுமாகிய அவ
ரின்பேரில் நம்பிக்கைவைக்கவேணும். நாம் பாவத்துக்காகத் துக்கித்
து அழுதாலும், நம்பிக்கையற்றவர்களைப்போல அழாமல், நம்முடை
ய துக்கம் சந்தோஷமாக மாறுமென்ற நம்பிக்கையுண்டாகவேணும்.
ஒரு மாணாக்கன் தன் ஆசான் பேரிலும், பிணியாளி வைத்தியன்பேரி
லும், வழக்காளி வைக்கீலின்பேரிலும், வழிப்போக்கன் வழிகாட்டி
யின்பேரிலும் நம்பிக்கைவைப்பதுபோல நாம் இரக்ஷகரின்பேரில் நம்
பிக்கைவைக்கவேணும். நோவாவும் அவன் குடும்பமும் நம்பிக்கை
யோடு பேழைக்குள் வந்தொதுங்கினதுபோல நம்முடைய இரக்ஷகரா
கிய பேழைக்குள் நாமும் வரக்கடவோம். அவரிடத்தில் வந்தொதுங்
கின பிறகு அவருக்குச் சந்தோஷங்கொண்டாடுவதும் நம்முடைய
கடமை.

ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனும் உரோமர் 8: 31 முதல் முடியுமட்
டும் வாசித்து பவுலப்போஸ்தலனைப்போல வெறிகொண்டார்ப்பரிக்
கக்கடவன்.

III. தேவன் என் வாஞ்சைக்குரிய பொருள். அவருடைய தயவு
என் ஆறுதல் என்ற எண்ணம் நமக்குள் பக்திக்குரிய வாஞ்சையுண்டு
பண்ணும் என்பதற்குச் சந்தேகமில்லை. கிறிஸ்தேசு நம்முடைய நம்
பிக்கைக்குரிய ஆண்டவர். அவர்மூலமாகவே தேவனை அப்பா பிதாவே
என்கிற புத்திரசுவிகார பாத்திபமாய்க் கிருபாசனத்தண்டை சேருகி
றோம்.

தேவன் ஒருவர் உண்டென்பது நமக்குத் திகிலையல்ல, இன்பத்தை
யுண்டுபண்ணவேண்டும். குணப்படாத பாவிக்கு தேவனுடைய இலக்ஷ
ணங்களும், அவரைப்பற்றிய காரியங்களும் திகிலையுண்டுபண்ணும். ஒன்
று தேவனில்லையென்றாவது, அல்லது தங்கள் மனதுக்குரிய தேவனி
ருக்கவேணுமென்றிருப்பதுமே அவர்களுடைய விருப்பம். தேவகிருபை
யைப் பெற்றவர்களுக்கோ, எல்லையில்லாதவரும், நித்தியரும், சுயம்
புவாய்ச் சகல நன்மைக்குங் காரண கர்த்தாவாய் சகலத்துக்கும் மூலப்
பொருளாய், சகல சம்பூரணமுமுடையவராய்க் கிருபாகரக்கடலாய்
விளங்கி நிற்குந் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பது சொல்லமுடியாத
சந்தோஷத்தைக் கொடுக்கவேணும்.

இப்படிப்பட்டவருக்குத் தொண்டுபண்ணுவது அவர்களுக்கு இன்பந்
தான். உபயோகமற்ற ஈனப்பொருளுக்கு வணக்கஞ் செலுத்துவதிலும்,
ஒன்றான மெய்த்தேவனுக்கு ஊழியஞ்செய்வதே புத்தியுள்ள ஆராதனை
யென்று ஒத்துக்கொண்டு இன்புத்தோடு அவரை வணங்குவார்கள்.
அவர்களுடைய சரீரத்தை உருவாக்கினவரும், அவர்களைப் பிழைப்பூட்
டுகிறவரும், அவர்களை இருக்கப் பிழைக்கப்பண்ணுகிறவரும், அவர்
களை நடத்தி ஆண்டுவருகிறவரும், அவரொன்று அவரைப் பூசித்துவரு
வார்கள்.

அவர்களுடைய ஆத்துமத்துக்கும் அவரோதெய்வம். அது சீர்கெட்



டபோது தம்முடைய ஜீவனைக்கொடுத்து மீட்டுக்கொண்டவரும் அவ
ரே. அவர்களுடைய இகபர காரியாகாரியங்களையும் நடத்துகிற காரி
யக்காரரும் அவரேயென்று அவரைக் கும்பிட்டுவருவார்கள்.

தேவன் கிறிஸ்து இயேசுவின் மூலமாய் உன்னோடு உடன்படிக்
கைக்குட்பட்டிருப்பதை நினைத்து அவருக்குட் சந்தோஷப்படவேணும்.
இதினால் நான் உன் இரக்ஷிப்பு, நானே உன்கேடகம், உனக்குவே
ண்டியவைகளெல்லாவற்றையும் சம்பூரணமாய்க் கொடுக்கத்தக்கவர்
நாம் உன்னோடிருக்கிறோம். பயப்படாதே. நீ போகும் இடமெல்லாம்
நாம் உன்னோடு கூடவிருந்து உனக்குவேண்டிய ஒத்தாசையையளிப்
போம் என்கிறார்.

IV. மீட்பின் அன்பில் விளங்கிய அதிசயத்தைக் கவனித்து நம்மு
டைய பக்தி விர்த்தியடையவேணும்.

நாம் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உருவாக்கப்பட்டது மெய்யானால்,
நம்முடைய மீட்பின்காரியம் அதிலும் அதிசமாய்ப் பிரமிப்பைக்கொ
டுக்கத்தக்கது. நாம் ஒரு வார்த்தையால் சிருஷ்டிக்கப்பட்டோம். மீட்
கப்பட்டதோ மிகுந்த கிரயத்தினாலே. ஆகையால் பிரமிப்போடு
நம்முடைய இரக்ஷிப்பைக் கவனிக்கவேணும்.

1. நமக்கு இரக்ஷிப்புண்டான விதமே அதிசயம். இது தூதருடைய
ஞானத்துக்கும் மனிதருடைய புத்திக்குமெட்டாத இரகசியம்.

தேவனுடைய நீதிகுத் திர்ப்திகரமுண்டாகவும், மனிதருடைய நிர்
ப்பந்தம் ஒழியவும், பிரமாணத்தை மீறினவர்களைக்காக்கவும், பிரமா
ணங்கொடுத்தவருக்குக் குறைச்சல் வராமலுமிருக்கத்தக்க உபாயமாய்
இந்த இரக்ஷிப்புண்டாயிற்று. இந்த இரகசியத்தைத் தேவதூதரும் உற்று
ப்பார்க்க விரும்புகிறார்கள்.

2. நித்தியகாலமாயிந்த இரக்ஷிப்பைப்பற்றி தேவன் கருத்துள்ளவரா
யிருந்தும் நடத்திவந்ததும் பிரமிப்பைக் கொடுக்கத்தக்கதுதான்.

3. இதை நடத்தும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர் இன்னாரென்று
கவனிக்கும்போதும் பிரமிக்கத்தக்கதுதான். தேவன் தம்முடைய
சொந்தக்குமாரனென்றும் பாராமல், அவரை நம்மெல்லாருக்காகவுந்
தந்தார்.

4. தேவகுமாரனும் இதற்கிசைந்து வந்ததும் அதிசயம். இதோ
உம்முடைய சித்தத்தை நிறைவேற்றப்போகிறேன் என்றார். சங். 40.

5. அவர் தாழ்மையுள்ளவராயிந்த இரக்ஷண்ணியத்தை உண்டுபண்ண
ஏற்பட்டதும் அதிசயந்தான். அவர் நாமமே அதிசயமானவர். அவர்
உலகத்தில் தோன்றின துவக்கமுதல் முடிவுமட்டும் அவர் காரியத்தைப்
பார்த்தால் தொடர்ச்சியான அதிசயமாகவே இருக்கிறது.

அவருடைய உபதேசங்களும், அற்புதங்களும் அதிசயமானவைகள்.
அதையிட்டே பவுலப்போஸ்தலனும் "நான் என் கர்த்தராகிய இயேசுக்
கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்தேயொழிய வேறொன்றைக்குறித்தும்
மேன்மைபாராட்டாதிருப்பேனாக" என்கிறான்.

6. இரக்ஷகர் உயர்த்தப்பட்ட மேலான நிலைமையும் அதிசயிக்கப்ப
டத்தக்கதுதான். தேவதூதரிலும் சிறியவராக்கப்பட்ட அவர்தானே
அவர்களுக்கு ஆண்டவராகவும் உயர்த்தப்பட்டார். நம்முடைய தன்
மையைத் தரித்தவர் சர்வலோகத்தாருக்கும் நியாயந்தீர்க்கும் நியாயா
திபதியாக உயர்த்தப்பட்டிருக்கிறார். இது கர்த்தருடைய செயல், நம்
முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

7. கிருபை உடன்படிக்கையில் விளங்கிய ஏற்பாடுகளும் அதிசயமா
னவைகள். நம்முடைய நிலைமைக்கும் தேவனுடைய மகிமைக்கும் ஏற்

றது. உடன்படிக்கையிலடங்கிய பொக்கிஷமே அதிசயம் நிறைந்ததும், ஐசுவரியமுள்ளதும் விலை உயர்த்தியுமானது.

V. இந்தப் பந்தியைச்சேரும்போது தேவன் நமக்குக் காட்டிய அன்புக்கு என்ன ஈட்டைச் செலுத்துவோமென்ற கவலை இருக்க வேணும். தேவன் நம்முடையபேரில் பாராட்டிய இப்படிப்பட்ட அதிசய அன்பை நினைத்து அவருக்கேற்றபடி பணிவிடை செய்யவேணும். நாம் செய்யும் எந்த அலுவலிலும் தேவனை நமக்கு முன்பாக நிறுத்திக்கொண்டு அந்த அலுவலை நிறைவேற்றி வரவேணும்.

நாம் நன்றிமறக்கிறவர்களாகாதபடி பார்த்துக்கொள்ளவேணும். நமமுடைய இருதயம் மகா கேடுள்ளதென்று பரீக்ஷையினாலே அறிவோம்.

கர்த்தருடைய பந்தியில் அவரோடுகூட இருந்து சாப்பிட்ட எத்தனை பேர்கள் அவருக்கு விரோதமாய்த் தங்கள் குதிங்காலைத் தூக்கினார்கள் என்பதையும் அறிவோம். ஆகையால் நாம் கர்த்தர் பேரிலேயே நம்பிக்கைவைக்கும்படி நம்முடைய பௌஈனத்தை உணரவேணும்.

மேலும் தேவன் நம்முடையபேரில் வைத்த அன்புக்கீடாக நம்முடைய கடமை இன்னதென்று அறிந்து செய்யப் பிரயாசப்படவேணும்.

நன்றி மறப்பது நன்றன்று என்பது உலகத்தாருடைய உபதேசம். நமக்கு உயிரைக்கொடுத்த தேவனுக்கு நன்றி செலுத்தாதவன் எப்படிப்பட்டவனாயிருக்கவேணும்.' சங். 116.

அன்பை காந்தத்துக்கு ஒப்பிடலாம். பொல்லாதவர்களும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே. நித்திய சிநேகத்தால் நம்மைச் சிநேகித்த தேவனை நாம் சிநேகியாதிருப்பதெப்படி? அவருக்கு நிகரானதுகள் உலகத்தில் ஒன்றுமில்லை. மக்களோ, மனிதரோ, இனமோ, சனமோ, ஒருவரும் நிகரில்லை. "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை."

துதியின் பலியை அவருக்குச் செலுத்தவேணும். துதியின் இருதயம் அன்பு. அன்பிலிருந்து புறப்படும் வார்த்தைகள் துதியே. தீர்வை செலுத்தவேண்டியது யாருக்கோ அவர்களுக்குத் தீர்வை செலுத்தவேணும். நாம் தேவனுக்குச் செலுத்தவேண்டிய தீர்வை துதிதான் "என் ஆத்துமமே கர்த்தரைத் துதி." சங். 103.

நான் கர்த்தருக்கு என்ன ஈட்டைச் செலுத்துவேன். என்னை முற்றிலும், என் சரீரம், ஆத்மம், ஆவி முழுவதையும் மாயமற்ற பலியாகச் செலுத்துவேனென்று சொல்லவேணும்.

---

## Notes on Genesis.

## ஆதியாகம வியாக்கியானம்.

முடிவுரை.

### வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.
(தொடர்ச்சி)

298. கப்பர்நகூம். (ஆறுதலின் நகர்) கெனெசரேத் கடலின் மேல் கரையில் முக்கியமான பட்டணம். மத். 4: 13.



299. கர்கேமிஸ். கேபார் நதி ஐபிராத்து நதியுடன் சேருகிற வகையில் ஒரு தீவுண்டாகிறது. அந்தத் தீவில் கட்டப்பட்ட அரணான பட்டணம். 2 நாளா. 35: 20. இந்த இடத்தில் மட்டும் ஐபிராத்து நதியைக் கடக்கக்கூடியதாயிருந்ததினாலே எகிப்து, அசீரியா இந்த இராச்சியத்தாருக்கு இந்தப் பட்டணம் போர்க்களமாயிருந்தது. ஏசா. 10: 9. எரே. 46: 2. இது பார்வோன் நேகோவினாலும், நேபுகாத்நேச்சாராலும் பிடிக்கப்பட்டது. கிரேக்கர் இதை கர்கேசியோன் என்றும், ரோமர் கர்கேசியம் என்றும், அரபியர் கர்கேசியா என்றும் அழைத்தார்கள்.

300. கர்கோர். யோர்தானுக்கு வெகுதூரத்திற்குக் கிழக்கே பட்டணம். நியா. 8: 10.

301. கர்க்கா. யூதாவின் தென் அந்தத்தில் பட்டணம். யோசு. 15. 3.

302. கர்தா. செபுலோனில் லேவியர், (மெராரியர்) பட்டணம். யோசு. 21: 34.

303. கர்தான். நப்தலியில், லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். கீரியாத்தாயீம் இது என்று நினைக்கப்படும். யோசு. 21: 32.

304. கர்மேல். (செழிப்பான வயல், அல்லது தேவனுடைய திராக்ஷத்தோட்டம்.) (1) ஏக்கர்குடாவின் தென் அந்தமுதல், தென்கிழக்காய் தரையைநோக்கி ஓடுகிற மலைத்தொடர். யோசு. 19: 26. ("பயிர் நிலம்." எரே. 4: 26.)

(2) எபிரோனுக்குத் தெற்கில் யூதாவின் மலைநாட்டுப் பட்டணம். யோசு. 15: 55. இவ்விடத்தில்தான் சவுல் செயஸ்தம்பம் நாட்டினான். 1 சாமு. 15: 12. நாபால், அபிகாயில் இவர்கள் இருந்த இடம். 1 சாமு. 25: 2, 5, 7, 40.

305. கலாத்தியா. சின்ன ஆசியாவில் நாடு. அப். 16: 6.

306. கலிலேயா. (நாடு) (1) நமது கர்த்தர் காலத்தில் யோர்தானுக்கு மேற்கேயிருந்த மூன்று பிரிவுகளில், எஸ்டிரிலான்முதல், வடக்கேயுள்ள நாட்டுக்குப் பேர். மத். 4, 14.

(2) கடல். இது கின்னரோத் என்றும், கெனேசரேத் என்றும், திபேரியா என்றும் அழைக்கப்பட்டது. மத். 4: 18.

307. கல்தேயா (எபிரேயு பாஷையில், கஸ்தீம்) திகிரீஸ், ஐபிராத்து. இந்த நதிகளுக்கிடையிலுள்ள தேசம். எரே. 50: 10.

308. கல்வாரி. "கபாலஸ்தலம்" எருசலேமுக்கு மேல்புறத்தில். யோவா. 19: 17.

309. கல்னே, அல்லது கல்னோ. அசீரியாவில் ஒரு பூர்வபட்டணம். ஐபிராத்தின் கீழ்கரையில், பாபிலோனுக்குத் தென்கிழக்கேயிருக்கிறது. ஆதி. 10: 10. ஏசா. 10: 9. ஆமோ. 2: 6. (கன்னே. எசேக். 27: 23.)

310. காசா, அல்லது ஆசா. பலஸ்தீனாவின் தென்மேல் மூலையில், பெலிஸ்தியரின் ஐந்து பட்டணங்களில் ஒன்று. இவ்விடத்து விக்கிரகக்கோவிலை, சிம்சோன் தன்மேலும் தன் பகைஞர்மேலும் விழத்தட்டினான். இதற்கு 10. மயில் தூரத்தில் ஒரு ஊர் இப்போதும், சிம்சோன் என்றும், அரபிபாஷையில் சிம்சிம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆதி. 10: 19.

311. காசேர். கேசேர் இதுதான். கானானியரின் ஒரு முக்கிய பட்டணம். எப்பிராயீமில் லேவியரைச் சேர்ந்தது. யோசு. 16: 3. 2 சாமு. 5: 25.

312. காதேஸ், (பரிசுத்தம்) அல்லது காதேஸ்பர்னேயா, (தானி

யத்தின் பரிசுத்தம்) பலஸ்தீனுவுக்குத் தெற்கே வனாந்தரத்தில் பட்டணம். ஆதி. 20: 1.

313. காத். (இராணுவக்கூட்டம்) கானனில் ஒரு கோத்திரம். யோசு. 13: 24.

314. காத்சேர்அத்தீகோன். (மத்திலூர்) ஆரன் எல்லையில் பட்டணம். எசேக். 47: 16.

315. காத்தாத். செபுலோனில் பட்டணம். யோசு. 19: 15.

316. காத்ரிம்மோன். (கருங்கல் ஆலை) (1) தாணில் லேவியர் பட்டணம். யோசு. 19: 45.

(2) மேல் மனுசேயில் பட்டணம். யோசு. 21: 25.

317. காபா, அல்லது கீபா. பென்யமீனில் லேவியர் பட்டணம். எருசலேமுக்குச் சமீபத்தில். யோசு. 18: 24.

318. காபூல், (அப்பிரயோசனம்) (1) ஆசேரின் எல்லையில் பட்டணம். யோசு. 19: 27.

(2) ஈராமுக்கு சாலொமோன் கொடுத்த 20 பட்டணங்களையடக்கிய கலிலேயாவிலுள்ள ஒரு நாடு. 1 இராசா 9: 13.

319. காபோன். யூதாவின்பள்ளத்தாக் காட்டில் பட்டணம். யோசு. 15: 40. மக்பேனு இதாயிருக்கலாம்.

320. காமோன். கீலேயாத்தில் பட்டணம். நியா. 10: 5.

321. காம். (அனல்) (1) எகிப்துக்கு செய்யுள்களில் வழங்கியபேர்.

(2) சூசிமால் குடியேற்றப்பட்ட தேசம். இருக்கிற இடம் தெரியாது. ஆதி. 14: 5.

322. காயாஸ். எப்பிராயீமில் மலை. யோசு. 24: 30. ("காகாஸ் நீரோடை". 2 சாமு. 23: 30.)

323. காயின் (உடைமை) யூதா மலைத்தேசத்தில் பட்டணம். யோசு. 15: 57.

324. காரேப், (கலக்கம்) எருசலேமுக்குச் சமீபத்தில் ஒரு குன்று. எரே. 31: 39.

325. காலாகு. அசீரியாவில் நினிவேக்குத் தெற்கே, நிம்ரோத் கட்டின பட்டணம். ஆதி. 10: 11.

326. காலீம். பென்யமீனில் பட்டணம். எருசலேமுக்கு வடக்கே. 1 சாமு. 25: 44.

327. காலேப். அல்லது காலேப்எப்பிராத்தா. (இருதயம்போல) யூதாவிலுள்ள கர்மேல் பட்டணத்தை அடுத்து காலேபுக்குக் கொடுக்கப்பட்ட சரகம். 1 சாமு. 30: 14.

328. கானு. (கூடு) (1) கலிலேயாவில் நாசரேத்துக்கு வடகிழக்கில், நாத்தானுவேலின் ஜநநவூர். யோவா. 2: 1.

(2) ஆசேரில். யோசு. 19: 28.

(3) எப்பிராயீமுக்கும், மனுசேக்கும் இடையில் ஒரு நதி. யோசு. 16: 8.

329. கானுன். (வியாபாரி) யோர்தான் நதிக்கு மேற்கிலுள்ள தேசத்துக்குப் பேர். கானனியர். ஆதி. 10: 6. "வியாபாரி" ஓசி. 12: 7.

330. கிஸ்லோத்தாபோர். தாபோர்மலை அடிவாரத்தில் அரணிப்பான பட்டணம். செபுலோனின் கீழ் எல்லையில். யோசு. 19: 12, 22.

331. கிஷியோன். அல்லது கீஷோன். இசக்காரில் லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். யோசு. 19: 20.

332. கித்காத், (ஆனந்த பருவதம்) இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 32.



333. கித்தா. சமாரியாவில் பட்டணம். ஜஸ்ற்றீன்மார்ட்டர், யூசிபியஸ்முதலிய பூர்வீகசரித்திரக்காரர் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வேதத்தில் இல்லை.

334. கித்தாஏபேர், அல்லது காத்ஏபேர். செபுலோனில் யோனாவின் ஜநநவூர். யோசு. 19: 13.

335. கித்தாயீம். (இரண்டு இரசத்தொட்டிகள்) பென்யமீனர் பட்டணம். 2 சாமு 4: 3. நெகே. 11: 32.

336. கித்தீம். சித்தீம் பார்.

337. கித்ரோன். செபுலோனில் பட்டணம். நியா. 1: 30.

338. கித்லீஷ். யூதாவின் பள்ளத்தாக் காட்டில் பட்டணம். யோசு. 15: 40.

339. கிபல். பினிக்கியாவில் பட்டணம். கிரேக்கர் இதை பிப்லாஸ் என்றும், ரோமர் காபேல் என்றும் அழைப்பார்கள். இப்போது எபேயில் என்னப்படுகிறது. (இதின் குடிகள் கிபலியர் என்னப்படுகிறார்கள். யோசு. 13: 5. 1 இரா. 5: 18.)

340. கிபார். கிபியோன் இதுதான். எஸ்ரு. 2: 20.

341. கிபியா. (மேடு, அதினாலே மேட்டிலிருந்த அநேக பட்டணங்களுக்கும் இப்பேர் வழங்கப்பட்டது.) (1) யூதாவில் கர்மேல்கிட்ட. யோசு. 15: 7.

(2) கீரியாத்யாரீம் கிட்ட பட்டணம். 2 சாமு. 6: 3, 4. கிபேயாத். (கேபா. நெகே. 12: 29.)

(3) பென்யமீனில் சவுலின் ஜநநவூர். நியா. 19: 12—16.

(4) எப்பிராயீமில் ஆரோன் குமாரனாகிய எலெயாசார் அடக்கம்பண்ணப்பட்ட "மேடு". யோசு. 24: 33.

342. கிபியோன் (குன்றுக்குரிய) பென்யமீனில் ஏவியர் பட்டணம், ஆசாரியருக்குக் கொடுக்கப்பட்டது. யோசு. 9: 3.

343. கிபெத்தோன். தாணில், லேவியர் (கோகாத்தியர்) பட்டணம். யோசு. 19: 44.

344. கிப்சாயீம். எப்பிராயீமில் லேவியர், (கோகாத்தியர்) பட்டணம். யோசு. 21: 22.

315. கிப்ரோத்அத்தாவா. (இச்சையின் பிரேதக்குழி) எண். 11: 34.

346. கிம்சோ. கிம்சோ (நாணல்) யூதாவில் பட்டணம். 2 நாளா. 28: 18.

347. கிராரேசேத். ஏசா. 16: 7. கீர் பார்.

348. கிரேக்கு. ஐரோப்பாவின் தென்கீழ்பக்கத்தில் பேர்போன ஒரு தேசம். தானி. 8: 21.

349. கிரேத்தியர். பெலிஸ்தர். 1 சாமு. 30: 14.

350. கிரேத்தை. மெதித்திராணியாக்கடலிலுள்ள, மிகவும் செழிப்பான பெரிய தீவுகளில் ஒன்று. இப்போது கேன்டியா என்றும், அர்க்கியரால் கிரிட் என்றும் அழைக்கப்படுகிறது. அப். 2: 11.

351. கிர்காசியர். யோர்தானுக்கு மேற்கே, கானனியரில் ஒரு வகுப்பார். ஏவியரில் ஒரு பிரிவார். ஆதி. 10: 16.

352. கிலவுதா. கிரேத்தைக்குத் தென்மேற்கே ஒரு சிறு தீவு. காதாஸ் என்றும் அழைக்கப்பட்டது. இப்போது கோஸ்ஸோ என்னப்படுகிறது. அப். 27: 16.

353. கிலொ. யூதாவின் மலை நாட்டில் பட்டணம். யோசு. 15: 51. 2 சாமு. 15: 12.

354. கில்கால். (குவியல்) (1) யோர்தானைக்கடந்தபின், இஸ்ரவே

லர் முதலாவது பாளயமிறங்கின இடம். எரிகோ கிட்ட. உபா. 11: 30. யோசு. 4: 19. (பெத்கில்கால். நெகே. 12: 25.)

(2) சீகேமுக்குச் சமீபத்தில் ஒரு இடம். 2 இரா. 2: 1. 4: 38.

355. கில்போவா. (சுவர் நீரூற்று) எஸ்ரோல் பள்ளத்தாக்கில் மலைத்தொடர். இசக்காரில். 1 சாமு. 28: 4.

356. கில்மாத். அசீரியாவோடு சேர்ந்துவருகிற ஒரு பட்டணம், அல்லது நாடு. எசேக். 27: 23.

357. கினீது. சின்ன ஆசியாவிலுள்ள காரியா நாட்டின் தென்மேல் கடைகோடியில்; கிரியோமுனைகிட்ட பட்டணம். அப். 27: 7.

358. கின்னரோத். (1) கலிலேயாகடல். எண். 34: 11. (கின்னரோத். 1 இரா 15: 20.)

(2) பட்டணம். உபா. 3: 17. யோசு. 19: 35. (கின்னரோத். யோசு. 12: 3.)

359. கீகோன். பரதீசின் ஆறுகளில் இரண்டாவது. ஆதி. 2: 13.

360. கீசோனியன். 1 நாளா. 11: 34.

361. கீசோன். தாபோர் மலையில் உற்பத்தியாகி இப்தொலொமாய்க் குடாவில் விழுகிற ஒரு நதி. நியா. 4: 7, 13. 5: 21. சங். 83: 9. 1 இரா. 18: 40.

362. கீதரோன். (மங்கல்) எருசலேமுக்கும், ஒலிவமலைக்கும் இடையிலுள்ள பள்ளத்தாக்குக்கும், அதின் வழியாய் ஓடி சவக்கடலில் விழுகிற ஒரு சிற்றாற்றுக்கும் பேர். 2 சாமு. 15: 23. (கெதரோன். யோவா. 18: 1.)

363. கீதோம். பென்யமீனில் பட்டணம். நியா. 20: 45.

364. கீதோன். பேரோஸ் ஊசா. 1 நாளா. 13: 9.

365. கீயா. கிபியோனுக்குச் சமீபத்தில் ஒரு இடம். 2 சாமு. 2: 24.

366. கீயு. ஐயோனியன் ஆர்க்கிப் பெலகோவைச் சேர்ந்த செழிப்பும், சனத்திரளுமுள்ள தீவு. அப். 20: 15.

367. கீரியத்தாயீம். (இரண்டு பட்டணங்கள்.) (1) யோர்தானுக்குக் கிழக்கே ரூபனில், பூர்வீகமான பட்டணங்களில் ஒன்று. ஆதி. 14: 5. எரே. 48: 1. பார்.

(2) நப்தலியில் லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். 1 நாளா. 6: 76.

368. கீரியாத்ஊசோத். (தெருக்களின் பட்டணம்) மோவாபில் பட்டணம். எண். 22: 39.

369. கீரியாத்செப்பேர். (புஸ்தக பட்டணம்) தெபீர், யோசு. 15: 15, 16.

370. கீரியாத்பாகால். (பாகாலின் பட்டணம்) கீரியாத்யெயாரீம் இதுதான். யோசு. 15: 60.

371. கீரியாத்யெயாரீம். (வனங்களின் பட்டணம்) கிபியோனின் நாலு பட்டணங்களில் ஒன்றும் (யோசு. 9: 17), யூதாவின் வட எல்லையிலும் (15: 9), பென்யமீனின் தென் எல்லையிலும் (18: 14, 15.) இருந்த பட்டணம். இதில் உடன்படிக்கைப் பெட்டி இருந்தது. 1 சாமு. 6: 20, 21. 7: 2. உரியா தீர்க்கதரிசியின் ஜநந ஊர். எரே. 26: 20.

372. கீரியோத் அல்லது கீரியோத்எஸ்ரோன். (1) யூதாவில் பட்டணம். யோசு. 15: 25.

(2) மோவாபில் பட்டணம். எரே. 48: 24. ஆமோ. 2: 2.

373. கீரோயாத் (பட்டணம்) பென்யமீனில் பட்டணம், கீரியாத்யெயாரீம் இதுதான். யோசு. 18: 28,



374. கீர். (பட்டணம்) (1) சீரியர் பூர்வமாய்க் குடியிருந்த தேசத்துக்கும் (ஆமோ. 9: 7.) தமஸ்குவின் குடிகள் சிறைகளாகக் கொண்டுபோகப்பட்ட இடத்துக்கும் பேர். 2 இரா. 16: 9. ஆமோ. 1: 5.

(2) மோவாபின் எல்லையில் அரணான பட்டணம். மோவாப்கீர் என்றும் அழைக்கப்படும். ஏசா. 15: 1. (கிராரேசேத். ஏசா. 16: 7. கிராரேஸ். எரே. 48: 31.)

375. கீலேயாத். (1) யோர்தானுக்குக் கிழக்கே, பாசானுக்கும், மோவாபுக்கும் இடையிலுள்ள பெரிய மலை நாடு. ஆதி. 31: 21—25. 37: 25.

(2) மலை. கில்போவா மலைக்கு பூர்வப்பேர் என்று நினைக்கப்படுகிறது. நியா. 7: 3.

(3) யாப்போக் நதிக்குத் தெற்கே ஒரு பட்டணம். யாப்போக்கீலேயாத் என்றும் சொல்லப்பட்டது. நியா. 21: 8.

376. கீனா. யூதாவில் தெற்கே பட்டணம். யோசு. 15: 22.

377. குத்கோதா. வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். உபா. 10: 7.

378. கூஸ். (கறுப்பு) அல்லது எத்தியோப்பியா. ஆதி. 10. 6.

379. கூஷான். ஆபிரிக்காவில் ஒரு தேசம். முந்தின கூஸாயிருக்கலாம். ஆப. 3: 7.

380. கூத்தா, அல்லது கூத். பாபிலோனியாவில் ஒரு நாடு. 2 இரா. 17: 24, 30.

381. கூபியர். வட ஆபிரிக்காவிலுள்ள ஒரு சாதியார் என்று நினைக்கப்படும். எசேக். 30: 5.

382. கூர் (உறைவிடம்) மனாசேயின் மேல்பக்கத்தில் ஒரு மலை. 2 இரா. 9: 27.

383. கூர்பாகால் (பாகாலின் இருப்பிடம்) பலஸ்தீனாவுக்கும் அரபிக்கும் இடையிலுள்ள தேசமென்று நினைக்கப்படும். 2 நாளா. 26: 7.

384. கூல். ஆதி. 10: 23.

385. கூன். பெனிக்கேயர் பட்டணம். இப்போது பீரத். 1 நாளா. 18: 8.

386. கெங்கிரேயா. கொரிந்தின் கடல்துறை பட்டணங்களிலொன்று. சாரோனிக் குடாவில். அப். 18: 18.

387. கெசலோன். யூதாவின் வடமேல் எல்லையில் பட்டணம். எருசலேமுக்கு மேற்கே 8 மயில். யோசு 15: 10.

388. கெசீப். யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். ஆதி. 38: 5. அக்சீப் இதாயிருக்கலாம்.

389. கெசீல். தென் யூதாவில் பட்டணம். யோசு. 15: 30.

390. கெசுல்லோத். இசக்காரில் பட்டணம். யோசு. 19: 18.

391. கெஸ்ரியர். கேசேரின் குடிகள். 1 சாமு. 27: 8. கெரிசீம், ஏபால் பார்.

392. கெதேமோத். ரூபனில் லேவியர் (மெராரியர்) பட்டணம். உபா. 2: 26. யோசு. 13: 18.

393. கெதேரோத். யூதாவின் பள்ளத்தாக் காட்டில். யோசு. 15: 41.

394. கெதேர். யூதாவின் மைதானத்தில், கானானியர் பூர்வீக பட்டணம். கெதரா அல்லது பெதகெதேர் இதுதான். யோசு. 12: 12.

395. கெதோர். (1) யூதாவின் மலைத்தேசத்தில் பெத்லகேமுக்கும், எபிரோனுக்கும் நடுவில் பட்டணம் யோசு. 15: 58.

(2) பென்யமீனில் பட்டணம். 1 நாளா. 12: 7.

(3) தென் யூதாவில் பட்டணம். கேரார் இதாயிருக்கலாம். 1 நாளா. 4: 39.

396. கெத்செமனே. (எண்ணெய்த்தொட்டி) எருசலேமுக்கும் கெதரோனுக்கும் கிழக்கே, ஒலிவ மலையின் மேல அடிவாரத்திலிருந்த ஒலிவத் தோட்டம். மத். 26: 36. இப்பொழுதும் இந்தப் பேரையுடைய ஒலிவமரத் தோட்டம் ஒன்று அதிலிருக்கிறது.

397. கெத்லோன். பலஸ்தீனாவின் வடகடைகோடியில் பட்டணம். எசேக். 47: 15. 48: 1.

398. கெபிரா. பிற்காலத்தில் பென்யமீனில் கிபியோனியரின் பட்டணங்களில் ஒன்று. யோசு. 9: 17.

499. கெரிசீம். சமாரியாவில், சீகேம் இருக்கிற பள்ளத்தாக்கில், ஏபாலுக்கெதிரான மலை. உபா. 11: 29. நாடோடிகளான கெரிசியராலே இந்த மலைக்குப் பேர் வந்தது.

400. கெர்கெசேனர். சிலர் இதை கீதரா என்று எண்ணினாலும்; பத்துப் பட்டணங்களிலொன்றாகிய கெர்கேசாவின் குடிகளே. மத். 8: 28.

401. கெல்போன். (கொழுப்பு) அந்தி லீபனோனருகில், தமஸ்குவுக்கு சமீபமான பட்டணம். எசேக். 27: 18.

402. கெனிசியர், கானானிய சாதியார். அவர்களிருப்பிடம் தெரியாது. ஆதி. 15: 19.

403. கெனேசரேத்து. (பிரபுவின் தோட்டம்) மத். 14: 34.

404. கேகிலா. யூதாவில் பட்டணம். எருசலேமுக்குத் தென்மேற்கே ஏறக்குறைய 20 மயில் தூரம். யோசு. 15: 44.

405. கேசீஸ். பென்யமீனில் ஒரு பள்ளத்தாக்கு. யோசு. 18: 21.

406. கேசூர். (எருது.பள்ளத்தாக்கு) (1) எர்மோன், பாசான் இம்மலைகளுக்கூடே சீரியாவின் நாடு. 2 சாமு. 3: 3. .இதின் குடிகள் கெசூரியர் என்னப்பட்டார்கள்:

(2) கெசூரி. பலஸ்தீனாவின் தெற்கில் ஒரு சாதியார். யோசு. 13: 2.

407. கேசேர். யோப்பாவுக்கு கிட்ட பட்டணம். யோசு. 10: 33.

408. கேதார். (கறுப்பு) பலஸ்தீனாவுக்குக் கிழக்கே, அரபியின் வடபாகத்தைக் குடியேற்றின இஸ்மவேல் சாதியார். ஆதி. 25: 13. 1 நாளா. 1: 29. உன். 1: 5.

409. கேதேஷ். (1) யூதாவின் தெற்கில் பட்டணம். 15: 23.

(2) நப்தலியில லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். யோசு. 19: 37. அடைக்கலபட்டணங்களிலொன்று. யோசு. 12: 22.

(3) இசக்காரில் லேவியர் (கெர்சோனியர்) பட்டணம் 1 நாளா. 6: 72.



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. மகா ராணியவர்களின் சேஷ்டபுத்திரராகிய ப்ரின்ஸ் ஆப்வேல்ஸ் என்னும் இளவரசர் இவ்வருஷக் கடைசியில் இந்தியாவுக்கு வந்துவிட்டுப்போவாராம்.

புருஷிய சக்கரவர்த்திக்குத் தேக சௌக்கியம் குன்றியிருப்பதாக பெர்லின் சமஸ்தானத்தினின்று செய்தி வந்தது. விருத்த தசையில் வாரவர அசௌக்கியம் மேலிடுவதினால் மோசகரமாய் முடியுமென்றெண்ண இடமுண்டு. தங்கள் அரசன் அதிகாரம் பாப்பானவரில் அதிகாரத்திலும் பெரிதல்லவென்று சாதித்திருக்கிற ஜர்மானிய அத்தியக்ஷருடைய வருமானத்தை நிறுத்தும்படி புருஷிய பார்லிமெண்டில் தீர்மானம் செய்யப்பட்டது.

அத்லந்திக் சமுத்திரத்தில் சீட்டுப்போட்டுக் கப்பற்காரன் ஒருவனைக் கொன்று பக்ஷித்த பாதகர் கொலைபாதகரென்று, சிங்கப்பூர் ஐகோர்ட்டில் தீர்ப்புக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டார்கள்.

இந்தியா. பரோதா அரசனாகிய கைக்கோவாரின் பேரில் பாரிக்கப்பட்ட குற்றவிசாரணை முடிந்தது. விசாரணைக்கு நியமிக்கப்பட்ட கமிஷன்மார் தங்கள் அபிப்பிராயத்தை மாட்சிமைதங்கிய கவர்னர் ஜெனரலவர்களுக்குத் தெரியப்படுத்தினபின் கவர்னர் ஜெனரலவர்கள் தீர்ப்புப் பிறப்பிப்பார்கள். முடிவு எவ்விதமாயிருக்குமென்பது இப்போது தெரியாது.

தென்னிந்திய இருப்புப் பாதை. திருச்சிராப்பள்ளியிலிருந்து திண்டிக்கல்வரையில் இப்பாதையில் வண்டித்தொடர் போன பெப்ரவரியீ கடைசியிலேயே ஓடத் தொடங்கிற்று. திண்டிக்கல்லிலிருந்து மதுரைவரைக்கும் உள்ள பாதை நாளது மாசத்துக்குள்ளாகவும்; மதுரையிலிருந்து தூற்றுக்குடிக்குப் போகும் பாதை சில மாதங்களுக்குள்ளாகவும் முடிவுபெறுமாம்.

ஏப்பிரல்மீ நாள் 30. பங்குனிமீ 20வ முதல், சித்திரைமீ 19வ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௨0 | அந்த மனிதன் தன் பாவத்தைச் சுமப்பான். எண். 9:13. |
| வெ | 2 | ௨௧ | நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். 10: 10. |
| ச | 3 | ௨௨ | நீயும் எங்களோடேகூட வா, உனக்கு நன்மைசெய்வோம். 29. |
| ஞா | 4 | ௨௩ | கர்த்தர் நல்ல வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார். 29. |
| தி | 5 | ௨௪ | துக்கிக்கிறவர்களை இரட்சித்து உயர்த்துகிறார். யோபு 5:10. |
| செ | 6 | ௨௫ | ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறார். 13. |
| பு | 7 | ௨௬ | திரியாவரக்காரரின் ஆலோசனை கவிழ்க்கப்படும். 13. |
| வி | 8 | ௨௭ | தீமையானது தன் வாயை மூடும். 16. |
| வெ | 9 | ௨௮ | கர்த்தருக்குப் பயப்படுகிற மனிதன் பாக்கியவான். சங். 112: 1. |
| ச | 10 | ௨௯ | செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும். 2. |
| ஞா | 11 | ௩0 | நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். 6. |
| தி | 12 | ௧ | அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும். 7. |
| செ | 13 | ௨ | வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான். 9. |
| பு | 14 | ௩ | அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும். 9. |
| வி | 15 | ௪ | துன்மார்க்கருடைய ஆசை அழியும். 10. |
| வெ | 16 | ௫ | பாவிகளை தீவினை தொடரும். நீதிமொழி 13: 21. |
| ச | 17 | ௬ | நீதிமான்களுக்கு நன்மை பலனாக வரும். 21. |
| ஞா | 18 | ௭ | பாவியின் ஆஸ்தி நீதிமானுக்காகச் சேர்த்துவைக்கப்படும். 22. |
| தி | 19 | ௮ | துன்மார்க்கருடைய வயிறு பசித்திருக்கும். 25. |
| செ | 20 | ௯ | நிதானமாய் நடக்கிறவன் கர்த்தருக்குப் பயப்படுகிறான். 14: 2. |
| பு | 21 | ௧0 | கர்த்தருடைய கை குறுகிப்போகவில்லை. ஏசாயா 59: 1. |
| வி | 22 | ௧௧ | அவருடைய செவி மந்தமாகவுமில்லை. 1. |
| வெ | 23 | ௧௨ | உங்கள் விரல்கள் அக்கிரமத்தால் கறைப்பட்டிருக்கிறது. 3. |
| ச | 24 | ௧௩ | உங்கள் நாவு தியாயக்கேட்டை வசனிக்கிறது. 3. |
| ஞா | 25 | ௧௪ | கர்த்தராகிய ஆண்டவரே, மன்னித்தருளும். ஆமோஸ். 7:2. |
| தி | 26 | ௧௫ | என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். யோவான் 14: 15. |
| செ | 27 | ௧௬ | நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். 16. |
| பு | 28 | ௧௭ | பரிசுத்தவான்களெல்லாரையும் வாழ்த்துங்கள். உரோ. 16: 15. |
| வி | 29 | ௧௮ | நீங்கள் நன்மைக்கு ஞானிகளாயிருக்கவேண்டும். 19. |
| வெ | 30 | ௧௯ | தீமைக்குப் பேதைகளாயிருக்கவேண்டும். 19. |

## விசேஷித்த நாட்கள்.

4. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
6. அமாவாசை. சூரிய கிரகணம்.
11. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
18. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், மூன்றும் ஞாயிறு.
22. பௌரணமி.
25. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், நான்காம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. May. No. 5.

**Contents:**

Bible Sketches and their Teachings. ... ... ... 82
Communicant's Companion. ... ... ... ... ... 85
Christian Church History. ... ... ... ... ... 90
Notes on Genesis. ... ... ... ... ... ... 93
Summary of News. ... ... ... ... ... ... 99

அட்டவணை:

பாலபோதனை. ... ... ... ... ... ... அ௨
நற்கருணை விளக்கம் ... ... ... ... ... அ௫
கிறிஸ்து சபைச் சரித்திரம். ... ... ... ... ௯0
ஆதியாகம வியாக்கியானம். ... ... ... ... ௯௩
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௯௯

Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௫. மேமீ. ௲௮௱௯௰௫.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### ஓர்னானின் களம்.

1 நாளாகமம் 21 அதிகாரம்.

"கர்த்தாவே, மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலுமுள்ளவை களெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, இராச்சியமும் உம்மு டையது, தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்; ஐசு வரியமும் கனமும் உம்மாலே வருகிறது; தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையுமுண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத் தினாலாகும்; இப்போதும் எங்கள் தேவனே, நாங்கள் உமக்கு ஸ்தோ த்திரஞ்செலுத்தி, உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம். இப் படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி எங்களுக்கு உண்டாவத ற்கு நான் எம்மாத்திரம்? என் சனங்கள் எம்மாத்திரம்? எல்லாம் உம் மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம். உமக்குமுன்பாக நாங்கள் எங்களுடைய பிதாக்கள் எல்லாரைப்போ லும் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம். பூமியின்மேல் எங் கள் நாட்கள் ஒரு நிழலைப்போலிருக்கிறது; நிலைத்திருப்போம் என்ற நம்பிக்கையில்லை" ௲௲.

நாம் தேவனுக்குக் காணிக்கைகள் கொண்டுவரும்போதெல்லாம், எப்படிப்பட்ட சிந்தையோடு கொண்டுவரவேண்டுமென்று, மேலே எடுத்துரைத்த வார்த்தைகள் நம்மெல்லாருக்கும் நன்றாய்க் காண்பிக் கின்றன. சிறுவர்களும் கூட தேவனுக்குக் காணிக்கைகள் கொடுக்க வேண்டுமே. சர்வலோகத்தாருக்காகவும் மரித்த இயேசுவினிமித்தம் காணிக்கைப் பெட்டியில் நீங்கள் அரைத்துட்டுமுசலாய்ப் போட்ட போதிலும், தேவன் தாவீது செலுத்தின இலட்சாதிலட்சம் ரூபாய் பெறுமான பெருங் காணிக்கையை அங்கீகரித்துக்கொண்டதுபோல வே இதையும் அங்கீகரித்துக்கொள்ளுவார். நீங்கள் கிறிஸ்துவினிமித் தம் ஒரு ஏழைக்குக் கொஞ்சம் சோறுகொடுத்தாலும், வியாதிப்பட்ட ஓர் குழந்தைக்கு வேறொந்த அற்பப் பதார்த்தத்தை ஈந்தாலும் தேவன் அதை அருமையான காணிக்கையாக ஏற்றுக்கொள்வாரென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் நீங்கள் கொடுக்கக்கூடிய காணிக்கைகளி லெல்லாம் உச்சிதமான காணிக்கை யாதென்றால், உங்கள் இருதயந் தான். உங்களையே கிறிஸ்துநாதருக்கு மனோற்சாகமாயும் சந்தோஷ மாயும் படையுங்கள். இப்பேர்ப்பட்ட பலிகளின்பேரில் தேவன் பிரி



யமாயிருக்கிறார். நீங்கள் எந்தக் காணிக்கையைச் செலுத்தும்பொழு தும், தாவீது சவதரித்த திரவியங்களையெல்லாம் கர்த்தருக்குப் பிரதி ஷ்டைசெய்தவேளையில் அவனுள்ளத்திலிருந்த இரண்டு நினைவுகளையும் நினைத்துக்கொள்ளுங்கள்.

அவைகள் எவையெனில்,

முதலாவது. தேவனே சகலத்துக்கும் உரிமையுடையவர் என்பது. இவ்வுலகம் அவருடையது; நாமும் அவருடையவர்களே. ஆதலால் நாம் அவருடையதையே அவருக்குக் கொடுக்கிறோம்.

இரண்டாவது. நாம் செய்யவேண்டியதைச் செய்யவும், கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவும் கொஞ்சக்காலம் மாத்திரமிருக்கிறது என்பதுதான். "பூமியின்மேல் எங்கள் நாட்கள் ஒரு நிழலைப்போலி ருக்கிறது" என்று தாவீது சொல்லுகிறானே.

ஒரு காலத்தில் மிகவும் தரித்திரனான ஒரு நிகிரோவன் சுவிசேஷ பிரபலியத்துக்காக போதகரிடத்தில் அதிகமான காணிக்கை கொண்டு போய்க் கொடுத்தானாம். அப்பொழுது அவனுடைய ஸ்திதியை அறிந்தி ருந்த அந்தப் போதகர் அவன் அவ்வளவு கொடுக்கத்தக்க தகுதியுள் ளவனல்லவென்று உணர்ந்து, அதில் ஒரு பாகத்தைத் திரும்ப எடுத் துக்கொள்ளும்படியாகச் சொன்னார். அதன்பேரில் அந்த நிகிரோவன், "அப்படியல்ல ஐயா, நான் ஒருவேளை சீக்கிரம் இறந்துபோவேன், தேவனுடைய கிரியை நடந்தேறவேண்டும்" என்று சொன்னான். தா வீது இராசாவினுடைய கருத்தும் இதுதான். கட்டப்படப்போகிற தே வாலயத்தில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேல் வைக்கப்படுமுன்னே, நான் மரித்து கல்லறையில் சேமிக்கப்பட்டிருப்பேனென்று தாவீது அறிந்ததினால், தான் உயிரோடிருக்கும்பொழுது தன்னால் கூடியதைச் செய்யவேண்டுமென்று நினைத்து நடந்தான்.

அவனுடைய நடக்கையை உங்களுக்கு மாதிரியாக வைத்துக்கொள் ளுங்கள். இப்பொழுதே தேவனுக்கு உங்கள் காணிக்கைகளைக் கொண் டுவாருங்கள். இப்பொழுதே உங்களைத்தானே ஜீவனுள்ள பலியாக ஒப் புக்கொடுங்கள். தேவன் இரக்கமாய் உங்கள் பலியை அங்கீகரிப் பாராக.

### தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்தல்.

2 நாளாகமம் 5-ம் அதிகாரம்.

அநேக நூற்றாண்டுகளாக தேவனுடைய உத்தம பக்தர் சர்வலோக த்திலும் அதிகமாய் நேசித்துக் கனப்படுத்திவந்த ஓர் விசேஷித்த இட மிருந்தது. வேறெந்த இடத்தையும்பார்க்க அந்த இடத்திலேயே அவர் கள் எப்பொழுதும் சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாயிருப்பார்கள். அவ்விடத்துக்குப்போக ஏதுவில்லாமல் அதிக தூரத்தில் சஞ்சரிக்க நேரிடுகிற காலத்திலே பிரலாபித்துப் புலம்புகிறவர்களாயிருப்பார்கள். சிம்மாசனங்களில் வீற்றிருக்கும். சிறப்பும் மேன்மையும்பொருந்திய அரசர்கள்முதலாய் தங்கள் மாடமாளிகைகளை விட்டுப்போய்த் தங் கள் ஜீவகாலமெல்லாம் அவ்விடத்திலேயே வாசமாயிருக்க மிகுதியும் விரும்புவார்கள். அந்த இடத்தைப் பரிசுத்தமும் மகிமையுமான வீடு என்றும், "சர்வபூமியின் மகிழ்ச்சி" என்றும் சொல்வார்கள். தேவா லயம் என்ற சிறப்பும் மகத்துவமுமான பெயரையும் அதற்கு வழங்கி

வந்தார்கள். இந்த ஆலயம், நாம் முந்திய அதிகாரத்தில் விவரித்த ஓர்னானின் களத்தில் கட்டப்பட்டிருந்தது. அதைக் கட்டினவன் இன்னானென்று அறிவீர்களே. அந்த இடத்திலே தேவ உத்தரவின்பேரில் பலிசெலுத்தின அந்த விர்த்தாப்பிய அரசனின் குமாரனான சாலமோன்தான் அதைக் கட்டினவன். அது கட்டப்பட்ட விவரத்தை வேதாகமத்தில் வாசித்துக்கொள்ளுங்கள். மிகுந்த அலங்காரமாய் அது கட்டப்பட்டு முடிந்திருக்கிறதாக வைத்துக்கொண்டு, நாம் அதனுள் சற்று பிரவேசித்து, தேவனுக்கு அது பிரதிஷ்டைசெய்யப்பட்ட சமயத்தில் அவ்விடத்தில் காணப்பட்ட காட்சியைப் பார்த்து, அங்கு நடக்கிற ஆராதனையைச் சற்று கவனித்துக் கேட்போமாக.

அந்த பாலிய அரசன் ஆயிராயிரமான தன் பிரஜைகளுக்கு எதிரே நின்றுகொண்டு, தன் கைகளை வானத்துக்கு நேரே உயர்த்தி, தேவன் அந்த வீட்டிலிறங்கி அதையாசீர்வதிக்கும்படியாகப் பிரார்த்தித்த சிறப்பான அந்த நீண்ட பிரார்த்தனையை வாசியுங்கள். அப்புறம் பீடங்களெல்லாம் அடிக்கப்பட்ட எண்ணிறந்த பலிகளால் நிறைந்தவைகளாய் வானத்திலிருந்து அக்கினியிறங்கி அவைகளைப் பட்சிக்கிறதற்குத் தயாராயிருக்கிறதைக் கவனியுங்கள். சாலமோன் தன் பிரார்த்தனையை முடிக்கிறபோது என்ன அதிசய காட்சி காணப்படுகிறதென்று பாருங்கள். திடீரென வானத்திலிருந்து அக்கினி மின்போலிறங்கி, பீடங்களின்மீது வைத்திருந்த பலிகளையெல்லாம் பட்சித்துவிட்டன. பலிகள் தகனமானதின்பேரில் அதினாலுண்டான புகை அபரிமிதமாய் பரிசுத்தஸ்தலத்துக்குமேலே எழும்பிற்று. அப்பால் உச்சத்திற் பிரகாசிக்கிற சூரியப்பிரபையிலும் அதிப்பிரபையான ஓர் ஒளி ஆலயத்தையெல்லாம் நிரப்பிற்று. அவ்வொளியின் மகத்துவத்தினால் ஒருவரும் அதைக் கண்கொண்டு பார்க்கக்கூடாதிருந்தது. ஆசாரியர்களும் நடுக்கம் அடைந்தவர்களாய் திகைத்து நின்றார்கள். கூடிநின்ற ஏராளமான சனங்களெல்லாரும் "அது கர்த்தருடைய மகிமை" என்றுசொல்லி, முழங்காலூன்றி சாஷ்டாங்கமாய் விழுந்து "கர்த்தர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று தணிந்த சப்தமாய் ஏகோபித்துப் பாடுகிறார்கள். மகிமையான அந்த ஒளி தேவன் அங்கே தரிசனமானார் என்பதற்கு அடையாளமாயிருந்தது.

தேவன் எங்கும் இருக்கிறாரே என்கிறீர்களோ? அது உள்ளதுதான். ஆகிலும் ஓரிடத்தைப் பார்க்க இன்னொரு இடத்தில் தேவன் சமீபமாயிருக்கிறாரென்று நாம் உணருகிறதுண்டே. அப்பேர்ப்பட்டவேளைகளில் தேவன்தான் நமக்கு அதிகச் சமீபத்தில் வந்திருக்கிறாரென்பது கருத்தல்ல, நாமே தேவனை அதிகமாய் நினைத்து அவர் நமக்கு அதிகச் சமீபத்திலிருக்கிறதுபோல உணருகிறோமென்று அறியவேண்டும். இயாக்கோபு பிரயாணம் போகையில் காட்டிலே படுத்துக்கொண்டான். அப்பொழுது அவ்விரவிலே தேவன் தன்னைப் பாதுகாத்து ஆசிர்வதிக்கவேண்டுமென்று அவனைப் பிரார்த்தித்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. அப்பால் சொப்பனத்திலே, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டு வானமட்டும் எட்டியிருக்கிறதாகவும், தேவதூதர்கள் அதில் ஏறுகிறவர்களாகவும் இறங்குகிறவர்களாகவும் கண்டதுமன்றி தேவன் அதற்குமேலாக நின்று பேசின சப்தத்தையுங் கேட்டான். யாக்கோபு நித்திரைதெளிந்து விழித்தவுடனே "மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்திலிருக்கிறார்" என்றுசொல்லி அந்த இடத்துக்கு தேவனுடைய வீடு என்று அர்த்தங்கொள்ளும் "பெத்தேல்" என்று பெயரிட்டான். அது முதல் வெகுகாலமாய் தேவன் அந்த இடத்திலிருக்கிறாரென்று கொண்



டாடிவந்தார்கள். மோசேயும் வனாந்தரத்தில் ஆடுமேய்த்துக்கொண்டிருக்கையில் அக்கினிபற்றியெரிந்ததாகத் தோன்றின முட்செடியிலே ஒரு அற்புதகாட்சியைக் கண்டான். அதைப் பார்க்கும்பொருட்டு கிட்டிவந்தபொழுது, முட்செடியிலிருந்து ஒரு சப்தமுண்டாகி "உன் கால்களிலிருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு. நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி" என்று சொல்லக்கேட்டான். ஆதலால் இதுவும் ஒரு பெத்தேல்தானே. தேவன் அவ்விடத்திலுமிருந்தாரே. மோசேக்கு தாம் எவ்வளவு சமீபமாயிருக்கிறோமென்று உணர்த்தும்பொருட்டு தேவன் அங்கே காட்சியானார்.

ஆகிலும் எல்லாவற்றிலுஞ் சிறந்த மகா பெத்தேல் எருசலேமிலிருந்த தேவாலயந்தான். அந்த ஆலயத்தில் தேவன் எக்காலமும் தமது பிரசன்னத்தை விளங்கச்செய்து, சனங்களை ஆசீர்வதிக்கிறதற்கு தாம் எவ்வளவு சமீபமாயிருக்கிறோமென்று காண்பித்தார். "என் கண்களும் என் இருதயமும் எந்நாளும் இங்கே இருக்கும்" என்று தேவன் தாமே விளம்பினார். ஆம், உலகத்தில் வேறெந்த இடத்தைப்பார்க்க அவ்விடத்திலே பரிஷ்காரமாயிருக்கும் என்பது பொருள்.

தேவனை நேசித்த சகலரும் தேவாலயத்தை அவ்வளவு அருமை பெருமையாய்க் கொண்டாடினதற்கும், அவர்கள் தேவனுக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்த காலத்திலும் அந்த இடத்தை நோக்கவும் அதை நினைத்துப் பிரார்த்திக்கவும் அவர்களை ஏவுவதற்கும் இதுவே காரணம். யோனாவைக்குறித்து நீங்கள் எப்பொழுதாவது வாசித்ததுண்டா? தெரிந்தவர்கள் அவனுடைய சரித்திரத்தையெடுத்துப்பாருங்கள். அவன் காண்பித்த கீழ்ப்படியாமைநிமித்தம் கர்த்தர் அவனைச் சமுத்திரத்தின் ஆழத்திலே அமிழ்த்தினார். சமுத்திரத்தின் அடியில் அவன் சேர்ந்தபோது பயங்கரமான ஒரு கெபிக்குள் அடைபட்டதுபோல நினைத்தான். ஆம், ஒரு பெரிய மீன் அவனையெடுத்து விழுங்கிவிட்டது. அந்த மீன் வயிற்றிலே இருக்கும்பொழுது, யோனா என்பவன் எருசலேம் நகரத்தையும் அங்கே சாலமோன் கட்டியிருந்த தேவாலயத்தையும் நினைத்தான். "இன்னும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன்", "என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்துசேர்ந்தது" (யோனா 2: 4, 7.) என்று சொல்லுகிறான்.

---

## Communicant's Companion.

## நற்கருணை விளக்கம்.

### ௧. அதிகாரம்.

இந்தப் பந்தியில் நாம் பண்ணும் கனபத்தியான பொருத்தனைகளைப்பற்றிக் குறிப்புகள்.

I. நாம் கர்த்தருடைய பந்தியைச் சேரும்போது சகல பாவத்துக்கும் என்னை அப்புறப்படுத்திக்கொள்வேன் என்பதாய் நாம் ஒவ்வொருவரும் பிரதிக்கினைபண்ணவேண்டும்.

II. நான் நிறைவேற்றவேண்டிய கடமைகள் யாவையுங் குறைவின்றி நிறைவேற்றுவேன் என்பதையும் பிரதிக்கினைபண்ணவேண்டும். பக்திக்குரிய பொருத்தனைகள் யாவும் ஆத்துமாவைக் கட்டும் ஒரு கயறுபோலிருக்கிறது. எண். 30: 2. நான் தேவனைச் சேவித்து, அவருடைய கட்டளைகள் யாவுக்குங் கீழடங்கி நடப்பேன் என்று வாக்குக்கொடுக்கிறோம். அவருடைய கட்டளைகள் பாரமானவைகளுமல்ல. மத். 11 : 29.

கர்த்தருடைய பந்தியில் நம்முடைய பாவங்களையிட்டு பக்ஷாதாபப்படுகிறதோடு கூட. இனிமேற்பட இப்படிப்பட்ட பாவத்துக்கு இடங்கொடேன் என்ற பொருத்தனையும்பண்ணுவது நம்முடைய கடமை. பாவத்துக்காகத் துக்கப்பட்டும், இனிமேற்படப் பாவஞ்செய்யேனென்று தீர்மானம்பண்ணாதேபோனால் நாம் தேவனைப் பரியாசம்பண்ணுகிறவர்கள்போலிருப்போம்.

நமக்கு வேண்டியவைகளைக் கேட்டு வாங்கிக்கொள்ளும் சமயம் கர்த்தருடைய பந்தியைச் சேரும்போதுதான். அப்போதுதான் பொருத்தனையும்பண்ணவேண்டும். யாக்கோபு தேவசமுகத்தைத் தேடிக் கண்டடைந்தபோது அதற்கு ஞாபகமாக ஒரு கல்லை நாட்டி பொருத்தனைபண்ணினான். அன்னாளும் அப்படியேதான் கேட்டடைந்த செல்வப் புதல்வனைத் தெய்வத்துக்கு ஒப்புக்கொடுப்பேனென்று பொருத்தனைபண்ணினான்.

தேவன் நமக்குப் பண்ணின வாக்கை மாறாத பிரமாணத்தால் உறுதிப்படுத்தினார். அப்படிப்போல நாமும் அவரைச் சேவிப்போம் என்ற வாக்கைப் பிரமாணத்தால் உறுதிபண்ணவேண்டும்.

I. நாம் பாவத்தை வெறுக்கிறது மாத்திரமல்ல, பாவத்தோடு எதிர்த்து நின்று போராடுவோம் என்று பொருத்தனைபண்ணவேண்டும்.

எஸ்றாவின் காலத்தில் அன்னிய ஸ்திரீகளை விலக்கிவிடுவோமென்று ஜனங்கள் பொருத்தனைபண்ணினபோதிலும், அது ஒரே நாளில் லேசில் முடிந்த வேலையல்ல. ஒவ்வொருத்தரும் வெகு வருத்தத்தோடு படிப்படியாய்த் தன்தன் மனைவியைவிட்டுப் பிரிந்தான். அப்படியே நம்முடைய பாவங்களை விட்டுவிடுவோமென்று நாம் ஒவ்வொருவரும் பிரதிக்கினைபண்ணியிருக்கிறோம். கர்த்தருடைய பந்தியைச் சேரும்போதெல்லாம் அதிக ஊக்கத்தோடும், நிர்ணயத்தோடும் அப்படிச்செய்வது உத்தமம். பாவம் நமக்குள்ளே வாசம்பண்ணினபோதிலும் அது நம்மை ஆளுகைசெய்யாதபடி பார்க்கவேணும். கானானியர் முற்றிலும் அற்றுப்போகாமல் இஸ்ரவேலரோடு வாசம்பண்ணினார்கள். ஆனால் அவர்களை ஆளவில்லை.

பொய், புரட்டு, கள், காமமுதலிய கொடிய பாவங்களுக்கு இடங்கொடேனென்று பொருத்தனைபண்ணவேண்டும். பாகாலையும் அதின் பூசாசாரிகளையும், என் இருதயத்தினின்று முற்றிலும் அப்புறப்படுத்துவேனென்று பிரதிக்கினைபண்ணவேண்டும். "கர்த்தரே தெய்வம்" என்று தீர்மானம் பூரணமாய் நம்முடைய மனதை யாட்கொள்ளவேண்டும்.

நம்மில் ஒவ்வொருவரையும், தனித்தனியே அவரவருடைய குணத்துக்கும், நிலைமைக்குந்தக்கதாய் சுற்றிநிற்கும் பாவம் ஏதேதுண்டோ அந்தக் கண்டுபிடித்து அதை அப்புறப்படுத்தும்படி நிர்ணயம்பண்ணிக்கொள்ளவேணும். அது உன் வலது கண்ணாயிருந்தாலும், அதைப் பிடுங்கி எறிந்துபோடு. அது உன் வலதுகையாயிருந்தாலும் அதைத் தறித்தெறிந்துபோடு. நாகமானைப்போல ரிம்மோன் வீட்டுக்குப் பணிவிடைசெய்ய உத்தரவுகேளாதே.

பொல்லாங்காய்த் தோன்றுகிறதையும் விட்டுவிலகவேண்டும். சங்கீ



தக்காரனைப்போல "துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உளுக்காரும் இடத்தில் உளுக்காராமலும்" இருப்பேனென்று பிரதிக்கினைபண்ணவேண்டும்.

II. என் கடமைகளெல்லாவற்றையும் நிறைவேற்றுவேனென்று பொருத்தனைபண்ணிக்கொள்ளவேண்டும்.

பொல்லாங்கினின்று விலகுகிறதுமாத்திரம் போதாது. நன்மைசெய்யப் பழகவும்வேண்டும்: சாத்தானுக்கு ஊழியஞ்செய்வதைவிட்டு விலகுவதோடுகூட தேவபணிவிடைக்கென்று நம்மை ஒப்புவிக்கவும்வேண்டும்.

1. பக்திக்குரிய சாதாரண கடமைகளை நிறைவேற்றுவேனென்று பொருத்தனைபண்ணவேண்டும். யாக்கோபைப்போல நாமும் "கர்த்தர் என் தேவனாயிருப்பார்" என்று பொருத்தனைபண்ணிக்கொள்ளவேண்டும். அவரை நம்முடையவராக்கிக்கொண்டதின்பிறகு, அவருக்குப் பயந்து, அவரில் அன்புகூர்ந்து, அவரைச் சேவித்து, அவரை மகிமைப்படுத்தவேண்டும். தாவீதைப்போல நாமும் "தேவனுடைய நியாயங்களைக் காத்துநடப்பேன்" என்று பொருத்தனைபண்ணிக்கொள்ளவேண்டும் அதுகளை நம்முடைய பாதையாக வைத்துக்கொண்டு அதில் நடக்கவேணும். அதை நம்முடைய சட்டமாக வைத்துக்கொண்டு அதின்படி நடக்கவும், அதை நம்முடைய கண்ணின் கறுப்பு விழிபோல் காத்துக்கொள்ளவும், நம்முடைய ஜீவகாலமெல்லாம் அதின்படி நடக்கவும் பொருத்தனைபண்ணிக்கொள்ளவேண்டும்.

தேவகிருபையினாலே

1. பக்திவிர்த்தியடைவது நம்முடைய முக்கிய வேலையாக்கிக்கொள்ள தீர்மானம்பண்ணிக்கொள்ளவேண்டும். நம்முடைய ஜீவியகாலமெல்லாம் பக்திவிர்த்தியை நம்முடைய முக்கிய வேலையாக்கிக்கொள்ளவேணும். மற்றக் காரியாதிகளெல்லாம இதற்குப் பிந்தினது. அப்படிக்கில்லாதிருந்தால், நம்மை உண்டுபண்ணி காப்பாற்றி, இகத்துக்கும் பரத்துக்குமுரிய சகலத்தையும் நமக்குச் செய்துமுடிக்கிறவராகிய தெய்வம், சிறியவராகவும், உலகப்பொருள் பெரியவைகளுமாய் எண்ணப்படும். இப்படியானால் விக்கிரகத்தொழும்பருக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்.

2. நம்முடைய மனச்சாக்ஷிக்கிசைந்து நடக்கத் தீர்மானம்பண்ணிக்கொள்ளவேண்டும். நம்முடைய பக்தி உள்ளான பக்தியாயிருக்கப் பார்க்கவேணும். ஆவியோடும், உண்மையோடும் சேவிக்கும்படி தீர்மானம்பண்ணிக்கொள்ளவேண்டும். மகனே உன் இருதயத்தைத் தாவென்று ஆண்டவர் கேட்கிறார். உள்ளாக யூதனானவனே யூதன். பேர்க்கிறிஸ்தவனல்ல உள்ளான கிறிஸ்வனே கிறிஸ்தவன். "இராஜகுமாரத்தி உள்ளாகப் பூரண மகிமையுள்ளவள்." இருதயத்தை ஆளுகிற சாக்ஷாத் தெய்வத்துக்கு முன்பாக நம்முடைய இர்தயம் நேராயிருந்தால் போதும்.

3. தேவனோடு ஐக்கியமாயிருக்கும்படி பொருத்தனைபண்ணிக்கொள்ளவேண்டும். நாம் நடப்பிக்குங் காரியங்களில் எல்லாம் தேவனை நம்முடைய கண்ணுக்குமுன்பாக நிறுத்திக்கொண்டு, நம்முடைய காரியங்களை அவருக்கொப்புவித்து, அவர் சித்தத்துக்கொத்தபடி நடப்பித்து வந்தால் நாம் அவரோடு ஐக்கியமாயிருக்கிறோம் என்று சொல்லலாம். இபபடி நாம் செய்யப் பழகிக்கொண்டோமேயாகில் இந்த உலகமே நமக்கு மோக்ஷமாம். ஒரு பெரியோருக்கு முன்பாகயிருக்கிறவர்கள் தங்கள் பேச்சு நடக்கைகளிலெல்லாம் யோக்கியமாய் நடந்துகொள்வார்கள். அதுபோல நம்மை எப்போதும் தேவனுக்குமுன்பாக இருக்

கிறவர்களாக எண்ணிக்கொண்டு, நம்முடைய மனம், வாக்கு, காயங்களிலெல்லாம் அவருக்கேற்க் நடந்துகொள்ளப் பார்த்தால் அவரோடு ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லலாம்.

4. மோக்ஷத்தை எப்போதும் நமக்குமுன் நிறுத்திக்கொள்ளும்படி தீர்மானம்பண்ணிக்கொள்ளவேணும். நாம் இன்னொரு உலகத்துக்கென்று சிருஷ்டிக்கப்பட்டவர்கள். நம்முடைய இருப்பிடம் பரமண்டலம். அங்கிருந்து கர்த்தராகிய இயேசு வரக் காத்திருக்கிறோம். "பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளை" சிந்தித்துக்கொள்ளக்கடவோம்.

பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றுந் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்துஇயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ, அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடருகிறேன், ஒன்று செய்கிறேன். பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி கிறிஸ்தேசுவுக்குள் தேவன் அழைத்த பரமஅழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று நாமுஞ் சொல்லவேணும்.

இதுவரையும் பக்திவிர்த்திக்குரிய சாதாரணக் குறிப்புகளைக்குறித்துப் பேசிக்கொண்டோம்.

இப்போது அதுக்குரிய முக்கிய குறிப்புகளைக்குறித்துப் பேசுவோம்.

1. பக்தியும் பரிசுத்தமும் நம்முடைய உள்ளத்தில் வர்த்தனையாகத் தக்க ஏதுக்கள் ஏதேதுண்டோ அதுகளைக் கையாடும்படி பொருத்தனை பண்ணிக்கொள்ளவேண்டும். அநுபவஸ்தன்மாத்திரம் இன்னின்ன விஷயத்தில் இன்னின்னபடி செய்தால் நம்முடைய ஆத்மா தேற்சியடையுமென்று சொல்லக்கூடும். தனி ஜெபத்தில் நம்முடைய மனம் பிரியப்படுகிறதா? நாந் தனி ஜெபத்திலிருக்கும்போது தேவன் நம்மைச் சந்தித்து நம்முடைய ஆத்துமத்தைச் செழிக்கப்பண்ணியிருக்கிறாரா? அப்படியானால் நாம் அதிகமதிகமாய்த் தனிச்செபத்திற் பிரியப்பட்டு அதில் பழகப் பிரயாசப்படக்கடவோம். கிர்பையின் எத்தனங்கள் நமக்குச் சம்பிரமமான விருந்தைப்போலிருக்கிறதா? நாம் அந்தப்பந்தியில் விருப்பத்தோடிருந்து சந்தோஷப்பட்டதுண்டா? அப்படியானால் அந்த நன்மையை மேன்மேலும் அடையும்படி பார்க்கவேணும்.

2. தேவநாமத்துக்கு மகிமை வருவிக்கத்தக்க சமயங்கள் நேரிடும்போதெல்லாம் அப்படிப்பட்ட சமயங்களை இழந்துபோகாதபடி பொருத்தனைபண்ணிக்கொள்ளவேணும். நாம் நமக்காக உண்டாக்கப்பட்டவர்களுமல்ல; நமக்காகக் கொள்ளப்பட்டவர்களுமல்ல. தேவனுக்கென்று பிறந்தோம், தேவனுக்கென்று கொள்ளப்பட்டோம். ஆகையால் தேவநாமத்தை மகிமைப்படுத்துவதிலும் பிறருக்கு நன்மைசெய்வதிலும் நம்முடைய காலத்தைப் பின்னிடவேண்டும். கிறிஸ்துவின் இராஜியம் எப்படிப் பிரபலப்படலாம், பிறருடைய ஆத்மா எப்படி ஈடேறுமென்று கவலைப்படவேணும்.

3. நாம் அவரவருடைய ஸ்தானத்திலிருந்துகொண்டு எப்படி நம்முடைய கடமையை நிறைவேற்றலாமென்று கவலைகொள்ளவேண்டும். உலக உத்தியோகத்திலிருக்கிறவர்களும் தங்கள் ஊழியத்தைத் தேவனுக்குப் பயந்து நிறைவேற்றப் பார்ப்பதோடுகூட பிறருடைய பொது நன்மையை விரும்புகிறவர்களாயுமிருக்கவேண்டும். நியாயாதிபதிகள் தங்களுக்கு மேலாக நியாயாதிபதி ஒருவரிருக்கிறாரென்றறிந்து ஏழைகளுக்கும் ஒடுக்கப்படுகிறவர்களுக்கும் நியாயஞ்செய்வேன் என்று பொருத்தனைபண்ணிக்கொள்ளவேண்டும். தேவஇரகசியங்களுக்கு உக்கிராணக்காரராயிருக்கிறவர்கள் இந்தப் பரிசுத்த நற்கருணையை மற்றவர்களுக்குப் பரிமாறும்போது தங்களுக்குள்ளேயிருக்கும் தேவரீலைவ ஏற்றபடி முயற்சிப்போம் என்ற தீர்மானத்தோடு இந்தப் பரிசுத்த பண்டங்களைத் தாங்களே ஏற்றுக்கொள்ளவேணும்.



ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்.

குடும்பங்களுக்குத் தலையாயிருக்கிறவர்கள் தங்கள் குடும்பத்திலுள்ள சிறியோர், பெரியோர் யாவரையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் நடத்துவேன் என்று பிரதிக்கினைபண்ணிக்கொள்ளவேண்டும். யோசுவாவைப்போல "நானும் என் வீட்டாருமோ கர்த்தரைச் சேவிப்போம்" என்று தீர்மானம்பண்ணிக்கொள்ளவேண்டும். நம்முடைய உத்தியோகம் ஏதேதோ அதில் மற்றவர்களுக்கு நீதியும் உண்மையுமானதையே செய்வேன் என்றும், நமக்கு என்னென்ன சோதனை நேரிடுமோ அதில் நம்முடைய மனச்சாக்ஷி ஏவுகிறபடியே செய்வேன் என்றும் தீர்மானம்பண்ணிக்கொள்ளவேண்டும். அவரவர்களுக்குச் செய்யவேண்டிய கடமை வழுவின்றி நிறைவேற்றவும் உண்மையைப் பேசவும், நீதியைச்செய்யவும், கொடுமைக்கும் வஞ்சகத்துக்கும், நம்முடைய கையை விலக்கவும் தீர்மானம்பண்ணிக்கொள்ளவேண்டும்.

ஆதிக்கிறிஸ்தவர்களைப்பற்றி பிளினியென்ற உரோம துரை திராயான் இராயனுக்கு எழுதின நிருபத்தில் அடங்கிய வார்த்தைகள் இக்காலத்துக் கிறிஸ்தவர்களைப்பற்றியும் சொல்லப்பட்டால் எத்தனை நன்று. கிறிஸ்தவர்கள் யாதொரு தீமைக்கிடங்கொடாமலும், திருடாமலும், விபசாரம்பண்ணாமலும், தங்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்பட்ட பொருளை அபகரிக்கப் பார்க்காமலும் இருக்கவேணுமென்று ஏற்பாடுசெய்துகொள்ளுகிறார்கள்" என்று எழுதினான்.

கர்த்தருடைய பந்தியைச் சேருகிறவர்களும் இப்பேர்ப்பட்ட ஏற்பாடுசெய்துகொள்ளவேணும் என்பதே நற்கருணையை ஏற்படுத்தினவருடைய நோக்கம். இப்படி நாம் பண்ணிக்கொள்ளும் பொருத்தனைகளை நிறைவேற்றவேண்டிய பெலன் நமக்கில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய கிருபையைக்கொண்டு இதற்கு வேண்டிய பெலனை அனுக்கிரகிக்கவேண்டுமென்று இடைவிடாமல் பிரார்த்தித்துக்கொண்டிருக்கவேண்டியது நம்முடைய கடமை. பேதுரு தன் சொந்தப் பெலனை நம்பி விழுந்தான். நம்முடைய பெலன் நம்முடைய கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிலுள்ளது. "என்னையன்றி உங்களால் ஒன்றுஞ் செய்யக்கூடாது." என்று அவர் தானே திட்டமாய்த் திருவுளம்பற்றியிருக்கிறார்.

---

Christian Church History.

# கிறிஸ்துசபைச் சரித்திரம்.

## 17. அதிகாரம்.

*தியோக்கிளீஷன் சிம்மாசனமேறினது,—அற்புதவரம் படிப் படியாய் நின்றுபோனது,—கிறிஸ்தவர்கள் துன்பம் ஆரம்ப மானது,—துன்பத்தின் கொடுமை,—கெலேரியு, கொன்ஸ் ற்றேன்றியுஸ் என்பவர்கள் இராயர்களானது,—சபைக்குக் கொஞ்சஞ் சமாதானம் திரும்பியது,—கொன்ஸ்ற்றேன்றியு என்பவன் மரணமடைந்தது,—கொன்ஸ்தந்தீன் பட்டமடை ந்து கிறிஸ்துமார்க்கத்துக்கு அனுகூலம்பண்ணினது,—குரு மானியங்கள்,—பொதுவான திருச்சபை என்றிவைகளைக் குறித்த விவரங்களடங்கும்.*

(தொடர்ச்சி.)

திருச்சபையிலே முதலாவது எழும்பின வாக்குவாதம் உயிர்த்தெழுந்த திருநாளின் ஆசரிப்பைக்குறித்ததுதான். இதுகாரியத்தில் விபரீதமான அபிப்பிராயங்கள் கொண்டிருந்த சபைகள் ஒன்றோடொன்று ஐக்கியமுள்ளவைகளாகவே இருந்தன. ரோமாபுரிக் கண்காணியார் இந்தப் பேதத்தினிமித்தமாய் மற்றவர்கள் தமது சபையின் ஐக்கியத்திற் சேரப்படாதென்று மறுத்தபொழுது, அதினிமித்தம் அவர்பேரில் குற்றம்பாரித்துக் கண்டித்தார்கள். இரட்சிப்புக்கு அவசியமான மூல உபதேசங்களொன்றில் வித்தியாசமான கொள்கையை ஒருவன் அனுசரித்தால்தான் அவனைச் சபையின் ஐக்கியத்துக்கு விலக்கவேண்டுமென்பது பொதுவான சித்தாந்தம். மொந்தேனிய வகுப்பார் உபதேசங்களைக்குறித்து விபரீதக் கொள்கைகொண்டவர்களல்ல. மேற்படி வகுப்பைச்சேர்ந்த ஒவ்வொருவனும் அந்தந்தச் சபையின் ஐக்கியத்துக்கு நீக்கப்பட்டிருந்தானென்று சொல்ல அத்தாட்சியுமில்லை. சின்ன ஆசியாவிற்போல் அவர்கள் ஏராளமாயிருந்த சபைகளில் அவர்களைப் புறம்பாக்குவது கூடாதகாரியந்தானே. அவர்கள் தொகை சுருக்கமாயிருந்த சபைகளிலோ அவர்களை நீக்குவது தகுதியென்று ஓரோர்வேளை நினைத்ததுண்டு. இரண்டாம் நூற்றாண்டின் கடைசியிலே மொந்தேனியரைப் புறம்பாக்கவேண்டுமென்று சபையார் யாதொரு தீர்ப்புச்செய்ததினாலேயல்ல, அவர்கள் தாங்களே சபையைவிட்டு பிரிந்துகொண்டதினாலேயே பிரிவினையுண்டாயிற்று. இவ்வாறு நடந்தது மூன்றும் நூற்றாண்டின் துவக்கத்தில்தானென்று தோன்றுகிறது. மேற்படி வகுப்பு சீக்கிரத்தில் குறுகிப்போய்விட்டது. அப்பொழுதோ சபைக் கண்காணிமார்கள் அந்தக் கொள்கையை நிலைநிறுத்தப்பார்த்தவர்களைத் தப்பிதக்காரராக நடத்தத் தலைப்பட்டார்கள்.

விசுவாசத்துக்குரிய உபதேசத்தைக்குறித்து விபரீதந் தோன்றின பொழுது, சந்தேகத்துக்கோ, மயக்கத்துக்கோ இடமிருந்ததில்லை. திருச்சபையினால் போதிக்கப்பட்டவைகளும் ஞானஸ்நானத்தில் அறிக்கையிட்டவைகளுமான விசுவாசப்பிரமாணங்களை ஒருவன் பிடித்திராத பட்சத்தில் அப்பமும் திராட்சரசமும் அவன் வாங்கப்படாது. இவை



களை ஒருவன் வாங்குகிறது அவன் மேற்படி விசுவாசத்தைப் பிடித்திருக்கிறான் என்பதற்கு அத்தாட்சியாயிருந்தது. அவ்விதமே கிறிஸ்துவின் தெய்வீகத்தை விசுவாசியாத தியோடோத்து என்பவன் ரோமாபுரிக்குப் போனபொழுது அவனைச் சபையின் ஐக்கியத்திற் சேர்க்கவில்லை. மேலும் குமாரனும் பரிசுத்தாவியும் பொர்சன்களல்ல என்று சாதித்த பிராக்ஸியாவென்பவனையும் அந்தச் சபைதானே தன் ஐக்கியத்துக்குப் புறம்பாக்கிவிட்டது. இதற்கு ஒப்பான ஒரு உபதேசம் அலெகசந்திரியாவில் பிரபலியமாகத்தொடங்கினபொழுது அதை எதிர்த்துக் கண்டித்த கண்காணியார் மற்றச் சபைகளுடைய சம்மதத்தோடு தாம் நடக்கிறோமென்று அறிய விரும்பி, தாம எழுதின நிருபங்களுக்கு நகல்கள் எடுத்து ரோமாபுரிக்கு அனுப்புவித்தார். இந்த நிருபங்களில் அவர் பிரயோகித்திருந்த சில சொற்களால், தேவகுமாரனைச் சிருஷ்டிக்கப்பட்ட வஸ்து என்று அவர் நமபியிருந்ததுபோல ரோமாபுரிக் கண்காணியார் உத்தேசித்து, அப்பேர்ப்பட்ட கொள்கை பொதுவான திருச்சபையின் கொள்கைக்கு விபரீதமானதால், இவர் அவரைக் கண்டித்ததையும், அதன்பேரில் அலெகசந்திரியாக் கண்காணியார் தம்முடைய கொள்கை பொதுவான சபையின் கொள்கைதானென்று திர்பிகரமாய் ருசுக்கொடுத்ததையும் மேலே ஓரிடத்தில் விவரமாய்ப் பார்த்தோமே. அந்தியோகியாக் கண்காணியாரான பவுல் என்பவர் காரியம் இதனிலும் அதிக விசேஷித்தது. அவரை உத்தியோகத்தினின்று நீக்கின சங்கம் கிழக்கத்திச் சபையின் ஓர் பொதுவான சங்கம என்றுதான் சொல்லவேண்டியது. அவர்களும தாங்கள் மேற்படி கண்காணியாரை உத்தியோகத்தினின்று நீக்கின முகாந்தரங்களை மேற்கத்திச் சபைகளுக்கு விவரமாயெழுதி அறிவித்தார்களே.

இந்தவிதமாக அந்தந்தக் காலத்தில் அந்தந்த உபதேசத்தைக்குறித்துச் சபையின் அபிப்பிராயங்கள் இன்னவைகளென்று அறிந்துகொள்ளுகிறோம். இதன்றியும் ஆதிக்கிறிஸ்தவ நூலாசிரியர்கள் எழுதிய பல நூல்களும் நம்மிடத்திலிருக்கின்றனவே. மேற்படி நூல்களால், நாம் இதுவரையும் கவனித்துவந்த காலமெல்லாம் திருச்சபை மேற்படி உபதேசங்களையே பிடித்திருந்ததென்று அறிந்துகொள்ளுகிறோம். செப்லியு என்பவனுடைய கொள்கையோ, வேறெந்தக் கொள்கையோ ஒன்றையெடுத்துக்கொண்டு விசாரிக்கும்பொழுதில், அது திருச்சபையின் கொள்கையல்லவென்று திட்டமாய் அறிந்துகொள்ளுகிறோம். இந்தக் கொள்கையை பிராக்ஸியாவோ, நோயீத்தோ, பெரிலுவோ, செபலியுதானே எக்காலத்தில் போதித்திருந்தபோதிலும், ஒரு நூலாசிரியனால் மாத்திரமல்ல, ஒரு சபையினால் மாத்திரமல்ல, கிழக்கத்து மேற்கத்திச் சபைகளெல்லாவற்றினாலும் அது ஏக ஐக்கியமாய்க் கண்டிக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறோம். நாம் கவனித்துவந்திருக்கிற காலத்தில் கிறிஸ்துநாதரை தேவனென்று விசுவாசித்து அறிக்கையிட்டுவந்தார்களாவென்று அறிய விரும்புவோமாகில், இரண்டாம் நூற்றாண்டின் கடைசிவரையும் ஒருவரும் அந்த உபதேசத்தை மறுக்கவில்லையென்றும், குறித்தகாலத்தில் தியோடோத்து என்பவன் அதை மறுத்ததினிமித்தம் ரோமாபுரியில் சபையின் ஐக்கியத்துக்குப் புறம்பாக்கப்பட்டானென்றும் தெரியவருகிறது. இதற்குச் சில வருஷங்களுக்குப் பிறகு அலெகசந்திரியாவின் தியோனிசியுக கண்காணியார் மேற்படி உபதேசத்தை விசுவாசியாததுபோல் குற்றஞ்சாட்டப்பட்டபொழுது, தம்மை நிரபராதியென்று ருசுப்படுத்தவேண்டியதாயிற்றே. கிழக்கத்திச் சபைத் தலைவர்களெல்லாம் அந்தியோகியாவில் சங்கங்கூடிவந்த

சமையத்தில், இந்த உபதேசத்தைத் தாங்கள் விசுவாசிக்கிறோமென்று மாத்திரமல்ல, ஆதிமுதல் பொதுவான திருச்சபையனைத்தும் ஏற்றுக்கொண்டு விசுவாசித்துவந்திருக்கிறதென்றும் குறிப்பித்திருக்கிறார்களே.

இந்தக் காலத்தில் விசேஷமாய் அதன் முதற்பாகத்தில் வழங்கிவந்த விசுவாசப்பிரமாணங்களும், அறிக்கைகளும், சுருக்கமானவைகளும், லேசானவைகளுமாயிருந்தன. தப்பறைக்காரர் எழும்பாதவரையில் தப்பறைகளைக் கண்டிக்கிற பாவனையாய் எழுதவேண்டியதில்லையே. விஷம் சாப்பிட்டவர்கள் அல்லது சாப்பிட ஏதுவானவர்களுக்குத்தானே மாற்றுமருந்து சாப்பிடுவது அவசியம். கொள்ளைநோய் இல்லாத பட்சத்தில் தொற்றிப்பிடிக்குமென்று பயந்து பிரயத்தனம்பண்ணுவானேன். கொள்ளைநோய் தோன்றி நம்மைச்சூழ இருக்கிறவர்களை ஆயிரக்கணக்காய் வாரிக்கொண்டுபோகும்பொழுதோ காரியம் வேறல்லவா? அப்பொழுது வைத்தியனையழைப்பதும் மோசம் நேரிடாமல் பல பக்குவங்கள் செய்துகொள்வதும் அவசியந்தானே. சபையின்காரியமும் அப்படித்தான். நூதனமான தப்பறைகள் தோன்றி கிறிஸ்தவர்கள் அபாயப்படுகிறதற்கு ஏதுவாயிருந்தகாலத்தில் எவனாகிலும் ஒருவன் சபையின் ஐக்கியத்திற் சேரவிரும்புவானாகில், சபையானது அவன் சரியான கொள்கையுடையவனோ தப்பறையை அனுசரித்தவனோ என்று சோதித்தறிகிறது கடமையேயன்றி வேறல்ல. முந்திய காலத்தில் வழங்கிவந்த பரீட்சைகள் இப்பொழுது போதாதே. இதுவரையும் ஒவ்வொரு அர்த்தமாக வழங்கின சொற்கள் இப்பொழுது பல அர்த்தமாக வழங்கத்தொடங்கிற்று. ஒருவன் வாயினாலே ஒன்றைச் சொல்லியும் மனதிலே வேறு அர்த்தம்பண்ணிக்கொள்வான். அதினாலே கண்காணிமார்களும், குருமார்களும் எவ்வளவோ விழிப்பாயிருக்கவேண்டுமே. விசுவாசப்பிரமாணங்கள் நீண்டவைகளாகிறதற்கு இதுவே முகாந்தரம். இது குறைவானால், இந்தக் குறைவுக்கு தப்பறைக்காரர் காரணமேயல்லாமல் சபை காரணமல்ல. ஆதிமுதல் சபையின் முக்கிய நோக்கம் ஐக்கியத்தைக் காத்துக்கொள்ளவேண்டுமென்பதுதான். ரோமை அலெக்சந்திரியா சர்த்தாகோச் சபைகள் நோவேஷியர், மெலீதியர், தோனேத்தியர் முதலிய தப்பறைக்காரரை முதலாவதே தங்கள் ஐக்கியத்தினின்று தள்ளிவிட்டனவென்றல்ல, மேற்படி தப்பறைக்காரர் தாமே சபையின் ஐக்கியத்திலிருந்து பிரிந்து வேறு சபையாக அமைந்துகொண்டார்கள். இப்படியாகப் பிரிந்துபோனவர்களுங்கூட கிறிஸ்துநாதருடைய பொதுவான திருச்சபையைச்சேர்ந்த அவயவங்களென்றே தங்களைப் பாராட்டிக்கொண்டார்கள். கொன்ஸ்தந்தீன் சேர்ந்துகொண்ட சபையானது விசுவாசப்பிரமாண விஷயத்தில் பிரிவினையில்லாத ஒரே ஏகசபையாகவே இருந்தது. என்றாலும் சீக்கிரத்துக்குள் தப்பறை, பிரிவினைமுதலிய கேடுகளைத் திரளாய்ப் பிறப்பிக்கப்போகிற விதைகள் சபையில் இப்பொழுதே விதைக்கப்பட்டிருந்ததென்றே சொல்லவேண்டும்.



## Notes on Genesis.

# ஆதியாகம வியாக்கியானம்.

*முடிவுரை:*

### வேத இடப்பேர் அகராதி.

*இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.*

*(தொடர்ச்சி)*

410. கேத்தெர். சீரியாவில் ஒரு சாதியார். ஆதி. 10: 23. 1 நாளா. 1: 17.

411. கேபா. பென்யமீனில் பட்டணம். எருசலேமுக்கு வடக்கே 6 மயில். யோசு. 21: 17.

412. கேபார். பாபிலோனியாவில் பாபிலோனுக்கு வடக்கே, செப்ரவாயீமுக்கருகில் ஐபிராத்தோடு சேருகிற நதி. இது கப்பலோடத்தக்கது. எசே. 1: 1. 3: 15, 23.

413. கேபிம். பென்யமீனில் பட்டணம். ஏசா. 10: 31.

414. கேப்பார்அமோனாய். (அமோனியர் கிராமம்) பென்யமீனில் ஒரு ஊர். அம்மோனியரால் கட்டப்பட்டிருக்கவேண்டும். யோசு. 18: 24.

415. கேரார். பெலிஸ்தியர் பட்டணம். ஆதி. 10: 19.

416. கேரீத். (கொல்லுதல்) யோர்தானின் ஒரு கவர். 1 இரா. 17: 3, 5.

417. கேலத்தா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33. 22.

418. கேனாத். கிழ் மனாசேயின் கிழ் எல்லையில். எண். 32: 42.

419. கேனியர். மீதியானியரில் ஒரு வகுப்பார். ஆமலேக்கியர் நடுவில் வாசம்பண்ணினார்கள். ஆதி. 15: 19.

420. கொமோரா. (கலகக்காரர்) உப்புக்கடலின் வடபாகத்திலிருந்து அழிந்த ஐந்து பட்டணங்களில் ஒன்று. ஆதி. 10: 19.

421. கொராசான். சிமியோனில் இருக்கிற ஆஷான் பட்டணம் என்று நினைக்கப்படுகிறது. 1 சாமு. 30: 30.

422. கொரிந்து. அகாயாவில் ரோம அதிபதியின் தலைநகர். கிரேக்கையையும், பிலப்பனிசசையும் இணைக்கிற பூசந்தியில் இருக்கிறது. அப். 18: 1. 19: 1. 1 கொரி. 1: 2. 2 கொரி. 1: 1, 23. 2 திமோ. 4: 20.

423. கொலோசெ. பிரிகியாவில் பட்டணம். லிக்கஸ் நதியோரத்தில். கொலோ. 1. 2.

424. கொல்கொதா. (தலையோட்டுக்குவியல்) அல்லது கல்வாரி. எருசலேமுக்கு மேல்பக்கத்தில் மலை. மத். 27: 33.

425. கோசான். மெசொப்பொத்தாமியாவில் ஒரு நாடும், நதியும். அசீரியருடையது. 2 இரா. 17: 6. 18: 11. 19: 12. 1 நாளா. 5: 26. ஏசா. 37: 12.

426. கோசேன். (பசும்புல் தரைநாடு) நீலநதியின் கிழ்பாரிசத்தில் எகிப்தின் வடகீழ்பாகம். இது பலஸ்தீனாவை அடுத்திருந்தது. இது செழிப்புக்காக எப்போதும் பேர்போனது. ஆதி: 45. 10.

(2) யூதாவின் மேட்டு நிலத்தில் பட்டணம். யோசு. 15: 51.

(3) பலஸ்தீனாவின் தெற்கில் ஒரு பட்டணமும் நாடும். யோசு 10: 41. 11: 16.

427 கோஸ். ரோதுதீவுக்கு வடமேற்கே ஒரு சிறு தீவு. இப்போது ஸ்ற்றுன்கீயோ என்று பேர். அப் 21: 1.

428. கோபு. (தொட்டி) தாவீது பெலிஸ்தியரோடு யுத்தம் செய்த இடம். 2 சாமு. 21: 19.

429. கோமா. யாப்பேத்தின் சந்ததியார். ஆதி. 10: 2.

430. கோராசின். (இரகசியம்) கின்னரோத் கடலோரத்தில் பட்டணம். மத். 11: 21. லூக். 10: 13.

431. கோலான். (பாழை) கிழ்மனாசேயில் லேவியர் பட்டணம். அடைக்கலப் பட்டணங்களில் ஒன்று. உபா. 4; 42.

கோவாத். எருசலேமுக்குச் சமீபத்தில் ஒரு இடம். எரே 31: 39.

432. சகசிமா. இசக்காரில் பட்டணம். யோசு. 19: 22.

433. சபேயர். சேபாவின் குடிகள். யோபு. 1: 15. ஏசா. 45; 14. எசே. 23: 42. யோவே. 3: 8.

434. சப்தா. கூஷியரான சனங்கள். அரபிக் குடாக்கடலின் மேல் கரையில் வசிக்கிறவர்கள் என்று சொல்லப்படும். ஆதி. 10: 7. 1 நாளா. 1: 9.

435. சப்திகா. கூஷியரான சனங்கள். இவர்களுடைய நாடு ஆபிரிக்காவில் ஏதென்குடாக்கடலை அடுத்திருந்ததென்று நினைக்கப்படுகிறது. ஆதி. 10: 7.

436. சமாரியா. பலஸ்தீனாவின் மத்தியில், சமாரியா மலையின் மேல் உம்றி கட்டின பட்டணம். அந்த மலைக்கு ஷேமேர் என்பவனால் அந்தப் பேர் வந்தது. இந்தப் பட்டணத்தை அடுத்த நாட்டுக்கும் சமாரியா என்று பேர். 1 இரா. 13: 32.

437. சம்சூமியர். அம்மோனியருக்குமுன் அவர்கள் தேசத்தில் குடியிருந்த, பூர்வீக சாதியாரான இராக்ஷதர். உபா. 2: 20. இரப்பாயியருக்கு அம்மோனியப் பேர்.

438. சருகேன். சிமியோனில் பட்டணம். யோசு. 19: 6.

439. சரொப்தா. தீருவுக்கும் சீதோனுக்கும் ஊடே பெனிக்கேயருடைய பட்டணம். லூக். 4: 26.

440. சர்தை. லீதியாவுக்குத் தலைநகரி. சிமிர்னாவுக்கும் பிலதெல்பியாவுக்கும் இடையில். வெளி. 1: 11.

441. சலீசா. பாகால்சலீசா இதுதான். இருக்கிற இடம் தெரியாது. 1 சாமு. 9: 4.

442. சல்காயி. பாசான் நாடு, காத்கோத்திரம், இவை இரண்டின் கீழ் கடைகோடி எல்லையில் பட்டணம். உபா. 3: 10. யோசு. 12: 5. 13: 11. 1 நாளா. 5: 10, 11.

443. சல்மோனா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 41, 42.

444. சல்மோனே. கிரேத்தை தீவின் கீழ்கடைகோடி முனை. அப். 27: 7.

445. சல்மோன். சீகேமுக்குச் சமீபத்தில். நியா. 9: 48. சங். 68: 14.

446. சனோகா. (1) யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 34. நெகே. 3: 13. 11: 30.

(2) யூதாவின் பரும்புக் காட்டில் பட்டணம். எபிரோனுக்கு 10 மயிலுக்குத் தெற்கே. யோசு. 15: 56.

447. சன்சன்னா. யூதாவில் தெற்கே பட்டணம். யோசு. 15: 31.



448. சாப்பீர். யூதேயாவில் பட்டணம். அஸ்கலோன் கிட்ட. மீகா. 1; 11.

449. சாப்பேர். வனாந்தரத்தில் ஒரு மலை. எண். 33: 23.

450. சாப்போன். காத்தில் பட்டணம். யோசு. 13: 27.

451. சாமீர். (1) யூதாவின் மலைத்தேசத்தில் பட்டணம். யோசு. 15: 48.

(2) எப்பிராயீம் மலைத்தேசத்து ஊர். நியா. 10: 1, 2.

452. சாமு (மணற்பாடு) ஈஜியன் கடலில் தீவு. எபேசு கிட்ட. அப். 20: 16.

453. சாமோத்திராக்கே. ஈஜியன் கடலின் வடகீழ் பாகத்தில் தீவு. அப். 16: 11.

454. சாயனான் (மந்தைகள்) யூதாவில் பட்டணம். சேனான் இதாயிருக்கலாம். மீகா. 1: 11.

455. சாயீர். ஏதோமுக்கருகில் ஒரு இடம். 2 இரா. 8: 21.

456. சாராயீம். (1) யூதாவின் பள்ளத்தாக் காட்டில். யோசு. 15; 36. 1 சாமு. 17: 52.

(2) சிமியோனில். 1 நாளா. 4: 31.

457. சாரீத். செபுலோனில் பட்டணம். யோசு. 19: 10.

458. சாரேத். மோவாப் மலைகளில் ஒரு பள்ளத்தாக்குக்கும், அதில் ஓடுகிற நீரோடைக்கும் பேர். எண். 21: 12.

459. சாரோன். (அவன் மைதானம்) யோப்பாவுக்கும், கர்மேலுக்கும் நடுவில் கடற்கரையோரமான பள்ளநிலம். 1 நாளா. 27; 29 ஏசா. 33; 9. 35: 2. 65; 10. உன். 2: 1.

460. சார்தான். மனாசேயில பட்டணம். யோசு. 3: 16. (சேரோத். நியா. 7: 22. சர்த்தனா. 1 இரா. 4: 12. சர்தான். 1 இரா. 7: 47. சேரேதா. 1 இரா. 11: 26. சரேத்தா. 2 நாளா. 4; 17.)

461. சாலமி. சீப்புருதீவின் கீழ்கரையில் பட்டணம். அப். 13: 5.

462. சாலாபீன். தாணில் எமோரியருடைய பட்டணம். யோசு. 19: 42.

463. சாலீம். சூவால் நாடு இதுதான் என்று நினைக்கப்படும். இரண்டும் இருக்கிற இடம் தெரியாது. 1 சாமு. 9: 4.

464. சாலேப். அரபியரில் யொக்தானிய வகுப்பார். ஆதி. 10: 26. 1 நாளா. 1: 20. இது தென் அரபியிலுள்ள சூலாப்பாயிருக்கலாம்.

465. சாலேம். (சமாதானம்) (1) ஒரு இடம் என்று நினைக்கப்படுகிறது. ஆனால் வெகு சந்தேகம். ஆதி. 14: 18. எபி. 7: 1, 2.

(2) எருசலேமுக்கு பாட்டில் வழங்கிய சுருக்கப்பேர். சங். 76: 2.

466. சாலொமோனுடைய மண்டபம். தேவாலயத்தின் வெளிமுற்றத்தில் கிழ்பக்கத்துத் தூண்வரிசை. யோவா. 10; 23.

467. சால்பீம். சாலாபீன் இதுதான். நியா. 1: 35. 1 இரா. 4: 9. இதின் குடிகள் சால்போனியர் என்று அழைக்கப்பட்டார்கள். 2 சா. 23: 32. 1 நாளா. 11: 33.

468. சாவே. எருசலேமுக்கு வடக்கே பள்ளத்தாக்கு. ஆதி. 14: 17.

469. சாவேகீரியத்தாயீம். உப்புக்கடலுக்குக் கிழக்கே மோவாப் தேசத்தில் கீரியத்தாயீமுக்குச் சமீபத்தில் பள்ளத்தாக்கு. ஆதி. 14: 5.

470. சாறிபாத். 1 இரா. 17: 9. புதியஏற்பாட்டில் சரொப்தா. லூக். 4: 26.

471. சானானீம். அல்லது சானாயீம் நப்தலியில் ஒரு மைதானம். யோசு. 19: 33. நியா. 4: 11.

472. சிக்ரோன் யூதாவின் வடமேல் எல்லையில் பட்டணம். யோசு. 15: 11.

473. சிக்லாக். யூதா அல்லது சிமியோனில் பட்டணம். இதை ஆகீஸ் தாவீதுக்குக் கொடுத்தான். யோசு. 15: 31.

474. சித்தீம். அல்லது கித்தீம். (1) பழைய ஏற்பாட்டில் சீப்புரு தீவுக்குப் பேர். விரிவான கருத்துப்படி மெத்தித்திராணியாக் கடலிலுள்ள தீவுகளுக்கும் பேராக வழங்கும். எண். 24: 24. ஏசா. 23: 1, 12. எரே. 2: 10. எசே. 27: 6. தானி. 11: 30.

(2) இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்குமுன் கடைசியாகப் பாளையமிறங்கியிருந்த இடம். எரிகோவுக்கு எதிரே இருந்தது. எண். 25: 1. (ஆபேல் சித்தீம். எண். 33: 49.)

(3) யோர்தானுக்கு மேற்கே ஒரு பள்ளத்தாக்கு. எருசலேமுக்குச் சமீபமாயிருக்கலாம். யோவே. 3: 18.

(4) சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களின் மைதானம். அந்தப் பட்டணங்கள் அழிந்தபொழுது இது சவக்கடலின் ஒரு பாகமாயிற்று. சவக்கடலின் வடமேல் பாகமாயிருக்கலாம். ஆதி. 14: 3, 8, 10.

475. சித்னா. (பகை) ஈசாக்கு வெட்டின இரண்டாவது துரவு. ஆதி. 26: 21.

476. சிநெயார். திகிரீஸ், ஐபிராத்து இந்த நதிகளுக்கூடேயுள்ள பாபிலோனியாவின் மைதானம. ஆதி. 10: 10. யோசு. 7: 21. ஏசா. 11: 11. தானி. 1: 2. சக. 5: 11. பாபிலோனியாவுக்கு பூர்வப்பேராயுமிருந்தது.

477. சிப்ராயிம். பலஸ்தீனாவின் வடஎல்லையில் பட்டணம். எசே. 47: 16.

478. சிப்மா. ரூபன் கோத்திரத்தில். யோசு. 13: 19.

479. சிப்மோத். தென்யூதாவில் பட்டணம். 1 சாமு 30: 28.

480. சிமியோன். ஒரு கோத்திரம். பெயர்செபா கிணற்றைச் சூழ்ந்திருந்தது. யோசு. 19: 1—9.

481. சிமிர்னா. சின்ன ஆசியாவில் வியாபாரத்தில் பேர்போன பட்டணம். நாளதிலும் அந்தப் பேராலேயே அழைக்கப்பட்டு முக்கியமானதாயிருக்கிறது. வெளி. 1: 11.

482. சிம்ரோன். கேத்தூராளின் மூத்த மகன் பேரைக்கொண்ட அரபியரின் ஒரு வகுப்பார். ஆதி. 25: 2.

483. சிம்ரான். செபுலோனில் பட்டணம். யோசு. 11: 1. 19: 15. (சிம்ரோன்மேரோன். யோசு. 12: 20.)

484. சிரேனே. ஆபிரிக்காவில் கார்தோவாப் பட்டணத்துக்கும், எகிப்துக்கும் நடுவிலுள்ள நாட்டுக்குப் பிரதான பட்டணம். ஒரு காலத்தில் யூதருக்கு கல்விக்கு உறைவிடமாயிருந்தது. மத். 27: 32.

485. சிலிசியா. சின்ன ஆசியாவில் தெற்கே நாடு. அப். 6: 9.

486. சில்லா. எருசலேமுக்குச் சமீபத்தில் அல்லது அதற்குள் ஒரு இடம். 2 இரா. 12: 2.

487. சில்லீம். தென் யூதாவில் பட்டணம். யோசு. 15; 32.

488. சிவந்த சமுத்திரம். முதலில் இதற்கு ஏதோம் கடல் என்று பேர். இதை ரோமர் மாரிரூபரம் (Mare Rubrum) அதாவது சிவந்த கடல் என்று திருத்தினார்கள். இதற்கு இரண்டு கிளைகளுண்டு. மேல் கிளைக்கு எபிரேயு பாஷையில் புல்ரஷேஸ் கடல் என்று பேர். இது



தான் நாளது சூவஸ் குடாக்கடல். கீழ் கிளைக்கு எலானிற்றிக் குடாக்கடல் அல்லது அக்கபர் குடாக்கடல் என்று பேர். யாத். 10: 19.

489. சீகார். சீகேம் பார். யோவா. 4: 5.

490. சீகேம. அல்லது சீகார் கானானியருடைய அதிபூர்வ பட்டணம். எப்பிராயீமில் லேவியரைச் சேர்ந்த அடைக்கலப் பட்டணம். எருசலேமுக்கு 40 மயிலுக்கு வடக்கே, ஏபால், கெரிசீம் என்ற மலைகளுக்கிடையிலுள்ள ஒரு இடுக்கமான மைதானத்தில் கட்டப்பட்டது. யாக்கோபின் கிணறு இதிலிருக்கிறது. ஆதி. 12: 6. யோவா. 4: 6.

491. சீகோர். (கறுப்பு) நீலநதியாயிருக்கலாம். 1 நாளா. 13: 5. ஏசா. 23: 3. யோசு. 13: 2.

492. சீகோர்லிப்னாத். (பளிங்கு நதி) ஆசேரின் தென்எல்லையில் ஒரு சிற்றாறு. யோசு. 19: 26.

493. சீகோன். இசக்காரில் யோசு. 19: 19.

494. சீதோன். (மீன்பிடித்தல்) பெனிக்கியாவில், ஒரு பூர்வ நாட்டுக்கும் பட்டணத்துக்கும் பேர். இது ஆசேர்க்கோத்தர எல்லைக்குளிருந்தும், அவர்களாலே ஒருபோதும் பிடிக்கப்படவில்லை. ஆதி. 10: 15, 19.

495. சீத்திம். நப்தலியில் பட்டணம். யோசு. 19: 35.

496. சீநியர். வடக்கில் திரிப்போலைக்குச் சமீபமாயிருந்த கானானியர். ஆதி. 10: 17. 1 நாளா. 1: 17.

497. சீப். (1) யூதாவில் தெற்கே பட்டணம். யோசு. 15: 24.

(2) யூதாவின் பருப்புக் காட்டில், தாவீதின் பல பராக்கிரமகிரியைகள் நடந்த இடம். எபிரோனுக்குத் தெற்கே 3 மயில் தூரத்தில். யோசு. 15: 55. 1 சாமு. 23: 14, 15, 24. 26: 2. 2 நாளா. 11: 8.

498. சீப்புரு. மெதித்திராணியாக் கடலில் ஒரு பெரிய தீவு. ஷித்தீம் என்றழைக்கப்பட்டது. அப். 4: 36.

499. சீபமா. ரூபனில் பட்டணம். எண். 32: 38.

500. சீயோர். யூதாவின் மலைத்தேசத்தில் பட்டணம். எபிரோனுக்குச் சமீபமாயிருக்கலாம். யோசு. 15: 54.

501. சீயோன். (1) சிறையிருப்புக்குப் பின்பு தேவாலயம் கட்டப்பட்டிருந்த மலைக்குப்பேராக வழங்கப்பட்டது. இப்பொழுதோ எருசலேமின் மேல்பக்கத்து மலைக்கு பொதுவாக இப்பேர் வழங்குகிறது. 2 சாமு. 5: 7.

(2) எர்மோன் மலைக்கு ஒரு பேர். உபா. 4; 47.

502 சீயோன் குமாரத்தி. உன். 3: 11.

503. சீயோன் மலை. 2 இரா. 19: 31.

504. சீரகூசா. சிசிலித்தீவின் தென்கீழ்பக்கத்தில் ஒரு பூர்வப் பட்டணம். அப். 28: 12.

505. சீரா. எபிரோனுக்கு வடக்கில் ஒரு கிணறு. 2 சாமு. 3: 26.

506. சீரியா. (உன்னதம்) பலஸ்தீனாவுக்கு வடகிழக்கிலும், கிழக்கிலும் இருக்கப்பட்ட நாடுகளுக்குப் பொதுவாக வழங்கப்பட்ட பேர். ஆதி. 28: 5. நியா. 10: 6. 2 சாமு. 8: 6. கலா. 1: 21.

507 சீரியோன். எர்மோன் மலைக்கு பூர்வ சீதோனியப்பேர். உபா. 3: 9. சங். 29: 6.

508. சீலோ. (இளைப்பாறுதல்) எப்பிராயீமில் பட்டணம். சீகேமுக்குப்போகிற பெரும்பாதைக்குக் கிழக்கும், பெத்தேலுக்கு வடக்குமாயிருந்தது. யோசு. 18: 1, 8—10. நியா. 18: 31. 21; 12, 19, 21.

1 சாமு. 1: 3, 9. 1 இரா. 2: 27. 14: 2, 4. எரே. 7: 12, 14. 26: 6, 9. 41: 5. சங். 78: 60. "சீலோவாவின் தண்ணீர்." ஏசா. 8: 6.

509. சீலோவா, அல்லது சீலோவாம். திரோபியோன் பள்ளத்தாக்கின் முகப்பில் ஒரு நீரூற்றும், ஊருணியும். சீயோன் மலைக்குச் சமீபமாயிருக்கிறது. நெகே. 3: 15.

510. சீனாய். அரபியா பெத்திரியாவில், சூவஸ் அக்கபா என்ற குடாக்கடல்களுக்கிடையிலுள்ள மலை நாடு. அதில் 3 மயில் நீளமுள்ள ஒரு மலைக்கும் பேர். அம்மலையின் வடகோடி ஓரேப் என்றும், தென் கடைசி சீனாய் என்றும் அழைக்கப்பட்டது. இந்தச் சீனாய் மலையில், நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. நாளதில் ஏபெல்மூசா அல்லது மோசே மலை என்று அழைக்கப்படுகிறது. யாத். 16: 1, 2, 11, 18, 20, 23. லேவி. 7: 38. எண். 1: 1. நியா. 5: 5. நெகே. 9: 13. சங். 68: 8. கலா. 4: 24.

511. சீனீம். சீனர் என்று நினைக்கப்படும். ஏசா. 49: 12.

512. சீன் (சேறு) (1) எகிப்தில், நீலநதியின் கீழ் கவர் முகத்துவாரத்தில் கட்டப்பட்ட அரணிப்பான பட்டணம். கிரேக்கர் கட்டின பெலூசியம் இது என்று நினைக்கப்படுகிறது. எசேக். 30: 15.

(2) சிவந்த கடலுக்கும், ஏலிமுக்கும் இடையிலுள்ள வனாந்தரம். யாத். 16: 1. எண். 33: 11, 12.

(3) பலஸ்தீனாவுக்குத் தெற்கே, ஒரு வனாந்தரம். காதேஸ் பர்னேயா இதிலிருக்கிறது. எண். 13: 21. 20: 1. யோசு. 15: 1, 3.

513. சுக்கோத்து. (கூடாரங்கள்) (1) யோர்தானுக்குக் கிழக்கே, காத் கோத்திரத்தில் யாப்போக், யோர்தான் இந்த நதிகளுக்கிடையில் ஒரு இடம். எருசலேமிலிருந்து 40 மயில் தூரம். ஆதி. 33: 17.

(2) இஸ்ரவேலர் ராமசேசைவிட்டுப் புறப்பட்டபின் முந்தலாவது பாளயமிறங்கின இடம். யாத். 12: 37.-13: 20. எண். 33: 5, 6.

514. சூகியன். ஆபிரகாமின் குமாரனான சூவாவுடைய சந்ததியார். யோபு 2: 11. 8: 1. 18: 1.

515. சூக்கியர். (கூடாரவாசிகள்) ஆபிரிக்காவில் ஒரு சாதியார். 2 நாளா. 12: 3.

516. சூசான். அல்லது சூசா. (1) பார்சுக்குத் தலைநகரம். நெகே. 1: 1. எஸ்த. 3: 15. 4: 6. 8: 15. தானி. 8: 2.

(2) கோஸ்பெஸ் நதிமேல், பாரசீகராசாக்கள் மாரிகாலத்துக்கென்று கட்டின ஒரு அரமனை. தானி. 7: 2.

517. சூர். (கிணறு) (1) சிவந்த கடலின் கீழ்பக்கத்தில், பட்டணம். இப்போதிருக்கிற சூவசுக்குச் சமீபமாயிருந்ததென்று நினைக்கப்படுகிறது. ஆதி. 16: 7.

(2) சூர் பட்டணத்திலிருந்து பலஸ்தீனாவின் எல்லைவரையும் எட்டியிருந்த வனாந்தரம். யாத். 15: 22. "ஏத்தாம் வனாந்தரம்." எண். 33: 8.

518. சூவால். பென்யமீனில் ஒரு நாடு. 1 சாமு. 13: 17.

519. சூனேம். இசக்காரில் பட்டணம். யோசு. 19: 18.

---



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. இந்தியாவிற்கு வந்துபோக உத்தேசித்திருக்கும் ப்ரின்ஸ் ஆப்வேல்ஸ் என்னும் இளவரசர் மஹா ராஜாத்தியவர்களின் பிரதிநிதியாய் வந்துபோவாரோ அல்லது தம் சொந்தப் பெயராலேயே அப்படிச் செய்வாரோ என்பதைப்பற்றி விசாரணையுண்டாயிற்று. மஹா ராணியவர்களின் பிரதிநிதியாய் அவர் விஜயம் செய்வதே தமக்குப் பெரும்பேறென இத்தேச பிரஜைகள் மகிழ்ந்து ஆநந்தமடைவார்களென்று பத்திராதிபர்கள் பலரும் பேசுகிறார்கள். இது வாஸ்தவமே.

சமுத்திரத்தில் உயிரைப் பேணும் கவசம் ஒன்று நூதனமாய் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. கப்டின் பாய்ட்டன் என்னும் அமெரிக்க துரை ஒருவர் அவ்வித கவசம் ஒன்று உடுத்திக்கொண்டு சீமையிலிருந்து பிரான்சுக்கு கடலில் மிதந்துபோனார். உயிர்ச்சேதமின்றி அவர் பதினைந்து மணி நேரம் கடலிலிருந்தார்.

புருஷிய பார்லிமெண்டார் ஜர்மானிய தேசத்தில் உள்ள ரோம சபைக்குரிய லௌகீக அதிகாரத்தை நீக்கிப்போட்டார்கள்.

இந்தியா. பரோதா அரசனாகிய கைக்வாரின் நியாய விசாரணையைத்தொட்டு கமிஷனர்கள் கொண்ட அபிப்பிராயம் ஒன்றாக்கொன்று விரோதமாயிருந்தும், அவருடைய ஆளுகை ஒழுங்கீனமாயிருந்ததுபற்றி, பிரஜைகளின் அனுகூலத்துக்காக மஹா ராணியவர்களின் துரைத்தனத்தார் அவரை அதிகாரத்தினின்று நீக்கிப்போட்டார்கள். தற்காலத்தில் அவர் சென்னைபட்டினத்திற்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறார். இனி துரைத்தன அனுமதிபெற்று அங்கிலோ இந்திய தேசத்தைச்சேர்ந்த எவ்விடத்திலாவது அவர் வசிப்பார். அவ்விடத்தில் தமது சமுசார பரிவாரத்துடன் தமது அந்தஸ்துக்குத்தக்க பேறுகளை பரோதா பிரதேசத்து வருமானத்தினால் பெற்று அனுபவிப்பார்.

மாட்சிமைதங்கிய சென்னைக் கவர்னராகிய ஹபார்ட் பிரபு அவர்கள் சென்ற மாசம் 27வ செவ்வாய்க்கிழமை சாயங்காலம் ஆறேமுக்கால் மணிக்குக் காலஞ் சென்றுவிட்டார். ஜுரமும் வயிற்றுளைவும் அவர் மரணத்திற்கு ஹேதுவாயிருந்தது. மந்திராலோசனைச் சபையின் முதல் அவயவமாகிய கௌரவ ராபின்சன் துரையவர்கள் சென்றுபோன கவர்னருக்குப் பதிலாக சென்னையை ஆளுகிறார். புதன்கிழமை சாயங்காலம் சென்னைக் கோட்டை ஆலயத்தில் கவர்னரது பிரேதம் க்ஷேமிக்கப்பட்டது. பிணக்கோலம் போகையில், போகுமார்க்கத்திலுள்ள மரப்பாலமொன்றில் ஜனங்கள் கூடி அடர்ந்ததினால் வாராதியின் ஓர் பாகம் ஒடிந்து விழ, அதில் நின்ற அநேகர் ஆற்றில் விழுந்தார்கள். கைகால் ஒடிந்தும் காயப்பட்டும் கரையேறினவர்கள் தவிர, உயிரிழந்து பிரேதமானவர்களும் பலருண்டு.

சென்னைப் பிரதேசத்துக்கு நெடுநாள் வித்தியா விசாரணைத் தலைவராயிருந்த பௌஎல் துரையவர்கள் உத்தியோகம் விட்டு சென்ற மாசாரம்பத்தில் சீமைக்குப் போய்விட்டார். அவருக்குப் பதில் கர்னல் மக்டானல்டு துரையவர்கள் வித்தியாதிகாரி ஆனார்.

## மேமீ நாள் 31. சித்திரைமீ 20உ முதல், வைகாசிமீ 19உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ச | 1 | ௨௰ | கர்த்தாவே, எழுந்தருளும். எண்ணாகமம் 10:35. |
| ஞா | 2 | ௨௧ | உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக. 35. |
| தி | 3 | ௨௨ | கர்த்தருக்கு மிகவும் கோபம் மூண்டது. 11:10. |
| செ | 4 | ௨௩ | கர்த்தருடைய செவிகள் கேட்க அழுதீர்களே. 18. |
| பு | 5 | ௨௪ | தேவன் தண்டிக்கிற மனிதன் பாக்கியவான். யோபு 5:17. |
| வி | 6 | ௨௫ | சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். 17. |
| வெ | 7 | ௨௬ | அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார். 18. |
| ச | 8 | ௨௭ | உம்முடைய கூடாரம் சமாதானத்தோடிருக்கக் காண்பீர். 24. |
| ஞா | 9 | ௨௮ | கர்த்தருடைய நாமம் தோத்திரிக்கப்படக்கடவது. சங். 113:3. |
| தி | 10 | ௨௯ | கர்த்தர் எல்லாச் சாதிகள்மேலும் உயர்ந்தவர். 4. |
| செ | 11 | ௩௰ | சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார். 7. |
| பு | 12 | ௩௧ | பூமியே, நீ ஆண்டவருக்குமுன்பாக அதிரு. 114:7. |
| வி | 13 | ௧ | உம்முடைய நாமத்திற்கே மகிமைவரப்பண்ணும். 115:1. |
| வெ | 14 | ௨ | நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார். 3. |
| ச | 15 | ௩ | தமக்குச் சித்தமானை யாவையும் செய்கிறார். 3. |
| ஞா | 16 | ௪ | மூடனுடைய முகத்துக்கு விலகிப்போ. நீதி. 14:7. |
| தி | 17 | ௫ | தன் வழியைச் சிந்தித்துக்கொள்வது விவேகியின் ஞானம். 8. |
| செ | 18 | ௬ | மூடர் பாவத்தைக்குறித்துப் பரியாசம்பண்ணுகிறார்கள். 9. |
| பு | 19 | ௭ | துன்மார்க்கனுடைய வீடு அழியும். 11. |
| வி | 20 | ௮ | செம்மையானவனுடைய கூடாரம் செழிக்கும். 11: |
| வெ | 21 | ௯ | நீதியைத் தேடுகிறவனில்லை. ஏசாயா 59:4. |
| ச | 22 | ௰ | தீமையைக் கர்ப்பந்தரித்து அக்கிரமத்தைப் பெறுகிறார்கள். 4. |
| ஞா | 23 | ௧௧ | அவர்கள் கிரியைகள் அக்கிரமக் கிரியைகள். 6. |
| தி | 24 | ௧௨ | கொடுமையான செய்கை அவர்கள் கைகளிலிருக்கிறது. 6. |
| செ | 25 | ௧௩ | கர்த்தர் அதற்கு மனஸ்தாப்பட்டார். ஆமோஸ். 7:3. |
| பு | 26 | ௧௪ | என் சனத்தின் நடுவே தூக்குநூலை விடுவேன். 8. |
| வி | 27 | ௧௫ | நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். யோவா. 14:18. |
| வெ | 28 | ௧௬ | நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள். 19. |
| ச | 29 | ௧௭ | எப்பொழுதும் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். 1 கொ. 1:4. |
| ஞா | 30 | ௧௮ | முடிவுபரியந்தம் அவர் உங்களை ஸ்திரப்படுத்துவார். 8. |
| தி | 31 | ௧௯ | உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். 9. |

## விசேஷித்த நாட்கள்.

2. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப் பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.
5. அமாவாசை.
6. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.
9. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.
16. பரிசுத்தாவியின் திருநாள்.
20. பௌர்ணமி.
23. திரித்துவத் திருநாளாகிய ஞாயிறு.
30. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. June. No. 6.

161289

### Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... 102
The Life of St Augustine, Bishop of Hippo. ... ... 106
The Scripture Gazetteer. ... ... ... ... ... 109
Notes on Exodus. ... ... ... ... ... ... 115
Summary of News. ... ... ... ... ... ... 119


### அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௧௦௨
அகுஸ்தீன் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... ௧௦௬
வேத இடப்பேர் அகராதி. ... ... ... ... ௧௦௯
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... ௧௧௫
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௧௯



**Palamcottah:**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

ஜூன்மீ. ௲அ௱௯௰.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்தல்.

2 நாளாகமம் 5-ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

இன்னம் ஒரு தீர்க்கதரிசியையும் நீங்களெல்லாரும் அறிவீர்கள். தேவாலயம் அழிந்துகிடந்தது. அவன் தூரமான ஓர் அந்நியதேசத்திலிருந்தான். தேவனை நோக்கிப் பிரார்த்திக்கப்படாதென்று கற்பிக்கப்பட்டுமிருந்தது. பிரார்த்தித்தால் சிங்கங்களின் கெபியிலே போட்டுவிடுவார்களென்றும் அறிந்திருந்தான். அவனோ இதையெல்லாம் ஒரு பொருட்டாயெண்ணாமல், தைரியமாய் இராசாவின் கட்டளையை மீறிவிட்டான். தானியேல் வழக்கப்படி பிரார்த்தித்ததுமல்லாமல், தான் பிரார்த்திக்கும்போது தேவாலயத்துக்கு நேரே பார்க்கிற வழக்கத்தையும் விடவில்லை. தான் பிரார்த்திப்பதை யார் கண்டுபிடித்தாலுமென்ன என்பதுபோல மேல் வீட்டுச் சன்னலை நன்றாய்த் திறந்துவைத்துக்கொண்டு, எருசலேம் நகரமும் தேவனுடைய ஆலயமுமிருந்த இடத்தை நோக்கி முழங்காலூன்றி, வெளியிலே தன்னைப் பிடிக்கும்படி ஆயத்தமாய்க் காத்துக்கொண்டிருந்த சத்துருக்களை எவ்வளவேனும் எண்ணாமல், வெகு தூரத்தில் அழிந்துகிடந்த ஆலயத்தையும் பட்டணத்தையுமே நினைத்துப் பிரார்த்தித்தான். தேவாலயத்தைக்குறித்து தானியேல் காண்பித்த அன்புக்கும், யோனாவின் பிரார்த்தனைக்கும் சகல உத்தமர் கொண்டாட்டத்துக்குமெல்லாம் முகாந்தரம் யாதென்றால் தேவனுடைய சமுகப்பிரசன்னம் அவ்விடத்திலிருந்தது என்றெண்ணினான்.

இதுமாத்திரமா? சாலமோன் செலுத்தின பலிகளையும் யோசித்துக்கொள்ளுங்கள். திவ்விய மகிமை விளங்கிய மேகம் இறங்கி அந்த வீட்டை நிரப்புகிறதற்குமுன் தகனப்பலிகள் செலுத்தப்படவும், வானத்திலிருந்து அக்கினி இறங்கி அதுகளைப் பட்சிக்கவும் வேண்டியதாயிருந்தது. சாலமோன் தேவனை நோக்கிப் பிரார்த்தித்தபொழுதும், ஆசாரியர்களும் லேவியரும் சனங்களோடு ஏகோபித்து தேவனை ஸ்துதித்துப் பாடினபொழுதுமல்ல, பீடங்களிலிருந்த பலிகள் தகனமாகி புகை படல்படலாய் வானத்துக்கு நேராக எழும்பினபொழுதுதான் திவ்விய மகிமை பிரகாசித்தது. சகல சனங்களும் "தேவன இங்கே இருக்கிறார்" என்று அறிந்துகொண்டார்கள்.

இதுவரையும் சொல்லிவந்த விசேஷங்களைக்கொண்டு, பூர்வீகத்திலிருந்த அந்தத் தேவாலயத்தைக்குறித்து இரண்டு காரியங்களை அறிந்துகொள்ளுகிறோம். அவை எவையெனில்,—

1. தேவசமுகம்.
2. பலிஆராதனை ஆகிய இரண்டுமே.

முதலாவது விசேஷந்தான் அந்த இடத்தை அவ்வளவு பரிசுத்தமாக்கினது. இரண்டாம் காரியத்தினால் அது தேவாலயமானவகை காட்டப்படுகிறது. பலியின்றி மனுஷர் தேவனைநோக்கிப் பிரார்த்திக்கவுங்கூடாது, தேவன் தமது மகா இரக்கத்தை வெளிப்படுத்தவுமாட்டார்.

சாலமோன் கட்டின வீட்டைக்குறித்து இவ்வளவாய் எங்களுக்குச் சொல்லவேண்டியதென்ன என்று கேட்கிறீர்களோ? அது சிறப்பான மாளிகைதான். தேவன் அங்கே பிரசன்னமானபொழுது அது மகிமைபொருந்தியதாய்த்தானிருந்தது. ஆகிலும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன்னே அது அழிந்துபோயிற்றே. அதற்குப்பிற்கு அதிற் கட்டப்பட்டிருந்ததும் இயேசுநாதர் பிரசன்னமானதுமான ஆலயமும் அழிந்துதான்போயிற்று, சாலமோன் கட்டின பலிப்பீடங்கள் நின்றதும் சாலமோன் நின்று பிரார்த்தித்ததுமான அந்த இடத்திலே, இக்காலத்திலே மகமதியர் ஒரு பள்ளிவாசலைக் கட்டி தங்கள் வீண் ஆராதனையைச் செலுத்திவருகிறார்களென்று நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாமே. தேவனுடைய சமுகம் இப்பொழுதும் அங்கே பிரசன்னமாகுமோ? அப்படியானால் அந்தத் தேவாலயத்தைக்குறித்து நமக்குக் காரியமென்ன?

பிரியமானவர்களே, இப்பொழுதும் தேவனுக்கு ஒரு ஆலயம் உண்டு. இந்தப் புதிய ஆலயத்தை நாம் ஏற்றவிதமாய்த் தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்யவும் அதிலே அவருக்குப் பிரியமான ஆராதனை செலுத்தவும் கற்றுக்கொள்ளும்பொருட்டுத்தான் சாலமோன் கட்டின ஆலயத்தின் சிறப்புகளும் மகிமைகளுமெல்லாம் தேவவசனத்தில் நமக்கு விவரிக்கப்பட்டிருக்கிறதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

இந்தப் புதிய ஆலயம் சீவனுள்ள ஆலயம் என்று சொன்னால் அதன் பொருள் உங்களுக்கு விளங்குமா! வேதாகமத்தில் நாம் வாசிக்கிறபிரகாரம், தேவன் தாமே ஒருவிசை இந்தக் கேள்வி கேட்கிறார். "நீங்கள் எனக்குக் கட்டும் ஆலயம் எப்படிப்பட்டது? நான் தங்கியிருக்கும் ஸ்தலம் எப்படிப்பட்டது? இந்தக் கேள்விக்கு இரண்டு உத்தரம் சொல்லலாம். வானங்களின் வானம் ஒரு ஆலயமும், தாழ்மையுள்ளவர்களுடைய இருதயம் மற்றதுமாம். பிரிய சிநேகிதர்களே, உங்கள் இருதயமும், தேவாராதனையும், தேவஸ்துதியும் நிறைந்த தேவாலயமாயிருக்கலாம்.

ஆனால் நீங்கள் அதைப் பிரதிஷ்டைசெய்யவேண்டும்.

சாலமோன் இராசா சிரசிற் பொற்கிரீடந் தரித்தவனாய், ஆயிராயிரமான தனது பிரசைகள் சூழ்ந்துநிற்க, தேவனைநோக்கி "கர்த்தாவே, நான் இந்த ஆலயத்தைக் கட்டினேன், தேவரீர் அதைத் தயவாய் அங்கீகரித்தருளும், அது உம்முடையதே" என்று பிரதிஷ்டைசெய்தானே. நீங்களும் இதுபோல் மகிமையான ஓர் காரியம் செய்யக்கூடும். பொன்னாலும், யானைத் தந்தத்தினாலும், கேதுரு மரத்தினாலும் கட்டப்பட்ட ஆலயம் தேவனுக்கு ஒப்புக்கொடுக்க உங்களிடத்திலில்லை. அது மெய்தான். ஆகிலும் அதனிலும் மேலான காணிக்கை உங்களிடத்திலுண்டு. உங்கள் நினைவுகள் எண்ணங்களையும், ஆசைகள் விருப்பங்களையும், வாஞ்சைகள் சந்தோஷங்களையும் தேவனுக்குப் படைக்கக்கூடாதா! "கர்த்தாவே, அன்புமுதலிய என் விருப்பங்கள் உம்முடைய

வைகள், நான் உம்மை நேசிக்க விரும்புகிறேன். என் நினைவுகள் உம்முடையவைகள், உம்மை அறிந்துகொள்ள ஆசிக்கிறேன். என் சீவன் உம்முடையது, உமக்கு ஊழியஞ்செய்ய நாடுகிறேன். என்னைத் தேவரீர் வாசம்பண்ணும் சீவனுள்ள ஆலயமாக்கியருளும்" என்று சொல்லுங்கள்.

நீங்கள் அப்படிச் செய்யும்பொழுது, உங்களிருதயங்களில் இவ்விரண்டு காரியங்கள் விளங்கும்.

முதலாவது. தேவனுடைய பிரசன்னமிருக்கும். நீங்கள் அவருக்கு உங்களை ஒப்புக்கொடுக்கும்போது அவரும் தம்மை உங்களுக்குத் தந்தருளி, உங்களுக்கு வழிகாட்டியும், ஆலோசனைக்காரரும், சமயசகாயரும், உத்தம சிநேகிதருமாயிருப்பார்.

இரண்டாவது. பலிசெலுத்தப்படுகிறதாயுமிருக்கும். ஒரே தரம் செலுத்தப்பட்ட அந்த மகா பலிக்கு உங்கள் உள்ளங்களில் பீடங்கள் நிலையாயிருக்கும். இதன்பொருள் என்னவென்று கேட்கிறீர்களோ? நீங்கள் செபம்பண்ணும்பொழுதெல்லாம் பாவத்தைப் பரிகரிக்கும்பொருட்டு சிலுவையில் மரணமடைந்த இயேசுவை நினைக்கிறவர்களாயிருப்பீர்கள். "இயேசுவினிமித்தம்" என்ற எண்ணம் செபத்தில் உங்களுக்குத் தைரியத்தைக்கொடுக்கும். கிறிஸ்துநாதரின் அருமையான இரத்தத்தின் மூலமாய் தேவனுக்குள் உங்களுக்கு எல்லாச் சமாதானமும் நம்பிக்கையுமுண்டாகும்.

அருமைப் பிள்ளைகளே, நான் என்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கலாமா என்று உங்களில் யாராவது கேட்கிறீர்களா? ஆம் நீங்கள் தாராளமாய் ஒப்புக்கொடுக்கலாம். தேவன் உங்கள்பேரில் வைத்திருக்கிற அன்பை விளக்குவிக்கத்தானே கிறிஸ்துநாதர் மரித்தது. "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வரத் தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்" என்று அவர் மரிக்குமுன்னமேயே சொல்லியிருப்பதை நினைத்துக்கொள்ளுங்கள். நீங்களும் தேவனுக்கு மிகவும் அருமையான சிறிய ஆலயங்களாகலாம். உங்களுடைய ஆலயப்பிரதிஷ்டை சாலமோனுடைய ஆலயப்பிரதிஷ்டையைப்பார்க்க அதிக மகத்தானதாயிருக்கலாம். சாலமோன் கட்டின ஆலயம் கொஞ்சக்காலத்துக்குள்ளாக அழிந்து பாழாய்க்கிடந்தது. அதின் மகிமையும் அற்றுப்போய் அதின் பலியும் நின்றுபோயிற்று. சீவனுள்ள இந்த ஆலயமோ மீட்கப்பட்டவர்கள் தேவனைத் தரிசிக்கும் மோட்சலோகத்திலும் தேவனுடைய மகிமையும் அவரது சமுகத்தின் சந்தோஷமும் நிறைந்ததாய் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்.

---

## சாலமோனின் அந்திய நாட்கள்.

1 இராசா 11: 1—25. பிரசங்கி அதி. 1, 2.

---

பூர்வீக சரித்திரத்தில் ஒரு ஞானியையும், ஒரு அரசனையுங்குறித்து நேர்த்தியான ஓர் கதை சொல்லியிருக்கிறது. அவ்வரசன் பூமியிலுள்ள அரசர்களிலெல்லாம் திரவிய சம்பன்னனும் மகத்துவமபொருந்தியவனுமிருந்தான். தூரதேசங்களிலுமிருந்து அநேகர் அவனுடைய இராச கொலுவைத் தரிசிக்க வந்துபோயிருப்பார்கள். ஒரு சமையத்தில் ஒரு ஞானியும் அவ்வாறே வர, இராசா அவனைக் கனிசமாயேற்றுக்கொண்டு, தன் அரண்மனையிலே வாசஞ்செய்ய அவனுக்கு இடங்



கொடுத்து உபசரித்தான். அப்புறம் ஒருநாள் இராசா அவனுக்குத் தன் திரவியசம்பத்துக்களையெல்லாம் காண்பித்து, எல்லாரிலும் நான் அதிகப் பாக்கியசாலியென்று நீ நினைக்கிறதில்லையா என்று கேட்டான். அதற்கு அந்த ஞானி, ஒருவன் இன்னவிதமாய் மரிக்கிறானென்று அறிகிறவரையில் அவனை மெய்யாய்ப் பாக்கியசாலியென்று எண்ணக்கூடாது என்று மறுமொழிசொன்னான். கிரீசஸ் என்று பெயர்கொண்ட அந்த அரசன் அப்பொழுது அந்த வார்த்தையைக்குறித்து மிகவும் விசனமாயிருந்தான். ஆகிலும் அந்த ஞானியாகிய சோலன் சொன்ன வார்த்தை மகா எதார்த்தமானதென்று அவ்வரசன் மரிக்கிறதற்குமுன் ஒரு சமையத்தில் அறிக்கையிட்டானென்று சொல்லியிருக்கிறது.

இப்பொழுது நாம், கிரீசஸ் என்பவனைப்பார்க்க அதிகத் திரவிய சம்பன்னனும் மகத்துவம்பொருந்தியவனுமிருந்தவனும், சோலனைப்பார்க்க அதிக ஞானியாயுமிருந்தவனுமான ஒருவனுடைய துக்ககரமான அந்தியகால விர்த்தாந்தத்தை யோசிக்கப்போகிறோம். சாலமோன் இராசா உலகத்திலுள்ள சகல மனிதரிலும் அதிக ஐசுவரியமும், ஞானமும், மகத்துவமுமுடையவனாயிருந்தானென்று அறிவீர்களே. ஆம், அவன் அடைந்திருந்த ஞானம் இந்தப் பாடத்தை அவனுக்குப் படிப்பித்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. என்றாலும் அதைச் சிந்தித்து நடக்கிறதற்கு அவனுக்குப் போதுமான ஞானமிருந்ததில்லை. அவனுடைய முந்திய நாட்கள் எவ்வளவு பிரகாசமும் மகிமையுமானவைகள்! அவனுடைய அந்திய நாட்களோ எவ்வளவு பிரலாபிக்கத்தக்கவைகள்! கடைசியில் அவன் மனந்திரும்பியிருப்பானோ என்று சந்தேகிக்கிறவர்களும் பலருண்டு.

வெகுகாலத்துக்குமுன் அவன் சிம்மாசனமேறின துவக்கத்தில் கிபேயோனில் கர்த்தருக்கு மகிமையான ஆராதனை செலுத்துவதில் ஒரு நாளைப் பின்னிட்டான். அந்த நாள் முழுவதும் பலிப்பீடத்தில் தகனமான பலிகளின் புகை வானத்துக்கு நேரே படல்படலாய் எழும்புகிறதாயிருந்தது. நூற்றுக்கணக்கான ஆசாரியர்கள் வெள்ளை அங்கிதரித்தவர்களாய் இங்குமங்கும் நடந்துகொண்டிருந்தார்கள். வெள்ளியெக்காளங்கள் ஓயாமல் தொனித்துக்கொண்டிருந்தன. கீதவாத்தியங்களின் ஓசையும் இன்பமான சங்கீத ராகங்களும் மனதைக் கவரத்தக்கவைகளாயிருந்தன. ஆராதனைக்குக் கூடிவந்திருந்த ஆயிராயிரமான சனங்களெல்லாம் தேவனைத் தொழுதுகொள்ள, அந்தப் பாலிய அரசனும் மிகுந்த சந்தோஷமுடையவனாய் கன பக்தியோடு அவர்கள் நடுவில் முழங்காலூன்றி கர்த்தரைத் தொழுதுகொண்டான். அன்றிரவில் அவன் உள்ளம் மகிழ்ச்சியினாலே பூரித்திருந்தும், இளைத்துப்போயிருந்ததினாலே படுத்துக்கொண்டு நித்திரைசெய்தான். நித்திரைசெய்கையில் நடு இராத்திரியிலே அவனுக்கு ஒரு தரிசனையுண்டாயிற்று. அது சொப்பனம்போலிருந்தும் நிசமான காரியந்தான். எப்படியென்றால் "நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள்" என்று சொன்ன தேவனுடைய சப்தம் தூங்குகிற அவனுடைய காதிலே விழுந்தது. அவன் நித்திரைசெய்தபோதிலும் அவனுடைய இருதயம் விழித்திருந்தது. (உன்னதப்பா. 5: 2) அவன் ஐசுவரியத்தையாவது, மகிமையையாவது, வல்லமையையாவது தெரிந்துகொள்ளாமல், ஞானமும் உணர்வுமுள்ள இருதயத்தை நிதானமாய்த் தெரிந்துகொண்டு கேட்டான். "நானோ போக்குவரவு அறியாத சிறு பிள்ளையாயிருக்கிறேன்" என்றான். அதன்பேரில் தேவன் அவன் கேட்டதைமாத்திரமல்ல, அதற்கு அதிகமாயும் கொடுப்பேனென்று வாக்கு அருளினார். "இதுவு

மன்றி நீ கேளாத ஐசுவரியத்தையும் மகிமையையும் உனக்குத் தந்
தேன்.' உன் நாட்களிலிருக்கிற இராசாக்களில் ஒருவனும் உனக்குச்
சரியானவன் இருப்பதில்லை" என்றார்.

---

## The Life of St Augustine, Bishop of Hippo.

## அகுஸ்தீன் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம்.

மகா கீர்த்திபெற்ற வேதசாஸ்திரியாராகிய அகுஸ்தீன் என்பவர்
கி. பி. 354-ம்-௵ நுமிதியாதேசத்து தெக்ஸ்தாப் பட்டணத்தில் அந்
தஸ்துள்ள குடும்பத்திற் பிறந்தவர். அவர் தந்தையின் பெயர் பத்திரி
சியு என்பது. இவர் மரிக்கிறதற்குக் கொஞ்சக்காலத்துக்குமுன்னே
தான் விக்கிரகபக்தியை விட்டுக் கிறிஸ்துமார்க்கத்தை அனுசரித்தார்.
அவர் தாய் கிறிஸ்துமார்க்கப் பக்தியிற் சிறந்து விளங்கின மோனிக்
கா என்பவள். அகுஸ்தீன் சிறுபிராயமாயிருக்கையில் கொடிய வியா
தியுண்டாகி மரணத்தறுவாயிலிருந்தார். அச்சமையத்தில் அவர் மன
தில் சொல்லமுடியாத பயமும் திகிலுமுண்டானதால், கிறிஸ்துமார்க்
கத்தில் ஞானஸ்நானம்பெற்றுக்கொள்ள மிகுந்த ஆவலோடு கெஞ்சிக்
கேட்டார். ஆகிலும் மேற்படி வியாதி அதிதீவிரமாய்த் தணிந்துபோ
கவே, ஞானஸ்நானத்தைக்குறித்திருந்த கவலையும் போய்விட்டது
அவர் மனதிலுண்டான நல்லுணர்வுகளுமெல்லாம் அற்றுப்போயின.
அதுமுதல் தேவனைக்குறித்தாவது, ஆத்துமத்தைக்குறித்தாவது எவ்வ
ளவேனும் எண்ணமும் சிந்தனையுமில்லாதவராய் வளர்ந்துவந்தார்.

அகுஸ்தீன் முதலாவது மதாரா என்ற இடத்திலும் அப்புறம் கர்த்
தாகோ நகரத்திலும் கல்வி அப்பியாசஞ்செய்தார். அவர் இயல்பாய்
வெகு திறமையுள்ளவரானதால், சொற்சாதுரியத்திலும் கலைஞானத்
திலும் தேறின வித்வானானார். அதினால் அவர் பெற்றோருக்கும், உற
வினர்களுக்கும் உண்டான சந்தோஷம் கொஞ்சமல்ல. ஆகிலும் அவர்
உலகத்திலே பிரஸ்தாபமடையவேண்டுமென்பதே அவர்களுடைய கோ
றிக்கை. அவரோ மார்க்க அபிமானம் கொஞ்சமேனுமில்லாமல் சகல
மான துன்மார்க்கங்களையும் ஆவலோடு நடப்பித்துவந்தார். அவர்
தாய் எவ்வளவாய் எச்சரித்துப் புத்திசொல்லியும் அதையெல்லாம்
அவர் பொருட்டாயெண்ணவில்லை. துன்மார்க்கத்தில் பொல்லாத தன்
சிநேகிதர்களெல்லாரையும் மிஞ்சிவிடவேண்டுமென்று விரும்பினவர்
போல விளங்குவார். இப்படி அவர் நடந்துவருகிறகாலத்திலும் அவர்
ஓரோர்வேளை தேவனைநோக்கிப் பிரார்த்திக்கிறதுண்டு. அவர் பிரார்த்
திக்கும்பொழுது, "கர்த்தாவே என்னைக் குணப்படுத்தும், ஆகிலும்
இப்பொழுது வேண்டாம்" என்று விண்ணப்பம்பண்ணுவார். அக்கா
லத்தில் அவர் நினைத்தபடி சுவிசேஷத்தின் பாரமான நுகத்தடியை
யும், வருத்தமான பாரத்தையும் ஏற்றுக்கொள்ளுமுன்னே, உலகங்
கொடுக்கக்கூடிய எல்லாச் சிற்றின்பங்களையும், பாவ சந்தோஷங்களை
யும் நிறைவாய் அனுபவிக்கவேண்டுமென்று விரும்பி நடந்தார்.

கர்த்தாகோ நகரத்தில் அவர் சஞ்சரிக்கிற காலத்தில் அவருடைய
அபிப்பிராயங்களில் ஒரு விசேஷித்த மாறுதலுண்டாயிற்று. இதுவரை
யும் அவர் சொற்சாதுரியத்திலேயே முக்கியமாய்ப் பிரஸ்தாபமடைய



விரும்பி அதையே அப்பியாசித்துவந்தார். அப்படி அப்பியாசித்துக்
கொண்டுவருகையில், சிசரோ என்பவர் எழுதின ஓர் நூலை வாசித்த
தின்பேரில் சாஸ்திராப்பியாசஞ்செய்ய ஏவப்பட்டார். அதுமுதல்
கிரேக்கரைப்போல் ஞானத்தை ஆவலாய்த் தேடினார். ஆகிலும் உலக
ஞானம் அவருக்குத் திர்ப்தியைக்கொடுக்கவில்லை. அவர் எவ்வளவு
துன்மார்க்கமாய் நடந்துவந்தபோதிலும், சிறுபிராயமுதலே தம் தா
யின் பக்தியான மாதிரியினால் கிறிஸ்துவின் நாமத்தைக் கனிசமாயெ
ண்ணக் கற்றுக்கொண்டிருந்தார். அந்த நாமம் ஞானிகளுடைய நூல்
களிலெங்குங் காணப்படாமையால் வேதாகமத்தை வாசித்துப்பார்க்
கத் தீர்மானித்தார். என்றாலும் அகந்தையான புத்தியோடும் ஆணவ
மான சிந்தையோடும் அவர் அதை வாசிக்கத் துணிந்ததினால் அதில்
ஒரு பிரியமும் அருமையும் அவருக்குத் தோன்றவில்லை. அவர் மேட்
டிமைக்கு அது வெறுப்பாயிருந்தது. அவருடைய கூர்மையான புத்
தியும் அதன் பொருளைக் கிரகிக்கக்கூடவில்லை. எவர்கள் சிறு பிள்ளை
களைப்போல தேவவசனத்தை வாசிக்கிறார்களோ அவர்கள்தானே கிறி
ஸ்துநாதர் தேவ பலமாயும் தேவ ஞானமாயுமிருக்கிறாரென்று கண்டு
ணர்வார்கள். அகுஸ்தீன் என்பவரோ அகந்தையினாலே பொங்கி தம்
மைத் தேர்ந்த ஞானியென்று எண்ணிக்கொண்டபடியால், இன்னம் சிறு
பிள்ளைபோலாகிறது அவருக்கு இகழ்ச்சியாய்க்காணப்பட்டது. அவர்
இந்தச் சீரிலிருக்கும்பொழுது, தப்பறைக்காரரான மனிக்கேயரில்
சிலர் அவருக்குக் குறுக்கிட்டார்கள். இவர்கள் பிதா குமாரன் பரிசுத்
தாவி என்னுஞ் சொற்களை ஓயாமல் உச்சரிக்கிறவர்களாயும், சத்தியம்
சத்தியம் என்று எப்பொழுதும் அலப்பிக்கொண்டு திரிகிறவர்களாயுமி
ருந்தபோதிலும், அவர்களுடைய கொள்கைகளில் அநேகம் அஞ்ஞா
னிகளுடைய கொள்கைகளையும்பார்க்க அவலட்சணமானவைகள். கட
வுள் ஜடப்பொருளின் தன்மையாய் சமஸ்த பொருட்களிலும் வியாபி
த்திருக்கிறாரென்பது அவர்களுடைய சித்தாந்தங்களில் ஒன்று. மேலும்
நல்லதும் பொல்லாததுமான இரண்டு சுயாதீன ஆவிகள் உண்டென்ப
து அவர்களுடைய முக்கிய உபதேசம். இவ்வித அவபக்தியான தேவ
தூஷணங்களைப் போதித்த இவர்களிடத்தில் தாம் நாடித்தேடும் ஞா
னமிருக்கிறதென்று அகுஸ்தீன் அனர்த்தமாயெண்ணி, அவர்களுடைய
கொள்கைகளை அனுசரித்துக்கொண்டார்.

அகுஸ்தீன் இவ்விதமாயேமாற்றப்பட்டதினிமித்தம் அவர் தாய் மிகு
தியும் பிரலாபித்து, அவரோடு எவ்வளவாய் நியாயம் பேசியும் ஒன்
றும் பலிதமாகவில்லை. ஆயினும் இக்காலத்தில் அவள் கண்ட ஒரு
சொப்பனம் தன் மகன் சீர்ப்படுவானென்று நினைத்து தைரியங்கொள்
ள ஏதுவாயிருந்தது. அதெப்படியெனில், அவள் ஒரு பலகையின் மீது
நின்றுகொண்டு அகாதமான ஓர் படுகுழியில் வீழ்ந்து அழிவுக்கேது
வாயிருந்த தன் மகனைப்பார்த்துப் பிரலாபித்ததாயும், அப்பொழுது
ஒருவர் வந்து அவளைப்பார்த்து. நீ ஏனிப்படிப் பிரலாபிக்கிறாயென்று
கேட்டதாயும், அவள் தான் பிரலாபித்த காரணத்தைச் சொல்ல, அதன்
பேரில் அந்த ஆள், பயப்படாதே, நீ எங்கேயிருக்கிறாயோ அங்கே உன்
மகனும் இருப்பானென்று சொன்னதாயும், உடனே அவன் தன்னோடு
பலகையில் வந்து நிற்கப் பார்த்ததாயும் சொப்பனத்தில் கண்டாள்.
அவள் இந்தச் சொப்பனத்தை அகுஸ்தீனுக்கு விவரித்துச் சொன்ன
பொழுது, அவர் அதின் பொருளைப் புரட்டி, நானிருக்கிற பிரகாரம்
நீயுமிருக்கவேணுமென்பதுதான் அதின் கருத்து என்று பிதற்றினார்.
அவள் அதற்கு, 'அப்படியல்ல, அவனிருக்கிற இடத்தில் நீ இருப்பா

யென்று சொல்லப்படாமல், நீ இருக்கிற இடத்தில் அவனுமிருப்பானென்றல்லவா சொல்லப்பட்டது'' என்று தீர்மானமாய் உத்தரஞ் சொன்னாள். அவள் சொன்ன இந்த உத்தரம் அக்காலத்திலும் என் மனதிற் பலமாய்த் தைத்தது என்று அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். பல வருஷமாய் அந்த அருமைத் தாயானவள் தன் மகன் குணப்படவேண்டுமென்று செபத்திலே தேவனோடு போராடிக்கொண்டே வந்தாள். அவர் பாவச்சேற்றிலே புரண்டு நாளுக்குநாள் அதிகமதிகமாய் அதில் அமிழ்ந்துகொண்டுவந்தது கண்டும், அவள் விடாமல் செபம் பண்ணிக்கொண்டேவந்தாள். அவரைக் கண்டித்து நியாயம்பேசிப் புத்திசொல்லும்படி அவள் ஒரு கண்காணியாரைக் கேட்டுக்கொண்டபொழுது, அவர், இப்பொழுது அவனைக் கண்டிக்கிறது அவனை அதிகமாய்க் கடினப்படுத்துமேயன்றி வேறல்ல, சிறிதுகாலத்துக்குப்பின் தான் நடக்குங் கேடான வழியைக் கண்டுகொள்வான் என்று நினைத்து, மாட்டேனென்று மறுத்துவிட்டார். அவர் சொன்ன இம்மறுத்தரத்தைக் கேட்டு அவள் போய்விடாமல், அதிகமாய் அழுதுகொண்டு அந்தப்படி செய்யவேண்டுமென்று திரும்பவும் அவரை மன்றாடவே, கண்காணியார் அவளை நோக்கி, "நீ போ, இவ்வளவு கண்ணீர் சிந்தப் பெற்ற அந்தப் பிள்ளை கெட்டுப்போகவேமாட்டாது'' என்றார். இந்த வார்த்தைகள் பரலோகத்திலிருந்து வந்த ஒரு சப்தம்போல் தன் மனதில் நன்றாய் அழுந்திப் பதிந்ததாக பிற்காலத்தில் தன் மகனிடத்தில் சொல்லியிருக்கிறாள்.

அகுஸ்தீன் தாமே தம்மைக்குறித்து எழுதியிருக்கிறதாவது ;—"ஒன்பது வருஷம் நான் என்னையும் பிறரையும் வஞ்சிக்கிறவனாய் நடந்தேன். நானே துர் இச்சைகளுக்கு அடிமைப்பட்டவனாயிருந்து மற்றவர்களைச் சொல்லமுடியாத கேடுபாடுகளுக்கு ஏவிவிடுகிறவனாயுமிருந்தேன். வீண் பெருமையை நாடி, கல்விப்பெருமையினாற் பொங்கி, மனிக்கேயர் அனர்த்தங்களில் உழன்று திரிந்தேன். தங்களை அறியாத வீணர் என்னை இகழ்ந்தபோதிலும், என் தேவனே உமக்கு மகிமையுண்டாக என் வெட்கத்தை உம்மிடத்தில் அறிக்கையிடுகிறேன். தேவரீர் என் மதியீனத்துக்கு என்னை விட்டுவிடுவீராகில், நான் என்னையே கெடுத்துக்கொண்டு பிறரையும் மோசப்படுத்துகிறவனாவேன். நான் சீர்ப்பட்டபிறகும் அழியாத் அப்பமாகிய தேவரீரால் போஷிப்பிக்கப்படுகிற குழந்தைக்கு ஒப்பாகவேயிருக்கிறேன். "அகங்காரிகள் எங்களை இகழட்டும், பலவீனரும் நீசருமாகிய நாங்களோ தேவரீரிடத்தில் எங்கள் நிற்பாக்கியத்தை அறிக்கையிடுவோம்'' என்பதுபோல, குணப்பட்டபிற்பாடு தம் முந்திய சீர்கேடான நிலைமையைப்பற்றிப் பிரலாபித்து எழுதியிருக்கிறார்.

இக்காலத்தில் அகுஸ்தீன் அணியிலக்கணம் கற்பித்து அதினாற் கிடைத்த வருமானத்தினால் சீவனம்பண்ணிவந்தார். முதலாவது தமது ஊரிலே அவர் சிறிதுகாலம் கல்விப்போதனை செய்துவருகையில், தம்மாலே மனிக்கேயர் தப்பறையில் சிக்கிக்கொண்ட ஒரு வாலிபன் மரித்துப்போன வியாகுலத்தினால் அவர் அவ்விடம்விட்டுப்போய் கர்த்தாகோ நகரத்தில் ஸ்தாபகமானார். இங்கே அவர் சஞ்சரிக்கிறகாலத்தில், தாம் அனுசரித்திருந்த தப்பறையைக்குறித்து, அவர் மனதில் பல சந்தேகங்கள் எழும்பின. அவ்விடத்திலுள்ள அவருடைய சிநேகிதர்களிலொருவரும் மேற்படி சந்தேகங்களை நீக்கக்கூடாமற்போனபடியால், அவ்வகுப்புத் தலைவர்களில் ஒருவனான வெகு பிரஸ்தாபமடைந்திருந்த பாஸ்து என்பவன் கர்த்தாகோ நகரிக்கு வருமளவும் காத்திருக்கும்படி



யோசனை சொன்னார்கள். இந்த பாஸ்து என்பவன் சாதுரியப் பிரசங்கி, தேறின கல்விமானென்று கீர்த்தியும்பெற்றவன். அவன் அவ்விடம் வந்தபோது அகுஸ்தீனுக்கு இருபத்தொன்பது வயசு. அகுஸ்தீன் வெகுநாள் அவனோடு தாராளமாய்ச் சம்பாஷித்துவந்ததில், மேற்படி மனிக்கேயர் குரு சுத்த மூடனென்று கண்டுகொண்டார். அதற்குப் பிறகும் அவர் கொஞ்சக்காலம் அந்த வகுப்பைச் சேர்ந்திருந்தது மெய். ஆனால் அவர்கள் உபதேசத்தை நம்பினதினாலேயல்ல, வேறெங்கும் சத்தியத்தைக் கண்டுகொள்ளக்கூடாதென்று அவர் வீணாய் நினைத்ததே அதற்குக் காரணம். அப்புறம் அவர் ரோமை நகரியிலபோய் கல்விப் போதனைசெய்யப் பிரயத்தனம்பண்ணினார். ஆப்பிரிக்காவில் அவர் கண்டுபிடிக்கக்கூடாமற்போன சத்தியத்தை இத்தாலியாவிற கண்டு கொள்ளும்படி தேவன் சித்தமாயிருந்தார். அவர் ரோமை நகரிக்குப் போவது தாய்க்குப் பிரியமில்லாமல், அங்கு போவதினால் அவர் ஆத்துமத்துக்கு அதிகக் கெடுதியுண்டாகுமோவென்று பயந்து, அவர் போகாதபடி நிறுத்தப்பார்த்தாள். ஆகிலும் அவர் அவளுக்குத் தெரியாமல் புறப்பட்டுவிட்டார். "பாவச் சேற்றில் நான் எவ்வளவாய் அமிழ்ந்தினவனாயிருந்தும், கடலின் மோசங்களினின்று காப்பாற்றப்பட்டேன். கர்த்தாவே, என் தாய் பூமியை நனைத்த அவள் கண்ணீரையெல்லாம் தேவரீர் துடைத்து, இந்த என் துரோகப்புத்தியையும் கீழ்ப்படியாமையையும் மன்னிக்கிற காலம் கிட்டி வந்துவிட்டது. நான் கப்பலில் பிரயாணப்படாதபடிக்கல்லவா அக்காலத்தில் அவள் தேவரீரை வேண்டிக்கொண்டது. தேவரீரோ ஆழ்ந்த ஞானத்தினால் இந்த அவள் விண்ணப்பத்தை மறுத்து அவளுடைய முக்கிய கோரிக்கையை நிறைவேற்றினீர்'' என்று குறிப்பித்திருக்கிறார்.

---

## THE SCRIPTURE GAZETTEER.

## வேத இடப்பேர் அகராதி.

*இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.*

(தொடர்ச்சி)

520. செக்காக்கா. யூதா வனாந்தரத்தில் பட்டணம். சவக்கடலுக்குச் சமீபத்திலென்று நினைக்கப்படுகிறது. யோசு. 15: 61.

521. செசரியா. கி. மு. 22-ஆம் மகா ஏரோது மெதித்திரானியாக் கடற்கரையில் இதைக்கட்டி, செசரியாசெபாஸ்தே என்று பேரிட்டான். இதில் ரோமை அதிபதிகள் வாசம்பண்ணினார்கள். அப். 8: 40. 9: 30. 21: 8, 16. 10: 1, 24. 11: 11. 23: 19

522. செசரியா-பிலிப்பு. யோர்தானின் உற்பத்திக்குச் சமீபத்தில். இது முதலில் பேனியம் என்று அழைக்கப்பட்டது. ஏரோது இதை பெரிதாக்கினான். பிலிப்பு இதைக் கட்டிமுடித்து தன் பெயரையிட்டான். மத். 16: 13.

523. செபாரீம், யூதாவில் பட்டணம். யோசு. 7: 5.

524. செபுலோன். (வாசம்பண்ணுதல்) ஒரு கோத்திரம். யோசு. 19: 10.

525. செபோயீம். (1) சித்தீம் பள்ளத்தாக்கிலுள்ள பட்டணங்களில் ஒன்று. ஆதி. 10: 19.
(2) பென்யமீனில் ஒரு பட்டணமும், பள்ளத்தாக்கும். 1 சாமு. 13: 18.

526. செப்பத்தா. ஒரு பள்ளத்தாக்கு, மரேசாவுக்குக் கிட்ட. 2 நாளா. 14: 10.

527. செப்பர்வாயிம். (இரண்டு வேதபாரகர்) ஆபாவுக்குத் தெற்கே பட்டணம். ஐபிராத்து, கேபார் இந்த நதிகள் சேருகிற இடத்தில். 2 இரா. 17: 24.

528. செப்பார். அரபியின் தென்கரையோரத்தில் யொக்தெதானியரின் கீழ் எல்லையை அடக்கிய மலைக்குப் பேர். ஆதி. 10: 30.

529. செமராயிம். பென்யமீனில் பட்டணம். பெத்தேலுக்கும், யோர்தானின் பள்ளத்தாக்குக்கும் நடுவே. யோசு. 18: 22.

530. செமாரியர். காமாத்தியரில் ஒரு வகுப்பார். ஆதி. 10: 18. 1 நாளா. 1: 16. திரிப்போலைக்கு வடக்கில்.

531. செரேத்சகார். (அருணோதயமினுக்கம்) ரூபனில் ஒரு கிராமம். யோசு. 13: 19.

532. செலூக்கியா. சீரியாவில் ஓராண்டிஸ்நதியின் கழிமுகத்தில் பட்டணம். அப். 13: 4.

533. செல்சாகு. பென்யமீன் எல்லையில் பட்டணம். ராகேல் கல்லறைகிட்ட. 1 சாமு. 10: 2.

534. செவெனே. (திறவுகோல் போன்ற அல்லது கரையோரமான கோட்டை) எகிப்தில் பட்டணம். எத்தியோப்பியாவுக்கும், எகிப்துக்கும் நடுவே. எசே. 29: 10. 30: 6.

535. சேக்கு. ராமாவுக்குச் சமீபமான ஊர். 1 சாமு. 19: 22.

536. சேசாக்கு. பாபிலோனுக்குப் பேர். எரே. 25: 26.

537. சேண். (பல்) ஒரு பாறை. 1 சாமு. 7: 12.

538. சேதாத். கானானின் வட எல்லையில், பேயெல்பெக்கிட்ட. எண். 34: 8. எசே. 47: 15.

539. சேபா. (1) கூஷின் சந்ததியார். வட எகிப்திலுள்ளவர்களென்று நினைக்கப்படுகிறது. சபேயர் இவர்களாயிருக்கலாம். ஆதி. 10: 7. 1 நாளா. 1: 9.
(2) கேத்தூராளின் சந்ததியாரான அரபியர். ஆதி. 25: 3. 1 நாளா. 1: 32.
எசா. 60: 6. எரே. 6: 20. எசேக். 27: 22, 23. 38: 13. இந்த வாக்கியங்களில் இவ்விரு வகுப்பாரில் யார் குறிக்கப்படுகிறார்களென்று தெரியவில்லை
(3) அரபியின் தென்பக்கத்தில் குடியேறின யொக்தானுடைய சந்ததியாரான சேபியர். ஆதி. 10: 28. 1 இரா. 10: 1, 4, 10, 13. 1 நாளா. 1: 22. 2 நாளா. 9: 1, 3, 9, 12. யோபு 6: 19. சங். 72: 10, 15.
(4) சிமியோனில் பட்டணம். யோசு. 19: 2.
(5) ஒரு கிணறு. ஆதி. 26: 33.
(6) யோர்தானுக்குக் கிழக்கே ஒரு இடம். சிப்மா இதாயிருக்கலாம். எண். 32: 3.

540. சேபாம். ரூபனில் பட்டணம். எண். 32: 3.

541. சேப்பாத். தென் பலஸ்தீனாவில் பட்டணம். பிற்காலத்தில் ஓர்மா என்று பேர். நியா. 1: 17.



542. சேப்பாம். பலஸ்தீனாவின் கீழ் எல்லையில் பட்டணம். எண். 34: 10.

543. சேப்பாராத். லீதியாவிலுள்ள சர்தை என்று நினைக்கப்படுகிறது. ஒப். 20.

544. சேமா. தென் யூதாவில் பட்டணம். யோசு. 15: 26. 1 நாளா. 2: 43, 44.

545. சேயிராத். எப்பிராயீம் மலைத்தேசத்தில் ஒரு இடம். நியா. 3: 26.

546. சேயீர். (1) சவக்கடல் முதல் எலாநிற்றிக் குடாக்கடல்வரையும் எட்டியிருக்கிற ஏதோமியர் மலைத்தேசம். ஆதி. 14: 6.
(2) யூதாவின் வட எல்லையில் ஒரு மலை. யோசு. 15: 10.

547. சேர். நப்தலியில் பட்டணம். கெனேசரேத் கடல்கிட்ட என்று நினைக்கப்படும். யோசு. 19: 35.

548. சேலா. (கன்மலை) (1) பெத்ரா இதுதான் என்று நினைக்கப்படுகிறது. அரபியாபெத்ரியாவுக்குத் தலைநகர். 2 இரா. 14: 7. ஏசா. 16: 1. (கன்மலை. நியா. 1: 36. 2 நாளா. 25: 12. ஒபதி. 3)
(2) பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 28. இது மயானஸ்தானமானதினாலே கீஸ், சவுல் இவர்கள் வாசம்பண்ணின இடமாயிருக்கலாம்.

549. சேலா அம்மாலிகோத். (பிளப்பான கன்மலை) சவக்கடலுக்கு மேற்கிலிருக்கிற வனாந்தரத்தில். 1 சாமு. 23: 28.

550. சேனாகு. யூதாவில் பட்டணம். எஸ்றா. 2: 35. நெகே. 3: 3. 7: 38.

551. சேனான். யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 37.

552. சேனீர். எர்மோன் மலைக்கு எமோரியப் பேர். உபா. 3: 9. 1 நாளா. 5: 23.

553. சேனே. மிக்மாஸ் பாதையிலிருக்கும் ஒரு செங்குத்துப் பாறை. 1 சாமு. 14: 4.

554. சோகோ. 1 சாமு. 17: 1. 2 நாளா. 11: 7. 28: 18.

555. சோக்கோ. (1) யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 35. 1 இரா. 4: 10.
(2) யூதாவின் மலைநாட்டில் பட்டணம். யோசு. 15: 48.

556. சோதோம். சித்தீம்பள்ளத்தாக்கிலிருந்த 5 பட்டணங்களில் முக்கியமானது. இந்த ஐந்தும் சவக்கடலின் வடபக்கத்திலிருந்தது. ஆதி. 10: 19.

557. சோபான். காத்தில் பட்டணம். எண். 32: 35.

558. சோரேக். (திராட்சச்செடி) பெலிஸ்தியர் தேசத்தில், காத்துக்குச் சமீபமாயுள்ள பள்ளத்தாக்கு. நியா. 16: 4.

559. சோவா. அசீரியாவில் ஒரு நாடு. எசேக். 23: 23.

560. ஸ்பானியா. ரோமருடைய நாடு. முற்காலத்தில், ஸ்பானியாவும், போர்த்துக்கல்லும் சேர்ந்து இப்பேரால் அழைக்கப்பட்டது. ரோமர் 15: 24, 28.

561. தகபானேஸ். வட எகிப்தின் கீழ்கரையில், அரணான பட்டணம். எரே. 2: 16. 43: 7, 8. எசே. 30: 18.

562. தத்மோர். சீரியா வனாந்தரத்தில் சாலோமோன் கட்டின பல்மைரா நகர் இது என்று தோன்றும். 1 இரா. 9: 18. 2 நாளா. 8: 4.

563. தப்புவா. (1) யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். எரு

சலேமுக்கு மேற்கே 12 மயில் தூரம். யோசு. 14: 8. 15: 34.

(2) எப்பிராயீம், மனாசே இந்தக் கோத்திரங்களின் எல்லையில் ஒரு பட்டணத்துக்கும் (யோசு. 16: 8) ஒரு நாட்டுக்கும் (யோசு. 17: 8) பேர்.

564. தமஸ்கு. சீரியாவுக்குத் தலை நகர். மிகவும் பூர்வீகமானது. ஆதி. 14: 15.

565. தம்மீம். யூதாவில் ஒரு இடம். எபேஸ்தம்மீம் இதுதான். 1 சாமு. 17: 1.

566. தர்சீஸ். கல்விக்குறைவிடமான பெரிய பட்டணம். ஸ்பானியாவில் என்று நினைக்கப்படும். ஆதி. 10: 4. 1 நாளா. 1: 7. 2 நாளா. 9: 21. சங். 48: 7. ஏசா. 23: 1. எரே. 10: 9. எசே. 27: 12. யோனா 1: 3. 4: 2.

567. தர்சு. சிலிசியாவுக்குத் தலை நகர். பவுலப்போஸ்தலனின் ஜநன ஊர். அப். 9: 11.

568. தர்பேலியர். பாரசீகரால் சமாரியாவில் குடியேற்றப்பட்ட அசீரியர். எஸ்றா. 4: 9.

569. தல்மனூத்தா. கலிலேயாக் கடலின் மேல்கரையில் ஒரு ஊர். மகதலா கிட்ட. மாற். 8: 10.

570. தல்மாத்தியா. ஆதிரியாக்கடலின் கீழ்கரையில், இல்லிரிக்கைச்சேர்ந்த நாடு. 2 தீமோ. 4: 10.

571. தன்னா. யூதாவின் மலைநாட்டில் பட்டணம். யோசு. 15: 49.

572. தாகாத். வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயம் இறங்கின இடம். எண். 33: 26, 27.

573. தாண். (நியாயந்தீர்க்கிறவன்) 12 கோத்திரங்களில் ஒன்று. யோசு. 19: 48.

(2) நப்தலியிலுள்ள லாகீஸ் என்னும் பட்டணம். யோசு. 19: 47.

(3) பெனிக்கியாவைக்குறிக்கும்படி, யாவானோடு சேர்ந்து வருகிற ஒரு இடப்பேர். எசே. 27: 19.

574. தாண்யகண். பலஸ்தீனாவின் வடக்கில். தாண் இதுதான். 2 சாமு. 24: 6.

575. தாதிம்ஹொத்ஸி. ஒரு நாடு. 2 சாமு. 24: 6.

576. தாபசேத். (தேன் ஒட்டை) செபுலோனில் பட்டணம். யோசு. 19: 11.

577. தாபராத். செபுலோனில் (யோசு. 19: 12, 28) அல்லது இசக்காரில் (யோசு. 21: 28) லேவியர் (கெர்சோனியர்) பட்டணம்.

578. தாபாத். யோர்தான் நதியில், இசக்காரில் பட்டணம். நியா. 7: 22.

579. தாபேரா. (எரிகிறது) பாரான் வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயம் இறங்கின இடம். எண். 11: 3. உபா. 9: 22.

580. தாபோர். (1) செபுலோன், நப்தலி இந்தக் கோத்திரங்களின் எல்லையில், நாசரேத்துக்குச் சமீபமாயிருக்கிற மலை. நியா. 4: 6, 12, 14. 8: 18. சங். 89: 12. எரே. 46: 18.

(2) இசக்காரில் அல்லது செபுலோனில் லேவியர் (மெராரியர்) பட்டணம். யோசு. 19: 22. 1 நாளா. 6: 77.

(3) பென்யமீனுக்குச் சமீபத்தில் ஒரு [illegible]தோப்பு. "சமபூமி." 1 சாமு. 10: 3.



581. தாமார். யூதாவின் தென்கிழக்கில் பட்டணம். எசே. 47: 19. 48: 28.

582. தாராகு. வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயம் இறங்கின இடம். எண். 33: 27, 28.

583. தாராலா. பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 27.

584. தானாகு. யோசு. 21. 25.

585. தானாக்கு. மனாசேயில் லேவியர் பட்டணம். யோசு. 12: 21. 17: 11. நியா. 1: 27.

586. தானாத்சீலோ. எப்பிராயீமின் எல்லையில் பட்டணம். யோசு. 16: 6. சீலோ இதாயிருக்கலாம்.

587. திசாகாப். (பொன் மிகுத்த இடம்) சீனாய் வனாந்தரத்தில், அக்கபாக்குடாவின் மேல்கரையில். உபா. 1: 2.

588. திஸ்பி. நப்தலியில் பட்டணம் (1 இரா. 17: 1 திஸ்பி ஊரான்)

589. திதான். (1) பாரசீகக் குடாவையடுத்திருந்த கூஷியர். ஆதி. 10: 7.

(2) கேத்தூராளாலே ஆபிரகாமுக்குப் பிறந்த யக்ஷானின் சந்ததியார். இதுமேயாவின் கரையோரத்தில் குடியேறினவர்கள். ஆதி. 25: 3.

590. திபேரியா. கலிலேயாக் கடல். யோவா. 6: 1, 23.

591. திப்காத். சீரியாவின் சோபாவில் பட்டணம். 1 நாளா. 18: 8.

592. திப்சா. ஐபிராத்து நதியில் ஒரு பெரிய பட்டணம். 1 இரா. 4: 24. 2 இரா. 15: 16.

593. திப்லத்தாயிம். அல்மோன் திப்லத்தாயிம் பார்.

594. திமோனா. யூதாவில் தெற்கே பட்டணம். யோசு. 15: 22. தீபோன் பார்.

595. திம்னா. (1) ஏதோமியரில் ஒரு வகுப்பார். ஆதி. 36: 40.

(2) யூதாவின் வட எல்லையில். யோசு. 15: 10. திம்னாதா இதுதான்.

(3) எபிரோனுக்குத் தெற்கே, யூதாவின் பரும்புக் காட்டில். யோசு. 15: 57.

(4) செபுலோனில் லேவியர் (மெராரியர்) பட்டணம். யோசு. 21: 35.

596. திம்னாதா. தாணில். யோசு. 19: 43.

597. திம்னாத்ஏரேஸ். அல்லது திம்னாத்சேரா. யோசுவா அடக்கம் பண்ணப்பட்ட இடம். நியா. 2: 9.

598. திராகோனித்தி. அந்திலீபனோன் மலைக்கும், அரபி மலைகளுக்கும் இடையில், தமஸ்குவுக்குத் தெற்கும், ஆரானித்திக்கு மேற்குமாயிருந்த நாடு. லூக். 3: 1.

599. திர்சா. எப்பிராயீமில் பட்டணம். இஸ்ரவேல் ராஜாக்களில் சிலருடைய மாளிகை இதிலிருந்தது. யோசு. 12: 24.

600. திலியான். யூதாவின் பள்ளத்துக்காட்டில் பட்டணம். யோசு. 15: 38.

601. தின்காபா. ஏதோமின் ராசாவாகிய பேலாவின் பட்டணம். ஆதி. 36: 32.

602. தீபோன். அல்லது தீபோன்காத். (1) காதியர் கட்டின பட்டணம். ரூபனில். எண். 21: 30.

(2) யூதாவில் தெற்கே பட்டணம். நெகே. 11: 25. திமோனா என்றும் சொல்லப்படும்.

603. தியத்திரா. லீதியாவின் வட எல்லையில் பட்டணம். அப். 16: 14.

604. தீராஸ். யாப்பேத்தின் சந்ததியாரில் ஒருவகுப்பார். ஆதி. 10: 2.

605. மெதித்திராணியாக்கடலின் கீழ்கரையில் வியாபாரத்தில் பேர்போன பூர்வீக பட்டணம். யோசு. 19: 29. 2 சாமு. 5: 11. சங். 83: 7. ஏசா. 53: 1, 5, 8, 15, 17.

606. தீருவியர். அசீரியாவின் குடிகள். எஸ்று. 4: 9.

607. துரோகில்லியோன். சின்ன ஆசியாவில் சாமுதீவுக்கு எதிரான முனைக்கும், பட்டணத்துக்கும் பேர். அப். 20: 16.

608. துரோவா. சின்ன ஆசியாவில் மீசியா நாட்டுக் கடற்கரையோரமான பட்டணம். அப். 16: 8.

609. தூபால். யாப்பேத்தின் சந்ததியாரில் ஒரு வகுப்பார். சின்ன ஆசியாவில் யூக்ஸ்யின் கடலருகாய்க் குடியேறினதாக நினைக்கப்படும். ஆதி. 10: 2.

610. தூமா. இஸ்மவேலர். ஆதி. 25: 14. 1 நா. 1: 30. ஏசா. 21: 11.
(2) யூதாவின் பரும்புக்காட்டில் பட்டணம். யோசு. 15: 52.
(3) ஏதோமில் ஒரு இடம். ஏசா. 21: 11.

611. தூரா. பாபிலோனியாவில் ஒரு சமபூமி. இப்பொழுது பேபிலுக்குத் தென்கிழக்கிலிருக்கிற டியூயர்கிட்ட இருந்ததென்று நினைக்கலாம். தானி. 3: 1.

612. தெகாவியர். ஆரியரில் ஒரு வகுப்பார். பாரசீகருக்கு கப்பம் கட்டினவர்கள். தென்மார்க்கருடைய முற்பிதாக்களென்று நினைக்கப்படுகிறது. எஸ்று. 4: 9.

613. தெக்கப்போலி. (பத்துப் பட்டணங்கள்) பலஸ்தீனாவுக்கு வடகிழக்கில் 10 பட்டணங்களடங்கிய ஒரு நாடு. மத். 4: 25. மாற். 5: 20. 7: 31. அந்த பட்டணங்களாவன:—சைதோப்போலிஸ், ஹிப்போஸ், கதரா, பிலதெல்பியா, பெல்லா, கெரசா, டையோன், கனதா, தமஸ்கு, ரப்பானா. இவைகளில் முதல்பட்டணம் தவிர, மற்றவையெல்லாம் யோர்தானுக்குக் கிழக்கேயிருக்கின்றன.

614. தெக்கோபா. (எக்காளம்) யூதாவில் பட்டணம். பெத்லகேமுக்குத் தெற்கே 6 மயில் தூரம். 2 சாமு. 14: 2. இதையடுத்திருந்த வனாந்தரமும் இதின் பேரால் அழைக்கப்பட்டது. 2 நாளா. 20: 20.

615. தெசலோனிக்கே. மக்கெதோனியாவில் பட்டணம். அப். 17: 1.

616. தெபீர். (1) யூதாவின் பரும்புக்காட்டில் லேவியர் பட்டணம். எருசலேமுக்குத் தென்மேற்கே 30 மயில் தூரம். எபிரோன்கிட்ட; கீரியாத்சேபேர் இதுதான். யோசு. 10: 38.
(2) யூதாவின் வட எல்லையில் எரிகோவுக்கும், எருசலேமுக்கும் நடுவே ஒரு இடம். யோசு. 15: 7.
(3) காத்தின் எல்லையில். யோசு. 13: 26.

617. தெலாபீப். (தானியதிரட்சி) கல்தேயாவில் அல்லது பாபிலோனியாவில் பட்டணம். கேபார் நதியிலிருந்தது. எஸ்று. 3: 15.

618. தெலாயிம். யூதாவில் பட்டணம். 1 சாமு. 15: 4.

619. தெல்அர்சா. (ஏர்க்கூட்டம்) பாபிலோனியாவில் ஒரு இடம். சிறைபிடிக்கப்பட்ட இஸ்ரவேலர் இங்கே கொண்டுபோகப்பட்டார்கள். எஸ்று. 2: 59.

620. தெல்மெலா. (உப்புக்குவியல்) பார்சுக்குடாவுக்குச் சமீபத்தில் ஒரு இடம். எஸ்று. 2: 59.

621. தெர்பை. லிக்கோனியாவில், தவுருமலை அடிவாரத்தில் பட்டணம். அப். 14: 6.

---



Notes on Exodus.

# யாத்திராகம வியாக்கியானம்.

## க. அதிகாரம்.

### இஸ்ரவேலர் பெருகினதும் ஒடுக்கப்பட்டதும்.

1. 6: 14—16. ஆதி. 29: 32—35. 30: 1—21. 35: 18, 23—26. 46: 8—26. 49: 3, 27, 1 நாளா. 2: 1, 2. வெளி. 7: 4—8.

5. ஆதி. 46: 27. வியா. உபா. 10: 22. அப். 7: 14.

6. ஆதி. 50: 26. அப். 7: 14—16.

7. "பலுகி" இஸ்ரவேல் சனங்கள் எகிப்தில் மிகுதியும் ஏராளமாய்ப் பெருகினதைக்காட்டும்படி, பறவைகள், மச்சங்கள்திரள்திரளாய் ஜனிக்கிறதைக் குறிக்கிற வார்த்தையை வழங்கியிருக்கிறது. ஆதி. 1: 21—23 வியா. இவர்கள் இப்படிப்பெருகுவார்களென்று தேவன் முன்னமே வாக்குத்தத்தம்பண்ணியிருந்தார். ஆதி. XV. யாக்கோபும் அவன் குடும்பமும் எகிப்துக்குப்போனதுமுதல், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டதுவரையும், இஸ்ரவேலருடைய தொகை பதினாலு வருஷத்துக்கொரு விசை இரட்டித்ததாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. யோசேப்பு உயிரோடிருக்கிறபோதும் பெருகினார்கள். யோசேப்பு மரித்ததுமுதல் இஸ்ரவேலர் எகிப்தை விட்டதுவரையுமுள்ள 140 சில்வான வருஷங்களிலும் அவர்கள் மிகுதியாய்ப் பெருகினார்கள். அவர்கள் எகிப்தில் இருந்த காலமெல்லாம் 215-௵. ஆதி. 15: 13 வியா. இதில் 70-௵ யோசேப்பு அவர்களோடு இருந்திருக்கிறான். எப்படியென்றால், யோசேப்பின் 40ம் வயதில், யாக்கோபு எகிப்துக்குப்போனான். ஆதி. 27: 1 வியா. யோசேப்பு மரிக்கையில் அவனுக்கு வயது 110.

8. "அறியாத புதியராசன்" இவன் வேறே இராசவம்சத்தானோ அல்லது யோசேப்பை தயவாய் நடத்தின் இராசனுடைய வழியிலுள்ளவன்தானோ என்பது துலங்கவில்லை. எப்படியிருந்தாலும் வெகுநன்றிகேடாய் நடத்தினான். பெரும்பாலும் அதிகாரிகளுக்கு இது வழக்கந்தான். ஒருவர் நல்நோக்கங்களையிட்டுச் செய்திருக்கும் சட்டங்களையும் ஒழுங்குகளையும், பிந்தியெழும்புகிறவர்கள் அறியாமையினாலும் பெருமையினாலும் ஏவப்பட்டு அநியாயமாய் மாற்றுவதை அடிக்கடி காணலாம். யோசேப்பு மரித்து உத்தேசம் 60-௵ ஆனபின் இவன் எழும்பினான். எழும்பின இடம் தேபே பட்டணமாயிருக்கும். உலகசரித்திரத்தில் இவனுக்கு 4ம் ராமசேஸ் (Rameses iv) என்று பேர். இவனுக்கு மறு பேர், மயாமன் (Miamoun). இவனும் இவனுக்கு முந்தின இராசாக்களும் எகிப்தில் நாளதுவரையுமிருக்கிற அதிபிரமாண்டமான கட்டிடங்களைக் கட்டினார்கள். இவைகளின்மேல்: "நாலாம் ராமசேஸ் 66-௵ ஆண்டான்" என்று எழுதியிருக்கிறது. இந்த விபரமானது மோசே வனாந்தரத்துக்குப் போனபின்னும் இவன் வெகுகாலமாய் ஆண்டான் என்று 4: 19ல் சொல்லிய குறிப்புக்கு இசைவாயிருக்கிறது. இந்த இராசாவுக்குக் கல்லினால் செய்யப்பட்டிருந்த சவப்பெட்டி இப்பொழுது பாரீஸ் நகரத்திலிருக்கிறது. இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டபோது ஆண்ட இராசனுக்கு 5ம் ராமசேஸ் என்று பேர், இவனுக்கு மறு பேர் அமனபிஸ் (Amenophis.)

9, 10. இவனுடைய உள்நோக்கம். இஸ்ரவேலரை எகிப்தியருக்கு அடிமைகளாக்கிக்கொள்ளவே. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு வாக்குத்தத்ததேசத்துக்குப் போக காலம் வந்ததென்று பேசியும் இருப்பார்கள், இவன் கேட்டுமிருக்கலாம். இதுவும் அவன் அதிமூர்க்கங்கொள்ள ஏதுவாயிருந்தது. மேலும் இஸ்ரவேலர் எகிப்தியர் செய்த விக்கிரகாராதனைக்குடன்பட்டிருந்தார்களென்பதற்கு வேதத்தில் குறிப்புகள் உண்டு. (யோசு. 24: 16. எசே. 20: 7, 8. 23: 8.) அதற்காக அவர்களாலே இவர்கள் இப்படி சிட்சிக்கப்பட்டார்கள். மேலும் இந்தத் துன்பங்கள் இஸ்ரவேலர் எகிப்தை வெறுக்கவும், வாக்குத்தத்ததேசத்தை நாடவும் அவர்களை நெருக்கி ஏவுகிறதாயிருந்தது.

11. விதம்விதமான வேலைகள் அவர்கள்மேல் பகுதியாக சுமத்தப்பட்டது. இது ஓரளவாய் அவர்களை அடிமைத்தனத்துக்குள்ளாக்கினது.

"விசாரணைக்காரர்" இவர்கள் எகிப்தியர். இந்தக் கொடூர நிபந்தனைகளை நிறைவேற்றும்படி இராச அதிகாரத்தினாலே நியமிக்கப்பட்டிருந்தார்கள். இதினாலே எகிப்தியர் தங்களை ஐசுவரியவான்களாக்கிக் கொள்ளவும், இஸ்ரவேலர் சுயாதீனத்தையும் ஆளுகையையும் விரும்பாதபடி, அவர்கள் மனதை உடைந்துபோகச்செய்யவும், அவர்கள் திரளாய்ப் பெருகி வர்த்தித்ததைத் தடுக்கவும் நோக்கமாக இப்படி நிஷ்டூரமாய் வேலை வாங்கி அவர்கள் ஜீவனைக் கசப்பாக்கினார்கள்.

"கட்டினார்கள்" யோசேப்பு கட்டின மாதிரிப்படி பஞ்சத்துக்குத் தானியம் கட்டிவைக்கும் பட்டணங்களாயிருக்கலாம்; அல்லது படைமுஸ்தீப்புகளை வைக்கும் அரணான பட்டணங்களாயிருக்கலாம். இவ்விதமாய் இஸ்ரவேலர் கஷ்டப்பாடுபட்டு உழைத்து எகிப்தியருடைய வேலையைச் சுளுவாக்கி, அவர்களுடைய பணப்பெட்டிகளை நிரப்பினார்கள்.

12. ஆதி. 3: 15.

14. "வயலில்" அதாவது நிலத்தைச் சாகுபடிசெய்வதும், நீலநதியின் தண்ணீரை இந்த வயல்களுக்கு பாய்ச்சும்படி கால்வாய்களை வெட்டுவதும், நிலத்துக்கு உரம் சுமப்பதும் முதலான பிரயாசமும் இழிவுமான வேலைகளே.

"மற்ற எல்லா" இங்கே காட்டியிருக்கிற பிரயோசனமான வேலைகளல்லாமலும், எகிப்தில் இந்நாள்வரையும் நிலைத்திருப்பதும், இன்னமும் உலகமுடிவுபரியந்தம் நிலைப்பதுபோலும் இருக்கிற பிரமாண்டமான பிரமிட்ஸ (Pyramids) என்னும் கோபுரங்களையும் கட்டும்படி இஸ்ரவேலர் வேலைகொள்ளப்பட்டார்களென்று அநேகர் நினைக்கிறார்கள். யூத சரித்திரக்காரனாகிய ஜொஸிபசும் இப்படியே சொல்லுகிறான். இந்த கட்டடங்கள் அந்தக்காலத்து ராசாக்களுடைய விவேகத்தை அவ்வளவாயல்ல, அவர்கள் புத்தியீனத்தையும் நிஷ்டூரத்தையும், கொடுங்கோன்மையையும் அதிகமாய் விளக்குகிறது. இந்தக் கோபுரங்கள் வெட்டப்பட்ட கற்களால் செய்யப்பட்டிருக்கிறதினாலும், இஸ்ரவேலர் சாந்தும் செங்கலும்செய்ய வேலைகொள்ளப்பட்டார்களென்று சொல்லப்பட்டிருப்பதினாலும், இந்தக் கோபுரங்களை அவர்கள் செய்யவில்லையென்று சொல்லுகிறவர்களும் உண்டு.

15. "சிப்பிராள் பூவாள்" இவர்கள் பிரதான மருத்துவச்சிகள் என்று நினைக்கவேண்டும். இவர்களைப் பரிதானமுதலியவற்றால் கைவசப்படுத்திக்கொண்டால், மற்ற மருத்துவச்சிகளை இவர்கள் மூலமாய் தனக்குள்ளாக்கிக்கொள்ளலாமென்று நினைத்திருப்பான். எபிரெய பெண்கள் எவ்வளவு திரளாயிருந்தாலும் அவர்களைக்குறித்து எகிப்தியர் பயப்பட்டதாகத் தோன்றவில்லை.



22. இந்த விஷயத்தில் பார்வோனும், மகா ஏரோதும், வெளி. 12: 4ல் சொல்லிய வலுசர்ப்பத்துக்கு ஒப்பாயிருந்தார்கள்.

படிப்பினை.

இஸ்ரவேலர் கிறிஸ்து சபைக்குமுன் குறிப்பாயிருந்தார்கள். 1 கொ. 10. இருவகைப்பேரும் உலகத்தாரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள். தேவனோடு உடன்படிக்கைக்குள்ளானவர்கள். தேவனுடையவிசேஷித்த நடத்துதலுக்குட்பட்டவர்கள். அப்படியே இஸ்ரவேலருடைய போக்கில்லாத, கொடிய, முழு அடிமைத்தனம், விசுவாசியின் பழைய நிலைமைக்குச் சரி.—தேவன் வாக்குச்சொன்னவைகள் நமக்கு உடனே கிடையாவிட்டாலும், அவைகள் எவ்விதமும் நிறைவேறும். அநேகவிசை நமக்கு விளங்காத வகையாய் வந்து சம்பவிக்கும். 7. ஆதி. 15: 13. ஆப. 2: 3.—இம்மையில் நமக்குச் சுகம்போல காணப்படுகிற இடம் சீக்கிரம் நமக்குத் துன்பமாக மாறலாம். கண்ணுக்கினிய நமது சிநேகிதர், நமக்குக் கொடிய சத்துராதிகளாகலாம். கோசேன் சீமை இஸ்ரவேலருக்கு அழுகையின் பள்ளத்தாக்கானதே. வானத்தின் கீழ் ஒன்றும் நிலையுள்ளதல்ல. எப்பேர்ப்பட்ட வாழ்வையும் நம்பப்படாது. "ஆற்றங்கரையின் மரமும், அரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே."—நம்முடைய உண்மையான வேலையையும் அன்பின் பிரயாசத்தையும் மனுஷர் மறக்கக்கூடியவர்கள். யோசேப்பு செய்த நன்மைகளும் மறக்கப்பட்டனவே! "புல்லறிவாளர்க்குச் செய்த உபகாரம்; கல்லின்மேலிட்ட கலம்." ஆகையால் நாம் கர்த்தருக்கென்றே ஊழியஞ்செய்யவேண்டும். அவருடைய அன்பு மாறாது. 8. எபி. 13: 8.—உலகத்தார் எந்த முகாந்தரத்தையிட்டும் தேவ புத்திரரைத் துன்பப்படுத்துவார்கள். இஸ்ரவேலர் ஒடுக்கப்பட்டதற்குக் காரணம், அவர்கள் பெருகிச் சுகித்திருந்ததே. பிறர் வாழ்வை விரும்புவது தேறின பக்திக்குக் குறிப்பு. 9.—கோழைத்தனமும், பொல்லாப்பும், சந்தேகமும் ஒன்றுக்கொன்று இனமானவை. 10. தேவ புத்திரருடைய புறம்பான ஸ்திதியைப்பார்த்து அவர்கள் உள்ளான நிலைமையை நிதானிக்கக்கூடாது. 11. தேவன் நமக்குக் கொடிய துன்பத்தை அனுப்பினாலென்றால் அது நம்முடைய நன்மைக்காகவே இருக்கும். எபிரெயர் இந்தக் கசப்பை அடையாவிட்டால் கானானை நோக்குவார்களா!—நல்ல ராசாங்கம் தேவனுடைய ஈவாம். பிள்ளைகளைப் பறிகொடுத்த எபிரெயத்தாய்மாரின் துடிப்பையும், ஆற்றில் எறியுண்ட குழந்தைகளின் பரிதாபத்தையும் பார்த்தால், நமக்குக் கிடைத்திருக்கிற நீதியுள்ள ராசாங்கத்தற்காக, நாம் எவ்வளவோ நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கவேண்டும். 22. பார்வோன், சர்ப்பத்தின் வித்தாக இருந்து, இஸ்ரவேலரைத் துன்பப்படுத்தினான். இந்தப் போராட்டம் எந்நேரம் நடந்துகொண்டேதான்வருகிறது. கடைசியாக கிறிஸ்து தமது சனங்களுடைய சத்துருக்களை அவர்கள் பாதங்களுக்குக் கீழாக்கிப்போடுவார். 22.

---

## உ. அதிகாரம்.

### மோசே பிறந்து வளர்ந்தது.

2. இந்த அதிகாரத்தில் விளங்குகிறபடி, மோசேயின் சகோதரி மீரியாம் அவனைப் பார்க்கிலும் குறைந்ததில் 10 வயதுக்கு மூத்தவளாயிருந்திருக்கவேண்டும். ஆரோன் மோசேக்கு 3 வயதுக்கு மூத்தவன்.

ஆனால் ஆரோன் பிறந்தபோது யாதொரு விசேஷமான துன்பம் இருந்ததாகத் தோன்றுகிறதில்லை. ஆகையால் ஆரோன் பிறந்தபோது இந்தக் குரூர சட்டம் பிறப்பிக்கப்படவில்லையென்று நாம் அநுமானிக்கலாம். இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதற்கு 83 வருஷத்துக்கு முன் ஆரோன் பிறந்தான். யோசேப்பு: இஸ்ரவேலர் எகிப்தை விட்டதற்கு ஏறக்குறைய 145௵த்துக்குமுன் இறந்தான். ஆகையால் யோசேப்பு மரித்து 62௵த்துக்குள்ளாக இந்தக் குரூர சட்டம் ஏற்பட்டிருக்கமாட்டாது. ஆனால் "யோசேப்பை அறியாத ராசன்" இந்தக் கொடிய சட்டம் ஏற்பட்டதற்கு முன்பு எவ்வளவுகாலம் ஆண்டான் என்பது தெரியாது.

"அழகுள்ளதென்று கண்டு." அப். 7: 20. எபி. 11: 23. மோசே பிறந்தபொழுது மனதைக் கவரத்தக்க, இயல்புக்கு மிஞ்சின திவ்விய அழகு அவனில் காணப்பட்டது. அதினாலே இவன் பிந்திய காலத்தில் விசேஷமான மேன்மை அடைவான் என்று அவன் தாய் கவனிக்க நேரிட்டது. அதினாலேதான் அப்போஸ்தலன் சொல்லுகிறபடி "விசுவாசத்தினாலே அவள் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள்." இவனைக் காக்கும்படி விசேஷமான திடநம்பிக்கை இவளுக்குக் கொடுக்கப்பட்டதினாலோ, அல்லது இஸ்ரவேலரின் விடுதலையைக் குறித்த வாக்குத்தத்தங்களைப் பொதுவாக விசுவாசித்ததினாலோ, இவள் தன் சொந்த சிவனையும்பாராமல் தேவன்பேரில் சார்ந்து, குழந்தையை ஒளித்துவைக்க தைரியங்கொண்டாள்.

3, 4. குழந்தையைக் கொல்லும்படி ஆட்கள் வருகிறார்களென்கிற சப்தம் இவள் கேட்டிருக்கலாம்.

"நாணல்" இதற்கு பப்பிரஸ் என்று பேர். இது நீலநதியின் கரைகளில் மிகுதியாயிருந்தது. இதினாலே எகிப்தியர் பெட்டிமுதலானது செய்ய, கட்டுகளாகக் கட்டிக்கொண்டு போவார்கள். மேலும் காகிதம் கண்டுபிடிக்கப்படுமுன் இதினுடைய பட்டைகள் எழுதுவதற்கு உபயோகிக்கப்பட்டது.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்னும் இளவரசர் இந்தியாவுக்கு வருவதைப்பற்றி வேண்டிய ஏற்பாடுகள் நடக்கின்றன. அவர் ஏறும் கப்பலைச் சோதித்துப் பக்குவப்படுத்திச் சிங்காரிக்கத் தொடங்கினார்கள். அதின் பேர் ஸிரோப்பிஸ். இளவரசர் ஆதேன் துறையினின்று நேரே கொழும்புக்கு ஓடி, இலங்கையிலுள்ள சிங்காரங்களைப் பார்த்த பின்பு, சென்னபட்டணம், கல்கத்தாவுக்குச் சென்று, கடைசியில் பம்பாய்க்குப் போவாரென்று உத்தேசம்.

பிரான்சியருக்கும் ஜர்மானியருக்கும் உண்டான சமாதானம் பங்கப்படக்கூடியதென்று ஐரோப்பாவெங்கும் சப்தம்பிறந்தது. அதைப்பற்றி அங்கிலேய புறத்தேச மந்திரியாகிய டர்பிப் பிரபு ஜர்மானிய துரைத்தனத்தாருக்கு உறுதியான கடிதமொன்றெழுதினார். அதற்கு அவர்கள் சமாதானம்பொருந்திய உத்தரமெழுதினார்கள். பிரான்சிய



துரைத்தனத்தார் இதுகாரியத்தை அறிந்து, அங்கிலேய துரைத்தனத்தாருக்கு கடிதமெழுதி நன்றியறிதலைச் செலுத்தினார்கள்.

ருஷிய சக்கரவர்த்தியும் ஜர்மானிய சக்கரவர்த்தியும் பர்லின் நகரத்தில கூட்டம்கூடினார்கள். அவர்களுக்குள் உடன்படிக்கையுண்டெனத் தோன்றுகிறது. ஆயினும் அவ்விரு சக்கரவர்த்திகளுடைய ஆலோசனை சமாதானத்திற்கடுத்தவைகளென்று பெரும்பான்மையோர் நிச்சயிக்கிறார்கள்.

புருஷிய பார்லிமெண்டார் தம் ராச்சியமெங்குமுள்ள சபைக்கடுத்த மடங்களையும் சங்கங்களையும் நிர்மூலப்படுத்த தீர்மானித்தார்களாம்.

இத்தாலிய துரைத்தனத்தாரும் ஜர்மானிய துரைத்தனத்தாரும் ஒருவரோடொருவர் சமாதானத்தை நாடுகிறார்கள்.

இந்தியா. பிரின்ஸ் ஆப்வேல்ஸ் இந்தியாவுக்கு வருவதைப்பற்றி வேண்டிய ஏற்பாடுகள் செய்யத்தக்கதாக கவர்னர் ஜெனரலவர்கள் ஸிம்லாவிலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்புவார்கள்.

பர்மா அரசனிடத்திற்குப் போகவேண்டிய ஸ்தானாபதி முதலியவர்களின் நியமம் வெளிப்பட்டது. ஸ்ரீ டக்லஸ் போர்ஸித் என்பவர் ஸ்தானாபத்தியத்தின் முதல்வர்.

பட்டமிழந்த பரோதா அரசன் சென்னைபட்டினத்திலேயே நிரந்தரமாய் வசிக்கவேண்டுமென்று இந்திய துரைத்தனத்தாரால் கட்டளை பிறந்தது. அவர் பரோதாவைவிட்டு அகற்றப்பட்ட பின்பு அங்கே சில கலகங்கள் உண்டாய் பிராணசேதமுதலிய நேரிட்டன. இப்போது எங்கும் சமாதானம். பரோதாவை ஆள புது கைக்கோவார் நியமிக்கப்பட்டார். இவர் பட்டமிழந்த மல்லாராவின் சகோதரன் மகன். ஸயாஜிரௌ கைக்கோவார் என்னும் பெயருடன் இவருக்குப் பட்டம் தரிப்பிக்கப்பட்டது. இவர் முந்தி ஜம்னாபீ ராணியிடத்தில் புத்திரஸ்வீகாரம்பெற்று சிம்மாசனமேறினார். இவருக்கு வயசு பத்து. ஸ்ரீ ரிச்சார்ட்மீட் என்னும் அங்கிலேய ரெஸிடெண்ட துரை திவான் ஸ்ரீ மாதவராயர் இவர்களால் பரோதா நாட்டரசியல் நடக்கும். பரதசிம்மாசனமேற அபேக்ஷித்திருந்தோரில் ஒருவருடைய சகோதரன் இந்திய கவர்ன்மெண்டாரது தீர்ப்பைக் கேள்விப்பட்டபொழுது, கைத்துபாக்கியால் தன்னைச் சுட்டு ஆத்மவதைசெய்துகொண்டான்.

டியூக் பக்கிங்ஹாம் என்னும் பிரபு சென்னைக் கவர்னராய் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் உயர்குடிப் பிறப்பும் இராஜ அந்தஸ்துக்கு அடுத்த அந்தஸ்துமுள்ள மஹா பிரபுவாயிருந்தும் சென்னைக் கவர்னர் உத்தியோகத்தை ஒப்புக்கொண்டது மிக்க ஆச்சரியமெனப் பிரஸ்தாபிக்கப்படுகிறது.

---

ஜூன்மீ நாள் 30. வைகாசிமீ 20௳முதல், ஆனிமீ 18௳வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| செ | 1 | ௨0 | கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? எண்ணாகமம் 11: 23: |
| பு | 2 | ௨௧ | இந்தப் பாவத்தை எங்கள்மேல் சுமத்தாதிரும். 12: 11. |
| வி | 3 | ௨௨ | கர்த்தருக்குவிரோதமாகமாத்திரம் கலகம்பண்ணாதிருங்கள். 14: 9. |
| வெ | 4 | ௨௩ | கர்த்தர் நம்மோடே இருக்கிறார். 9. |
| ச | 5 | ௨௪ | நாம் நேற்றுண்டானவர்கள், ஒன்றும் அறியோம். யோபு. 8: 9. |
| ஞா | 6 | ௨௫ | நம்முடைய நாட்கள் நிழலைப்போலிருக்கிறது. 9. |
| தி | 7 | ௨௬ | மாயக்காரரின் நம்பிக்கை அழிந்துபோம். 13. |
| செ | 8 | ௨௭ | தேவன் உத்தமனை வெறுக்கிறதில்லை. 20. |
| பு | 9 | ௨௮ | இஸ்ரவேலே, கர்த்தரை நம்பு. சங்கீதம் 115: 9. |
| வி | 10 | ௨௯ | அவரே அவர்களுக்குக் கேடகமாயிருக்கிறார். 9. |
| வெ | 11 | ௩0 | கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். 12. |
| ச | 12 | ௩௧ | கர்த்தராலே நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். |
| ஞா | 13 | ௧ | என்றென்றைக்கும் கர்த்தரை ஸ்தோத்திரிப்போம். 18. |
| தி | 14 | ௨ | நம்முடைய தேவன் மன உருக்கமானவர். 116: 5. |
| செ | 15 | ௩ | நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார். 6. |
| பு | 16 | ௪ | கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவஊற்று. நீதிமொழி 14: 27. |
| வி | 17 | ௫ | நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான். 28. |
| வெ | 18 | ௬ | நீதிமான் தன் மரணத்தில் நம்பிக்கையுள்ளவன். 32. |
| ச | 19 | ௭ | நீதி சனத்தை உயர்த்தும். 34. |
| ஞா | 20 | ௮ | பாவம் எந்தச் சனத்துக்கும் இகழ்ச்சி. 34. |
| தி | 21 | ௯ | அவர்கள் நினைவுகள் அக்கிரம நினைவுகள். ஏசாயா. 59: 7. |
| செ | 22 | ௧0 | தங்கள் பாதைகளைக் கோணலாக்கிக்கொண்டார்கள். 8. |
| பு | 23 | ௧௧ | வெளிச்சத்துக்குக் காத்திருந்தோம், இதோ இருள். 9. |
| வி | 24 | ௧௨ | இனி அவர்களை மன்னிக்கமாட்டேன். ஆமோஸ் 7: 8. |
| வெ | 25 | ௧௩ | இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன். 9: 14. |
| ச | 26 | ௧௪ | சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். யோ. 14:27. |
| ஞா | 27 | ௧௫ | உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலுமிருப்பதாக 27. |
| தி | 28 | ௧௬ | புத்திசாலிகளுடைய புத்தியை அவமாக்குவேன். 1 கொரி. 1: 19. |
| செ | 29 | ௧௭ | அவரே நமக்கு ஞானமும் பரிசுத்தமும் மீட்புமானார். 31. |
| பு | 30 | ௧௮ | நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறவில்லை. 12. |

## விசேஷித்த நாட்கள்.

3. அமாவாசை.
6. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
13. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், மூன்றாம் ஞாயிறு.
18. பௌரணமி.
20. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், நான்காம் ஞாயிறு.
27. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. July. No. 7.

Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... 122
The Life of St Augustine, Bishop of Hippo. ... ... 125
Notes on Exodus. ... ... ... ... ... ... 128
The Tentative Version of the Tamil Bible. ... ... 133
The Scripture Gazetteer. ... ... ... ... ... 135
Summary of News. ... ... ... ... ... ... 138


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௧௨௨
அகுஸ்தீன் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... ௧௨௫
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... ௧௨௮
யாழ்ப்பாணத்துத் திருத்தல். ... ... ... ... ௧௩௩
வேத இடப்பேர் அகராதி. ... ... ... ... ௧௩௫
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௩௮



Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

நற்போதகம்.

௭. ஜூலைமீ. ௲௮௭௫௵.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### சாலமோனின் அந்திய நாட்கள்.

1 இராசா 11: 1—25. பிரசங்கி அதி. 1, 2.

(தொடர்ச்சி.)

அதற்குப்பின் இருபது வருஷக்காலம் நிறைந்த சந்தோஷமும் சமா
தானமும் அனுபவித்தான். முந்திய அதிகாரத்தில் விவரித்தபடி தே
வாலயத்தைக் கட்டித் தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்ததுமல்லாமல்,
தனக்குப் பல மாடமாளிகைகளையுங் கட்டிமுடித்தான். அவனுடைய
பேரும் பிரஸ்தாபமும் உலகமெங்கும் பரவிற்று அவன் செங்கோல்
செலுத்தின காலத்திலிருந்த இஸ்ரவேல் தேசத்தின் படத்தைப் பார்ப்
பீர்களாகில் அவன் ஆண்டுவந்த இராச்சியம் எவ்வளவு விஸ்தாரமாயி
ருந்ததென்று விளங்கும். வர்த்தக விர்த்திக்காக தூரமான வனாந்தரங்
களில் முதலாய்ப் பல பட்டணங்களைக் கட்டுவித்தான். அவனுடைய
கப்பல்கள் சமுத்திரங்களைச் சுற்றி யாத்திரை செய்தன. வர்த்தகர்கள்,
பிரபுக்கள், இராசாக்கள், இராசஸ்திரீகள் முதலிய எத்திறத்தோரும்
அவனுடைய பிரபலியத்தைக் கேள்விப்பட்டு அவனைத் தரிசிக்கவந்தார்
கள். இவ்விதமாய் அவனுக்கு மகிமையும் கனமும் பெருகத்தொடங்
கினபோது, முன்னே கிபேயோனிலே தேவன் அவனுக்குத் தரிசனங்
கொடுத்ததுபோல மறுபடியும் ஒருவிசை தரிசனங்கொடுத்தார். (1 இரா
சா 9: 1—9)

புதிதாய்ப் பிரதிஷ்டைசெய்யப்பட்ட ஆலயத்தில் விசேஷித்த தே
வாராதனை செலுத்திய ஒரு நாளிரவில் இந்தத் தரிசனங்கிடைத்திருக்
குமென்று நினைக்கத்தக்கது. முந்திய விசைபோலவே திரும்பவும் பலி
ப்பீடத்தில் தகனபலியின் புகை வானத்துக்குநேரே எழும்புகிறதாயும்,
எக்காளங்கள் தொனிக்கிறதாயும், கீதவாத்தியங்களும் ஆடல்பாடல்
களும் முழங்குகிறதாயுமிருந்தது. இராசா அன்றிரவில் தன் சிறந்த
மாளிகையில சம்பிரமஞ்சத்தில் படுத்து நித்திரைசெய்தான். அப்பொ
ழுது இரண்டாம் விசை தேவன் அவனுக்குத் தரிசனமானார். தேவனு
டைய சப்தம் அவன் காதிலே கேட்டது. இந்த விசை தேவன் பேசின
வார்த்தைகளில் பயங்கரமான எச்சரிப்பு ஒன்று அடங்கியிருந்தது.
கர்த்தர் அவனை நோக்கி, "நீ என் சமுகத்தில் செய்த உன் விண்ணப்ப
த்தையும் வேண்டுதலையும் கேட்டேன். நீயும் உன் சனமும் நான் கட்
டளையிட்டதெல்லாவற்றையுஞ் செய்து, என் கட்டளைகளையும் நியாயங்
களையும் கைக்கொள்ளும்படிக்கு என் சமுகத்தில் மன உத்தமமும் செம்
மையுமாய் நடப்பீர்களாகில், உன் இராச்சியபாரத்தின் சிங்காசனத்
தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். நீங்கள் என் கற்பனை
களைக் கைக்கொளளாமற்போய் வேறே தேவர்களைச் சேவித்து அவை



களைப் பணிந்துகொள்வீர்களாகில், நான் இஸ்ரவேலுக்குக் கொடுத்த
தேசத்திலே அவர்களை வைக்காதபடிக்கு நிர்மூலமாக்கி, என் நாமம்
விளங்க நான் பரிசுத்தமாக்கின இந்த ஆலயத்தையும் என் சமுகத்தை
விட்டுத் தள்ளுவேன்" என்றார். இந்தப் பயங்கரமான எச்சரிப்பை
இராசா கேட்டபொழுது ஒன்றும் பேசவில்லை. இதற்குள்ளே அவன்
மிகுந்த மகிமையையும் பிரஸ்தாபத்தையும் அடைந்திருந்த ஏதுவால்
ஒருவேளை அவன் தேவனை மறக்கத் துவக்கியிருந்தாலுமிருக்கலாம். அப்
படியானால் பயங்கரமான இந்த வார்த்தைகள் அவசியமானவைகளெ
ன்று உணர்ந்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை.

அராபியருக்குள்ளே ஒரு கதைசொல்லிக்கொள்ளுவார்கள். அதெப்
படியென்றால் சாலமோன் சாய்ந்துகொண்டிருந்த கோலில் ஒரு சிறு
புழு இருந்து அந்தரங்கத்தில் அதை அரித்துக்கொண்டிருந்ததாயும், அப்
படிக் கொஞ்சங்கொஞ்சமாய் கோல் முழுவதையும் அரித்துவிட்டதி
னால் கோல் இரண்டாக முறிந்துபோக, சாலமோன் தரையிலே விழுந்
துவிட்டதாயும் சொல்லியிருக்கிறது. இந்தக் கதையில் தூக்ககரமான
ஓர் சத்தியமடங்கியிருந்தது.

சாலமோன் பாவத்தில் விழுந்த. விர்த்தாந்தம் இராசாக்களின் முத
லாம் ஆகமம் பதினோராம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.
விக்கிரகபக்திக்காரிகளான மனைவிகளை அவன் விவாகஞ்செய்துகொண்
டது அவனுடைய விழுதலுக்கு முதற் படிபோலிருந்தது. ஒருவேளை
அவன் எப்படி நினைத்திருப்பானென்றால், "மோவாப் தேசத்தாளான
ரூத்தென்பவள் தன் தேசம் மதாசாரத்தையும் தன் தகப்பன வீட்டை
யும் மறந்து தேவனை ஆராதித்தாளே. அதுபோல இந்தப் பெண்களும்
எனக்கு மனைவிகளானபிறகு, என் தேவனை ஆராதிப்பார்கள்" என்பது
போல நினைத்திருப்பான். ஆகிலும் காரியம் வேறுவிதமாய் முடிந்தது.
அவன் அவர்களை நல்வழியிற் கொண்டுவருகிறதற்குப் பதிலாக, அவர்
களே அவனைக் கேட்டுக்கு இழுத்துக்கொண்டார்கள். ஒலிவமலையில்
தேவாலயத்துக்கு நேர் எதிரே அஞ்ஞானதேவர்களில் மகா அருவருப்
பான சிலவற்றிற்குச் சிலைகளை நிறுத்திப் பலிப்பீடங்களையும் சாலமோன்
கட்டினான். சாலமோன் தானே இந்த விக்கிரகங்களைப் பணிந்துகொண்
டானென்றாவது, அரோசிகரமான அவ்வாராதனையில் சம்பந்தப்பட்டி
ருந்தானென்றாவது. நிச்சயமாய்ச் சொல்ல ஏதுவில்லாவிட்டாலும்,
அதற்கு இடங்கொடுத்து கவலையற்றவனாயிருந்தானென்பதற்குச் சந்தே
கமில்லை. "இரண்டுவிசை அவனுக்குத் தரிசனையான இஸ்ரவேலின் தேவ
னாகிய கர்த்தரைவிட்டு அவனுடைய இருதயம் பின்வாங்கி விட்டது."

அதுமுதல், அவனுக்கு மிகுந்த கசப்பையும் சொல்லமுடியாத வேத
னையையும் கொடுக்கத்தக்க அநேக துன்பங்கள் நேரிட்டன. சிரியா
வின் இராசாவாகிய ரேத்சோன் தமஸ்குவிலிருந்து ஒரு சேனையைத்
திரட்டிக்கொண்டுவந்து, தேசத்தின் வடபாரிசத்திலுள்ள அநேக பட்
டணங்களையுங் கிராமங்களையும் அழித்துப் பாழாக்கிவிட்டான் என்று
ஒருநாள் செய்திவரும். ஏதோமியனான ஆதாத் என்பவன் தன் இராணு
வத்தோடு வனாந்தரத்தில் பதிவிருந்து சிவந்த சமுத்திரத்தின் துறை
முகத்தில் கப்பல்களிலிருந்து இறக்குமதியான பொன் யானைத்தந்தம்
வாசனைத் திரவியங்கள் முதலியவைகளைச் சுமந்துகொண்டுவந்த ஒட்
டகங்களைத் தாக்கி, அதுகளை ஓட்டிக்கொண்டு வந்தவர்களைச் சங்காரம
பண்ணி திரவியத்தைக் கொள்ளையாடி ஒட்டகங்களையும் பற்றிக்கொண்
டுபோய் விட்டானென்று மறுநாள் செய்திவரும். யோர்தானுக்குக் கிழ
பாரிசத்திலுள்ளவர்கள் தங்கள்பேரில் வைக்கப்பட்ட பாரமான வரி

களைக்குறித்து மனச்சோர்படைந்து, கலகம்பண்ணுகிறதற்கு எத்தனிக்கிறார்களென்று ஒருவன் வந்து அறிவிப்பான். உம்மாலே மிகுந்த நன்மைபெற்று மிகுதியுங் கணிசமடைந்தும் கடைசியில் நன்றிகெட்டவனாய் உமக்குத் துரோகம்பண்ணின எரோபெயாம் என்ற வாலிபன் எகிப்துக்கு ஓடிப்போய் உம்முடைய இராச்சியத்தை யபகரிக்கும்பொருட்டு சதியோசனைசெய்துகொண்டிருக்கிறானென்று வேறொருவன் வந்து சொல்லுவான். இப்பேர்ப்பட்ட துன்பங்கள் கடலின் அலைகள்போல மேலுமேலும் வந்துகொண்டிருந்தபடியால் அவைகளால் அவனுக்குச் சொல்லமுடியாத கஸ்தியும் மனச்சஞ்சலமும் உண்டாயிருந்திருக்குமே. இந்தத் துன்பகாலத்தில் இராசா தான் முன் கண்ட சொப்பனங்களை நினைத்து, முதற்சொப்பனத்தில் தான் தெரிந்துகொண்ட நன்மையைத் தள்ளிவிட்டதையும், பிந்தின சொப்பனத்தில் தனக்குச் சொல்லப்பட்ட பயங்கரமான எச்சரிப்புகள் நிறைவேறுகிறதையும் சிந்தித்திருப்பானோ?

மேலே குறிப்பித்ததுபோல் இந்தக் கேள்விக்குத் திட்டமான உத்தரவுசொல்ல ஏதுவில்லை. "சாலமோன் இரட்சிக்கப்பட்டானோ கெட்டுப்போனானோ" என்கிற கேள்வியை வேதாகமத்தை உணர்வோடு வாசிக்கிறவர்களும் கேட்பார்கள். அவன் இரட்சிக்கப்பட்டானென்று நம்புகிறோமென்று சொல்லத்தக்கதேயன்றி, நிச்சயத்தோடு சாதிக்க இடமில்லை. இத்தாலியா தேசத்திலே அத்தியட்சர் கோவில்கள் ஒன்றில் கடைசி நியாயத்தீர்ப்பைக் காட்டிய ஒரு படமிருக்கிறதாம். அந்தப் படத்தில் நியாயாதிபதியின் வலதுபாரிசத்தில் இரட்சிக்கப்பட்டவர்களும், இடதுபாரிசத்தில் கெட்டுப்போனவர்களும் நிற்கிறதாகவும், சாலமோனோ கல்லறையிலிருந்து இப்பொழுதுதான் எழுந்து இன்ன இடத்தில் நிற்கவேண்டுமென்று தெரியாதவனாய், திகைப்போடும் கலக்கத்தோடும் இவர்களுக்கும் அவர்களுக்கும் நடுவில் நிற்கிறதாகவும் பாவனை காட்டியிருக்கிறதாம். இது சரியல்லவென்று நாம் அறிவோம். இந்தப் படம் சாலமோனுடைய சரித்திரத்தை வாசிக்கிறவர்களுக்கு அவன் முடிவு இன்னதென்று தீர்மானமாய்ச் சொல்வது எவ்வளவு பிரயாசம் என்று மாத்திரம் காண்பிக்கிறது. ஆகிலும் சாலமோன் இரட்சிக்கப்பட்டானென்று நம்பவும் சொல்லவும் இடமுண்டென்று நினைக்கிறேன். பிரசங்கியின் ஆகமம் சாலமோனால் எழுதப்பட்டதுதான். அதில் அவன் தன் அந்தியகாலத்தில் தன்னையும் மற்றவர்களையுங் குறித்துக்கொண்டிருந்த எண்ணங்கள் அடங்கியிருக்கின்றனவென்று நிதானிக்கத்தக்கது. அப்படியானால் சாலமோன் சாகுமுன் குணப்பட்டிருப்பானென்று சொல்ல இடமில்லையா? "மாயை, மாயை, எல்லாம் மாயை" என்று அவன் புலம்புகிறதைக் கேளுங்கள். என் ஐசுவரியம், என் ஞானம், என் மேன்மை, என் வல்லமை எல்லாம் மாயைதான் என்கிறான்.

இந்த ஆகமத்தில் விளங்குதற்கரிய அநேக காரியங்களுண்டு. சில பாகங்கள் ஒன்றுகொன்று விபரீதமாயுந் தோன்றும். அதற்கு முகாந்தரம் யாதெனில், அதை எழுதின ஞானி தன்னோடு பேசிக்கொள்வதுதான். ஓரிடத்தில் அவனுடைய ஞானமும், ஓரிடத்தில் அவனுடைய மனக்கிலேசமும் பேசுகிறது. ஒரு சமயத்தில் அவனுடைய நம்பிக்கையும் ஓர் சமயத்தில் அவனுடைய நம்பிக்கையின்மையும் பேசுகிறதாயிருக்கிறது. ஆகிலும் இரண்டு காரியங்கள் அதில் பரிஷ்காரமாய் விளங்குகின்றன.

---



## The Life of St Augustine, Bishop of Hippo.

# அகுஸ்தீன் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

அகுஸ்தீன் என்பவர் வெகுகாலம் ரோமை நகரியிலிருக்கவில்லை. மிலன் நகரத்துக்கு அணியிலக்கணப் பண்டிதன் ஒருவன் வேண்டியிருந்தபடியால், சில சிநேகிதர்களுடைய சிபார்சினால் அகுஸ்தீன் அந்த உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்டு உடனே புறப்பட்டு மிலன் நகரம்போய்ச் சேர்ந்தார். உலகமெங்கும் தேவபக்தியிற் சிறந்தவரெனப் பிரஸ்தாபமடைந்திருந்த அம்புரோஸ் என்பவர் அக்காலத்தில் மேற்படி நகரத்தில் கண்காணியாராயிருந்தார். அவர் ஆப்பிரிக்கனான இவ்வாலிபனை மிகுந்த பட்சத்தோடு ஏற்றுக்கொண்டார். அகுஸ்தீனும் கண்காணியாரை வெகுவாய்ச் சிநேகித்தது நிசமென்றாலும், அவர் சத்தியத்தைப் போதித்ததினிமித்தம் அப்படிச்செய்தாரென்றல்ல. கண்காணியார் பிதாவடைவான அன்புபாராட்டினதினாலே இவரும் பிள்ளைக்குரிய அன்பைக் காண்பித்தாரேயன்றி வேறல்ல. அவருடைய பிரசங்கங்களையுங் கேட்டுவந்தார். அதற்கு அவரை யேவினது சத்தியத்தைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற ஆசையல்ல. அந்த ஆசையும் நம்பிக்கையும் முற்றும் அற்றுப்போயிற்று. பின்னை ஏன் அப்படிச்செய்தாரென்றால், உலகமெங்கும் பிரபலியமாயிருந்த அவரது கீர்த்தி நியாயமானதோ அல்லவோ என்று அறியத்தான். கண்காணியாருடைய பிரசங்கங்கள் இவருக்குப் பிரியமாயிருந்தபடியால் நாள்வட்டத்தில் அவருடைய உபதேசத்துக்குச் செவிகொடுக்கவும் ஏவப்பட்டார். அதினாலே மார்க்கத்தைப்பற்றி அவர் கொண்டிருந்த ஆட்சேபனைகள் அநேகம் நிவர்த்தியாகிவிட்டதன்றியும். மனிக்கேயர் கொள்கை முற்றுந் தப்பென்றுங் கண்டுகொண்டார். என்றாலும் அவர் இன்னமும் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

இக்காலத்தில் அவருடைய தாயார் மிலன் நகரத்தில் வந்து சேர்ந்து, அவருடைய தற்கால சீரை அறிந்து, நான் உலகத்தை விட்டுப்போகிறதற்குள்ளாக என் மகன் உத்தம விசுவாசியாயிருக்கிறதைக் காண்பேனா என்பதாய் கிறிஸ்துவுக்குள் தான் கொண்டிருந்த தாழ்மையான நம்பிக்கையை வெளியிட்டாள். அவள் அம்புரோஸ் கண்காணியார் சபையில் ஓர் அவயவமாகி அவர்மூலமாய்த் தன் மகனிடத்திலுண்டான மாறுதலினிமித்தம் தேவதூதனைப்போல அவரைக் கனப்படுத்தி நேசித்துவந்தாள். அகுஸ்தீன் அத்தனை விரைவில் தேறவில்லை. வேதம் தேவனால் அருளப்பட்டதென்று கண்டுகொள்ள வெகுநாள் பிடித்தது. அவர் இன்னமும் துன்மார்க்கமாய்த் தான் நடந்துவந்தார். திவ்விய காரியங்களில் அவருக்கு கொஞ்சந் தெளிவுண்டாயிருந்தபோதிலும், அஞ்ஞான சாஸ்திரங்களின்பேரில் அவருக்கு இருந்த அவ்வளவு பிரியம் சுவிசேஷத்தின்பேரில் இருக்கவில்லை. அவர் தாமே தம்மைக்குறித்து எழுதியிருக்கிறதாவது, "தாழ்மையுள்ள என் கர்த்தராகிய இயேசுவை நான் இன்னம் தாழ்மையாய்ப் பற்றிக்கொள்ளவுமில்லை, வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிற ஆத்துமங்களைத் தாழ்மைப்படுத்தி ஆதரித்து மேன்மைப்படுத்துகிற அவரது இரகசிய வல்லமையை உணரவுமில்லை. நான் கிறிஸ்

துநாதரைக்குறித்து முற்றும் விபரீதமான எண்ணங்கொண்டிருந்தேன். ஒப்பற்ற ஞானமுடைய மனிதனென்று மாத்திரம் அவரை நினைத்தேன். மாமிஷமான வார்த்தையின் இரகசியம் எனக்குக் கொஞ்சமும் தோன்றவில்லை. அளவில்லாத தேவனைப்பற்றி ஒருவாறு அறிந்திருந்தபோதிலும், கிறிஸ்துநாதரையல்லாமல் ஞானியாய் விளங்க விரும்பி கல்விப் பெருமையினாலே பொங்கி என்னைத் தாழ்மைப்படுத்த மனமற்றிருந்தபடியால், நான் கெட்டு அழிகிறவனாயிருந்தேன். தாழ்மையில் அஸ்திவாரப்பட்ட அன்பாகிய கிறிஸ்து இயேசுவை நான் அறியவில்லை. பிளேற்றோவின் நூல்களில் அது இல்லவே இல்லை" என்பதே. கடைசியில் வேதாகமத்தை வாசிக்க ஏவப்பட்டு பவுல் அப்போஸ்தலன் எழுதின நிருபங்களை முக்கியமாய் ஆராய்ந்து பார்த்தார். இதுவரையும் அவருடைய மனதை மூடியிருந்த அந்தகாரம் எடுபட்டுப்போக, அவர் வாசிக்க வாசிக்க சுவிசேஷ சத்தியம் வெகு துலாம்பரமாய் விளங்கிற்று.

இவ்வாறு கிறிஸ்துமார்க்க உபதேசங்களிலே அவர் அதிகத் தெளிவும் உறுதியுமடைந்து வந்தபோதிலும், அவருடைய இருதயம் இன்னம் பரிசுத்தமாகவில்லை. கிறிஸ்து இரட்சகரே மோட்சவழியென்று அவர் ஒப்புக்கொண்டும், இடுக்கமான அப்பாதையில் நடக்க மனமற்றிருந்தார். என்றாலும் மனதிலே சமாதானமில்லாமல் சஞ்சலப்பட்டதினால், அம்புரோஸ் என்பவர் குணப்படுவதற்கு ஏதுவாயிருந்தவனும் தேறின கிறிஸ்தவனுமான சிம்பிளிஷன் என்ற விருத்தாப்பியனிடத்திற்போய் தம்முடைய சீரைச்சொல்லி ஆலோசனை கேட்டார். அவன் சொன்ன ஆலோசனையினாலும் அவனோடு செய்த சம்பாஷணைகளினாலும் அகுஸ்தீன் கிறிஸ்துநாதருக்குத் தம்மை ஒப்புக்கொடுக்க ஏவப்பட்டார். அதோடு அவர் மனதில் பெரிய போராட்டமுமுண்டாயிற்று. அவர் நன்மைசெய்ய விரும்பும்பொழுது, தம்மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போர்செய்கிற ஒரு பிரமாணத்தையுங் கண்டுபிடித்தார். "மாமிஷம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாமிஷத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறதே" என்று அவர் வாசித்திருந்ததை இப்பொழுது அனுபவத்தினால் அறிந்துகொண்டதுமன்றி, "நிர்ப்பந்தமான மனுஷன் நான். இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்" என்று அப்போஸ்தலனைப்போல இவரும் பிரலாபிக்கவேண்டியதாயிற்று. அதுமுதல் அவர் கிருபையின் எத்தனங்களையெல்லாம் வெகு சுறுசுறுப்பாய்க் கையாண்டுவந்தாலும் மனதுக்குக் கொஞ்சமேனும் ஆறுதல் கிடைக்கவில்லை. அப்படியிருக்குங்காலத்தில் ஒருநாள், பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்கள் மேசைமேலிருக்க, அவர் இரண்டு சிநேகிதர்களோடு சம்பாஷித்துக்கொண்டிருந்தார். மேற்படி சிநேகிதர்கள் சுவிசேஷத்தினிமித்தம் தங்களையும் தங்களுக்குரியவைகளையும் மனதார வெறுத்துவிட்ட பலரைக்குறித்து அவருக்கு விவரித்தார்கள். அகுஸ்தீன் என்பவருடைய மனச்சாட்சி உடனே அவரை வாதிக்கத் தொடங்கிற்று. அவர் இன்னமும் பாவச்சுமையின் கீழும் பாவத்தின் அடிமைத்தனத்திலுமிருக்கிறதாக உணர்ந்து, தீவிரமாய் எழுந்து சொல்லமுடியாத மனவேதனையோடு கண்ணீர்விட்டு அழுதுகொண்டு, தரையிலே விழுந்து "கர்த்தாவே எவ்வளவுகாலம் தேவரீர் என்பேரில் கோபமாயிருப்பீர்? என்றென்றைக்கும் கோபமாயிருப்பீரோ? நான் இதற்குமுன் செய்த என் பாவங்களை நினையாதேயும், எவ்வளவு காலமாய்த்தான் நாளைநாளை என்று சொல்லிக்கொண்டு வருவேன், இந்த மணிநேரத்திலேயே என் அடிமைத்தனத்தை நீக்கிவிட்டாலாகாதா?" என்று புலம்பினார். உடனே திடீரென்று எடுத்து வாசி, எடுத்து வாசி என்று



சொன்ன ஒரு சப்தம் அவருக்குக் கேட்டதுபோலிருந்தது. அதை அவர் தேவனுடைய கட்டளை என்று நம்பி, உடனே எழுந்து புஸ்தகமிருந்த மேசையண்டையிற்போய், புஸ்தகத்தைத் திறந்து வாசித்தார். அவருக்கு அப்பொழுது கண்பட்ட வசனம் ரோமர் நிருபம் பதின்மூன்றாம் அதிகாரம் பதின்மூன்றும் பதினாலாம் வாக்கியங்களே. அவையாவன,—"களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போல சீராய் நடக்கக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாக மாம்சத்தைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்பதுதானே. தட்சணமே அவருக்கிருந்த விசாரமுங் குழப்பமுமெல்லாம் தீர்ந்துபோக, அவர் கிறிஸ்துநாதருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்து விசுவாசத்தினாலே புத்திக்கெட்டாத சமாதானத்தைப்பெற்று அனுபவிக்கிறவரானார். அவர் இந்தச் சந்தோஷ செய்தியைத் தமது தாய்க்கு அறிவிக்க, அவள் தான் இதும்மட்டும் பண்ணின விண்ணப்பங்களையும் சிந்தின கண்ணீரையும் கர்த்தர் திருவுள்ளத்திற் கொண்டருளித் தன் பிள்ளையை இரட்சித்தார், இயேசுவின் மந்தையிற் சேர்த்தாரென்று நன்றியறிந்த புத்தியாய் அவரை ஸ்தோத்கரித்தாள்.

அகுஸ்தீன் அக்காலத்தில் தமக்குண்டாயிருந்த சந்தோஷத்தைக் குறித்து கனிவாய்ச் சொல்லியிருக்கிறதாவது, "கிறிஸ்து இயேசுவே, என் சகாயரே, என் மீட்பரே, உமது மெதுவான நுகத்தடிக்கு என் கழுத்தையும், உம்முடைய லேசான சுமைக்கு என் தோளையும் சாய்த்துக்கொடுத்தேன். அடிமைத்தனத்துக்கு விடுதலையானது எவ்வளவு ஆனந்தம். என் வெளிச்சமே, என் செல்வமே, என் இரட்சகரே, என் தேவனே, நான் தேவரீரோடு சகவாசம்பண்ண அருள்பெற்றேனே" என்பதே. அப்பால் அவர் அம்புரோஸ் கண்காணியாரிடத்தில் தமக்கு ஞானஸ்நானங்கொடுக்கும்படி கேட்டு, கி. பி. 387ம் ௵ முப்பத்திரண்டு வயசில் சங்கிக்கத்தக்க மேற்படி கண்காணியாரால் ஞானஸ்நானத்தின்மூலமாய்ச் சபையிற் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அதற்குச் சற்றுபிறகு, அவர் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பிப்போகத் தீர்மானம்பண்ணி, மிலன் நகரத்தில் அவர் நடப்பித்துவந்த அலுவலை விட்டுவிட்டார். ஆகிலும் அவர் புறப்படுகிறதற்கு முன்னதாக அவருடைய அருமைத் தாயார் பூரண சமாதானத்தோடு மரணமடைந்தாள். கர்த்தருடைய இரட்சிப்பை அவள் கண்கள் கண்டதே.

அகுஸ்தீன் என்பவர் ஆப்பிரிக்கா வந்துசேர்ந்து, மூன்று வருஷமாய் உலகத்தோடு கலவாமல், தமது பிதிரார்ஜிதச் சொத்துகளுள்ள வருமானத்தைக்கொண்டு தனிமையாய் காலட்சேபஞ் செய்தார். அப்பால் யாதுகாரணத்தினாலோ வெலேரியு என்ற ஒருவர் கண்காணியாராயிருந்த ஹிப்போப் பட்டணத்துக்குப்போக, மேற்படி கண்காணியாரும் சனங்களும் ஏகோபித்து விரும்பிக் கேட்டுக்கொண்டதின்பேரில் குருப்பட்டம் பெற்றுக்கொண்டார். அவர் குருப்பட்டம்பெற்ற சமயத்தில் மேற்படி உத்தியோகத்துக்கு தாம் எவ்வளவேனும் தகுதியுள்ளவரல்ல என்ற எண்ணத்தினால் அழுததாகவும் குறிப்பித்திருக்கிறது. தாழ்மையுள்ளவர்களுக்கு கர்த்தர் கிருபையளிக்கிறார். அந்தப்படியே அவர் நடப்பித்த திவ்விய ஊழியம் விசேஷித்தபிரகாரம் கிறிஸ்தவர்களுடைய பக்திவிர்த்திக்கேதுவாயும், நாஸ்திகமான தப்பறைகள் நிர்மூலமாவதற்கு அனுகூலமாயும் பலிதமுமாயிற்று. மனிக்கேயரின் பிரதான தலைவனான பொர்த்துனாத்து என்பவன் அகுஸ்தீன் என்பவரோடு ஒரு விசை தர்க்

கம்பண்ணினதில் தோல்வியடைந்தது கண்டு, வெட்கத்தோடு ஹிப்போ நகரத்தைவிட்டு ஓடிப்போய்விட்டான். வெலேரியு என்பவர் இப்பேர்ப்பட்ட துணையாளி தமக்குக் கிடைத்ததற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, தமக்கு வயசும் பலவீனமும் மேலிடுகிறது கண்டு, அகுஸ்தீனையும் தம்மோடுகூட ஹிப்போப் பட்டணத்துக்குக் கண்காணியாராக நியமகம்செய்வித்துக்கொண்டார். அகுஸ்தீன் என்பவர் வருத்தத்தின்பேரில் அவ்வுத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, வெலேரியு என்பவருக்கு உதவியாயிருந்ததுமன்றி, அவர் இறந்துபோனபிறகு அதிக முயற்சியோடும் வைராக்கியத்தோடும் தனிமையாய் அவ்வுத்தியோகத்தை நிர்வகித்துவந்தார்.

---

## Notes on Exodus.

---

# யாத்திராகம வியாக்கியானம்.

## உ. அதிகாரம்.

### மோசே பிறந்து வளர்ந்தது.

(தொடர்ச்சி.)

---

“பிள்ளையை வளர்த்தி”. இந்தப் பிள்ளையை தேவன் காப்பாற்றுவார் என்று நம்பி, “விசுவாசத்தினாலே” இப்படிச் செய்தாள். தேவனுடைய அந்தரங்க நடத்துதலும் கூட இருந்தது. மற்றப்படி இந்த உபாயம் கொஞ்சக்காலத்துக்காவது நிலைக்கக்கூடியதல்ல. ஏனென்றால் பார்வோனின் குமாரத்தி அக்குழந்தையைக் கண்டெடாவிட்டால், அவன் தானாய் இறந்துபோவான், அல்லது நீல நதியில் முதலைகள் ஏராளமாயிருந்ததால் அவைகளால் பட்சிக்கப்படுவான் என்பது எல்லாருக்கும் தெரிந்த காரியம். ஒருவேளை அவள்: பகல் நேரத்தில் அங்கே வைத்து, இராக்காலத்தில் வீட்டிற்குக் கொண்டுபோக நோக்கமாய் அப்படிச் செய்திருப்பாள். ஓ! பிள்ளைக்குப் பால்கொடுக்கிற தாய்மாரே! கர்த்தர் உங்களுக்குச் செய்திருக்கிற தயவை நினையுங்கள்!

5—9. வேறே ஆட்கள் இந்தக் குழந்தையைக் கண்டெடுத்தாலும், பயத்தினாலே அதைக் காப்பாற்றத் துணியமாட்டார்கள்.

10. மோசே தன் தாயினிடத்தில் வளர்ந்து பருவம் வந்தவுடனே, பார்வோன் குமாரத்தியின் தத்தப்புத்திரனாக வளர்க்கப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டான். (அவன் தன் தாயண்டையிருந்தபொழுது தான் யாருடைய புத்திரன் என்பதையும், மெய்மார்க்கத்தின் பொதுவான சத்தியங்களையும் அறிந்திருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை.) பார்வோன் குமாரத்தி பார்வோனுக்கு ஒரே குமாரத்தி என்றும், அவளுக்கு மோசேயைத்தவிர வேறே சொந்தப் பிள்ளை இல்லையென்றும், அதினாலே மோசே இராசமேன்மைக்குச் சுதந்தரவாளியாக எண்ணப்பட்டானென்றும் பாரம்பரியம் சொல்லுகிறது. இது எப்படியிருந்தாலும், “மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான்” என்பது நிச்சயம். பார்



வோன் இவனை வெகுவாய் நம்பி உத்தியோகம் கொடுத்திருப்பான். இதினாலே, பிற்காலத்தில் பார்வோனுக்கு முன்பாக நிற்கவும், இஸ்ரவேலரை விடுதலையாக்கி ஆளவும் வேண்டிய தகுதியை அவன் எகிப்திலிருக்கும்போதே அடைந்துகொண்டான்.

11, 12. எபி. 11: 24—26. வாசி. 40 வருஷக்காலமாய் மோசே ஒரு எகிப்திய பிரபுபோல் வாழ்ந்து சுகித்திருந்தான். இப்பொழுதோ “தன் சகோதரரைக் கண்டு சந்திக்கும்படி அவனுடைய இருதயத்தில் எண்ணமுண்டாயிற்று.” “தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைக் கட்டளையிடுவாரென்பதை அவன் சகோதரர் அறிந்துகொள்வார்களென்று அவன் நினைத்தான்.” அப்படியே விசுவாசத்தினாலே எகிப்தின் இராசமேன்மையையும், இன்பத்தையும், செல்வத்தையும் வெறுத்து, புறக்கணிக்கப்பட்ட ஜனங்களுடைய கூட்டுறவையும் துன்பத்தையும் தெரிந்துகொண்டு, “எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துநிமித்தம் வரும் நிந்தையையே அதிகப் பாக்கியமென்று எண்ணினான்.” இதென்ன ஆச்சரியமான விசுவாசம்! நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

எகிப்தியனை வெட்டினதில் இஸ்ரவேலர் தன் நோக்கத்தை அறிந்துகொள்வார்களென்று நினைத்தான். ஆனால் அவர்களுடைய ஆவி குன்றிப்போய் அவர்களுடைய குணமெல்லாம் அடிமைக்குணமாகி, அவர்களுடைய விசுவாசம் நம்பிக்கையெல்லாம் வெகுவாய் தளர்ந்துபோயிருந்ததினாலே இவனுக்கு ஒத்துவரவில்லை. இவன் செய்ததும் சற்று பதஷ்டமும், அகாலமானதுமாயிருந்தது.

13. “மறு நாளிலும்.” தன் காரியம் நாள்தோறும் சித்தியாகும்படி நோக்கங்கொண்டதாகத் தோன்றும். ஆனால் இஸ்ரவேலர் சண்டைசெய்ததினாலும், தன் அதிகாரத்துக்குக் கீழ் அடங்காததினாலும், தான் எகிப்தியருக்கு விரோதியாய்ப் போய்விட்டதினாலும், பார்வோன் இவனைக் கொலைசெய்ய வகைதேடினதினாலும், எபிரேயர் தனக்குத் துணைநிற்கமாட்டார்களென்று அறிந்ததினாலும், இவன் வெகுவாய் அதைரியப்பட்டு, அயல்தேசம்போக நேரிட்டது. இப்படியாக இஸ்ரவேலருடைய மீட்பு 40 ௵ தாமதப்பட்டது. இதினிடையில் எகிப்தியரும், கானானியரும் தங்கள் அக்கிரமத்தின் அளவை நிரப்பினார்கள். இஸ்ரவேலர் இன்னமும் அதிகமதிகமாய்ப் பெருகினார்கள். மோசே ஆடுமேய்ச்சியாய் தனிவாசஞ்செய்து தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்ததில், வருத்தத்தைச் சகிக்கவும், விசுவாசம், பொறுமை, சாந்தம் இந்தச் சற்குணங்களை முயற்சிக்கவும் படித்துக்கொண்டிருந்தான்.

15. இந்தத் துரவு நாளதிலும் இருக்கிறதென்று பிரயாணிகள் சொல்லுகிறார்கள்.

16. “ஆசாரியன்”. இந்த வார்த்தைக்குப் பிரபு என்று அர்த்தம். 18-ல் சொல்லிய ரெகுவேல் இவன்தான் என்று நினைக்கப்படும். சிவந்த கடலின் கீழ்க்கரையில் ஒரு சிறு நாட்டுக்கு பிரபுவாயிருந்தான். தன் சனங்களுக்குள் தேவனைப்பற்றிய ஒரு வகையான அறிவையும், ஆராதனையையும் காத்துக்கொண்டுவந்தான். அவர்களுக்கு இவன் ஆசாரிய உத்தியோகத்தையும் நிறைவேற்றினான். மீதியானியர் ஆபிரகாமின் சந்ததியார். ஆதி. 25: 2.

17. “மேய்ப்பர்கள்” திரளான ஆடுமாடுகளையுடைய இன்னொரு பெரிய மனுஷனுக்கு இவர்கள் வேலைக்காரராயிருந்திருக்கலாம். அந்த இடங்களில் தண்ணீர் கிடைப்பது வெகு அருமையானதினாலே இந்தச் சச்சரவுகள் உண்டானது.

21. "சம்மதித்தான்." வேலையோ முரட்டு வேலை. ஊழியக்காரனும் இருக்கவேண்டும். இவனோ இராச பவுசில் சம்பிரமமாய் வாழப் பழக்கப்பட்டவன். இதற்கு இவன் சம்மதித்தது ஆச்சரியந்தான். என்றாலும் இவன் ஜீவகாலத்தில் இந்த 40 வருஷங்களே இவனுக்குப் பாக்கியமுள்ள காலங்களாயிருந்தது. இந்த 40 வருஷக்காலச் சங்கதியை வெகு சுருக்கமாய்க் காட்டியிருக்கிறது.

மோசே ரேகுவேலின் மகளைக் கலியாணம் செய்யுமுன் அவனிடத்தில் நெடுங்காலம் இருந்திருக்கவேண்டும்; அல்லது மோசே சிப்போராளைக் கலியாணம்பண்ணி வெகு காலமாய்ப் பிள்ளையில்லாமலிருந்திருக்கவேண்டும். ஏனென்றால் இந்த 40 வரு. கடந்தபின் அவன் பிள்ளைகளில் ஒருவன் குழந்தையாயிருந்திருக்கிறான். 4: 25.

படிப்பினை.

நாம் நாடோறும் இடைவிடாமல் இலவசமாய் அநுபவிக்கிற வெளிச்சம், தீ, ஆகாயம், தண்ணீர்முதலிய அநேக நன்மைகளிருக்கிறது. அவைகள் யாதொரு தடையில்லாமல் பூர்த்தியாய் நமக்குக் கிடைப்பதினாலே அவைகள் பெரிய நன்மைகளாகக் காணப்படுகிறதில்லை. பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கிற தாய்மார், தங்கள் பிள்ளைகளைத் தூக்கி மடியில்வைக்க இடம்பெற்றிருக்கிறது பெரிய சலாக்கியம் என்று நினைக்கிறார்களா? இது பெரிய கிருபை என்று மோசேயின் தாய்க்குத் தெரியும். ஓ. தாய்மாரே! நீங்கள் மோசேக்குத் தாயாயிருந்தால் எத்தனை கனிவாய், எத்தனை பத்திபுத்தியாய், நன்றியறிதலோடு அவனை வளர்ப்பீர்கள். கர்த்தர் உங்களுக்குக் கொடுத்திருக்கிற பிள்ளைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மோசே என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

மோசே கர்ப்பத்திலிருந்த காலமெல்லாம் அவன் தாய்: ஆண்பிள்ளை பிறக்குமோ என்ற சந்தேகத்தினாலே துக்கித்திருந்தாள். அவன் பிறந்தபொழுதோ, மெய்யாகவே வியாகுலமடைந்தாள். சந்தோஷத்துக்கேதுவான காரியம் கால விசேஷத்தினாலே துக்கத்துக்கு ஏதுவாகும்.—மோசே பிற்காலத்தில் இஸரவேல் கோத்திரங்களாற் சூழப்பட்டிருந்தபோது அவனுக்கிருந்த காவலைப்பார்க்கிலும், அவன் நாணற்பெட்டிக்குள்ளிருந்தபொழுது அதிகக் காவலையுடையவனாயிருந்தான். நாம் கைவிடப்பட்டோம் என்று அங்கலாய்க்கிற சமயந்தான் அநேகம்விசை நமக்கு நல்லகாலமாயிருக்கும்.—மோசேயின் பிறப்புக்கடுத்த சங்கதி தற்செயலாய் நடந்ததென்று சொல்ல ஏதுவில்லை. எப்படியென்றால், மோசே பிறந்தபொழுது தற்செயலாய் கண்ணைப் பகட்டத்தக்க விசேஷ அழகு அவனில் காணப்பட்டது; தற்செயலாய் அவன் தாய் ஒரு நாணற்பெட்டியை எடுத்து அதிலே பிள்ளையை வளர்த்தினாள்; தற்செயலாய் நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள்; நதியில் ஏராளமாயிருந்த முதலைகள் தற்செயலாய் பிள்ளையைக் காணவில்லை; தற்செயலாய் "தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள்." தற்செயலாய் "பார்வோன் குமாரத்தி நதியில் ஸ்நானம்பண்ண" பிள்ளை இருக்கிற இடத்துக்கு வந்தாள்; தற்செயலாய் அவள் நாணலுக்குள்ளிருக்கிற பெட்டியைக் கண்டாள்; பெட்டியைத் திறந்தபோது தற்செயலாய் "பிள்ளை அழுதது;" அப்போது அவள் இந்த எபிரேயப் பிள்ளையை ஆற்றில் எறிந்துவிடுங்கள் என்று சொல்ல மனம் வராமல், தற்செயலாய் அதின்மேல் மனதுருகினாள்; இதை வளர்க்கவேண்டுமென்ற தீர்மானம் தற்செயலாய் அவள் மனதிலுண்டானது; இது சமயம்பிடித்து தற்செயலாய் அவன் தமக்கை பேசினாள்; பிள்ளையின் தமக்கை சூதாய் நிற்கிறாள் என்ற எண்ணம் ராஜமகள் மன



திலே வராமல் அழைத்துக்கொண்டுவா என்று தற்செயலாய் உத்தரவுகொடுத்தாள்!; தற்செயலாய் பிள்ளையின் தாய் சம்பளத்துக்குப் பால் கொடுத்து வளர்த்தாள்; தற்செயலாய் மோசே எகிப்தைவிட்டுப்போய் இஸ்ரவேலரை மீட்டு நடத்தினான் என்று சொல்வது நியாயத்துக்கு எவ்வளவும் பொருந்தவில்லை. இதெல்லாம் தேவசெயலால் நடந்ததென்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. அப்படியானால் நம்மை முழுவதும் தேவனுக்குக் கையளித்துவிட்டு, "அவர் பார்ப்பார், அவர் காப்பார்" என்று எவ்வளவோ அவரிடத்தில் நம்பிக்கையாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். 1—12. மோசே வெறுத்தவைகளையும் தெரிந்துகொண்டவைகளையும் சற்று சிந்திப்போம். விசுவாசம் எத்தனையோ வல்லமையுள்ளது! விசுவாசி அற்பக் காரியத்துக்காக உலகத்தை வெறுக்கவில்லை. பார்வோன் அரசுபுரிந்த இடமும், எகிப்தின் பொக்கிஷங்களுமெல்லாம் இருந்த இடம் தடந்தெரியாமற்போயிற்று. பார்வோன் குமாரத்தியின் நாமமும் கூட அழிந்துபோயிற்று. மோசேயின் நாமமோ உலகமெங்கும் பிரஸ்தாபிக்கப்பட்டுவருகிறது. "நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன்." எபி. 11: 23-25.—நல்ல அலுவல்செய்ய நல்ல ஆயத்தமும் வேண்டும். மோசே 40 வரு. வேலைசெய்ய, 80 வரு. படித்தான். 15.—நம்முடைய விசுவாசம் நெடுங்காலம் பரீக்ஷிக்கப்பட்டாலும் நாம் தளர்ந்துபோகக்கூடாது. மோசேயின் விசுவாசமும் பொறுமையும் 40 வரு. பரீக்ஷிக்கப்பட்டதே!—"மோசே அந்த மனுஷனிடத்தில் தங்கியிருக்கச் சம்மதித்தான்." இதென்ன ஆச்சரியமான சம்மதம்! விசுவாசமே இப்படிப்பட்ட சம்மதியைக் கொடுக்கக்கூடும். இராஜமகள் வீட்டிலிருந்த வரிசையையும் பவுசையும் மேன்மையையும், கண்ணுக்கினிய காக்ஷிகளையும், காதுக்கினிய இராகங்களையும், நாவுக்கினிய ருசிவர்க்கங்களையும், எகிப்தின் பொக்கிஷங்களையும், சுகபோகங்களையுமெல்லாம் மனதாரத் துறந்துவிட்டு, ஏழை ஆடுமேய்ச்சியாயிருக்கச் சம்மதித்தான். "போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்."21.—தேவன் இஸ்ரவேலரை விடுதலையாக்கச் சித்தமான வகையை: "தேவ சந்நிதியிலெட்டினது;" "நினைவுகூர்ந்தார்;" "கண்ணோக்கினார்;" "நினைத்தருளினார்" என்று பரிதாபமாய்க் காட்டியிருக்கிறது. தேவ அன்பு மாறாதது. கிறிஸ்து பாவியை நோக்கிப் பார்க்கிறவகையும் இப்படியேயிருக்கிறது. 23—25.

---

## ௩. அதிகாரம்.

### தேவன் மோசேக்குக் காட்சியாகி அனுப்பினது.

1. "வனாந்தரத்தின்." இது ஓரேபின் கீழ்க்கோடியை அடுத்திருந்தது.

"பின்புறம்." எத்திரோ குடியிருந்த இடத்துக்கும், மோசே இதற்குமுன் ஆடுமேய்த்த இடத்துக்கும் பின்புறமாம். இந்தப் பின்புறமானது, அந்த வனாந்தரத்தின் உட்பக்கமாயிருந்தது. மோசே நல்ல மேய்ச்சலுக்காக இவ்விடத்துக்கு ஆடுகளை ஓட்டினான் என்று தோன்றும். "காட்டு மிருகங்களை வேட்டையாடுவது, யுத்தாபேட்சைக் குணத்துக்கு ஏற்றது, அது மனுஷர்: படைத்தலைவர்களும் சேனாபதிகளுமாகும்படி அவர்களைத் தகுதியாக்குகிறது" என்று பைலோ சொல்லுகிறார். அப்படியே ஆடுமேய்ப்பது அமைதலான ராஜரீகம் பண்ணி மனுஷரை ஆள நல்ல முயற்சியும் ஆயத்தமுமாயிருக்கிறது.

"தேவ பர்வதம்." இதில் தேவன் ஒளிமயமாய் இறங்கி நியாயப்பிரமாணத்தைக் கொடுத்த விசேஷத்தைச் சுட்டி நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபின் அந்த மலைக்கு இந்தப் பேர் வழங்கினதினாலே இப்பொழுதும் அப்படி எழுதுகிறார். 18: 5. 19: 3, 11. 1 இரா. 19: 8.

ஓரேப் எது? சீனாய் எது? என்பதைக்குறித்து தர்க்கமுண்டு. ஆனால் பிரயாணிகளும் சாஸ்திரிகளும் பொதுவாய் ஒத்திருக்கிறபடி, ஓரேப் என்பது சற்று விரிவான கருத்துள்ளதாக அந்த மலைக்கும் அந்த மலையை அடுத்த திசைக்கும் பேராகவும்; சீனாய் என்பது அந்த மலையின் ஒரு உச்சிக்குப் பேராகவுமிருக்கிறது. சீனாய், ஓரேப்புக்குள் அடங்கினதுதான். (33: 6=34: 1). உபா. 1: 6. 4: 10. 5: 2. இன்னம் சிலர்: ஓரேப், சீனாய் இந்த இரண்டும் அந்த ஒரே மலையைத்தான் குறிக்கிற பேர்களாகவும், அந்த வனாந்தரத்துச் சுதேச குடிகளால் சீனாய் என்றும், எகிப்தியரால் ஓரேப் என்றும் வழங்கப்பட்டதாகவும் நினைத்திருக்கிறார்கள். ஓரேப் என்பதற்கு தனிமை என்று அர்த்தம். சீனாய் என்பதற்கு செடி என்று அர்த்தம். 2-ல் சொல்லிய செடியின் விசேஷத்தைக்கொண்டாவது, அல்லது அந்த மலையில் செடிகள் மிகுதியாயுண்டான விசேஷத்தினாலாவது இந்தப் பேர் வந்ததாகத் தோன்றும்.

2. "தூதனானவர்." இவர் பிற்பாடு எகோவா என்றும், தேவன் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார். 4, 6. "முட்செடியின் நடுவிலிருந்து," "இருக்கிறவராக இருக்கிறேன்" என்றார். திரித்துவ உபதேசம் இதில அடங்கியிருக்கிறது. இங்கே பேசுகிறவர் தேவகுமாரன்தான். மற்றப்படி மெய்த்தேவனை வணங்கவும், எவ்வகை விக்கிரகாராதனையினின்று மனுஷரை விலக்கவும் நோக்கமாய் எழுதப்பட்ட வெளிப்படுத்தலில் இப்படிச் சொல்லியிருப்பதற்கு வேறே நியாயம் தோன்றவில்லை.

"அக்கினிச்சுவாலை." அக்கினியானது தேவனுடைய பரிசுத்தத்திற்கும நீதிக்கும்; பாவிகள்மேல் அவர் செலுத்தும் நீதியுள்ள கோபாக்கினைக்கும்; அவர் நேராகவாவது, கருவிகளைக்கொண்டாவது தமது ஜனங்களை பரீக்ஷித்துச் சுத்திகரிக்கிற எத்தனமாகிய துன்பம் சோதனைகளுக்கும்; பாவ ஆசாபாசங்கள் பட்சிக்கப்பட்டு, ஆத்துமா தேவ சாயலாய் மறுரூபமாகும்படி பரிசுத்தாவியானவர் கொடுக்கிற ஞானஸ்நானத்திற்கும் குறிப்படையாளமாக வேதத்தில் வழங்குகிறது. இந்த அக்கினியானது கேதுரு மாத்திலல்ல, விறகுக்கேயல்லாமல் வேறொரு கலைக்குதவாததும், சீக்கிரத்தில் லேசாய் எரிந்து சாம்பலாகிவிடத்தக்கதுமான "முட்செடியிலே" காணப்பட்டது. "முட்செடி அக்கினியால் சுவாலித்தெரிந்தும் அது வெந்துபோகாமலிருந்தது." இந்தக் காட்சி எகிப்திலிருக்கிற இஸ்ரவேலருடைய இழிவையும் அகோர கஸ்தியையும், தேவ சமுகத்தினாலும் வல்லமையினாலும் அவர்கள் ஆச்சரியமாய் தற்காக்கப்பட்டுவந்ததையும் காட்டுகிற அடையாளமாயிருந்தது. இஸ்ரவேலர் இது விஷயத்தில் கிறிஸ்துசபைக்கும், ஒவ்வொரு விசுவாசிக்கும் முன்னடையாளமாயிருந்தார்கள்.

4, 5. யாக்கோபு எகிப்துக்குப் போனதுமுதல் 200 வருஷத்துக்கு அதிகமாய் தேவன் யாருக்காவது காட்சியானதாகக் காணோம். ஆகையால் மோசே (அந்தக் காட்சியைக்குறித்துமாத்திரமல்ல) தன்னைப் பேர்சொல்லிக் கூப்பிட்ட சத்தத்தைக்குறித்தும் பிரமியபடைந்தான்.

"பாதரட்சையைக் கழற்றிப்போடு." கீழ்தேசங்களில் இது வணக்கத்துக்கும், மரியாதைக்கும் அடுத்த செய்கையென்பது எல்லாருக்கும் தெரியுமே. ஆதி. 28: 16, 17. யோசு. 5: 15. பிர. 5: 1. அப். 7: 33.



இவனுக்குள் கவனத்தையும் கவலையையும் எழுப்பி, தாம் எகோவா என்பதை அவன் அறிந்துகொள்ளும்படி செய்த குறிப்பாம். ஆசாரியர் பாதரட்சையைக் கழற்றிப்போட்டு ஆசரிப்புக்கூடாரத்திலும், தேவாலயத்திலும் வெற்றுக்காலாய்ப் பிரவேசித்து பணிவிடை நடப்பித்தார்களென்று அநேக கல்விமான்கள் நினைத்திருக்கிறார்கள். ஆனால் இதைப்பற்றி நமக்கு நேரான கட்டளையில்லை.

## The Tentative Version of the Tamil Bible.

## யாழ்ப்பாணத்துத் திருத்தல்.

தமிழ்நாடெங்கும் ஒரே திருத்தலான வேதாகமம் வழங்கவேண்டுமென்று விரும்பி, யாழ்ப்பாணத்திலுள்ள சில போதகன்மார் வேதாகம சங்கத்தாருடைய அநுமதிபெற்றுக் கூடி, நூதன திருத்தல் ஒன்றைச் செய்து, 1850-ம் வருஷத்தில் அதைச் சென்னபட்டணத்தில் பிரசித்தப்படுத்தினார்கள். இது வழக்கமாய், "யாழ்ப்பாணத்துத் திருத்தல்" என்று சொல்லப்படும். இது பழைய ஏற்பாட்டுக்கு மூன்றாம் திருத்தலும், புதிய ஏற்பாட்டுக்கு நாலாம் திருத்தலுமாய் இருந்தது. இது இரேனியூசையர் செய்த திருத்தலைப்போல் அவ்வளவு விரிவானதுமல்ல, பெப்ரிசியஸையர் செய்ததுபோல் அவ்வளவு கருகலானதுமல்ல. இது வெகு நேர்த்தியான அச்சரமாய் அச்சிடப்பட்டது. இதிலே "பராபரன்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "தேவன்" என்ற பேர் வழங்கப்பட்டது. மோசே எழுதின பஞ்சாகமத்தில் ஒவ்வொரு புஸ்தகம் ஒவ்வொரு பேராலே விசேஷிக்கப்பட்டது. பின்னும் பலவகையில் அதிலே தேர்ச்சி கண்டது. ஆனாலும் அநேகர் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதிலே செய்த மாற்றுதல் பல இடங்களில் நல்லதல்ல என்றார்கள். விசேஷமாக மரங்களின் பேராக பெப்ரிசியஸ் போட்டிருந்த "கேதுரு, கர்வாலி, அசோகை, வாசனை மரம்" என்ற சொற்களுக்குப் பதிலாக, யாழ்ப்பாணத்தார் "ஏரஸ் மரம், அல்லோன் விருட்சம், ஓரென் விருட்சம், அல்மூக் மரம்" என்ற சொற்களை மாற்றிவைத்தது நல்லதல்ல என்றார்கள். பின்னும் அநேக இடங்களில் பெப்ரிசியஸ் வைத்த சொற்கள் நன்றாயிருந்தபோதிலும் அவைகளை மாற்றினது அநியாயம் என்றார்கள், விசேஷமாய் "கர்த்தர்" என்ற தமிழ் மொழியைத் தள்ளி "யெகோவா" என்ற எபிரேய மொழியை வைத்தது அநேகருக்குப் பிரியமல்ல. இதுவுமன்றி யாவருக்குந் தெரிந்த நல்ல தமிழ்ச் சொற்களை நீக்கி அநேகருக்கு விளங்காத சமஸ்கிருத பதங்களைக் கொண்டுவந்து வைத்தது தப்பிதம் என்றார்கள். ஆதலால் சிலர் மாத்திரம் இந்தத் திருத்தலை ஒப்புக்கொண்டார்கள். யாழ்ப்பாணத்துப் புதிய ஏற்பாடு இரண்டு பதித்தல் மாத்திரம் அடைந்தது. பழைய ஏற்பாடு மறுபதித்தல் அடையவேயில்லை. இது பிரசித்தம் செய்யப்பட்டு பத்து வருஷத்திற்குள்ளாக, யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்க நல்ல திருத்தல் செய்யவேண்டியதைக்குறித்து வேதாகம சங்கத்தார் யோசனைசெய்யத் தொடங்கினார்கள். ஆகிலும் "திருச்சபை வேலையில் தாமசம் மிகுதி" என்ற பழமொழிப்படி 1855-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட புதுத் திருத்தல் 1871-ம் வருஷமட்டும் முடியாமலிருந்தது. "ஆரம்பத்தில்

துரிதமாய்க் கிடைத்த சுதந்தரம் முடிவிலே ஆசீர்வாதம் பெறாது" என்று, நீதிமொழி 20: 21-ல் சொல்லியிருக்கிறதே. இப்போது வழங்கிவருகிற தமிழ்த் திருப்புதலோ "துரிதமாய்க் கிடைத்த சுதந்தரமல்ல என்பது மேற்சொல்லிய விபரங்களினாலே பிரத்தியட்சமாய் விளங்குகிறதினாலே இது "முடிவிலே ஆசீர்வாதம் பெறும்" என்று திடநம்பிக்கையாய்க் காத்திருப்போமாக.

முந்தின திருத்தலுக்கும் யாழ்ப்பாணத்துத் திருத்தலுக்கும் நடையில்கண்ட வித்தியாசம் தெரியும்படி சில வாக்கியங்களைக் காட்டுவோம்.

| பெப்ரிசியஸ் 1773. | யாழ்ப்பாணம் 1850. |
|---|---|

ஆதியாகமம் 2: 12.

| | |
|---|---|
| அந்தத் தேசத்தின் பொன் நல்லது. | அத்தேசத்தின் பொன் சிரேஷ்டம். |

ஆதி. 42: 21.

| | |
|---|---|
| நாம் நம்முடைய சகோதரனுக்குச் செய்த குற்றமே நம்முடைய மேல் சுமருகிறது. அவன் நம்மை இரக்கம் கேட்கும்போது, அவன் ஆத்துமத்திற்கு இருந்த இடுக்கத்தை நாம் கண்டும், அவனுக்குச் செவிகொடாதே போனோமே. ஆகையால் இந்த இடுக்கம் நம்முடைய மேல் வருகிறது. | நம்முடைய சகோதரன் நம்மை நோக்கிக் கெஞ்சி வேண்டிக்கொண்டபொழுது, அவனுடைய மனவியாகுலத்தை நாம் கண்டும் அவனுக்குச் செவிகொடாமல் போனதைக்குறித்து நாம் குற்றவாளிகளே. அந்நிமித்தம் இந்த ஆபத்து நம்மேல் வந்தது. |

நியாயாதிபதி 15: 6.

| | |
|---|---|
| ஆகையால் பெலிஸ்தர் போய் ஏறி அவளையும், அவள் தகப்பனையும் அக்கினியாலே சுட்டுப்போட்டார்கள். | அதற்காக பெலிஸ்தியர் போய் அவளையும் அவளுடைய பிதாவையும் அக்கினியால் சுட்டுப்போட்டார்கள். |

நியா. 15: 18.

| | |
|---|---|
| அவன் மெத்தவும் தாகத்தவனாகி கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, தேவரீர் உம்முடைய அடியான் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்கையில், இப்போது நான் தாகத்தாலே செத்து சுன்னத்தில்லாதவர்கள் கையிலே விழுவேனோ என்றான். | அவன் மிகுந்த தாகத்தை அடைந்து எகோவாவை நோக்கி ஓலமிட்டு. நீர் அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைத் தந்தீரே. இப்பொழுது நான் தாகத்தால் இறந்துபோகலாமா? விருத்தசேதனமில்லாதவர்களுடைய கைக்கு அகப்படலாமா? என்றான். |

ரூத் 2: 19.

| | |
|---|---|
| மாமி, இன்று எங்கே கதிர் பொறுக்கினாய், எவ்விடத்தில் சம்பாதித்தாய் என்று அவளைக் கேட்டாள். | மாமி. இன்று எங்கே பொறுக்கிக்கொண்டுவந்தாய் எவ்விடத்தில் முயற்சி செய்தாய் என்றாள். |



# THE SCRIPTURE GAZETTEER.

## வேத இடப்பேர் அகராதி.

*இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.

(தொடர்ச்சி)

622. தேபேஸ். சீகேம் நாட்டில் பட்டணம். நியா. 9: 50
623. தேமா. இஸ்மவேலரில் ஒரு வகுப்பார். சீரியாவின் எல்லைகளுக்கு வெளியே குடியிருந்தவர்கள். ஆதி. 25: 15.
624. தேமான். ஏதோமியரில் ஒரு வகுப்பார். எரே. 49: 7.
625. தேலாசார். வட மெசொப்பொத்தாமியாவின் பரும்புக்காட்டில். ஏசா. 37: 12.
626. தேலெம். யூதாவின் தென் அந்தத்தில் பட்டணம். யோசு. 15: 24.
627. தொகர்மா. அர்மீனியாவுக்குப் பூர்வ பேர். ஆதி. 10: 3.
628. தொதானீம், அல்லது ரோதானீம். யாப்பேத்தின் சந்ததியார். ஆதி. 10: 4. 1 நாளா. 1: 7.
629. தொப்கா. சீன் வனாந்தரத்தில், ரெவிதீமுக்கும் கடலுக்கும் ஊடே இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 12.
630. தோகேன். சிமியோனில் பட்டணம். 1 நாளா. 4: 32.
631. தோத்தான். (கிணறு) அல்லது தோதாயீம். (இரண்டு கிணறு) சீகேமுக்கு வடக்கே ஒரு இடம். ஆதி. 37: 17. 2 இரா. 6: 13.
632. தோப். யோர்தானுக்குக் கிழக்கே ஒரு நாடு. நியா. 11: 3.
633. தோப்பேத். (மேளம்) எருசலேமுக்குத் தென்கிழக்கே, இன்னோம் பள்ளத்தாக்கில் ஒரு இடம். 2 இரா. 23: 10. ஏசா. 30: 33, எரே. 7: 31, 32.
634. தோப்பேல். சவக்கடலுக்குத் தென்கிழக்கே பட்டணம். பலஸ்தீனாவைச் சேர்ந்தது. உபா. 1: 2.
635. தோர். கானானிய ராசாவின் பட்டணம். மேல் மனாசேயிலிருந்தது. யோசு. 11: 2.
636. தோலாத். சிமியோனில் பட்டணம். 1 நாளா. 4: 29.
637. நகராத்து. எப்பிராயீமின் தென் எல்லையில் பட்டணம். யோசு. 16: 7.
638. நகலால். அல்லது நகபோல். செபுலோனில் லேவியர் பட்டணம். யோசு. 19: 15.
639. நகாலியேல். இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 21: 19.
640. நப்தலி. (1) ஒரு கோத்திரம். யோசு. 19: 32.
(2) கலிலேயாவில் ஒரு மலை. யோசு. 20: 7.
641. நப்தூகீம். எகிப்தியரில் ஒரு ஜாதியார். ஆதி. 10: 13.
642. நல்லதுறைமுகம். கிரேத்தைத் தீவில், மத்தூலா முனைக்கு வடகிழக்கே ஒரு சிறு குடாக்கடல். நாளதில் "கேலாஸ் லிமினஸ்" என்று பேர். அப். 27: 8.
43. நாகமா. யூதாவின் பள்ளத்துக்காட்டில் பட்டணம். யோசு. 15: 41. ("நாமாத்தியன்." யோபு 2: 11)

644. நாசரேத்து. (பிரித்துவைக்கப்பட்டது. பரிசுத்தமாக்கப்பட்டது.) கலிலேயாவில் பட்டணம். தாபோர் மலைக்கு வடமேற்கே 6-மயில் தூரம். தாபோர் பள்ளத்தாக்கின் மேல்பக்கத்திலிருந்தது. இப்போது அரணிப்பாய்க் கட்டப்பட்டிருக்கிற எனநாசிரா என்னும் ஊர் அது இருந்த இடத்திலிருக்கிறது. அதின் குடிகள் 3,000 பேர். அவர்களில் 2,000 பேர் கிறிஸ்தவர்கள். மத். 2: 23.

645. நாபீஸ். இஸ்மவேலரில் ஒரு வகுப்பார். ஆதி. 25: 15. 1 நா. 1: 31.

646. நாயீன். (இன்பம்.) தாபோர் மலைக்கு 3-மயில் தூரத்தில், பலஸ்தீனாவில் பட்டணம். நாளதில் நெயின் என்று பேர். லூக். 7: 11.

647. நாயோது. இராமாவுக்குச் சமீபத்தில், தீர்க்கதரிசிகளுடைய பள்ளிக்கூடமிருந்த இடம் என்று நினைக்கப்படுகிறது. 1 சாமு. 19: 18, 19, 22, 23.

648. நாரான். எப்பிராயீமின் கீழ் எல்லையில் பட்டணம். 1 நாளா. 7: 28.

649. நிக்கொப்போலி. (ஜெயநகரம்) எப்பிருவில் பட்டணம், ஆக்ற்றியம் குடாக்கடலின் மேல்கரையில். தீத். 3: 12.

650. நிப்சான். யூதாவின் வனாந்தரத்தில் பட்டணம். யோசு. 15: 62.

651. நிம்ரா. (சிவிங்கி) காத்தில் பட்டணம். எஸ்போன் கிட்ட. எண். 32: 3. "நிமிரீம் தண்ணீர்கள்." மோவாபில். ஏசா. 15: 6. எரே. 48: 34.

652. நினிவே. அசீரியாவுக்கு இராஜதானி. திகிரீஸ் நதியில், மோசல்கிட்ட. ஆதி. 10: 11.

653. நீலநதி. இதற்கு வேதத்தில் பலபேர்களுண்டு:—(1) "சிகோர் ஆறு." யோசு. 13: 2. 1 நா. 13: 5. ஏசா. 23: 3. எரே. 2: 18.
(2) "நதி." ஆதி. 41: 1. யாத். 1: 22. ஏசா. 23: 3, 10.
(3) "எகிப்தின் நதி." ஆதி. 15: 18.
(4) "எத்தியோப்பியாவின் நதிகள்." ஏசா. 18: 1.

654. நெகியெல். ஆசேரின் எல்லையில் பட்டணம். யோசு. 19: 27.

655. நெக்கேபு. நப்தலியின் எல்லையில் பட்டணம். யோசு. 19: 33.

656. நெத்சிப். யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 43.

657. நெத்தோபா. யூதாவில் பட்டணம். பெத்லகேம் கிட்ட. 2 சாமு. 23: 28. எஸ்றா. 2: 22.

658. நெபாயோத்து. (தீர்க்கதரிசனங்கள், அல்லது கனிகள்.) இஸ்மவேலரில் பிரதான வகுப்பார். ஆதி. 25: 13. ஏசா. 60: 7.

659. நெப்தோவா. யூதா பென்யமீன் இந்த கோத்திரங்களுக்கு இடையில் ஒரு நீரூற்று. எருசலேமுக்கு வடமேற்கே 2½-மயில் தூரம். யோசு. 15: 9. 18: 15.

660. நெப்லாத். பென்யமீனில் பட்டணம். நெகே. 11: 34.

661. நெயாப்போலி. (புதுநகர்) மக்கெதோனியாவில் கடற்கரையடுத்த பட்டணம். நாளதில் நேப்போலி என்னப்படுகிற திரோசின் எல்லைக்குச் சமீபத்திலிருக்கிறது. அப். 16: 11.

662. நேபோ. (கனிகொடுப்பது) (1) ரூபனில் ஒரு மலை. எண். 33: 47.
(2) அந்த மலைக்குச் சமீபத்தில் ஒரு பட்டணம். எண். 32: 3.
(3) பென்யமீனில் பட்டணம். எஸ்றா 2: 29. நெகே. 7: 33. 10: 43.

663. நேயா. செபுலோனில் பட்டணம். யோசு. 19: 13.



664. நோ, அல்லது நோ அம்மோன். (அம்மோனின் ஆசனம்) தென் எகிப்திலுள்ள தேபே நகரம். எரே. 46: 25. எசே. 30: 14, 15, 16.

665. நோதாப. இஸ்மவேலரில் ஒரு வகுப்பார். 1 நா. 5: 19.

666 நோத். (ஓட்டம்) ஆபேலைக் கொன்றபின், காயீன் ஓடிப்போயிருந்த தேசம். ஆதி. 4: 16.

667. நோபாகு. மனாசேயில் பட்டணம். நியா. 8: 11.

668. நோபு. பென்யமீனில் ஆசாரியர் பட்டணம். 1 சாமு. 21. 1.

669. நோப்பா. யோர்தானுக்குக் கிழக்கே ஒரு இடம். எண். 21: 30.

670. பகூரீம். யோர்தான் பள்ளத்தாக்கிலிருந்து எருசலேமுக்குப் போகிற பெரும்பாதையில். 2 சாமு. 3: 16. (பருமியன். 2 சாமு. 23: 31. பகருமியன். 1 நாளா. 11: 33.)

671. பதான் அராம். மெசொபொத்தாமியா தேசம்: ஆதி. 31: 18. "பதான்" ஆதி. 48: 7. "அராம் தேசம் அல்லது வெளி." "சீரியா" ஓசி. 12: 12.

672. பத்தார். சின்ன ஆசியாவில், லீசியா நாட்டுக்குக் கடல் துறைப் பட்டணம். அப். 21: 1.

673. பத்மு. ஈஜியன் கடலில் தீவு. சாமோஸ் கிட்ட. வெளி. 1: 9.

674. பத்ரபீம். எஸ்போனில் ஒரு வாசல். உன். 7: 4.

675. பத்ரோஸ். தென் எகிப்தின் ஓர் பாகத்துக்குப் பேர். தேபேயை அடுத்திருக்கலாம். ஏசா. 11: 11. இதின் குடிகளுக்கு பத்ருசீம் என்று பேர். ஆதி. 10: 14. 1 நாளா. 1: 12.

676. பம்பிலியா. (சகல கோத்திரங்களும்) சின்ன ஆசியாவில் ஒரு நாடு. சீப்புருதீவுக்கு எதிரேயிருக்கிறது. இந்தத் தீவுக்கும், பம்பிலியா நாட்டுக்கும் ஊடேயிருக்கும் கடலுக்கும் இந்தப் பேர் வழங்கும். அப். 2: 10.

677. பர்பார். தமஸ்குவின் நதி. 2 இரா. 5: 12.

678. பர்வாயீம. பொன்மிகுத்த ஒரு தேசம். ஒப்பீர் இதுவாயிருக்கலாமென்று யோக்கார்ட் என்பவர் சொல்லுகிறார். 2 நாளா. 3: 6.

679. பலஸ்தீனா. பெலிஸ்தியர் பார்.

680. பாகால். (சூரியன் அல்லது ஆண்டவன்) (1) சிமியோனில் பட்டணம். 1 நா. 4: 33.
(2) ஒரு மலைக்கும் பேர். எண். 22: 41.

681. பாகால்-ஆமோன். லீபனோன் பள்ளத்தாக்கில், சாலொமோனுக்கிருந்த திராட்சத்தோட்டம். உன். 8: 11.

682. பாகால்-எர்மோன். எர்மோன் மலை. நியா. 3: 3. 1 நா. 5: 23.

683. பாகால்-காத். (இராணுவ விக்கிரகம்) யோசுவா ஜெயித்த தேசங்களுக்கு வட எல்லை. பூர்வத்தில் சீரியருடைய விக்கிரகாராதனைக்கு முக்கிய இடம். பிற்காலத்தில் இதற்கு பாகால்-பெக் என்று பேர். யோசு. 11: 16.

684. பாகால்-செபோன். (வடக்கத்தி விக்கிரகம்) சிவந்த கடலில் உள்விட்ட ஒரு மலை முனைக்குப் பேர் என்று நினைக்கப்படும். இதின் மேல் ஒரு விக்கிரகக்கோவிலிருந்தது. யாத். 14: 2, 9. எண். 33: 7.

685. பாகால்-ஷலீசா. (மூன்றும் விக்கிரகம்) சாரோன்வெளியில் பட்டணம். 2 இரா. 4: 42.

686. பாகால்-தாமார். (பேரீச்சுமர எஜமான்) பென்யமீனில் ஒரு ஊர். கிபியா கிட்ட. நியா. 20: 33.

687. பாகால்-பிராசீம். (பிரிவினைக்கு எஜமான்) எருசலேமுக்குத் தெற்கேயுள்ள மலை. 2 சாமு. 5: 20. 1 நாளா. 14: 11.

688. பாகால்-பெக். சிலோசிரியாவிலிருந்த வெகு அலங்காரமான பட்டணம். இதில் பாகால் அல்லது சூரியனுக்கென்று ஒரு பேர்போன ஆலயம் சமைக்கப்பட்டிருந்தது பாகால்-காத் இதுதான். யோர்தான் நதி உற்பத்தி கிட்ட.

689. பாகால்-பேயோர். அபாரீம் மலைத்தொடர். எண். 23: 28.

690. பாகால்-மெயோன். (வீட்டெஜமான்.) அல்லது பெத்மெயோன். ரூபனில் பட்டணம். எண். 32: 38.

691. பாகு. ஏதோம் தேசத்தில் பட்டணம். ஆதி. 36: 39. (பாகி. 1 நாளா. 1: 50.)

692. பாசான். யோர்தானுக்குக் கிழக்கிலுள்ள ஒரு நாடு. இது கிலேயாத்துமுதல் எர்மோன் வரையும்; யோர்தான் முதல், சால்கா வரையுமிருந்தது. பிற்காலத்திலிருந்த காலனித்தி, ஆரனித்தி, திராகொனித்தி, பத்தானியா என்ற நாங்கும் இதற்குள்ளிருந்தன. எண் 21: 33.

693. பாசான்-அவோத்யாயீர். (யாயீரின் கிராமங்கள்.) யாவீர் அர்கோவை ஜெயித்தபின் அதற்கு இந்தப் பேர் வந்தது. உபா. 3: 4, 14,

694. பாஸ்தம்மிம். யூதாவில் பட்டணம். 1 நாளா. 11: 13. எபேஸ்தம்மிம் இதுதான்.

695. பாபேல் அல்லது பாபிலோன். (தாறுமாறு) ஐபிராத்து நதியில். ஆதி 10: 10 11: 9. விரிவான கருத்துப்படி அடிக்கடி பார்ச இராச்சியத்துக்குப் பேராகவும் வழங்கினது.

696. பாப்போ. சிப்புருதீவின் மேல்கரையில் பட்டணம். ரோமை அதிபதி வாசம்பண்ணின இடம். அப். 13: 6.

697. பாமோத்து அல்லது பாமோத்பாகால். மோவாபில் விக்கிரகாராதனை செய்யும் மேடுகள். எண். 21: 19, 20.

698. பாரா. பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 23.

799. பாரான். யூதாக் கோத்திரத்துக்கும் சீனாய் வனாந்தரத்துக்கும் இடையிலுள்ள வனாந்தரம். ஆதி. 21: 21. ("எல்பாரான்" ஆதி 14: 6.)

700. பாரோத். பலஸ்தீனுவுக்குத் தெற்கே லகாய்ரோயீகிட்ட. பெயர்செபாவுக்குத் தெற்கே 12-மயில் தூரம். ஆதி. 16: 14:

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. பூகோளத்தின் அந்திய முனையாகிய துருவமுனையைச் சேர்ந்த சமுத்திரத்தைப் பார்க்கும்படி மஹா ராஜாத்தியவர்களுடைய கப்பல்இரண்டில் சில வித்துவான்கள் சீமையிலிருந்து புறப்பட்டார்கள். அந்தத் துரைமார்களோடே போன கப்பற்காரர் சுமார் 125 பெயர். அவர்கள் பண்ணவேண்டிய பயணம் இரண்டு வருஷமோ மூன்று வருஷமோ எவ்வளவு பிடிக்குமென்று தெரியாது. வடமுனையைநோக்கி ஓடுங் கப்பல்கள் சமுத்திரம் உறைந்து போகும்போது ஓடாமல், சில மாசமட்டும் கற்போன்ற கடல்முகத்தில் நிற்கும். குளிர் அதிகமாயிருக்கும் ஆனதால் அனலுண்டாக்கத்தக்க உடை உடுத்திக்கொண்டு கப்பலுக்குள்ளே இருக்கவேண்டும். சில இடங்களில் கரை இருக்கவுங்



கூடும். துருவமுனையைச் சேர்ந்த கடல் உறையாமல் நீர்த்தன்மையாயிருக்குமென்று சிலர் உத்தேசிக்கிறார்கள். கப்பற்காரரும் வித்துவான்களும் கூடிய அளவு இருக்கிறதைப் பார்க்கும்படி நாயால் இழுக்கப்படும் உறை நீர் வாகனமேறிச் செல்லுவார்கள். ஒருவேளை துருவமுனையைக் கண்டுகொள்ளவுங்கூடும். ஆறுமாசமட்டும் சூரிய வெளிச்சம் அவர்களுக்கிராது. தீபம ஏற்றி வேண்டியவைகளை கப்பலிலே செய்வார்கள். ஒவ்வொரு கப்பலுக்கும குரு ஒருவர் இருக்கிறார். வாசிக்கத்தக்கதாக விதமவிதமான அநேக புஸ்தகம வைத்திருப்பார்கள். கப்பற்காரரில் அநேகர் கீதவாத்தியக்காரராகையால் இனிமையாய்க் காலக்ஷேபஞ் செய்வதற்கு வழிவகையுண்டாகும்.

பர்மா பிணக்கு தீர்ந்ததென்று பத்திரிகைகளில் பிரசித்தப்படுத்தப்பட்டது. கொனிப்பிரதேசத்தின் மேல்பாகம் ஸ்வாதீனமாயிருக்கும்படி பர்மா அரசன் உடன்படிக்கைபண்ணினதுந்தவிர, அங்கிலேய சேனாவீரர் எக்காலத்திலும் தமக்கு அதீனமாயிருக்கிற தேசத்தின் வழியாய்ப் பயணம்பண்ணவும் உத்தரவுசெய்தார்.

இந்தியா. அங்கிலேய இளவரசர் பம்பாயில் வந்திறங்கும்போது, ஏற்குமாறு அவரை உபசரித்து மரியாதைசெய்யும்பொருட்டுத், தகுதியான வந்தனபத்திரம் ஒன்று சித்தஞ்செய்ய பம்பாய் நகரச் சபையார் கமிற்றியொன்றேற்படுத்தினார்கள். இளவரசர் வரும்போது டில்லிக்கு சமீபத்தில் யுத்தககாட்சி ஒன்று உண்டாகும். திரளான பீரங்கி வகுப்பாரும், நாலு அங்கிலேய குதிரைவீரர் பட்டாளத்தாரும், பத்து அங்கிலேய பதாதிப் பட்டாளத்தாரும், சுதேச குதிரைவீரர் ஒன்பது பட்டாளத்தாரும், பதினைந்து சுதேச பதாதிப பட்டாளத்தாரும் ஆக ஏறக்குறைய இருபதினாயிரம் யுத்தவீரர் யுத்தத்திற்காக வந்த மயமாய்க் கூடிவருவார்கள். அப்பொழுது மஹா ராஜாத்தியவர்கள் சேஷ்ட புத்திரராகிய ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் என்னும் அங்கிலேய சேனாபதியானவர் அவர்களை வகுத்துப் பார்வையிடுவார்.

திருவிதாங்கோட்டு மஹா ராஜா தமது சாதாரண ஜனங்களுக்குள்ளே கல்விப்பிவிர்த்திசெய்வதற்கு வருஷாந்தரம் பதினையாயிரம் ரூபாய் உதவிப்பணம் கொடுக்கும்படி விதித்தார். இந்தப் பணம் துரைத்தனத்தார் ஸ்தாபித்த பாடசாலைகளுக்கல்ல, மிஷன் சங்கத்தாருடைய பாடசாலைகளுக்கே கிடைக்கும். சென்னைத் துரைத்தனத்தார் மஹா ராஜா காட்டிய உதாரத்தை அதிகமாய் மெச்சிக்கொள்ளுகிறார்கள்.

தென்னிந்திய இருப்புப்பாதைச் சங்கத்தாரால் திருச்சிராப்பள்ளியிலிருந்து திருநெல்வேலி, தூற்றுக்குடிமட்டும் உண்டாக்கப்படும் பாதை இன்னும் பூரணமாய் முடியவில்லையென்றாலும் சில மாசங்களுக்குள் பூரணமாய் ஜனங்களுக்குப் போக்குவரவுக்கு உபயோகப்படும். வேலை விரைந்து நடக்கின்றது. இந்தப் புதுப்பாதை சென்னையிலிருந்து தென்மேற்காய்ப் போகும் பாதையைப்போல் ஐந்தடி ஆறங்குல அகலமுள்ளதல்ல. மூன்றடி மூன்றுமுக்கால் அங்குல அகலமட்டுமுள்ளது. இப்பாதையின் அகலமும தென்மேற்கு வடமேற்கு இருப்புப்பாதைகளின் அகலமும் வெவ்வேறாயிருக்கிறபடியால், திருச்சிராப்பள்ளியிலாவது ஈரோட்டிலாவது அவைகளைப் பிரிக்கவேண்டும். சிலர் ஈரோட்டு நல்லதென்றும் சிலர் திருச்சிராப்பள்ளி நல்லதென்றும நினைக்கிறபடியினாலே, இந்திய துரைத்தனத்தார் இது காரியத்தைத் தீர்க்கும்படி சென்னைத் துரைத்தனத்தார் வேண்டிக்கொள்ளுகிறார்கள்.

ஜூலைமீ நாள் 31. ஆனிமீ 19உ முதல், ஆடிமீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| வி | 1 | ௧௯ | என் அவரைக்கும் என்னை விசுவாசியாதிருப்பீர்கள் ? எண். 14: 11. |
| வெ | 2 | ௨௰ | உன்னைப் பெரிதும் பலத்தருமான சாதியாக்குவேன். 12. |
| ச | 3 | ௨௧ | கர்த்தர் நீடியசாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர். 17. |
| ஞா | 4 | ௨௨ | இந்தச் சனங்களின் அக்கிரமத்தை மன்னித்தருளும். 19. |
| தி | 5 | ௨௩ | துன்மார்க்கருடைய கூடாரம் அழிந்துபோம். யோபு 8: 22. |
| செ | 6 | ௨௪ | தேவனுக்குமுன்பாக மனிதன் நீதிமானாயிருப்பதெப்படி ? 9: 2. |
| பு | 7 | ௨௫ | அவர் என் விண்ணப்பத்திற்குச் செவிகொடுத்தார். 16. |
| வி | 8 | ௨௬ | என் வாயே என்னைக் குற்றவாளியாக்கும். 20. |
| வெ | 9 | ௨௭ | நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு. சங்கீதம் 116: 7. |
| ச | 10 | ௨௮ | என் காலை இடறுதலுக்குத் தப்புவித்தீர். 8. |
| ஞா | 11 | ௨௯ | விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன். 10. |
| தி | 12 | ௩௰ | கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். 13. |
| செ | 13 | ௩௧ | கர்த்தாவே, நான் உமது அடியான். 16. |
| பு | 14 | ௩௨ | அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது. 117: 2. |
| வி | 15 | ௧ | கர்த்தரின் உண்மை என்றென்றைக்குமுள்ளது. 2. |
| வெ | 16 | ௨ | கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருக்கிறது. நீதி. 15: 3. |
| ச | 17 | ௩ | ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம். 4. |
| ஞா | 18 | ௪ | ஞானிகளின் உதடுகள் அறிவை இறைக்கும். 7. |
| தி | 19 | ௫ | துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பு. 8. |
| செ | 20 | ௬ | செம்மையானவர்களின் செபம் அவருக்குப் பிரியம். 8. |
| பு | 21 | ௭ | எங்கள் அக்கிரமங்களை அறிந்திருக்கிறோம். எசாயா 59: 12. |
| வி | 22 | ௮ | எங்கள் தேவனைவிட்டுப் பின்வாங்கினோம். 13. |
| வெ | 23 | ௯ | கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார். 18. |
| ச | 24 | ௧௰ | உன்னைச் சாதிகளில் சிறுகப்பண்ணினேன். ஒப. 1: 2. |
| ஞா | 25 | ௧௧ | இருதயத்தின் அகந்தை உன்னை மோசம்போக்குகிறது. 3. |
| தி | 26 | ௧௨ | கர்த்தருடைய நாள் சமீபமாய் வந்திருக்கிறது. 15. |
| செ | 27 | ௧௩ | நான் மெய்யான திராட்சச்செடி. யோவான் 15: 1. |
| பு | 28 | ௧௪ | என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். 4. |
| வி | 29 | ௧௫ | தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியைப் பெற்றோம். 1கொரி. 2: 12. |
| வெ | 30 | ௧௬ | எங்களுக்குக் கிறிஸ்துவின் சிந்தையுண்டாயிருக்கிறது. 16. |
| ச | 31 | ௧௭ | நீங்கள் தேவனுடைய மாளிகையாயிருக்கிறீர்கள். 3: 9. |

## விசேஷித்த நாட்கள்.

3. அமாவாசை.
4. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், ஆறாம் ஞாயிறு.
11. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், ஏழாம் ஞாயிறு.
13. பௌரணமி.
18. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், எட்டாம் ஞாயிறு.
25. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், ஒன்பதாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. August. No. 8.

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 142
The Life of St Augustine, Bishop of Hippo. ... ... 146
Notes on Exodus. ... ... ... ... ... ... 149
The Scripture Gazetteer. ... ... ... ... ... 154
Summary of News. ... ... ... ... ... ... 159


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௧௪௨
அகுஸ்தீன் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... ௧௪௬
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... ௧௪௯
வேத இடப்பேர் அகராதி. ... ... ... ... ௧௫௪
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௫௯



Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௮. ஆகஸ்துமீ. ௲௮௭௰௫.




## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### சாலமோனின் அந்திய நாட்கள்.

1 இராசா 11: 1—25. பிரசங்கி அதி. 1, 2.

(தொடர்ச்சி.)

முதலாவது. ஐசுவரியமானாலும் கல்வியானாலும் கீர்த்தியானாலும் பூமிக்குரிய வேறு எதுவானாலும் மெய்ப்பாக்கியத்தைக் கொடுக்கமாட்டாது என்பதும், இரண்டாவது, தேவனிடத்தில் அன்பும் அவருக்குக் கீழ்ப்படிதலுமே இருதய சமாதானத்துக்கு ஒரே காரணம் என்பதுமாம். "காரியத்தின் கடைசித்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.

இவ்விரண்டு படிப்பினைகளையும் நன்றாய்த் தியானித்துக்கொள்ளுங்கள். "எந்தப்பொருளில் என் முக்கிய சந்தோஷத்தைத் தேடுகிறேன்" என்ற கேள்வியை இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் கேளுங்கள். சாலமோனுக்கு நேரிட்டதுபோல திரண்ட ஐசுவரியத்தினாலும் மிகுந்த வல்லபத்தினாலும் அதிசய ஞானத்தினாலும உங்களில் யாருக்காவது சோதனை நேரிடாது. என்றாலும் சாலமோனைப்போல உங்களையும் கெடுக்கத்தக்க வேறு வழிவகைகளுண்டு. உதாரணமாக ஒரு பிள்ளை தனக்கிருக்கிற அறிவைக்குறித்துப் பெருமைகொள்ளுகிறதாக்கும். தனக்குக் குறிக்கப்பட்ட பாடங்களைச் சீக்கிரம் படித்துப்போடுகிறான். உபாத்தியாயர்கள் அவனை மெச்சிக்கொள்ளுகிறார்கள். சகபாடிகள் அடிக்கடி அவனைக்குறித்துப் பொறாமையடைகிறார்கள். அவன் யுத்தியும் ஆழ்ந்த கருத்துமுள்ள அநேக காரியங்கள் சொல்லக்கூடியவனாயிருக்கிறான். எப்பேர்ப்பட்ட கருகலான விடுகதைகளுக்கும் உடனே உத்தரவுசொல்லுகிறான். நியாயம் அநியாயம் இன்னதென்றும் திட்டமாய்க் காண்பிக்கக் கூடியவனாயுமிருக்கிறான். என்றாலும் இப்பேர்ப்பட்ட புத்திசாலியும் சிலவேளைகளில் புத்தியாய் நடக்கிறதில்லையே. நியாயம் இன்னதென்று அறிந்துகொள்ளுகிறதற்கு கெட்டிக்காரன்தான். அந்தப்படி செய்யாதிருப்பானானாலோ, அவனுக்கு அதிக வெட்கந்தானே. நாம் இதுவரையும் விவரித்துவந்த அந்த மகா இராசன் மனுஷன் அறியக்கூடிய ஒவ்வொன்றையும் அறிந்திருந்தான். அவன் எழுதிய நீதிமொழிகளுக்கு நிகரான விவேக மொழிகள் உலகத்தில் எங்குமில்லை. அவன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் நடந்தபொழுது அதினாலெல்லாம் அவனுக்கு என்ன பிரயோசனம்? அவனுடைய ஞானமே அவன் அகங்காரியாகத்தக்கதாய் அவனுக்குக் கண்ணியாயிற்று. ஆகையால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, நீங்கள் கெட்டிக்காரராயிராவிட்டாலும் நல்லவர்களாயிருங்கள். பிரசங்கியின் ஆகமத்திலே நாம் வாசிக்கிற பிரகாரம், "ஆலோசனையைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய இராசாவைப் பார்க்கிலும், ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி." சாலமோன் மரிக்குமுன்னே இதை உணர்ந்து, சிறுபிள்ளையைப்போல தேவனிடத்தில் மனந்திரும்பி, "கர்த்தாவே என் ஞானத்தினிமித்தமுமல்ல, நான் சொன்ன மூவாயிரம் பழமொழிகளினிமித்தமும் பாடின ஆயிரத்து ஐந்து பாட்டுகளினிமித்தமுமல்ல, என்னுடைய இராசமகத்துவத்தினிமித்தமும் பூமியின் இராசாக்களுக்குள் எனக்கிருந்த மேன்மையினிமித்தமுமல்ல, தேவரீருக்கு ஒரு ஆலயத்தைக் கட்டினதினிமித்தமுமல்ல, உம்முடைய நாமத்தினிமித்தமும் இரக்கத்தினிமித்தமுமே எனக்கு இரங்கும் என்று பிரார்த்தித்திருப்பான் என்பதே நாம் சாலமோனைக் குறித்துக்கொள்ளத்தக்க நம்பிக்கை.

ஆதலால் தாழ்மை, நம்பிக்கை, கீழ்ப்படிதல், அன்பு இவற்றிலேயே மெய்ச்சந்தோஷம் உண்டென்று அறிந்துகொள்வோமாக. இனி ஒரு வாலிபன் சொன்ன வார்த்தைகளை மாத்திரஞ் சொல்லி இதை முடிக்கிறேன். "கர்த்தாவே தேவரீர் என்னை வைத்திருக்கிற இவ்வுலகத்தை நன்றாய் ஆராய்ந்து பார்த்தேன். என் ஆத்துமத்துக்கும் நான் படைக்கப்பட்டிருக்கிற நோக்கத்துக்கும் இது அது பொருந்துமோவென்று சோதித்துப்பார்த்தேன். எனக்கு இளைப்பாறுதலைக்கொடுக்கத்தக்க பொருள் ஒன்றையுங் காணேம். சிறிதுநேரம் சற்று சந்தோஷந் தரும்பொருட்கள் சீக்கிரம் எனக்குமுன் நிழலைப்போல பறந்துபோகிறது. நீரோ நித்தியவஸ்து. சீவஊற்றும், சந்தோஷமூலமும், சிருஷ்டிப்பின் ஆதாரவும், சமஸ்தத்தின் நிறைவும் நீரே. உம்மிடத்திலே வருகிறேன், உம்மையே ஒட்டிக்கொள்ளுகிறேன். சதாகாலமும் நான் தேவரீரோடு சீவிக்கவேண்டியவனாச்சுதே. ஆகையால் என் அற்பவாழ்நாள் முடியும்போது தேவரீர் என்னை உம்முடைய நித்திய இராச்சியத்திற் சேர்த்துக்கொள்வீர் என்ற நம்பிக்கையாய், தேவரீரோடு என் சீவகாலத்தைக் கழிப்பேன் என்பதே."

---

### ரெகோபெயாமின் சரித்திரம்.

2 நாளாகமம் 10ம் அதிகாரம்.

கானான் தேசத்தைப் போய்ச் சுற்றிப் பார்த்துவந்த பிரயாணிகள் யாவரும் அங்குள்ள ஓரிடத்தை மற்றெல்லா இடங்களையும் பார்க்க, மகா அழகியதென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடம், இயேசுநாதர் பிறந்த பெத்லெகேம் ஊருமல்ல; கலிலேயாவின் மலங்காட்டில் அவர் வளர்ந்த நாசரேத்தூருமல்ல; எப்பக்கமும் மலைசூழ்ந்த எருசலேம் நகரமுமல்ல; தெளிந்த தண்ணீருள்ள கெனசரேத்துக்கடலுமல்ல. நான் இப்பொழுது பேசுகிற இடம் ஒரு பள்ளத்தாக்கு. அது மலைகளால் சூழப்பட்டு எந்தக் காற்றுக்கும் புசலுக்கும் நல்ல ஒதுக்காயும், தானியமும் மேய்ச்சலுமூடினதாயுமிருக்கும். இங்குமங்குமிருக்கிற ஒலீவத் தோப்புகளும் பேரீச்சுகளும் நல்ல நிழல்கொடுக்கும். இயேசுவானவர் ஒருவிசை இளைப்படைந்தவராய்க் கிணற்றண்டை உட்கார்ந்திருந்தாரோ, அந்தப் பள்ளத்தாக்குதான் இது. அதற்கு வெகுகாலத்துக்குமுன் இயோசேப்பு தன் சகோதரரைத் தேடிக் காணமற்போன பள்ளத்தாக்கும் இதுதான். சீகேம் என்று பெயர்வழங்கிய

அந்தப் பள்ளத்தாக்கின் ஓர் கடைகோடியில் மலையினடிவாரத்தில்
சீகேம் என்ற பட்டணத்தின் வெள்ளையடித்த வீடுகள், பச்சையான ஒலீ
வத் தோப்புகளுக்கூடே பிரகாசித்துக்கொண்டிருந்தது.

இந்தப் பட்டணத்தில், ஒருவிசை ஒருவனை இராசாவாக அபிஷே
கம்பண்ணும்படி சனங்கள் கூடிவந்திருந்தார்கள். எருசலேம் இப்பொ
ழுது இராசதானியாயிருக்க, இந்த நகரத்தில் நடப்பிக்கவந்ததென்ன
வென்று கேட்கிறீர்களோ? இது பூர்வீகத்தில் அந்தேசத்துக்குத் தலை
நகரியாயிருந்தது. பூர்வ வழக்கங்களைப்பற்றி நடக்கிறதற்குச் சனங்
கள் பிரியப்படுவார்களே. எனக்குத் தோன்றுகிறபடி இந்த முகாந்
தரத்தினாலேதான் இஸ்ரவேல் கோத்திரத்தாரெல்லாரும் எருசலே
மிலல்ல, சீகேமில் தங்கள் இராசாவை அபிஷேகம்பண்ணும்படி இப்
பொழுது கூடிவந்தார்கள்.

சிறு சிறு கூட்டங்களாக சனங்கள் நாலுதிக்கிலுமிருந்து மலைச்
சாரல்களின் வழியாயும் பள்ளத்தாக்கின் வழியாயும் வந்து ஏராள
மான பெருங்கூட்டமாய்க் கூடுகிறதைச் சற்று கவனிப்போம். அவர்
களெல்லாரையும் அந்தச் சிறு பட்டணம் பிடிக்குமோ? பட்டணத்தின்
மதில்களைச் சுற்றி அவர்கள் தங்கள் கூடாரங்களையடிக்கிறுப்போலி
ருக்கிறது. அதோ அழகிய அந்தப் பள்ளத்தாக்கெங்கும் ஒரு பெரிய
இராணுவம் பாளையமிறங்கியிருந்தாற்போலதோன்றுகிறதே. அவர்கள்
கோபத்தோடு வந்தவர்களுமல்ல, யுத்தத்துக்கு ஆயத்தமாய் வந்தவர்
களுமல்ல. இரண்டொரு தினத்தில் "ரெகோபெயாம் இராசா
வாழ்க" என்று எல்லோரும் ஏகோபித்து ஆர்ப்பரிக்கலாமென்ற நம்
பிக்கையோடிருக்கிறார்கள்.

இந்த ஆர்ப்பரிப்பு உண்டாகவில்லையென்றும், இராச அபிஷேகத்
துக்குப்பதிலாக கலகமுண்டாயிற்றென்றும் இப்பொழுது வாசித்த
அதிகாரத்தினால் தெரியவருகிறதே. ரெகோபெயாம் மகுடாபிஷேகம்
பெற்று இஸ்ரவேலர் அனைவராலும் வாழ்த்திப் போற்றப்படுவேனென்
று எதிர்பார்த்திருந்த வேளையில், இரண்டொருவரோடு இரதத்திலேறிக்
கொண்டு அதிவேகமாய் எருசலேமுக்கு ஓடிப்போனான். சீகேமைச்
சுற்றியும் அதற்கு வடக்கே தேசத்தின் கடைகோடிமட்டுமுள்ள சனங்
கள் யாவரும் "இவன் எங்கள்பேரில் அரசாளவேண்டியதில்லை" என்
று கூப்பிட்டார்கள். அவன் அதற்குப் பிறகும் இராசாவாயிருந்தது
மெய்; என்றாலும் தேச முழுமைக்குமல்ல, ஓர் சிறிய பாகத்துக்கு
மாத்திரம் இராசாவாயிருந்தான். இதெல்லாம் சம்பவித்த விவரத்தைச்
சற்று விசாரிப்போம்.

முன்னுள்ள விசேஷங்களில் இரண்டொன்று சொல்லவேண்டும்.
ரெகோபெயாமின் தந்தை ஒரு காலத்தில் இராசாக்களிலெல்லாம்
மேன்மையானவனும் ஞானிகளிலெல்லாம் சிறந்தவனுமான சாலொ
மோன் என்று அறிவீர்களே. இந்த அவனுடைய பட்டப் புத்திரன்
சிறுவனாயிருக்கும்பொழுதே சாலமோன் தன் ஞானத்தை இழந்து
போக ஆரம்பித்திருப்பானென்றுதோன்றுகிறது. விக்கிரகபத்திககாரி
களான பெண்களை அவன் விவாகஞ்செய்துகொண்டதினால் தேவ கற்
பனையை மீறி நடந்தானென்று பார்த்தோமே. மேற்படி பெண்களில்
ரெகோபெயாமின் தாயும் ஒருத்திதான். அவள் பெயர் நாகம்மாள்.
அம்மோனியச் சாதியாள். அவள் தன் மகனைச் செவ்வையாய்
வளர்த்திருப்பாளென்று நினைக்க இடமில்லையே. அருமைப் பிள்ளைக
ளே, நீங்கள் தேவனை நேசிக்கவும், அவருக்குப் பயந்து நடக்கவும்,
உங்களுக்குப் போதிக்கிற தேவ பக்தியும் புத்தியுமுள்ள தாய்மார்



உங்களுக்கு இருந்தால் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துங்கள்.
ஒரு பிள்ளைக்குப் பொல்லாததாயிருக்கிறதைவிட வேறு பெரிய ஆபத்
தில்லை. விக்கிரகபத்திக்காரியான நாகம்மாள் என்ற இந்த இராசாத்
தியும் தன் மகனுக்கு நேரிட்ட கெடுதிக்கு ஒரு காரணமென்றுதான்
சொல்லவேண்டும்.

ஒருவேளை ரெகோபெயாமைப்பற்றிச் சனங்களுக்கு அவ்வளவாய்த்
தெரிந்திருக்கமாட்டாது. அவனை இராசாவாக அபிஷேகம்பண்ணுகிற
தற்குமுன் அவன் என்னவிதமாய் அரசாள நோக்கங்கொண்டிருக்கி
றானென்பதைப்பற்றி அவனிடத்தில் இரண்டொரு கேள்விகள் கேட்
கவேண்டுமென்றிருந்தார்கள் என்று தோன்றுகிறது. அவர்களுக்குள்
பாலியப் பிரபு ஒருவனிருந்தான். அவனுக்கோ ஒரு பெரிய இரகசியந்
தெரிந்திருந்தது. அந்த இரகசியம் என்னவென்று கேட்கிறீர்களா?
அவன்தான் தேசத்தின் மிகுதியான பாகத்துக்கு இராசாவாக இருப்
பானென்று கர்த்தருடைய தீர்க்கதரிசி ஒருவன் அவனுக்குச் சொல்
லியிருந்தான். மேற்படி தீர்க்கதரிசியின் பெயர் அகியா என்பது. அந்
தப் பிரபுவின் பெயர் எரோபெயாம். இந்த எரோபெயாம் என்பவன்
உபாயமும் தந்திரமுமுள்ள காரிய சமர்த்தனாயிருந்தானென்றுதோன்
றுகிறது. அவனுக்கு வாக்கு அருளப்பட்ட இராச்சியம் என்னவிதமாய்க்
கிடைக்கப்போகிறதென்று அவனுக்கு இன்னம் விளங்கவில்லை. ஆகை
யினாலே அவன் எப்படி நிதானித்திருப்பானென்றால், ரெகோபெயாமைப்
பார்த்து நீர் பட்டாபிஷேகம்பெற்றபின்பு என்னவிதமாய்த் தேசத்
தை அரசாள யோசனையாயிருக்கிறீரென்று சில கேள்விகளைக கேட்
கும்படி சனங்களை யேவிவிட்டால், அவன் சொல்லும் உத்தரவினால்
சனங்கள் மனமடிவாகி, சாலமோனின் குமாரன் எங்கள்பேரில் இரா
சாவாயிருக்கவேண்டியதில்லையென்று சொல்லிப்போடுவார்கள் என்று
யூகித்துக் காரியத்தை நடப்பித்தான்.

காரியம் அந்தப்படியே நடந்ததென்று பார்க்கிறோம். சனங்களெல்
லாரும் எரோபெயாமோடுகூட ரெகோபெயாமிடத்திற்போய், பட்ச
மாயும் நீதியாயும் அரசாளும்படி கேட்டார்கள். அவன் தந்தையைப்
பார்க்க அதிக தயவாயும் மெதுவாயும் தங்களை நடத்தவேண்டுமென்
றே மனுப்பண்ணினார்கள். மேன்மையும் மகத்துவமும்பொருந்திய
தங்கள் அரசனாகிய சாலமோனைக்குறித்து அவர்களெல்லாரும் பெரு
மைபாராட்டியிருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை; என்றாலும்
சாலமோன் கட்டின அநேக மாளிகைகளினாலும் அவன் நடப்பித்த
உல்லாசமான வேடிக்கைகளினாலும் மிகுந்த செலவு நேரிட்டிருக்கு
மே. மேற்படி திரவியம் பெரும்பாலும் சனங்களிடத்தில்தானே வசூ
லாகியிருக்கவேண்டும். குடிகள் தங்கள் சீவகாலமெல்லாம் வருந்தி
உழைத்துச் சம்பாதித்த பொருளில் மிகுதியான பாகத்தை அதிகாரி
கள் பிடுங்கிக்கொள்ளுகிறது கிழக்கத்தி தேசங்களில் நாளதும் வழக்
கந்தான். மேலும் இராசாக்கள் தங்கள் குடிகளைக் கடினமாய் ஊழி
யஞ்செய்விக்கிறதும் செய்யமாட்டோமென்கிறவர்களைக் கொடுமை
யாய்த் தண்டிக்கிறதும் அபூர்வமல்ல. இங்கிலிஷ் இராசாங்கத்துக்குட்
பட்டிருக்கிற நமக்கு இப்பேர்ப்பட்ட நடபடிக்கைகள் மகா அநியாய
மாகத் தோன்றுமே. இஸ்ரவேலரும் அப்படியே நினைத்தார்கள்.
ஆதலால் இப்பொழுது அரசாளப்போகிறவர் தங்களை அதிக பட்ச
மாய் நடத்தவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டது எவ்விதத்
திலும் சரிதான்.

ரெகோபெயாம் சனங்களைத் தன் பட்சமாய் நயப்படுத்திக்கொள்

வதற்கு இது எவ்வளவு அனுகூலமான சமயம். அவன் புத்திசாலியாயும் தயாள சிந்தையுள்ளவனாயுமிருப்பானானால், "நீதிபராய மனுஷரை ஆண்டு தெய்வ பயமாய்த் துரைத்தனம்பண்ணுகிறவர் இருப்பார். அவர் காலையில் மந்தாரமில்லாமல் உதித்து மழைக்குப் பிற்பாடு தன் காந்தியினால் புல்லைப் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணுகிற சூரியனுடைய விடியற்கால வெளிச்சத்தைப்போலிருப்பார்" என்று உத்தமனான தன் பேரன் தாவீது மரணப்படுக்கையிற்சொன்ன வசனத்தை நினைத்து, சனங்கள் கேட்டுக்கொண்டபடி செய்வேனென்று தக்ஷணமே வாக்குக்கொடுத்திருப்பான். அப்படிச் செய்திருப்பானாகில், விடியற்கால வெளிச்சத்தைக் காணும்பொழுது சனங்கள் மகிழுகிற பிரகாரம் தங்கள் புதிய அரசனைக்குறித்தும் இவர்கள் மகிழ்ந்திருப்பார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

---

The Life of St Augustine, Bishop of Hippo.

---

## அகுஸ்தீன் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம்.

(தொடர்ச்சி.)

---

அகுஸ்தீன் என்பவருடைய குணப்படுதல் விஷயத்தில் கர்த்தர் கையாடின வழிவகைகள் மிகுந்த நன்மைக்கு ஏதுவாயிருந்தன. "ஆலோசனையில் ஆச்சரியமானவரும் செயலில் மகத்துவமானவருமான" கர்த்தர், சிறிதுநாளைக்குள் சபையில் தோன்றப்போகிற ஒரு கொடிய தப்பறையை அனுகூலமாய் எதிர்த்துக் கண்டிக்கிறதற்கு ஏற்ற ஓர் கருவியை இவ்வாறு எழுப்பினார். குறித்த தப்பறை பெலாகியுவின் கொள்கைதான். தேவகிருபையேயில்லாமல் மனுஷன் சுபாவமாய் முழுப்பரிசுத்தனாயிருக்கலாம் என்பதுதான் அத்தப்பறையின் சாரம். பெலாகியர் சென்மபாவத்தை மறுத்து சுயநீதியை ஸ்தாபிக்கப் பார்த்தவர்கள். அகுஸ்தீன் என்பவர் துவக்கத்தில் பெலாகியுவைக்குறித்து அத்தனை வெறுப்பாய் நினைக்கவில்லை. அவனுடைய கொள்கைகள் விவரமாய் வெளிப்பட வெளிப்படத்தான் அவற்றின் கேடும் திட்டமாய்த் தெரியவந்தது. அதன்பேரில் ஹிப்போ நகரத்துக் கண்காணியார் கர்த்தருடைய சகாயத்தை முன்னிட்டு அவைகளைக் கண்டிக்கிறதற்கு ஆரம்பித்தார். இந்த வாக்குவாதத்தை இங்ஙனம் விவரிப்பதற்கு யுக்தப்படாதே. அதன் சம்பந்தமாய் ஒரே வார்த்தை மாத்திரம் சொல்லுவோம். பெலாகியுவின் தப்பறைக்கு விரோதமாய் அவர் பட்ட பிரயாசத்தின் பலனை, தம்முடைய சொந்தச் சபையிலும் ஆப்பிரிக்காவின் மற்ற இடங்களிலும் விளங்கிய கிறிஸ்துமார்க்கப் பக்தியினாலே, அவர் மரிக்கிறதற்குமுன் கண்டு சந்தோஷித்தார்.

அகுஸ்தீன் கண்காணியார் மனிக்கேயரையும் பெலாகியரையும் அனுகூலமாய் எதிர்த்ததுமன்றி, தோனேத்தியர் என்னப்பட்டவர்களோடும் அவர் போராடும்படி நேரிட்டது. அவர் நடப்பித்த வாக்குவாதங்களிலெல்லாம் மிகுந்த சாந்தமும் மகா அடக்கமுமான சிந்தையுள்ளவராய் விளங்கினார். என்றாலும் தோனேத்தியருக்கு விரோதமாய்ச் செய்த கண்டிதமான சில ஏற்பாடுகளுக்கு அவரும் உடந்தையாயிருந்தார். எப்பேர்ப்பட்ட மனுஷனும் பலவீனமுள்ளவன் தானே.



மேற்படி தோனேத்திய வகுப்பாரில் சிலர் பிரபல துஷ்டர்களாயிருந்தார்களென்றும், அகுஸ்தீன் என்பவருக்கும் மோசஞ்செய்யப் பார்த்தார்களென்றும் தெரியவருகிறது. அகுஸ்தீன் கண்காணியார் தமது ஆட்சிக்குட்பட்ட இடங்களை அடிக்கடி போய் நன்றாய்க் கண்காணித்துவருவார். ஒருவிசை அதுகாரியமாக அவர் புறப்பட்டபொழுது, தேவ செயலாய், வழிகாட்டியானவன் வழியைத் தப்பவிட்டபடியால் அவர் பிரயாணஞ்செய்யக் கருதியிருந்த பாதையைவிட்டு வேறே பாதையாய்ப் போனார். அந்தவிதமாய்த் தமக்கு மோசஞ்செய்ய வழியிற் பதிவிருந்தவர்களுடைய கைக்குத் தப்பிக்கொண்டதாக பின்பு அறிந்தாராம்.

அகுஸ்தீன் கண்காணியார் அநேக நூல்கள் எழுதியிருக்கிறார். அவைகள் பெரும்பாலும் அருமையானவைகள்தான். அவர் சாதுரியப் பிரசங்கியாயிருந்தாரென்றும், அவருடைய பிரசங்கங்கள் வெகுவாய்ப் பலிதமாயினவென்றுந் தோன்றுகிறது. இதை விளக்கிய இரண்டொரு திருஷ்டாந்தங்கள் சொல்லுவோம். அவர் சிநேகிதன் ஒருவனுக்கு எழுதிய ஒரு நிருபத்தில் சொல்வது, "ஒருவனுடைய பிரசங்கத்தைக் கேட்டுச் சனங்கள் மெச்சிக்கொள்வதினால் அவன் பலமாய்ப் பிரசங்கித்தானென்று நினைக்கலாகாது. ஒருவன் விசித்திரமாயும் விநோதமாயும் பேசும்பொழுது சனங்கள் பலமுறையும் மெச்சிக்கொள்வதுண்டு. செசாரியாப்பட்டணத்துச் சனங்கள் வருஷாந்தம் கொண்டாடிவந்த துஷ்ட விளையாட்டுகளை நிறுத்தும்படி என்னாற் கூடியமட்டும் பேசினேன். அவர்கள் என் பேச்சை மெச்சிக்கொள்ளுகிறவர்களாய்மாத்திரமிருந்தவரையில் நான் ஒரு பலனையும் காணவில்லை. எப்பொழுது அவர்கள் அழுதார்களோ அதுமுதல் அந்த அவலட்சணமான வழக்கத்தை அவர்கள் விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளுண்டாயிற்று. தேவ கிருபையினாலே அவர்கள் அந்தத் துர்வழக்கத்தை விட்டு இப்பொழுது எட்டு வருஷமாயிற்று" என்பதே. மேலும் ஒருநாள் அவர் தம் சிநேகிதரோடு சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் அவர்களை நோக்கி, "நான் இன்று பண்ணின பிரசங்கத்தைக் கவனித்தீர்களா? நான் பேசுவேன் என்ற காரியத்தைப் பேசாமல் விட்டுவிட்டேன்" என்றார். அதற்கு அவர்கள், "ஆம், நாங்கள் கவனித்தோம், எங்களுக்கு அது ஆச்சரியமாயிருந்தது" என்று பிரதியுத்தாரம் சொன்னார்கள். அப்பொழுது அவர், "என் மறதியைக்கொண்டு சபையிலே தப்பிதமான கொள்கையையுடைய யாரையோ கர்த்தர் போதித்துச் சீர்திருத்தச் சித்தமாயிருக்கிறாரென்று நம்புகிறேன். நாம் கர்த்தருடைய கரத்திலிருககிறதுபோலவே நம்முடைய பிரசங்கங்களும் அவருடைய கரத்திலேதானிருக்கின்றன. குறித்த காரியத்தைப் பேசத் தொடங்கினதோடு, அதை விட்டுத் தூரமாய் விலகிப்போய், எடுத்த காரியத்தை முடியாமல், பேசவேண்டுமென்று எவ்வளவேனும் நினையாதிருந்த மனிக்கேயர் தப்பறையைக் கண்டித்து நியாயம்பேசி முடித்தேன்" என்றார். அப்புறம் சில தினங்களுக்குப் பின் ஒரு வர்த்தகன் வந்து கண்காணியார் பாதத்தில் விழுந்து அழுதுகொண்டு, "நான் அநேக வருஷமாய் மனிக்கேயர் தப்பறையிலகப்பட்டிருந்தேன். கொஞ்ச நாளைக்குமுன் தேவ இரக்கத்தினாலே தங்கள் பிரசங்கங்களின்மூலமாய் என் தப்பறையை உணர்ந்து மனந்திரும்பினேன். எனக்காகப் பிரார்த்தியுங்கள்" என்று சொல்லி அறிக்கை செய்தான். அதன்பேரில், விசேஷமாய் எந்தப் பிரசங்கத்தினால் உன் தப்பறையை உணர்ந்துகொண்டாய்" என்று கண்காணியார் வினவ,

தாம் குறித்த காரியத்தை மறதியாய் விட்டு வேறொரு காரியத்தை நோக்காத பிரகாரம் பேசின அந்தப் பிரசங்கத்தினாலேதானென்று வர்த்தகனாலேயறிந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினாராம்.

பிரசங்கம்பண்ணுகிறதும் சபைகளை விசாரிக்கிறதும் நூல்கள் எழுதுகிறதுமான வேலைகளே தவிர, அகுஸ்தீன் கண்காணியாருக்கு வேறு வேலைகளுமிருந்தன. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் ஆறும் அதிகாரத்திற் பவுல் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிற பிரகாரம் ஹிப்போ நகரத்துக் கிறிஸ்தவர்கள் தங்களுக்குள் எழும்பின வழக்குகளைத் தங்கள் கண்காணியாரிடத்திற் கொண்டுபோவார்கள். கண்காணியார். அவைகளை விசாரித்துப் பைசல்செய்வார். அப்படியே சங்கக்கூட்டங்களுக்கும் அடிக்கடி போவார். அவருடைய உடுப்பு போசனம் தட்டுமுட்டுச் சாமான்களெல்லாம் மிதமிஞ்சினவைகளாய் அல்லது கேவலமானவைகளாயிராமல் நிதானமும் தகுதியுமானவைகளாயிருக்கும். அந்நியரை உபசரித்து வருவார். போசனவேளைகளில் வாசிப்பாவது கிறிஸ்தமான சம்பாஷணையாவது நடந்தேறக் கருத்தாயிருப்பார். பின்புறணிபேசுகிற வழக்கத்தை அருவருக்கிறவராய், பின்புறணிபேசுகிறவர்கள் இந்த இடத்திலிருக்கப்படாதென்கிற கருத்துள்ள இரண்டு வாக்கியங்களை லத்தீன் பாஷையில் மேசைமீது வரைந்திருந்தார். ஒருவிசை தம்முடைய சிநேகிதர்களான சில கண்காணிமார் சம்பாஷணையில் மேற்படி சட்டத்தை மீறினபொழுது, அவர் ஒன்றில் இந்த வாக்கியங்களை அழித்துப்போடவேண்டும், அல்லது நானிவ்விடத்தைவிட்டுப் போய்விடவேண்டுமென்று சொல்லி அவர்களைப் பலமாய்க் கண்டித்தார். அவர்தாமே எப்பொழுதும் தற்பொழிவை நாடாதவராய் விளங்கினதுமல்லாமல், தரித்திரருக்கு உதவிசெய்யவு மிகவும் கரிசனையாயிருப்பார்.

அகுஸ்தீன் கண்காணியார் நடந்துகொண்ட நடபடிக்கையும், அவர் ஏற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றின வகையும் இதுதான். அவருடைய அந்திய நாட்கள் துன்பம் நிறைந்தவைகளாயிருந்தன. எப்படியென்றால், வண்டாளர் அரசனாகிய கென்செரிக் என்பவன் ஆப்பிரிக்காவில் படையெடுத்துப்போய் ஹிப்போநகரத்தை முற்றிக்கைபோட்டான். அகுஸ்தீன் என்பவர் ஆத்துமங்களுக்கு நன்மைசெய்யவேண்டுமென்ற வாஞ்சையுடையவராய், நகரம் சத்துருக்கள் கையிலகப்படாதபடிக்குக் காத்துக்கொண்டிருந்த பிரபுவை கிறிஸ்துவினிடத்துக்கு இழுத்துக்கொள்ளும்படி ஊக்கத்தோடு முயற்சிசெய்துகொண்டிருந்தார். கண்காணியார் தாமே தீங்குவராததற்குமுன்னே கர்த்தரால் எடுத்துக்கொள்ளப்பட்டார். தேவன் தமது ஊழியக்காரரை ஒன்றில் முற்றிக்கையினின்று விடுதலையாக்கவேண்டும், அல்லது அவர்களுக்குப் போதுமான பொறுமையருளவேண்டும், அல்லது அவரை உலகத்தைவிட்டுத் தம்மிடத்துக்கு அழைத்துக்கொள்ளவேண்டுமென்று அவர் பிரார்த்தித்ததாக குறிப்பித்திருக்கிறது. பட்டணம் முற்றிக்கையாகி மூன்று மாதத்துக்குள்ளே அவருக்குச் சுரமுண்டாக, அச்சுரத்தினால் கி. பி. 430-ல் மரணமடைந்தார். அப்பொழுது அவருக்கு வயசு எழுபத்தாறு. கிறிஸ்தவன் தான் மரணமடையும் நிமிஷமட்டும் ஓயாமல் மனந்திரும்புகிறவனாயிருக்கவேண்டுமென்று அவர் அடிக்கடி சொல்லுவார். அவ்வாறே அவர் வியாதிப்பட்டிருந்த நாட்களில் தாவீதின் துயர சங்கீதங்களைச் சுவரில் எழுதுவித்து அவைகளை வாசித்து வாசித்து மிகுதியுங் கண்ணீர்விட்டு அழுதாராம். அவர் மரிக்கிறதற்கு முன் பத்துநாளாய், தாம் எப்பொழுதும் செபத்



தியானமாயிருக்கத்தக்கதாக ஒருவரும் தம்மை அலட்டாதபடிக்குச் செய்துகொண்டார். அவர் மரணசாதனம் எழுதிவைக்கவில்லை. அதற்கு அவசியமிருந்ததுமில்லை. அவரிடத்தில் பொருளுமில்லை, நிலங்களுமில்லை. தம்முடைய புஸ்தகங்களை சபைக்கு இனாமாகக் கொடுத்துவிட்டார். தம்முடைய இனசனங்களுக்குவேண்டிய திட்டங்களை முந்தியே செய்திருந்தார். அகுஸ்தீன் என்பவர் சீவித்ததும் மரித்ததும் இவ்வாறுதான். இரத்தச்சாக்ஷிக்குரிய கிரீடத்தை அவர் அடையவில்லை. என்றாலும் அவருடைய பெயர் நித்தியமாய்க்கொண்டாடப் பாத்திரமானது. அவர் இயேசுவுக்கு உண்மையுள்ள சீஷனாயிருந்தார். இப்பொழுது தேவனுடைய சிம்மாசனத்துக்குமுன்பாக இருக்கிறார். அவர் அநேகரை நீதியின் பாதையில் திருப்பினவரானபடியால், அங்கே நட்சத்திரத்தைப்போல சதாகாலமாய்ப் பிரகாசித்துக்கொண்டிருப்பார்.

## Notes on Exodus.

## யாத்திராகம வியாக்கியானம்.

### ௩. அதிகாரம்.

### தேவன் மோசேக்குக் காட்சியாகி அனுப்பினது.

(தொடர்ச்சி.)

6. எகோவா இப்படிச் சொல்லும்போது, அவர்கள் என்னையே வணங்கி, நம்பி, சிநேகித்து, எனக்குக் கீழ்ப்படிந்து ஆராதனைசெய்து வந்தவர்களென்றும், அவர்களுடைய ஆத்மாவுக்கும் சரீரத்துக்கும், இரட்சிப்பும் சுதந்தரமும் நித்திய பாக்கியமுமாயிருக்கிறவர் நானே என்றும் சொல்வதற்குச் சரி. ஆனால் இப்பொழுது இஸ்ரவேலருடைய முற்பிதாக்களுக்குச் செய்த வாகுத்தத்தங்களையும், அதில் விசேஷமாய் கானானைக்குறித்த வாக்குத்தத்தத்தையும் அவர்களுக்கு நினைப்பூட்ட நோக்கமாய்த் தம்மை இப்படிப் பிரஸ்தாபித்தார். ஏனென்றால், ஒரு ஜாதியாரான இஸ்ரவேலருடைய தேவனாக எகோவா தம்மைச் சொல்லுகிறாரேயல்லாமல், ஆபிரகாமிலிருந்துண்டான இஸ்மவேலர், மீதியானியர்; அல்லது ஈசாக்கின் வழியாயுண்டான ஏதோமியர் ஆகிய இவர்களுடைய தேவனாகத் தம்மை சொல்லவில்லையே.

கிறிஸ்துநாதர் இந்த வாக்கியத்தைக்கொண்டு மரித்தோர் உயிர்த்தெழுதலை ரூபிக்கிறார். எப்படியென்றால், மத். 22: 31, 32லும் லூச். 21: 37, 38லும் இதை எடுத்துக்காட்டி, இதை விஸ்தரிக்கிற வகையாய் “தேவன் மரித்தோருக்கு (அதாவது அறுதியாய் இல்லாமற்போனவர்களுக்கு) தேவனாயிராமல், சீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார்” என்றும், “எல்லாரும் அவருக்கு (அதாவது அவருடைய மகிமைக்காக) பிழைத்திருக்கிறார்களே” என்றும் சொல்லுகிறார். மோசே: (3: 6, 15, 16.) இந்த வாக்கியங்களைச் சொல்லும்போது, இந்த முற்பிதாக்கள் மரித்து வெகுகாலமாயிற்று. ஆபிரகாம் மரித்து 329 வருஷமும், ஈசாக்கு மரித்து 224 வருஷமும், யாக்கோபு மரித்து 198 வருஷமுமானபின்,

தேவன் தம்மை அவர்களுடைய தேவனாகவும், அவர்களைத் தம்முடைய சனங்களாகவும் சொல்லுகிறார். அவர்களுடைய தேவனாயிருந்தேன் என்று கடந்தகாலமாய்ச் சொல்லாமல், "இருக்கிறேன்" என்று நிகழ்காலமாய்ச் சொல்லுகிறார். ஆகையால் மேற்காட்டியபடி இந்த முற்பிதாக்கள் தங்கள் மரணத்தோடு ஒன்றுமில்லாமல் அற்றொழிந்துபோனவர்களல்ல, இன்னம் தேவமகிமைக்காகப் பிழைத்திருக்கிறவர்கள் என்பதும், அவர்களைப் பேரிட்டுச் சொல்வதினாலே அவர்கள் ஆத்துமாவும் சரீரமும் சேர்ந்து பூரண மனுஷராய்ப் பிழைப்பார்களென்பதும் இந்த வாக்கியத்தில் அடங்கிய பொருளாம்.

7. "நான் பார்க்கவே பார்த்து." இஸ்ரவேலருடைய அறியாமை, விக்கிரகாராதனை, துன்மார்க்கம் இவைகளினிமித்தம் தேவன் அவர்களைப் புறக்கணித்துவிடாமல், தாம் ஆபிரகாமோடு பண்ணின உடன்படிக்கையினாலும், இஸ்ரவேலருக்குள்ளே விசுவாசிகளிருந்ததினாலும், தமக்குச் சாக்ஷியாக ஒரு சபையை எப்போதும் உலகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றிருந்ததினாலும் அவர்களைத் தம்முடைய சனமாகச் சொல்லுகிறார். இஸ்ரவேலர் தங்களுடைய விடுதலையைப்பற்றிய எண்ணத்தை முழுதுமாய் விட்டுவிட்டவர்கள்போல் கூக்குரலிட்டு அலறினார்கள். விசுவாசத்தினாலேயல்ல, ஆளோட்டிகளின் அடியினிமித்தமே கூக்குரலிட்டார்கள். என்றாலும் தேவன் இரங்கினார். மோசேயும் ஆடுமேய்ப்பனாகி 40 வருஷம் ஆகிவிட்டதினாலே, இஸ்ரவேலரின் மீட்பைக் குறித்த எண்ணத்தைவிட்டுவிட்டு இனிமேல் காரியமில்லை, எனது மீதியான ஜீவகாலத்தை இப்படியே பின்னிட்டு மரித்துப்போகவேண்டும் என்று நினைத்திருந்ததாகத் தோன்றும். அதினாலேதான் கர்த்தர் "நான் பார்க்கவே பார்த்து" என்கிறார்.

8. ஆதி. 15: அதி. 19: 21. வியா.

11. "எம்மாத்திரம்." 40 வருஷத்துக்கு முன்னாலே தன்னைப் பாத்திரவான்போல் நினைத்தான். தன்னுடைய உத்தியோகம், செல்வாக்கு, எகிப்தியருக்குள் தான் அடைந்திருந்த கீர்த்திப் பிரஸ்தாபம், இவைகளை நம்பி பதஷ்டமாய் அதில் பிரவேசித்தான். ஆனால் இப்பொழுதோ, பரமஞானம், அனுபவம், பொறுமை, சாந்தம், மனஉறுதி, தாழ்மை பக்தி இவைகளை அணிந்தவனாய் இஸ்ரவேலரை மீட்க மற்றெல்லாரைப்பார்க்கிலும் தகுந்த திறமையுடையவனாயிருக்கிற சமயத்தில் தன்னை அதற்கு அபாத்திரனென்று சொல்லுகிறான். இதற்கு முகாந்தரமென்ன? இப்பொழுது அவன் தேவனைப்பற்றியும் தன்னைப்பற்றியும் அதிகமாய் அறிந்துகொண்டதே பிரதான முகாந்தரம். இத்தோடுகூட, இந்த அரிய வேலையை நிறைவேற்றுவதில் எவ்வளவோ வருத்தமிருக்கும் என்று நினைத்ததினாலும், பார்வோனுக்கும் எகிப்தியருக்கும் சற்று பயந்ததினாலும், இஸ்ரயேலர் தன்னை அசட்டைசெய்து விரோதிப்பார்களென்று எண்ணினதினாலும் பின்வாங்குகிற பாவனையாய்ச் சொல்லுகிறான். துவக்கத்தில் பலத்த விசுவாசத்தோடும் மிகுந்த பக்திவைராக்கியத்தோடும் சுயநம்பிக்கை கலந்திருந்தது. இப்பொழுது தேவனைப் போதுமானபடி விசுவாசியாமல் தன் அபாத்திர தன்மையை அதிகமாய் உணர்ந்து வழுவப் பார்க்கிறான். மகா பேர்போன பரிசுத்தவான்கள், தங்கள் குறைவுகளை உணர்வதே அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பலத்த கிருபைக்கு அத்தாட்சியாம். (1 தீமோ. 1: 15.) தேவபணிவிடையை நிறைவேற்ற சிமைச்சாமர்த்தியம் வேண்டியதில்லை.

12. "நான் உன்னோடேயிருப்பேன்." சகல ஆட்சேபனைகளும் இந்த வாக்குப்பாட்டினால் நிவிர்த்தியாகிறதே. ஏசுசுவாமி: மோசேக்கு இந்த வாக்கு அருளினாரோ, எனக்கும் அப்படிச்சொல்லியிருப்பாரானால் எனக்கு என்ன ஆறுதலாயிருக்கும் என்று அங்கலாய்க்கிறாயா? மெய்யாகவே உனக்கும் அப்படியே வாக்கருளியிருக்கிறார். மத். 28: 19, 20 வாசி.



"இந்த மலையில்" மி. இந்த "அடையாளம்" மோசேயின் புத்திக்கு அல்ல, அவன் விசுவாசத்திற்கு விஷயமான காரியம். ஆகையால் இஸ்ரவேலரை மீட்கிற காரியம் முந்தியும், அதை உறுதிப்படுத்தும் அடையாளம் பிந்தியும் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், 'உன்னையும் இஸ்ரவேலரையும் நான் இந்த மலையிலே சந்திப்பேன்' என்ற வாக்குத்தத்தமானது, 'நீ எவ்விதமும் வெற்றியடைவாய்' என்னுடைய வல்லமையின் பேரிலும், உண்மையின்பேரிலும் நம்பிக்கையாயிரு. ஒன்றுக்கும் சந்தேகப்படாமல் இஸ்ரவேலரை மீட்டுக்கொண்டுவா, என்று மோசேக்கு வாக்குச்சொல்லுகிறதுபோலிருந்தது. இந்தக் குறிப்படையாளம் மோசேக்கேயல்லாது பார்வோனுக்காவது இஸ்ரவேலருக்காவது கொடுக்கப்படவில்லை.

13. முற்பிதாக்களுக்கு தேவன் தம்மை அடிக்கடி வெளிப்படுத்தியிருக்கிறார்; ஆனால் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு தேவநாமத்தை முன்னிட்டு மற்றவர்களிடத்தில் பேசும்படி அனுப்பப்பட்டவர்களில் மோசேயே முதல்வன்.

14. "இருக்கிறவராக இருக்கிறேன்." என்பதும் எகோவா என்பதும் பொருள் ஒன்றுதான். இஸ்ரவேலரை மீட்கும்படி மோசேயை அனுப்புவதில், அவர் தமது மகத்துவத்தைக் காட்ட, வேறே எவரும் வழங்கக்கூடாத இந்தப்பேரைச் சொல்லுகிறார். இதற்கு தானாயிருக்கிறவர், சுயம்புவானவர், மாறாதவர், மனோவாக்குக்கெட்டாதவர், அநாதிநித்தியர், சம்பூரணர் என்று அர்த்தமாம். தானாயிருக்கிறவரென்றால் தமக்கு மேலான ஒருவராலேயல்ல, தானாய் ஜீவனையுடைத்தானவர், வேறொருவராலும் தாங்கப்படாதவர், சமஸ்தத்தையும் படைத்துக் காப்பாற்றுபவர் என்றர்த்தம். இப்படிச்சொல்லும்போது, "நானே தேவன், வேறொருவரில்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை" என்று சொல்வதற்குச் சரி. (ஏசா. 46: 9.) இவ்விதமாய் ஜாதிகளின் ஊமையான விக்கிரகங்களுக்கும், தாம் படைத்து ஆதரித்துவருகிற சிருஷ்டிகளுக்கும் தாம் மேலானவரென்று வேற்றுமைப்படுத்த தமது மகத்துவமான நாமத்தைச் சொல்லுகிறார். இதினாலே இஸ்ரவேலர் ஆராதிக்கவேண்டிய பொருளும், அவர்கள் நம்பிக்கைக்கு அஸ்திபாரமும், அவர்கள் பாக்கியத்துக்குக் காரணமுமெல்லாம் நாமே என்றும், நம்முடைய வாக்குப்படி அவர்களை எவ்விதமும் மீட்கவே மீட்போமென்றும், மோசேக்குச் சொல்வதுபோலிருக்கிறதே. மேலும், ஆபிரகாமுக்குக காட்சியாசி அவன் மகனை பலியிடும்படி சொன்னவர் எகோவாதானென்று ஆபிரகாமின் மனதுக்கு எவ்வளவு நிச்சயமிருக்கவேண்டுமோ, அவ்வளவு நிச்சயம், இஸ்ரவேலரை மீட்கப்போகிற பெரிய காரியத்திற்கு மோசேக்கும் இருக்கவேண்டும். ஆகையால் பின்னுக்கு பார்வோனாலும் இஸ்ரவேலராலும், சங்கடங்கள் வருத்தங்கள் தொந்தரவுகள் நேரிடும்போது, தன்னை அனுப்பினவர் யாரோ, எவரோ என்று ஒருவேளை அவிசுவாசத்தில் சிக்கப்படாமல், தன் பிதாக்களுடைய தேவனாகிய உன்னத எகோவாவே தன்னை அனுப்பினவரென்று அவனுக்கும் பூரண நிச்சயமிருக்கும்படி "இருக்கிறவராக இருக்கிறேன்" என்று தமது சிறந்த மகத்துவத்தை விளம்புகிறார்.

இப்படியாக இஸ்ரவேலருக்கும், மோசேக்கும், தமது ஜனங்களை

ல்லாருக்கும் "இருக்கிறவராக இருக்கிறார்." அவர்களுக்கருளின வாக்குத்தத்தங்களில் மாறாத உண்மையுள்ளவராய் இருக்கிறவராகவே இருக்கிறார். அவர்களுடைய சத்துராதிகளுக்குத் தமது மகத்துவத்தைக் காட்ட இருக்கிறவராகவே இருக்கிறார். அவர்களுடைய சோதனை துன்பங்களில் தமது அன்பைக்காட்டும்படி இருக்கிறவராகவே இருக்கிறார். இவ்வண்ணமாய் இயேசுகிறிஸ்து இருக்கிறவராகவே இருக்கிறார். எபி. 13: 8. வெளி. 1: 8.

15. "ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவன்" என்று எகோவா சொல்லும்போது, தமக்கும் இஸ்ரவேல் புத்திரருக்குமிருக்கிற சம்பந்தத்தையும் உறவையும் நினைப்பூட்டி, அவர்கள் பிதாக்களுக்கு இரக்கஞ்செய்ததுபோல, அவர்களோடு செய்த உடன்படிக்கைப்படி இவர்களுக்கும் இரக்கஞ்செய்கிற கருத்தாகச் சொல்லுகிறார். தேவனை நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவென்று சொல்லும்போதும் இந்த அர்த்தந்தானென்று நினைத்துக்கொள்ளக்கடவோம்.

19, 20. பார்வோனாலே வரும் துன்பங்களை மோசே அறிந்திருக்கும்படி முன்னமே தெரிவிக்கிறார்.

21, 22. தேவன் தாமே சகலத்துக்கும் பாத்தியமுடையவர். ஆகையால் ஒருவருடைய ஆஸ்தியைப் பிடுங்கி ஒருவருக்குக் கொடுக்க அவருக்குச் சுயாதீனமுண்டு. இந்தச் சமயத்தில் அப்படிச்செய்தது நியாயமாயுமிருக்கிறது. 11: 2, 3. 12: 35, 36. ஆதி. 31: 10—16. இவர்கள் கேட்டுவாங்கின பொன்னுடைமைகளும், வெள்ளியுடைமைகளும் பிற்பாடு ஆசரிப்புக்கூடாரம் செய்வதில் மிகுதியாய்ச் செலவாயின.

பாடிப்பினை.

தேவன் தமக்குச் சித்தமான வேளையில், தமது திருப்பணிவிடைக்கு ஒருவனை அழைக்கிறார். மோசே இஸ்ரவேலருக்கு மீட்பனாகப் பிறந்திருந்தும் 80 வயதுவரை அவன் அதற்கு அழைக்கப்படவில்லை.—மோசே சுறுசுறுப்பாய் வேலைசெய்துகொண்டிருக்கும்போது தேவன் அவனுக்குக் காட்சியானார். (லூக். 2: 3.) வேலைசெய்கிறது இளப்பமல்ல. சாத்தான் நாம் சோம்பலாயிருக்கும்படி விரும்புகிறான், தேவன் நாம் வேலைசெய்யும்படி விரும்புகிறார்.—கர்த்தருக்கென்று செய்யும் எந்த வேலையும் கனமானது. மோசே ஆடு மேய்த்தானே! 1.—மனுஷர் உலர்ந்த எலும்புகளைப்போலிருந்தாலும இவர்கள் மீட்கப்படுவார்களா என்று தேவ ஊழியக்காரர் அவநம்பிக்கைக்கு இடங்கொடுக்கக்கூடாது. 2-4.—தேவனோடு சம்பந்தப்பட்டிருக்கிற எந்த அற்பகாரியமும் பரிசுத்தமாக்கப்பட்டதாம். 5.—நாம் விடுகிற கண்ணீர் தேவனுக்கு மறைவானதல்ல. 7.—ஒருவன் உயர்ந்த உத்தியோகஞ்செய்யத் தகுந்த சாமர்த்தியமும் உண்மையுமுள்ளவனாயிருந்தாலும் அவன் கவனிக்கப்படாமலிருக்கலாம்.—முட்செடியினால் நாம் கற்றுக்கொள்வது:—1-வது. அது திருச்சபைக்கு ஒப்பாயிருந்தது. தேவனுடைய சபை இவ்வுலகத்தில் எவ்வளவு தாழ்ந்த நிலைமையிலிருந்தாலும், மனுஷர் கண்களுக்குப் பரியாசமாயிருந்தாலும், அற்பமாய் எண்ணப்பட்டாலும், அக்கினிச்சுவாலைபோன்ற துன்பத்தினால் தகிக்கப்பட்டாலும் நாம் பயப்படவேண்டியதில்லை. ஏனென்றால் தேவன் அதின் நடுவிலிருக்கிறார். 2-வது. அது கிறிஸ்துவின் மனுஷ தன்மைக்கு ஒப்பாயிருந்தது. தேவ குமாரனுடைய மனுஷ தன்மை நமது பாவங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு சாத்தானுடைய சோதனைகள், உலக விரோதங்கள், தேவ கோபம் ஆகிய சுவாலித்தெரிந்த அக்கினியால் தகிக்கப்பட்டா



லும், அவர் தேவனாயிருந்ததினாலே அபஜெயப்பட்டுப்போகவில்லை. 3-வது. அது ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனுக்கும் ஒப்பாயிருந்தது. ஒரு மெய்க்கிறிஸ்தவன் அகோர துன்பத்தில் அமிழ்ந்தியிருந்தாலும் தேவன் அவனோடிருப்பதால் அவன் அழிந்துபோகமாட்டான். 2—தேவன் ஒருவனைத் தம்முடைய காரியமாக அனுப்பும்போது தாமும் கூடப்போவார். 12.—"இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." ஆகையால் உன் கவலைகளையெல்லாம் அவரிடத்தில் ஒப்புவி. 14. எபி. 13: 8.

---

## ௪. அதிகாரம்.

### மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்துக்கு அனுப்பப்பட்டது.

---

1—5. இஸ்ரவேலர் மோசேக்குச் செவிகொடுப்பார்களென்று தேவன் முன்னமே சொல்லியிருந்தார். 3: 18 வாசி. அப்படியிருக்க இவ்வளவு அவிசுவாசம் காட்ட அவனுக்கு நியாயமிருந்ததில்லை. என்றாலும் தேவன் அவனுடைய பெலவீன விசுவாசத்துக்கு தைரியமுண்டாக இந்த அடையாளத்தைக் காட்டினார்.

"கோல்." இது ஆடுமேய்ப்பர்கள் வழக்கமாய்க் கையில் வைத்துக்கொண்டிருக்கிற கம்புதான். என்றாலும் எகோவா இந்தக் கோலை அற்புதமாய்ப் பாம்பாக்கினதில் அது இப்போது அவருக்குப் பிரதிஷ்டையான பொருளாயிற்று. இதனால் 20-ல் "தேவனுடைய கோல்" என்று சொல்லப்படுகிறது. இது மோசேயின் கையிலிருக்கும்போதெல்லாம் தனக்கு எகோவா காணப்பட்டதையும், தன்னை அனுப்பினதையும், இஸ்ரவேலருடைய மீட்பையும் குறித்து நல்ல ஞாபகமிருக்கும். இது இஸ்ரவேலருக்கு நடத்துங் கோலாகவும், தேற்றுங் கோலாகவும், ஆதரவின் கோலாகவும் இருந்ததுபோல, எகிப்தியருக்கு அழிவின் கோலாகவும் இருந்தது. இந்த விஷயத்தில் இந்தக் கோல் சுவிசேஷத்துக்கு முன்னடையாளமாயுமிருந்தது. எப்படியென்றால், இந்தக் கோலைப்போல் சுவிசேஷமானது அநேகருக்கு ஜீவ வாசனையாயும், அநேகருக்கு மரண வாசனையாயுமிருக்கிறது.

6, 7. இந்த அடையாளம்: இஸ்ரவேலருடைய ஸ்திதி குஷ்டம்பிடித்த கைபோல் எவ்வளவு அருவருப்பானதாயிருந்தாலும், தேவன் சீக்கிரமாய் நல்ல சீருக்குக் கொண்டுவருவார் என்ற கருத்துள்ளதாயிருந்தது.

10. பார்வோனுக்குமுன் நின்று பேசும்படி வெகு வாக்கு வல்லபம் வேண்டுமென்று நினைத்தான்! அஞ்ஞானிகளை இருளைவிட்டு ஒளியினிடத்திற்குத் திருப்பும்படி உலக ஞானமும் தேர்ந்தலும் வேண்டியதில்லை; சிலுவையின் உபதேசமும் செம்படவரும் போதும்.

11. ஆதாமுக்குப் பேசும் வரமளித்தது தேவனல்லவா? இந்த வாக்கியம் ஊமையர், செவிடர், குருடர் இப்படிப்பட்டவர்களுக்கு மிகவும் ஆறுதலைக் கொடுக்கத்தக்கது!

12. லூக். 21: 12—19.

13. என்னைமாத்திரம் அனுப்பாதேயும். எசா. 6: 5—8.

14. இந்தக் கோபம் மோசேக்குத் தெரியக்கூடியதாயிருந்தது. ஒருவேளை முட்செடியில் தீ அதிக மும்முரமாய் எழும்பியிருக்கும்.

ஆரோன் இதுவரையும் எந்த இடத்திலிருந்தானென்று சொல்லப்படவில்லை. ஆனால் மோசேயின் மூலமாய் இவன் படிக்கச் சலாக்கியம்பெற்று வாசாலனாயிருந்தானென்று தோன்றும். மோசேக்குக் காட்சியான அந்த ஒரே சமயத்தில்தான் தேவன் ஆரோனுக்கும் காட்சியாகி அவனைச் சந்திக்க அனுப்பினார். 27. வா.

18. விபரஞ்சொன்னதாய்க் காணப்படவில்லை.

20. "நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்துவேன்." தேவன் பொல்லாங்கினால் ஒருவனையும் சோதிக்கிறவரல்ல. ஆனால் தமது தயவுள்ள செயலினாலே, மனுஷன் பாவஞ்செய்யாதபடி சாத்தானுடைய சோதனைகளை விலக்கிவருகிறார். இந்தச் சமையத்தில் பார்வோனுக்கு அப்படிப்பட்ட தயவைப் பாராட்டச் சித்தமில்லாமல், அவனைவிட்டுத் தமது கிருபையை எடுத்துப்போட்டார் என்பதுதான் இதின் தாற்பரியமாம். தேவனுடைய ஆளுகை ஒரு மனுஷனுடைய இருதயத்திலிருந்து நீக்கப்படும்போது சாத்தான் அங்கேபோய் ஆசனம்போட்டுவிடுவான் என்பதற்குச் சந்தேகமில்லையே. இப்போ மோசேக்கு இதைச் சொல்லவந்த நோக்கம், பார்வோனாலே நேரிடும் போராட்டத்துக்கும், கொடுந்துன்பத்துக்கும், அவன் எதிர்நோக்கியிருக்கவேண்டும் என்பதற்காகவே.

---

## THE SCRIPTURE GAZETTEER.

## வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.

(தொடர்ச்சி)

701. பார்த்தர். இந்தியாவுக்கும் இகிரீசுக்கும் நடுவேயிருந்த பார்த்தியாவின் குடிகள். அப். 2: 9.

702. பாலா. (1) பாகால் யூதா, கீரியாத் பாகால், கீரியாத்யெயாரீம் ஆகிய இவைகளெல்லாம் ஒன்றுதான். யோசு. 15: 9.
(2) ஒரு மலைக்கும் பேர். யோசு. 15: 11.
(3) தென் யூதாவில் ஒரு இடம். யோசு. 19: 3.

703. பாலாத். (1) தாணில். யோசு. 19: 44.
(2) லீபனோனில் சாலொமோன் கட்டின பட்டணம். 1 இரா. 9: 18.

704. பாலாத்-சோர். எப்பிராயீமில் அப்சலோமுக்கிருந்த மேய்ச்சல்தரை. 2 சாமு. 13: 23.

705. பாலாத்பெயேர். சிமியோனில் பட்டணம். யோசு. 19: 8.

706. பிசிதியா. சின்னஆசியாவில் ஒரு நாடு. அதின் மிகுதியான பாகம் தவுருமலையை அடுத்திருக்கிறது. அப். 13: 14.

707. பிஸ்கா. (உன்னதம்) ரூபனில் ஒரு மலைச்சிகரம். எண். 21: 20. அஸ்தோத்பிஸ்கா. (பிஸ்காவின் ஊற்றுகள்.) உபா. 3: 17.

708. பிஸ்யோத்யா. யூதாவின் தெற்கில் பட்டணம். யோசு. 15: 28.

709. பித்தினியா. சின்ன ஆசியாவில் ஒரு நாடு. அப். 16: 7.

710. பித்தொலோமாய். அப். 21: 7. அக்கோ பார்.



711. பித்தோம். (அரண்) வடஎகிப்தில் செல்வம்பொருந்திய ஒரு நகரம். நீலநதியில் ராமசேஸ் கிட்ட. யாத். 1: 11.

712. பித்ரோன். யோர்தானுக்கும், மகனாயீமுக்கும் ஊடே ஒரு நாடு. 2 சாமு. 2: 29.

712. பிபேசெத் அல்லது புபாஸ்தம். எகிப்தில் பட்டணம். எசே. 30: 17.

714. பிரத்தோன். எப்பிராயீமில் பட்டணம். நாபிலசுக்கு மேற்கே 6 மயில்தூரம். நியா. 12: 15.

715. பிரிகியா. (பாழானது) சின்ன ஆசியாவில் ஒரு உள் நாடு. அப். 2: 9.

716. பிலதெல்பியா. (சகோதரசிநேகம்) லிதியாவில் பட்டணம். ஏழு சபைகளிலொன்று. வெளி. 1: 11.

717. பிலிப்பி. மக்கேதோனியாவில் பட்டணம். அப். 16: 12. பிலி. 1: 1.

718. பில்லா அல்லது பாலா. சிமியோனில் பட்டணம். 1 நாளா. 4: 29.

719. பினீக்ஸ். கிரேத்தைத்தீவின் தென்பக்கத்தில் கடல்துறைப் பட்டணம். அப். 27: 12.

720. பீலியாம். மேல் மனாசேயில் லேவியர் பட்டணம். 1 நாளா. 6: 70. இப்லேயாம் காத் ரிம்மோன் என்றும் பேர்.

721. புத்தேயோலி. (சிறு துரவுகள்) இத்தாலியாவின் மேல்கரையில், ரோமைக்குத் தெற்கே பட்டணம். நாளதில் புஸ்ஸ-ுயோலி என்று பேர். அப். 28: 13.

722. பூஸ். வனாந்தர அரபியிலுள்ள ஒரு நாட்டுக்கும், ஜாதியாருக்கும் பேர். எரே. 25: 23. யோபு 32: 2.

723. பூத்து. தற்கால லிபியர். ஆதி. 10: 6. நாகூ. 3: 9. ("பூத்தியா" எரே. 46: 9. "லீபியா." எசே. 38: 5.)

724. பூல். பூத்துக்கு மறுபேராயிருக்கலாம். ஏசா. 66: 19.

725. பூனோன். இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். ஏதோம் மலைகளுக்குச் சமீபத்திலிருந்தது. எண். 33: 42.

726. பெதஸ்தா. (இரக்க வீடு) எருசலேமில் ஆட்டுவாசலுக்குச் சமீபத்தில் 5 மண்டபமுள்ள குளம். யோவா. 5: 2.

727. பெதானாத். (துன்ப வீடு) நப்தலியில் அரணான பட்டணம். யோசு. 19: 38. நியா. 1: 33.

728. பெதானோத். (தண்ணீர் வீடு) யூதாவின் மலைநாட்டில் பட்டணம். யோசு. 15: 39.

729. பெத் அஸ்மாவேத். (மரணபெலனின் வீடு) பென்யமீனில் பட்டணம். எருசலேம்கிட்ட. நெகே. 7: 28. ("அஸ்மாவேத்." நெகே. 12: 29.)

730. பெத் அரபா. (மைதான வீடு) பென்யமீன், யூதா இந்தக் கோத்திரங்களுக்கிடையில், சவக்கடலின் வட அந்தத்தில் பட்டணம். யோசு. 15: 6, 61.

731. பெத் எக்லா. யூதாவின் எல்லையில், பென்யமீனியரின் பட்டணம். யோசு. 15: 6.

732. பெத் ஏக்கேத். மயிர்கத்திரிக்கும் வீடு. 2 இரா. 10: 12.

733. பெத் ஏசேல். (அயலான் வீடு) சமாரியாவுக்குச் சமீபத்தில் பெலிஸ்தேயாவில் பட்டணமென்று நினைக்கப்படுகிறது. மீகா. 1; 11.

734. பெத் ஏதேன். (ஏதேனின் வீடு) தமஸ்குவுக்குச் சமீபத்தில். ஆமோ. 1: 5.

735. பெத் காரீம். (பசும்புல்தரை வீடு) மிஸ்பேக்கு மேற்கே எபெனேசர்கிட்ட. 1 சாமு. 7: 11.

736. பெத்காதெர். அல்லது கேதெரோத்தாயீம். யூதாவில் பட்டணம். யோசு. 15: 36. 1 நாளா. 2: 51.

737. பெத்கேரேம். (திராட்சத்தோட்டத்து வீடு) யூதாவில் மலை. நெகே. 3: 14.

738. பெத்சாயிதா. (மீன் வீடு) (1) கலிலேயாவில் திபேரியாக் கடலின் மேல்கரையில் பட்டணம். கப்பர்நகூம் கிட்ட. யோவா. 12: 2. பேதுரு, அந்திரேயா இவர்களின் ஜநந ஊர். யோவா. 1: 44.

(2) திபேரியாக் கடலின் கீழ்கரையில் கீழ் கலோநித்தி நாட்டில் பட்டணம். கிறிஸ்து பிறந்து கொஞ்சக்காலத்துக்குப்பின்பு கால்பங்கு தேசத்தாளுண பிலிப்பு இதைத் திரும்பக்கட்டி, அகுஸ்துவின் குமாரத்தி யூலியாளின் மகிமைக்காக, யூலியா என்று பேரிட்டான்.

739. பெத்சித்தா. யோர்தானில் பட்டணம். நியா. 7: 22.

740. பெத்சூர். (பாறை வீடு) ரெகொபெயாம் பலப்படுத்தின பட்டணம். யூதா மலைகளில். யோசு. 15: 58.

741. பெத்செயான். (இளைப்பாறும் வீடு) அல்லது பெத்சான். இசக்காரில் மனாசேயனைச் சேர்ந்த பட்டணம். யோசு. 17: 11, 16.

742. பெத்ஷிமேஸ். (சூரியனின் வீடு) (1) யூதாவின் வட எல்லையில் ஆசாரியர் பட்டணம். யோசு. 15: 10. 21: 16.

(2) இசக்காரில் பட்டணம். யோசு. 19: 22.

(3) நப்தலியில் பட்டணம். யோசு. 19: 38.

(4) எகிப்திலுள்ள ஓன் அல்லது எலியோப்போலி அல்லது சூரிய நகரம். எரே. 43: 13.

743. பெத்டாகோன். (தாகோன் வீடு அல்லது மீன் வீடு) (1) யூதாவின் பள்ளத்துக்காட்டில் பட்டணம். யோசு. 15: 41.

(2) ஆசேரின் எல்லையில் பட்டணம். யோசு. 19: 27.

(3) ஆசோத்தில் தாகோன் விக்கிரகக்கோவில். 1 மக். 10: 83.

744. பெத்தப்புவா. யூதாவின் மலைநாட்டில் பட்டணம். எபிரோன் கிட்ட. யோசு. 15: 53.

745. பெத்தபரா. (பாதை வீடு) யோர்தான் நதியில் யோவான் ஞானஸ்நானம் கொடுத்த ஊருக்கும், துறைமுகத்துக்கும் பேர். எரிகோ கிட்ட. யோவா. 1: 28.

746. பெத்தாமொர்காக். "தூரமாயிருந்த ஓர் இடம்." 2 சாமு. 15: 17.

747. பெத்தாரன். காத்தில் அரணான பட்டணம். எண். 32: 26.

748. பெத்தாராம். காத்தில் பட்டணம். யோசு. 13: 27.

749. பெத்தார்பேல். (பதிவிடை வீடு) அர்பேலா என்றும் பேர். கலிலேயாக் கடலின் கேல்கரையில் குகைகளால் நிறைந்த ஒரு காடு. முற்காலத்தில் கள்ளருக்கொதுக்கிடமாயிருந்தது. ஓசி. 10: 14.

750. பெத்தாவேன். (விக்கிரகாராதனை வீடு) பென்யமீனில் பட்டணம். பெத்தேலுக்குக் கிழக்கில். யோசு. 7: 2.

751. பெத்தானியா. (இராக வீடு) ஒலிவமலையின் அடிவாரத்தில் ஒரு கிராமம். எருசலேமுக்குக் கிழக்கே ஏறக்குறைய 2 மயில்தூரம். மத். 21: 17. 26: 6.

752. பெத்தாணன். யூதாவில் அல்லது தாணில் பட்டணம். 1 இரா. 4 :9



753. பெத்திப்லாத்தாயீம். (உலர்ந்த அத்திப்பழ வீடு) மோவாபியர் பட்டணம். எரே. 48: 22.

754. பெத்தூர். எண். 22: 5. உபா. 23: 4. இருப்பிடம் தெரியாது.

755. பெத்தூல். அல்லது பெத்தூஏல். சிமியோனில் பட்டணம். யோசு. 19: 4.

756. பெத்தேமேக். ஆசேரில் பட்டணம். யோசு. 19: 27.

757. பெத்தேல். (தேவனுடைய வீடு) முதலில் இதற்கு லூஸ் என்று பேர். இது பென்யமீன் கோத்திரத்தில், சீகேமுக்குப் போகும் பாதையிலுள்ள இரண்டு பள்ளத்தாக்குகளுக்கு ஊடேயிருந்தது. யெரொபெயாமின் பொற்கன்று விக்கிரகங்களில் ஒன்று இதிலிருந்தது. ஆதி. 12: 8.

(2) தென் யூதாவில் பட்டணம்.

(3) பெத்தேல் மலை. பெத்தேலைச் சூழ்ந்த மேட்டு நிலமென்று நினைக்கப்படுகிறது. யோசு. 16: 1. 1 சாமு. 13: 2.

758. பெத்தொரோன். (சுயாதின வீடு) எப்பிராயீமுக்கும் பென்யமீனுக்கும் ஊடே கிபியோனுக்குப்போகும் பெரும்பாதையில் இரண்டு பட்டணங்களுக்குப்பேர். மேலேயிருக்கிறது எப்பிராயீமில் லேவியர் பட்டணம். யோசு. 16: 5.

தாழ்ந்த பட்டணம். யோசு. 10: 10.

759. பெத்தொனீம். காத்தின் எல்லையில் பட்டணம். யோசு. 13: 26.

760. பெத்நிம்ரா. (தெளிந்ததண்ணீர் வீடு) காத்தில் பட்டணம். எண். 32: 36. ("நிமிரீமின் நீர்ப்பாய்ச்சல்." ஏசா. 15: 6.)

761. பெத்பகே. (அத்திப்பழ வீடு) எரிகோவுக்கும் பெத்தானியாவுக்கும் ஊடே ஊர். மத். 21: 1. மாற். 11: 1.

762. பெத்பாகால்மெயோன். அல்லது பாகால்மெயோன். (விக்கிரக வீடு) ரூபனில் பட்டணம். யோசு. 13: 17.

763. பெத்பாத்செஸ். (பரப்புகிற வீடு) இசக்காரில் பட்டணம். யோசு. 19: 21.

764. பெத்பாலேத். தென் யூதாவில். யோசு. 15: 27. ("பெத்பெலேத்." நெகே. 11: 26).

765. பெத்பிரி. சிமியோனில். 1 நாளா. 4: 31.

766. பெத்பெயோர். அல்லது பாகால்பேயோர். யோர்தானுக்குக் கிழக்கே ரூபனில். உபா. 3: 29. 4: 45. மோசே அடக்கம்பண்ணப்பட்ட இடம். 34: 6.

767. பெத்மாக்கா. (நசுக்கும் வீடு) நப்தலியிலுள்ள ஆபேல்பெத்மாக்கா இதாயிருக்கலாம். 2 சாமு. 20: 14.

768. பெத்மார்காபோத். (இரதங்களின் வீடு) சிமியோனில் பட்டணம். யோசு. 19: 5.

769. பெத்மில்லோ. மில்லோபார். நியா. 9: 6.

770. பெத்மெயோன். அல்லது பெத்பாகால்மெயோன். (வாசஞ்செய்யும் வீடு) யோசு. 13: 17. எரே. 48: 23.

771. பெத்யெசிமோத். (வனாந்தரங்களின் வீடு) மோவாபில் பட்டணம். சவக்கடலின் வடகடைசியில். எண். 33: 49.

772. பெத்ரேகோப். (விசாலமான வீடு) ஆசேரில் பட்டணம். லாயீஷ் கிட்ட. நியா. 18: 28. சீரியாவில் நாடு. 2 சாமு. 10: 6.

773. பெத்லகேம். (அப்பத்தின் வீடு) (1) பெத்லகேம் யூதா. அல்லது பெத்லகேம் எப்பிராத்தா, எருசலேமுக்குத் தெற்கே 6 மயில்தூரத்தில் ஒரு ஊர். ஆதி. 35: 19.

(2) செபுலோனில் பட்டணம். நாசரேத்துக்கு மேற்கே 6 மயில் தூரம். யோசு. 19: 15. இப்சானிருந்த இடமென்று நினைக்கப்படுகிறது. நியா. 12: 8.

774. பெத்லேபாவோத். (பெண்சிங்கங்களின் வீடு) சிமியோனில் பட்டணம். யோசு. 19: 6.

775. பெயர்லகாய்ரோயி. (என்னைக் காண்கிறவரின் கிணறு) காதேசுக்கும் சூருக்கும் இடையிலிருந்த நீரூற்று. ஆதி. 16: 14. ("லாகாய்ரோயிதூரவு"). ஆதி. 24: 62. 25: 11.

776. பெயாலோத். தென் யூதாவில். யோசு. 15: 24.

777. பெயர்செபா. (ஆணையின் கிணறு) பலஸ்தீனாவின் தென் எல்லையில் பேர்போன ஒரு பூர்வ கிணற்றுக்கும் பட்டணத்துக்கும் பேர். அவ்விடத்தில் நல்லதண்ணீருள்ள இரண்டு கிணறுகள் நாளதுவரை இருக்கின்றன. ஆதி. 21: 14.

778. பெயேஸ்திரா. கீழ் மனாசேயில் (கெர்சோனியர்) லேவியர் பட்டணம். யோசு. 21: 27. அஸ்தரோத் என்றும் வழங்கும்.

778. பெயோன். யோர்தானுக்குக் கிழக்கே ஒரு நாடு. எண். 32: 3.

779. பெராக்கா. (ஆசீர்வாதப் பள்ளத்தாக்கு) யூதாவில் பள்ளத்தாக்கு. 2 நாளா. 20: 26.

780. பெராத்சீம். யூதாவில் ஒரு குன்று. ஏசா. 28: 21.

781. பெரிசியர். (ஊரார்) கானானியரில் ஒரு ஜாதியார். யூதா மலைகளில் குடியிருந்தார்கள். ஆதி. 13: 7.

782. பெரோயா. (1) மக்கெதோனியாவில் பட்டணம். அப். 17: 10, 13.

(2) இப்பொழுதிருக்கிற அலப்போவுக்குப் பேர். 2 மக். 13: 4.

(3) எருசலேமுக்கு வடக்கே 10 மயில் தூரத்தில். 1 மக். 9: 4.

783. பெர்கமு. பெரிய மீசியாவில் பட்டணம். நாளதில் பெர்கமோ என்று பேர். வெளி. 1: 11.

784. பெர்கே. பம்பிலியாவில் பட்டணம். செஸ்ற்றுருநதிமேல். அப். 13: 13.

785. பெர்சியா. எபிரேயுப் பாஷையில் "பாராஸ்." ஆசியாவில் ஒரு தேசம். எஸ்றா 1: 1. எஸ்தர் 1: 3.

786. பெலிஸ்தர். (கிராமங்களில் வசித்தவர்கள்) பலஸ்தீனாவுக்குப் பேர்கொடுத்த ஜாதியார். ஆதி. 10: 14.

787. பெலோனியன். 1 நாளா. 11: 27, 36.

788. பெனபெராக். தாணில் பட்டணம். யோசு. 19: 45.

789. பெனிக்கே. கலிலேயாவுக்கும் சீரியாவுக்கும் ஊடே, மெதித்திராணியாக்கடலோரமாய், நீண்டு ஒடுங்கிய நாடு. தீருசீதோன் இதிலிருந்தது. அப். 11: 9.

790. பெனியேல். அல்லது பெனுயேல். (தேவதரிசனம்) காத்தில் ஒரு இடம். ஆதி. 32: 30.

792. பெனெயாக்கான். ஓரியரான யாக்கான் அல்லது அக்கான் என்ற ஜாதியாருக்குப் பேர். பேரோத்துக்குச் சுருக்கப் பேராய் வழங்கிற்று. எண். 33: 31, 32.

793. பென்யமீன். (வலதுகைப் புத்திரன்) (1) ஒரு கோத்திரம். யோசு. 18: 11.

(2) எருசலேமில் ஒரு உயர்ந்த வாசலுக்குப் பேர். அது இப்போதிருக்கிற தமஸ்கு வாசல் நேருக்கு இருந்தது. எரே. 20: 2. 37: 38: 7. சகரி. 14: 10.





## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. மஹா ராணியவர்கள் சேஷ்ட குமாரராகிய பிரின்ஸ் ஆப்வேல்ஸ் என்னும் இளவரசர் இந்தியாவுக்கு வருவதினால் உண்டாகும் செலவை இந்திய துரைத்தனத்தாரும் அங்கிலேய துரைத்தனத்தாரும் பாகித்துத் தாங்கவேண்டுமென்று தீர்மானமாயிற்று. பிரின்ஸ் ஆப்வேல்ஸ் இலங்கைத் தீவின் விநோதங்களைப் பார்வையிட்டபின்பு, திருக்கோணேசர் மலைப்பக்கம் கப்பல் ஏறித் தூற்றுக்குடியில் இறங்கி, நவம்பர் மாசத்துக்குமுன் பிரதிஷ்டையாகும் நூதன இருப்புப்பாதை வழியாய்ச் சென்னைக்கு வருவாரென்றும், சென்னையில் அவர் பார்க்கத் தக்க கட்டடம்-தேசமுகம் ஒன்றும் இல்லாததால், தூற்றுக்குடியினின்று தேசாந்தரமாகவந்தால் மதுரை-தஞ்சாவூர்முதலிய இடங்களிலுள்ள அநேக புராதன கிரியைகளைக் காணலாமென்றும் பத்திரிகைகள் பேசுகின்றன. ஜஞ்ஜிபார் சுல்த்தான் இங்கிலந்திலிருக்கையில், கீழ் ஆப்பிரிக்காவைச்சேர்ந்த பிரதேசங்களில் நடக்கும் சிறை வியாபாரத்தை நீக்கத் தக்க உடன்படிக்கை திருப்பிப் பார்வையிட்டுத் திருத்தப்பட்டது. அதற்கு அவர் கையெழுத்துவைத்தார். இப்பொழுது அவர் பரீஸ் நகரத்திற்குப் போயிருக்கிறார். இதுவரையிற் சீமையிலிருந்து வந்து இந்தியாவில் இறக்குமதிசெய்யப்படும் கீழ்த்தரமான பருத்திநூலுக்குத் தீர்வைகொடுப்பது வழக்கம். அங்கிலோ இந்திய பிரதான மந்திரி அந்தத் தீர்வையை நிறுத்தப்போகிறாராம். சீமையின் மேல்பாகத்தில் அதிக மழைபெய்து வெள்ளம்பெருகியதனால், தானியவிளைச்சலுக்கு மிகுந்த சேதமுண்டாயிற்று.

பர்மா. பிணக்கு முற்றிலுந் தீரவில்லையென்றும், கரெனிப் பிரதேசத்தின் மேல்பாகம் ஸ்வாதீனமாயிருக்கவேண்டுமென்ற தீர்மானத்தை பர்மா அரசன் ஒப்புக்கொண்டும், அங்கிலேய சேனாவீரர் தமது தேசத்தின்வழியாய்ப் போக பிரியமில்லாமலிருக்கிறாரென்றும், இது காரியத்தையிட்டு மறுபடியும் ஸ்தானாபதி ஒருவரை அனுப்பத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்றும் பிரசித்தப்படுத்தப்பட்டது.

இந்தியா. காலஞ்சென்ற சென்னைக் கவர்னரவர்கள் பத்தினியாராகிய ஹபார்ட் பெருமாட்டி சென்றமீ 18உ சீமைக்குப்போகக் கப்பல் ஏறினார். அவர் போகுமுன்னதாக, ஹபார்ட் பிரபு தங்கள் ஜனங்களை அனுகூலப்படுத்த அதிகமாய் வகைதேடினபடியினால் அவருக்கு நன்றி சொல்ல சென்னையில் உள்ள பிரதான மஹமதியர் வந்தனபத்திரம் ஒன்று ஹிந்துஸ்தானி பாஷையிற் சித்தஞ்செய்து அதை வெள்ளிப் பரணையிற்போட்டு ஒப்புவித்தார்கள். பெருமாட்டியவர்கள் அதை அங்கிகரித்துக்கொண்டு, அதற்கு உத்தரபத்திரம் ஒன்றெழுதி கவர்னருடைய ராணுவலிகிதரால் வாசிப்பித்தார்.

தென்னிந்திய இருப்புப்பாதை. திருச்சிராப்பள்ளியிலிருந்து, மதுரைவரைக்கும் இப்பாதை நாளதுமீ 1உ தொடங்கி போக்குவரவுக்குத் திறக்கப்பட்டிருக்கிறது.

## ஆகஸ்துமீ நாள் 31. ஆடிமீ 18உ முதல், ஆவணிமீ 17உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| ஞா | 1 | கஅ | உன் வார்த்தையின்படி மன்னித்தேன். எண். 14: 20. |
| தி | 2 | ககூ | பூமியெல்லாம் கர்த்தருடைய மகிமையால் நிறைந்திருக்கும். 21. |
| செ | 3 | உ0 | இந்தப் பொல்லாத சபையாரை எதுவரைக்கும் பொறுப்பேன்? 27. |
| பு | 4 | உக | எனக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதைக் கேட்டேன். 27. |
| வி | 5 | உஉ | என்னைக் குற்றவாளியென்று தீர்க்காதிரும். யோபு 10: 2. |
| வெ | 6 | உங | உம்முடைய கைக்கு என்னைத் தப்புவிக்கிறவன் இல்லை. 7. |
| ச | 7 | உச | உம்முடைய பராமரிப்பு என் ஆவியைக் காப்பாற்றினது. 12. |
| ஞா | 8 | உரு | என் அக்கிரமத்தை என்மேல் சுமத்தாமல் விடீர். 14. |
| தி | 9 | உசு | கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர். சங்கீதம் 111: 1. |
| செ | 10 | உஎ | கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். 6. |
| பு | 11 | உஅ | கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். 8. |
| வி | 12 | உகூ | கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர். 14. |
| வெ | 13 | ங0 | உமது பிரமாணங்களைக் கைக்கொள்ளுவேன். 111: 8. |
| ச | 14 | ஙக | முற்றிலும் என்னைக் கைவிடாதேயும். 8. |
| ஞா | 15 | க | என் முழு இருதயத்தாலும் உம்மைத் தேடுகிறேன். 10. |
| தி | 16 | உ | கடிந்துகொள்ளுதலை வெறுக்கிறவன் சாவான். நீதி. 15: 10. |
| செ | 17 | ங | மனரம்மியம் நித்திய விருந்து. 15. |
| பு | 18 | ச | கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான். 18. |
| வி | 19 | ரு | நீதிமான்களின் செபத்தைக் கர்த்தர் கேட்கிறார். 29. |
| வெ | 20 | சு | மேன்மைக்கு முன்னானது தாழ்மை. 33. |
| ச | 21 | எ | கர்த்தருடைய மகிமை உன்மேல் உதித்தது. ஏசா. 60: 1. |
| ஞா | 22 | அ | என் மகிமையின் ஆலயத்தை மகிமைப்படுத்துவேன். 7. |
| தி | 23 | கூ | தீவுகள் எனக்குக் காத்திருக்கும். 9. |
| செ | 24 | க0 | என் கிருபையினால் உனக்கு இரங்கினேன், 10. |
| பு | 25 | கக | நீ செய்தபடியே உனக்கும் செய்யப்படும். ஒபதியா. 15. |
| வி | 26 | கஉ | இராச்சியம் கர்த்தருடையதாயிருக்கும். 21. |
| வெ | 27 | கங | நானே திராட்சச்செடி நீங்கள் கொடிகள். யோவான் 15: 5. |
| ச | 28 | கச | என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. 5. |
| ஞா | 29 | கரு | நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். 1 கொ. 3: 16. |
| தி | 30 | கசு | தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார். 16. |
| செ | 31 | கஎ | தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. 17. |

## விசேஷித்த நாட்கள்.

1. அமாவாசை.
1. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், பத்தாம் ஞாயிறு.
8. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், பதினோராம் ஞாயிறு.
15. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், பன்னிரண்டாம் ஞாயிறு.
17. பௌரணமி.
22. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதின்மூன்றும் ஞாயிறு.
29. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதினாலாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

**Vol. 27.** **September.** **No. 9.**

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 162
The Life of St Ambrose, Bishop of Hippo. ... ... 166
Notes on Exodus. ... ... ... ... ... ... 169
The Scripture Gazetteer. ... ... ... ... ... 173
Summary of News. ... ... ... ... ... ... 179


**அட்டவணை:**


பாலபோதனை. ... ... ... ... ... ... கசுஉ
அம்புரோஸ் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... கசுசு
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... கசுகூ
வேத இடப்பேர் அகராதி. ... ... ... ... கஎங
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... கஎகூ



**Palamcottah:**

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௯. செப்தெம்பர்மீ. ௲௮௱௭௰௫.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### ரெகோபெயாமின் சரித்திரம்.

2 நாளாகமம் 10 ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

ரெகோபெயாமோ அவ்விதம் செய்யாமல், காரியத்தை நான் யோசித்துக்கொள்ளட்டும் என்று சொன்னான். இதுவே அவன் செய்த முதலாம் தப்பிதம். ஒருகாரியம் நியாயம் என்பது பரிஷ்காரமாயிருக்க, அதைக்குறித்து யோசித்துக்கொள்ள விரும்புகிறது ஸர்ச்சகுனமென்று உணர்ந்துகொள்வோமாக. அதைக்குறித்து யோசிக்கவேண்டியதென்ன? அந்தப் பிரகாரம் தாமதமன்னியில் செய்யவேண்டியிருந்தது. யோசிக்கிறதினாலே சாக்குப்போக்குகள் காணவும் தகாததைச் செய்ய நியாயம் பாணிக்கவும் ஏதுவாகுமேயன்றி வேறல்ல. ரெகோபெயாம் கடைசியிற்செய்த புத்தியீனமான காரியத்துக்கு இப்பொழுதே அவன் மனம் அனாவாசிக்குமேல் சாய்ந்து இருந்ததென்று நினைக்கத்தக்கது. மற்றப்படி அதைக்குறித்து யோசிக்கிறதற்கு மூன்று நாள் தேவையிருக்குமோ?

அப்புறம் அவன் தந்தையின் முதியோரான மந்திரிகள் சிநேகிதர்களிடத்தில் இதுகாரியத்தைக்குறித்து ஆலோசனை கேட்டான். இவர்கள் சாலமோனின் நடபடிக்கைகளைப் பார்த்துப் பழக்கப்பட்டவர்களானபடியால், புதிய அரசனும் அவனைப்போல் பெருமையும் கண்டிப்புமுள்ளவனாயிருக்கவேண்டுமென்று விரும்புவார்கள் என்பதாய் நினைத்தாலும் நினைத்திருப்பான். அப்படி நினைத்திருப்பானாகில் அவன் செய்தது பிசகு. அம்முதியோர் புத்திசாலிகளும் விவேகிகளுமாயிருந்தார்கள். அவர்கள் என்ன யோசனை கொடுத்தார்கள்? "நீர் இந்தச் சனங்களுக்குப் பட்சத்தையுந் தயவையுங் காண்பித்து, அவர்களுக்கு நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், சகல நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காரராயிருப்பார்கள்" என்றார்கள்.

அந்தப் பாலிய அரசன் விரும்பின யோசனை இது அல்ல. அநேகர் இக்காலத்திலும் செய்கிறதுபோல, தான் விரும்பினபடி நடக்கிறதற்கு தைரியமுண்டாகவே அவன் ஆலோசனை கேட்டான். ஆகையால் அவன் விரும்பினது வாய்க்கவில்லை. அவன் என்ன சொல்லியிருப்பானென்று நினைக்கிறீர்கள்? "ஆ! இவர்கள் நரைத்துப் புலைத்துப்போன கிழவர், இவர்களுக்கு என்ன தெரியும்? இவர்களுக்கு அனுபவமேயில்லை. நான் இந்தச் சனங்களுக்கெல்லாம் அடிமையாயிருக்கவேண்டுமாம்; நல்ல காரியமாச்சுது. அப்படியா? அவர்களை நடத்தவேண்டிய



விதம் எனக்குத் தெரியும். நாய்களைச் சவுக்கினால் அடக்கவேண்டும். மற்றப்படி திரும்பிக்கொண்டு தங்கள் எசமான்களைக் கடிக்கும். அவர்கள் எசமான் இன்னானென்று சீக்கிரம் அவர்களுக்குத் தெரிவிப்பேன். முதிய பிரபுக்களே, உங்களுக்கு வந்தனம். நீங்கள் போகலாம். உங்கள் அருமையான யோசனையை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள். எனக்குத் தேவையில்லை" என்றிப்படித்தான் சொல்லியிருப்பான்.

அப்பால் தன்னோடு வளர்ந்த வாலிபரைக் கூப்பிட்டு, "நீங்கள் என்ன ஆலோசனை சொல்லுகிறீர்கள்" என்று கேட்டான். தங்கள் எசமானுக்குப் பிரியமானது இன்னதென்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அதன்றியும் அவர்களும் அவனைப்போல் கறுவமுடையவர்களாய்த்தானிருந்தார்களென்று நினைக்கத்தக்கது. ஆதலால் அவன் விரும்பினபடிக்கே அவர்கள் மறு உத்தரவு சொன்னார்கள். "உமது தந்தையைப் பார்க்க நீர் இரண்டத்தனை கடினமாயிருப்பீரென்றும், அவருக்குச் செலுத்தின பகுதிக்கு இரட்டிப்பு உமக்குச் செலுத்தவேண்டுமென்றும், அவருடைய அரசாட்சி கயிற்றினாற் செய்யப்பட்ட சவுக்கினடிகளுக்கு ஒப்பாயிருந்தால், உம்முடைய துரைத்தனம் கூருள்ள வாரினாற் பிணைப்பட்ட சவுக்கினடிகளுக்கு ஒப்பாயிருக்குமென்றும் சனங்களுக்குச் சொல்லும்" என்றார்கள்.

புத்தியீனனான அந்த அரசன் இந்த யோசனைப்படிக்கே நடக்கத் தீர்மானித்துக்கொண்டான். எரோபெயாமும் சனங்களும் மூன்றாம் நாளில் அவனிடத்தில் வந்தபொழுது வாலிபர் சொல்லியிருந்தபடியே அவர்களுக்கு உத்தரவு சொன்னான். அப்புறம் நடந்தபிரகாரம் நடக்குமென்று நினைத்திருப்பானா! கனவிலும் நினைத்திருக்கமாட்டான். பின்னை அவன் எண்ணம் எப்படியிருந்திருக்கும்? "நான் சொல்லுகிறது சனங்களுக்குப் பிரியமாயிருந்தாலும், இராவிட்டாலும் அவர்கள் எனக்குக் கீழ்ப்படியவேண்டும். நான் சாலமோனின் குமாரன், தாவீதின் பேரன். நான் எப்படியும் இராசாவாயிருக்கவேண்டும்" என்று தன்னுள்ளத்தில் எண்ணியிருப்பான். ஆதலால் இராசா இவ்வாறு அகங்காரமாய் உத்தரவுசொன்னதைக்கேட்ட சனங்கள், "தாவீதோடே எங்களுக்குப் பங்கேது, ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமில்லை" என்று சொல்லி அமளிபண்ணினபொழுது ரெகொபெயாம் எவ்வளவாய் ஆச்சரியப்பட்டிருக்கவேண்டும். அவன் ஒருவேளை அது எதார்த்தமென்று நம்பியிருக்கமாட்டான். ஆகிலும் அது எதார்த்தமோ அல்லவோவென்று அறியும்பொருட்டு, வழக்கப்படிக்குச் சனங்களிடத்தில் பகுதிவாங்குகிறதற்கு தன் பிரதான பகுதி விசாரணைக்காரனை அனுப்பினான். சனங்கள் அவனுக்கு என்னசெய்தார்கள்! அவனைக் கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள்.

அதன்பேரில் ரெகோபெயாம் காரியத்தின் எதார்த்த ஸ்திதியை அறிந்துகொண்டு தன் இரதத்திலேறி எருசலேமுக்கு ஓடிப்போய்விட்டான். இரண்டு கோத்திரத்தார்மாத்திரம் அவனை இராசாவாக ஏற்றுக்கொண்டார்கள். மற்றப் பத்துக் கோத்திரத்தாரும் எரோபெயாமைத் தெரிந்துகொண்டார்கள். இவ்விதமாய்ச் சாலமோனின் இராச்சியம் இரண்டாகப் பிரிந்துபோயிற்று. பிரிந்த இராச்சியங்கள் அப்புறம் ஒருநாளும் ஒன்றுசேராமல், ஒன்றோடொன்று பகைசாதித்துக்கொண்டேயிருந்தன. எரோபெயாமை இராசாவாகத் தெரிந்துகொண்ட பத்துக் கோத்திரத்தாரும் இஸ்ரவேலின் இராச்சியமாக அமைந்து, துவக்கத்தில் விவரிக்கப்பட்ட அழகிய பள்ளத்தாக்கில் தங்கள் இராசநகரியையும் தேவாலயத்தையும் ஸ்தாபித்தார்கள். ரெகோபெயாமுக்

ரு மீந்திருந்த யூதா பென்யமீன் என்ற இரண்டு கோத்திரத்தாரும் பிற்காலத்தில் யூதேயா என்ற பெயர் வழங்கிய தேசப் பகுதியில் குடியிருந்து யூத இராச்சியம் என்று சொல்லப்பட்டார்கள். ஆதலால் யூதர்கள் என்று சொல்லும்போது இந்த இரண்டு கோத்திரத்தாருமேயல்லாமல் பத்துக் கோத்திரத்தாருமல்ல, என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். யூதர்கள் என்ற பெயர் இந்தப் பிரிவினைக்குப் பிற்பாடுதான் வழங்கத் துவங்கினது.

இந்தப் பாடத்தினால் நமக்குப் போதிக்கப்படுகிற முக்கிய படிப்பினைகள் இரண்டு. அவையாவன, எவ்விதம் ஆலோசனை கேட்கவேண்டும் என்பதும், யாருடைய ஆலோசனைக்கு இணங்கி நடக்கவேண்டும் என்பதுமேயாம்.

முதலாவது. இன்னபடி நடப்பேனென்று முந்தியே உன் மனதில் தீர்மானம்பண்ணிக்கொண்டு அப்புறம் யாரிடத்திலாவது நான் எப்படி நடக்கவேண்டுமென்று யோசனைகேளாதே. கேட்கிறதுண்டானால் வஞ்சகமாகும்.

இரண்டாவது. யாருடைய யோசனைக்கிணங்க நடக்கிறாயென்பதைப் பற்றி யெச்சரிக்கையாயிரு. சில பிள்ளைகள் புத்திசாலிகளான பெரியோர் சொல்லும் யோசனையைக் கேளாமல், தங்களைப்போன்ற புத்தியீனமுள்ள பிள்ளைகளுடைய யோசனையையே கேட்க விரும்புவார்கள். "என் தகப்பனார் அல்லது வாத்தியார் கோபித்தால் அதைச் சகித்துக்கொள்வேன், என் கூட்டாளி என்னைக் கேலிபண்ணினால் எப்படிச் சகிக்கக்கூடும்" என்பதுபோல் அவர்கள் பேசுவார்கள். இப்பேர்ப்பட்டவர்களும் இந்த ரெகொபெயாமைப்போல புத்தியீனர் தான். அவர்கள் தங்கள் மதியீனத்தைக்குறித்து எப்படியும் பிரலாபிப்பார்கள்.

எந்த யோசனையையும் தேவ வசனத்தைக்கொண்டு சோதித்துப் பார். இதுவே உனக்குப் பிரமாணமாயிருக்கவேண்டும்.

நீ இப்படிச் செய்வாயானால் ஒருக்காலும் பிசகிநடக்கமாட்டாய். ஆகையினாலே நீ செய்யவேண்டியது இன்னதென்றும், நடக்கவேண்டியது இப்படியென்றும் அறிய விரும்புகிறாயா? "கர்த்தராகிய தேவன் என்ன சொல்லுகிறார் என்று கேட்பேன்" என்பதாய்த் தீர்மானம்பண்ணு? தேவன் தாமே இரக்கமாய் தமது ஆவியானவரைக் கொண்டு உங்களைச் சகல சத்தியத்திலும் நடத்துவாராக.

---

## கர்மேல் பர்வதத்தின் மீது நடந்த பரீட்சை.

### 1 இராசாக்கள் 18ம் அதிகாரம்.

---

முந்தின அதிகாரத்தில், இஸ்ரவேல் தேசத்திலுள்ள அழகிய ஓர் பள்ளத்தாக்கில் நடந்த சங்கதியைக் கவனித்தோமே. இப்பொழுது அங்குள்ள அழகிய ஓர் மலையின் மீது நடந்த விர்த்தாந்தத்தை யோசித்துக் கொள்வோம். உயரமான ஒரு மலையின் சிகரத்தில் நிற்கிறதாகப் பாவித்துக்கொள்ளுங்கள். அதன் ஒரு புறத்தில் அகன்ற கடலும், மறுபுறத்தில் சேர்த்தியான தோப்புகள் அடர்ந்த மைதானமும் அப்புறம் சிறப்புப்பொருந்திய ஓர் பள்ளத்தாக்கும், மேற்படி பள்ளத்தாக்கில் கோட்டை கொத்தளங்கள் பிரகாசிக்கின்ற ஓர் நகரமும், மலையினடிவாரத்தில் வளைந்து வளைந்து ஓடுகிற ஓர் நதியும் காணப்படும். ஆகிலும் நாம் இங்ஙனம் விவரிக்கப்போகிற சங்கதி நடந்தது அந்த மலையிலே



தான். அங்கே ஏராளமான சனங்கள் கூடி நின்று, தூரத்தில் ஒண்டியாய் நிற்கிற ஒரு மனிதனை விசனத்தோடும் கோபத்தோடும் பார்க்கிறவர்களாயும், அவன் வாய்ப்பிறப்பைக் கவனமாய்க் கேட்கிறவர்களாயுமிருக்கிறார்கள். அந்த மனிதனுடைய தோற்றம் விகாரமாயும், உடுப்பு சந்நியாசி உடுப்புப்போலுமிருந்தது. "மயிர் உடையைத் தரித்தவராய்க் கச்சையைத் தன் அரையில் கட்டினவன்."—அவன் பேசுகிற சத்தம் துயரமாயும் கண்டிப்பாயுமிருக்கிறது. அவன் அவ்விடத்தில் ஏன் நிற்கிறானென்று கேட்கிறீர்களோ! அந்தச் சனங்களுக்குத் தேவனிடத்திலிருந்து ஓர் செய்தி அறிவிக்க வந்திருக்கிறான். ஆச்சரியமான ஒரு பரீட்சையினாலே அந்தச் சனங்களின் அசமந்தத்தையும் உணர்வின்மையையுங் கண்டிக்கவும், அங்கே கூடிவந்திருக்கிற எண்ணூற்றைம்பது விக்கிரக பூசாசாரிகளை வெட்கப்படுத்தவும் போகிறான். இந்த விவரங்களையெல்லாம் வேதாகமத்தில் வாசித்திருக்கிறீர்களே. வானத்திலிருந்து அக்கினி இறங்கி எலியாவின் பலியைப் பட்சித்தபொழுது, சனமெல்லாம் முகங்குப்புற விழுந்து "கர்த்தரே தெய்வம் கர்த்தரே தெய்வம்" என்று ஏகோபித்து முழங்கினதையும் அறிவீர்களே. இந்தச் சரித்திரத்தில் நாலு படங்கள் நமக்குக் காண்பிக்கப்படுகிறது. ஒவ்வொரு படத்தினாலும் பல அருமையான திவ்விய போதனைகளைக் கற்றுக்கொள்ளலாம்.

முதலாவது, அந்தத் தீர்க்கதரிசி. இரண்டாவது, சனங்கள். மூன்றாவது, பூசாசாரிகள். நாலாவது, பலி ஆகிய இவைகளே.

முதலாவது. தீர்க்கதரிசியாகிய எலியாவைக்குறித்து சற்று யோசிக்கவேண்டும். அவனைக்குறித்து மூன்று காரியங்கள் கவனிக்கலாம்.

முதலாவது. அவன் தேவனுடைய உண்மையுள்ள பக்தன். ஆகாபும் யேசபேலும் அவனைக் கொன்றுபோடுவோமென்று பயமுறுத்தினார்கள். தேவநாமத்தில் தீர்க்கதரிசனம் உரைக்காமல் பாகாலை வணங்கும்படி வற்புறுத்திக் கற்பித்தார்கள். அவனோ அதற்கு உடன்படவில்லை. அவர்கள் கைக்குத் தப்ப அவன் ஒளித்துக்கொள்ளவேண்டியதாயிற்று. காகங்களால் தினந்தினம் போஷிக்கப்படவும் நேரிட்டது. அவனிருக்கிற இடம் இராசாவுக்கும் இராசாத்திக்கும் தெரியுமாகில், அவனைக் கொன்றுபோடுவார்கள். அவனோ என்னவந்தாலும் வரட்டும் என்று சொல்லி தேவனை மறுதலிக்காமல் நின்றான். இது நமக்கு நல்ல மாதிரியல்லவா?

அதோடு இரண்டாவதாக வேறொரு விசேஷத்தையுங் கவனியுங்கள். இதுகாரியத்தில் அவன் ஒண்டியாய் நின்றானே. அப்படிப்பட்ட மற்றவர்களுமிருந்தது நிசம். பாகாலை வணங்காத ஏழாயிரம் பெயர் தேசத்திலிருந்தார்கள். அது அவனுக்குப் பிற்பாடு தெரிந்ததேயல்லாமல் அப்பொழுது தெரியவில்லை. ஆதலால் அவன் ஒண்டியாயிருந்ததற்குச் சமானந்தானே. அப்படி அவன் நின்றுகொண்டு, "கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீதிருக்கிறவன் நான் ஒருவன்" என்கிறான். ஆ! இது மகத்துவமான காட்சியல்லவா? அம்மலைக்கு கிழக்கே காணப்பட்ட மிகவுஞ் சிறந்த தேசகாட்சியைப் பார்க்கிலும், மேற்கே அகன்று பரவியிருந்த மகா பெரிய சமுத்திரத்தைப் பார்க்கிலும் ஒரே மனுஷன் அத்தனை ஆயிரம் பேர்களுக்கு எதிரியாய் நிற்கிறதைப் பார்க்கிறது மகத்துவமான காட்சியென்பதற்குச் சந்தேகமில்லை. என்றாலும் தீர்க்கதரிசி தன் பட்சத்தில் ஒருவராவது இல்லையென்று நினைக்கும்போது அவனுடைய தைரிய நெஞ்சிலும் துக்கமுண்டாகித்தானிருக்கும். எதுகாரியத்திலும் நமது பாரிசத்தில் நின்று நமக்கு உதவிசெய்யத்தக்கவர்கள் நம்மெல்

லாருக்கும் அவசியந்தான். பக்திக்குரிய விஷயத்திலோ அப்பேர்ப்பட்ட துணை விசேஷித்த அவசியம். பிரியமானவர்களே, உங்களிற் சிலர் ஒருவேளை கிறிஸ்துநாதரைச் சிநேகிக்கத் தொடங்கியிருப்பீர்கள். இரட்சகரைச் சிநேகிக்கிற மற்றவர்களுடைய கூட்டுறவும் சகவாசமும் உதவியும் உங்களுக்கு வேண்டுமென்று விரும்புகிறதில்லையா? நான் சில வாலிபரை அறிவேன். அவர்களுக்கு இது கிடைக்கவில்லை. அவர்களோடு பட்சமான ஒரு வார்த்தை பேசவாவது, அவர்களோடுகூட முழங்காலூன்றிப் பிரார்த்திக்கவாவது, அவர்களுடைய ஞானப்பாட்டுகளில் சேர்ந்துபாடவாவது ஒருவருமிருந்ததில்லை. தாய்தந்தைகளும் அவர்களைக் கைவிட்டார்கள். சகோதரர் சகோதரிகளும் அவர்கள்பேரிற் சீறினார்கள். சிநேகிதரும் தோழன்மாருமெல்லாம் அவர்களைப் பரியாசம்பண்ணினார்கள். அவர்கள் ஒண்டியாகவே மோட்சபாதையில் நடக்க நேரிட்டது. என்றாலும் அவர்கள் பின்வாங்கிப்போகவில்லை. "என் இரட்சகர் என்னோடிருக்கிறார். சர்வலோகமும் எனக்கு விரோதமாயிருந்தபோதிலும், அவர் என் பட்சத்திலிருப்பாரென்று அறிவேன்" என்பது போல அப்பேர்ப்பட்டவர்கள் சொல்லுவார்கள்.

---

## St. Ambrose, Bishop of Milan.

## அம்புரோஸ் கண்காணியார் சரித்திரம்.

இதற்குமுன் இரண்டுமூன்று மாதங்களாய் பேர்போன அகுஸ்தீன் கண்காணியார் சரித்திரத்தை விவரித்தோமே. இப்பொழுது அவர் குணப்படுவதற்குக் கருவிகாரணமாயிருந்த அம்புரோஸ் கண்காணியார் விர்த்தாந்தத்தைச் சற்று கவனிப்போம். அம்புரோஸ் என்பவர் கி. பி. 333 ம் ௵போல் பிரான்ஸ் தேசத்திற் பிறந்தவர். அவர் தந்தை ரோமராயனால் மேற்கத்தி நாடுகளுக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தார். அவருக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளில் அம்புரோஸ கடைசியானவர். தேசாதிபதியின் அரண்மனையில் அவர் ஒருநாள் தமது தொட்டிலில் படுத்து உறங்கும்பொழுது, ஒரு கூட்டம் தேனீ அவர் முகத்தில் வந்திறங்கி, சிறிதுநேரம் அவர் வாய்க்குள் போகிறவைகளாயும் வெளியே வருகிறவைகளாயுமிருந்து பின்பு அவருக்கு யாதொரு சேதமும் செய்யாமல் பறந்துபோயின. அதைக்கண்ட அவர் தந்தை ஆச்சரியப்பட்டு, "இந்தப் பையன் பிழைத்திருப்பானாகில், பெயர்போன மனுஷனாவான்" என்று சொன்னாராம். அம்புரோஸ் சிறுபிராயமாயிருக்கையிலேயே தேசாதிபதி மரித்துப்போக, அவர் மனைவி தன் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ரோமாபுரிக்குத் திரும்பிவிட்டாள். அவர்கள் ரோமையிற் சேர்ந்தபோது, அக்காலத்து வழக்கப்படி, அவளும் அவள் மூத்த குமாரத்தியும் அவ்விடத்துக் கண்காணியாரைக் கண்டு அவர் கையை முத்தஞ்செய்தார்கள். அம்புரோஸ் அதைப் பார்த்து "நானும் கண்காணியாயிருப்பேன்" என்று சொல்லி தன் கையையும் முத்தஞ்செய்யும்படியாகக் கொடுத்தாராம்.

அப்புறம் அம்புரோஸ் கல்வியப்பியாசஞ்செய்து கலைஞானங்களில் தேறினதுமல்லாமல் அவர் சகோதரியினாலே வேதபோதனையுமடைந்து அவள் யோசனைக்கிணங்கி நடந்ததினாலே தீயவொழுக்கத்தின் கேடுகளுக்குத் தப்பிக்கொண்டார். சிறிதுகாலத்துக்குப் பிறகு அவர் அந்நகரத்துக்



கோர்ட்டுப் பிளீடராகி, மேற்படி தொழிலை மகா திறமையாயும் அனுகூலமாயும் நடப்பித்துவந்தபடியால், இத்தாலிதேசத்து அதிகாரி அதைக் கண்டு அவரை அத்தேசத்து வடநாடுகளுக்குத் தேசாதிபதியாக நியமனம்செய்து அனுப்பினான். அனுப்பும்பொழுது அவருக்குப் பல புத்திபோதனைகள் சொன்னதில், "நியாயாதிபதியைப்போலல்ல, ஒரு கண்காணியாரைப்போல தேசத்தை ஆண்டுகொண்டுவா" என்றுஞ் சொன்னானும். அதன்பேரில் மேல் பாதி இராச்சியத்தை விசாரித்துவந்த இராயர்கள் வழக்கமாய் வசிக்கிற ஸ்தானமாகிய மிலான் நகரத்தில் இவரும் போய் ஸ்தாபகமாகி கொஞ்சங்குறைய ஐந்து வருஷம் அவ்வுத்தியோகத்தை நிறைவேற்றி வந்தார்.

அந்தக்காலத்தில் மிலான் கண்காணியாயிருந்த ஆக்சென்றியு என்பவன் மரித்துப்போனான். இவன்மேல் சீமைகளில் ஆரியர் கொள்கை பரவுதற்கு மிகவும் அனுசாரணையாயிருந்தவன். உடனே அந்நகரத்துக்கு வேறொரு கண்காணியாரைத் தெரிந்து நியமிக்கும்பொருட்டு, அந்நாட்டுக் கண்காணிமாரெல்லாருங் கூடிவந்தார்கள். வாலந்தினியன் என்ற இராயன் தகுதியான ஒருவனைத் தெரிந்து ஏற்படுத்தும்படி அவர்களுக்குப் புத்திசொல்ல, அவர்கள இராயனையே தெரிந்துகொள்ளும்படி கேட்டார்கள். இராயனோ அதற்கு எவ்வளவேனும் சம்மதிக்கவில்லை. அப்பால் கண்காணிமார்களெல்லாரும் தேவாலயத்துக்குட்போய்க் காரியத்தை ஆலோசித்ததில் ஆரியக்கொள்கைக்காரருக்கும் பொதுவான சபையைச் சேர்ந்தவர்களுக்கும் பலமான வாக்குவாதம் நேரிடவே, அம்புரோஸ் நியாயாதிபதிக்குரிய அதிகாரப்படி அதில் தலையிட வேண்டியதாயிற்று. அவர்கள் ஒருவருக்கொருவர் சகோதர சிநேகமாய் நடந்துகொள்ளவேண்டுமென்று அவர் வெகுநேரம் அவர்களுக்குப் புத்திசொல்லி முடிக்கப்போகிற சமயத்தில் "அம்புரோஸ் கண்காணியார்" என்ற ஒரு சப்தம் கேட்டதாம். உடனே அவர்கள் தங்கள் வாக்குவாதங்களையெல்லாம் விட்டு அவரையே ஏற்படுத்தும்படி சம்மதித்துக்கொண்டார்கள். அவரோ அவ்வுத்தியோகத்தை வேண்டாமென்று தள்ளினதுமல்லாமல், தாம் அதற்குத் தகுதியுள்ளவரல்லவென்று காட்டும்பொருட்டு ஆலயத்தைவிட்டு வெளியே வந்தமாத்திரத்தில் சில குற்றவாளிகளைக்கொண்டு வந்து தமக்கு முன்பாக கடினமாய்த் தண்டிக்கச் செய்வித்தார். என்றாலும அவர் கையாடின இதுமுதலிய உபாயங்கள் சித்திக்கவில்லை. அப்பால் பலாத்காரமாய் மேற்படி உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள நேரிடுமென்று கண்டு, நடுராத்திரியில் ஒருவருக்குந் தெரியாமல் பினிசியம் என்னும் வேறொரு இடத்துக்குப் புறப்பட்டுபோனார். ஆகிலும் வழிதப்பிப்போனதினால் காலையில் மிலான் நகரத்து வாசல்களில் ஒன்றிலேயே வந்துசேர்ந்தார். உடனே சனங்கள் அவரைப் பிடித்துக்கொண்டுபோய் இராயனுடைய சித்தத்தை அறிகிறவரையில் பந்தோபஸ்துச் செய்தார்கள். துரைத்தன உத்தியோகஸ்தர்கள் யாராவது இராயனுடைய சம்மதியில்லாமல் குருப்பட்டம்பெறப்படாது. இராயனோ கொஞ்சமேனும் அதற்குத் தடைசொல்லவில்லை. இதனிடையில் அம்புரோஸ என்பவர் தப்பித்துப்போய் நாட்டில் ஓர் சிநேகிதன் வீட்டில் ஒளித்துக்கொண்டிருந்தார். அவரைக் கண்டுபிடிக்கக்கூடாமற்போனபடியால், யாராவது அவரை மறைத்துவைத்திருந்தால் அவர்கள் பொருளுக்கும் உயிருக்கும் நஷ்டம் நேரிடுமென்பதாய் ஒரு சட்டம் பிறப்பித்துப் பிரசுரஞ்செய்தார்கள். அதன்பேரில் அம்புரோஸ் என்பவர் எதிர்த்து நிற்பது வியர்த்தமென்று உணர்ந்து மிலான் நகரத்துக்குத் திரும்பிவந்து, இதுவரையும் ஞானஸ்நானம்பெறாதவரா

னபடியால் ஞானஸ்நானம்பெற்று பின்பு மிலான் நகரத்துக்குக் கண்காணியாராக அபிஷேகம்பண்ணப்பட்டார். அச்சமயத்தில் இராயனும் கூடவிருந்து கனபத்தியாய் ஸ்தோத்திரஞ்செலுத்தினதாகச் சொல்லியிருக்கிறது.

அதன்பின்பு அம்புரோஸ் என்பவர் தமது காணியாட்சிகளை விற்று, திரயத்தைத் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டார். தமது நிலங்களில், தமது சகோதரியின் சவரட்சணைக்குப் போதுமானதை மாத்திரம் வைத்துக்கொண்டு மற்றதையெல்லாஞ் சபைக்குக் கொடுத்துவிட்டார். அப்புறம் தமது குடும்பக் காரியாதிகளைத் தமது சகோதரனைப் பார்த்துக்கொள்ளும்படி திட்டஞ்செய்துவிட்டு கல்வியிலும் பக்தியிலும் சிறந்த சிம்பிளிஷன் என்ற ஒரு குருவை மிலான் நகரத்துக்கு வரவழைத்து அவனோடு சிறிதுகாலம் வேதசாஸ்திரம் அப்பியாசித்து வந்தார்.

உத்தேசம் 377 ம் ௵போல கொத்தர்முதலிய மிலேச்ச சாதியார் ரோமை ராச்சியத்தின் மீது படையெடுத்துவந்தபோது, அம்புரோஸ் கண்காணியாரும் வேறுபலரும் இல்லிரிக்கம் நாட்டுக்கு ஓடிப்போய் அங்கிருந்து ரோமாபுரி வந்து சேர்ந்தார்கள். அங்கே மேற்படி மிலேச்சரால் தேவாராதனை கிரமமாய் நடந்தேறுதபடியால் ஒரு துரைசானி கர்த்தருடைய இராப்போசனம் தன் வீட்டிற் பரிமாறும்படி அவரிடத்திற் கேட்டுக்கொண்டாள். அதுகாரியமாக அவர் அவ்விடத்துக்குப் போயிருக்கும்போது திமிர்வாதத்தினால் வெகுகாலங் கட்டிற் கிடையாய்க் கிடந்த ஒரு பெண்பிள்ளை நாற்காலியில் அங்கே கொண்டுவரப்பட்டு, தனக்குச் சொஸ்தமுண்டாகத்தக்கதாய்க் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளும்படி அவரைக் கெஞ்சினதின்பேரில், அவர் அந்தப்படியே அவளுக்காக வேண்டிக்கொள்ள, அவள் பெலனடைந்து எழுந்து நடந்தாள் என்று சொல்லியிருக்கிறது. கொத்தர் ரோமை ராச்சியத்தைவிட்டுப் போய்விட்டபிறகு, அம்புரோஸ் மிலானுக்குத் திரும்பிவந்தார். அப்புறம் ஆரியர் கொள்கையைப்பற்றி வாலந்தினியன் அவரிடத்தில் யோசனை கேட்டபடியால், அதற்காக அவனிடத்திற்போய்ப் பேசிக்கொண்டதின்பேரில் விசுவாசப்பிரமாணத்தைக்குறித்து ஒரு நூல் எழுதிப் பிரசுரஞ்செய்தார். அதற்குச் சிறிதுகாலத்துக்குப்பிறகு, பரிசுத்தாவியானவருடைய திவ்விய தன்மையை நிரூபிக்கும்பொருட்டு, பரிசுத்தாவியைக்குறித்து என்ற பெயரால் வேறு மூன்று பிரபந்தங்களும் எழுதினார்.

இந்தக்காலம்போல சிமக்கு என்று பெயர்கொண்ட கீர்த்திபெற்ற சாதுரியப் பிரசங்கி ஒருவன் ஒழிந்துபோன அஞ்ஞானமார்க்கத்தைத் திரும்பவும் ஸ்தாபிக்கும்படி இராயனை யேவிவிடப் பார்த்தான். அம்புரோஸ் அதை யறிந்து உடனே இராயனுக்கு அதைக்குறித்து எழுதிக் கேட்க, இராயன் மேற்படி மனுவுக்கு ஓர் நகல்செய்தனுப்புவித்தான். கண்காணியார் அதற்கு பலமான ஓர் கண்டனை எழுதவே இராயன் மனுவைத் தள்ளிப்போட்டான். சிமக்கு எனபவன் அதைக்குறித்து மறுபடியும் மனுச்செய்ததினிமித்தம் பட்டணத்துக்கு நூறுமைலுக்கப்புறம் போய்விடத் தீர்ப்புப்பெற்றான்.

இராயனின் தாய் ஆரியர் கொள்கையைப் பலமாய்ப் பிடித்திருந்தாள். இவள் தன் புருஷன் உயிரோடிருக்கும்பொழுதே தன் குமாரனும் மேற்படி கொள்கையை அனுசரித்துக்கொள்ளும்படி இராச்சியத்திற் பயிற்றுவித்ததுமல்லாமல், அம்புரோஸ் கண்காணியாரை வெறுக்கவும் ஏவிவிட்டாள். அவனும் தாய் ஏவிவிட்டபிரகாரம் கண்கா



ணியாரைப் பகைக்கவும் பலவிதத்தில் தொல்லைப்படுத்தவும் ஆரம்பித்தான். அவன் தகப்பன் பிடித்திருந்த விசுவாசப் பிரமாணத்தையே அனுசரித்துக்கொள்ளும்படி கண்காணியார் அவனுக்குப் புத்திசொன்னதின்பேரில், அவன் கோபதாபமாகி தன் காப்புச்சேனையைக்கொண்டு ஆலயத்தை வளைந்துகொண்டான். இராயனுடைய பயமுறுத்துதல்களைப் பார்த்து கண்காணியார் நகைக்கவே, இராயன் அதிகமாய் மூர்க்கங்கொண்டு கண்காணியாரைக் கோவிலைவிட்டு வெளியே வரும்படி கற்பித்தான். கண்காணியார் மாறுத்தரமாக, "அதற்கு நான் ஒருபொழுதும் சம்மதிக்கவே கூடாது. ஆட்டுமந்தையை ஓநாய்களுக்குக் காட்டிக்கொடுக்கவும், திருச்சபையை இப்பேர்ப்பட்ட துஷ்டர் கையில் விடவுமாட்டேன். என்னைக் கொலைசெய்ய விருப்பமானால் கோவிலுக்குள்ளே கட்கங்களும் ஈட்டிகளுமிருக்கின்றன. உள்ளே வந்து என்னைக் கொன்றுபோடலாம். அவ்விதமாய் மரிக்க நான் மனப்பூர்வமாய் ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்.

---

## Notes on Exodus.

## யாத்திராகம வியாக்கியானம்.

### ௪. அதிகாரம்.

### மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்துக்கு அனுப்பப்பட்டது.

(தொடர்ச்சி.)

22. "சேஷ்டபுத்திரன்." ஒரு குடும்பத்தில் சேஷ்டபுத்திரனானவன் தன் சகோதரருக்குள் முக்கியமானவனாயிருக்கிறதுபோல, இந்த உலகத்திலுள்ள பற்பல ஜாதியாருக்குள் இஸ்ரவேலர் முக்கியமானவர்களாயிருந்தார்கள். ஆகையால் தேவன் இஸ்ரவேலரை பார்வோன் கையினின்று எவ்விதமும் மீட்பார்; அவர்களைப் போகவிடாவிட்டால் சத்துருக்களிடத்தில் எவ்விதமும் பழிவாங்குவார் என்று பார்வோன் திடச்சித்தமாய் அறிந்துகொள்ளும்படி, தமக்கும் இஸ்ரவேலருக்குமிருக்கப்பட்ட விசேஷித்த உறவை மோசேக்குச் சொன்னார். உத்தம விசுவாசிகளெல்லாரும் தேவனுக்கு மூத்த பிள்ளைகள்போலிருக்கிறார்கள்.

24. "எதிர்ப்பட்டு." அவனை திடீரென்று கொல்லவருகிறவர்போல் கண்ணுக்குத் தெரியத்தக்கவகையாய் எதிர்ப்பட்டாரென்று அநேகர் நினைக்கிறார்கள். வேறு சிலர்: சடுதியாய் அவன் அபாயமான வியாதிப்படச்செய்தாரென்று நினைக்கிறார்கள். மோசே தன் மகனை விருத்தசேதனம் செய்யாததற்காக இப்படி கர்த்தர் உக்கிரமாய் எதிர்ப்பட்டாரென்று அவன் அறிந்துகொண்டதாகக் காணப்படுகிறது.

25, 26. மீதியானியர் ஆபிரகாமின் வம்சத்தாரானதினாலே அவர்கள் விருத்தசேதனச் சடங்கை அநுசரித்துவந்தார்களென்றும்; சிப்போராள் பிரயாண அவதியினிமித்தமோ, அல்லது வேறெந்த முகாந்தரத்தினிமித்தமோ குறிக்கப்பட்டகாலத்தில் தன் மகனுக்கு விருத்தசேத

ணம் செய்யாமலிருக்கும்படி மோசேயை ஏவினாள் என்றும் நினைக்கப்படுகிறது. இப்பொழுது மோசே மகா விசேஷமான உத்தியோகத்துக்கு உயர்த்தப்பட்டதினாலே, அவன் மற்றவர்களுக்கு முன்மாதிரியாயிருக்கவேண்டியவனானதால் அவன் செய்த குற்றத்துக்காக மகா பயங்கரமாய்த் தண்டிக்கப்பட்டான்.

இப்பொழுது அவன் மனத்தத்தளிப்பிலாவது அல்லது மரண அவஸ்தையான வியாதியிலாவது இருந்திருக்கவேண்டும். அதினாலே சிப்போராள் தீத்தட்டிக்கல்லினாற் செய்யப்பட்ட கத்தியினாலே, தன் மகனை திடீரென்று விருத்தசேதனம்பண்ணினாள். இந்தவகைக் கத்திகள் அந்தத் தேசத்தில் வழக்கமாயிருந்தது.

“நீர் எனக்கு இரத்தசம்பந்தமான புருஷன்.” இந்த வார்த்தைகள் பலவகையாய் தாற்பரியம்பண்ணப்படும். சிப்போராள் மோசேயைப் பார்த்து, ‘என்ன! இரத்தம் சிந்தும் சடங்கையுடைய உம்முடைய மார்க்கம் எப்படிப்பட்டது?’ என்று அவனையும் அவன் மார்க்கத்தையும் மூர்க்கத்தோடு பழித்ததாக சிலர் நினைக்கிறார்கள். மற்ற அநேகர்: இப்போ மகனை விருத்தசேதனம்பண்ணி இரத்தம் சிந்தினதினாலே, உம்முடைய உயிர் தப்பினது; இதினாலே உம்மை புதுமாப்பிள்ளைபோல் சம்பாதித்தேன் என்று உருக்கமான பட்சத்தோடு சொன்னதாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஏனென்றால் விருத்தசேதனச் சடங்கு முடிந்தவுடனே தேவன் மோசேயை விடுதலையாக்கி அவனைவிட்டு விலகினார்.

இந்தச் சமயத்தில் சிப்போராள் மோசேயைவிட்டுப் பிரிந்து தன் தகப்பனாகிய எத்ரோவின் வீட்டுக்குத் திரும்பிப்போய்விட்டாளென்று பெரும்பாலும் நினைக்கப்படுகிறது. 18: 1—5. வியா.

### படிப்பினை.

தேவன் கோபிக்கத் தாமதமுள்ளவர்; இரக்கத்திலோ மகா ஐசுவரியமுள்ளவர். நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டுகிறதில்லை. அப்படிச் செய்வாரானால் எப்பேர்ப்பட்ட பேர்போன விசுவாசியும் நியாயமானபடி ஆக்கினையையே அடையவேண்டும். 1-13.—நாம் மனதறியச் செய்யும் பாவங்களுக்குமாத்திரமல்ல, கவலைத்தாழ்ச்சியினாலே வரும் தவறுதல்களுக்கும் தேவன் மகா பயங்கரமாய்த் தண்டனை செலுத்துகிறார். மற்றவர்களுக்குப் போதிக்கும்படி ஏற்படுகிறவர்களிடத்தில் அதிகக் கண்டிப்பாயுமிருக்கிறார். 24.—புதிய உடன்படிக்கையின் முத்திரைகளையும் அடையாளங்களையும் அலட்சியம் செய்வது தேவனுடைய பார்வையில் மிகவும் அருவருப்பானதாம். ஏனென்றால் அப்படிச் செய்வது அவருடைய விசேஷமான இரக்கங்களை அவமதிக்கிறதாயிருக்கிறது. அநேகம் கிறிஸ்தவர்கள் இதை நினைக்கிறதில்லை. 25, 26.—சரீர விடுதலைக்காக இஸ்ரவேலர் ஆரவாரித்து மகிழ்ந்தது சரியென்றால், எவ்வளவு அதிகமாய் நம்முடைய ஆத்தும விடுதலைக்காக நாம் கவலைப்படவேண்டும். கிறிஸ்துரட்சகராகிய மத்தியஸ்தருடைய வாக்கை நம்பவேண்டும்!



## ௫. அதிகாரம்.

### பார்வோனின் கொடூரம் அதிகரித்தது.

2. “அவர் யார்.” இஸ்ரவேலர் எப்படி இழிவானவர்களாயிருக்கிறார்களோ அப்படியே அவர்களுடைய குலதெய்வமும் இருக்கும் என்று பார்வோன் நினைத்து “அவர் யார்” என்றான். இது: ‘நான் எகிப்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் கர்த்தனாயிருக்க வேறே கர்த்தன்யார்’ என்று சொல்லுகிற பாவனையாயிருக்கிறது. குணப்படாத இருதயமுதலாவது தேவவசனத்தைக் கேட்கும்போது இப்படியே சொல்லும்.

3. தேவன் பார்வோனுக்கு இன்னபடிசெய்வாரென்று சொல்ல இப்போ துணியாமல், தங்களுக்கடுத்ததாகச் சொல்லுகிறார்கள். ஏனென்றால் பார்வோன் அத்தனை கொடூரனாயிருந்தான்.

4, 5. இஸ்ரவேலர் எகிப்தியருக்கு ஆஸ்தியும் வாழ்வுமாயிருந்தார்கள். ஆகையால் அவர்களுடைய விடுதலையைக் குறித்த பேச்சு பார்வோனுக்குச் சற்றேனும் உறைக்கவில்லை. மோசேயையும் ஆரோனையும், தேசத்துப் பொது நன்மைக்கு விரோதஞ்செய்கிறவர்களாக பாவித்துப் பேசுகிறான்.

7. “செங்கல் வேலைக்கு.” செங்கல் உறுதியாயிருக்கும்படி களிமண்ணோடே சேர்க்கும்படிக்கோ, அல்லது பச்சைவெட்டுச் செங்கலைச் சுடும்படிக்கோ, அல்லது பச்சைவெட்டுச் செங்கலைச் சுடுமுன் கனத்த மழையினின்று தற்காக்கும்படி மேலே பரத்திவைக்கவோ, வைக்கோல் அவசியமாயிருந்தது. முதலில் சொல்லப்பட்ட வேலைக்கென்று பெரும்பாலும் நினைக்கப்படும்.

8, 9. அதிகாரிகளுக்கு அநேகம்விசை குடிகளுடைய கஷ்டம் தெரிகிறதில்லை.

14. “ஆளோட்டிகள்.” எகிப்தியராம்.

“தலைவர்கள்.” இஸ்ரவேலராம்.

15. “போய்ச் சத்தமிட்டு.” இவர்கள் பார்வோன் தரிசனை காண வெகு வருத்தப்பட்டிருக்கவேண்டுமே. அவர்களுக்குக் கிடைத்த உத்தரவு 17, 18 வாக். பார்.

21. இஸ்ரவேலருடைய அடிமைத்தனத்தின் மிகுதியும், மனுஷருடைய இயல்பான அவிசுவாசக் குணமும் இதினால் விளங்குகிறது.

### படிப்பினை.

தேவனூழியக்காரருக்கு இந்த உலகத்திலே அநேகம் போராட்டங்களுண்டு. அவர்கள் அப்படிப்பட்ட சமயங்களில் தேவனுடைய வல்லமையையும் உண்மையையும் கவனித்து நடக்கவேண்டும். 1-9.—சாத்தானுடைய அடிமைத்தனமும் பாவ அடிமைத்தனமும், பார்வோனுடைய கொடூரத்தைப்பார்க்கிலும் அதிகக் கொடூரமும், அவனுடைய ஆளோட்டிகளின் அடியைப்பார்க்கிலும் அதிகப் பொல்லாப்புமுள்ளது. குணப்படாத இருதயத்தில் சுவிசேஷம் முதலாவது தொனிக்கப்படும்போது, இஸ்ரவேலருக்கிருந்த வருத்தமும் இக்கட்டும் அங்கேயுண்டாகும். 10-23.—எல்லாருக்கும் சுயாதீனத்தைக்கொடுத்து நீதியான அரசாட்சி செலுத்தும் அங்கிலேய அரசாட்சியை, பார்வோனுடைய கொடூர அரசாட்சிக்கு ஒப்பிட்டுப்பார்த்து, மிகவும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கக்கடவோம். உலகமுடிவுபரியந்தம் இந்த நல்ல ராசாங்கம் நிலைக்கும்படி நாம் கருத்தாய்ச் செபம்செய்துவரவேண்டும்.

## ௬. அதிகாரம்.

### எகோவா மோசேயை தைரியப்படுத்தினது.

2, 3. மோசே இப்பொழுது மேற்கொள்ளக்கூடாத வருத்தத்தில் அகப்பட்டவன்போல் வெருவாய் அதைரியப்பட்டுப்போயிருக்கிறான். அவனுக்கு தைரியமும் நம்பிக்கையும் உண்டாகும்படி இப்படிப் பேசினார். அவனைப் பார்த்து 'மோசே, உன் பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்தவர் யார் என்று நினைத்துப்பார். அவர் அந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றப் போதுமான வல்லமையுள்ளவர் என்று நிச்சயித்துக்கொள்' என்று சொல்வதுபோல் இருக்கிறது. தேவன் முற்பிதாக்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களையருளி அவர்களைத் தேற்றுகிற தகப்பனாகத் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். இப்பொழுதோ தமது அற்புதச்செயலைக் காண்பித்து தமது மகத்துவத்தைக் காட்டச் சித்தமானார். 3: 14 வியா. பார்.

6. "ஓங்கிய கை." ஒருவன் தன் முழுப் பெலத்தையுஞ் செலுத்துகிறதற்கு அறிகுறியாம்.

12. "விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்." நான் வாசாலன் அல்லஎன்று அர்த்தம். "விருத்தசேதனமில்லாத" என்ற வார்த்தை: அடிக்கடி ஏலாத, தகுதியற்ற, திறமையில்லாத, என்ற அர்த்தத்தை உணர்த்துகிறது.

14—20 ஆதி. 49: 3—7. வியா. வாசி. லேவி: யோசேப்புக்கு மூத்தவனாயிருந்தும் யோசேப்பு மரித்தபின் 20 வருஷத்துக்கு அதிகமாய் உயிரோடிருந்திருக்கிறான்.

20. லேவி வயதுசென்றவனாயிருந்தகாலத்தில் யோகெபேத் பிறந்தாள் என்றும், அம்ராமைப்போல் சொற்ப வயதுள்ளவளாயிருந்தாள் என்றும் நினைக்கத்தக்கது.

23. "எலிசபாள்" என்பது எலிசபெத்து என்பதற்குச்சரி. நகசோன் யூதாக் கோத்திரத்தான். இப்படியாக இராச வம்சத்துக்கும் ஆசாரிய வம்சத்துக்கும் சம்பந்தமுண்டானது. இப்பொழுது மோசே தன் வம்சத்தைக்குறித்து ஒன்றும் சொல்லாமல், பின் சரித்திரத்துக்கு முகவுரையாக வேறே கிளையைக்குறித்துச் சொல்லுகிறான். ஆரோன் தேவனுடைய ஆசாரியனாயிருந்ததினாலே அவன் வகையறாவை விசேஷமாய்ச் சொல்லுகிறான்.

26, 27. மோசே எழுதின சரித்திரத்துக்கும் அவன் செய்த கிரியைகளுக்கும் இது நல்ல அத்தாட்சிகொடுக்கிறது. எஸ்றா, தானியேல், யோவான் அப்போஸ்தலன் ஆகிய இவர்களும் தங்களைப் படர்க்கையிடமாய்ப் பேசியிருக்கிறார்கள்.

28—30. மேற்சொல்லிய விபரங்களைக் காட்டியபின், தன் சரித்திரத் தொடர்ச்சியைப் பிடித்து எழுதுகிறான்.

படிப்பினை.

இஸ்ரவேலர் அடிமைத்தனத்தினால் தவித்து மனமடிவானதுபோல, விசுவாசியும் தன்னுடைய பழைய சுபாவத்துக்கும், புதுச் சுபாவத்துக்கும் இருக்கப்பட்ட போராட்டத்தில் தவித்து மனமடிவாகிறதுண்டு. ரோ. 7: 24 வாசி; விசுவாசி அகோர துன்பத்தில் அகப்பட்டு, எனக்கு விடுதலையில்லை என்று கதறும் சமயந்தான், பூரண விடுதலைசெய்ய தேவனுக்கு ஏற்ற சமயமாம். 8.



# THE SCRIPTURE GAZETTEER.

## வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.

(தொடர்ச்சி)

794. பேசோடு. பாபிலோனியாவின் ஒரு பாகமாயிருக்கலாம். எரே. 50: 21.
795. பேசேக். (மின்னல்.) (1) யூதாவில் அதோனிபேசேக்கின் ஊர். நியா. 1: 4, 5.
(2) யோர்தான் பள்ளத்தாக்கில் கானானியர் பட்டணம். 1 சாமு. 11: 8.
796. பேசேர். ரூபனில் அடைக்கலப்பட்டணம் மெராரியருடையது. உபா. 4: 42.
797. பேசோர். யூதாவின் தெற்கில் காசாவுக்குச் சமீபமாய், மெத்திதிராணியாக் கடலில் விழுகிற சிற்றாறு. சிக்லாகுக்குத் தெற்கே. 1 சா. 30: 9. 10: 21.
798. பேதேன். ஆசேரின் எல்லையில் பட்டணம். யோசு. 19: 25.
799. பேத்கமூல். (ஒட்டகவீடு.) மோவாபில் மிஷோர என்னும் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். எரே. 48: 23.
800. பேத்தாகு. சீரியாவிலுள்ள சோபாவில் பட்டணம். பல்மீராவுக்கும் அலப்போவுக்கும் நடுவே இருக்கலாம். 2 சாமு. 8: 8.
801. பேயேர். (கிணறு.) (1.) பென்யமீனில் பட்டணம். நியா. 9: 21.
(2.) மோவாபில். அர்னோன் நதிக்கப்பால் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 21: 16.
802. பேயோர். மோவாபில் ஒரு மலை. எண். 23: 28.
803. பேரேஸ்ஊசா. (ஊசாவின் பாகம்.) 2 சாமு. 6: 8.
804. பேரொத்தாய். (கிணறுகள்.) சீரியாவில தாவீது ஜெயித்த பட்டணமாயிருக்கலாம். 2 சாமு 8: 8.
805. பேரோத். பென்யமீனில் எருசலேமுக்கு 10 மைல் தூரத்தில் ஏவியர் அல்லது கிபியோனியருடைய 4 பட்டணங்களில் ஒன்று. யோசு. 18: 25.
806. பேரோத்-பெனெயாக்கான். (அன்பமுள்ள பிள்ளைகளின் பேரோத்.) வனாந்தரத்தில் ஒன்றுக்கொன்று சமீபமாயிருக்கிற அநேக கிணறுகளுக்குப் பொதுப்பெயர். உபா. 10: 6. 2 சாமு. 4: 2, 3, 5, 9.
807. பேலாசோவார். சோதோம் வெளியிலிருந்த 5 பட்டணங்களில் சிறியது. ஆதி. 14: 2, 8.
808. பைசோன். (பாதிசின் நதிகளில் ஒன்று.) ஆதி. 2: 11.
809. பொஸ்காத். யூதாவில். 2 இராசா 22: 1.
810. பொந்து. சின்ன ஆசியாவின் வடகிழக்கில் நாடு. அப். 18: 2.
811. போகன். (பெருவிரல்.) யூதாவுக்கும் பென்யமீனுக்கும் இடையில் ஒரு எல்லைக்கல். யோசு. 15: 6. 18: 17.
812. போகீம். (அழுகை.) யோர்தானுக்கு மேற்கே கில்காலிட்ட. நியா. 2: 1, 5.

813. பொசேஸ். பென்யமீனில் மிக்மாசுக்குப்போகிற வழியில் ஒரு பாறை. 1 சாமு. 14: 4.

814. பொஸ்ரு. (அன்பம்.) ஏதோமில் சவக்கடலுக்குத் தென்கிழக்கே. ஆதி. 36: 33.

815. பொராசீரா. "சீரா என்னும் அரவு." 2 சாமு. 3: 26.

816. மகாராத், யூதாவின் மலைநாட்டில் பட்டணம். யோசு. 15: 59.

817. மக்கேதா. யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 10: 10.

818. மக்கெதோனியா. (சிறந்தது, உயர்ந்தது) பூர்வீக கிரேக்கையின் வடபாகம். ஈஜியன் கடலுக்கு வடமேற்கே. அப். 16: 9. அப்போஸ்தலர் காலத்தில் ரோமர் அதிகாரத்துக்குள்ளிருந்தது.

819. மக்கெலோத். வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 25.

820. மக்தலா. (கோபுரம்.) மத். 15: 39. மக்தலேனா மரியாளின் ஊர். இதற்கு மேரி-மக்தலா என்றும் பேர். கெனேசரேத் கடலின் மேல்கரையில். யோசு. 19: 38 ல் சொல்லிய மிக்தாலேல் இதுதான்.

821. மக்பீஷ். ஒரு இடப்பேராயிருக்கலாம். எஸ்று. 2: 30.

822. மக்பேலா. எபிரோனுக்கருகில் சாராள் அடக்கம்பண்ணப்பட்ட கெபி. நாளதிலும் இதைக் காணலாம். ஆதி. 23: 17.

823. மக்பேனா யூதாவில் பட்டணம். 1 நாளா. 2: 49. காபோன் இதாயிருக்கலாம். யோசு. 15: 40.

824. மக்னாயீம். (பாளயங்கள்) யோர்தானுக்கப்பால் காத்தில் யாப்போக்குக்குத் தெற்கே. ஆதி. 32: 2. யோசு. 13: 26. 2 சாமு. 2: 8. 12: 29.

825. மக்னிதான். (பாளயமிறங்குதல்.) யூதாவில் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவே. நியா. 18: 12.

826. மஸ்ரேக்கா. ஏதோமில் ஒரு நாடு. ஆதி. 36: 36.

827. மத்மன்னா. தென் யூதாவில பட்டணம். யோசு. 15: 31.

828. மத்மேனா. எருசலேமுக்கு வடக்கே பென்யமீனில் பட்டணம். ஏசா. 10: 31.

829. மத்மேனே. மோவாபின் எல்லையில் பட்டணம். எரே. 48: 2.

830. மம்ரே. (கலசமுள்ள) எபிரோனில் மக்பேலாவுக்கு எதிரே ஒரு இடம். ஆதி. 23: 17.

831. மரேஷா. யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 44.

832. மனாகாத். பென்யமீனில் பட்டணம். 1 நாளா. 8: 6.

833. மனாசே. கோத்திரம். கீழ் மனாசேயானது: கீலேயாத், பாஷான், அர்கோப் இம்மூன்றையும அடக்கியது. யோசு. 17. 7.

834. மாகாத். எர்மோன் மலைபடிவாரத்தில பட்டணம. உபா. 3: 14.

835. மாசோகு. யாப்பேத்தின் குமாரனுடைய சந்ததியார். ஆதி. 10: 2. தற்கால சித்தியர் இவர்கள்தான்.

836. மாகோனியர், அலலது மெகூனிம். அரபியரில் ஒரு வகுப்பார். நியா. 10: 12.

837. மாகோன். (குடியிருப்பு) யூதாவுக்குத் தெற்கே. யூதாவனாந்தரத்துக்குச் சமீபத்தில பட்டணம. யோசு. 15: 55.

838. மாக்காதஸ். தாணில் பட்டணம். 1 இரா. 4: 9.

839. மாசா. (சோதனை) வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். யாத். 17: 7.



840. மாஸ். மெசொப்பொத்தாமியாவின் எல்லைகளில் சேமியரான சாதியார். ஆதி. 10: 23.

841. மாஷால. ஆசேரில் பட்டணம். 1 நாளா. 6: 74.

842. மாதோன். பலஸ்தீனாவுக்கு வடக்கே கானானியர் பட்டணம். யோசு. 11: 1.

843. மாத்தனா. சவக்கடலுக்குத் தென்கிழக்கே இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 21: 19.

844. மாரா. (கசப்பு) ஏத்தாம் வனாந்தரத்தில் கசப்புத் தண்ணீருள்ள ஒரு கிணறு. சிவந்த கடலுக்கு 3 நாள் பயணதூரம். யாத். 15: 23.

845. மாராலா. செபுலோன் எல்லையில் பட்டணம். யோசு. 19: 11.

846. மாரோத். யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். மீகா. 1: 12.

847. மிக்தாலேல். (திவ்விய துருக்கம்) நப்தலியில் அரணான பட்டணம். யோசு. 19: 38.

848. மிக்தால்காத். (காத்தின் துருக்கம்.) யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 37.

849. மிக்தோல். (துருக்கம்.) எகிப்தின் கீழ் எல்லையில் சிவந்த கடலையடுத்த பட்டணம். யாத். 14: 2. எசே. 30: 6.

850. மிக்மாஸ். (சேர்த்தல்.) பென்யமீனில் பட்டணம். ஒடுக்கமான ஒரு கணவாயிலிருக்கிறது. 1 சாமு. 13: 2. எஸ்று. 2: 27. நெகே. 7: 31.

851. மிக்மேத்தாத். எப்பிராயீம் மனாசே இந்தக் கோத்திரங்களின் எல்லையில், சீகேமுக்கு எதிரான பட்டணம். யோசு. 16: 6. 17: 7.

852. மிக்ரோன். பென்யமீனில் பட்டணம். சவுலின் ஊரான கிபியா கிட்ட. 1 சாமு. 14: 2. ஏசா. 10: 28.

853. மிஸ்காப். மோவாபில் பட்டணமாயிருக்கலாம். எரே. 48: 1.

854. மிஸ்பே, அல்லது மிஸ்பா. (காவல்கோபுரம்.) (1) கீலேயாத்தில் பட்டணம். ஆதி. 31: 49. நியா. 10: 17. 11: 29.

(2) மோவாபில் பட்டணம். கீர் இதாயிருக்கலாம். 1 சாமு. 22: 3.

(3) பாலஸ்தீனாவுக்கு வடக்கே ஒரு நாடு. யோசு. 11: 3.

(4) லீப்னாவுக்கும் அந்திலீபனோனுக்கும் நடுவேயுள்ள பள்ளத்தாக்கு. யோசு. 11: 8.

(5) யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15:38.

(6) பென்யமீனர் பட்டணம. யோசு. 18: 26.

855. மிஸ்ரபோதமாயீம். (நீரோட்டம்.) சீதோனுக்குச் சமீபத்தில் ஒரு பட்டணம், அல்லது நாடு. யோசு. 11: 8. 13: 6.

856. மிஷயால்; மிஷால்; அல்லது மாஷால். ஆசேரில் லேவியர் (சொசோனியர்) பட்டணம். யோசு. 19: 26.

857. மித்னியன். மீத்தேன் என்னும் அறியப்படாத ஒரு ஜாதியின் இடப்பேர். 1 நாளா. 11: 43.

858. மித்கா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 28.

859. மித்திலேனே. ஈஜியன் கடலில லெஸ்பாஸ்தீவுக்கு இராஜதானி. அப். 20: 14.

860. மித்தீன. யூதா வனாந்தரத்தில் ஒரு இடம். யோசு. 15: 61.

861. மிலேத்து. சின்ன ஆசியாவில் ஐயோனியாவின் தலைமுகப்

பட்டணம். எபேசுக்குத் தெற்கே 36 மயில் தூரம். அப். 20: 15. 2 தீமோ. 4: 20.

862. மில்லோ. (சுவர்.) எருசலேம் கோட்டையின் ஒரு பாகம். 2 சாமு. 5: 9.

(2) சீகேமியர் கோட்டை. நியா. 9: 6.

863. மின்னி. அர்மீனியாவில் நாடு. எரே. 51: 27.

864. மின்னித். அம்மோனியரின் எல்லையில் எஸ்போனுக்கும் இரப்பாத் அம்மோனுக்கும் நடுவில் பட்டணம். நியா. 11: 33. இங்கிருந்து தீருவின் சந்தைக்குக் கோதுமை கொண்டுவரப்பட்டது. எசே. 27: 17.

865. மீசியா. சின்னஆசியாவின் வடமேல் பக்கத்தில் நாடு. அப். 16 : 7.

866. மீதியான்; மீதியானர். கேத்தூராளாலே ஆபிரகாமிலிருந்துண்டான அரபியரில் ஒருவகுப்பார். இவர்கள் நாடு மோவாப் தேசத்திலிருந்து, எலாநிற்றிக் குடாக் கடலையடுத்து சீனாய்ப்பருவதம் வரையும் எட்டியிருந்தது. ஆதி. 25: 2.

867. மீரா. லிசியாவின் கரையில் பட்டணம். அப். 27: 5.

868. மூன்றுசத்திரம். அப்பியன் பெரும்பாதையில், ரோமைக்கும் புத்தேயோலிக்கும் இடையில். அப். 28: 15.

869. மெகிதோ. (சேனை.) இசக்காரில் கர்மேல் மலையடிவாரத்தில் பூர்வ கானானியர் பட்டணம். யோசு. 12: 21.

870. மெசொப்பொத்தாமியா. (இரண்டு நதிகளுக்கூடேயுள்ள நாடு.) ஐபிராத்துக்கும் திகிரீசுக்கும் இடையில். விசேஷமாய் வடமேல் பாகத்தைக் குறிக்கும். ஆதி. 24: 10.

871. மெயாரா. சீதோனுக்கு வடக்கே பட்டணம் அல்லது குகை யோசு. 13: 4.

872. மெரதாயீம். கல்தேயாவுக்குச் செய்யுளில் வழங்கிய பேரென்று தோன்றும். எரே. 50: 21.

873. மெலித்தா. தற்கால மால்த்தாதீவு. அப். 28: 1.

874. மெகோலாத். ஆபேல் மெகோலா பார்.

875. மெகோனா. யூதாவில். நெகே. 11: 28.

876. மேசா. அரபியரான யொக்தானியரின் எல்லைகளிலொன்று. ஆதி. 10: 30.

877. மேசேக்கு. (அடைக்கப்பட்டது, சூழப்பட்டது.) மோஸ்கி, மஸ்கோவியர் இந்த ஜாதிகளுக்கு மூற்பிதாக்களான யாப்பேத்தியர். ஆதி. 10: 2.

878. மேதியா. பெர்சியாவுக்கு வடமேற்கில் கஸ்பியன் கடலையடுத்த தேசம். 2 இரா. 17: 6.

879 மேதேபா. மோவாபில் எஸ்போனுக்குத் தென்கிழக்கே பட்டணம். எண். 21: 30.

880 மேத்தேக் அம்மா. பெலிஸ்தியர் பட்டணமாயிருக்கலாம். 2 சாமு. 8: 1.

881. மேபாகாத். ரூபனில் லேவியர் (மெராரியர்) பட்டணம். எஸ்போன் கிட்ட. யோசு. 13: 18.

882. மேயார்கோன். தாணில் பட்டணம். யோப்பா கிட்ட. யோசு. 19: 46.

883. மேரிபா. தேவகட்டளைப்படி மோசே ஓரேப் மலையை கோலினால் அடித்தபோது அதிலிருந்து வந்த நீரூற்று. யாத். 17: 7.

884. மேரோஸ். பலஸ்தீனாவுக்கு வடக்கில ஒரு இடம். நியா. 5: 23.



885. மேரோம். பலஸ்தீனாவின் வடக்கில் ஏரி. யோசு. 11: 5, 7.

886. மொலாதா. சிமியோனில் பட்டணம். யோசு. 15: 26.

887. மோசெரோத், அல்லது மேசெரா. ஆரோன் மரித்த இடம். எண். 33: 30. உபா. 10: 6.

888. மோத்சா. பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 26.

889. மோப். வடஎகிப்தன் பூர்வ இராஜதானி. ஓசி. 9: 6. பிரமாண்டமான பிரமிட் கோபுரங்கள் இதற்குச் சமீபத்திலிருக்கின்றன.

890. மோரியா. (தரிசனம்.) (1) சாலொமோன் தேவாலயம் கட்டின மலை. 2 நாளா. 3: 1.

(2) மோரியாதேசம். சீகேமுக்குச் சமீபத்தில். ஆதி. 22: 2.

891. மோரே. (1) சீகேமுக்குச் சமீபத்தில் கர்வாலிமரத் தோப்பு. ஆதி. 12: 6. உபா. 11: 30.

(2) யெஸ்ரயேலுக்குச் சமீபத்தில் ஒரு மேடு. நியா. 7: 1.

892. மோர்ஷேத்காத். யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். மீகா. 1: 14.

893. மோவாபு. மோவாபியர். சவக்கடலுக்குக் கிழக்கே குடியேறின லோத்தின் சந்ததியார். ஆதி. 19: 37.

894. யனோகா. எப்பிராயீமின் எல்லையில் பட்டணம். யோசு. 16: 6.

895. யப்பியா. செபுலோன் எல்லையில் பட்டணம். யோசு. 19: 12.

896. யப்லெத். எப்பிராயீமில் பட்டணம். யோசு. 16: 3.

897. யப்னே. மெத்தித்தெராணியாக்கடற்கரையில் பட்டணம். உசியா இதை பெலிஸ்தியரிடத்திலிருந்து பிடித்துக்கொண்டான். 2 நாளா. 26: 6.

---

## புதிய ஏற்பாட்டின் வியாக்கியானம்.

1280 பக்கங்கள் அடங்கிய இந்தப் பெரிய நூல் இப்போது முற்றுப்பெற்றிருக்கிறது. இந்துதேசத்தில் புதிய ஏற்பாடு முழுவதிற்கும் முதல்முதல் பிரசுரமான வியாக்கியான புத்தகம் இதுவே. இது தமிழ்ச் சபைக்கு மிகவும் உபயோகமுள்ள நூலாயிருக்கும் என்று நம்புதற்கு இடமுண்டு. கனம்: சத்தியநாத ஐயர் சன்மார்க்கச் சிறுபுத்தகச் சங்கத்தாரின் வியாக்கியான புத்தகத்தை ஆதாரமாகக்கொண்டு, இன்னும் பல முக்கியமான வியாக்கியான புத்தகங்களையும் பார்வையிட்டு யாவரும் சுலபமாய் அறிந்துகொள்ளத்தக்கதாக இதை எளிதான தமிழ்நடையில் அமைத்து முடித்திருக்கிறார். இவ்வாறு இது முடிவதற்கு ஏழுவருஷம் சென்றது.

இந்தப் புத்தகம் கூடியசீக்கிரத்தில் விலையாகும்பொருட்டு சன்மார்க்கப் புத்தகச்சங்கத்தார் இதற்குச் சொற்பவிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தோல் அரைபைண்ட் புத்தகம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்; முழுபைண்ட் அல்லது கட்டுக்கு ஒன்றரை ரூபாய். இது தேவையானவர்கள் செப்டெம்பர் மீ 30உக்குள்ளாக தங்களுக்கு இத்தனை புத்தகங்கள் வேண்டும் என்று எழுதித் தெரியப்படுத்திக்கொள்ளவேண்டும். செப்டெம்பர் மாதத்துக்குப் பின்பு இதன் விலை கட்டுக்குத்தக்கதாய் ஒன்றரை ரூபாயும் இரண்டு ரூபாயுமாய் அதிகப்பட்டிருக்கும்; ஆகையால் தேவையானவர்கள் உடனே எழுதிக்கொள்ளவேண்டியது.

நிரூபங்களும் வெளிப்படுத்தலும் அடங்கிய இரண்டாம் பங்கு அரைபைண்ட் 12 அணா; முழு பைண்ட் ரூ. 1-2-0. செப்டெம்பர் மாதத்துக்

குப்பின்பு இதன் விலை கட்டுக்குத்தக்கதாய் ஒரு ரூபாயும், ஒன்றரை
ரூபாயுமாயிருக்கும்
இப்புத்தகம் தேவையானவர்கள் சென்னபட்டணத்துச் சன்மார்க்கச்
சிறுபுத்தகச் சங்கத்தின் உதவி காரியதரிசியாகிய A. T. ஸ்காட் துரை
யவர்களுக்கு எழுதிக்கொள்ளவேண்டியது.

சென்னபட்டணம்<br>1875-ஆ<br>ஜூலை மீ 12உ.

இப்படிக்கு,<br>ஆர். சி. மக்டானல் ஐயர்.<br>காரியதரிசி.

---

## பந்தையப்பரீட்சை.

திருநெல்வேலி Church Mission Societyஐச்சேர்ந்த Pastor மார்களு
டைய வகுப்பைச்சேர்ந்தவர்கள் தங்கள் வேலைசுகடுத்த சில முக்கியமா
ன காரியங்களைக்குறித்து பிரசங்கம் எழுதுகிற அப்பியாசம் அவர்களு
க்கு மிகவும் பிரயோசனமாயிருக்குமென்று நினைத்து Dr. Sargent ஐய
ரவர்கள் Prize கொடுக்கும்படி தீர்மானித்து, தெரியப்படுத்துகிறதென்
னவெனில். முதல் Prize ரூ 30, இரண்டாவது Prize ரூ 25, மூன்று
வது Prize ரூ 20, நான்காவது Prize ரூ 15 கொடுக்கப்படும்.
இப்பொழுது எழுதவேண்டிய பொருள்: ஞானஸ்நானம்பெறவேண்
டிய ஆட்களை முன்னுக்குவைத்து புத்திசொல்லுகிற பாவனையாய்ப் பிர
சங்கம் எழுதவேண்டும். (வேதத்தில் ஒரு வாசகியத்தை எடுத்து, பகு
குபிரித்துப் பிரசங்கம் எழுதவேண்டுமென்பது நோக்கமல்ல.)
வெள்ளைத்தாளில் 25 பக்கத்துக்குள்ளாக எழுதவேண்டும். ஒவ்வொ
ரு பக்கத்திலே 30 வரிக்கதிகமாயுமிருக்ககூடாது. எழுத்து அதிகச்
சிறிதாயும் நெருக்கமாயும் இருக்ககூடாது.
நாளது ஆ டிசம்பர் மீ 15 தேதிக்குள்ளாக Dr. Sargent ஐயாவர்க
ளிடத்தில் அனுப்பவேணும். அவரவர் பிரசங்கத்தோடே முத்திரை
யிட்ட காகிதத்தில் பேர் காட்டவேணும்.

EDWARD SARGENT.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. மாட்சிமைதங்கிய மஹா ராஜாத்தியவர்கள் எழுதிய
பிரசங்கம் பார்லிமெண்டில் வாசிக்கப்பட்டது. அதில் புறத்தேச
துரைத்தனத்தார் யாவரோடும் சமாதானசம்பந்தமிருக்கிறதாகவும்,
ஐரோப்பாவில் சமாதானம் பங்கப்படாதென்று நம்புகிறதாகவும்.
சமீபகாலத்தில் ஜஞ்ஜிபார் சுல்த்தானோடே பண்ணின அனுபந்த உடன்
படிக்கையினால், ஆப்பிரிக்காவைச்சேர்ந்த கிழக்கரையில் நடக்கிற
அடிமைவியாபாரம் சீக்கிரம் அறறுப்போமென்று நம்பலாமென்றும்.
பர்மாவுக்கும் சீனாவுக்கும் நடுவே யூனான் என்னும் பிரதேசத்தில் மார்
கரி துரை கொலைசெய்யப்பட்டதைத்தொட்டு விசனப்படுகிறதாகவும்,



அந்தத் துர்க்கர்மம் செய்தவர்களைத் தண்டிக்கும்படி கூடிய அளவு எத்
தனிக்கிறதாகவும் நமக்கு அதீனமாகிய பிரதேசத்தின் துரைத்தனங்க
ளெல்லாம் அனுகூலமாயிருக்கின்றதாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.
தென் அமெரிக்காவில் பூகம்பம் உண்டாய் ஏழு நகரங்கள் நாசம
டைந்தது. ககுதா நகரம் பற்றற நாசமாய்ப்போயிறறு. ஐந்நூறு குடும்
பத்தார்மாத்திரம் தப்பிப் பிழைத்தனர். எரிமலை ஒன்று ஓயாமாரியாக
தீத்தழல் கக்கியது. அக்கினிப்பிரவாளம் விழுந்து மருந்துக்கடை ஒன்று
அடியோடே எரிந்தது. அவ்வெரிமலையில் தீ கக்கியபக்கம் ஸந்தியாகு
நகரத்திற்கு எதிர்முகம். அந்நகரம் பாதிக்கு அதிகம் சேதம். ஸான்
கைத்தானோ நகரமும் நசிந்தது. க்ராமலோத்தியில் தீச்சேதம் மிகுதி;
ஆர்பொலீடா-குகுதில்லோ, ஸான் கிறிஸ்தொபல் இவை முக்காலே
மூன்றுவீசம் அழிந்துபோயின.
இந்திய கஜெட்டில் புது இந்திய தீர்வைச் சட்டம் பிரசித்தப்படுத்த
ப்பட்டது. இறக்குமதிசெய்யப்படும் சாதாரண சரக்குகளுக்குத் தீர்
வை இதுவரையும்போல நூற்றுக்கு ஏழரை கொடாமல், நூற்றுக்கு
ஐந்துமாத்திரம் கொடுக்கவேண்டும். பருத்திப்பஞ்சு இதுவரையில் தீர்
வையில்லாமல் ரேவுவழியாய்ச் சென்றது. இனி அதற்கு நூற்றுக்கு ஐந்
து கொடுக்கவேண்டும். யுத்தாயுதங்களும் யுத்தமுஸ்தீபுகளும் இறக்கு
மதிசெய்ய நூற்றுக்குப் பத்து கொடுக்கவேண்டும். சாராயமும், உயர்
ந்த திராக்ஷாரசமும் இறக்குமதிசெய்ய முன்னிலும் கலன் ஒன்றுக்கு
ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும். அரிசி-நெல்-நீலம்-அரக்கு தீர்வையில்
லாமல் ஏற்றுமதிசெய்யலாகும். அவுரி டன் ஒன்றுக்கு மூன்று ரூபாய்
கொடுக்கவேண்டும். விதம்விதமான நெசவு புடைவைகளுக்குக் கொ
டுக்கவேண்டிய தீர்வையை மாற்றுவதனால் வர்த்தகருக்குச் சகாயம்
உண்டாகும். துரைத்தன வருமானத்திற்கு அதனால் 160 000-ரூ நஷ்
டம் உண்டாகும்.
மாட்சிமைதங்கிய அங்கிலேய இளவரசர் பம்பாயில் இறங்குவது
நொவெம்பர் மீ 8உ. அங்கே தங்குவது சரியாய்ப் பத்துத்தினம்.
அங்கிருந்து பேப்பூருக்குக் கடல்யாத்திரையாய் புறப்படுவது 19உ.
பேப்பூரில் இறங்கிக் கோயம்புத்தூர், சிரங்கபட்டினம், நீலகிரி இவை
களைப் பார்வையிட்டு பங்களூரிற் சேர்வது டிஸெம்பர் மீ 2உ. செ
ன்னையில் வந்திறங்குவது 6உ. சென்னைக்கு இளவரசர் சமுகத்தின்
கௌரவம் அமைவது ஆக இருதினம். 8உ அங்கிருந்து தூற்றுக்குடிக்கு
எழுந்தருளி, 10உ மீளவும் கலம் ஏறிக் கொழும்புக்குப்போவார். மறு
நாள் அந்நகர்சேர்வார். ஆதியிற் குறித்தபடி அரசர் கல்கத்தா ராஜ
தானியில் இறங்குவது 23உ. மேல் மாகாணங்களுக்குப் பிரயாணப்படு
வது ஜனுவரி மீ 3உ. செல்லுமார்க்கில் இறங்கும் ஸ்தலங்கள் காசி,
லக்ஷ்மணபுரி, கான்புரி. டில்லிப்பாளையத்திற் சேர்வது 11உக்கும்
16உக்கும் மத்தியில். இன்ன தினமென்று வரையறை இல்லை. அங்கி
ருந்து லாகூருக்கும், அமிர்தசாரத்திற்கும் சென்று ஆக்கிராவிற்குத்
திரும்புவது பெப்ருவரி மீ 6உயோ 7உயோ. திராய்வனத்தில் வேட்
டமசெய்யும் காலக்ஷபம் தொடங்குவது 14உ மட்டில். இவ்விநோதத்
திற் கழியும் காலம் சுமார் மூன்று வாரம். ஷை வனத்தினின்று அரசர்
பம்பாய்க்குத் திரும்பி மார்ச்சு மாச மத்திக்குச் சற்றுமுந்த சீமைக்
குப் பிரயாணப்படுவார். கல்கத்தாவில் இளவரசர் சேருகிறவரையில்
மேற்குறித்த காலக்கிரமம் தவறாது. அதன்மேல் காலநியதி தப்பினு
லும் தப்பும். இந்தக் கிரமம் முக்கியமாய்ச் சீமையில் வரையறுக்கப்
பட்டதாம்.

---

செப்தெம்பர்மீ நாள் 30. ஆவணிமீ 18உ முதல், புரட்டாசிமீ 16உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | ௧௮ | உங்கள் அக்கிரமங்களைச் சுமப்பீர்கள். எண். 14. 34. |
| வி | 2 | ௧௯ | நீங்கள் கர்த்தரின் கட்டளையை மீறுகிறதென்ன ? 41. |
| வெ | 3 | ௨௦ | நானே உங்கள் தேவனாகிய கர்த்தர். 15: 41. |
| ச | 4 | ௨௧ | கர்த்தருக்கு விரோதமாகக் கூட்டங் கூடினீர்கள். 16: 11. |
| ஞா | 5 | ௨௨ | நான் துன்மார்க்கனாயிருந்தால் எனக்கு ஐயோ ! யோபு 10: 15. |
| தி | 6 | ௨௩ | நீர் என் சிறுமையைப் பார்த்தருளும். 15. |
| செ | 7 | ௨௪ | என் நாட்கள் கொஞ்சமல்லவோ ? 20. |
| பு | 8 | ௨௫ | சர்வவல்லவரோடே நான் பேசினால் நல்லது. 13: 3. |
| வி | 9 | ௨௬ | உமது அடியானுக்கு அனுகூலமாயிரும். சங். 119: 17. |
| வெ | 10 | ௨௭ | உமது கற்பனைகளை எனக்கு மறையாதேயும். 19. |
| ச | 11 | ௨௮ | உம்முடைய சாட்சிகள் எனக்கு இன்பமாயிருக்கிறது. 24. |
| ஞா | 12 | ௨௯ | என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது. 25. |
| தி | 13 | ௩௦ | உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும். 25. |
| செ | 14 | ௩௧ | உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். 26. |
| பு | 15 | ௧ | பொய்வழியை என்னை விட்டகற்றும். 29. |
| வி | 16 | ௨ | உன் செய்கைகளைக் கர்த்தருக்கொப்புவி. நீதி. 16: 3. |
| வெ | 17 | ௩ | விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை. 18. |
| ச | 18 | ௪ | கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். 20 |
| ஞா | 19 | ௫ | இருதயங்களைச் சோதிக்கிறவர் கர்த்தர். 17: 3. |
| தி | 20 | ௬ | குற்றத்தை மூடுகிறவன் சிநேகத்தை நாடுகிறான். 9. |
| செ | 21 | ௭ | கர்த்தராகிய நான் இரட்சகர். ஏசாயா 60: 16. |
| பு | 22 | ௮ | உன் தேவனே உனக்கு மகிமையாயிருப்பார். 19. |
| வி | 23 | ௯ | கர்த்தரே உனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார். 20. |
| வெ | 24 | ௧௦ | எழுந்திருந்து, உன் தேவனை நோக்கி வேண்டிக்கொள். யோனா 1: 6. |
| ச | 25 | ௧௧ | கர்த்தாவே, என் பிராணனை அழிவுக்குத் தப்புவித்தீர். 2: 6. |
| ஞா | 26 | ௧௨ | என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள். யோவான் 15: 9. |
| தி | 27 | ௧௩ | நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டும். 12. |
| செ | 28 | ௧௪ | நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். 1 கொரி. 3: 23. |
| பு | 29 | ௧௫ | நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியகாரர். 4: 10. |
| வி | 30 | ௧௬ | நீங்கள் மேன்மைபாராட்டுகிறது நல்லதல்ல. 5: 6. |

## விசேஷித்த நாட்கள்.

5. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், பதினைந்தாம் ஞாயிறு.
12. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், பதினாறாம் ஞாயிறு.
15. பௌர்ணமி.
19. திரித்துவத்திருநாளுக்குப் பின்வரும், பதினேழாம் ஞாயிறு.
26. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பதினெட்டாம் ஞாயிறு.
29. அமாவாசை.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. October. No. 10.

**Contents:**


Bible Sketches and their Teachings. ... ... ... 182
The Life of St Ambrose, Bishop of Hippo. ... ... 185
Notes on Exodus. ... ... ... ... ... ... 187
The Scripture Gazetteer. ... ... ... ... ... 191
Bishop's Biblical Prize Examination. ... ... ... 196
Summary of News. ... ... ... ... ... ... 199


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௧௮௨
அம்புரோஸ் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... ௧௮௫
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... ௧௮௭
வேத இடப்பேர் அகராதி. ... ... ... ... ௧௯௧
அத்தியட்சர் பந்தயப் பரீட்சை. ... ... ... ௧௯௬
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௧௯௯



**Palamcottah:**

**PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,**
BY L. DEVANAYAGAM PILLAY.

**1875.**

# நற்போதகம்.

௰. அக்டோபர்௴. ௲௮௭௫௵.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### கர்மேல் பர்வதத்தின் மீது நடந்த பரீட்சை.

I இராசாக்கள் 18ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

என்றாலும் சிலவேளைகளில் இது அவர்கள் மனதுக்கு மகா வருத்த
மாய்த்தானிருந்தது. எலியாவுக்கும் அப்படியிருக்கவில்லையா? கர்மேல்
பர்வதத்தின்மேல் சர்வாயுதந் தரித்த வீரனைப்போல தேவனுடைய சத்
துருக்களோடு போர்செய்ய ஆயத்தப்பட்டவனாக பராக்கிரமமாயும்
மகத்துவமாயும் விளங்கினானே, அப்பொழுது ஒருவேளை அவனுக்கு
வருத்தந் தோன்றியிருக்கமாட்டாது. ஆகிலும் அப்புறம் அவன் ஆயா
சப்படவில்லையோ? இந்தப் பரீட்சை முடிந்தபின், அடுத்த அதிகாரத்
தில் நாம் வாசிக்கிற பிரகாரம், "அவன் வனாந்தரத்தில் ஒருநாள் பிர
யாணம்போய் ஒரு சூரைச்செடியின் கீழ் உளுக்கார்ந்து, தான் சாக
வேண்டுமென்று கேட்டுக்கொண்டானே." அவன் ஒண்டியாய்ச் சீவிக்
கிறதைப் பார்க்கச் சாகிறது தாவிலையென்று விரும்பினபொழுது,
அவன் மனதில் எவ்வளவு கசப்பு இருந்திருக்கும்.

எலியாவைக்குறித்து நாம் கவனிக்கவேண்டிய மூன்றாவது காரியம்
என்னவென்றால், இப்படியெல்லாமிருந்தும் அவன் நம்பிக்கையோடு
அமரிக்கையாயிருந்தான் என்பதுதான்.

தான் நம்பியிருந்த தேவன் எப்படிப்பட்டவரென்று அவன் அறிந்
தான். ஒண்டியாயிருந்ததினாலே அவன் துக்கப்பட்டபோதிலும், அவன்
தன் விசுவாசத்தைக் கைநெகிழவில்லை. ஏராளமான அத்தனை சத்துருக்
களுக்கு முன்பாகவும் கீழ்ப்படியாமையுள்ள உணர்வற்ற அச்சனங்
களுக்கு முன்பாகவும் அவன் நின்றுகொண்டு, "அக்கினியினால் உத்த
ரவு அருளும் தெய்வமே தெய்வம்" என்று உரத்த சப்தமாய்ச் சொன்
னான். அவன் அமைதலாய்ப் பலிப்பீடத்தைச் செப்பனிடுகிறதையும்,
தண்ணீர் பீடத்தைச் சுற்றியோடி பள்ளமெல்லாம் நிரம்பும்வரையும்
பலியின்மேல் மேலும்மேலும் தண்ணீர் விடச்சொல்லுகிறதையும் பா
ருங்கள். நெருப்பு எவ்வளவாவது பற்றமாட்டாதென்று சனங்களெல்
லாருக்கும் பரிஷ்காரமாய்த் தோன்றியிருக்குமே. குறித்த நேரத்தில்
அக்கினி வானத்திலிருந்து இறங்குமென்றும் அப்புறம் எதுவும் அதைத்
தடுக்கவாவது அவிக்கவாவது மாட்டாதென்றும் அவன் அறிந்திருந்
தான். எலியாவுக்கு இருந்த வல்லமை என்ன வல்லமை? செபத்தின்
வல்லமைதான். அவன் தேவனுடைய பலத்தை நன்றாய்ப் பற்றிப் பிடித்



துக்கொண்டான். அது அவன் பலவீனத்துக்கெல்லாம் போதுமானதும்
மிஞ்சினதுமாயிருந்தது.
பிரியமானவர்களே, தேவன் உங்கள் பட்சத்திலிருப்பாராகில், யார்
உங்களுக்கு விரோதமாயிருந்தாலும் பெரிய காரியமல்ல என்பதை எப்
பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஒண்டியாயிருக்கிற
து ஓரோர்வேளை சஞ்சலமாய்த்தானிருக்கும். என்றாலும், "நான் ஒண்
டியாயிரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" என்று இயேசு சொன்
னதுபோல நீங்களும் சொல்லக்கூடியவர்களாவீர்கள். செபத்தின் வல்
லமையினாலே எலியா அற்புதஞ்செய்ததுபோல நீங்கள் அற்புதஞ்செய்
ய நேரிடாது. என்றாலும் அவனைப்போல தேவனை நோக்கி நீங்களும்
செபிக்கலாம். அதினால் உங்களுக்கு நல்நம்பிக்கையும் அமரிக்கையுமுண்
டாகும்.
இரண்டாவது படத்தை இப்பொழுது கவனிப்போம். அந்தச் சனங்
களைப்பற்றிக் கவனிக்கத்தக்க விசேஷங்கள் இரண்டுதான்.
முதலாவது. தேவனை ஆராதிக்கிறவர்கள். இவர்கள் தங்கள் விசுவா
சத்தை அறிக்கையிடப் பயந்துகொண்டிருக்கிறார்கள்.
இரண்டாவது. பாகாலை ஆராதிக்கிறவர்கள். இவர்கள் தங்கள் விக்
கிரகபக்தியை நம்ப பயந்துகொண்டிருக்கிறார்கள்.
இவ்விரண்டு கூட்டமும் ஒன்றுக்கொன்று வித்தியாசமாயுமிருக்கிற
து, ஒன்றுபோலுமிருக்கிறது. சிலர் சத்தியத்தைப் பிடித்து நிற்கப் பிர
யாசப்படுகிறார்கள். மற்றவர்கள் பொய்யைச் சார்ந்து நிற்க விரும்பு
கிறார்கள். எல்லாரும் ஒன்றுபோல பயங்காலிகளாயிருக்கிறார்கள். எலி
யா சொல்லுகிறதைக் கேளுங்கள். "எந்தமட்டும் இரண்டு நினைவுக
ளால் குந்திக்குந்தி நடப்பீர்கள். கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்
பற்றுங்கள். பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்
றான். அதற்கு மாறுத்தரமாக சனம் ஒன்றுஞ் சொல்லவில்லை." தேவ
னை ஆராதிக்கிறவர்கள் ஆகாப் எசபேல் என்பவர்களுக்கும் பூசாசாரி
களுக்கும் பயந்து ஒன்றுஞ் சொல்லாமலிருந்தார்கள். பாகாலை வணங்
குகிறவர்களோ தேவனுக்குப் பயந்ததினாலும் எலியாவின் வார்த்தைக
ளினால் வெட்கப்பட்டதினாலும் பேசாமல் நின்றார்கள். இவர்களைப்
பார்த்துப் பரிதபிப்பீர்களே. நல்லது இக்காலத்தில் நமக்குள்ளும் அப்
படிப்பட்ட காரியமில்லையோ?
ஒரு சிறு பையனிருக்கிறான். அவன் பக்தியாய் நடக்கத் தீர்மானித்
திருக்கிறான். தேவனிடத்தில் தன் பாவங்களை மன்னிக்கும்படி பிரார்த்
திக்கிறான். நாடோறும் கிறிஸ்துவினிமித்தம் செம்மையான பாதையில்
நடக்க நிர்ணயம்பண்ணுகிறான். என்றாலும் இதையெல்லாம் தனக்குள்
அடக்கிக்கொள்ளுகிறான். ஒருவராலும் அறியப்படாத அந்தரங்கமாயி
ருக்கவேண்டுமென்று விரும்புகிறான். அவனோடுகூட படிக்கிற ஒரு பை
யன் ஒருவிசை அவன் வேதாகமம் வாசிக்கிறதைக் கண்டுகொண்டு, கெ
கேகேயென்று சிரித்தான். உடனே அந்த ஏழைப்பையன் வெட்கப்
பட்டு வேதாகமத்தை மூடித் தூரத்திலே வைத்துவிட்டான். அவன்
முழங்காலூன்றிச் செபம்பண்ணுகிறதை மற்றப் பையன்கள் கண்டிருப்
பார்களானாலோ? உடனே பாதாளத்திலிறங்கி விடவும் விரும்புவானெ
ன்பதற்குச் சந்தேகமில்லை.
இந்த ஏழைப்பிள்ளை ஏன் பயப்படுகிறது என்று சொல்வது ஒருவே
ளை பிரயாசமாயிருக்கும். நான் அறிந்த இன்னொரு பையன் ஏன் வெட்
கப்படுகிறானென்று சொல்வது அவ்வளவு பிரயாசமல்ல. அவன் மகா
பொல்லாத பையன். அதை மறைக்கிறதற்கு என்ன உபாயமெல்லாம்

பண்ணுகிறான். அவனுடைய நடபடிக்கைகளைக்குறித்து அடிக்கடி அவனிடத்திற் பேசியிருக்கிறேன். பேசும்போதெல்லாம், அவன் தலையைத் தாழ்த்தி முகத்தைத் திருப்பிக்கொண்டு, இஸ்ரவேல் சனங்களைப்போல ஒரு வார்த்தையும் பேசாமல் நிற்கிறான். "நான் தேவனை மறந்துவிடுகிறேன், ஒருக்காலும் செபம்பண்ணுகிறதில்லை, எப்பொழுதும் ஓய்வுநாளை மீறி நடக்கிறேன், அடிக்கடி பொய்பேசுகிறேன், ஒரோர் சமயத்தில் ஆணையுமிடுகிறேன், வேளாவேளை களவுஞ்செய்கிறேன்" என்று அவன் ஒருபொழுதாவது தைரியமாய்ச் சொல்லவேமாட்டான். இது காரியங்களையெல்லாம் நடப்பிப்பான். அப்படி நடப்பித்தேனென்று பகிரங்கமாய்ச் சொல்ல அவனுக்குத் தைரியமில்லை.

இந்தச் சரித்திரத்தில் விளங்கியதுபோல இவ்விடத்திலும் இரண்டு வகையான பயம் காணப்படுகிறதே. அவ்விரு பயங்களையும் இப்பொழுது நாம் பார்க்கக்கூடுமாகில், தீர்க்கதரிசி அந்தச் சனங்களைப் பார்த்துச் சொன்னதுபோல அவர்களைப் பார்த்தும் சொல்லத்தக்கதுதான். "தேவனை ஆராதிக்கிறது சரியென்றால், அப்படிச் செய்யுங்கள். மற்றவர்களுக்குமுன் அதைக்குறித்து வெட்கப்படவேண்டாம். பொய்சொல்லுகிறதும் திருடுகிறதும் ஓய்வுநாளைக் கைக்கொள்ளாமற் போகிறதும் சரியென்றாலோ, அதுகளையும் மறைக்கவேண்டாம். அப்பேர்ப்பட்ட பாவங்கள் சரியாயிருக்கமாட்டாதே. மற்றவர்கள் கண்டுகொள்வார்களோவென்று நீங்கள் பயப்படத்தக்க ஒரு செய்கையைக்குறித்து வெட்கப்படாமலிருப்பது என்ன புண்ணியம்"?

ஆகையால், இந்தப் படிப்பினையை மனதிற் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள். "நீங்கள் பிறருக்குமுன் விளங்குவதுபோல, உண்மையாயும் தைரியமாயும் நடக்கப் பார்த்துக்கொள்ளுங்கள்." இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடவாமல், உங்கள் மனச்சாட்சிக்கேற்க நடவுங்கள். சரியென்று நீங்கள் நிச்சயித்திருக்கிற காரியத்தைச் செய்யாதபடியெந்த முகாந்தரத்தினாலும் தடைப்படாதிருங்கள்.

III. பூசாசாரிகளைக் காட்டிய மூன்றாம் படத்தை இப்பொழுது கவனிப்போமாக. இந்த மனுஷர் பரிதபிக்கப்படத்தக்கவர்கள். அவர்கள் இஸ்ரவேலரல்ல. எசபேல் தன் ஜனனதேசத்திலிருந்து கொண்டுவந்தவர்களாயிருக்கவேண்டும். ஆகையால் அவர்கள் சத்தியத்தை அறியாதவர்களாயிருந்திருக்கலாம். எலியாவின் போதனையை அவர்கள் கேட்டாலும் இஸ்ரவேலின் தேவனைக்குறித்து விசாரித்தாலும் சத்தியத்தை அறிந்துகொள்ள இடமிருந்தது. ஆகவே அவர்களுடைய அறிவீனமும் பாவந்தான். என்றாலும் அவர்களுடைய பாவம் இஸ்ரவேலர் பாகாலை வணங்கினதுக்கொப்பான கொடிய பாவமல்ல. அவர்களுடைய உண்மையும் ஊக்கமும் விசேஷமாய் மூன்றுகாரியங்களால் வெளியாகிறது.

முதலாவது. அவர்களுடைய நீடித்த முயற்சிகள். காலைமுதல் மத்தியானம்வரையும், அப்புறம் மத்தியானமுதல் சாயங்காலம்வரையும், வானத்திலிருந்து அக்கினி வருவிக்கும்படி இடைவிடாமற் முயற்சியாயிருந்தார்களே. ஆறுமணிநேரம் அரும்பிரயாசமெடுத்தார்கள். தங்கள் தேவர்களின்பேரில் அவர்களுக்கு நம்பிக்கையில்லாதிருக்குமாகில், அவ்வளவுநேரம் வருத்தப்படுவார்களா?

இரண்டாவது. அவர்கள் தங்களையே வருத்திக்கொண்ட வேதனைகள். "அவர்கள் தங்கள் வழக்கத்தின்படியே இரத்தம் தங்கள்மேல் வடியுமட்டும் கத்திகளாலும் ஈட்டிகளாலும் தங்களைக் கீறிக்கொண்டார்கள்." தாங்கள் வணங்கின தெய்வம் இரத்தப்பிரியனென்றும்,



தங்கள் தேகங்களில் இரத்தம் வடிகிறதைக்கண்டால்தான் தங்கள் பேரில் பிரியப்படுவானென்றும் நிதானித்தார்கள்போலும்.

---

## St. Ambrose, Bishop of Milan.

## அம்புரோஸ் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

அப்பால் செர்மியம் என்ற நகரத்துக்கு ஒரு கண்காணியார் வேண்டியிருந்தபடியால், இராணி ஆரியக் கண்காணி ஒருவனை அதற்கு நியமிக்கும்படி பார்த்தாள். அம்புரோஸ் என்பவருக்கு அதுகாரியம் தெரிந்தமாத்திரத்தில் அதைத் தடுக்கும்படி அவ்விடத்துக்குப் புறப்பட்டுப்போனார். அங்கே அவர் கண்காணியாருக்குரிய ஆசனத்திலிருக்கையில் ஆரிய வகுப்பைச் சேர்ந்த சில பெண்கள் அவரைக் கொலைசெய்துபோடவேண்டுமென்ற நோக்கமாய்க் கூடி நின்றுகொண்டு, ஒருத்தி அவருடைய வஸ்திரங்களைப் பிடித்துக் கீழே இழுத்தாள். அவளை அவர் நோக்கி, "இந்த மகா மேன்மையான உத்தியோகத்துக்கு நான் பாத்திரனல்லாதிருந்தும், அற்பமான கண்காணியின்பேரிலும் கொடுமையான கைகளைப் போடுகிறது உனக்குச் சரியன்று. ஆகையால் தேவநியாயத்தீர்ப்பாய் உனக்குக் கெடுதிவருமென்று நீ பயப்படவேண்டியது" என்றார். மறுநாளிலே அந்த வாலிபப்பெண் மரித்துப் பிரேதமானாள். அவளை அடக்கஞ்செய்வதற்கு அம்புரோஸ் கண்காணியாரும் கூடப்போனாராம். அதன்பேரில் ஆரியர் தாங்கள் கொண்டிருந்த நோக்கத்தை விட்டுவிட்டதினாலே, அனிமோனியு என்பவனை அவ்விடத்துக்குக் கண்காணியாக நியமித்துவிட்டு அம்புரோஸ் மிலான் நகரத்துக்குத் திரும்பினார். யூஸ்தீனாள் என்ற அந்த இராணியோ அவருக்குப் பகை சாதிப்பதில் விடாமுயற்சியாயிருந்தாள். எவ்விடத்திலும் அவருக்குக் கண்ணிகளை வைத்து அவரையெடுபடுத்தும்படியாக சிலருக்குப் பணங்கொடுக்கவும் சிலருக்கு உத்தியோகங்கள் கொடுக்கவும் வாக்குச்சொல்லியிருந்தாள். அந்தப்படியே ஒருவன் கோவிலுக்கு அருகாண்மையில் ஒரு வீடு வாடகைக்குத் திட்டம்பண்ணி, அவரைப் பலவந்தமாய்ப் பிடித்துக்கொண்டுபோய்விட இரகசியத்தில் ஓர் இரதம்கொண்டுபோய் வைத்திருந்தான். ஆயினும் அவன் கொண்டிருந்த நோக்கம் தவறினதுமல்லாமல் மறு வருஷம் அந்தநாளிலே அந்த மனிதனே மேற்படி ரதத்திலேற்றி பிறதேசத்துக்கு அனுப்பப்பட்டுப் போனான்.

கி. பி. 384ம்-௵ போல அகுஸ்தீன் மிலான் நகரத்துக்குப் போயிருக்கையில் அம்புரோஸ் என்பவருடைய பிரசங்கங்களைக் கேட்டு நல்லெழுப்புதலடைந்து, தமது தீயவொழுக்கத்தை வெறுத்துவிட்டு, இரண்டு வருஷத்துக்குப் பின்பு அவரால் ஞானஸ்நானம்பெற்றுக்கொண்டார். இராணி பிறகும் ஆரியருக்காகத் தன் குமாரனிடத்தில் பரிந்துபேசி, அவர்கள் தடையும் இடையூறுமின்றி பகிரங்கமாய்த் தேவாராதனை நடப்பித்துவரலாமென்றும், யாராவது அவர்களுக்கு இடையூறுசெய்கிறதுண்டானால் அப்பேர்ப்பட்டவர்கள் கலகக்காரர்போலும் சபையின் சமாதானத்தைக் குலைக்கிறவர்கள்போலும் தண்டிக்கப்படு

வார்களென்றும் ஒரு சட்டம் பிறப்பித்தார்கள். சட்டங்களை எழுதிப்
பிரசுரஞ்செய்யும் அதிகாரியானவன் சத்தியத்தைக்குறித்து வைராக்
கியனாயிருந்தபடியால், இந்தச் சட்டத்தை எழுதும்படி உத்தரவு வந்த
பொழுது எழுதமாட்டேனென்று மறுத்துவிட்டான். ஜூஸ்தீனாளோ
அவனுக்கு உயர்ந்த உத்தியோகங்கொடுப்பேனென்று வாக்குறுதிசெய்
து அவனை நயப்படுத்தப்பார்த்தும், அவன் பரிச்சேதம் சம்மதிக்கா
மல், அநீதியின் கூலியாக இந்த உத்தியோகமானாலும் வேறெந்த உத்
தியோகமானாலும் எனக்கு வேண்டியதேயில்லையென்று சொல்லி, தன்
உத்தியோக சின்னமாகிய கச்சையை அவிழ்த்து அவள் பாதத்தண்டை
யெறிந்துவிட்டான். அப்புறம் அவள் வேறொருவனைக்கொண்டு அந்
தச் சட்டத்தை எழுதிப் பிரசுரஞ்செய்வித்து, தான் கொண்டிருந்த
நோக்கங்களை நிறைவேற்ற எத்தனித்தாள். அம்புரோஸ் கண்காணி
யார் இராச சமுகத்துக்கு அழைப்பிக்கப்பட்டு வரவே, இராயன் தன்
பரிவாரத்தோடிருந்துகொண்டு அம்புரோஸ் இராச சட்டத்துக்குக் கீழ
டங்கித் தன் ஆலயத்தை ஒப்புக்கொடுத்துவிடும்படி கற்பித்தான். கண்
காணியாரோ அப்படி விடமாட்டேனென்று மறுக்க, அது காரியத்தைப
பற்றி நியாயம்பேசி வாக்குவாதம்பண்ணிக்கொண்டிருக்குஞ் சமையத்
தில் சனங்கள் ஏராளமாய்க் கூடிவந்துவிட்டபடியால், துரைத்தனத்
தார் கலகம் நேரிடுமோவென்று அஞ்சி போர்ச்சேவகரைக்கொண்டு
அவர்களைத் துரத்தப் பார்த்தார்கள். சனங்களோ நாங்களெல்லாரும்
இவ்விடத்திலேயே இரத்தச்சாட்சிகளாய் மரிக்க ஆயத்தமாயிருக்கிறோ
மென்று ஏகோபித்துச் சொல்லவே, துரைத்தனத்தார் திடுக்கிட்டு, தே
வாலயம் அம்புரோஸ் வசத்திலேயேயிருக்குமென்று சனங்களுக்கு
வாக்குறுதிசொல்லி அவர்களை அமர்த்தும்படி கண்காணியாரைக் கேட்
டுக்கொண்டார்கள். அவரும் அந்தப்படியே செய்ய, சனங்கள் உடனே
தங்கள் தங்களிடங்களுக்குத் திரும்பிவிட்டார்கள். அதன்பேரில் அந்
தக் கலகத்துக்குக் கண்காணியாரே காரணரென்று அவருடைய சத்து
ருக்கள் அவர்பேரில் குற்றம் பாரித்தார்கள்.

ஜூஸ்தீனாள் மூலமாய் ஆரியருக்குக் கிடைத்த ஆதரவினால் ஆரியரில்
அநேகர் மிலான் நகரத்தில் ஸ்தாபகமாகி, தங்களுக்கும் ஒரு கண்கா
ணியை ஏற்படுத்திக்கொண்டார்கள். இந்த ஆரியக் கண்காணியானவன்
தன் பட்சத்திற்கு அனுகூலமாய்த் தீர்ப்புச்சொல்லத்தக்க சிலரை இரக
சியத்தில் மத்தியஸ்தராகத் தெரிந்துகொண்டு இராயனுக்கு முன்பாகத்
தன்னோடு தர்க்கித்து வாக்குவாதம்பண்ணும்படி அம்புரோஸ் என்பவ
ரை அழைத்தான். அம்புரோஸ் அதற்குச் சம்மதியாததினாலே, அவன்
வீம்புபேசிக்கொண்டு, அம்புரோஸ் என்பவரை பலவந்தமாய் வருவித்து
தன்னோடு தர்க்கிக்கச்செய்யவேண்டுமென்று இராயனிடத்தில் மனுப்
பண்ணிக்கொண்டான். அதன்பேரில் இராயன் ஒருநாளைக்குறித்துக்
கொண்டு அந்நாளில் அம்புரோஸ் வரவேண்டுமென்று கற்பிக்கவே,
அவர் ஒரு ஆட்சேபம் எழுதி, நான் நிசேயா சங்கத்தாரின் விசுவாசப்
பிரமாணத்தையே உறுதியாய்ப் பிடித்திருக்கிறேன், வேதனையினாலாகி
லும் மரணத்தினாலாகிலும் நான் அதைவிட்டுப் பின்வாங்குவதில்லை.
ஆகையினாலே என்னைச் சங்கத்துக்கு வரவேண்டுமென்று விரும்பப்ப
டாதென்று பிரார்த்தித்து முடித்து அனுப்பிவிட்டார்.

அம்புரோஸ் என்பவருடைய மனவுறுதியைப் பார்த்து சங்கத்தார்
நியாயமான வழியாய்த் தங்கள் நோக்கம் நிறைவேறமாட்டாதென்று
உணர்ந்துகொண்டார்கள். அதன்பேரில் ஆரியக் கண்காணியானவன்
போர்ச்சேவகரைக்கொண்டு பாசிலிக்கா என்னப்பட்ட ஒரு ஆலயத்



தை தன் வசத்தில் பிடுங்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டான்.
அந்தப்பிரகாரமே சில அதிகாரிகள் போய் குறித்த ஆலயத்தையும்
அதற்குரிய தட்டுமுட்டுகளையும் ஒப்புக்கொடுத்துவிடும்படி இராயனு
டைய நாமத்தில் அம்புரோஸ் கண்காணியாருக்குக் கற்பிக்க, அவர்
அவர்களை நோக்கி, "என்னுடைய சொத்தை இராயன் கேட்டால்
அதைத் தடையின்றிக் கொடுத்துவிடுவேன். என் வசத்தில் ஒப்புவிக்கப்
பட்டிருக்கிற தேவனுடைய ஆலயத்தையோ நான் ஒருக்காலும் ஒப்புக்
கொடுக்கக் கூடாது. இதுகாரியத்தில் என் சீவனும் எனக்கு அருமை
யல்ல. தேவன் என்னைப் பராமரித்துக்கொள்ளுவார்" என்று சொல்லி
மறுத்துவிட்டார். அன்று தேவாராதனையில் வாசிக்கும்படி குறிக்கப்
பட்ட பாடங்களிலொன்று ஆகாப் இராசா நாபோத்தின் திராட்சத்
தோட்டத்தை பலாத்காரமாய்க் கேட்ட சரித்திரம். அந்தச் சரித்திரத்
தினால் கண்காணியார் மிகுந்த ஏவுதலும் தைரியமுமடைந்து, தம்மிடத்
திற்கு அனுப்பப்பட்டு வந்திருந்த உத்தியோகஸ்தர்களை நோக்கி, "இந்த
மனுஷன் தன் பிதாக்களின் சுதந்தரத்தை விடமாட்டேனென்றால், கிறி
ஸ்துநாதருடைய சுதந்தரத்தை நான் விடாதபடிக்கு கர்த்தர் சகாயஞ்
செய்வாராக" என்று சொன்னதோடு "நான் ஒரு கண்காணிக்கு ஏற்
றபடி உத்தரவுசொல்லியிருக்கிறேன், இராயனானவர் இராயனுக்கேற்ற
படி செய்வாராக, நான் விசுவாசத்தை விடுவதைப் பார்க்க என் சீவனை
லேசாய் விட்டுவிடுவேன்" என்றார்.

அம்புரோஸ் என்பவர் இவ்வளவு தைரியமாய்த் தன் ஆலயத்தை ஆரி
யருக்கு விடமாட்டேனென்று மறுத்துவிட்டபடியால் சில நாட்களாய்
மிலான் நகரம் குழப்பமும் அமளியுமாயிருந்தது. இராச சமுகத்தாரும்
மற்றும் பல பெரியோரும் கோவிலை விடச்சொல்லிக் கேட்க, கண்கா
ணியார் விடுகிறதில்லையென்று சாதித்துக்கொண்டேயிருந்தார். மேற்
சொல்லிய கோவிலைக் கேட்டது போதாதென்று புதிதாய்க் கட்டியி
ருந்த கண்காணியார் ஆலயத்தையும் வற்புறுத்திக் கேட்டார்கள். அதி
காரிகள் இதுகாரியத்தில் சனங்களை எவ்வளவாய் நயப்படுத்தப் பார்த்
தும் அவர்களும் அதற்கு எள்ளளவேனும் இணங்கவில்லை.

Notes on Exodus.

## யாத்திராகம வியாக்கியானம்.

## எ. அதிகாரம்.

### தண்ணீர் இரத்தமானது.

1. மோசே எகோவாவின் தானாபதியாக பார்வோனுடனே பே
சுகிறான்; எகோவாவின் நாமத்தினாலே பார்வோனுக்குக் கட்டளை
கொடுக்கிறவனாயும், அவனுக்கு ஆக்கினையைக் கூறுகிறவனாயுமிருந்த
விஷயத்தில் அவனுக்கு மேலானவனாயிருந்தான். இதினாலே "பார்
வோனுக்குத் தேவன்" ஆக்கப்பட்டான்.
"உன் தீர்க்கதரிசி" 4: 15, 16. முந்தின அதிகாரத்தின் கடைசி
3 வாக்கியங்களை இந்த அதிகாரத்தின் துவக்கமாக வாசிக்கலாம்.
3, 4. 13. வா. 4: 21. 6: 26, 27 வியா.

6. மோசே இப்பொழுது தைரியமாய்ப் பேசத் துணிந்துகொண்டான். ரோமர் 5: 3.

7. இவர்கள் வயதுசென்றவர்களானதினாலே இவர்கள் சொல்வது மதிக்கப்படுமே.

9, 10. இவர்கள் செய்த அற்புதமானது, இவர்கள் தேவனாலே அனுப்பப்பட்டவர்கள் என்பதையும், இவர்கள் சொன்ன வசனம் தேவவசனம் என்பதையும் ருசுப்படுத்துகிற திவ்விய முத்திரையாயிருந்தது. யோவா. 3: 2. 5: 36. 6: 27. 10: 38. 14: 11. 15: 24. சத்துராதிகளுக்கு முன்னும் கல்விமான்களுக்கு முன்னும் இது நடந்தது.

11, 12. "சாஸ்திரிகள்" எகிப்து தேசத்து மந்திரவாதிகளும் சூனியக்காரரும் எகிப்தில் மிகவும் கண்ணியமாய் மதிக்கப்பட்டதினாலே, சாஸ்திரிகள் என்று அழைக்கப்பட்டார்கள். மோசேயும் ஆரோனும் அவர்களைப்போல இரண்டு பெரிய மந்திரவாதிகளேயொழிய வேறல்ல என்று பார்வோனும் அவன் கையின்கீழ் உத்தியோகஸ்தரும் நினைத்ததினால் தன் மந்திரவாதிகள் இவர்களோடு சமவாதம் செய்யக்கூடுமென்று அவர்களை அழைப்பித்தான். அவர்களில் யந்நேயும் யம்பிரேயும் முக்கியமானவர்களாயிருந்தார்கள். 2 தீமோ. 3: 8.

எகிப்தின் சாஸ்திரிகளும் சூனியக்காரரும் தங்கள் கோல்களை எவ்விதமாய்ச் சர்ப்பங்களாக்கினார்கள் என்பதைக்குறித்து வேதசாஸ்திரிகளுக்குள் தர்க்கமுண்டு. ஆனால் அவர்கள் கோல்களைச் சர்ப்பங்களாக்கின வகையை வாக்கியத்தில் சொல்லியிருக்கிறது. அதாவது: "தங்கள் யந்திர வித்தையினால் அப்படிச்செய்தார்கள்." காரியம் இப்படித்தானென்று 12-ம் வாக்கியத்தின் பின் பங்கினாலும் விளங்குகிறதே. எப்படியென்றால்: "ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று." அதாவது: (ஆரோனுடைய கோல் சர்ப்பமாக மாறினதே, மந்திரவாதிகளுடைய கோல்களும் சர்ப்பங்களாக மாறினதே) ஆரோனுடைய சர்ப்பமானது மந்திரவாதிகளுடைய சர்ப்பங்களை விழுங்கிப்போட்டது. அதினாலே ஆரோனுடைய சர்ப்பம் மறுபடியும் அவன் கையில் கோலாக மாறினபோது, அவர்களுடைய கோல்களோ காணக்கிடையாமற்போயிற்று.

இந்த அபிப்பிராயத்தை 13-ம் வாக்கியமும் உறுதிப்படுத்துகிறது. எப்படியென்றால்: ஆரோனுடைய கோல் மெய்யாகவே சர்ப்பமானது. மந்திரவாதிகளுடைய கோல்கள் கண்கட்டிவித்தையினாலும் செப்படிவித்தையினாலுமே சர்ப்பங்களாயின. இப்படியாக பார்வோன் பிரத்தியட்சமாய் தேவவல்லமையைக் கண்டிருந்தும் அவன் "இருதயம் கடினப்பட்டது" என்று சொல்வது வாக்கிய சம்பந்தமாயிருக்கிறதே தவிர, மற்றப்படி இருவகைப்பேரும் செய்தது மெய்யாகவே சர்ப்பங்களாக மாறியிருந்தால், 13-ம் வாக்கியத்திற்கு அர்த்தமில்லையே. பார்வோன் "அவர்களுக்குச் செவிகொடாமற்போனான்" என்று அவன்மேல் குற்றமாகச் சொல்லவும் நியாயமில்லையே.

16—18. இந்த அற்புதமும் இதற்குப் பின்வரும் அற்புதங்களும், எகிப்தியர் வணங்கின தெய்வங்கள் மெய்த்தெய்வம் அல்ல என்று ருசுப்படுத்துகிறவைகளாயும், அவர்கள் இஸ்ரவேலருக்குச் செய்த கொடுமைகளை அவர்களுக்குத் தூண்டிக்காட்டுகிறவைகளாயுமிருந்தன.

"நதிக்குவருவான்." நீல நதி எகிப்தியரைக் காப்பாற்றுகிற தெய்வம் என்று அதைக் கும்பிடவந்ததாகத் தோன்றும். எகிப்தியர் வருஷந்தோறும் இரண்டொரு சிறுவர்களை இந்த நதிக்கென்று நரபலியிடுவார்களாம்.



"சர்ப்பமாக மாறின கோலை." மோசேயின் கோலை அவன் கையில் பார்வோன் காணும்போது முந்தின அற்புதத்தை அவனுக்கு நினைப்பூட்டுகிறதாயிருக்குமே.

18. நீல நதியின் தண்ணீர் மிகவும் தெளிவானதென்றும், குடிக்கிறதற்கு அதிக இன்பமாயிருக்குமென்றும், குடித்தால் களைதீருமென்றும், பிரயாணிகள் சொல்லுகிறார்கள்.

21. எகிப்தியர்: இஸ்ரவேலருடைய பாலகர்களை நீலநதியில் எறிந்ததை அவர்களுக்குத் தூண்டிக்காட்டுகிறதாயிருந்தது.

தண்ணீரை இரசமாக்கினது கிறிஸ்துநாதருடைய முதலாவது அற்புதம். தண்ணீரை இரத்தமாக்கினது எகிப்தியருக்குண்டான முதலாம் வாதை.

22. இந்த வாதையை மாற்றும்படியாக மந்திரவாதிகள் எவ்வளவோ பிரயாசப்பட்டிருப்பார்கள், கூடவில்லை. ஆனால் இவர்கள் செய்ததுபோல செய்யவேண்டுமென்று, எங்கேயோ தேவ இரக்கத்தினால் மீந்திருந்த கொஞ்சம் தண்ணீரை "தங்கள் மந்திரவித்தையினால்" இரத்தமாக மாற்றினார்கள். இது எகிப்துக்கு அதிகக் கெடுதிதானே. தண்ணீரை இரத்தமாக்கும் சத்துவம் மெய்யாகவே அவர்களுக்கிருந்தால், மெய்யாகவே தண்ணீரெல்லாம் இரத்தமாக மாறியிருக்கும்போது, பார்வோனுக்காவது குடிக்க கொஞ்சம் இரத்தத்தை நல்ல தண்ணீராக மாற்றிக்கொடுக்கக்கூடாதா?

25. ஏழுநாளாய் இந்த வாதை நிலைத்திருந்தது. பிற்பாடு தேவ வல்லமையும் நீதியும் வெளிப்படும்படி மற்ற வாதைகளுக்கிடமுண்டாகவும்; பார்வோன், அவன் ஊழியக்காரர் இவர்களுடைய முரட்டாட்டம் இன்னும் அதிகமாய் விளங்கவுமாக இந்த வாதை மாற்றப்பட்டது.

## படிப்பினை.

தேவஊழியக்காரர் இராஜாக்களுக்கும் அதிகாரிகளுக்குமுன்பாக தேவவசனத்தைச் சொல்வதில், திவ்வியசர்வாயுதவர்க்கங்களை அணிந்தவர்களாயிருக்கவேண்டும். சுவிசேஷம் துவக்கத்தில் மேற்கொள்ளாததுபோல காணப்பட்டாலும், மனுஷருடைய முரட்டாட்டம் எவ்வளவாயிருந்தாலும், எவ்விதமும் அது ஜெயங்கொள்ளும் என்பதற்குச் சந்தேகமில்லை. 1-7.—தேவாவி ஒருவனுடைய இருதயததைத திருப்பாமல் தன்னிஷ்டத்துக்கு விட்டுவிடும்பொழுது, அவனுக்கு என்ன அற்புதம், என்ன ருசு, என்ன உதாரணம் காண்பித்தாலும் பிரயோசனமில்லை. குணப்படாத இருதயத்தில் தேவவசனம் பிரசங்கிக்கப்படும்பொழுது பார்வோன் காட்டின கடினமும் சேஷ்டைகளும் அங்கேயும் நடக்கும். யோவா. 8: 45.—இஸ்ரவேலைப் போகவிடுவது பார்வோனுக்கு எப்படி வருத்தமானகாரியமாயிருந்ததோ, அப்படியே ஒரு பாவி தான் பழகின பாவத்தைவிட்டு விலகுவதும் வருத்தமான காரியமாயிருக்கிறது. மாற். 9: 42—48. நாம் வழககமாய் இடைவிடாமல் அநுபவித்துவருகிற அநேக சிறந்த நன்மைகள், நமக்குத் தாராளமாய்க் கிடைக்கிறவரையும் நாம அவைகளை மதிககிறதில்லை. அவைகள் நம்மைவிட்டெடுபடுகிறபொழுதுதான் அவற்றின் அருமை நமக்குத் தெரியும். தண்ணீரின் அருமை இப்போதான் எகிப்தியருக்கு நன்றாய்த் தெரிந்தது. இப்போது நாம் கிருபையின் காலத்திலிருக்கிறோம். கிறிஸ்துநாதர் தம்முடைய இரட்சண்ணியத்தை அருளத் தம்முடைய கையை நீட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால் தங்கள் ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படுகிறவர்கள் எத்தனை கொஞ்சப்பேர்! இந்த நன்மைகள் எடுபட்டுப்போகும்போதுதான் அவற்றின் அருமை பெரு

மை தெரியும். 8—25. மரணம் வந்து அவர்களைப் பிடிக்கும்போது, ஐயோ! தேவவசனத்தை அதிகமாய் வாசித்தேனில்லையே; அதிகமாய்ச் செபம்பண்ணினேனில்லையே; பிறருக்கு அதிக நன்மைசெய்தேனில்லையே; கிறிஸ்துநாதரை அதிகமாய் மகிழ்த்தேனில்லையே என்று அங்கலாய்ப்பார்கள். மத். 25: 6, 8. பிரசங்கி 9: 10.

## அ. அதிகாரம்.

தவளைகள். பேன்கள். வண்டுகள்.

1—6. மேற்சொல்லிய ஏழுநாள் முடிந்து, முந்தின வாதை நீக்கப்பட்டவுடனே மோசே மறுபடியும் பார்வோனிடத்துக்கு அனுப்பப்பட்டான். வாதை துவக்குகிறதற்குமுன்னே பார்வோன் எச்சரிக்கப்பட்டிருக்கிறான். இதுவும் அந்த வாதை எகோவாவின் வல்லமையினாலே செய்யப்பட்டதென்பதற்கு அத்தாட்சியே. தவளைகள் மிகவும் ஏராளமாய் வந்து ஒவ்வொரு இடத்திலும் சென்று எகிப்தியரை வருத்தப்படுத்தி, அவர்கள் சமாதானமாய்ச் சாப்பிடவும் குடிக்கவும் தூங்கவும் ஏதுவில்லாமல், இராப்பகலாய் அவர்களை வாதித்தது. பார்வோனும் அவன் ஊழியக்காரரும் இவற்றினால் வாதிக்கப்பட்டார்களென்று சொல்லியிருப்பதால், இந்த வாதையும் இதற்கு முந்தின வாதையும் இஸ்ரவேலரை அதிகமாய்ப் பிடிக்கவில்லையென்று அநுமானிக்கலாம். தவளைகளையும் எகிப்தியர் வணங்கினார்கள்.

7. மந்திரவாதிகள் தவளைகளை ஏன் நீக்கவில்லை?

10. "நாளைக்கு." ஏன் உடனே நீக்கச்சொல்லவில்லை! தன் பிரயத்தனத்தினாலே நீக்கிக்கொள்ளலாமென்று நினைத்திருப்பான். ஒருவேளை அவன் மந்திரவாதிகள் அடுத்த நாளை விசேஷித்துச் சொல்லியிருப்பார்கள்.

13. வாதை நீக்கப்படுமென்று முன்னறிவிக்கப்பட்டது; முழுவதும் நீங்கினது; குறிக்கப்பட்ட காலத்தில் நீங்கினது; குவியல் குவியலாய் நாற்றமெடுத்தது. இதெல்லாம் அற்புதத்தின் உண்மைக்கு அத்தாட்சியாம்.

கேள்வி: இத்தனை ஏராளமான தவளைகள் எங்கேயிருந்து வந்தது?

உத்தரவு: எகிப்தியரை வாதிக்கும்படி எகோவாவினால் அப்பொழுது சிருஷ்டிக்கப்பட்டது.

16, 17. சிங்கம், புலி, யானைமுதலிய துஷ்டமிருகங்களாவது, மாற்றானுடைய பலத்த சேனையாவது வாதைகளாக அனுப்பப்பட்டால், பார்வோனுடைய ஆங்காரமான இருதயம் அடங்கத்தான் செய்யும். ஆனால் இப்படிப்பட்ட அற்பப் பிராணிகளை வாதைகளாக அனுப்பி பார்வோனை அடங்கச்செய்தது. எகோவாவின் மகத்துவத்தை அதிகமாய் வெளிப்படுத்துகிறதல்லவா. "அவர் யார்" என்று கேட்ட கேள்விக்கு இந்த அற்பப் பிராணிகள் உத்தரவுகொடுக்கிறதுபோலிருக்கிறதல்லவா?

18, 19. பேன்கள் மந்திரவாதிகளையும் வாதித்ததாக நினைக்கப்படும். கடைசியாகத் தேவ வல்லமையை ஒத்துக்கொண்டார்கள்.

21. "வண்டு." கடந்தை குளவிமுதலான சிறகுள்ள விஷப்பூச்சிகளும் இந்த வார்த்தையில் அடங்கியவைகளாம்.

22, 23. இதுமுதலான வாதை இஸ்ரவேலரைச் சற்றென்கிலும் அணுகவில்லை. "தேவன் தம்முடையவர்களை அறிவார்."



படிப்பினை.

பார்வோன் அடிக்கடி தன் இருதயத்தைக் கடினப்படுத்தினாலும், தேவன் தமது இரக்கத்தையும் அடிக்கடி காட்டினார். இது: எகோவா பாவிகளை மன்னிக்கிறதற்கு எவ்வளவாய்க் காத்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.—அகோர துன்பத்தில் தேவனுக்கு அடங்குகிறதும், "இலகு"வுண்டானவுடனே இருதயத்தைக் கடினப்படுத்துகிறதும், பார்வோனுடைய சுபாவமாயிருந்ததுபோல, நம்மெல்லாருடைய சுபாவமாயுமிருக்கிறதென்றறியவேண்டும்.—பாவப்பழக்கத்தை விட்டுவிடுகிறது மகா வருத்தமான காரியம். பார்வோனுக்கு இஸ்ரவேலர் எப்படியிருந்தார்களோ, அப்படியே பாவிக்கு பாவத்தின்பேரிலுள்ள பிரியமுமிருக்கிறது.—தேவன் படைத்திருக்கிற எந்த அற்ப ஜெந்துவையும் நாம் லேசாய் எண்ணக்கூடாது. பார்வோனுடைய இரதங்களும் குதிரைவீரரும் அற்பப் பேன்களுக்கு எதிர்த்துநிற்கக் கூடவில்லையே. அவைகள் நம்மை வாதியாதிருக்கிற முகாந்தரம், தேவன் அவைகளைத் தடுத்திருப்பதுதான். அவர் நமக்கு விரோதியாகும்போது அவருடைய சிருட்டிப்புக்களெல்லாம் நம்மேல் படையெடுத்துப் போருக்குநிற்கும்.—நமக்குக் கிடைத்திருக்கிற சுகம் தேவனுடைய விசேஷித்த ஈவென்று நினைக்கக்கடவோம். நாஸ்திகர் பார்வோன் பட்ட பாடுபடுவார்கள்.—தேவனுடைய இரக்கத்தினாலே ஒருவன் குணப்படாவிட்டால் அவனுக்குக் கோபாக்கினைதான் வரும். கிறிஸ்துநாதர் ஒருவனுக்குச் சத்துராதியானால் அவனுடைய நிலைமை என்ன பரிதாபமாயிருக்கும்.

## THE SCRIPTURE GAZETTEER.

## வேத இடப்பேர் அகராதி.

இருபிறைக்குள் வருவது அந்தந்தப் பேரின் அர்த்தமாம்.

(தொடர்ச்சி)

898. யர்மூத். (1) யூதாவின் பள்ளத்துக்காட்டில் பட்டணம். யோசு. 10: 3.
(2) இசக்காரில் லேவியர் (கெர்சோனியர்) பட்டணம். யோசு. 21: 29.

899. யாகாஸ். யாகாசா அல்லது யாசா. (சண்டை, தர்க்கம்.) மோவாபில் பட்டணம். எண். 21: 23.

900. யாகூர். யூதாவின் தென்கடை கோடியில். யோசு. 15: 21.

901. யாக்கோபுடைய கிணறு. சமாரியாவில் சீகேமுக்கருகே. இந்த இடத்தில் ஹெலன் இராசாத்தி ஒரு ஆலயம் கட்டுவித்தாள். அதின் அஸ்திபாரம் மாத்திரம் இப்போதிருக்கிறது. கொஞ்சக்காலத்துக்குமுன் அதை அளந்ததில், அதின் ஆழம் 75 அடியும், குறுக்களவு 9 அடியுமாயிருந்தது. அது உறுதியான ஒரு பாறையில் வெட்டப்பட்டிருந்தது. யோவா. 4: 6.

902. யாசேர். காத்தில் லேவியர் (மெராரியர்) பட்டணம். எண். 21: 32.

903. யாத்தீர். யூதாமலைகளில் ஆசாரியர் பட்டணம். யோசு. 15: 48.

904. யாபேஸ்-கிலேயாத். கிலேயாத்தின் பிரதான பட்டணம். நியா. 21: 9.

905. யாபேஸ். யூதாவில் பட்டணம். 1 நாளா. 2: 55.

906. யாப்நெயேல். (தேவகட்டிடம்.) (1) யூதாவின் வடஎல்லையில் பட்டணம். யோசு. 15: 11.

(2) நப்தலியின் எல்லையில் பட்டணம். யோசு. 19: 33.

907. யாப்போ; அல்லது யோப்பா; (அழகு) நவீன சரித்திரத்தில் யாப்வா. பெலிஸ்தியருடையது. இப்போது எருசலேமுக்கு வடமேற்கே 40 மயில் தூரத்தில், பலஸ்தீனாவின் கடல்துறை பட்டணம். யோசு. 19: 46.

908. யாப்போக்கு. (கோஷ்டமுள்ளது.) திபேரியாக்கடலுக்கு 30 மயிலுக்குத் தெற்கே, யோர்தான் நதியில் விழுகிற ஒரு சிற்றாறு. ஆதி. 32: 22.

909. யாராகு. அரபியரில் ஒரு வகுப்பார். ஆதி. 10: 26.

910. யாவான். (1) கிரேக்கைக்குப் பேர். ஆதி. 10: 2.

(2) அரபி-பீலிக்ஸில் பட்டணம். எசே. 27: 13.

911. யானூம். யூதா மலைகளில் பட்டணம். யோசு. 15: 53.

912. யுத்தா. யூதாவின் மலைநாட்டில் ஆசாரியர் பட்டணம். யோசு. 15: 55.

913. யூதா. (தேவதுதி) (1) ஒரு கோத்திரம். யோசு. 15: 1.

(2) யூதாவின் மலைகள். யோசு. 15: 48.

(3) யூதாராச்சியம். சங். 114: 2.

(4) யூதாவனாந்தரம் நியா. 1: 16.

914. யூதேயா. (துதி) யூதருடைய தேசம். மத். 19: 1. சிறையிருப்புக்குப்பின் யோர்தானுக்கு மேற்கேயுள்ள பாகமுழுதும் யூதேயாவென்று அழைக்கப்பட்டது. ஆகா. 2: 2. கிறிஸ்துநாதர் காலத்தில், யூதேயா சமாரியா கலிலேயா என்று ரோமர் பிரித்து வழங்கினதினால் யூதேயா என்றும் பலஸ்தீனா என்றும் வழங்கப்பட்டது.

915. யெசுவா. தென்யூதாவில் பட்டணம். நெகே. 11: 26.

916. யெஸ்ரயேல். (தேவவித்து.) (1) யூதாமலையில் பட்டணம். யோசு. 15: 56. 1 சாமு. 29: 1.

(2) இசக்காரில் பட்டணம். ஆகாப் அரசுபுரிந்த இடம். யோசு. 19: 18.

917. யெத்தூர். அரபியரில் ஒரு வகுப்பார். ஆதி. 25: 15.

918. யெத்லா. தாணில் பட்டணம். யோசு. 19: 42.

919. யெயாரீம். யூதாவின் வடஎல்லையில் மலை. யோசு. 15: 10.

920. யெராமியேலா. யூதாவுகருத் தெற்கிலிருந்த ஜாதியார். 1 சா. 27: 10. 30: 29.

921. யெருவேல். யூதாவில் வனாந்தரம். 2 நாளா. 20: 16.

922. யெகூத். தாணில் பட்டணம. யோசு. 19: 45.

923. யொகிபேயா. காததல் பட்டணம். எண். 32: 35.

924. யொக்தான். (சிறியது.) அரபியர். ஆதி. 10: 25.

925. யொக்தியேல். (1) யூதாவின் பள்ளத்தாக்காட்டில் பட்டணம். யோசு. 15: 38.

(2) ஏதோமியர் தலைநகரமான பெத்ராவுக்கு, பிற்காலத்தில் வழங்கிய பேர். 2 இரா. 14: 7.

926. யொக்தெயாம். யூதாமலைகளில் பட்டணம். யோசு. 15: 56.



927. யொக்னியாம். செபுலோனில் லேவியர் (மெராரியர்.) பட்டணம். யோசு. 12: 22.

928. யோக்மேயாம். எப்பிராயீமில், லேவியர் பட்டணம். 1 நாளா. 6: 68.

929. யோசபாத். எருசலேமுக்கும் ஒலிவமலைக்கும் நடுவேயுள்ள கீதரோன் பள்ளத்தாக்கல்ல, வேறொன்று. யோவே. 3: 2.

930. யோத்பா. யோத்பாத்தா இதுதான். 2 இரா. 21: 19.

931. யோத்பாத்தா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 33. உபா. 10: 7.

932. யோபாப். அரபியரில் ஒரு வகுப்பார். ஆதி. 10: 29.

933. யோப்பா. (அழகானது) யாப்போ பார்.

934. யோர்தான். (நியாயத்தீர்ப்பின் நதி.) பலஸ்தீனாவின் பிரதான நதி. அந்திலீபனோன் அடிவாரத்தில் எழும்பி சவக்கடலில் விழுகிறது. ஆதி. 32: 10.

935. ரக்காத். நப்தலியில் பட்டணம். யோசு. 19: 35.

936. ரபா. (குளப்பம், வாக்குவாதம்.) (1) யூதாவில் பட்டணம். யோசு. 15: 60.

(2) ரபாத்-அம்மோன் இதுதான். உபா. 3: 11.

(3) மோவாபில் பட்டணம். ஆர் பார்.

937. ராகாப். எகிப்துக்குச் செய்யுளில் வழங்கிய பேர். சங். 87: 4.

938. ராக்கால். யூதாவில் பட்டணம். 1 சாமு. 30: 29.

939. ராக்கோன். தாணில் பட்டணம். யோசு. 19: 46.

940. ராப்பித். இசக்காரில் பட்டணம். யோசு. 19: 20.

941. ராமசேஸ். கோசேன் நாட்டில் ஒரு மாகாணத்துக்கும், பட்டணத்துக்கும் பேர். ஆதி. 47: 11.

942. ராமதாயீம்-சோப்பீம். எப்பிராயீம் மலைக்காட்டில் ஒரு இடம். 1 சாமு. 1: 1.

943. ராமா. (உயர்த்தப்பட்டது.) (1) பென்யமீனியர் பட்டணம். கிபியா கிட்ட. யோசு. 18: 25.

(2) நப்தலியில் அல்லது ஆசேரில் பட்டணம். யோசு. 19: 29, 36.

(3) கிலேயாத்தில் பட்டணம். ராமோத்-கிலேயாத் பார்.

(4) கூஷியருடைய நகர். ஆதி. 10: 7.

944. ராமாத். யோசு. 19: 8.

945. ராமோத். (மேடு.) இசக்காரில் லேவியர் பட்டணம். 1 நாளா. 6: 73.

946. ராமோத்-கிலேயாத். மிஸ்பா இதுதான். காத்தில் அடைக்கலப் பட்டணம். உபா. 4: 42.

947. ரித்மா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 18.

948. ரிப்லா. (1) பலஸ்தீனாவின் கீழ் எல்லையில் பட்டணம். எண். 34: 11.

(2) ஆமாத்தேசத்தில் பட்டணம். 2 இரா. 23: 33. 25: 6, 20, 21. எரே. 39: 5. 52: 9. இப்பொழுது பேயெல்பெக்குக்கும், ஹம்ஸாக்கும் நடுவேயிருக்கிறது.

949. ரிம்மோன். (1) சிமியோனில் பட்டணம். யோசு. 15: 32.

(2) பென்யமீனில் கிபியாவுக்கு வடகிழக்கேயிருக்கும் குவிந்த பாறைமேல் பட்டணம். நியா. 20: 45, 47.

950. ரிம்மோன் பேரேஸ். இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 19.

951. ரிம்மோன்-மெத்தோவார். செபுலோனில் லேவியர் (மொராரியர்) பட்டணம். யோசு. 19: 13.

952. ரீசா. இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 21.

953. ரீப்பாத்து. கோமேரின் சந்ததியாரான வடக்கிலுள்ள சனங்கள். ஆதி. 10: 3.

954. ரூபன். ஒரு கோத்திரம். எண். 32: 29—33.

955. ரூமா. ஒரு பட்டணம். 2 இரா. 23: 36. யூதாவிலுள்ள ரூமா இதாயிருக்கலாம். அல்லது அருமாவாயிருக்கலாம். நியா. 9: 41. 2 இரா. 23: 36.

956. ரொகொபோத்து. (1) ஈசாக்கு வெட்டின துரவு. ஆதி. 26: 22.

(2) நதிக்கு (அதாவது ஐபிராத்துக்கு)ச் சமீபமான ரொகொபோத்து. ஆதி. 36: 37.

(3) பூர்வ அசீரியாவில் பட்டணம். ஆதி. 10: 11.

957. ரெக்கேம். பென்யமீனில் பட்டணம். யோசு. 18: 27.

958. ரெசேன். அசீரியர் பட்டணம், நினிவேக்கும் காலாகுக்கும் நடுவே. ஆதி. 10: 12.

959. ரெப்பாயீமியர். (இராக்ஷதர்.) (1) யோர்தானுக்கப்பால் குடியிருந்த மிகவும் நெட்டையரான ஒரு ஜாதியார். ஆதி. 14: 5. ("இராட்சதர்." உபா. 3: 11.)

(2) இன்னோம் பள்ளத்தாக்குக் கருகான பள்ளத்தாக்கு. இது "இராட்சதர்களின் பள்ளத்தாக்கு" என்று அழைக்கப்பட்டது. யோசு. 15: 8.

960. ரெமேது. இசக்காரில் லேவியர் பட்டணம். யோசு. 19: 21.

961. ரெவிதீம். (இளைப்பாறும் இடம்.) இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். யாத். 17: 1.

962. ரேகாப். கேனியரில் ஒரு வகுப்பார். 1 நாளா. 2: 55.

963. ரேகியு. (வெடிப்பு, பிளப்பு.) இத்தாலியின் தென்மேற்கில் பட்டணம். சிசிலியிலுள்ள மெசினாவுக்கு எதிரேயிருந்தது. அப். 28: 13.

964. ரேகொப். ஆசேரில் லேவியர் பட்டணம். எண். 13: 21.

965. ரேத்சேப். அசீரியர் ஜெயித்த பட்டணம். 2 இரா. 19: 12.

966. ரோகிலிம். கீலேயாத்தில் ஒரு இடம். ரோகேல் இதாயிருக்கலாம். 2 சாமு. 17: 27.

967. ரோகேல், அல்லது என்ரோகேல். (வண்ணார் நீரூற்று.) யூதாவில் ஒரு நீரூற்று. யோசு. 15: 7.

968. ரோஷ். ("அதிபதி." எசே. 38: 3.) ருஷியராயிருக்கலாம்.

969. ரோது. மெதித்திராணியாக் கடலில் சின்ன ஆசியாவுக்குச் சமீபமாயுள்ள தீவு. அப். 21: 1.

970. ரோமாபுரி. தைபர் நதிக்கரையில் மிகவும் முக்கியமான பட்டணம். இத்தாலிக்குத் தலைநகர். அப். 2: 10.

971. லக்கூம். நப்தலியில். யோசு. 19: 33.

972. லசரோன். கானானியர் பட்டணம். யோசு. 12: 18.

973. லசேய. கிரேத்தையில் பட்டணம். அப். 27: 8.

974. லத்மாஸ். யூதாவில் பட்டணம். யோசு. 15: 40.

975. லவோதிக்கா. லீதியா, பிரிகியா இந்த நாடுகளின் எல்லையில். எபேசுக்கு 40 மயிலுக்குக் கிழக்கே. கொலோ. 4: 13, 15. வெளி. 1: 11.

976. லாகீஸ். யூதாவின் தெற்கில் அரணான பட்டணம். அதோராயீம், அசெக்கா இவைகளுக்கூடே. யோசு. 15: 39. 2 நாளா. 11: 9.



977. லாசா. சவக்கடலுக்குக் கிழக்கே, கொதிநீர்ச் சுனைகள் நிறைந்த கால்லிர்கோ பட்டணமென்று நினைக்கப்படுகிறது. ஆதி. 10: 19.

978. லாபான். அரபியில் வனாந்தரம். உபா. 1: 2.

979. லாயீஸ். (சிங்கம்.) (1) பலஸ்தீனாவின் வடக்கில் பட்டணம். தாண் என்றும் லேஷெம் என்றும் அழைக்கப்பட்டது. நியா. 18: 7.

(2) பென்யமீனில் ஒரு ஊர். ஏசா. 10: 30.

980. லிக்கோனியா. சின்னஆசியாவில் ஒரு நாடு. பவுல் அங்கே போகையில் அது ரோமருடையதாயிருந்தது. அப். 14: 6.

981. லித்தா. லோது பார். அப். 9: 32.

982. லிபோனா. சீலோ கிட்ட. நியா. 21: 19.

983. லிப்னா. (1) வனாந்தரத்தில் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம். எண். 33: 20.

(2) கானானியரின் அரணான பட்டணம். பிற்காலத்தில் யூதாவின் பள்ளத்தாக்காட்டில் ஆசாரியர் பட்டணம். யோசு. 10: 29. 21: 13. 2 இரா. 19: 8.

984. லீசியா. சின்னஆசியாவின் தென்மேற்கில் ஒரு நாடு. அப். 27:5

985. லீஸ்திரா. லிக்கோனியாவின் பிரதான பட்டணங்களிலொன்று. அப். 14: 6.

986. லீபனோன். (வெள்ளைமலை.) சீரியா, பலஸ்தீனா இவைகளுக்கூடேயுள்ள மலைத்தொடர். மேற்கிலுள்ளது லீபனோன் அல்லது லீபனஸ் என்றும், கிழக்கிலுள்ளது அந்தி-லீபனோன் என்றும் அழைக்கப்பட்டது. உபா. 11: 24.

987. லீபியா. எகிப்துக்கு வடமேற்கே ஒரு தேசம். சிரேனே அதின் பிரதான பட்டணம். பூத்து இதுதான். அப். 2: 10.

988. லூகித். மோவாபில் ஒரு குன்று அல்லது மேடு. ஏசா. 15: 5.

989. லூஸ். (பிரிவு.) (1) ஏத்தியர் தேசத்தில் பட்டணம். நியா. 1: 26.

(2) பெத்தேலுக்கு பழைய பேர். ஆதி. 28: 19.

990. லூதீம். (1) ஆபிரிக்காவில் ஒரு ஜாதியார். ஆதி. 10: 13.

(2) லூத்து. அதாவது லீபியர். ஆதி. 10: 22.

991. லூத்தியர், அல்லது லூதிம். எசே. 30: 5.

992. லூபியர். கூசியரோடு சேர்த்துச் சொல்லப்படுகிற ஆபிரிக்கானர். 2 நாளா. 12: 3. நாகூ. 3: 9.

993. லெகாபீம். மிஸ்ராயீமர். லிபியானராயிருக்கலாம். ஆதி. 10:13

994. லெத்தூசீம். தெதானிய அரபியர். ஆதி. 25: 3.

995. லெபாயோத். யூதாவின் தென்கடைகோடியில் பட்டணம். யோசு. 15: 32.

996. லெயூமீம். அரபியரில் ஒரு வகுப்பார். ஆதி. 25: 3.

997. லேகி. (தாடைஎலும்பு.) அல்லது ராமாத்லேகி. (தாடைஎலும்பு மேடு.) யூதாவில் ஒரு இடம். நியா. 15: 9.

998. லேசேம். லாயீஸ் என்றும் தாண் என்றும் அழைக்கப்பட்ட ஒரு பட்டணம். யோசு. 19: 47.

999. லோது, லூது, அல்லது லித்தா. பென்யமீனில், யோப்பாவுக்கு 9 மயிலுக்குக் கிழக்கே பட்டணம். 1 நாளா. 8: 12.

1000. லோதேபார். யோர்தானுக்கப்பால் ஒரு இடம். 2 சாமு. 9: 4. 17: 27. தெபீர் இதாயிருக்கலாம். யோசு. 13: 26.

"நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுக்கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்."

முற்றும்.

---

## Bishop's Biblical Prize Examination.

---

## அத்தியட்சர் பந்தயப் பரீட்சை.

1875௵ ஜூலை௴ 8௳ பதினோராவது பரீட்சை நடந்தது. அப்பொழுது எழுதப்பட்ட காகிதங்களை எல்லாம் நாங்கள் வாசித்தாராய்ந்து மதிப்புச்செய்து அதற்குரிய ரிப்போர்ட்டை மகா கனம்பொருந்திய கண்காணியாரவர்களுக்கு இன்றையத்தினமே அனுப்பி காரியத்தை முடித்தோம். ஆதலால் நாம் இப்போது தாமிதமின்றி நற்போதகம் வாசிக்கிறவர்களாகிய நமது இஷ்டர்களுக்கு சில விசேஷங்களைத் தெரியப்படுத்துகிறது உத்தமம்.

(2) மேற்சொல்லிய பரீட்சைக்கு ஏற்பட்டவர்கள் 49 பேர். ஆகிலும் பரீட்சைக்கு ஆஜரானவர்கள் 34 பேர் மாத்திரம். அவர்களில் 32 பேர் திருநெல்வேலியையும் 2 பேர் சென்னபட்டணத்தையும் சேர்ந்தவர்கள். இந்த வருஷத்தில் பந்தயங்கள் முன்னைவிட அதிகமானதால் பரீட்சைக்கு வருகிறவர்கள் அதிக சாக்கிரதையோடும் கவனத்தோடும் ஆயத்தப்படுத்திக்கொண்டு வருவார்கள் என்று நம்பியிருந்தோம். இந்த நம்பிக்கை சரியாய் நிறைவேறிற்று என்று சொல்ல ஏதுவில்லை. இனி இப்படிப்பட்ட குறைவு இராதென்று நம்புகிறோம். சிலர் சற்றென்கிலும் ஆயத்தப்படாமல், மாமரத்தில் குருடன் கோல் எறிந்தது போல தாங்களும் பரீட்சைக்குப் போனால் ஒருவேளை பந்தயம் தங்களுக்குக் கிடைத்தாலும் கிடைக்கும் என்ற லேசான எண்ணத்தோடே வந்ததாகத் தோன்றுகிறது. இன்னும் சிலர் சற்று ஆயத்தப்பட்டிருக்கிறதாகத் தோன்றினாலும், அவர்களும் தங்கள் கருத்தை நன்றாய் விளக்கிக் காட்டாமல் இப்படியுமப்படியுமாக, குழப்பமாயும், பாஷைநடை கேவலமாயும், எழுவாய் காட்டாமல், "அதாவது," "அல்லது" என்ற சொற்களை அதிகமாய்ப் பிரயோகித்தும் எழுதியிருக்கிறார்கள். சிலர் ஒற்றை இரட்டை பிடிக்கிறதுபோல் மனதில் வந்தபடியெல்லாம் சில கேள்விகளுக்கு உத்தரவு எழுதியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குற்றங்குறைகளுக்கு சில திருட்டாந்தரங்களைக் காட்டுவோம். "நீயும் உனக்கு ஏற்படுத்திக்கொண்ட இராசாவும் அறியாத இடத்துக்குக் கொண்டுபோகப்படுவீர்கள்." இது கல்தேயரைக் குறிக்கும், என்றாலும் உரோமரையே குறிக்கும். அவர்கள் முற்றிக்கையிலும் இடுக்கண்களிலும் இருந்து எடுக்கப்படுவார்கள். திருடன் வருகிற விதமாய் ஆரவாரத்தோடே வருவார். "பர்ணபா என்பவன் தன் பணத்தை விற்று முதலாவது முதலில் வைத்தான்." ஒருவன், "உன் பலிபீடத்தில் அசுத்தமானதும் அருவருப்பானதுமான மிருகத்தைப் பலியிடுவார்கள்" என்ற ஒரு வாக்கியத்தை, மோசே சொன்ன தீர்க்கதரிச



னங்களில் ஒன்றாகவும், அது நிறைவேறியிருக்கிறதாகவும் காட்டுகிறான். அப்படிப்பட்ட தீர்க்கதரிசனம் பஞ்சாகமத்தில் கிடையாது. இன்னொருவன் "தீத்தூஸ் (எருசலேமை) காப்பாற்றும்படி பிரயாசப்பட்டும், உரோமைச் சேவகர் அஸ்திபாரத்திலே திரவியம் இருக்கிறதென்ற அகாவினாலே இடிக்கப்பட்டது" என்கிறான். தீத்தூஸ் என்ற சேனைத்தலைவர் எருசலேமிலுள்ள தேவாலயத்தைக் காப்பாற்றவேண்டுமென்று விரும்பினது நிசந்தான். ஆகிலும் எருசலேம்பட்டணத்தைக் காப்பாற்றும்படி அவர் பிரயாசப்பட்டார் என்பது அபத்தம். அதன்னியில் மேற்காட்டிய வாக்கியம் பாஷைநடையிலும் கேவலமாயிருக்கிறது.

(3) இதுவுமன்றி ஞாபகப்பாடமும் மெத்தக் குறைவாயிருந்தது. அதில் எழுத்துப்பிழைகளும், பொருளில் வித்தியாசம்பண்ணாத சொற்பிழைகளும் கவனிக்கப்படவில்லை. கவனிக்கத்தக்க ஏழு பிழைகளையும் ஒருவனுடைய காகிதத்தில் காணப்பட்டால்தான் அது ஒருலக்கமும் பெறாமல் தள்ளப்படும். அப்படியிருந்தாலும் இப்படித் தள்ளப்பட்ட காகிதங்கள் 32-ல் 16 வரையுமுண்டு. இனி இந்தக் குறைவு இராது என்று நம்பி, குறைசொல்லுகிற வேலையை இம்மட்டில் நிறுத்திவிட்டுவிடுகிறோம்.

(4) இந்தப் பரீட்சையில் பந்தயம் பெற்றவர்கள் இன்னாரென்று காட்டுவது சந்தோஷமான காரியம்.

முதல் பந்தயம் ரூ 30 பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. யோவான் ஈசாக்கு. | C. M. S. மெஞ்ஞானபுரம். |
| 2. A. ஞானப்பிரகாசம். | S. P. G. நாசரேத். |

இரண்டாம் பந்தயம் ரூ 10 பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. யோசுவா பவுல். | C. M. S. உதகமண்டலம். |
| 2. ஈசாக்கு சுவாமியடியான். | C. M. S. மெஞ்ஞானபுரம். |
| 3. சுவாமிதாசன் விசுவாசம். | C. M. S. பண்ணைவிளை. |
| 4. ஈசாக்கு குருபாதம். | C. M. S. பாளையங்கோட்டை. |

மூன்றாம் பந்தயம் ரூ 5 பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. S. ஆசீர்வாதம். | S. P. G. முதலூர். |
| 2. J. யாக்கோபு. | S. P. G. முதலூர். |
| 3. யோசேப்பு யாக்கோபு. | S. P. G. நாசரேத். |
| 4. S. ஆசீர்வாதம். | S. P. G. இராதாபுரம். |

(5) கிரேக்கு பரீட்சைக் காகிதங்கள் சென்னபட்டணத்தில் சோதிக்கப்படுகிறது. அதில் பந்தயம் இன்னாருக்கென்பதைப்பற்றி இன்னமும் செய்தி வரவில்லை.

ASHTON DIBB.
J. L. WYATT.

## பரீட்சையில் அவரவர் பெற்றுக்கொண்ட இலக்கங்களைக் காட்டுகிற ஜாபிதா.

| நம்பர். | பேர். | பழைய ஏற்பாடு. | புதிய ஏற்பாடு. | ஞாபகப் பாடம். | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| | Max. | 120 | 120 | 14 | 254 |
| 1 | S. ஆசிர்வாதம், முதலூர். | 82 | 52¼ | 0 | 134¼ |
| 2 | J. யோசேப்பு. ஷை | 55 | 72 | 6 | 133 |
| 3 | A. ஞானப்பிரகாசம், நாசரேத். | 87 | 77¾ | 4 | 168¾ |
| 4 | யோசேப்பு யாக்கோபு. ஷை | 65 | 56 | 10 | 131 |
| 5 | சுவிசேஷமுத்து தாவீது. பாளையங்கோட்டை. | 31 | 54¼ | 8 | 93¼ |
| 6 | ஈசாக்கு குருபாதம். ஷை | 62 | 65¾ | 12 | 139¾ |
| 7 | ஞானப்பிரகாசம், நல்லூர். | 15 | 26¾ | 0 | 41¾ |
| 8 | J. சிமியோன். ஷை | 21 | 49 | 0 | 70 |
| 9 | யோசேப்பு நல்லதம்பி, மெஞ்ஞானபுரம், | 55 | 55¾ | 6 | 116¾ |
| 10 | ஈசாக்கு சுவாமியடியான். ஷை | 82 | 59¼ | 12 | 153¼ |
| 11 | இஸ்ரவேல் ஈசாக்கு, பாளையங்கோட்டை. | 40 | 51¾ | 0 | 91¾ |
| 12 | ஆபிரகாம் உபாத். ஷை | 22 | 45½ | 0 | 67½ |
| 13 | சாமுவேல் ஞானாயுதம், டோனாவூர். | 40 | 44½ | 0 | 84½ |
| 14 | பவுல் காபிரியேல், பாளையங்கோட்டை. | 34 | 53½ | 0 | 87½ |
| 15 | வேதமாணிக்கம், மெஞ்ஞானபுரம். | 42 | 53¼ | 10 | 105¼ |
| 16 | பாக்கியமுத்து, பாளையங்கோட்டை. | 30 | 33¼ | 12 | 75¼ |
| 17 | சாமுவேல் ஸ்தேவான், ஆள்வானேரி. | 31 | 33½ | 0 | 64½ |
| 18 | D. யோசேப்பு. பாளையங்கோட்டை. | 45 | 54¼ | 12 | 111¼ |
| 19 | மாசில்லாமணி, பண்ணைவிளை. | 14 | 25½ | 0 | 39½ |
| 20 | சுவாமிதாசன் விசுவாசம், ஷை | 73 | 67¼ | 0 | 140¼ |
| 21 | யோவான் கிரிப்து, டோனாவூர். | 32 | 64 | 12 | 108 |
| 22 | இன்னாசிமுத்து, ஷை | 41 | 41 | 6 | 88 |
| 23 | C. பர்ணபா, நாசரேத். | 39 | 48 | 0 | 87 |
| 24 | தேவசகாயம், ஷை | 5 | 31¼ | 0 | 36¼ |
| 25 | Y. சுவாமியடியான், ஷை | 31 | 72 | 0 | 103 |
| 26 | S. ஆசிர்வாதம், இராதாபுரம். | 34 | 80½ | 10 | 124½ |
| 27 | அருமைநாயகம், ஷை | 49 | 66½ | 6 | 121½ |
| 28 | யோவான் ஈசாக்கு, மெஞ்ஞானபுரம். | 107 | 70½ | 14 | 191½ |
| 29 | ஏசுவடியான் காலிசன், ஷை | 27 | 55 | 14 | 96 |
| 30 | யோசேப்பு, நாசரேத். | 11 | 37 | 0 | 48 |
| 31 | D. கோவிற்பிள்ளை, ஷை | 30 | 47 | 0 | 77 |
| 32 | ஞா. பிச்சைமுத்து, ஷை | 44 | 48¼ | 6 | 98¼ |
| 33 | யோசுவா பவுல், உதகமண்டலம். | 64 | 86½ | 12 | 162½ |
| 34 | G. சற்குணம், சென்னபட்டணம். | 48 | 67 | 8 | 123 |



## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. அங்கிலேயருக்கும் சீனருக்கும் உண்டான பிணக்கு ஒருவாறு நிவிர்த்தியாயிற்றென்று பிரஸ்தாபிக்கப்பட்டது. மார்கரி துரையைக் கொலைசெய்தவர்களைத் தண்டிக்கவும், அவர் குடும்பத்திற்கு உதவியாய்ப் பணங்கொடுக்கவும் சீனர் உடன்படுவார்கள். சீனாவைச்சேர்ந்த யூனானுக்கும் பர்மாவுக்கும் வர்த்தகப் போக்குவரவு செய்யத்தக்க ஒரு வழி ஏற்படுத்தப்படும்.

ஸ்பானிய கலகம் இன்னும் ஒழிந்ததில்லை. ராஜாவின் சேனைகள் ஸியோதூர்கர் என்னும் அரணான ஸ்தானத்தைப் பிடித்துக்கொண்டன.

துர்க்கியைச்சேர்ந்த ஹர்ஜிகோவினா பிரதேசத்தார் துர்க்கி சுல்த்தானுக்கு விரோதமாய்க் கலகித்திருக்கிறார்கள். அடுத்த நாலைந்து பிரதேசத்தாரும் அவர்களுக்கு இணங்கித் துணைநிற்கப்பார்க்கிறார்கள். சுல்த்தானின் ஆளுகை ஏகாதிபத்தியம் ஆதலால் அவருடைய அதீனத்துக்குட்பட்ட பிரஜைகள் ஒடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒடுக்கப்படும் பிரஜைகளுக்கு ஐரோப்பாவின் மற்றத் துரைத்தனத்தார் துணைநிற்கக் கூடியதானபடியால் சுல்த்தான் தமது ராணுவபலத்தால் கலகக்காரரை அடக்கமாட்டாதவராயிருக்கிறார். துர்க்கி துரைத்தன வருமானம் அதின் செலவுக்குக் கட்டாததினால் அதிகமான கடனும் உண்டாயிருக்கிறது. கடன் மொத்தம் நூறு கோடி ரூபாய். இக்காரியங்களை யோசிக்கிறவர்கள் ஐரோப்பாவிலுள்ள துர்க்கிய துரைத்தனம் காலஞ்செல்ல ஒழிந்துபோமென்று நினைக்கிறார்கள்.

இந்தியா. அலகபாத் முதலிய இடங்களில் சடுதியில் சலப்பிரவாகம் உண்டாயிற்று. அமேதபாத்தில் இதனால் விளைந்த நஷ்டம் பதினைந்து லட்சரூபாய்க்கு அதிகம். இருப்புப்பாதைச் சேதமதிப்பு ஐந்து லக்ஷம்.

வேல்ஸ் பிரபுவாகிய மாட்சிமைதங்கிய இளவரசரவர்கள் நாளது மாசம் 16௳ பிரிண்டிஸியில் மரக்கலம் ஏறி இந்தியாவுக்கு வருவார்கள். முன் தெரிவித்தபடி முதலில் அவர்கள் வந்திறங்குமிடம் பம்பாய். சென்னைமாநகருக்கு டிசம்பர் மாசாரம்பத்தில் வந்து, பின்பு திருச்சிராப்பள்ளி, மதுரைவழியாய் தூற்றுக்குடிக்குச் சென்று கலம் ஏறி கொழும்புக்குப் போவார்கள். மதுரையினின்று தூற்றுக்குடிவரையும் போடப்படுகிற இருப்புப்பாதை இளவரசரவர்களால் பிரதிஷ்டைசெய்யப்படும். இளவரசனை அவர்களது உன்னத அந்தஸ்துக்குத்தக்கதாய் உபசரிக்கும்படி இந்தியாவில் அங்கங்கே எத்தனங்கள் நடக்கின்றன.

## அறிக்கை.

கர்த்தருக்குச் சித்தமானால் 1876௵ செனவரி௴ முதல் நற்போதகமானது முன்னிலும் நாலு பக்கம் அதிகமுள்ளதாயும் வர்ணத்தாள் அட்டையுள்ளதாயுமிருக்கும். அது வழக்கமாய் அடங்கிய போதனைப் பொருளுள்ளதாய்மாத்திரமல்ல, எல்லாரும் பிரியமாய் வாசிக்கத்தக்க பொதுவான சங்கதிகள் அடங்கியதாயுமிருக்கும். அதின் விலை இனிமேல் பிரதி ஒன்றுக்கு * 11 பைசாவாகவிருக்கும். அதற்கு உதவியாக சங்கதிகள் எழுதியனுப்ப மனமுள்ளவர்கள் சாட்சியாபுரத்திலிருக்கிற என்னிடத்திற்கு அனுப்பவேண்டும்.

ரோ. ர. மெடோஸ்.

* இந்த விகிதம் முன் குறைந்த விலைக்கு வாங்கினவர்களுக்கு என்றறிக.

அக்டோபர்மீ நாள் 31. புரட்டாசிமீ 17உ முதல், ஐப்பசிமீ 16உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| வெ | 1 | ௧௭ | கர்த்தரின் மகிமை காணப்பட்டது. எண். 16: 42. |
| ச | 2 | ௧௮ | நானே உன் பங்கும் சுதந்தரமுமாயிருக்கிறேன். 18: 20. |
| ஞா | 3 | ௧௯ | கர்த்தரை நோக்கி நாங்கள் மன்றாடினோம். 20: 16. (7. |
| தி | 4 | ௨0 | கர்த்தருக்கு விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம். 21: |
| செ | 5 | ௨௧ | தேவன்மேல் நம்பிக்கையாயிருப்பேன். யோபு 13: 15. |
| பு | 6 | ௨௨ | அவரே என் இரட்சிப்பு. 16. |
| வி | 7 | ௨௩ | என் அக்கிரமங்களும் பாவங்களும் எத்தனை! 23. |
| வெ | 8 | ௨௪ | என் மீறுதலையும் என் பாவத்தையும் எனக்கு உணர்த்தும். 23. |
| ச | 9 | ௨௫ | உம்முடைய வேதத்தை எனக்கு அருள்செய்யும். சங். 119: 20. |
| ஞா | 10 | ௨௬ | உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன். 31. |
| தி | 11 | ௨௭ | உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன். 32. |
| செ | 12 | ௨௮ | உமது கற்பனைகளின் பாதையில் என்னை நடத்தும். 35. |
| பு | 13 | ௨௯ | மாயையைப் பாராதபடி என் கண்களை விலக்கும். 37. |
| வி | 14 | ௩0 | சத்தியவசனம் என் வாயிலிருந்து நீங்கவிடாதேயும். 43. |
| வெ | 15 | ௩௧ | உமது பிரமாணங்களைத் தியானிப்பேன். 48. |
| ச | 16 | ௧ | துஷ்டன் கலகத்தையே தேடுகிறான். நீதிமொழி 17: 11. |
| ஞா | 17 | ௨ | புரட்டு நாவுள்ளவன் தீமையில் விழுவான். 20. |
| தி | 18 | ௩ | அறிவாளி தன் வார்த்தைகளை அடக்குகிறான். 27. |
| செ | 19 | ௪ | கர்த்தரின் நாமம் பலத்த துருகம். 18: 10. |
| பு | 20 | ௫ | மேன்மைக்கு முன்னானது தாழ்மை. 12. |
| வி | 21 | ௬ | உன் துக்கநாட்கள் முடிந்துபோம். ஏசாயா 60: 20. |
| வெ | 22 | ௭ | சின்னவன் ஆயிரமும், சிறியவன் பலத்த சாதியுமாவான். 22. |
| ச | 23 | ௮ | நீங்கள் கர்த்தரின் ஆசாரியரென்று சொல்லப்படுவீர்கள். 61: 6. |
| ஞா | 24 | ௯ | துதியின் சத்தத்தோடு உமக்குப் பலியிடுவேன். யோனா. 2: 9. |
| தி | 25 | ௧0 | இரட்சிப்பு கர்த்தருடையது. 10. |
| செ | 26 | ௧௧ | நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். யோவான் 15: 15. |
| பு | 27 | ௧௨ | ஊழியக்காரன் தன் எசமானிலும் பெரியவனல்ல. 20. (20. |
| வி | 28 | ௧௩ | நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும். 16: |
| வெ | 29 | ௧௪ | புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். 1 கொ. 5: 6. |
| ச | 30 | ௧௫ | கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறார். 7. |
| ஞா | 31 | ௧௬ | நமது தேவனுடைய ஆவியினால் கழுவப்பட்டீர்கள். 6: 11. |

## விசேஷித்த நாட்கள்.

3. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், பத்தொன்பதாம் ஞாயிறு.
10. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபதாம் ஞாயிறு.
14. பௌரணமி.
17. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்தோராம் ஞாயிறு.
24. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்திரண்டாம் ஞாயிறு.
29. அமாவாசை.
31. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்திமூன்றாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. November. No. 11.

### Contents:

Bible Sketches and their Teachings. ... ... ... 202
The Life of St Ambrose, Bishop of Milan.- ... ... 206
Notes on Exodus. ... ... ... ... ... ... 211
Summary of News. ... ... ... ... ... ... 219

### அட்டவணை:

பாலபோதனை. ... ... ... ... ... ... ௨0௨
அம்புரோஸ் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... ௨0௬
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... ௨௧௧
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௨௧௯

Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௰௧. நவம்பர்மீ. ௲௮௱௭௫.


## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### கர்மேல் பர்வதத்தின் மீது நடந்த பரீட்சை.

1 இராசாக்கள் 18ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

மூன்முவது. அவர்கள் எவ்வளவு ஆவலோடு பிரார்த்திக்கிருர்களென்று பாருங்கள். எலியாவும் பிரார்த்தித்தானே, அவன் எவ்வளவு மன அடக்கத்தோடும் அமரிக்கையோடும் செய்தான். என்னத்திஞலே அப்படியென்று கேட்கிறீர்களோ? அவன் தன் தேவனை நன்முய் அறிந்திருந்ததுதான் அதற்குக் காரணம். பாகாலின் பூசாசாரிகள் தங்கள் விக்கிரகங்களைப் பார்த்துப் பிரார்த்தித்ததோ அவ்விதமல்ல. அந்தக் காட்சியைச் சற்று பாருங்கள். அதோ அவர்கள் கட்டின பலிப்பீடம். பலியடித்துத் துண்டித்த காளையின் சந்துக்கள் அதின்மீது வரிசை வரிசையாய் வைக்கப்பட்டிருக்கின்றனவே. சனக்கூட்டமெல்லாம் அதைப் பார்த்த கண்ணுய் நிற்கிருர்கள். அந்த நானூற்றைம்பது பூசாசாரிகளும் பலிப்பீடத்துக்குமுன்னே பிரார்த்திக்கிறவர்களாய் நிற்கிருர்கள்; மூர்க்கவெறியாய் இங்குமங்கும் குதிக்கிருர்கள்; கத்திகளையும் ஈட்டிகளையும் இப்படியும் அப்படியும் விசிறுகிருர்கள்; ஓரோர்வேளை ஏகோபித்து ஆர்ப்பரிக்கிருர்கள். அப்புறம் சிலர் தணிந்த சத்தமாய்ச் சன்னதஞ்சொல்லுகிருர்கள். ஒரு நிமிஷம்போல் எல்லாம் அமரிக்கையாயிருக்கிறது; உடனே திடீரென்று "பாகாலே எங்களுக்குச் செவிகொடும்" என்று எல்லோரும் முழங்குகிருர்கள். ஆகிலும் எல்லாம் வியர்த்தந்தான். இடிமுழக்கமுமில்லை; எவ்வகையான சப்தமுமில்லை; வானத்திலிருந்து அக்கினி இறங்கவுமில்லை.

இந்த விககிரகபத்திக்காரரால் நமக்கு ஒரு நல்ல படிப்பினையுண்டாகிறது. அவர்கள் தங்கள் பொய்த்தெய்வத்துக்காக எந்தப் பிரயாசத்தைப் படவும் எந்த வருத்தத்தைச் சகிக்கவும் ஆயத்தமாயிருந்தார்களே. நமக்கும் ஒரு எசமானிருக்கிருரல்லவா? அவருக்கு ஊழியஞ்செய்கிறது எவ்வளவு லேசு, எவ்வளவு பாக்கியம். "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்லவே" அவைகளைக் கைக்கொள்ளுகிருேமா? மற்றப்படி அவர்கள் பொய்க்காக இவ்வளவு ஊக்கமும் வைராக்கியமுங் காண்பிக்க, நாம் சத்தியத்தைக்குறித்து அசதியுள்ளவர்களாய் ஊக்கமற்றிருப்போமாகில், கடைசி நியாயத்தீர்ப்பில் அந்த விக்கிரகாராதனைக்காரர் நமக்கு விரோதமாயெழும்பி நம்மேல் அசாக்கிரதைக்காரரென்று குற்றஞ்சாட்டமாட்டார்களோ?

நாலாவது. இன்னமும் நாம் கவனிக்கவேண்டிய படம் ஒன்றிருக்கி



றது. அதென்னவென்ருல் அத்தருணத்தில் செலுத்தப்பட்ட பலிதான்.
"அக்கினியினுல் உத்தாவு அருளும் தெய்வமே தெய்வம்."
அது விக்கிரகாராதனைக்காரராகிய அவர்களுக்கு நன்முய் விளங்கத்
தக்க காரியம். பாகால் சூரியனென்றும். சூரியகதிர்கள் வானமண்ட
லத்திலிருந்து எரிக்கிறதோடு தங்கள் தேவனுடைய வல்லமை வெளிப்
படுமென்றும் நினைத்தார்கள். ஆம், சூரியனிடத்திலிருந்து அக்கினியி
றங்கி பலியைத் தகனிக்குமென்று எதிர்பார்த்திருந்தார்களென்பதற்குச்
சந்தேகமில்லை. அதோ வானமண்டலத்தில் சூரியன் உயரமாய் ஏறிஏறி
மத்தியானமாகிவிட்டது. பலிப்பீடத்தில் ஒரு தீப்பொறியாவது காணப்
படவில்லை. பூசாசாரிகள் வெறிகொண்டவர்கள்போல குதிக்கிருர்கள்.
எலியா அவர்களைப் பார்த்துப் பரியாசம்பண்ணுகிருன். உங்கள் தேவன்
எங்கே? சூரியன் அதோ மெள்ளமெள்ள மேற்கே இறங்குகிருன். நிழல்
கள் நீளுகின்றன. உஷ்டணந் தணிகிறது. அவர்கள் நம்பிக்கையுமெல்
லாங் குலைந்துபோயிற்று. சூரியன் அடிவானத்தைக் கிட்டுகிறபொழு
து, எலியா சனங்களைத் தன்னண்டை அழைத்து நிறுத்திக்கொண்டு,
தன் சத்தத்தை உயர்த்திப் பிரார்த்தித்தான். அவன் பிரார்த்தித்ததோ
டு, அதிசயமானவிதமாய் அக்கினி வானத்திலிருந்து பளீரென்று மின்னி
பலிப்பீடத்திலிறங்கி, சகலத்தையும் பட்சித்துவிட்டது. முதலாவது
பலிப்பீடத்தின்மேலே வைக்கப்பட்டிருந்த காளையின் துண்டங்களும்
பின்பு அதன்மேல் அடுக்கியிருந்த விறகுக்கட்டைகளும் காணுமற்போய்
விட்டன. அப்புறம் பலிப்பீடம் கட்டியிருந்த கற்களும் வாய்க்காலி
லிருந்து தோண்டிப்போட்டிருந்த மண்ணுமெல்லாம் அக்கினிபோல்
எரிந்து சாம்பலாய்ப் போய்விட்டது. கடைசியில் பலிப்பீடத்தைச் சுற்
றிலும் ஆழமாய் வெட்டியிருந்த வாய்க்காலில் நிறைந்திருந்த தண்ணீ
ரையெல்லாம் அக்கினி நாவுகள் பட்சித்து, அவ்விடம் முழுமையையும்
வெறுமையாக்கிவிட்டது. அதன்பேரில் "சனமெல்லாம் முகங்குப்புற
விழுந்து, கர்த்தரோ தெய்வம் கர்த்தரோ தெய்வம்" என்று ஆர்ப்பரித்த
து ஆச்சரியமல்லவே.,

இக்காலத்தில் தேவன் தமது மகத்துவத்தையும் பிரசன்னத்தையும்
இந்தவிதமாய் வெளிப்படுத்துகிறதில்லையென்று நீங்கள் நன்முய் அறி
வீர்களே. இஸ்ரவேலர் பார்க்கவும் கேட்கவுந்தக்க இடிமுழக்கம் மின்
னல் அக்கினிச்சுவாலைமுதலிய அடையாளங்களின் மூலமாய் தேவன்
தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினூர். நமக்கு அவர் அப்படிச்செய்
கிறதில்லை. தேவன் இப்பொழுது இங்கிருக்கிருர் என்று அறிவோம்.
ஆகிலும் ஏதாவது காட்சியைக் காண்கிருேமா? யாதொரு சப்தத்தைக்
கேட்கிருேமா? இல்லையே. அப்படியானுல் அவர் நம்முடைய செபங்
களைக் கேட்டு நமக்கு தமது மகிமையை வெளிப்படுத்துகிற வகையென்
ன? நம்முடைய இருதயத்திலே பேசுகிறதினூலேதான். அவரைத் தேடு
கிற ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அவருடைய நல்லாவியானவர்
வந்திறங்கி, நல்லெண்ணங்களையும் நல்விருப்பங்களையும் மகிமையான
நம்பிக்கையையும் அங்கே உண்டுபண்ணுகிருர். இதை "அக்கினியினுலே
உத்தரவு அருளுகிறது" என்று சொல்லலாம். ஒரு விசை அந்த ஆவியா
னவர் பிரிந்த அக்கினி நாவுகளின ரூபமாய் இறங்கிவந்ததை அறிவீர்க
ளே. பாவத்தை எரித்துவிடவும் நம்முடைய ஆத்துமங்களில் வெளிச்
சத்தையும் அன்பையும் நிரப்பவும் அவர் இப்பொழுதும் இறங்கிவருகி
ருர். "இயேசுவானவர் பரிசுத்தாவியினுலும் அக்கினியினுலும் உங்க
ளுக்கு ஞானஸ்நானங்கொடுப்பார்" என்று சொல்லியிருக்கிறதே.

## எலிஷா செய்த அற்புதங்கள்.

### 2 இராசாக்கள் 4, 5 ம் அதிகாரங்கள்.

மேலே குறித்திருக்கிற அதிகாரங்களில் அடங்கிய எலிஷாவின் சரித்திரம் ஒரு மகா சித்திரகூடத்துக்கு ஒப்பாயிருக்கிறது. சுவர் நெடுகத் தூக்கியிருக்கிற படங்கள் மிகுதியும் மகத்துவமான அற்புதங்களைக் காட்டிய பாவனைகளே.

“ஆ, இந்தப் பெரிய அற்புதங்கள் நடந்த காலத்தில் நானிருந்தேனில்லையே. வியாதிகளைச் சொஸ்தப்படுத்தவும், விஷத்தை மதுரமான ஆகாரமாக மாற்றவும், மரித்தவர்களை உயிர்ப்பிக்கவும் கூடிய ஓர் தீர்க்கதரிசி நமக்குள்ளுமிருந்தால் எவ்வளவு மகிமையாயிருக்கும்” என்று இதை வாசிக்கிறவர்களிற் சிலர் சொல்லுவீர்கள். இப்படி நினைப்பது இயல்புதான். ஆகிலும் அது புத்தியா? சனங்கள் அக்கிரமத்தில் மிஞ்சிப்போயிருந்த காலத்தில் நடந்த அதிசயங்கள் இவைகள். அவர்கள் தேவனை முற்றிலும் மறந்து, துன்மார்க்கத்தில் அமிழ்ந்துபோயிருந்தபடியால், அவர்களை வெட்கப்படுத்தி எழுப்பிவிடவும் தேவனை நினைக்க அவர்களை யேவிவிடவுமாக இந்த அற்புதங்கள் செய்யப்பட்டன. உதயமாகிற சூரியனிடத்திலும் புல்லில் பிரகாசிக்கும் பனித்துளிகளிடத்திலும் பட்சிகள் பாடும் பாட்டுக்களினிடத்திலும், தேவனால் இடைவிடாமல் அருளப்படும் ஆகாரம் சுகம் செல்வம்முதலிய இரக்கங்களினிடத்திலும் அவர்கள் தேவனை அறிந்துகொள்ளாமற்போனதால், இந்த மகா அதிசயங்களைக்கொண்டு அவர்களை யெழுப்பிவிடத் தேவன் சித்தமானார். மற்றவகையான பிரசங்கங்களுக்கு அவர்கள் செவிகொடுக்கவே மாட்டார்களென்று கண்டு, தேவன் எலியா, எலிஷாமுதலிய மகா தீர்க்கதரிசிகளுக்குத் தமது ஆவியை அருளிச்செய்து, அவர்கள் வார்த்தைகளையுஞ் செய்கைகளையுங் கொண்டு சகலரையும் ஆச்சரியத்தினால் நிரப்பி அவர்கள் உணர்வுள்ளவர்களாகும்படி அவர்களைத் தட்டியெழுப்பிவிட்டார். ஆகையினாலே ஒருவகையில் தீர்க்கதரிசிகளும் அவர்கள் செய்த அற்புதங்களும் சனங்களுடைய துன்மார்க்கத்தைக் காட்டுகிற குறிப்புகளாயிருந்தனவென்று சொல்லத்தக்கதல்லவா? சர்வவல்லமையும் சர்வவியாபகமும் மகா பரிசுத்தமுமுள்ள தேவன் ஒருவர் இருக்கிறாரென்று நமக்கு உணர்த்துவதற்கு அப்பேர்ப்பட்ட அற்புதங்கள் வேண்டுமோ?

இப்பொழுது இந்தப் படங்களிற் சிலவற்றைப் பார்ப்போம். முதலாவது அதோ சற்று தூரத்தில் (1 இராசாக்கள் 19: 19, 21.) ஒரு வாலிபன் தன் தகப்பன் வேலைக்காரரோடு அநேக ஏர்கள் கட்டி உழுதுகொண்டு நிற்கிறான். அப்படி உழுதுகொண்டு நிற்கிறவேளையில ஒரு தீர்க்கதரிசி அந்த வழியாய் வந்து மேற்படி வாலிபன் நிற்கிற இடமட்டும் போய் அவன் மேலே தன் சால்வையைப்போடுகிறான். அந்த வாலிபன் மேற்படி செய்கையைத் தேவனுடைய அழைப்பு என்று நிச்சயித்துக்கொண்டு, உடனே தன்னோடிருந்த சிநேகிதர்களுக்கு விருந்து செய்வித்து தாய் தகப்பன்மார்களையும் வழியனுப்பிவிட்டு அதுமுதல் எலியாவுக்கு ஊழியக்காரனாகிறான். இவன் எலிஷாவென்று அறிவீர்களே.

அப்புறம் இரண்டொரு வருஷம் கழிகிறது. திரும்பவும் எலிஷா நமக்குத் தென்படுகிறான். அதோ அவன் யோர்தான் நதியின் கரையிலேறி வருகிறதைப் பாருங்கள். அவன் முகத்தில் ஓர் வகையான பிர



காசங் காணப்படுகிறது. அது சந்தோஷத்துக்குக் குறிப்போ துக்கத்துக்குக் குறிப்போவென்று சொல்ல ஏதுவில்லை. கனபத்தியாயிருக்கிறதென்று மாத்திரஞ் சொல்லத்தக்கது. அன்றைத்தினத்தில் அதிசயமான காரியங்களைக் கண்டிருந்தான். அதோ அவன் எசமானின் பழய சால்வை அவன் கையிலிருக்கிறது பாருங்கள். எலியாவையோ அப்புறம் ஒருக்காலும் அவன் காணப்போகிறதேயில்லை. அவர்களிருவரும் சம்பாஷித்துக்கொண்டு நிற்கையில், வானத்திலிருந்து அதிசயமாய் ஒரு ஒளி பளீரென்று பிரகாசித்தது. உடனே அக்கினி ரதமும் அக்கினிக்குதிரைகளுங் காணப்பட, எலியா அதிலேறி மேலே போய்விட்டான். ஆனாலும் அவனுடைய சால்வை மேலேயிருந்து எலிஷாவின் பேரில் வந்து விழுந்தது. எலிஷா அதை எடுத்துக்கொண்டு, தான் விரும்பியபடி எலியாவின் ஆவி தன் பேரில் இரட்டிப்பாயிருக்குமென்ற நிச்சயத்தோடு திரும்பினான்.

அதுமுதல் அற்புதத்தின்மேல் அற்புதம் நடக்கிறதைக் காண்கிறோம். சில சனங்கள் குடியேறியிருந்த ஓரிடத்தில் ஊற்றுச்சலம் கசப்பாயும் கெட்டதாயுமிருந்தபடியால் நிலம் பாழாயிருந்தது. அந்தச் சனங்கள் கேட்டுக்கொண்டதின்பேரில், எலிஷா ஒரு வார்த்தை சொல்ல, சலம் தித்திப்பும் நிலம் செழிப்புமாகிவிட்டது. அப்புறம் பயங்கரமான ஒரு அற்புதம் நடந்தது. சில துஷ்ட வாலிபர் கூடிவந்து எலியா பரமண்டலத்துக்குப்போனதாக அவன் சொன்ன சங்கதியைக்குறித்து இகழ்ந்து அவனைப் பரியாசம்பண்ணினார்கள். “மொட்டைத்தலையா ஏறிப்போ, அவன் ஏறிப்போனதுபோல நீயும் ஏறிப்போ” என்றார்கள். இது தேவனைப் பரியாசம்பண்ணுகிறதல்லவா? அப்படியே தேவன் தமது மகா வல்லமையையும் கோபாக்கினையையும் அவர்களிடத்தில் வெளிப்படுத்தினார். காட்டிலிருந்து இரண்டு கரடிகள் புறப்பட்டு வந்து அவர்களில் நாற்பத்திரண்டு பேரைப் பீறிப்போட்டது.

அதற்குப்பிறகு மூன்று இராசாக்கள் சேர்ந்து ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு யுத்தத்துக்குப் போகிறார்கள். ஆனாலும் ஒவ்வொருவர் முகத்திலும் துக்கமும் பயமும் விளங்குகிறது. ஏனென்று கேட்கிறீர்களோ? அவர்கள் சத்துருவினால் ஜெயிக்கப்பட்டுப்போனதினாலுமல்ல, சண்டை கலக்கப்போகிறதினாலுமல்ல. அதைவிடக் கொடிய ஆபத்து அவர்களுக்கு நேரிட்டிருப்பதினாலேதான். அவர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அதோ எலிஷா அந்த இராசாக்களுக்கு முன்னே நிற்கிறான். வாத்தியக்காரன் ஒருவன் சுரமண்டலம் வாசிக்கிறான். உடனே எலிஷா அவர்களை நோக்கி, “பள்ளத்தாக்குகள் எங்கும் வாய்க்கால்களை வெட்டுங்கள். நீங்கள் காற்றையுங் காணமாட்டீர்கள், மழையையுங் காணமாட்டீர்கள். ஆனாலும் இந்தப் பள்ளத்தாக்கு தண்ணீரால் நிரப்பப்படும்” என்றான். அவன் சொன்னபிரகாரம் நடந்தது. இந்தத் தண்ணீர் எங்கிருந்து வந்தது என்று கேட்கிறீர்களோ? இதற்கும் ஒரே உத்தரவுதான். எலிஷாவுக்கு அருளப்பட்ட தேவனுடைய வல்லமையினாலேயே இதுவும் நடந்தது.

அந்த இராசாக்கள் இப்பொழுது நம்முடைய படத்தில் மறைந்து போகிறார்கள். ஒரு ஏழை விதவை ஸ்திரீ அதற்குப் பதிலாகக் காணப்படுகிறாள். அவள் வீட்டில் ஒரு குடம் எண்ணெய் மாத்திரமிருக்கிறது. அவளுக்குக் கடனோ மிகுதியாயிருக்கிறது. கடன் கொடுத்தவனோ அவளுடைய அருமைப் பிள்ளைகளைத் தனக்கு அடிமைகளாக்கிக்கொண்டுபோக வந்திருக்கிறான். இந்த ஆபத்துநேரத்தில் அவள் எலிஷாவினிடத்தில் வந்து உதவிக்காகக் கெஞ்சுகிறாள். அதன்பேரில் தேவனுடைய

வல்லமையினாலே அவன் அந்த ஒரு குடம் எண்ணெயைக்கொண்டு, அநேக குடங்களை நிரப்பிக்கொடுத்து அவள் கடன் தீரவும் சீவனார்த்தமுண்டாகவுஞ் செய்கிறான்.

இதுவும் அற்புதந்தானே. அப்புறம் வருகிற சரித்திரம் எவ்வளவு நேர்த்தியானது. இந்தப் படத்தைப் பாருங்கள். அதோ அருமையான ஒரு பிள்ளை செத்துப்போய்க் கட்டிலிற் கிடக்கிறது. தாயோ "பிள்ளை சுகமாயிருக்கிறது" என்கிறாள். என்னத்தினாலே அப்படிச் சொல்லுகிறாள்? அந்தப் பிள்ளை திரும்பவும் உயிர்த்து சுகமாயிருக்குமென்று அவள் நம்புகிறதினாலே தான். இப்பொழுதிருக்கிற கிறிஸ்தமான தாய்மார் அறிந்திருக்கிற அளவு அந்தப் பெண்பிள்ளை அறிந்திருப்பாளாகில், செத்துப்போன குழந்தையை உயிர்ப்பிக்கிறதற்குத் தீர்க்கதரிசி இல்லாதேபோனாலும் அந்தப்பிரகாரம் சொல்லக்கூடியவளாயிருப்பாளென்பதற்குச் சந்தேகமில்லை. ஆம் எத்தனையோ தாய்மார், இறந்துபோன தங்கள் அருமைப் பிள்ளைகளின் தேகங்களைப் பார்த்தோ அல்லது அதுகள் சேமிக்கப்பட்டிருக்கிற கல்லறைகளண்டை நின்றோ, "நல்லது தான், என் அருமைப் பிள்ளை இயேசுவினிடத்திலிருக்கிறது. நாங்கள் திரும்பவும் ஒருவரையொருவர் காண்போம்" என்று சொன்னதுண்டு. பிரியமானவர்களே, தேவன் உங்களை அழைத்துக்கொள்ளுகிறதுண்டானால், உங்கள் தாய்தந்தைகளாவது உங்களுக்குப் படிப்பிக்கிற வாத்திமார் வாத்திச்சிகளாவது அந்தப்பிரகாரம் சொல்லக்கூடுமோ? அந்தச் சூனேமியாள் சீக்கிரம் இவ்வுலகத்திலேயே தன் மகனைத் திரும்பவும் உயிரோடே பெற்று சந்தோஷமடைந்தாள். அப்பொழுதுண்டான சந்தோஷத்தினாலே பேசக்கூடமாட்டாமலிருந்தாள். "அவள் உள்ளே போய், அவன் பாதத்தில் விழுந்து, தரைமட்டும் பணிந்து, தன் குமாரனை எடுத்துக்கொண்டு வெளியேபோனாள்." செபத்தின் வல்லமையைக் காண்பிக்கும்படி பிள்ளையின் சீவன் திரும்பவும் அதற்குக் கொடுக்கப்பட்டதென்று எலிஷா அறிந்திருந்தான்.

---

## St. Ambrose, Bishop of Milan.

# அம்புரோஸ் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

மறுநாள் ஓய்வுநாளானதினால் பிரசங்கமுடிந்தபிறகு அம்புரோஸ் கண்காணியார் ஞானஸ்நானம்பெற ஆயத்தப்பட்டிருந்தவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கப்போயிருந்தார். ஞானஸ்நானங்கொடுத்துக்கொண்டிருக்கும்பொழுதே, சங்கத்தாரால் அனுப்பப்பட்ட சில உத்தியோகஸ்தர் ஒரு கோவிலைத் தங்கள் கைவசப்படுத்துகிறார்களென்றும் அநேக சனங்கள் அவ்விடத்திற்போய்ச் சேருகிறார்களென்றும் கேள்வியானார். என்றாலும் அவர் ஞானஸ்நான ஆராதனையை நடத்திக்கொண்டேபோனார். மேற்படி ஆராதனை முடிகிறதற்குள்ளாக தெருவில் நின்ற சனங்கள் கஸ்துலுஸ் என்ற ஆரியக் குரு ஒருவனைப் பிடித்துவைத்திருக்கிறார்களென்றும் அவனுக்கு ஏதாவது அபாயம் நேரிடும்போலிருக்கிறதென்றும் அவருக்கு வந்து அறிவித்தார்கள். அவர் அதைக் கேட்டமாத்திரமே வியாகுலமடைந்து, ஒருவனுடைய இரத்தமுஞ் சிந்தப்படாது, என்னுடைய சீவனைவேண்டுமென்றால் கொடுக்கிறேனென்று சொல்லி, கஸ்துலுஸ் என்பவனைத் தப்புவிக்கும்படிக்குச் சில குருமார்களையும் உதவிக்குருமார்களையும் அனுப்பினார். அவர்கள்போய் அவனைச் சேதமில்லாமற் கொண்டுவந்தார்கள். அதன்பேரில் மேற்படி அமளியில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதிகளாக்கும்படி சங்கத்தார் வாரண்டு பிறப்பித்து, அந்த நாட்கள் வழக்கமாய்க் கைதிகளை விடுதலைசெய்கிற பாடுபட்ட பண்டிகை நாட்களாயிருந்தும், அநேக வர்த்தகர்களையும் மற்றவர்களையும் பிடித்துச் சிறைச்சாலையிலடைத்தார்கள். அவர்களை விடுதலைசெய்வதற்கு மிகுந்த திரவியங் கேட்டபோதிலும், சத்தியத்தினிமித்தம் அதற்கு மனப்பூர்வமாய்ச் சம்மதித்துக்கொண்டார்கள். கோவிலை விட்டுவிடும்படி அதிகாரிகளையும் பலமாய்ப் பயமுறுத்தினார்கள். அவர்கள் அநுகாரியத்தைக்குறித்துக் கண்காணியாரோடு கலந்துபேசி, இராயன் கேட்பது நியாயம் என்பதுபோல பாராட்டி கோவிலை விட்டுவிடும்படி அவருக்கு யோசனைசொன்னார்கள். அவர் அதற்கு மாறுத்தரமாக, "என்னுடைய பொருளில் எதையாவது இராயன் கேட்டால் தடைபண்ணாமல் விட்டுவிடுவேன். தேவனுக்குரியவைகளோ இராயனுடைய அதிகாரத்துக்குட்பட்டவைகளல்ல" என்றார். அவர் இவ்வளவு பிடிவாதமாயிருக்கிறதை மேற்படி உத்தியோகஸ்தர்கள் கண்டு, சனங்கள் அமளிபண்ணாதிருக்கும்படி அவர்கள் மனதைச் சாந்தப்படுத்தக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர், "தேவன் மாத்திரமே அப்படிச்செய்யக் கூடியவர். நான் அமளிக்குக் காரணனென்று நினைப்பீர்களாகில் அந்தப்படிக்கு என்னை நடப்பியுங்கள்" என்றார். அவர்கள் அப்புறம்போய்விட, அவர் பகல்முழுவதும் கோவிலுக்குள்ளேயேயிருந்துவிட்டு, அவர்கள் தம்மை பிடிக்க வருவார்களாகில் அதற்குத் தயாராயிருக்கும்பொருட்டு, இரவில் வீட்டுக்குப்போனார். மறுநாள் அதிகாலையில் அவர் கோவிலுக்குப் போகும்போது, போர்ச்சேவகர் அதைச் சுற்றிக் காவல்பண்ணியிருக்கிறதைக் கண்டார். அவர் செபம் வாசிக்கையில், ஒருவன் அவரை நோக்கி, "இராயனுடைய கட்டளையை மீறி கோவிலுக்குள் குருமார்களைப் போகவிட்டதேன்? இராயனுடைய அதிகாரத்தையும் பறித்துக்கொள்ள நோக்கங்கொண்டிருக்கிறீரோ" என்றான். அதற்கு மறுமொழியாக அவர் சொன்னது, "நான் அப்பேர்ப்பட்ட நோக்கமுடையவனென்று நீங்கள் எண்ணுவீர்களாகில் நீங்கள் ஏன் என்னை நன்றாய்த் தண்டிக்கிறதில்லை. இராயன் என்பேரில் அந்தக் குற்றஞ்சாட்ட இடமில்லை" என்றார். கோவிலுக்குள்ளிருந்து ஒருவரும் வெளியே வரக்கூடாதபடி போர்ச்சேவகர் கோவிலைக் கெட்டியாய்க் காபந்துசெய்தபடியால், அவர் இரவெல்லாம் அங்கேயே பின்னிடவேண்டியதாயிற்று. மறுநாள் காலையில் போர்ச்சேவகரொல்லாம் போய்விட்டார்கள். சனங்களிடத்தில் தண்டம் வாங்கின பணத்தையும் திரும்பக் கொடுத்துவிட்டார்கள். ஆகிலும் கண்காணியாருக்கு இன்னம் அபாயம நேரிடத்தக்கதாகவேயிருந்தது. கலிகோனு என்னும் பிரதானி ஒருநாள் அவரைக் கண்டு, "நானிருக்கும்பொழுது நீ இராயனை அவமானப்படுத்துகிறதாச்சுதா, உன் தலையை வாங்கிப்போடுகிறேன் பார்" என்றான். அதற்குக் கண்காணியார் மாறுத்தரமாக, "சர்வத்துக்கும் வல்ல தேவன் தமக்குச் சித்தமானால் நீ சொன்னபடி நிறைவேற்றவிடுவாராக. கண்காணிக்கேற்றபடி நான் சகிப்பேன். நீயும் பிரதானிக்கேற்றபடி செய். ஆகிலும் உன்னைப்போலொத்தவர்கள் கையினின்று தேவன் தமது சபையைக் காப்பாராக" என்றார்.

ஆரியருக்கு அனுகூலமாய்த் தான் பண்ணின பிரயத்தனங்களெல்
லாம் அம்புரோஸ் கண்காணியாரால் அவமாய்ப் போயினவென்று யூஸ்
தீனாள் கண்டு, கடுங்கோபமடைந்து அவரைக் கொலைசெய்யும்படி ஒரு
சதிகாரனை அனுப்பினாள். அவர் தம் படுக்கையறையிலிருக்கையில் அந்
தப் பாதகன் உருவின பட்டையத்தோடு உள்ளே பிரவேசித்து அவரை
வெட்டுகிறதற்கு கையை ஓங்கினபொழுது அந்தக் கை அசைக்கக்கூடா
தபடி மரத்துப்போயிற்றாம். அதன்பேரில் அந்தப் பாதகன் நடுநடுங்
கி தான் வந்த நோக்கத்தை அறிக்கையிட்டு, இராணி தனக்கு லஞ்சங்
கொடுத்து அப்படிச்செய்யச் சொன்னதாக அறிவித்தான். அப்புறம்
கண்காணியார் அவனுக்காக தேவனிடத்திற் பிரார்த்திக்க அவனுடைய
கை மறுபடியுஞ் சொஸ்தமாயிற்று என்றுஞ் சொல்லியிருக்கிறது.
மக்ஸீமஸ் என்பவன் இத்தாலியா தேசத்தின்மேல் படையெடுத்துப்
போகிறதற்கு மறுபடியும் எத்தனம்பண்ணுகிறானென்று ரோம ராயன்
கேள்வியாகி, திரும்பவும் அவனைத் தடுக்கும்படி அம்புரோஸ் கண்காணி
யாரைக் கேட்டுக்கொண்டான். கண்காணியார் இராயனால் எத்தனையோ
அநியாயங்களைச் சகித்திருந்தும், அதையெல்லாம் பாராட்டாமல் இரா
யனுடைய கோரிக்கைக்கு இணங்கி, தட்சணமே மக்ஸிமஸ் அப்பொ
ழுது பாளையமிறங்கியிருந்த இடம்போய்ச் சேர்ந்தார். போய்ச் சேர்ந்த
உடனே அவனைக் கண்டு பேசி, அவனுடைய துரோக புத்தியையும் நிஷ்
டூர குணத்தையும் விசேஷமாய் கிரோஷன் என்ற ஒருவனை அவன்
கொலைசெய்வித்ததையும் பலமாய்க் கண்டித்தார். மக்ஸிமஸ் என்பவன்
அவரை மகா கனிசமாய் உபசரித்தபோதிலும், அவனுடைய சதியோ
சனையை அவர் அறிந்து, உடனே மிலான் நகரத்துக்குத் திரும்பி மக்ஸி
மஸ் எவ்வளவு இந்திரசாலங் காண்பித்தபோதிலும் அவனை ஒருபொழு
தும் நம்பாமல் எச்சரிக்கையாயிருக்கும்படி இராயனுக்கு யோசனைசொ
ன்னார். அப்புறம் இராயன் வேறொரு ஸ்தானாபதியை அனுப்ப, அவனை
யும் மக்ஸிமஸ் வெகு பட்சமாயுபசரித்து வலந்தினியனுக்கு உதவிசெய்
கிறதுபோல பாசாங்கு காண்பித்து தன் சேனையில் ஒரு பாகத்தை
அவனோடு கூட அனுப்பினான். அவர்கள் ஆல்ப்ஸ் மலைக்கு வந்தவுடனே
மக்ஸிமஸ் தடையின்றி இத்தாலியாவிற் பிரவேசிக்கத்தக்கதாக கண
வாய்களைப் பந்தோபஸ்துச் செய்துகொண்டார்கள். இந்தப்பிரகாரம்
மக்ஸிமஸ் இத்தாலியாவுக்குள் வந்துவிட்டானென்று இராயன் கேள்வி
யானமாத்திரமே, தன் சீவன்தப்பக் கடல்மார்க்கமாய் தெசலோனிக்
காவுக்கு ஓடிப்போய், அங்கிருந்து உடனே தியொடொசியு என்பவன்
தனக்கு உதவிசெய்ய வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். மக்
ஸிமஸ் என்பவன் இதனிடையில் இத்தாலிதேசத்துக்குள் பிரவேசித்து
அநேகரைச் சங்கரித்து மற்றவர்களைச் சிறைகளாக்கினான். இந்தத்
துன்பகாலத்தில் அம்புரோஸ் கண்காணியார் கஷ்டப்பட்ட சனங்களு
க்கு உதவிசெய்வதில் மிகவும் முயற்சியாயிருந்தார். வலந்தினியனை
மறுபடியும் சிம்மாசனத்தில் வைக்கும்பொருட்டு, தியொடொசியஸ்
என்பவன் ஏராளமான ஒரு சேனையைத் திரட்டிக்கொண்டு புறப்பட
வே, மக்ஸிமஸ் எனபவன் கடல்மார்க்கமாய் ரோமாபுரிக்கு வருவா
னென்று நினைத்து அவனை யெதிர்க்க ஆயத்தமாயிருந்தும் தியொடோ
சியஸ் என்பவன் மலைக்கணவாய்கள் வழியாய் அவனுக்குத் தெரியாத
பிரகாரம் வந்து அவனைச் சிம்மாசனத்திலிருந்து தள்ளி கனவீனப்படுத்
தியபின் சிரச்சேதஞ்செய்வித்து இவ்விதமாய் இத்தாலியாதேசத்தில்
சமாதானம் நிலைக்கச்செய்தான். அப்புறம் தெசலோனிக்கே நகரத்
தார் யாதோ காரணத்தையிட்டுக் கலகம்பண்ணி இரண்டொரு உத்



தியோகஸ்தர்களைக் கொன்றுபோட்டார்களென்று தியோடோசியஸ்
மிலான் நகரத்திற் சேர்ந்தபொழுது கேள்விப்பட்டு, அவர்களைச் சிட்
சிக்கும் நோக்கமாய் அவர்களை வேட்டையாடும்படி தன் போர்வீரருக்
கு உத்தரவுபண்ணினான். அம்புரோஸ் அதையறிந்து தியோடோசியஸ்
என்பவனிடத்தில் உடனே போய் அந்தச் சனங்களுக்காக வெகுவாய்
மன்றாடினதினாலே இராயன் மேற்படி குற்றத்தை மன்னித்துவிடுவ
தாக வாக்குக் கொடுத்தான். என்றாலும் கண்காணியார் போய்விட்ட
பிறகு, இராயன் தன் பழய தீர்மானத்தை நிறைவேற்றும்படி இராச
சமுகத்திலிருந்த உத்தியோகஸ்தரால் ஏவிவிடப்பட்டு, சனங்களை வே
டிக்கை பார்க்க அழைக்கிறதுபோல வேடிக்கை ஸ்தலத்துக்குத் தந்தி
ரமாய் வரவழைத்து, தன போர்வீரரைக்கொண்டு குற்றவாளிகளும்
குற்றமற்றவர்களுமான ஏழாயிரம் பேரைக் கொலைசெய்வித்தான்.
கண்காணியாருக்கு இதுகாரியந் தெரியவந்தபோது, இராயனுக்கு
நிருபமெழுதிப் பலமாய்க் கடிந்துகொண்டதுமல்லாமல், பகிரங்க
மாய்த் தன் பச்சாதாபத்தைக் காண்பித்தாலேயல்லாமல், கர்த்தரு
டைய இராப்போசனப் பந்தியைச் சேரப்படாதென்றுங் கற்பித்தார்.
இராயன் மிலான் நகரத்துக்குத் திரும்பினபிறகு தேவாலயத்தின் வா
சலண்டை வந்து தேவாலயத்துக்குட் பிரவேசிக்கப் பார்த்தும், கண்
காணியார் அவனை உள்ளே பிரவேசிக்கவிடாமல் தடுத்துப்போட்டார்.
தேவாலயத்துக்குட்போக விடாமல் தடுத்ததல்லாமலும் கண்காணி
யார் தன்னைக் கண்டித்த கண்டனையினாலே இராயன் பிரமிப்படைந்து
திகைத்துப்போய், உரியாவின் விஷயத்தில் தாவீது நடப்பித்த காரி
யத்தைத் தன் குற்றத்துக்குப் போக்காக எடுத்துச்சொன்னான். அதற்
கு அம்புரோஸ், நல்லது, தாவீதைப்போல குற்றஞ்செய்த நீயும் தாவீ
தைப்போல உத்தம மனஸ்தாபப்படவேண்டும் என்றார். அப்படியே
தியோடோசியஸ் என்பவன் தன் குற்றத்தின் அகோரத்தை உணர்ந்து
கொண்டு, அரண்மனைக்குத் திரும்பிப்போய் எட்டுமாதமளவும் துக்க
வஸ்திரந் தரித்து மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருந்தான். கிறிஸ்து பிற
ந்த திருநாள் சமீபிக்கையில் ஒருநாள் அரண்மனை விசாரிப்புக்காரனாகி
ரூப்பினு என்பவனிடத்தில் இராயன் கண்ணீர்விட்டு அழுதான். இவ்வ
ளவு வேதனைக்குக் காரணமென்னவென்று அவன் விசாரித்தபொழுது
இராயன் சொன்னது, "எனக்கிருக்கிற மனவேதனை இவ்வளவென்று
நீ அறியாய். வேலைக்காரர் தரித்திரரெல்லாரும் தேவாலயத்துக்குத்
தாராளமாய்ப்போய் தங்கள் செபங்களைச் செபிக்க இடமிருக்கிறது.
எனக்கோ தேவாலயத்தின் கதவுகளும் அதினாலே பரலோகத்தின் வா
சல்களும் அடைக்கப்பட்டிருக்கின்றனவே" என்றான். அப்பொழுது
ரூப்பினு என்பவன் இராயனை நோக்கி, "கண்காணியாரிடத்தில் நான்
போய், உமக்கு விரோதமாய்ச் சொல்லியிருக்கிற தீர்ப்பை மாற்றும்
படி அவரை வேண்டிக்கொள்ள உமக்குச் சித்தமா" என்று கேட்டான்.
அதற்கு இராயன், "அப்படி வேண்டாம், எனக்கு விரோதமாய்ச் சொ
ல்லியிருக்கிற தீர்ப்பு நியாயமானது என்றறிவேன், நீ எவ்வளவு வேண்
டிக்கொண்டபோதிலும், இராயனுக்குத் தாட்சணியமாய்க் கண்காணி
யார் தேவனுடைய கற்பனைகளை மீறவேமாட்டார்" என்றான். ஆகிலும்
ரூப்பினு என்பவன் கண்காணியாரிடத்திற் போய், இராயனுக்காக அவ
ரை வேண்டிக்கொண்டதுமல்லாமல், சற்றுநேரத்தில் இராயன் தாமே
வருவார் என்றும் அறிவித்தான். அதற்கு மாறுத்தரமாக அம்புரோஸ்
சொன்னது, "நான் அவரைத் தேவாலயத்துக்குட் பிரவேசிக்கவிட
மாட்டேனென்று திட்டமாய்ச் சொல்லுகிறேன், பலாத்காரமாய் ஏதா

வது செய்ய விரும்புவாராகில், நான் எந்தவகை மரணமானாலும் சகிக்க ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார். அதன்பேரில் ரூப்பினு இராயனிடத்துக்கு ஒரு மனிதனை அனுப்பி, கண்காணியாருடைய தீர்மானம் இன்னவின்னவிதமாயிருக்கிறது. ஆகையால் நீர் வரவேண்டாமென்று சொல்லச்சொன்னான். இராயனோ செய்திபோகிறதற்குள்ளாகப் புறப்பட்டு வந்துவிட்டான். வழியிலே மேற்படி செய்தியைக் கேள்விப்பட்டும், "நான் போய், எனக்கு நியாயமாய் வரவேண்டிய வெட்கத்தைப்பட்டு அனுபவிப்பேன்" என்றான். அந்தவேளையில் கண்காணியார் தேவாலயத்துக்குச் சமீபமாய் ஓர் அறையில் உட்கார்ந்துகொண்டிருந்தார். இராயன் தேவாலயத்தண்டை வந்து தனக்குப் பாவமன்னிப்புக் கொடுக்கவேண்டுமென்று கண்காணியாரிடத்திற் கேட்டான். கண்காணியார் அதற்கு மாறுத்தரமாக, "நீர் இவ்விடத்துக்கு வந்தது தேவனை எதிர்த்துப் போராடுகிறதாயும் அவருடைய நியாயப்பிரமாணங்களைக் காலால் உதைக்கிறதாயுமிருக்கிறது" என்று சொல்ல, இராயன் கண்காணியாரைப் பார்த்து "நான் தேவனுடைய பிரமாணத்துக்கு விரோதமாக இந்த ஆலயத்துக்குட் பிரவேசிக்க விரும்புகிறதில்லை. நமது ஆண்டவர் மனதுருகி இரக்கம்பாராட்டினதுபோல நீரும் எனக்கிரங்கவேண்டுமென்றும் மனஸ்தாபப்படுகிற சகல பாவிகளுக்கும் அவர் திறந்துவைத்திருக்கிற வாசல்களை எனக்கு அடைத்துப்போடாமல் என்னைத் திரும்பவும் திருச்சபையிற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் உம்மைக் கெஞ்சமாத்திரஞ் செய்கிறேன்" என்றான். அதன்பேரில் கண்காணியார், "நீர் உண்மையாய் மனஸ்தாபப்படுகிறீரென்பதற்கு அத்தாட்சியென்ன" என்று கேட்க, "நீர் எதைக் கற்பிக்கிறீரோ அதைச்செய்ய நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்று இராயன் சொன்னான். அப்பொழுது அம்புரோஸ், "நீர் உமது கோபத்துக்கும் மூர்க்கத்துக்கும் இடங்கொடுத்தபடியால், ஆத்திரமாயும் கோபமாயும் செய்யப்படுந் தீர்ப்புகளெல்லாம் ரத்தாகவேண்டுமென்றும் உயிரைப்பற்றியாவது பொருளைப்பற்றியாவது செய்யப்படும் தீர்மானங்களை திரும்பவும் யோசித்துக்கொள்ள அவகாசங் கிடைக்கும்பொருட்டு கையொப்பமிட்டது முதல் முப்பதுநாள் கழிகிறவரையில் நிறைவேற்றப்படாதென்றும், அப்புறம் புனராலோசனைசெய்யத்தக்கதாக மேற்படி தீர்மானங்களை எழுதினவர்கள் உம்மிடத்திற் கொண்டு வந்து தரவேண்டுமென்றும் ஒரு சட்டம் பிறப்பியும்" என்றார். இராயன் இதற்கெல்லாஞ் சம்மதித்துக்கொள்ள, கண்காணியார் அவனுக்குப் பாவவிமோசனஞ்செய்தார். அதன்பிறகு இராயன் தேவாலயத்திற் பிரவேசித்து தரையிலே சாஷ்டாங்கமாய் விழுந்து, "என்னாத்துமம் மண்ணோடு ஒட்டியிருக்கிறது, கர்த்தாவே உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்" என்று பிரார்த்தித்ததுமல்லாமல், தன் தலைமயிரைப் பிடுங்கி நெற்றியிலே அடித்துக்கொண்டு, தேவனிடத்திலும் மற்றும் உத்தமர்களிடத்திலும் மன்னிப்புக்காகவும் கெஞ்சினான். அவன் கொன்ஸ்தந்திநோபுரிக்குத் திரும்பினபொழுது அவ்விடத்துக் கண்காணியாரான நெக்றேரியு என்பவனைப் பார்த்து, "சத்தியத்தைப் போதிக்கிற போதகன் ஒருவனை அபூர்வமாய்க் கண்டுபிடித்தேன், நான் கண்டவர்களுக்குள் அம்புரோஸ் ஒருவனே கண்காணியென்ற பெயருக்குப் பாத்திரன்" என்றான்.



## Notes on Exodus.

## யாத்திராகம வியாக்கியானம்.

### ௯. அதிகாரம்.

*வீட்டுமிருகங்கள்மேல் கொள்ளைநோய்.-மனுஷர்மேலும் மிருகங்கள்மேலும் கொப்புளம்.-இடி, மின், கல்மழை.*

6. எகிப்தியர் சில மிருகங்களைச் சொரூபமாக உண்டாக்கி வணங்கினார்களென்று நினைக்கப்படுகிறது. அதைக் கண்டிக்கும்படி விசேஷமாய் இந்த வாதை அனுப்பப்பட்டதென்று தோன்றும்.

7. இதற்குமுன் பார்வோன் இப்படி விசாரித்ததாகக் காணப்படவில்லை.

8—10. இஸ்ரவேலர் செங்கல் சுட்ட சூளையிலிருந்து இந்த வாதை பிரயோகிக்கப்பட்டது. இது இஸ்ரவேலருக்குச் செய்த கொடூரங்களை பார்வோனுக்குத் தூண்டிக் காட்டுகிறதாயிருந்தது. எகிப்தியர்மேல் வந்த வாதைகள் முறையே ஒன்று மற்றதைப் பார்க்கிலும் கடினமானதாயிருந்தது. அப்படியே இதற்கு முந்தின வாதைகள் ஒருவாறு எகிப்தியருக்குப் புறம்பேயிருந்து வாதித்து அவர்களைத் தரித்திரராக்கினாலும், அவர்கள் தேகமும் சுகமும் காக்கப்பட்டது. இப்பொழுதோ அவர்களை இன்னும் அதிகமாய் நெருக்கி அவர்கள் தேகத்திலும், மீந்திருந்த மிருகங்களின் உடலிலும் வாதை நோய்த் தாவினது.

12. இதற்குமுன் இரண்டு விசை (4: 21. 7: 3.) எகோவா: "நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்துவேன்" என்று சொல்லியிருந்தார். இந்த வாக்கியத்திலோ "எகோவா பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்" என்று முதல் விசையாகச் சொல்லியிருக்கிறது. அதாவது: அவனுடைய ஆங்காரமும் துணிகரமுமான அடங்காமைக்குத் தண்டனையாக, இப்பொழுது அவன் தன் சுயேச்சையாய் நடக்கும்படி சாத்தானுடைய கையில் முழுதும் விட்டுவிட்டார் என்று அர்த்தமாம். ஆனால் அவனுடைய இருதயத்தில் யாதொரு கடினத்தை அல்லது துன்மார்க்கத்தைத் தம்முடைய வல்லமையினால் சிருட்டிக்கவில்லை. யாக். 1: 13—15. அப்படிச்செய்தால் அவர் உலகத்தாரை நியாயந்தீர்ப்பதெப்படி? நொறுங்குண்ட இருதயம் எவ்வளவோ அவசியமானது, ஆசிக்கப்படத்தக்கது. பரிசுத்தாவியின் முதற் கிரியை பாவியின் இருதயத்தை நொறுக்குவதுதான்.

15, 16. எகோவா ஒருமிக்க பார்வோனை அழித்துவிடாமல் படிப்படியாய் வாதையை அனுப்பினதற்கு இங்கே முகாந்தரம் திட்டமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

25. முந்தின வாதை மனுஷ தேகத்தையும் வாதித்ததே. இந்த வாதை மனுஷரைக் கொன்றது.

31. "சணல்" இது எகிப்தில் மிகுதியாய்ப் பயிர்செய்யப்படும். எகிப்தியர் சணல்நூல் புடவையை வழக்கமாய் உடுத்துவார்களாகையால், சணல் அவர்களுக்கு வெகு அருமையானதென்று சொல்லத் தேவையில்லையே.

படிப்பினை.

பிர. 8: 11 ல் சொல்லியபடி துர்க்கிரியைகளுக்குத்தக்க தண்டனை

சீக்கிரமாய் நடவாதபடியால் மனுப்புத்திரரின் இருதயம் பொல்லாப்பைச்செய்ய அவர்களுக்குள்ளே துணிகரம்கொண்டிருக்கிறது. தேவன் நீடிய சாந்தமும் பொறுமையுமுள்ளவரானதால் அநேகர் அக்கிரமத்தில் மிஞ்சிப்போகிறார்கள்; என்றாலும் கர்த்தருடைய கை அவர்களைத் தொடர்ந்து பிடிக்கும். 1 சாமு. 2: 10.—"நான் பாவம்செய்தேன்" என்று பார்வோன் சொன்னான். இது தேவனுக்கேற்ற துக்கமல்ல, கிறிஸ்துவின் ஆவியாலுண்டாகாத பாவவிசாரமும், கிறிஸ்துவின் இரட்சணியத்தின் பேரிலுண்டாகாத பாவவிசாரமும் பாவியை அதிகமாய் ஆக்கினையில் அமிழ்த்துகிறதாகவேயிருக்கும்.

---

## ௰. அதிகாரம்.

### வெட்டுக்கிளி. காரிருள்.

---

1. "பிள்ளைகளுடைய பிள்ளைகள்." இவ்வகையான வாதைகள் படிப்படியாய் அனுப்பப்பட்டதற்கு இதுவும் ஒரு முகாந்தரம்.

"ஊழியக்காரர்." இவர்கள் பார்வோனுடைய துன்மார்க்கத்தைப் பின்பற்றினவர்கள்.

5. "வெட்டுக்கிளி" விட்டில்போலிருக்கும். ஆனால் இதைவிட அது பெரிதாய், ஏறக்குறைய 3 அங்குல நீளமாயிருக்கும். இவைகள் திரள் திரளாய் வந்திறங்கும். இவைகளின் திரட்சியினாலே அநேகம் விசை சூரிய ஒளிமுதலாய் மறைந்து மேகம்போல் காணப்படும். (ஒருவர் பிரயாணம்போகும்போது அவருடைய குதிரைக் குளம்புகள் முங்கிப்போகத்தக்கதாக அத்தனை நெருக்கமும் அடர்த்தியுமாய் இவைகள் தரையில் இறங்கியிருந்ததைக் கண்டாராம்.) மிகவும் செழிப்பான தேசத்தை நிமிஷத்தில் பாழான வனாந்தரமாக்கி பஞ்சாய்ப் பறந்துவிடும். அவற்றிற்கு எதிர்த்து நிற்கவும் வகையில்லை, தப்பிப்போகவும் கூடாது. எகிப்துதேசத்தில் வாதையாக அனுப்பப்பட்டவைகள் பயங்கரமானதும், கடற்கரை மணலைப்போல் ஏராளமானதும், மிகப் பெரிதுமாயிருந்தது. 14 வா. யோவேல் 2: 2—11.

6. "புறப்பட்டான்" பார்வோன் அடிக்கடி வாக்குமாறினபடியினாலே அவன் உத்தரவுக்குக் காத்திருக்கவில்லை.

10, 11. பெண்களையும் குழந்தைகளையும் நிறுத்திக்கொள்ளும்படி பார்த்தான்.

20. 9: 12 வியா.

21. இந்த இருள் எப்படியிருக்குமென்று நாம் பரீட்சையாய்ச் சொல்லக்கூடாது. அவ்வளவு பயங்கரமாயிருந்தது. வானசோதிகள் முற்றிலும் மறைக்கப்பட்டதல்லாமலும், எகிப்தின் விளக்குமுதலான ஒளியிடும் கருவிகளெல்லாம் மூடுபனிமுதலான ஏதுக்களால் கொஞ்சமென்கிலும் வெளிச்சம் கொடாதபடி அவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் வணங்கின சூரியாள் சந்திராளுங் கூட இருளடைந்தேபோனார்கள். குணப்படாத இருதயத்திலும், நரகத்திலுமே தவிர மற்றெங்கும் இந்த இருளை நாம் காணக்கிடையாது.

23. கெட்ட ஆவிகள் இந்தச் சமயத்தில் கெடியுள்ள சப்தம்போட்டு, அலறி அவர்களைப் பயப்படுத்தினார்களென்றும், அதைக்கேட்டு எகிப்தியர் திகிலடைந்து வாதிக்கப்பட்டார்களென்றும், சங். 78: 59 ல் "தீங்குசெய்யும் தூதர்களை அவர்களுக்குள்ளே அனுப்பினார்" என்பதற்கு இதுவே அர்த்தமென்றும், யூதருடைய பாரம்பரியம் சொல்லுகிறது.



நிறைந்த அந்தகாரத்தில் எகிப்தியர் அடைபட்டிருக்கும்போது அவர்களுடைய மனச்சாட்சிகள் திகிலடைந்து அவர்களை வாதித்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

இப்பொழுது இஸ்ரவேலர் யாதொரு சேதவிக்கினமின்றி எகிப்
தைவிட்டுப் போகலாமே. ஏன் போகவில்லையென்றால், இவர்கள் ஜெ
யிக்கப்பட்டு புறங்காட்டியோடும் நீசச் சனம்போல ஒளித்தோடாமல்,
ஜெயங்கொண்ட வெற்றிவேந்தராகப் புறப்பட்டுப்போகவேண்டுமென
பது எகோவாவின் சித்தமாயிருந்தது.

27. எகோவா பார்வோனுடைய இருதயத்தைக் கடினப்படுத்தி
னது, அவன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினதற்குப் பலனாயிருந்
தது.

29. மோசே இந்த வாக்கியத்தைச் சொல்லுமுன் தலைப்பேறு சங்
கரிக்கப்படுவதைக்குறித்து பார்வோனுக்கு முன்னடியே எச்சரித்த
தாகத் தோன்றும். 28 ம்வாக்கியத்தோடு பின்தின அதிகாரத்தின் 1—3
வாக்கியங்களை சேர்த்து வாசித்தால் சரியாயிருக்கும்.

படிப்பினை.

எகோவா ஆக்கினைசெலுத்தினாலுஞ் சரி, இரக்கங்காட்டினாலும்
சரி, அவருடைய எல்லாச் செயல்களிலும் அவர் தமது மகிமை விளங்
கும்படி செய்கிறார்.—ஆபத்து வந்து உன்னை அதிகமாய் நெருக்கும்
போது விடுதலை சமீபமாயிருக்கிறதென்று நினைத்துக்கொள்.—இயல்
பான இருதயமெல்லாம் எகிப்தின் காரிருளால் மூடப்பட்டிருக்கிறது.
கிறிஸ்துவின் ஆவியானவர் மாத்திரமே அதை நீக்கக்கூடும்.

---

## ௰௧. அதிகாரம்.

### பத்தாம் வாதை முன்னறிவிக்கப்பட்டது.

---

1. மோசே பார்வோனுக்குமுன் நிற்கும்போது, இந்த வார்த்தை
கள் இரகசியமாய் அவனுக்கு வெளிப்படுத்தப்பட்டதென்று நினைக்கப்
படும். மோசே பார்வோனைவிட்டுப் புறப்படுமுன் பயங்கரமான கடை
சி வாதையை அவனுக்குக் கூறிவிட்டு வரும்படி இப்படி நடந்திருக்கும்.
2. "கேட்கும்படி" இஸ்ரவேலர் மறுபடி கொடுத்துவிடும்படி
இரவலாகக்கேட்டு வாங்கினார்களென்று இந்த எபிரேய வார்த்தை ஒரு
போதும் அர்த்தங்கொள்ளமாட்டாது. 3: 21, 22 வியா.
4. இந்த பயங்கரமான வேளையில் எகோவா பராக்கிரமமான
வெற்றிவேந்தனைப்போல் தம்முடைய சத்துருக்களைக் கீழே தள்ளி
மிதித்து வெற்றி சிறக்கும்படி புறப்பட்டார்.

படிப்பினை.

பார்வோன்மேல் விடப்பட்ட வாதைகள் எத்தனை பயங்கரமான
வைகள்! இவைகளை இனி பாவிகளுக்கு வெளிப்படப்போகிற நித்திய
ஆக்கினையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தப் பத்து வாதைகளும் ஒன்
றுகச் சேர்ந்து அதின் கடைகோடிக்கும் ஒத்துவராது.—இஸ்ரவேல்
சனங்கள் புறம்பான வகையாய் எவ்வளவு கேவலமானவர்களாயிருந்
தாலும் தேவனுடைய பார்வையில் கண்யமாயிருந்தார்கள். சுவிசேஷம்
துவக்கத்தில் எதிர்க்கப்பட்டாலும் கிறிஸ்துநாதர் கடைசியாக எவ்வித
மும் ஜெயம்கொள்வார் என்று திடச்சித்தமாயிருக்கக்கடவோம்.

---

## ௰௨ அதிகாரம்.

*பஸ்கா ஏற்பாடும்; முதற்பேறுகள் கொல்லப்பட்டதும்; இஸ்ரவேலர் கெம்பீரமாய் விடுதலையானதும்.*

---

1. *இந்தக் கட்டளைகள்:* மோசேயும் ஆரோனும் கடைசி விசையாய் பார்வோனுடனே பேசினதற்கு சில நாட்களுக்குமுன் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஒருவேளை காரிருள் வாதை உண்டானதற்குமுன்னாக இருக்கலாம். ஏனென்றால் இந்தக் கட்டளைகள், அவர்கள் புறப்பட்ட மாதத்தின் 10ம்-தேதிக்கு முன்னாகக் கொடுக்கப்பட்டதென்று, 3ம் 6ம் வாக்கியங்களை 11 : 4 உடன் ஒத்துப் பார்ப்பதினால் தெரியவருகிறது. இஸ்ரவேலர் 14ம் தேதியன்று பஸ்காவை ஆசரித்திருக்கிறார்கள். அன்றைத்தினந்தான் மோசே பார்வோனைவிட்டுப் புறப்பட்டிருக்கிறான். 11 : 4 வாசி. பஸ்கா ஏற்பாட்டைக்குறித்த கட்டளைகளைச் சேர்க்கையாய்ச் சொல்லும்படி சரித்திரக்காரன் நோக்கமாயிருந்தபடியால் அதைச் சரியான இடத்தில் சொல்லவில்லை.

2. "*இந்த மாதம்*" இதற்கு ஆபிப் அல்லது நீசான் என்று பேர். இதற்கு "*தானியக் கதிர்*" என்று அர்த்தம். இந்த மாதம் பயிர்கள் கதிர்விடும் காலமானபடியினாலே இந்தப் பேர் வந்தது. இது நம்முடைய மார்ச்சுமாதத்தின் பின் பங்குக்கும், ஏப்பிரில் மாதத்தின் முன் பங்குக்கும் சரியாயிருக்கும்.

"*முதலாம்*" இது சரியானபடி வருஷத்தின் 7ம்-மாதம். ஆனால் இந்த அதிசய விடுதலையை நினைவுகூரும்படிக்கும், இஸ்ரவேலர் தேவனுடைய சபையாகத் தங்களுடைய பரிசுத்த நியமங்களை இதுமுதல் ஒழுங்குப்படுத்திக்கொள்ளும்படிக்கும் முதலாம் மாதமாக மாற்றப்பட்டது.

6. "*பதினாலாம் தேதிவரைக்கும் வைத்திருந்து*" ஆட்டுக்குட்டி முழுதும் பழுதற்றதாயிருக்கிறதாவென்று சாவகாசமாய்ச் சோதிக்கும்படிக்கு. லேவி 22: 21. உபா 15: 21. 17: 1. எபி 9: 14. 1பேது 1: 19. "*கூட்டத்தாரும்*" கூட்டத்தின் தலைவனால் அடிக்கப்பட்டிருக்கவேண்டும். பிற்காலத்தில் ஆசாரியர்மாத்திரம் அடிக்கலாமென்று கட்டளை கொடுக்கப்பட்டது.

"*சாயங்காலத்தில்*" எபிரேயுப் பாஷையில் '*இரண்டு சாயங்காலங்களின் மத்தியில்*' என்றிருக்கிறது. யூதருக்குள், மதியம் திரும்பினவுடனே முதலாம் சாயங்காலம் தொடங்கும். சூரியன் அஸ்தமித்தவுடனே இரண்டாம் சாயங்காலம் முடியும். ஆகையால் பஸ்கா பலிகளானது இவ்விரண்டுக்கும் ஊடேயுள்ள நேரத்தில் அதாவது நம்முடைய கணக்குப்படி சாயங்காலம் 3 மணிமுதல் சூரியன் அஸ்தமிக்கிறவரையும் கொலைசெய்யப்பட்டதென்று தோன்றும். சூரியன் அஸ்தமித்தவுடனே யூதருக்குள் மறுநாள் துவக்கிவிடுமே. ஆகையால் 15ம் தேதி ஆரம்பமான உடனே சனங்கள் பஸ்கா பலியைப் புசித்தார்கள். நம்முடைய கர்த்தர் பஸ்கா ஆட்டுக்குட்டி பலியிடப்பட்ட நேரத்தில், அதாவது: சாயங்காலம் 3 மணிக்கு ஜீவனை விட்டது இதினால் முன் குறிக்கப்பட்ட விசேஷமாம்.

7. "*இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து.*" ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டபின் அதின் இரத்தம் தற்காக்கப்பட்டது: எகிப்தியரின் முதற்பேறுகள் கொல்லப்படும்பொழுது இஸ்ரவேலர் தற்காக்கப்படுவதற்கு அடையாளமாயிருந்தது. கிறிஸ்துநாதர் இரத்தம் சிந்தினதினால் பாவிகள் நித்திய ஜீவனை அடைவதையும் முன் குறித்தது.



"*நிலைக் கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும்*" அந்த இரத்தம் அற்பமாயெண்ணப்படாதபடிக்கு கீழ்ச்சட்டத்திற் பூசக் கட்டளையிடப்படவில்லை. எபி. 10: 19.

8. "*புளிப்பில்லா அப்பம்.*" இஸ்ரவேலர் தீவிரமாய்ப் புறப்பட்டதற்கு ஞாபகக்குறிப்பாயிருக்கும்படி இது கட்டளையிடப்பட்டது. உபா 16: 3. இது: யதார்த்தத்துக்கும் சத்தியத்துக்கும் அன்புக்கும் குறிப்பாம். 1 கொரி 5: 8.

"*கசப்பான கீரை*" இஸ்ரவேலர் எகிப்திலடைந்த கசப்பை ஞாபகம்பண்ணும்படி. உபா 16: 3. தேவனுக்கேற்ற துக்கத்துக்கும், மெய் மனந்திரும்புதலுக்கும், தன்னை வெறுத்தலுக்கும் அடக்கத்துக்கும் குறிப்பாம்.

9. "*பச்சையாய்.*" இதினால் இஸ்ரவேலர் பச்சை இறைச்சியைச் சாப்பிட்டார்களென்று அர்த்தமில்லை.

"*நெருப்பினால் சுட்டதாய்*" இது தேவ கோபாக்கினைக்குக் குறிப்பாம். கிறிஸ்துநாதர் அகோர கஸ்திப்பட்டு நம்முடைய பாவங்களுக்கு வரும் ஆக்கினையை உத்தரித்ததற்கு முன்னடையாளமாயிருந்தது. அவர்: யெகோவாவாலும், பாவிகளாலும் சுடப்பட்டார். ஏசா. 53: 10.

10. "*ஒன்றையும் மீதியாக வைக்காமல்.*" பஸ்கா பலிமுழுதும் புசிக்கப்பட்டது: கிறிஸ்துநாதர் "*நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தி*"னதற்கு முன்குறிப்பாம். கொஞ்சங்குறைய கிறிஸ்தவனாயிருக்கிறதினால் பிரயோசனமில்லை என்பதையும் காட்டுகிறதல்லவா?

11. "*அரைகளில் கச்சை கட்டிக்கொண்டு*" இது இஸ்ரவேலருடைய தீவிரபிரயாணத்தையும், இனிமேல் அடிமைகளாகவல்ல சுயாதீனராகவும் வெற்றிவேந்தராகவும் எகிப்தைவிட்டுப்போவதையும்; துக்கத்தோடல்ல, அகமகிழ்ச்சியோடு புறப்படுவதையும் காட்டினது. இந்த ஏற்பாடுகளிற் சிலதுபிற்பாடு மாற்றப்பட்டது.

"*பஸ்கா*" என்ற வார்த்தைக்கு "*கடந்துபோகுதல்*" என்று அர்த்தம். வாசலில் இரத்தம் பூசப்பட்டிருப்பதைக் கண்டவுடனே அழிக்கிற தூதன் கடந்துபோனதையிட்டு இந்தப் பேர் வந்தது.

இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்ட அன்று இராத்திரி அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டிக்குத்தான் "பஸ்கா" என்று பேர். எகிப்தியருடைய முதற்பேறுகளை தேவன் அழிக்கும்பொழுது இஸ்ரவேலருடைய வீடுகளைக் கடந்துபோவதற்கு அந்தப் பஸ்காவானது அடையாளமாயும் அத்தாட்சியாயும் இருந்தது. இது பிற்காலத்தில் இந்தப் பண்டிகைதோறும் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டிகளுக்கெல்லாம் பெயராய் வழங்கினது. "நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறோ." இதுவும் அப்படியே, நாம் தேவகோபத்தினால் அழிக்கப்படாமல் நித்தியஜீவனடையும்படி தற்காக்கப்படுவதற்கு உறுதியான அத்தாட்சியாயிருக்கிறது.

12. "*தேவர்களின்மேல் நீதியைச் செலுத்துவேன்.*" (1) முதற்பேறுகள் அழிக்கப்பட்டபோது எகிப்தியர் வணங்கின தேவர்களாலே யாதொரு சகாயமில்லாமற்போனதைக் குறிக்கிறதென்றும்; (2) எகிப்தியர் வணங்கின மிருகங்களின் தலையீற்றுகள் அதம்பண்ணப்பட்டதைக் குறிக்கிறதென்றும்; (3) பெரும்பாலும் நினைக்கப்படுகிறபடி தா

கோனைப்போல எகிப்தின் விக்கிரகங்களும் விக்கிரகக் கோவில்களுமெல்லாம் அன்றிரவில் அழிக்கப்பட்டதென்றும் சொல்லப்படும்.

13. "அந்த இரத்தம் உங்களுக்கு அடையாளமாக இருக்கும்."

(1) இஸ்ரவேலர் அழிக்கப்படாததற்கும் எகிப்தியர் அழிக்கப்படுவதற்கும் அடையாளமாயிருந்தது.

(2) இஸ்ரவேலர் தங்களுடைய சுயநீதியினால் விடுதலையாகவில்லை என்பதற்கு அடையாளமாயிருந்தது.

(3) விசுவாசம் இன்னதென்று காட்டும் அடையாளமாயிருந்தது. ஆட்டுக்குட்டியைக் கொன்று அதின் இரத்தத்தை இப்படிப் பூசிவைப்பதினால் அழிவுக்கு எப்படித் தப்பிப்போகலாம் என்று சந்தேகப்படாமல் இஸ்ரவேலர் தேவகட்டளைக்கு விசுவாசத்தோடு கீழ்ப்படிந்து இரக்ஷிக்கப்பட்டார்கள்.

(4) இஸ்ரவேலர் ஏகோவாவைப் பின்பற்றி நடக்கிறவரையும் ஆசீர்வாதமும், நன்றிகேடாய் அவரை மறந்தால் சாபமும் வரும் என்பதற்கு அடையாளமாயிருந்தது.

(5) மோசே சொன்னவைகளும், செய்தவைகளும் தேவ கட்டளையினாலும் அதிகாரத்தினாலும் நடந்ததென்பதற்கும்; அவன் சொன்ன வசனம் தேவவசனம் என்பதற்கும் அடையாளமாயிருந்தது.

(6) கிறிஸ்துநாதராலுண்டாகும் இரக்ஷிப்பின் வகைப்பாட்டை முன் குறித்த அடையாளமாயிருந்தது.

14. "அந்தநாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது." இது இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையானதைமட்டுமல்ல, கிறிஸ்துநாதர் உண்டுபண்ணின சிறந்த மீட்பையும் நினைவுகூருகிற நாளென்றும்; இஸ்ரவேலர் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட ஆபிப் மாதம் 15உயாகிய அன்றைத்தினத்திலேயே, இனிமேல் இஸ்ரவேலர் மேசியாவின் நாட்களில் மீட்கப்படுவார்கள் என்றும் பூர்வயூதர்கள் அர்த்தம்பண்ணுகிறார்கள்.

"பண்டிகை" இஸ்ரவேலருக்குக் கிடைத்த அதிசய விடுதலையை நினைவுகூரும்படி இது ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் அஞ்ஞானிகளோடு கலந்துபோகாமல், அவர்களைக் கட்டுகிறதாயுமிருந்தது.

"நித்திய" இந்த வார்த்தை முடிவில்லாத காலத்தை எப்பொழுதும் குறிக்கிறதில்லை. இதற்கு நீண்ட காலம் என்றர்த்தம். நீதி. 29: 14. தானி. 7: 9.

15. 8 வியா.

16. "முதலாம் நாளில்...ஏழாம் நாளிலும்." முதலாம் நாளில் முதற்பேறுகள் கொல்லப்பட்டது. ஏழாம்நாளில் பார்வோனும் அவன்சேனையும் சிவந்த கடலில் அமிழ்ந்துபோனார்கள். இப்படியாக இஸ்ரவேலருடைய மீட்பு முதலாம்நாளில் தொடங்கி ஏழாம்நாளில் முடிவடைந்தது.

19. "பரதேசி" புரோசொலொத்தாம். அந்நியரில் விருத்தசேதனமடைந்த புரோசொலொத்துகள் மட்டும் பஸ்காவைப் புசிக்கச் சலாக்கியம்பெற்றிருந்தார்கள். இஸ்ரவேலரும், புரோசொலொத்துகளும், விருத்தசேதனமடையாத மற்ற அந்நியரும் புளித்த அப்பம் சாப்பிடக்கூடாதென்று விலக்கப்பட்டிருந்தது.

27. "பஸ்காவாகிய பலி" இதற்கும் மற்றப் பலிகளுக்கும் வித்தியாசமுண்டு. பஸ்காபலியின் எந்தப் பாகமாவது பலிபீடத்தில் தகனிக்கப்படவில்லை. என்றாலும் பஸ்காபலியின் கொழுப்பு பலிபீடத்தின்மேல் சுட்டெரிக்கப்பட்டதாக யூதசரித்திரக்காரர் சொல்லுகிறார்கள். ஆனால் வேதத்தில் இதைக்குறித்து ஒன்றுஞ் சொல்லப்படவில்லை.



29, 30. "நடுராத்திரி" எகிப்தியருடைய முதற்பேறுகள் சங்கரிக்கப்பட்ட சமயமும் அவர்களைத் திகிலடையச் செய்தது. இருள் எப்படியிருக்குமென்று முந்தின வாதையால் அறிந்தார்களே.

வாதிக்கப்பட்ட முதற்பேறுகள் மகா பயங்கரமான வேதனையோடு அலறி அபயமிட்டு பரிதாபமாய் உயிரைவிட்டதாகத் தோன்றும். ஆ! அந்த இராத்திரி எத்தனை பயங்கரமாயிருக்கும்! அதினாலே "மகா கூக்குரல் எகிப்திலேயுண்டாயிற்று." தேவனுடைய "சேஷ்ட புத்திரன்" என்று சொல்லப்பட்ட இஸ்ரவேலருடைய குழந்தைகளை, சற்றெங்கிலும் இரக்கமில்லாமல் ஆற்றிலெறிந்த எகிப்தியருடைய முதற்பேறுகள் இப்படி அழிக்கப்பட்டது நீதியாகவேயிருந்தது. அன்று ராத்திரி அவர்களடைந்த திகிலையும் கசப்பையும் நாவினால் சொல்லிமுடியாது. அவர்களுடைய ஆங்காரம் தணிந்தது, இஸ்ரவேலரை நிறுத்திவைத்துக்கொள்ளலாமென்ற நம்பிக்கை போய்விட்டது. சனம்பெருத்த அந்தத் தேசத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் புலம்பலும் ஒப்பாரியும் உண்டானது. "அவர் யார்" என்று பார்வோனுக்கு இப்போ தெரியவந்தது. 4: 22 வியா.

36. "எகிப்தியரைக் கொள்ளையிட்டார்கள்." யுத்தத்தில் ஜெயங்கொண்டவர்கள் செய்கிறதுபோல. 3: 21, 22 வியா. பார்.

இஸ்ரவேலர் கேட்டு வாங்கின வெள்ளியுடைமைகளும் பொன்னுடைமைகளும் வஸ்திரங்களும் அவர்கள் பிரயாணத்துக்குதவியாயிருந்தது.

38. "ஆறுலட்சம் புருஷர்." புருஷர் என்றால் யுத்தவீரர் என்று அர்த்தம். ஆகையால் பெண்களையும் குழந்தைகளையுங் கூட்டி சுமார் 25-லட்சம் பேர் புறப்பட்டிருக்கவேண்டும்.

இவ்வளவு ஏராளமான ஜனங்கள் 70 பேராலே 215வருஷத்துக்குள் என்னமாய் விர்த்தியாகக்கூடும் என்று ஆட்சேபிக்கப்படுவதுண்டு. உத்தரவு: தேவ ஆசீர்வாதத்தினாலே இஸ்ரவேலர் மிகுதியும் ஏராளமாய்ப் பெருகினார்கள். ஆதி. 15: 5. யாத். 1: 7 வியா. வாசி.

பென்யமீனுக்கு 22-ம் வயதில் 10 குமாரரிருந்தார்களென்று ஆட்சேபனைக்காரரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அப்படியானால் அவனுடைய 45-ம் வயதில் அவன் வம்சம் 100 ஆகவும்; 69-ம் வயதில் 1,000 ஆகவும்; 92-ம் வயதில் 10,000 ஆகவும்; 115 வயதில் லட்சமாகவும்; 138-ம் வயதில் பத்து லட்சம் ஆகவும்; 215-ம் வருஷத்துக்குள்ளாக ஆசியாக்கண்டத்தைக் குடியேற்றத்தக்கதாகவும் பெருகலாமே. இது: ஷெ ஆட்சேபனை வீண் என்று காண்பிக்க மட்டும் சொல்லப்படுகிறது.

"பல சாதியான சனங்கள்." சிலர்: எகிப்து பாழாய்ப்போனதினாலே இஸ்ரவேலரோடு புறப்பட்டிருக்கலாம். சிலர்: மனமடிவினாலும், சிலர் இஸ்ரவேலருக்கு என்ன சம்பவிக்கப்போகிறதோ என்று வேடிக்கைபார்க்கவும் புறப்பட்டார்கள். சிலர்: இஸ்ரவேலரிடத்தில் பெண்கொண்டு பெண்கொடுத்து சம்பந்தங் கலந்திருப்பார்கள்; ஒருவேளை சிலர்: இஸ்ரவேலருடைய மார்க்க விசேஷத்தையிட்டு புறப்பட்டிருக்கலாம்; ஆக இப்படிப்பட்ட முகாந்தரங்களினால் புறப்பட்டிருப்பார்கள் என்று பெரும்பாலும் நினைக்கப்படுகிறது. இவர்கள் பிற்பாடு இஸ்ரவேலருக்குக் கண்ணியானதுமல்லாமல், கொஞ்சக்காலத்துக்குப்பின் எகிப்துக்கு மறுபடியும் திரும்பிவிட்டதாகத் தோன்றும். எண். 11: 4.

"ஆடுமாடுகள்." இஸ்ரவேலருக்கு எகிப்திலிருந்த சொத்தெல்லாம் ஆடுமாடுகள் மட்டுந்தான்.

39. "சுட்டார்கள்." சுக்கோத்திலே நடந்தது. மன்று அனுப்

பப்பட்டதுவரையும் இதுவே அவர்களுக்குச் சாப்பாடாயிருந்தது.

40. "நானூற்றுமுப்பது வருஷம்." ஆபிரகாம் அழைக்கப்பட்ட
துமுதல் ஈசாக்கு பிறந்ததுவரையும் (ஆதி. 12: 4. 17: 1, 12.)... 25.
ஈசாக்கு யாக்கோபைப் பெற்றதுவரையும். (ஆதி. 25: 26.) ... 60.
யாக்கோபு எகிப்துக்குப்போனதுவரையும். (ஆதி. 47: 9.) அல்
லது யோசேப்பின் 40 ம் வயதுவரையும். (ஆதி. 27: 1 வியா.) } 130. 215.
யோசேப்பு மரித்ததுவரையும். (ஆதி. 50: 26.) ... ... ... 70.
இஸ்ரவேலர் எகிப்தை விட்டதுவரையும். ... ... ... ... 145. 215.
45. எண். 9: 6 வியா. [ஆக. ௲௬]. 430.

46. இரண்டு வீட்டுக்காரர் சேர்ந்து ஒரு பஸ்காஆட்டுக்குட்டியைப் புசிக்கிறதாயிருந்தால் அதைச் சுடுகிறதற்கு முன்னாவது, சுட்டபின்னாவது அதைப் பங்கிடக்கூடாது. ஒரு வீட்டிலே சேர்ந்து முழுவதுமாய்ப் புசிக்கவேண்டும். 9 வா.

"ஒரு எலும்பையும் முறிக்கக்கூடாது." யோவா. 19: 36.

## படிப்பினை.

எகிப்தியரின் முதற்பேறு அழிக்கப்படும்போது இஸ்ரவேலர் தற்காக்கப்படுவதற்கு ஒரே ஒரு வழிதானிருந்தது. அதாவது: அவர்களுடைய வீட்டுவாசல்களில் இரத்தம் பூசி வைப்பதுதான். இப்படி இரத்தத்தைப் பூசுவதினாலே அழிவுக்கு எப்படித் தப்பிப்போகலாம்; தேவகோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ள இந்தச் செய்கையில் என்ன உபாயமிருக்கிறது, இதில் ஒரு சூட்சத்தையும் காணோமே என்று எண்ணாமல் இது தேவகட்டளை என்று உண்மையாய் இஸ்ரவேலர் கீழ்ப்படிந்து இரட்சிக்கப்பட்டார்கள். அப்படியே இப்பொழுதும் நாம் தேவகோபாக்கினையினின்று இரட்சிக்கப்படுகிறதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. அதாவது: இயேசு: நமக்காக ரத்தம் சிந்தினார் என்று விசுவாசித்துக்கொள்வதுதான். இப்படி அவரை விசுவாசிப்பதினாலே அழிவுக்கு எப்படித் தப்பிப்போகலாம், தேவகோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ள இதில் என்ன உபாயமிருக்கிறது, இதில் ஒரு சூட்சத்தையும் காணோமே என்று சந்தேகியாமல், உண்மையாய் அவரை விசுவாசிக்கிறவர்கள் எவ்விதமும் இரட்சிக்கப்படுவார்கள். இதுகாரியம் நம்முடைய இருதயத்தில் எப்போதும் பதிந்திருக்கட்டும். 7.—எகிப்தியர் அன்றுராத்திரி அடைந்த வேதனை நரகத்தின் ஒரு பாகந்தான். கடைசி நியாயத்தீர்ப்புநாளிலே பெரிய பாவியும் சின்னப்பாவியும் ஆக்கினைக்குத் தப்பான். 29.—தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஏற்றகாலத்தில் நிறைவேறவே நிறைவேறும். நாம் செய்யவேண்டியதென்னவென்றால், நம்பிக்கையோடு அதற்குக் காத்திருக்கவேண்டும். 31.—இஸ்ரவேலரைப் போகவிடுவது எகிப்தியருக்கு வெகுவருத்தமான காரியமாயிருந்ததே, இப்போது அவர்களை மட்டுமல்ல, தங்கள் வெள்ளியையும் பொன்னையுங் கூடப் பறிகொடுத்தார்கள். ஒருவன் கிறிஸ்துவுக்காகத் தனக்குள்ளதை மனதார வெறுத்துவிடாவிட்டால், அவனுக்குள்ளதெல்லாம் பலவந்தமாய் அவனுடைய மரணநேரத்தில் பிடுங்கப்பட்டுப்போகும். 35, 36.—கிறிஸ்துவைப் பின்பற்றி, நடக்கிறவர்கள் இந்த உலகமாகிய எகிப்திலே எவ்வளவு நிர்ப்பந்தராயிருந்தாலும் அவர்கள் இதைவிட்டு நீங்கும்போது, வெற்றிவேந்தராகவும் எல்லாவற்றையும் உடையவர்களாகவும் புறப்படுவார்கள். நாம் இந்த உலகமாகிய எகிப்திலிருக்கும்போதே கிறிஸ்துவின் ரத்தம் நம்முடைய இருதயங்களிற் பூசப்பட்டிருக்கவேண்டும். அதுவே நாம் பாவஅடிமைத்தனத்தினின்று நீங்கி, பரமகானானைச் சேர நமக்கு அத்தாட்சியாயும் நமக்குப் பாத்தியதையைக் கொடுக்கிறதாயுமிருக்கிறது.



# Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. இங்கிலந்தில் மழை அபரிமிதமாய் வருஷித்து பிரவாகமுண்டானதால் உயிர்ச்சேதம் பொருட்சேதமுண்டாயின.

தென்மார்க்கு அரசர் தம் பத்தினி சகிதம் இங்கிலந்துக்கு வந்து டிசம்பர் மாசாரம்பம்வரையும் அங்கிருந்து கிறிஸ்து ஜன்ம உற்சவம் கொண்டாட அங்கிலேய இளவரசரது பத்தினியாரோடும் புத்திரர் புத்திரிகளோடும் தமது சமஸ்தானமாகிய கொப்பன்ஹேகென் நகரத்திற்குப் புறப்படுவாராம்.

வேல்ஸ் பிரபுவாகிய மாட்சிமைதங்கிய இளவரசர் சென்ற மீ 16உ பிரிண்டிஸித் துறையில் அங்கிலேய இத்தாலிய இருப்புக்கப்பல்கள் பீரங்கிவெடி தீர்த்து உபசரிக்கப் புறப்பட்டு, 18உ ஆதேன்ஸ் துறை சேர்ந்து, ஜார்ஜ் அரசரால் உபசரிக்கப்பட்டார். 21உ அங்கிருந்து மீளவும் பிரயாணப்பட்டு 23உ கைரோ நகரத்தில் சேர்ந்து அங்குள்ள அதிபதியால் மிகுசம்பிரத்துடனும் வினயத்துடனும் அங்கிகரிக்கப்பட்டார். 26உயில் ஸூவெசுக்குப் பிரயாணமானார்.

இந்தியா. சென்னைக் கவர்னராகிய மகிமைதங்கிய பக்கிங்ஹாம் டியூக் பிரபு அவர்கள் சென்னைக்கு வரும்படி கரோப்ஸென்ட் துறையில் சென்ற மாசம் 16உயில் ஆவிக்கலம் ஏறினார்கள். நாளது மாசம் 21உ வரை சென்னையில் வந்திறங்க நினைந்திருப்பதாக செய்தி.

கீர்த்திபெற்ற மேரி கார்பெண்டர் என்னும் கன்னிகை மீண்டும் இந்தியாவில் வந்திருக்கின்றனர். அவர் இந்தியாவிலெங்குஞ் சென்று பெண்பாலார்க்கும் சாமானிய ஜனத்திற்கும் கல்வி கற்பிக்கும் பெருமுயற்சியின் அபிவிர்த்தி வரலாறுகளையும், சிறைச்சாலைகளில் கைதிகளை சீர்திருத்தும் உபாயத்தையும் கண்டு கேட்டறிவாராம்.

சுதேச அரசரிற் பெரும்பாலார் அங்கிலேய இளவரசரைத் தரிசிக்கும்பொருட்டு பம்பாயில் வந்திறங்கியிருக்கின்றனர். அங்கிலேய இளவரசர் ஆதேனின்று பம்பாய்க்குப் பிரயாணப்படுவது நாளது மாசம் 2உ. பம்பாயில் இறங்குவது 8உ. சென்னைமாநகருக்கு வருவது டிசம்பர்மீ 2உ. திருச்சிராப்பள்ளிக்கெழுந்தருள்வது 7உ. மதுரைக்கு வருவது 9உ. மதுரையினின்று தூத்துக்குடி மார்க்கமாய் இலங்கைக்கு மரக்கலம் ஏறுதல் 10உ. முன் தெரிவித்தபடி இளவரசரவர்களை அவர்களது உயர்ந்த அந்தஸ்துக்குத்தக்கபடி உபசரிக்கும்படி இந்தியாவில் அங்கங்கே, எத்தனங்கள் நடக்கின்றன.

மதுரையினின்று தூத்துக்குடி–திருநெல்வேலிவரையும் போடப்படுகிற இருப்புப்பாதை வருகிற டிஸம்பர் மாசாரம்பத்தில்திறக்கப்படும்.

நவம்பர்மீ நாள் 30. ஐப்பசிமீ 18உ முதல், கார்த்திகைமீ 16உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றுடகத் தியானம். |
|---|---|---|---|
| தி | 1 | ௧௭ | மோசே சனங்களுக்காக விண்ணப்பம்பண்ணினான். எண். 21: 7. |
| செ | 2 | ௧௮ | நீ அவர்களோடே போகவேண்டாம். 22: 12. |
| பு | 3 | ௧௯ | அந்தச் சனங்களைச் சபிக்கவும் வேண்டாம். 12. |
| வி | 4 | ௨௦ | கர்த்தர் எனக்கு உத்தரவுகொடுக்கமாட்டோமென்கிறார். 13. |
| வெ | 5 | ௨௧ | காற்றடித்த சருகை நொறுக்குவீரோ? யோபு 13: 25. |
| ச | 6 | ௨௨ | என் சிறுவயதின் அக்கிரமங்களைப் பலிக்கப்பண்ணுகிறீர். 26. |
| ஞா | 7 | ௨௩ | ஸ்திரியினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவன். 14: 1. |
| தி | 8 | ௨௪ | உம்முடைய நியாயத்துக்கு என்னைக்கொண்டு போவீரோ? 3. |
| செ | 9 | ௨௫ | உம்முடைய வாக்கு என்னை உயிர்ப்பித்தது. சங்கீதம் 119: 50. |
| பு | 10 | ௨௬ | நான் உமது வேதத்தை விட்டு விலகின தில்லை. 51. |
| வி | 11 | ௨௭ | கர்த்தாவே, நீரே என் பங்கு. 57 |
| வெ | 12 | ௨௮ | உமது வாக்கின்படி எனக்கு இரங்கும். 58. |
| ச | 13 | ௨௯ | உம்மைத் துதிக்கும்படி பாதிராத்திரியில் எழுந்திருப்பேன். 62. |
| ஞா | 14 | ௩௦ | பூமி உமது கிருபையினால் நிறைந்திருக்கிறது. 64. |
| தி | 15 | ௧ | உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். 64. |
| செ | 16 | ௨ | ஞானியின் செவி அறிவை நாடும். நீதிமொழி 18: 15. |
| பு | 17 | ௩ | ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல. 19: 2. |
| வி | 18 | ௪ | பொய்களைப் பேசுகிறவன் தப்புவதில்லை. 5. |
| வெ | 19 | ௫ | குற்றத்தை மன்னிப்பது மனுஷனுக்கு மகிமை. 19: 11. |
| ச | 20 | ௬ | அசதியானவன் பட்டினியாயிருப்பான். 15. |
| ஞா | 21 | ௭ | கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன். ஏசாயா 61: 10. |
| தி | 22 | ௮ | சகல ராசாக்களும் உன் மகிமையைக் காண்பார்கள். 62: 2. |
| செ | 23 | ௯ | கர்த்தருடைய கையில் அலங்காரமான கிரீடமாயிருப்பாய். 3. |
| பு | 24 | ௧௦ | நீர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிற தேவன். யோனா 4: 2. |
| வி | 25 | ௧௧ | நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார். 4. |
| வெ | 26 | ௧௨ | முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள். யோவான் 15: 24. |
| ச | 27 | ௧௩ | நீங்களும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். 27. |
| ஞா | 28 | ௧௪ | சரீரம் கர்த்தருக்கே உரியது. 1 கொரிந்தியர் 6: 13. |
| தி | 29 | ௧௫ | வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். 18. |
| செ | 30 | ௧௬ | நீங்கள் உங்களுடையவர்களல்ல. 19. |

## விசேஷித்த நாட்கள்.

7. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்துநாலாம் ஞாயிறு.
13. பௌரணமி.
14. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்தைந்தாம் ஞாயிறு.
21. திரித்துவத் திருநாளுக்குப் பின்வரும், இருபத்தாறும் ஞாயிறு.
27. அமாவாசை.
28. அடுவெந்து என்னும் நாட்களில், முதலாம் ஞாயிறு.

# FRIENDLY INSTRUCTOR.

# நற்போதகம்.

Vol. 27. December. No. 12.

Contents:


Bible Sketches and their Teachings. ... ... ... 222
The Life of St Ambrose, Bishop of Milan.- ... ... 226
The Life of St John Chrysostom. ... ... ... 229
Notes on Exodus. ... ... ... ... ... ... 230
The Pondicherry Version of the Gospels and Acts. 236
Summary of News. ... ... ... ... ... ... 238


அட்டவணை:


பாலபோதனை. ... ... ... ... ... ... ௨௨௨
அம்புரோஸ் கண்காணியார் ஜீவியவிர்த்தாந்தம். ... ௨௨௬
ஜாண் கிறிசொஸ்தம் கண்காணியார் சரித்திரம். ... ௨௨௯
யாத்திராகம வியாக்கியானம். ... ... ... ... ௨௩௦
ரோமானித்தார் பிரசித்தப்படுத்தின சுவிசேஷம். ... ௨௩௬
சமாசாரத்திரட்டு. ... ... ... ... ... ... ௨௩௮


Palamcottah:

PRINTED AND PUBLISHED AT THE CHURCH MISSION PRESS,
BY L. DEVANAYAGAM PILLAY.

1875.

# நற்போதகம்.

௰உ. டிசம்பர்மீ. ௲௮௱௭௰௫.

## Bible Sketches and their Teachings.

## பாலபோதனை.

### எலிஷா செய்த அற்புதங்கள்.

2 இராசாக்கள் 4, 5, 6. 1—18.

(தொடர்ச்சி.)

இன்னமும் சில படங்களிருக்கின்றன. தேசத்தில் பஞ்சமுண்டாயி
ருந்தது. அக்காலத்தில் சில சனங்கள் கூழ்காய்ச்சிச் சாப்பிடுகிறார்கள்.
தானியங் கிடையாதபொழுது சனங்கள் எப்பேர்ப்பட்ட கேவலமான
பதார்த்தங்களையுஞ் சாப்பிடுகின்றதுண்டே. இத்தேசத்திலும் பஞ்சகா
லத்தில் ஏராளமான சனங்கள் காட்டிலுள்ள நானாவகையான கிளை
கிழங்குகளைப் பிடுங்கிச் சாப்பிட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறேன்.
எலிஷாவோடிருந்த சனங்களோ பேய்க்கொம்மட்டிக்காய்களை நஞ்சு
என்று அறியாமல் கொண்டுவந்து சமைத்து, பசியோடு சாப்பிட்டுக்
கொண்டிருக்கையில், அது நஞ்சு என்று அறிந்து நடுங்கினார்கள்.

உடனே அவர்கள் தீர்க்கதரிசியைப் பார்த்து, "எங்கள் ஆண்டவ
னே பானையில் சாவிருக்கிறது" என்று கூப்பிட்டுப் புலம்பினார்கள். தே
வன் திரும்பவும் அவனுக்கு அருள் அளித்தார். அவன் ஒரு பிடி மாவை
யெடுத்துப் பானையிற்போட, அது நல்ல தித்திப்பான போசனமாயிற்
று. அதற்குச் சிறிதுகாலத்துக்குப் பிறகு, ஒரு விருந்து நடக்கிறது.
அறுப்புக்காலத்தில் ஒருவன் தீர்க்கதரிசிக்கு ஒரு காணிக்கைகொண்டு
வந்து கொடுத்தான். தீர்க்கதரிசியோடு நூறுபேர் இருந்தார்கள்.
அவன் கொண்டுவந்ததோ இருபது வாற்கோதுமை அப்பங்களும் கொ
ஞ்சம் தானியக்கதிர்களுமாத்திரந்தான். இவைகள் அத்தனை பேருக்கு
எம்மாத்திரம்! என்றாலும் தேவனுடைய வல்லமையைக்கொண்டு தீர்க்
கத்தரிசி அதுகளைப் பெருகப்பண்ணினான். "கர்த்தருடைய வார்த்தை
யின்படியே அவர்களெல்லாரும் சாப்பிட்டதுமன்றி, மீதியுமிருந்தது."

இன்னம் ஒரு படம் காண்பிக்கட்டுமா? இந்தப் படத்தை நீங்கள் பல
முறையும் பார்த்திருப்பீர்கள். சீரியா தேசத்தில் நாகமான் பெண்சாதிக்
குப் பணிவிடை செய்துகொண்டிருந்த அடிமைப்பெண்ணையும், கர்வங்
கொண்ட குஷ்டரோகியான நாகமானையும், எலிசாத் தீர்க்கதரிசியினி
டத்துக்கு அவன் பிரயாணம்பண்ணினதையும், அவ்விடத்துக்கு வந்த
பொழுது அவன் காண்பித்த மதியீனமான கர்வத்தையும், அப்பால்
யோர்தான் நதியில் அவன் ஏழுதரம் மூழ்கிச் சொஸ்தமடைந்ததையும்
நீங்கள் நன்றாய் அறிவீர்களே. ஒரு சிறு பெண்முதலாய் சமையத்திற்
சொன்ன புத்தியுள்ள ஒரு வார்த்தையினால் இவ்வளவு பெரிய நன்மை
செய்தாளென்று பார்க்கும்போது எத்தனை சந்தோஷத்தைத் தருகிறது.



ஆ, இந்தப் படத்தின் மறுபுறத்தைப் பார்ப்பீர்களாகில் பயங்கரத்தைக்
கொடுக்கும். அதோ, பொருளாசைக்காரனும் பொய்யனும் வஞ்சக
னுமான கேயாஸ் நிற்கிறதைப் பாருங்கள். பிரியமானவர்களே, நீங்
கள் பொய்சொல்லத் தூண்டிவிடப்பட்டபோது, "கேயாசி உறைந்த
மழைநிறமான குஷ்டரோகியாகி, எலிசாவின் சமுகத்தைவிட்டுப் புறப்
பட்டுப்போனான்" என்ற வார்த்தைகளை நினைத்து ஒரோர்வேளை நடுங்க
வில்லையா?

வேறொரு அற்புதமிருக்கிறது. அதை ஒருவேளை அற்பமானதென்று
எண்ணுவீர்கள். ஆனாலும் ஒரு நல்ல கருத்தும் நேர்த்தியான படிப்பி
னையும் அதிலே அடங்கியிருக்கிறது. சில ஏழைச் சனங்கள் யோர்தான்
நதிக்கரையில் மரங்கள் வெட்டினார்கள். வெட்டுகையில் ஒருவனுடைய
கோடரி தண்ணீரில் விழுந்துவிட்டது. அது போனது பெரியகாரிய
மல்லவென்றாலும், இரவலாக வாங்கினது. இரவல் கொடுத்தவன் பே
சாதிருப்பானா? வேறொன்றைக் கிரயத்துக்கு வாங்கிக்கொடுக்கவே
ண்டுமானாலும் அவனிடத்தில் பணமில்லை. ஆகையால் தீர்க்கதரிசி
யைப்பார்த்து அங்கலாய்த்தான். அதன்பேரில் தீர்க்கதரிசி ஒரு
கொம்பை வெட்டி தண்ணீரிற்போடவே, அந்த இரும்பு அடியிலிருந்து
எழும்பி தண்ணீரின்மீது மிதந்தது. உண்மையையும் உழைப்பையும்
தேவன் கனப்படுத்துகிறாரென்று இந்த அற்புதம் நமக்குப் போதிக்கி
றது. ஏழை மரம்வெட்டிகளும், தாங்கள் வேலைசெய்யும்போது கர்த்
தர் தங்களுடனேகூட இருக்கிறாரென்று, இதினாலே அறிந்துகொள்ள
லாம். நாகமானென்ற பெரிய படைத்தலைவனைத் தேவன் எப்படிச் சொ
ஸ்தப்படுத்தினாரோ, சூனேமியாளின் கண்ணீரை எப்படித் துடைத்தா
ரோ, அப்படியே இந்த விறகுவெட்டிகளுக்கு அனுகூலமாக அற்புதம்
செய்யவும் அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

பெரிதும் சிறிதுமான இந்த அற்புதங்களெல்லாம், அக்காலத்திலிருந்
தவர்களைப் பார்த்து, "இதோ நானிருக்கிறேன் என்னை மறந்துபோகா
தேயுங்கள்" என்று தேவன் சொல்லுகிறதுபோலிருக்கிறது. அந்த வகை
யாய் நம்மோடு அவர் பேசாவிட்டாலும், வேறுவகையாய்ப் பேசுகிற
தில்லையா? அவருடைய சப்தத்துக்குச் செவிகொடுக்கிறோமா? அவர்
நம்மோடுங்கூடவிருக்கிறாரென்று உணருகிறோமா? இந்த உணர்வு நமக்
குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறதா அல்லது நமக்கு வெட்கத்தையும்
பயத்தையுமுண்டாக்குகிறதா? பிரியமானவர்களே தேவன் எலிஷாவுக்
கு எப்படிச் சமீபமாயிருந்தாரோ உங்களுக்கும் அப்படியே அவர் சமீ
பமாயிருக்கிறார். அவருடைய அன்பு உங்களுக்காக அதிசயங்களையும்
நடப்பிக்கிறது. எலிஷா மகா பொல்லாத காலத்திலிருந்தான். தேவ
னைப்பற்றிய நினைவே உத்தமமாய் நடக்கும்படி அவனுக்கு நல்ல நிர்
ணயத்தையும் தைரியத்தையுங்கொடுத்தது. தேவன் அவன் பட்சத்தி
லிருந்து அவனை ஆதரித்துப் பாதுகாத்து வந்தார். நாமோ, பிரியமா
னவர்களே, சந்தோஷமான காலத்திலிருக்கிறோம். என்றாலும், ஒரோர்
வேளை பாவஞ்செய்யத் தூண்டிவிடப்படுகிறதுண்டே. எப்பொழுதும்
சரியான பாதையில் நடக்கிறதும் வருத்தமாயிருக்கிறது. பொல்லாத
வர்களாலும் அடிக்கடி துன்பப்படுகிறோம். ஆகையால் இன்னம் ஒரு
படிப்பினையைப் படித்துக்கொள்ளுங்கள். அதோ அந்தப் படத்தைச்
சற்றுப் பாருங்கள். ஒரு காலத்தில் எலிஷாத் தீர்க்கதரிசியைப் பிடித்
துக் கொன்றுபோடும்படி ஒரு இராசா இரதங்களையும் குதிரைகளையும்
ஏராளமான ஓர் இராணுவத்தையும் அனுப்பினான். தீர்க்கதரிசி அப்
பொழுது தோத்தான் என்னப்பட்ட ஒரு சிறு கிராமத்தில் சஞ்சரித்

துக்கொண்டிருந்தான். மேற்படி இராணுவத்தார் அதையறிந்து அவனை எப்படியும் பிடித்துக் கொண்டுபோகவேண்டுமென்று தீர்மானித்து, அந்தக் கிராமத்தை யெப்பக்கத்திலும் வளைந்துகொண்டார்கள். தீர்க்கத்தரிசியின் வேலைக்காரன் அதைக் கண்டபொழுது பயந்துபோய், அவனை நோக்கி, "ஐயோ என் ஆண்டவனே என்ன செய்வோம் என்முன்." அப்பொழுது எலிஷா விண்ணப்பம்பண்ணி, "கர்த்தாவே இவன் பார்க்கும்படிக்கு இவன் கண்களைத் திறந்தருளும்" என்முன். அப்பால் அவ்வேலைக்காரன் பார்க்கவே, ஆச்சரியமான காட்சிகள் காணப்பட்டன. "அக்கினி மயமான குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருக்கிறதைக் கண்டான்."

"கர்த்தருடைய தூதன் தமக்குப் பயந்தவர்களைச் சுற்றிலும் பாளையம்போட்டு அவர்களை விடுதலை செய்கிறார்" என்பது அக்காலத்தில் உண்மையென்று விளங்கினதுபோலவே தற்காலத்தில் நம்முடைய விஷயத்திலும் உண்மையென்று விளங்குகின்றது.

"கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவரிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறவன் பாக்கியவான்."

---

## அல்லேலூயா செயம்.

## 2 நாளாகமம் 20 ம் அதிகாரம்.

---

வேதபூமியாகிய கானான் தேசத்தைப் பார்க்கப்போகிற யாத்திரிகர் எருசலேமுக்குத் தெற்கே பெத்லேகேமுக்குஞ் சற்று அப்பால் விசாலமான ஓர் மைதானத்தில் ஒரு கிராமம் அழிந்துகிடக்கிறதைக் காண்கிறார்கள். அந்தக் கிராமத்தின் பெயர் பெராக்கூத் என்பது. இப்பொழுது உடைந்து தகர்ந்து நொறுங்கிக்கிடக்கிற அந்தச் சுவர்களை யார், எப்பொழுது, எவ்விதம் கட்டினதென்று, அங்கே திரிகிற மேய்ப்பருக்குத் தெரிகிறதில்லை. அந்தக் கிராமத்துக்கும் அந்தப் பள்ளத்தாக்குக்கும் அந்தப் பெயர் இடப்பட்ட முகாந்தரமும் அவர்களுக்குத் தெரியாது. விசாரிக்கிறவர்களுக்கு "வெகுகாலமாச்சுது" என்றுமாத்திரம் சொல்லுவார்கள்.

ஆம், அது கட்டப்பட்டு வெகு காலமாயிற்று. வேதாகமத்தை நமது கையில் வைத்துக்கொண்டு அந்தப் பூர்வகாலத்துக்கு மனதினாலே போய் மேய்ப்பருக்குத் தெரியாத இரகசியங்களைக் கண்டுகொள்ளலாம். முந்திய காலத்தை நமக்கு முன்னிருத்திக்கொண்டு பார்ப்போம். இப்பொழுது கரடுமுரடான காடும், சன சஞ்சாரமில்லாத அழிந்துபோன கிராமமும் ஆடுமேய்க்கிற மேய்ப்பன்மாத்திரம் ஒரோர்வேளை காணப்படுகிற இடமுமான அந்தப்பள்ளத்தாக்கின் நடுவில், அதோ ஏராளமான சனக்கூட்டம் நிற்கிறதைப் பாருங்கள். வெற்றிவேந்தர் பாடுகிற சத்தம்போல ஒரு சத்தம் அவர்கள் நடுவிலிருந்து எழும்புகிறதே. வீணை சுரமண்டலமுதலிய கீதவாத்தியங்களை வாசிக்கிறவர்கள் கீர்த்தனையைத் தொடங்குகிறார்கள். எண்ணிறந்த சனங்கள் அவர்களோடு சேர்ந்து பல்லவி பாடுகிறார்கள். இந்தப் பெரியகூட்டத்துக்கு முன்னே யுத்தவீரன் சாடையாய் ஒருவன் நிற்கிறான். அவனுடைய தலையிலே சீராவுக்குப்பதிலாக கிரீடம் தரித்திருக்கிறது. கீதவாத்தியக்காரரும் பாடுகிற மற்றவர்களும் வெள்ளை வஸ்திரம் தரித்தவர்களாய் அவனைச் சுற்றிநிற்கிறார்கள். அவர்கள் பாடுகிற சத்தத்தினால் தூரத்திலிருக்கிற மலைகளும் எதிர்த்து ஒலிக்கிறதைக் கேளுங்கள். இப்பேர்ப்



பட்ட வெற்றிப்பாட்டு இதற்குமுன் ஒருக்காலும் கேட்டதில்லை. இத்
தனை ஏராளமான சனங்கள் இந்தப் பரும்புகளின் நடுவே வந்து கூடி
நிற்கிற முகாந்திரமென்ன? அவர்களிடத்தில் வெளிப்படுகிற சந்தோ
ஷத்துக்குக் காரணம் என்ன?

அவர்கள் பாடுகிற பாட்டு அவர்கள் அடைந்த ஓர் செயத்துக்கு நன்
றியறிந்த ஸ்தோத்திரம். ஆகிலும் செயவீரர் போர்செய்தவர்களுமல்ல,
போரிற் பிரவேசித்தவர்களுமல்ல. வெண் வஸ்திரந் தரித்திருக்கிற
பாடகர்களும் கீதவாத்தியக்காரர்களும் அதோ தூரத்தில் தெரிகிற
எருசலேம் தேவாலயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் போர்வீரரல்ல,
என்றாலும் சத்துருவின் சேனைக்கு விரோதமாக தங்கள் இராசாவின்
சேனையோடுபோயிருந்தார்கள். அவர்கள் பட்டணத்தைவிட்டுப் புறப்
படுகிறதற்குமுன்னமேயே, ஒரு பட்டயத்தை உருவவாவது ஈட்டியை
யெறியவாவது அவசியமிராதென்று இராசா நன்றாய் அறிந்திருந்தான்.
அந்த இராசாவின் பெயர் யோசபாத்து என்பது. தாவீதின் சிம்மாச
னத்தில் வீற்றிருந்த உத்தமரும் விவேகிகளுமான அரசர்களில் இவன்
ஒருவன். தேவன் தனக்குச் செயத்தை அருளிவிட்டாரென்று அவன்
முன்னதாகவே அறிந்திருந்தான். ஆதலால் அவன் பாடுகிற இந்த வெற்
றிப்பாட்டு தேவனை ஸ்துதிக்கிற பாட்டுத்தான். அந்த நாளில் அவ்வி
டத்தில் கூடியிருந்த சந்தோஷமான கூட்டத்தினாலே அந்தப் பள்ளத்
தாக்குக்கு பெராக்கா என்ற பெயர் இடப்பட்டது. பெராக்கா என்
னும் எபிரேயப் பாஷை மொழிக்கு ஆசீர்வாதம் என்பது பொருள்.
மேற்படி பெயரே பெராக்கூத்து என்று லேசாய் மருவி, நாளதுவரை
யும் அப்படியே வழங்கிவருகிறது.

இந்தப் பெரிய வெற்றியைக்குறித்த விர்த்தாந்தத்தை இப்பொழுது
சற்று கவனிப்போமாக. முதலாவது மேற்படி வெற்றியையடைந்த
அந்த மகா உத்தம அரசனைக்குறித்துக் கொஞ்சம் யோசித்துக்கொள்
ளவேண்டும்.

இதை வாசிக்கிறவர்களில் அநேகர் சரித்திரம் படிக்கிறவர்களாயிருப்
பார்கள். இங்கிலாந்து தேசத்து இராசாக்கள், பிராஞ்சுதேசத்து இரா
சாக்கள், உரோமாபுரி சக்கரவர்த்திகள் முதலிய அநேக தேசங்களி
லுள்ள இராசாக்களின் பெயர் அட்டவணைகளையும் கால அட்டவணை
களையும் படித்து ஒப்புவிக்கிறதுண்டே. இஸ்ரவேல் இராசாக்கள் யூத
இராசாக்களாகிய இவர்களுடைய அட்டவணைகளையும் அவ்விதமே
நீங்கள் படித்ததுண்டா? படித்ததுண்டானால் ஒரு காரியம் உங்களுக்
குத் தெளிவாய் விளங்கியிருக்கும். அதென்னவென்றால் வடஇராச்சிய
மாகிய இஸ்ரவேல் இராச்சியத்தில் ஒரே குடும்பத்து அரசர்களே
வரிசையாய் ஆண்டு வரவில்லை என்பதுதான். இஸ்ரவேல் இராச்சியத்
தில் முதலாம் அரசனாகிய எரோபெயாமென்பவன் மரித்தபொழுது
அவன் குமாரன் பட்டத்துக்கு வந்து இரண்டு வருஷமாத்திரம் அர
சாண்டான். அதற்குள்ளாக அவனுடைய சேனைத்தலைவன் அவனைக்
கொன்றுபோட்டு, வெகுகாலம் அரசாண்டு மரித்தான். இவனுக்கு ஒரு
குமாரன் இருந்தான். இவனும் இரண்டே வருஷம் ஆண்டு கொலையுண்
டான். அதன்பேரில் அந்தக் கொலைபாதகன் இராசாவாகி ஒரு வார
மாத்திரம் சிம்மாசனத்திலிருந்தான். அப்புறம் அநேகம் கொலைகளும்
அநேக மாறுதல்களும் நடந்துகொண்டேவந்தன. எவன் யுத்தத்தில்
பராக்கிரமசாலியாயிருந்தானே அவன் அரசனைக் கொன்றுபோட்டு
இராச்சியத்தைக் கைக்கொள்வது வழக்கம். ஒருவனாவது சமாதான
மாய் இராச பட்டத்தைத் தன் குமாரனுக்குக் கொடுத்துப் போகிறதற்

கு ஏது கிடைக்கவில்லை. தெற்கு இராச்சியத்திலோ காரியம் முற்றும்
வித்தியாசமாயிருந்தது. தாவீதின் குமாரரும் அவனுடைய குமாரரின்
குமாரரும் வரிசையாய் அரசாளுவார்களென்று தேவன் வாக்கு அரு
ளியிருந்தார். அந்த வாக்குப்படிக்கு, அநேக இராசாக்கள் சத்துவமற்
றவர்களாயும் துன்மார்க்கராயுமிருந்தபோதிலும், தாவீது சாலமோன்
என்பவர்களுடைய குடும்பத்தாரே கடைசிவரையும் இடையறாமல்
அரசாண்டார்கள்.

எருசலேமில் அரசுபுரிந்த இராசாக்களெல்லாரையும் வரிசையாய்
யெடுத்துச் சொல்லவேண்டுமாகில் அதிக இடம்பிடிக்கும். இந்த யோ
சபாத்து என்பவன் ரெகோபெயாமின் பேரன், ஆதலால் தாவீதின் சந்த
தியான்தானே. இவனை இரண்டாம் தாவீது என்று சொல்வாருமுண்டு.
இவனும் யுத்தத்தில் பராக்கிரமசாலியும் பக்தியில் பேர்போனவனும்
அரசாட்சியில் மகா விவேகியும் திறமையுடையவனுமாயிருந்தான். அ
வன் சிம்மாசனமேறின கொஞ்சநாளைக்குள்ளாக சனங்களுக்குப் போ
திக்கும்படியாக பிரபுக்களையும் ஆசாரியர்களையும் லேவியரையும் இராச்
சியமெங்கும் அனுப்பினதாக வாசிக்கிறோம். (2 நாளாகமம் 17: 7—9.)
அவர்கள் போனபோன இடமெல்லாம் கர்த்தருடைய நியாயப்பிரமா
ணப் புஸ்தகத்தைக் கொண்டுபோய் அதிலிருந்து சனங்களுக்குப் போ
தித்தார்கள். இவ்விதமாக அந்த இராசா எக்காலத்திலுள்ளவர்களுக்
கும் நல்ல மாதிரி காண்பித்தான். ஒரு தேசத்தாரை மெய்யாய் மேன்
மையும் புத்தியுமுள்ள சனமாக்கத்தக்கது வேதாகமம் ஒன்றுதானே.
இந்த வேலையை நடப்பிப்பதற்கு மற்றவர்களை ஏற்படுத்தினதோடு யோ
சபாத்து திர்ப்திகொள்ளவில்லை. அவன் தானும் போதகனானான். அவன்
தன் ஆடம்பரத்தை மற்றவர்களுக்குக் காண்பிக்கவோ, தன் குடிசனங்
களால் வாழ்த்திப்போற்றப்படவோ விரும்பாமல், அவர்களைத் தங்கள்
பிதாக்களின் தேவனாகிய கர்த்தரிடத்துக்குத் திருப்பிக்கொண்டுவரும்
படியாக இராச்சியமெங்கும் சுற்றித்திரிந்தான். மேலும் சனங்களை
நியாம் விசாரிக்க ஏற்படுத்தப்படும் நியாயாதிபதிகள் உத்தமரும் நீதி
மான்களுமாயிருக்கவேண்டுமென்றும் கரிசனைப்பட்டான். அவர்களுக்
கு அவன் கொடுத்த சட்டங்களும் சொன்ன புத்திமதிகளும் இந்த இர
ண்டாம் நாளாகமத்தின் பத்தொன்பதாம் அதிகாரத்திற் காண்பீர்கள்.
அவைகள் தங்க எழுத்தில் வரையப்படவுந்தக்கவைகளென்று சொல்ல
லாமே.

---

St. Ambrose, Bishop of Milan.

---

## அம்புரோஸ் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

---

அப்பால் அம்புரோஸ் கண்காணியார் பெயர் எங்கும் பிரஸ்தாபமா
னதினால் தூரதேசத்திலுள்ள ஒரு இராணி அவருக்குச் சில வெகுமதி
களனுப்பினதோடு ஒரு நிருபமெழுதி, கிறிஸ்துமார்க்க உபதேசத்தைத்
தனக்குப் போதிக்கவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டாள். அந்தப்
படியே அவர் கிறிஸ்துமார்க்க முக்கிய உபதேசங்களின்பேரில் வினா



விடையாக ஒரு சிறிய நூல் எழுதி அவளுக்கு அனுப்புவித்தார். அதைப்
பெற்றுக்கொண்ட சிறிதுகாலத்துக்குள்ளாக அவளும் அவள் புருஷ
னுமாக அவரைக் கண்டு முகாமுகமாய்ச் சம்பாஷித்துக்கொள்ளும்ப
டியாக மிலான் நகரத்துக்குப் புறப்பட்டுவந்தும் அவர்கள் விரும்பிய
படி அவரைக் கண்டுபேசிக்கொள்ள அவகாசங்கிடைக்கவில்லை. என்
னத்தினாலென்றால் அதற்குள்ளாக அவர் தமது மிகுந்த பிரயாசத்தி
னாலும் கவலைகளினாலும் தளர்ந்துபோய், வியாதிப்பட்டு மரணத்த
றுவாயிலிருந்தார். தாம் மரித்துப்போவது நிச்சயமென்று முன்னறி
வித்துமிருந்தார். அவர் வியாதிப்பட்டிருந்த செய்தி எங்கும் பரவவே,
ரோமைப் பிரபு ஒருவர் அதைக் கேள்விப்பட்டு சில சிநேகிதர்களைநோ
க்கி, அந்த தேவபக்தன் மரிக்கிறதோடு இத்தாலியா தேசத்துக்கு
அழிவு சமீபித்துவிட்டதென்று நிச்சயித்துக்கொள்ளுங்களென்று சொ
ல்லி பல கண்காணிமார்களையும் பிரபுக்களையும் வரவழைத்து, நீங்கள்
அம்புரோஸ்க் கண்காணியாரிடத்திற்போய் அவரை உயிரோடு வைக்
கும்படிக்குத் தேவனை வேண்டிக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்
ளுங்களென்று சொல்லியனுப்பினார். அப்பிரகாரமே அவர்கள்போய்
கண்ணீர்விட்டு அழுதுகொண்டு, அவர் இறந்துபோகிறதானால் சபைக்
கு நேரிடத்தக்க சொல்லமுடியாத நஷ்டத்தை யெடுத்துச்சொல்லி
தமக்குச் சுகமுண்டாகத் தேவனைப் பிரார்த்திக்கும்படி தங்களாலி
யன்றமட்டும் அவரை யேவிவிடப்பார்த்தார்கள். அவரோ அதற்கு மா
றுத்தரமாக, "உயிரோடிருக்கிறதற்கு வெட்கப்படத்தக்கதாக நான்
நடக்கவில்லை, என் எசமான் இரக்கமும் அன்புமுள்ளவரானதால் மரிக்
கிறதற்கு நான் பயப்படுகிறதில்லை" என்றார். கி. பி. 397-ம் வருஷம் ஏப்
பிரில்மீ 7உ அன்று இரண்டொரு மணி நேரமாய் அவர் கைகள் கூப்
பினவைகளாயும் அவருடைய உதடுகள் அசைகிறவைகளாயுமிருந்தன.
ஆகிலும் அவர் சொன்னது ஒன்றும் விளங்கவில்லை. அப்புறம் வெர்
சில் நகரத்துக் கண்காணியாரான ஓனோரத்து என்பவர் அவருக்கு கர்
த்தருடைய இராப்போசனம் பரிமாறினார். இராப்போசனம் பரிமாறி
முடிகிறதற்குள்ளாக அவருடைய ஆத்துமம் பரலோககதியடைந்தது.
அப்பொழுது அவருக்கு (64) வயசு.

அம்புரோஸ் கண்காணியார் தாம் அனுசரித்திருந்த மார்க்கத்துக்கு
வெகுகாலம் அலங்காரமாயும் அந்தரங்கமான தமது குணம் நடத்
தைகளில் எல்லோருக்கும் நல்ல மாதிரியாயுமிருந்தபின் இவ்விதமாய்த்
தமது சீவ ஓட்டத்தை முடித்தார். அவர் தமது பக்திமுயற்சிகளில்
தளர்ச்சியில்லாமலும் ஊக்கமுடையவராயுமிருந்தார். "தேவனே உம்
மைத் துதிக்கிறோம்" என்ற திவ்வியமான பாட்டு, அகுஸ்தீன் அவரால்
ஞானஸ்நானம்பெற்றபொழுது அவர் பாடினதென்று பெரும்பாலும்
சொல்லப்படுகிறது. பகலில் மிகுதியான நேரத்தையும் சிலவேளைக
ளில் இரவுலும் அப்படியே வாசிப்பிலும் செபத்தியானத்திலும் பின்
னிடுவது அவருக்கு வழக்கம். அவர் உருக்கமும் இரக்கமுமுள்ள சுபா
வமுடையவராயிருந்தபடியால், பலமுறையும் துன்பப்படுகிறவர்களுக்
காக ஏற்பட்டதுண்டு. கிரோஷன் என்பவன் இராச்சியபாரந்தாங்கின
காலத்தில், அஞ்ஞானப் பிரபு ஒருவன் இராயனை அவமரியாதையாய்ப்
பேசின குற்றத்தினிமித்தம் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப்
பட்ட செய்தியைக்கேட்டு அவர் தட்சணமே இராயனிடத்துக்குப்
போய் அவனுக்காக பரிந்துபேசி, அவனுக்கு மன்னித்துவிடும்படியாகச்
செய்தார். அதன்றியும் இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்ட இயூ
ஜீனியுஸ் என்பவன் கீழ்ப்படுத்தப்பட்டுப்போனபொழுது, அந்த இரா

யனிடத்திலும் அவர் வெகுவாய்ப் பரிந்துபேசி, மேற்படி கலகத்திற் சம்பந்தப்பட்டு தங்கள் பிராணனை இழந்துபோக இருந்த அநேகரைத் தப்புவித்தார். அவருடைய உதாரகுணமும் மட்டற்றதாயிருந்தது. எல்லாரையும் அவர் சிநேகித்து உதவிசெய்துவந்ததுமல்லாமல், விசுவாச வீட்டாருக்கு விசேஷித்தபிரகாரம் அப்படிச்செய்துவந்தார். பிறரால் அவருக்கு எத்தனையோ அநியாயங்களும் அவமரியாதைகளும் செய்யப்பட்டபோதிலும், அவைகளில் ஒன்றுக்காவது பழிவாங்கக்கருதாமல், தீமையை நன்மையினாலேயே செயித்துவந்தார். அவர் மாக்ஸிமஸ் என்பவனிடத்திற்போய்த் தனக்கு அநேக அநியாயங்கள் செய்த ஒருவனுக்காகப் பரிந்துபேசும்படி சம்மதித்துக்கொண்ட காரியத்தில் இதற்கு ஒரு நல்ல திருஷ்டாந்தம் காணலாம். சகல விஷயங்களிலும் கண்காணிமார் யாவருக்கும் சிறந்த மாதிரி காண்பிக்கிறவராயிருந்தார். குருப்பட்டத்துக்கு யோக்கியர்களைமாத்திரம் தெரிந்து ஏற்படுத்துவதில் மிகவும் கரிசனையாயிருப்பார். கர்த்தருடைய இராப்போசனத்தை நாடோறும் பரிமாறுவார். ஒவ்வொரு ஓய்வுநாளிலும் மற்றுஞ் சமையங்களிலும் பிரசங்கம்பண்ணுவார். பொதுவான விசுவாசத்தைக்குறித்தும் திருச்சபையின் ஆளுகைக்குரிய சட்டதிட்டங்களைக்குறித்தும் அவர் மிகுந்த வைராக்கியமுடையவராயிருந்து, எதிரிகளுக்கு எவ்வளவேனும் இடங்கொடாமல் பலமாய்ப் போராடிவருவார். குற்றஞ்செய்தவர்களைக் கொஞ்சமேனும் பட்சபாதமில்லாமல் கண்டிப்பார். எப்பேர்ப்பட்ட உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களும் ரோமை இராயர்களுமுதலாய் அவருடைய கண்டனைக்குத் தப்பவில்லை. தியோடோசியுஸ் இராயன் விஷயத்தில் அவர் காண்பித்த மனவுறுதியைக்கொண்டு அவர் எவ்வளவு பரிசுத்தமான தைரியத்தோடு துன்மார்க்கத்தைக் கடிந்துகொண்டாரென்று உணர்ந்துகொள்ளலாம். தமது கடமையை நிறைவேற்றுவதில் மனுஷருக்கு அவர் எவ்வளவேனும் பயப்படவில்லையென்று பரிஷ்காரமாய் விளங்குகிறதல்லவா? சபையாருக்குள் நேரிடும் வழக்குகளையும் மனஸ்தாபங்களையும் அவர் எப்பொழுதும் கரிசனையாய் விசாரித்துத் தீர்ப்புச்செய்வார். அவர் தாமே தம்மையடக்கி ஒறுப்பாய்ச் சீவித்தபோதிலும், ஏழைகளை அவர் போஷிப்பித்துப் பராமரித்துவந்ததல்லாமலும் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களுக்கும் அவர் அவர் அந்தஸ்துக்குத்தக்கதாக விருந்துசெய்துவருவார். எத்திறத்தோராலும் அவர் மிகுந்த கனிசமாயும் சங்கையாயும் கொண்டாடப்பட்டுவந்தார். இத்தாலியா தேசத்திலுள்ளவர்கள் மாத்திரந்தான் அப்படி அவரைக் கனப்படுத்தினார்களென்றல்ல, பிறதேசங்களிலும் அவர் வெகு கீர்த்தியும் பிரஸ்தாபமுமடைந்திருந்தார். திருஷ்டாந்தமாக, பார்சுதேசத்தில் ஞானிகளென்று பெயரெடுத்திருந்த இருவர் அவரோடு சம்பாஷித்துக்கொள்ளவேண்டுமென்று மிலான் நகரத்துக்குப்போனதாகக் குறிப்பித்திருக்கிறது.

அம்புரோஸ் கண்காணியாருடைய பிரேதம் அவருடைய பெயர் வழங்கும் ஆலயத்தில் க்ஷேமிக்கப்பட்டது. எவ்வகை மதஸ்தரும் அந்தஸ்துள்ளவர்களும் அந்தச் சமயத்திற்போய் அவர்பேரில் தங்களுக்கிருந்த மிகுந்த மதிப்பை வெளியிட்டார்கள்.

அம்புரோஸ் என்பவர் தேவாராதனை முறைமை ஒன்று ஏற்படுத்தியிருந்தார். அதற்கும் அவர் பெயரே வழங்கிவருகிறது. பிற்காலத்தில் பாப்புக்கள் மேற்கத்திச் சபைகளிலே தங்கள் முறையை ஏற்படுத்தினபோதும் மிலான் நகரத்துச் சபை அதை அங்கீகரிக்காமல்



அம்புரோஸ் கண்காணியார் அதிகாரத்தைப் பாராட்டி அவருடைய முறைமையையே அநுசரித்துவந்தார்கள். பதினான்காம் நூற்றாண்டில் மிலான் நகரத்து டியூக் பிரபுக்கள் ஒரு நாணயத்தை உற்பத்திசெய்து அதற்கு அம்புரோசியா என்று பெயரிட்டு வழங்கிவந்தார்கள். அந்த நாணயத்தில் அம்புரோஸ் வலது கையில் சவுக்குப்பிடித்திருக்கிற பாவனையான சாயல் அமைந்திருந்தது. ஒரு யுத்தத்தில் மிலான் நகரத்துத் தளகர்த்தன் ஒருவனுக்கு அந்தப் பரிசுத்தவான் காணப்பட்டதினாலே மேற்படி நாணயம் அடிக்கப்பட்டதாகச் சொல்லிக்கொள்வார்கள்.

---

## The Life of St John Chrysostom.

## ஜாண் கிறிசொஸ்தம் கண்காணியார் சரித்திரம்.

கிழக்கத்திச் சபையைச்சேர்ந்த வேதசாஸ்திரிகளில் ஜாண் கிறிசொஸ்தம் கண்காணியாரைப்பார்க்க அதிகப் பிரஸ்தாபமடைந்தவர்கள் வேறொருவருமில்லை. கிறிசொஸ்தம் என்னும் பதத்துக்கு தங்கவாய் என்று பொருள். அவருடைய சாதுரியப் பிரசங்கத்தினிமித்தம் இந்தப் பெயரை வழங்கினார்கள். அவரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படுகிற ஒரு செபத்தை நாம் நாடோறும் காலைமாலைகளில் பிரயோகித்து வருகிறோமே. ஆகையால் அவருடைய சரித்திரத்தை வாசிக்கிறதற்கு அநேகர் பிரியப்படுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

ஜாண் கிறிசொஸ்தம் என்பவர் கி. பி. 344-ம் வருஷம்போல அந்தியோகியாப்பட்டணத்திலே அந்தஸ்துள்ள ஓர் குடும்பத்திற் பிறந்தவர். அவர் குழந்தையாயிருக்கும்பொழுதே அவருடைய தகப்பனார் மரித்துப்போனார். அதினால் கைம்பெண்ணான அவர் தாயாருக்கு அப்பொழுது இருபது வயசு. அதுமுதல் அவள் தன் குமாரனைப் படிப்பித்து வளர்ப்பதிலேயே தன் சிரத்தையையுங் கரிசனையையுமெல்லாம் செலுத்திவந்தாள். அப்புறம் அவர் சிறிதுகாலம் வெகுவாய்ப் பிரஸ்தாபமடைந்திருந்த லிபேனியுஸ் என்ற ஒருவனிடத்தில் கல்வியப்பியாசஞ்செய்தார். அவரிடத்தில் மிகுந்த திறமையும் புத்திக்கூர்மையும் விளங்கினபடியால், உபாத்தியாரிடத்தில் ஒருவர் ஒருநாள், உமக்குப்பின் பாடசாலையைக் கைக்கொண்டு நடத்தத்தக்க திறமையுடையவன் யார் என்று கேட்டதற்கு, “இந்த ஜாணைக் கிறிஸ்தவர்கள் நம்மிடத்திலிருந்து திருடிக்கொண்டு போய்விடாதபட்சத்தில் அவன்தான் அதற்குரிய திறமையுடையவன்” என்றானாம். அவர் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கப்பட்டுவந்தார். கல்வியப்பியாசமுடிந்தபின் சிறிதுகாலம், நீதிஸ்தலத்திலே நியாயவாதஞ்செய்துவருகையில், உலக முயற்சிகளினாலே தம்மனதுக்கு திர்ப்தியுண்டாகவில்லையென்று உணர்ந்து, வைதீக வகையாய்ச் சீவிக்கத் தீர்மானம்பண்ணிக்கொண்டார். மேலும் அந்தக் காலத்து இயல்பினாலே உலக முயற்சியை முற்றும் களைந்துவிட்டு சன்னியாசத்தில் பிரவேசிப்பதுதான் கர்த்தருக்கு அதிகப் பிரியமாயிருக்குமென்று வீணாய் நினைத்து, அந்தியோகியாவில் கண்காணியாராயிருந்த மெலித்யு என்பவரிடத்தில் வேண்டிய புத்திபோதனைகளைக் கேட்டுக்கொண்டு மலைகளுக்குப்போய்

சன்னியாசஞ்செய்துவந்தார். அவர் அருந்தபஞ்செய்து தம்மை மிகு தியும் ஒடுக்கி வருத்திக்கொண்டபடியால், இரண்டுமூனறு வருஷத்துக் குள்ளாக தேகசுகத்தினிமித்தம் அந்தியோகியாவுக்குத் திரும்பிவந் தார். அந்தச் சமயத்தில் மேலே குறித்த கண்காணியாரால் உதவிக் குருப்பட்டமும், அவருக்குப்பின் அவ்வுத்தியோகத்துக்கு வந்தவரால் குருப்பட்டமும் பெற்றுக்கொண்டார்.

---

## Notes on Exodus.

---

## யாத்திராகம வியாக்கியானம்.

---

### ௰௩. அதிகாரம்.

#### முதற்பேறுகள் தேவனுக்குப் பிரதிஷ்டைசெய்யப்பட்டது.

---

2. எகிப்தின் முதற்பேறுகள் அழிக்கப்பட்டதையும், அதினாலே இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலையானதையும் நினைவுகூரும்படிக்கு, இஸ்ரவேலருடைய முதற்பேறுகள் தேவனுக் கென்று பிரதிஷ்டைசெய்யப்பட்டு அவர்களுடைய மீட்புக்காக கிரயம் ஏற்படுத்தப்பட்டது. இது: இனிமேல் பாவ பலியாகப்போகிற மேசியாவுடைய பிராயச்சித்தத்தினிமித்தமே இப்பொழுது அவர்களுடைய ஜீவன் தற்காக்கப்பட்டது என்பதை அவர்களுக்குக் குறிப்பாகக் காட்டினது.

3—7. இஸ்ரவேலர் சுக்கோத்தில் சேர்ந்த உடனே, மோசே எகிப்து தேசத்தில் அவர்களுக்குச் சொன்ன கட்டளைகளை அவர்கள் மறந்துவிடாதபடிக்கு திரும்பவும் சொல்லுகிறான். இதை வருஷந்தோறும் நினைவுகூரும்படி நியமமாக ஏற்படுத்தினதினாலேயும் இங்கேயும் சொல்லநேரிட்டது. புளித்த மாவை அக்கினியால் சுட்டெரிப்பார்கள், அல்லது புதைத்துப்போடுவார்கள், அல்லது தூளாக்கிக் காற்றில் தூற்றிவிடுவார்கள். எப்படியும் பஸ்காப்பண்டிகைக்கு முந்தி புளித்தமா காணப்படவேகூடாது. புளிப்பில்லா அப்பம் சாப்பிடுகிற முதல்நாளிலே இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதினால், அந்த நாளை நினைவுகூரும்படி அந்தநாள் விசேஷமாய் ஆசரிக்கப்பட்டது. அநேக வேதவியாக்கியானிகள் நினைத்திருக்கிறபடி, அடுத்த ஏழாம் நாளாகிய அன்றைத்தினத்திலேயே இஸ்ரவேலர் சிவந்தசமுத்திரத்தைக் கடந்தார்கள். இந்த நாளும் ஓய்வுநாள்தான்.

8—10. இஸ்ரவேலருக்குக் கிடைத்த பெரிய விடுதலையை வம்சபாரம்பரியமாய் நினைவுகூரும்படி கற்பிக்கப்பட்டது. இஸ்ரவேலர் தேவனை நேசித்து, அவரையே தொழுதுகொண்டு அவருடைய மகத்துவத்தைக்குறித்து மனுஷருக்குள் வெளியரங்கமான அறிக்கைசெய்யும்படி இது நியமிக்கப்பட்டது.

"கையிலே...கண்களின்நடுவிலே." கையிலும் நெற்றியிலும் பச்சை குத்துவதுபோல இதை எழுதிக்கொள்வது அந்தக்காலத்திலே வழக்கமாயிருந்ததாகத் தோன்றும். இப்பொழுது ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போசனமும், கிறிஸ்துநாதருடைய இரட்சண்



ணியத்தை நமக்கு வம்சபாரம்பரியமாய் நினைப்பூட்டும் சாக்கிரமெந்
துகளாயிருக்கிறது.
12. "ஆண்கள்." தலைப்பிள்ளை பெண்பிள்ளையாயும், இரண்டா
வது ஆண்பிள்ளையாயுமிருந்தால், அந்த இரண்டாவது ஆண் முதற்பே
றாக எண்ணப்படமாட்டாது. பிற்பாடு முதற்பேர்களுக்குப் பதிலாக
லேவியர் தெரிந்துகொள்ளப்பட்டதைக்குறித்து எண். 3 அதி. காண்க.
17, 18. எகிப்துதேசத்திலிருந்து கானான்தேசத்துக்குச் சுருக்க
வழியாய்ப்போனால் சிலநாட்களுக்குள்ளாகப் போய்ச்சேரலாம் யாக்
கோபின் மக்கள் எகிப்துக்குத் தானியங்கொள்ளப்போய்த் திரும்பின
தைப் பார்த்தாலும் இதுகாரியம் பிரகாசமாய் விளங்குமே. அப்படி
நேராக சூவெஸ் பூசந்திவழியாய்ப்போனால் பெலிஸ்தியர் தேசத்தில்
போய்ச் சேர்வார்கள். பெலிஸ்தியர் குரூரமும் யுத்தாபேட்சையும் உள்
ள சாதியார். இஸ்ரவேலரோ ஆயுதபாணிகளாய்ப் புறப்படவில்லை.
நெடுங்காலமாய்அருஞ்சிறையிலிருந்துகோழைகளாயிருக்கிறார்கள், யுத்
தாப்பியாசமேயில்லை. இதினாலே அவர்கள் பெலிஸ்தியரைக் காணும்
போதே திடனற்று வெகுவாய் அதைரியப்பட்டுப்போவார்கள். ஆகை
யால் தேவன் சிவந்த கடலின் கரையை அடுத்து அவர்களைக் கூட்டிக்
கொண்டுபோகச் சித்தமானார்.
இப்பொழுது இஸ்ரவேலருக்கு யாதொரு யுத்தாயுதமிருந்ததாகத்
தோன்றவில்லை. பிற்பாடு எகிப்தியர் சிவந்த கடலில் அமிழ்ந்து அழிந்
ததில் இவர்கள் சில ஆயுதங்களைச் சம்பாதித்துக்கொண்டதாகக் கா
ணப்படுகிறது. 17: 8—13.
18. "அணிஅணியாய்." இந்த எபிரேயுப் பாஷை வார்த்தை:
'வரிசைக்கு ஐந்து பேராய்'என்று அர்த்தங்கொள்ளலாம். ஆனால்
'ஐந்து ஐந்து படைகளாய்ப் போனார்கள்' என்று சொன்னால் சரியாயி
ருக்கும். என்றாலும் பொதுவாக ஒப்புக்கொள்ளுகிறபடி, அவர்கள்
ஆயுதபாணிகளாயிராவிட்டாலும் ஒழுங்காய்ப்போனார்கள் என்று அர்த்
தமாம். சங்கிதக்காரன்: "அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்
டவன் ஒருவனுமிருந்ததில்லை" என்று சொல்லுகிறான். சங். 105: 37.
இது ஆச்சரியமாயிருக்கிறதே. உலக சரித்திரங்களில்: இப்படிப்பட்ட
திரள் கூட்டம் செல்லும்போது, இத்தனை வியாதிக்காரர் பின்னாகச்
சுமந்துபோகப்பட்டார்கள் என்று வாசிக்கிறதுண்டு. ஆனால் இங்கே
யோ ஒருவனும் அப்படியிருந்ததில்லை. ஒரு இஸ்ரவேலனாவது பலவீ
னத்தினால் எகிப்திலே பின்னுக்கு விட்டுவிடப்படவில்லை. இதுவும் இஸ்ர
வேலர் அற்புதமாய்ப் புறப்பட்டார்கள் என்பதை ரூபிக்கிறதல்லவா?
19. இஸ்ரவேலருடைய விடுதலைக்கும், அவர்கள் கானானைச் சுதந்
தரித்துக்கொள்வதற்கும் யோசேப்பின் எலும்புகள் அததாட்சியாயி
ருந்தது. ஆதி. 50: 24—27. வியா.
21, 22. எகோவா தமது தயவுள்ள சமூகத்தை ஆகாயத்தில் ஒரு
அற்புதக் காட்சியாய் இஸ்ரவேலருக்கு வெளிப்படுத்தினார். அந்தக் காட்
சியின் ரூபம் ஸ்தம்பம்போலிருந்தது. அதின் அடிப்பக்கம் இஸ்ரவே
லருடைய கூடாரங்களுக்கெல்லாம் நிழலைக்கொடுக்கத்தக்க பருமனா
யிருந்தது. இது பகலில் மேகமாகக் காணப்பட்டது. இரவில் தீபம்
போல் அவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுத்தது. இது, அவர்கள் கா
னான்தேசம் போய்ச் சேரும்பரியந்தம் அவர்கள் இன்னின்ன இடத்துக்
குப் போகவேண்டுமென்று வழிகாட்டினதுமல்லாமல், தேவபராமரிப்
புக்கு அடையாளமாயுமிருந்தது. இந்த ஸ்தம்பமானது: மெய்க்கிறிஸ்
தவர்கள்: பாவ அடிமைத்தனத்தையும், சாத்தானுடைய அடிமைத்த

னத்தையும் விட்டுவிட்டு பரலோக இராச்சியம் சேரும்பரியந்தம், அவர்
களுக்குக் கிடைக்கிற தேவ நடத்துதலையும் ஆறுதலையும் அடைக்கலத்
தையும் குறிப்பாகக்காட்டுகிறதாயும் இருக்கிறது.

### படிப்பினை.

நம்முடைய பிள்ளைகளையும் பொருளையும் தேவனுக்குக் கொடுக்
கிறது பாக்கியமானகாரியம்; நமது இருதயத்தை அவருக்குக் கொ
டுக்கிறதோ எல்லாவற்றையும் அவருக்குக் கொடுக்கிறதற்குச் சரி. 2.—
பாவ அடிமைத்தனத்தினின்று விடுதலையடைந்தவர்கள், துற்குணம்,
பொல்லாப்பு என்னும் புளித்தமாவைப் புறம்பே தள்ளிப்போடவேண்
டும். 3.—கர்த்தர் இம்மையில் நம்மை நடத்துகிற வழி, அநேகவிசை
நமக்கு விளங்காது; நமக்கு சிலவேளை விபரீதமாயும் தோன்றும்;
முடிவோ எவ்விதத்திலும் நன்மையாயிருக்கும். 17, 18.—விசுவாசம்
மகா வல்லமையுள்ளது; அது "காணப்படாதவைகளின் நிச்சயமா
யிருக்கிறது" என்பது மெய்யே. 19.—மேகஸ்தம்பம், அக்கினிஸ்தம்பம்
இவைகள் இஸ்ரவேலருக்கு வழிகாட்டினதே, இப்போது இல்லையே
என்று விசுவாசி அங்கலாய்க்கவேண்டாம். கர்த்தருடைய வசனமான
து, மேகஸ்தம்பமாயும் அக்கினிஸ்தம்பமாயும் இருக்கிறது. 21, 22.

---

## ௰௪. அதிகாரம்.

### எகிப்தியர் சிவந்த கடலில் அதோகதியாய் அமிழ்ந்து அழிந்தது.

2. "திரும்பி." கோசேனிலிருந்து, பெலிஸ்தியர் தேசத்துக்குப்
பெரும்பாதை, ராமசேசிலிருந்து வடகிழக்காய்ச்சென்றது. இஸ்ரவே
லர் அந்த நேர்வழியாய்ப் போகாமல், தெற்காய் சிவந்த கடலை அடு
த்து அதின் ஓரத்தில் வந்து சேர்ந்தார்கள். 13: 20. வாசி. இந்த வனாந்
தரத்திலேதான் இஸ்ரவேலர் கர்த்தருக்குப் பலியிடப்போகிறார்கள்
என்று எகிப்தியர் நினைத்தார்கள். இப்பொழுதோ அவர்கள்: வடகிழக்
காய்ப்போகிற மேற்படி நேர்பாதையைவிட்டு இன்னம் அதிகமாய் வல
துபக்கமாகத் தெற்கே விலகி, இரு பக்கம் மலையும், நடுவே பள்ளத்
தாக்குமுள்ள இடுக்கமான ஒரு பாதைவழியாய்ச் செல்ல தேவயத்தன
மாய் நடத்தப்பட்டார்கள். இந்தப் பாதை சிவந்த கடலின் மேல்கவரா
கிய சூவஸ்க் குடாக்கடலின் வடகோடியைச்சுற்றிக் கிழக்கே போகா
மல், அதின் மேல்கரையோரமாய் எகிப்தின் கிழ் எல்லையை அடுத்துச்
சென்றது. நினையாதவகையாய் இவர்கள் இப்படித் "திரும்பி"னது,
மேற்காட்டியபடி இவர்களை மோசமான இடத்தில் கொண்டுவந்து
விட்டதாக எகிப்தியருக்கு அர்த்தப்பட்டது. ஆனால் அது பார்வோனு
டைய அழிவுக்கும் இஸ்ரவேலருடைய கடைசி வெற்றிக்கும் ஏதுவா
யிருந்ததென்று காண்கிறோம்.

"மிக்தோல்" ஏத்தாமுக்குத் தெற்கே; "ஈரோத்" மிக்தோலுக்
குத் தெற்கே; "பாகால்செபோன்" ஈரோத்துக்குத் தெற்கே.

"ஈரோத்" இது எபிரேய வார்த்தையாயிருக்குமானால், 'குகை
யின் வாய்' என்று அர்த்தமாகும். அது பெரும்பாலும் நினைக்கப்படு
கிறபடி எகிப்திய வார்த்தை என்றால், 'புல் வளருகிற இடம்' என்று
அர்த்தமாகும். ராமசேசிலிருந்து இந்த இடம் ஏறக்குறைய 40 மயில்
தூரம். அதிலிருந்து இதற்குவர 3 நாள் சென்றதென்று தோன்றும்.
இஸ்ரவேலர் கடலைக் கடந்த இடம், சூவஸ்ப் பட்டணத்துக்குச் சமீ



பத்தில் என்றும்; அந்த இடம் இக்கரையிலிருந்து அக்கரைக்கு 3450
அடி தூரமுள்ளதென்றும் பெரும்பாலும் நினைக்கப்படுகிறது. வேறு
சிலர்: சூவசுக்கு 12 மயிலுக்குத் தெற்கே ராஸ்அற்ருக்கா, என்னும்
இடத்துக்குச் சமீபத்தில் கடலைக்கடந்ததாகச் சொல்லுகிறார்கள். அந்த
இடம் 10 மயில் அகலமுள்ளது. எப்படியிருந்தாலும் அந்த இடங்களை
இயல்பாய்க் கடக்கக்கூடாதென்பது நிச்சயம்.

இஸ்ரவேலருடைய பிரயாணத்தை சாஸ்திரிகள் நாலு வகுப்
பாய்ப் பிரித்திருக்கிறார்கள்.

(1) ராமசேசிலிருந்து, சிவந்த கடல் வரையும்.
(2) சிவந்த கடல் முதல், சீனாய் மலை வரையும்.
(3) சீனாய் முதல், காதேஸ்பார்னேயா வரையும்.
(4) காதேஸ்பார்னேயா முதல், மோவாபின் சமனான வெளி
வரையுமாம்.

ஆக இந்தப் பிரிவுப்படி பார்த்தால் இந்த அதிகாரத்தோடு முத
லாம் வகுப்பு முடிகிறது.

"சமுத்திரத்துக்கும்." சிவந்த கடலின் மேல் கவராகிய சூவ
ஸ்க் குடாகடலைக குறிசகும்.

3. "திகைத்துத் திரிகிறார்கள்." இவர்கள் கானானுக்குச் செல்
லும் நேர்வழியாய்ப்போயிருந்தால் இப்படிச்சொல்லமாட்டான். இவர்
கள், 2-ம் வாக்கியத்திற்காட்டியபடி திரும்பினதினாலேதான் இந்த எண்
ணம் உண்டானது. இத்தனை வாதைகளைத் தன்மேல்விட்ட அவர்களு
டைய தேவன் அவர்களை முற்றுமுடியக் காப்பாற்றமாட்டாரா என்ற
யோசனை அவனுக்குள் உண்டாகவில்லை. 'கேடுவருமுன் மதி கெட்டு
வரும்.'

4. "நான் அவனிருதயத்தைக் கடினப்படுத்தி." அவனுடை
ய பெருமைக்கும், அளவற்ற ஆசைக்கும், சாத்தானுடைய துராலோ
சனைக்கும் அவனை முழுவதுமாய் விட்டுவிட்டார். இதற்கு முன்னமே
அவன் பேராசைக்கு முடிவுவந்தது; அவனுடைய இராச்சியம் அழிக்
கப்பட்டது; அவனுடைய தலைமகன் கொல்லப்பட்டான். அப்படியி
ருந்தும் இன்னமும் பழிவாங்கப் புறப்பட்டான். இது என்ன நீசத்த
னம்! தேவன் ஒருவனைக் கைவிடும்பொழுது அவன் காரியம் ஐயோ!

5. இஸ்ரவேலர் போகும்படி எகிப்தியர் சம்மதித்திருந்ததுமல்
லாமல், அவர்களே துரிதப்படுத்தினார்கள்; தங்கள் நகைகளையும் கொ
டுத்தார்கள். என்றாலும் இவ்வளவு சீக்கிரத்துக்குள்ளாக அவர்கள்
மனம் மாறிப்போனது ஆச்சரியம். இஸ்ரவேலரோடு பல ஜாதியான
ஜனங்கள் போனார்களே, அவர்கள் திரும்பிவந்து, இஸ்ரவேலர் வனாந்
தரத்தில் தரித்திருக்கவும் இல்லை, ஓரேபுக்கு நேர்வழிபிடித்துப் போக
வும் இல்லை, வருத்தத்தில் அகப்பட்டுக்கொண்டார்கள் என்று சொல்லி
யிருப்பார்கள். பார்வோனும் அவன் குடிகளும், சாத்தானால் ஏவப்ப
ட்டுப் பழிவாங்க இது நல்ல சமையம் என்று தங்கள் யுத்த இரதங்க
ளோடும், குதிரைப்படைகளோடும் பின்தொடர்ந்தார்கள். எகிப்தியரு
டைய யுத்த இரதங்களே அவர்களுடைய இராணுவ பெலனாயிருந்தது
என்று இப்போதிருக்கிற ஞாபகசின்னங்களாலும் தெரியவருகிறது. பார்
வோனும் அவன் ஊழியக்காரரும் இஸ்ரவேலரைப் பின்தொடரும்போ
து, இவர்களுடைய வலதுபக்கத்திலும், இடதுபக்கத்திலும் கடக்கக்
கூடாத மலைகளும், முன்னுக்குக் கடலும், பின்னுக்குச் சத்துராதிகளும்
இருந்ததாகப் பொதுவாய் ஒப்புக்கொள்ளப்படுகிறது. இப்பொழுது
இஸ்ரவேலருக்குண்டான திகிலையும் ஆபத்தையும் என்னசொல்ல!

10—12. தேவன் இஸ்ரவேலரை விடுதலைசெய்யும்படி எகிப்தியரிடத்திற் செய்த அற்புத அதிசயங்களெல்லாம், இஸ்ரவேலருக்கு அந்தந்தச் சமயத்துக்கு நம்பிக்கையையும் சந்தோஷத்தையும் கொடுத்ததேயல்லாது, மெய்யான விசுவாசமும் உறுதியான நம்பிக்கையும் பெரும்பான்மையோருக்கிருந்ததில்லை. அவர்கள் பார்வோனுடைய சேனையைக் கண்டவுடன் திகிலடைந்து சோர்ந்துபோய் திகைத்ததுமல்லாமல், கலகக்குணமுமுள்ளவர்களாய் முறுமுறுத்தார்கள். என்றாலும் சிலர் இந்த ஆபத்துவேளையில் ஊக்கமான செபத்தினாலே கர்த்தரைத் தேடினார்கள் என்று நினைக்கவேண்டியது. இப்பொழுது இஸ்ரவேலர் போர்வித்தை கற்றவர்களுமல்ல, அவர்களிடத்தில் யுத்தாயுதமுமில்லை. பார்வோனுடைய படையாட்களோ போர்வித்தை கற்றவர்களும், ஆயுதபாணிகளுமாயிருந்தார்கள். ஆகையால் அவர்களோடு போருக்கு நிற்கும்படி இஸ்ரவேலர் துணியவில்லை; ஓட்டம்பிடித்துத் தப்பிப்போகவும் வகைகாணவில்லை; பார்வோன் குரூரனாயிருந்ததினாலே அவனுக்கு அடங்கிப்போகலாமென்ற நம்பிக்கையுமில்லை. ஆதலால் எவ்விதமும் சாகத்தான்போகிறோம் என்று மோசேயோடு இத்தனை கசப்பாய் வாதாடினார்கள். தேவன் காண்பித்த அற்புதச் செயல்களையெல்லாம் பார்வோன் எப்படி மறந்துபோனானோ, அப்படியே இஸ்ரவேலரும் மறந்தவர்கள்போல அவிசுவாசம் காட்டினார்கள்.

13, 14. இந்தச் சோதனை வேளையில் மோசே சிறந்த விசுவாசத்தைக் காண்பித்தான்.

15, 16. இந்த அபாயவேளையில் மோசே ஊக்கமான செபஞ்செய்தான். கர்த்தர் செவிகொடுத்து, செய்யவேண்டியதின்னதென்று திருவுளம்பற்றினார்.

"வெட்டாந்தரை." இந்தத் தரை ஒரே ஒருதரம் தான் சூரியனைக் கண்டது. சங். 106: 9, 11.

19. "தேவதூதனானவர்." உடன்படிக்கையின் தூதனாகிய தேவகுமாரன் என்று நினைக்கப்படும்.

20. இஸ்ரவேலர் கடலைக் கடந்த சமயம் இராக்காலமாயிருந்தது. அன்றிரவில் சந்திரனுடைய வெளிச்சமுமில்லை. ஏனென்றால் பூரண சந்திரனுண்டாகி அப்பொழுது ஏழுநாள் மட்டுமாயிருந்தது. இரவிலிருக்கும் இயல்பான இருளல்லாமலும், இந்த "மேகமும்" எகிப்தியருக்கு மிகுதியான காரிருளையுண்டாக்கினது. "இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று." பகலில் கடலைக் கடந்தாற்போல அக்கரை சேர்ந்தார்கள். ஒரே அடியாய் இஸ்ரவேலரை நாசமாக்கிப்போடவேண்டுமென்று எகிப்தியர் பின்தொடர்ந்தார்களே, இருட்டினாலே அவர்களைக்காணக்கூட ஏதுவில்லாமற்போனார்கள். இவ்வண்ணமாய் கர்த்தர் அநேகவிசை தமது பிள்ளைகளை சத்துராதிகள் முகத்துக்கு மறைக்கிறார்.

21—23. இப்படியெல்லாமிருந்தும் எகிப்தியர் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி துணிகரத்தோடு பின்தொடர்ந்தார்கள். எபி. 11: 29.

24, 25. இஸ்ரவேலருக்குள்ளும், பிற்பாடு ரோமர்முதலிய சாதியாருக்குள்ளும் வழங்கின சாமக்கணக்கானது, போர்ச்சேவகர் இரவைப் பிரித்து அதில் மாற்றி மாற்றிச் சாமங்காக்கும் வழக்கத்திலிருந்து வந்தது. "கிழக்குவெளுக்கும் சாமம்": சூரியன் உதிக்க சுமார் மூன்று மணிநேரத்துக்குமுன ஆரம்பித்ததாகத் தோன்றும். நடு இராத்திரியளவில், முன்னாக இஸ்ரவேலரும், அவர்களைத் தொடர்ந்து பின்



னாக எகிப்தியரும் மகா தீவிரத்தோடு, ஜலம் சுவியலாக நின்ற இரண்டு மதில்களுக்கிடையே பாய்ந்தோடினார்கள் என்று நிதானிக்கத்தக்கது. லூக். 8: 33.

26—30. இந்தக் கட்டளை அக்கினிஸ்தம்பத்திலிருந்து கொடுக்கப்பட்டதென்று காணப்படுகிறது. மோசேக்கு இந்தக் கட்டளை கொடுக்கப்படுகையில் இஸ்ரவேலர் அக்கரைக்குச் சமீபித்துவிட்டதாக நாம் நினைக்கலாம்; இஸ்ரவேலரெல்லாரும் கடலைக்கடந்து அக்கரைசேரும் பரியந்தம் ஜலம் அப்படியே அவர்களுக்கு மதிலாயிருந்துவர, அவர்களைத் தொடர்ந்துவந்த எகிப்தியருக்கு இருபக்கத்திலும் மதிலாக இருந்த ஜலமோ, எதிர்க்கக்கூடாத வேகத்தோடு பழைய இடத்துக்குத் திரும்பி, அவர்களைப் பின்னாக மூடி அழித்துக்கொண்டேவந்ததென்று காணப்படுகிறது. இந்த அபிப்பிராயத்துக்கு 29-ம் வாக்கியமும் அனுகூலமாயிருக்கிறது. எப்படியானாலும் இஸ்ரவேலரில் ஒருவன் தப்பாமல் அற்புதமாய் இரட்சிக்கப்பட்டார்கள். எகிப்தியரோ ஒருவன் தப்பாமல் அற்புதமாய் அழிக்கப்பட்டார்கள். சங். 77: 11, 16, 19. இங்கே தான் அந்த நிஷ்டூர பார்வோனும் அமிழ்ந்து அழிந்தான். அவனுடைய ஆங்காரமான உயிர் திக்குமுக்கிட்டு அவஸ்தைப்படும்போது "அவர் யார்" என்று நன்றாய் அறிந்துகொண்டான். 4, 18. வா. அவனுடைய அளவற்ற ஆசைக்குக் கடைசியாக சிவந்த கடலின் உப்புமண்தானும் கிடைக்கவில்லை! "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" மத். 16: 26.

எகிப்தியர்: இஸ்ரவேலருடைய ஆண்பிள்ளைகளை ஆற்றில் எறிந்து கொலைசெய்தார்களே, அவ்வண்ணமாகவே இப்பொழுதும் யெகோவா இரட்டிப்பாய் அவர்களிடத்திற் பழிவாங்கினார். அவர்களுடைய இராச்சியத்தில் முதன்மையானவர்களெல்லாரும் அந்தப் பாலகரைப்போல சலத்தில் அமிழ்ந்து மாண்டார்கள். அவர்களில் அநேகருடைய பிரேதங்கள், இஸ்ரவேலர் அக்கரைசேர்ந்த இடத்துக்குச் சமீபமாய் மிதந்துகிடந்ததாகத் தோன்றும். இதினாலே இஸ்ரவேலருக்கு ஆயுதங்களும், நகைநட்டுகளும் கிடைத்தது.

எகிப்தியர் தங்களிலுள்ள பெரியோருக்கு கந்தவர்க்கமிடுகிற வழக்கமுண்டே, இப்பொழுதோ கடற்கரையிலே அவர்களுடைய பிரேதங்கள் புதைக்கப்படாமல் அவமானப்படும்படி கர்த்தர் செய்தார். "கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்." 1 சாமு. 2: 9, 10.

31. இஸ்ரவேலர் யெகோவாவின் மகத்துவத்தையும், வல்லமையையும், நீதியையும் அறிந்து, தங்களுக்குக் கிடைத்த விடுதலைக்காகத் தோத்திரஞ்செலுத்தினார்கள். மோசே சொன்னதை தேவவசனம் என்று விசுவாசித்தார்கள். ஆனாலும் ஐயோ! அவர்களுடைய விசுவாசம் நிலைத்திருக்கவில்லை. சங். 106: 12—16.

சிவந்த கடல் இரண்டாகப் பிரிந்த சங்கதி பிற்காலத்தில்:

(1) கானானியருக்குத் திகிலைக்கொடுத்தது. யோசு. 2: 9, 10.

(2) இஸ்ரவேலருடைய ஜெயமும் துதியுமாயிருந்தது. சங். 106: 9. 114: 3. 136: 13.

(3) ஞானஸ்நானத்துக்கு அடையாளமாயிருந்தது. 1 கொரி. 10: 1, 2.

(4) இஸ்ரவேலர் அதின் வழியாய்க் கடந்துபோனது, ஆத்துமாக்

கள் மனந்திரும்புவதைக் காட்டிய அடையாளமாயிருந்தது. ஏசா. 11: 15.

(5) எகிப்தியருடைய நிர்ப்பந்தமான அழிவானது, குணப்படாத பாவிகளுடைய முடிவான அழிவுக்கு முன்குறிப்பாயிருந்தது. வெளி. 20: 13, 14.

படிப்பினை.

தேவன் தம்முடைய சனங்களை நடத்துகிற வழி அநேகம்விசை நமக்கு விளங்காத காரியமாம். 2.—எதிரியை மலைபோல் நினைக்க வேண்டும். 3—மனுஷனுடைய ஆசைக்கு அளவில்லை. பேராசை தரித்திரமாம். 5-7—இத்தனை அற்புதங்களைக் கண்ட இஸ்ரவேலர் எகிப்துக்குத் திரும்பும்படி நினைக்கிறார்களா என்று அவர்கள்மேல் பறகடிக்கவேண்டாம். இது நம்மெல்லாருடைய சுபாவமாயுமிருக்கிறது. 10-12.—விசுவாசி தனக்கு ஆபத்து நெருங்கியிருக்கிறது! சகாயரும் இல்லையென்று அபயமிடும் சமயந்தான், பூரண விடுதலைசெய்ய தேவனுக்கேற்ற சமயம். 13, 14, 21-30.—செபம் மகா வல்லமையுள்ளது. 15.—தேவன் ஒருவனை அவன் சுய இச்சைக்கு விட்டுவிடும்போது அவன் முடிவு அதோகதிபாதாளத்தில் தான் இருக்கும். 17.—கர்த்தருடைய வசனம் நமக்கு வழிகாட்டும் ஸ்தம்பமாயிருக்கிறது. அது இந்த ஸ்தம்பம்போல், கெட்டுப்போகிறவர்களுக்கு மரணவாசனையாயும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு ஜீவவாசனையாயும் இருக்கிறது. 18, 19.—இச்சமயத்தில் இஸ்ரவேலருக்குண்டான இக்கட்டும், அபயமும், திகைப்பும், பயமும் நம்முடைய மரணநேரத்தில் நமக்கும் உண்டாகக்கூடியது. அப்போது நம்முடைய கண் மெய்யான அக்கினிஸ்தம்பமாகிய ஏசுவினிடத்திலிருக்கவேண்டும். அப்போ நம்முடைய வழி வெளிச்சமாகும், துன்பம் விலகிநிற்கும்.—கர்த்தராலே ஆரம்பமாகும் கிரியை எவ்விதத்திலும் முற்றுப்பெறும். இப்பொழுது உலகத்தார் எல்லாரும் கிறிஸ்துநாதருக்குக் கீழடங்காவிட்டாலும், அவர் தமது சத்துருக்கள்மேல் எவ்விதமும் ஜெயம்கொள்வார். 30, 31. வெளி. 19: 17, 18.

## The Pondicherry Version of the Gospels and Acts.

## ரோமானித்தார் பிரசித்தப்படுத்தின சுவிசேஷம்.

வேதாகம சங்கத்தார் இன்னொரு திருப்புதலை ஆயத்தப்படுத்தினதற்கு முன்னே 1857-ல், ரோமான் சபையைச் சேர்ந்த சில குருக்கள் கூடி, நாலு சுவிசேஷங்களையும் அப்போஸ்தலர் நடபடி புஸ்தகத்தையும் தமிழ் திருப்பி புதுச்சேரியில் பிரசித்தப்படுத்தினார்கள். இது நல்ல காரியந்தான். அவர்கள் முன்னமே அப்படிச் செய்யாமல்போனதுமாத்திரம் நல்ல காரியமல்ல. சுவிசேஷபோதகன்மார் இத்தேசத்துக்கு வந்து முப்பது வருஷத்துக்குள்ளாக பழைய புதிய ஏற்பாடுகளாகிய முழு வேதத்தையும் தமிழ்ப்படுத்தி பிரசித்தஞ்செய்தார்கள் என்பது நமக்குத் தெரியுமே. ரோமான் சபை குருக்களோ இத்தேசத்துக்கு வந்து முன்னூறு வருஷக்காலமாய் வேதாகமங்களில் ஒன்றையாவது தமிழ்த்திருப்பவில்லை. 1857 வருஷத்தில் அவர்கள் வேதத்தைத் திருப்பினபோதிலும், 66 ஆகமங்களில் ஐந்து ஆகமங்களை



மாத்திரம் திருப்பினார்கள். அப்போதும் தங்களுடைய வியாக்கியானமின்றி தேவனுடைய வசனத்தை சனங்களுக்குக் கொடுக்கக்கூடாதென்று எண்ணங்கொண்டு அபத்தமான வியாக்கியானங்களால் அதை மலைவாக்கினார்கள். அந்த புத்தகம் அச்சிட்ட காகிதமும் கேவலம். அதை விற்கிற கிரயமும் அதிகம். இப்படியெல்லாம் இருந்தபோதிலும் வேதாகமங்களை மறைக்கிறதைப்பார்க்கிலும் அவைகளை பிரசித்தப்படுத்தும்படி அவர்கள் இம்மட்டுஞ் செய்தது நல்லகாரியம் என்று சந்தோஷத்துடனே ஒத்துக்கொள்ளுகிறோம்.

புதுச்சேரி பண்டிதர் தங்கள் புஸ்தகத்துக்கு எழுதின முகவுரையில், தங்கள் முன்னோர்கள் வேதாகமங்களை தமிழ்த் திருப்பாததற்குப் போக்குச் சொல்லுகிறார்கள். எப்படியெனில்,

"இத்தேசத்துக்கு அனுப்பப்பட்ட அப்போஸ்தொலிக் குருக்கள்,"
" முந்தச் சுவிசேஷத்துப் பொருளாகிய வேத சத்தியங்களை யாவ"
" ருக்கும் பிரசங்கித்துத் தெளிவிக்கவும், தேவ இஷ்டப்பிரசாதங்"
" களைப் பெருவிக்கிற ஞானஸ்நானமுதலிய தேவதிரவிய அநுமான"
" ங்களைக் கொடுக்கவும் ஒழியாத அலுவலாயிருந்தார்கள். அவை"
" களுக்கும் வெகுகாலம் குருக்கள் பற்றாமையாயிருந்தார்கள். ஆகை"
" யால் பிரதான கடமைகளை முந்த நிறைவேற்றவேண்டியிருந்தது."
" ஆயினும் இரட்சகருடைய சீஷர்களில் சிலர், அவருடைய விசேஷ"
" அநுக்கிரகத்தினாலும் இஸ்பிரீத்துசாந்துவின் ஏவுதலினாலும் எழு"
" தின அருள் வேதாகமங்களை தமிழில் மொழிபெயர்த்து, அச்சில்பதி"
" ப்பிக்க தேவகிருபையால் இக்காலத்தில் வேண்டிய அநுகூலங்கள்"
" உண்டானதைப்பற்றி இத்தேசத்தார் அவற்றின் பலனை அடையும்"
" பொருட்டு இத்திருப்பணியை நிறைவேற்றக் கருத்தானோம்" என்று சொல்லுகிறார்கள்.

மேற்சொல்லியதைக் கவனிக்கும்போது முன்னாலே வேதாகமங்களைத் தமிழ்த்திருப்பாமல்போனதற்கு அப்போது சாவகாசமில்லை என்பதே ரோமான் குருக்கள் இப்போது சொல்லுகிற போக்கு. ஆகிலும் தேம்பாவணி எழுதவும், பரமார்த்த குரு கதையையும் திருவள்ளுவர் குறளையும் லத்தீன் பாஷையில் திருப்பி, லத்தீனும் தமிழுமாகப் பிரசித்தப்படுத்தவும் பின்னும், இப்படிப்பட்ட புஸ்தகங்கள் அநேகம் உண்டாக்கவும் வேதாகமங்களை தமிழ்த்திருப்பின உத்தம போதகன்மாரைப் பழிக்கிற தர்க்கப்பிரபந்தங்களைச்செய்யவும், அவர்களுக்குப்போதுமான சாவகாசம் கிடைத்ததே. ஆதலால் அவர்கள் சொல்லுகிற முகாந்தரம் ஒன்றுக்கும் உதவாது. இப்படிப்பட்ட போக்குச் சொல்வது குளிக்கப்போய் சேற்றைப்பூசிக்கொள்வதுபோலல்லவா? அப்போது இருந்த குருக்கள் இந்த வகைப் போக்கு ஒன்றையுஞ் சொல்லவில்லை. சனங்கள் கையிலே வேதாகமங்களைக் கொடுப்பது நல்லதல்ல என்பதே அவைகளைப் பிரசித்தம்பண்ணாத முகாந்தரமாகக் காட்டி, பல உவமைகளினாலே அதை ஒப்பிக்கபார்த்தார்கள்.

1857௵ ரோமான் சபை குருக்கள் அச்சிட்ட நாலு சுவிசேஷங்களையும், அப்போஸ்தலர் நடபடிகளையும் ரோமான் சபையார் வாசிப்பார்களானால் அவர்களுக்கு மெத்தப் பிரயோசனமாகும். ஏனென்றால்,

(1) வேதாகமங்களை ஆராய்ந்து பாருங்கள் என்பது பதிதர் உண்டுபண்ணின வார்த்தையாயிராமல் கிறிஸ்துநாதர் தாமே கட்டளையிட்ட வார்த்தையென்று அவர்களுடைய வேதமே சொல்லுகிறது. (அர்ச் அருளப்பர் ௫ அதிகாரம் ௩௯ வசனம்.)

(2) அதுவுமன்றி பெரோயா நகரத்தார் சின்னப்பருடைய வார்த்

தைகளை சும்மா ஒப்புக்கொள்ளாமல் அப்போஸ்தலன் சொன்னவைகளின்படி இருக்கிறதோ என்று "பிரதிதினம் வேதாகமங்களை ஆராய்ந்து பார்த்தார்கள்" என்றும் அதினாலே அவர்கள் மற்றவர்களைவிட அதிக கனம்பொருந்தினவர்களாக விளங்கினார்கள் என்றும் ரோமானித்தாருடைய வேதமே சொல்லுகிறது. (நடபடிகள் ௰எ அதி. ௰ வசனம்)

(3) சனக்கூட்டத்தில் ஒரு ஸ்திரீயானவள் உரத்தசத்தமாய் கூப்பிட்டு "உம்மைச் சுமந்த உதிரமும் நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியமுள்ளவைகளாமே என்று சொன்னபோது, கிறிஸ்துநாதர் "சர்வேசுரனுடைய வாக்கியத்தைக்கேட்டுச் செவிதந்து அதை அநுசரிக்கிறவர்களே அதைவிட பாக்கியவான்கள் என்று மாறுத்தரமாகச் சொன்னார் என்று ரோமானித்தாருடைய வேதமுஞ் சொல்லுகிறது. (லூக்கா ௰க. உ௰அ)

(4) மேலும் பாரம்பரைப் போதனையைப் பற்றிக்கொள்வது "சர்வேசுரனுடைய கற்பனையை முழுவதும் வியர்த்தமாக்குகிற பிரயத்தனம்" என்று ரோமானித்தாருடைய வேதமுஞ் சொல்லுகிறது. (மாற்கு எ. ௯)

(5) அதுவுமன்றி ஆத்தும ரட்சிப்படைவதற்கு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசமே எத்தனம் என்று ரோமானித்தாருடைய வேதமுஞ் சொல்லுகிறது. பிலிப்புப் பட்டணத்து சிறைச்சாலைக்காரன் பவுலையும் சிலாவையும் நோக்கி "சுவாமிமாரே இரட்சணியமடைய நான் செய்யவேண்டியதென்னவென்றான். அவர்களோவெனில் சேசுநாத சுவாமியின் பேரில் விசுவாசமாயிரு. அப்போது நீயும் உன் குடும்பத்தாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்றார்கள். (நடபடி ௰௬: ௩௰-௩௧.)

இப்படியே ரோமானித்தாருக்கும் நமக்கும் எந்த விஷயத்தில் உபதேச விகற்பம் இருக்கிறதோ அந்த விஷயத்தில் அவர்களுடைய வேதமே அவர்களுக்கு விரோதமாயும் நம்முடைய பட்சமாயும் போதிக்கிறது. நாம் போதிக்கிற உபதேசத்தை எல்லாம் அவர்களுடைய வேதத்தைக்கொண்டே ஒப்பிக்கலாம். ஆதலால் வேதாகமங்களை தமிழ் திருப்புகிறதில் பாப்புமத குருக்கள் செய்த வேலை வெகு தாமதமாய்த் தொடங்கப்பட்டும் இன்னமும் பாதிவரையாகிலும் முடியாமலுமிருந்தபோதிலும் அவர்கள் செய்த வேலை நல்ல வேலைதான். அதினாலே நாம் பதிதரல்லவென்றும் நமக்குள்ளே வழங்குகிற தமிழ்வேதம் புரட்டல்லவென்றும் நேர்மனமுள்ளவர்கள் யாவருக்கும் நன்றாய் விளங்குமே.

---

## Summary of News.

## சமாசாரத்திரட்டு.

இங்கிலந்து. எடின்பர்க் டியூக் என்னும் ராஜபிரபுவின் பத்தினியார் சென்ற அக்டோபர்மீ 29உயில ஒரு புத்திரியைப் பிரசவித்தார்.

தென்மார்க்கு அரசரும் ராக்கினியும் நவம்பர்மீ 2உ லண்டனுக்கு வந்துசேர்ந்தார்கள். ஸ்ரீபார்ட்டில் பிரேயர் துரையவர்களுக்கு பிரபுப்பட்டம் சூட்டத் தீர்மானமாயிற்று.



துர்க்கிய துரைத்தனத்தின் அவகதியைப்பற்றி முன்னொருமுறை தெரிவித்தோமே. அத்துரைத்தன விஷயத்தில் ருஷிய துரைத்தனத்தார் தலையிட நினைத்திருப்பதினால் அகோர யுத்தமுண்டாமென்றும் அத்துரைத்னத்துக்கு சீக்கிரம் முடிவுண்டாகுமென்றும் வதந்திபிறந்தது. ருஷியர் ராணுவ முஸ்திப்புச் செய்வதில் வெகு முயற்சியாயிருக்கிறார்கள். ஆயினும் ஐரோப்பாவின் வடதுரைத்தன கட்சியார் மூவரும் சம்பந்தப்பட்டிருப்பதினால், பிரத்தியேகமாய் யுத்தம் உண்டாமென்றெண்ண இடமில்லையென்றும் உத்தேசம்.

இந்தியா. வேல்ஸ் பிரபுவாகிய மாட்சிமைதங்கிய இளவரசர் சென்றமீ 8உ பம்பாய்க்கு வந்து இந்திய கவர்னர் ஜெனரல் முதலிய பெரியோரால் வினயத்துடன் அங்கிகரிக்கப்பட்டார். இளவரசர் பம்பாய்க் கரையேறும்பொழுது உண்டாகிய காட்சி சாமானியமானதல்ல, அபூர்வகாட்சி. துறையிற்கூடிய துரைத்தன மரக்கலங்கள் இளவரசரை உபசரித்தன. அம்மரக்கலங்கள் அங்கிலேய துரைத்தன கடல் ராணுவத்தின் விசேஷ பிரதிநிதிகள். இளவரசரை அவரது மரக்கலமாகிய ஸெராப்பிஸினின்று அழைத்துவந்தது இந்திய இராஜ பிரதிநிதியாகிய லார்ட் நார்த்புருக். கரையேறிய சமயத்தில் இளவரசரை பம்பாய்க் கவர்னர், பிரித்தானிய ஸிவில் ராணுவ உத்தியோகஸ்தர், நகரச் சபையார், கோலப்பூர் மஹாராஜா, கச்சுராவு, கட்டைவாடி தொடங்கி பம்பாய்ப் பிரதேசத்துடன் சேர்ந்த தென் மஹாராட்டிர நாடுவரையில் உள்ள குறுநிலமன்னவர் அனைவருமல்லாமல், பரதகைக் கோவாவென்னும் இராஜா, மைசூர் மஹாராஜா, ஐதிராபாத்தின் நிஜாமின் பிரதிநிதிகள் இவர்களும் நின்று இசையங்கள்கூர்ந்து விநயமாய் ஏற்றுக்கொண்டார்கள். இளவரசரை முக்கிய அலங்காரத்துடன் வாழ்த்தி வணங்கிப் போற்றும்படி வேண்டும் எத்தனம் யாவும் அரைகுறையின்றிச் சிரேஷ்டமாய் நடந்தன. இளவரசர்பின்னிட்டு பூனா, பரோதா முதலிய இடங்களுக்குப்போய் தக்க உபசரணைபெற்று மீண்டும் பம்பாய்க்குவந்து சென்றமீ 25உ ஸெராப்பிஸ் மரக்கலம் ஏறி கொழும்புக்குப் புறப்பட்டார். மார்க்கத்தில் கோவாப் பட்டினத்தைச் சந்தித்து வருவார்போலும்.

தென்னிந்தியாவில் அங்கங்கே வாந்திபேதி கண்டிருப்பதினால் அங்கிலேய இளவரசவள்ளல் முன் நினைத்தபடி சென்னைக்கு பேபூர் மார்க்கம் வருவதை நிறுத்தி முந்த இலங்கைக்குப் போய், அங்கிருந்து நாளதுமீ 10உ தூற்றுக்குடி மதுரை திருசிரபுரம், எனும் ஸ்தலங்களை மார்க்கத்திற்கண்டு சென்னை ராஜதானிக்குப் போவார். தூற்றுக்குடியிலிருந்து மதுரைக்குப் போகுமார்க்கத்தில் மணியாச்சி ஊருக்கு சமீபமான இருப்புப்பாதை ஸ்டேஷனில் அரை மணி நேரம் தாமதிப்பார். அந்தச் சமயத்தில் திருநெல்வேலி நாட்டிலுள்ள சுதேசக் கிறிஸ்தவர்கள் அவரைச் சந்திக்கும்படி இடங்கிடைக்கும்.

சென்னைக் கவர்னராகிய மகிமைதங்கிய பக்கிங்ஹாம் டியூக் பிரபு அவர் பரிஜனர் சகிதம் சென்றமீ 22உ சென்னைமாநகர் வந்து சேர்ந்து முறைமைப்படி கவர்னர் உத்தியோகம் கைக்கொண்டார்.

ரங்கூனில் பிரமர் சிலர் சர்ப்பனைசெய்து ராணுவசாலையைப் பிடித்துக்கொள்ளவும் நகரத்தைச் சுட்டெரிக்கவுமுயன்றார்கள். சமுசயத்துக்கு இடமான இருபது இருபத்தைந்து பேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். குற்றவிசாரணை நடக்கின்றது.

---

டிசம்பர்மீ நாள்31. கார்த்திகைமீ 17உ முதல், மார்கழிமீ 18உ வரை.

| வாரம். | இங்கிலீஷ் தேதி. | தமிழ்த் தேதி. | அன்றாடகத் தியானம். |
|---|---|---|---|
| பு | 1 | கஎ | கர்த்தரின் கட்டளையை நான் மிறக்கூடாது. சங். 22: 18. |
| வி | 2 | கஅ | உன் வழி எனக்கு மாறுபாடாயிருக்கிறது. 32. |
| வெ | 3 | ககூ | நீர் எனக்கு எதிராக நிற்கிறதை அறியாதிருந்தேன். 36. |
| ச | 4 | உ0 | தேவன் அளிக்கும் வார்த்தையையே சொல்லுவேன். 38. |
| ஞா | 5 | உக | மனுப்புத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? யோபு 14: 10. |
| தி | 6 | உஉ | உமது கிரியையின்மேல் விருப்பம் வைப்பீராக. 15. |
| செ | 7 | உங | இப்பொழுது என் நடைகளை எண்ணுகிறீர். 16. |
| பு | 8 | உச | என் பாவத்தின்மேலல்லவோ கவனமாயிருக்கிறீர். 16. |
| வி | 9 | உரு | உமது அடியானை நன்றாய் நடத்தினீர். சங்கீதம் 119: 65. |
| வெ | 10 | உசு | உம்முடைய கற்பனைகளின்பேரில் விசுவாசமாயிருக்கிறேன். 66. |
| ச | 11 | உஎ | தேவரீர் நன்மைசெய்கிறவராயிருக்கிறீர். 68. |
| ஞா | 12 | உஅ | உமது பிரமாணங்களை எனக்குப் போதியும். 6°. |
| தி | 13 | உகூ | நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. 71. |
| செ | 14 | க | நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். 72. |
| பு | 15 | உ | உம்முடைய கரங்கள் என்னை உருவாக்கிற்று. 73. |
| வி | 16 | ங | கடுங்கோபி ஆக்கினைக்குள்ளாவான். நீதிமொழி 19: 19. |
| வெ | 17 | ச | கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும். 21. |
| ச | 18 | ரு | பொய்யனைப் பார்க்கிலும் தரித்திரன் வாசி. 22. |
| ஞா | 19 | சு | கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது. 23. |
| தி | 20 | எ | வழக்கு விலகுவது மனுஷனுக்கு மேன்மை. 20: 3. |
| செ | 21 | அ | சாதிகள் உன் நீதியைக் காண்பார்கள். ஏசாயா 62: 2. |
| பு | 22 | கூ | புதுநாமத்தால் நீ அழைக்கப்படுவாய். 2. |
| வி | 23 | க0 | நீ கர்த்தருடைய கரத்தில் கிரீடமாயிருப்பாய். 3. |
| வெ | 24 | கக | கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார். 4. |
| ச | 25 | கஉ | பூமியின் உயர்ந்த இடங்களை மிதிப்பார். மீகா. 1: 3. |
| ஞா | 26 | கங | கர்த்தரின் ஆவி குறுகியிருக்கிறதோ? 7. |
| தி | 27 | கச | உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். யோவான் 16: 20. |
| செ | 28 | கரு | பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார். 27. |
| பு | 29 | கசு | கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள். 1 கொரி. 6: 20. |
| வி | 30 | கஎ | மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள். 7: 23. |
| வெ | 31 | கஅ | இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே. 31. |

## விசேஷித்த நாட்கள்.

161289

5. அட்வெந்து என்னும் நாட்களில், இரண்டாம் ஞாயிறு.
12. அட்வெந்து என்னும் நாட்களில், மூன்றாம் ஞாயிறு. பௌர்ணமி.
19. அட்வெந்து என்னும் நாட்களில், நாலாம் ஞாயிறு.
25. கிறிஸ்துவின் ஜநந திருநாள்.
26. கிறிஸ்து ஜநந திருநாளுக்குப்பின், முதலாம் ஞாயிறு.
27. அமாவாசை.